In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவ மஞ்சரி

சிவமஞ்சரி
6
தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ
சிவமயம்

# சிவமஞ்சரி

## - ஆறாம் தொகுதி -

(பக்கங்கள் - 801 முதல் 960 வரை)

ஆசிரியர் :
"சிவமஞ்சரி செம்மல்" "அருட்பணி அரசு"
**பூசை. ச. அருணவசந்தன்**

ஸ்வஸ்திஸ்ரீ விய ஆண்டு புரட்டாசித் திங்கள் (01-10-2006)
ஞாயிற்றுக்கிழமை **சரஸ்வதி பூஜை** விஜய தசமி
நன் நாளில் வெளியிடப்பட்டது

**சிவசுந்தரி கலைக்கூடம்**

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# நூலின் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | சிவமஞ்சரி ⑥ - ஆறாம் தொகுதி - |
| நூலின் ஆசிரியர் | - | பூசை. ச. அருணவசந்தன் |
| பதிப்பு ஆண்டு | - | முதல் பதிப்பு - 2002<br>இரண்டாம் பதிப்பு - 2006 |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| பதிப்பாளர் / ஆசிரியர் | - | பூசை. ச. அருணவசந்தன் |
| முகவரி | - | ப. #29, (பு.#40), பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018. |
| பக்கங்கள் | - | 8+160 ஆக 168 பக்கங்கள் |
| நூல் அளவு | - | கிரௌன் 1/4 - 24 c.m. × 18.2 c.m. |
| அச்சிட்டுள்ள பரப்பளவு | - | 21.5 c.m. × 15.2 c.m. |
| பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள் | - | பலாப்பூர் H.B. டபுள் கிரௌன் 11.6 kg. |
| பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள் | - | 9.2 தமிழ்-13 Pts. |
| மின் அச்சுக் கோர்வை | - | ஸ்ரீசீனிவாசா கிராபிக்ஸ், சென்னை - 41. |
| மறுதோன்றி அச்சகம் | - | ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br># 3, பழைய சிறைச்சாலைத் தெரு,<br>தங்கசாலை, சென்னை-1. போன் 25283554 |
| நூலின் பொருள் | - | சிவபெருமானைப்பற்றி - புராணங்கள் - வடமொழி தமிழ் வேதங்கள் - தல வரலாறுகள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில். |
| விலை | - | ரூபாய் 80/- |
| நூலகக் குறியீட்டு எண் | - | |


நூலின் முகப்பில் : மும்மூர்த்திகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முதற் பதிப்பின் முகவுரை...

உயர்ஞான அருட்சோதியாகிய சிவமஞ்சரியின் இந்த ஆறாவது தொகுதி மலர்ந்து தங்களின் திருக்கரங்களில் தவழ்கின்றது. இந்நூலிலுள்ள மலர்களில் முதல் (26) மலர் பிரம்மன் தொடர்புடைய செய்தி களைத் தாங்கி மலர்ந்துள்ளது. இரண்டாவது (27) மலர் தமிழ்வேத நூல்களின் விளக்கமாகவும் மூன்றாவது (28) மலர் வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் ஆகியவற்றின் சிறு குறிப்புகளைத் தாங்கியும் மலர்ந்து உள்ளன. நான்காவது (29) மலர் திருமால் சிவபெருமானை ஆராதித்து அருள் பெற்ற வரலாறு களை விளக்குகிறது. ஐந்தாம் (30) மலர் ஆதிசிவன் மூவராய் உருவம் தாங்கி வந்தும், அரியர்த்தராக நின்றும் அருள்பாலிப்பதை விளக்குகிறது. இந்நூல் களை வெளியிட்டு மகிழும் இவ்வேளையில் இத் தொகுதியை உருவாக்கத் துணைநின்ற அனைவரை யும் நன்றியுடன் போற்றி வணங்கி மகிழ்கின்றேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று, நேரில் அழைத்துக் குருவருளையும் திருஅருளையும் வழங்கியருளியதுடன் தொடர்ந்து ஆதரித்து வரும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதின கர்த்தர் குருமகா சந்நிதானம் **சீர்-வளர்-சீர் சிவப் பிரகாச பண்டார சந்நிதி சுவாமிகள்** அவர்களின் திருவருளைப் போற்றி வணங்குகின்றேன்.

இப்பணியில் அருளாசி தந்து அருள்பாலித்து வரும் எனது வணக்கத்திற்குரிய குருநாதர் குருஜி **R. துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அவர் பல்வேறு திருப்பணிகளைச் செய்துவரும் நிறை தவச்செல்வர். சிறந்த சிவபூஜா துரந்தரர்.

அவரையொட்டி அவருடைய அன்பரும், சிறந்த சிவபக்தரும், சிவசுந்தரி அறக்கட்டளை நிறுவனரும் நுங்கம்பாக்கம், LVJ. பில்டர்ஸ் உரிமையாளருமான திருப்பணிச்செல்வர்,சிவஸ்ரீ M.V. **ஜெய்சங்கர்** அவர்கள் நல் லாதரவை வழங்கி வருகின்றார்கள். அவர் களுடைய தந்தையார் பேராசிரியர் Dr. O.S. **விவேகானந்தன்** அவர்களும் நமது பணிகளுக்கு உரிய உதவிகளைத் தொடர்ந்து செய்துவருகின்றார்கள். இவர்கள் குடும்பத்திற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது சிவப்பணிகளுக்குத் துணை நிற்பது அன்பிற்கினிய சகோதரி திருமதி. **வீ. அனந்தலட்சுமியும்** அவரது கணவர் கயிலை மணி சிவத்திரு. **வ. வீரராகவன்** அவர்களுமாவர். இத்தம்பதியருக்கு எனது நன்றி யைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

இருபத்தியாறாவதாக மலர்ந்த பிரம்ம புரீசுவரர் எனும் மலருக்கான ஆய்வுப் பணிகளுக்காகவும் தல யாத்திரைகளுக் காகவும் வழக்கமான உதவிகளுடன் சென்னை மெட்ராஸ் லாஜர்னல் (M.L.J) கலைமகள், மஞ் சரி ஆகிய பத்திரிகைகளின் அதிபரான சிவஸ்ரீ R. நாராயணசாமி அவர்கள் தாம் அறங்காவலராக இருக்கும் திரு. **S. முத்துச் செட்டியார் சேரிடபிள் ரிலீஜியஸ் டிரஸ்ட்** மூலம் பணவுதவி செய்தார்கள். அவர்களுக்கு எமது உரித்தாகுக.

திருமுறை ஆசிரியர்கள் இருபத்தி ஏழுபேர்கள் என்பதால் இருபத்தியேழாவது மலர் பன்னிருதிரு முறை அறிமுகம் எனும் பெயரில் மலர்ந்தது. இந்த மலரின் ஆய்வுப்பணிகளுக்கு சென்னை திருமுறைத் தொண்டர் பொற்றாளம் **சிவஸ்ரீ, ஆறுமுகம்** அவர் களும். சேலம் சின்ன திருப்பதி கயிலைமாமணி **G.S. ஆனந்தன்** அவர்களும் நிதி வழங்கினர். இம் மலருக்கென சில வரைகோட்டுப்படங்களை சென்னை கவுணியன் அச்சகம் சிவத்திரு. **சிவராமன் செட்டியார்** அவர்கள் அளித்தார்கள். சென்னை (அமரர்) திரு. கந்தசாமிமுதலியார் அவர்கள் வரைந்து வெளியிட்ட திருமுறை ஆசிரியர்கள், திருமுறைக் கோயில் முதலான படங்களை அவருடைய பேரர்கள் மயிலாப்பூர் சிவஸ்ரீ P.M. **இராஜ கணபதி** அவர்களும் தந்து உதவினர். இவர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இருபத்தெட்டாவதான வேத ஆகம புராணங் களை விளக்கும் மலரின் ஆய்வுப் பணிகளுக்கும் அச்சுத்தாள்களுக்கும் வேலூர் ஹரீஷ் புட் வேர்ல்டு உரிமையாளர் சிவஸ்ரீ V.S. **வேதராஜன்** B.E., அவர்கள் தம் சகோதரிகள் V.S. **ரேவதி, V.S. பர்வதா,** மற்றும் செல்வன் **சாய்கிருஷ்ணன்** பெயரால் நன்கொடை அளித்தார்கள். நம்மீது அன்பு பாராட்டி உதவி வரும் இவர்களுக்கு எனது நன்றியைப் பணிந்து தெரிவித் துக் கொள்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருபத்தியொன்பதாவதான திருமாலீசர் எனும் மலர் வெளிவரும் வேளையில் அதற்கான அச்சுத் தாள்களை அளித்தவர்கள், சென்னை கோடம்பாக்கம் புலியூர்ஸ்ரீபாரத்வாஜேஸ்வரர் திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ. பாரத்வாஜேஸ்வர சிவாசாரியாரின் குமாரர்களான அலங்கார மாமணி சிவஸ்ரீ. பாலசந்திர சிவாசார்யர் (சத்தீஸ்) சிவஸ்ரீவிசுவநாத குருக்கள் (காமேஷ்) ஆகியோராவார். இவர்கள் தொடர்ந்து நல்லாதரவு அளித்து வருகின்றனர். இவர்கள் மூல மாக வடபழனி ஆகம சிரோன்மணி வைரவஸ்ரீ இராஜசேகர சிவாசாரியரின் அறிமுகம் கிடைத்தது. அவர்கள் பலகருத்துகளை வழங்கி உதவினார்கள். வழக்கமான நல்லாதரவுடன் இம் மலரில் படங்களை வரைவதற்கென மேற்கு மாம்பலம் சிவஸ்ரீ கோபாலன் (கோபி) அவர்கள் பண உதவி செய்தார்கள். சில படங்களை நன்மங்கலம் சிவஸ்ரீ. லட்சுமிநாராயணன் அளித்தார்கள். இவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

முப்பதாவதாக மலர்ந்த மூவராய் நின்ற முதல்வன் எனும் மலருக்கு உதவியவர் திருமதி. தர்மாம்பாள் ஆவார். நமது குருஜி திருப்பணிச்செல்வர் K.K. கோபால்சர்மா அவர்கள் தாம் முன்னின்று திருப்பணி நடத்தி குடமுழுக்கு செய்த வாரணாசி (காசி) அனுமான்காட் ஸ்ரீசக்கரலிங்கேசுவரர் ஆலயக் குடமுழுக்கு விழாவிற்கு என்னையும் அழைத்துச்சென்றார்கள். அங்கு கங்கையில் நீராடி காசி விசுவநாதரைத் தரிசித்து மகிழ்ந்திருக்கும் வேளையில் (மேனாள், இந்தியன் வங்கி அதிகாரி) பிரம்மஸ்ரீ வே. இரமணன் அவர்கள் அங்கு வந்திருந்த தனது சிறிய தாயார் திருமதி. தர்மாம்பாள் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தி சிவமஞ்சரிப் பணிக்கு உதவியருளும்படிக் கூறினார்கள். ஐதராபாத்தில் வசித்துவரும் அந்த அந்த அம்மையார் தமது கணவர் அமரர் பிம்மஸ்ரீ நாகேசுவர ஐயர் பெயரால் ரூ. 10,000 வழங்கி பணி சிறக்க வாழ்த்தி அருளினார்கள். எதிர்பாராது கிடைத்த இந்த உதவியினால் பெரிய ஊக்கம் உண்டாயிற்று. முப்பதாவது மலர் அவர்களின் அருட்கொடையாக ஓராயிரம் பிரதிகள் அச்சிட்டு இலவசமாக வழங்கப்பட்டது. இவர்களுக்கு எனது மனம் மொழி மெய்களால் மீண்டும் மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்து செம்மைப்படுத்தி உபகரித்து வருபவர் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ நடராஜன். அவர்களாவர். இவருடைய குமாரர் பானு (எ) பாலசுப்பிரமணியன் (ஸ்பீகள் பிரின்ட்டர்ஸ்) அவர்களும் அநேக உதவிகளைச் செய்து வருகின்றார். மேலும் படிகளை திருத்தி உதவிவரும் அன்பர்கள் சிவஸ்ரீ. த. பூமிநாகநாதன் (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி) இலக்கியச்சாரல் கோவிந்தராஜன் மஞ்சரி திரு. ஸ்ரீராம் ஆகியோருக்கும் எமது உரித்தாகுக.

இந்நூலுக்குத் தேவையான ஓவியங்களை வரைந்தளித்த திரு. ஜெகன் திரு. கணேசன் கோடம்பாக்கம் சிவஸ்ரீ. கணபதிஐயர், திரு. கோவி (கோவிந்தராஜன்) அமரர் திரு. சிவராஜ் (சசி) ஆகியோருக்கும் அட்டைக்கான வண்ணப்படத்தை வரைந்தளித்த திரு. பராஸ்கர் அவர்களுக்கும், எமது நன்றி உரித்தாகுக.

புகைப்படங்கள் சிலவற்றை வழங்கியவர் சிவஸ்ரீ. மீனாட்சி சுந்தரம் (செயலாளர் இந்துதர்ம மன்றம்) திருவாவடுதுறை ஆதினம் சிவஸ்ரீ. நாராயண சுவாமி. ஆகியோர் வழங்கினர். சிலபடங்கள் சென்னை மயிலை செங்குந்த மரபினரின் திருக்கோயிலான ஸ்ரீ வெள்ளீசுவரர் ஆலய நிர்வாக அறங்காவலர் சிவஸ்ரீ. ஆ. சண்முகம் அவர்கள் உதவினார்கள் இவர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் தேவையான படங்கள் தமிழ்நாடு தொல்லியில் (ம) அருங்காட்சியகத் துறையினரிடமிருந்து பெறப்பட்டன. இத்துறை அதிகாரிகள் டாக்டர் சிவஸ்ரீ. இரா. நாகசாமி. சிவஸ்ரீ நடனகாசிநாதன் திரு. தாமோதரன். திரு அப்துல் மஜீத் ஆகிய திருவாளர்களுக்கும் இந்நாள் ஆணை யர் திருமிகு. கண்ணன் அவர்களுக்கும் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி. நிழற்படப் பிரிவு அலுவலர் திரு. திருஞானசம்பந்தன் உதவிகேமராமேன் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்த வேளையில் சிவமஞ்சரியின் ஆரம்ப காலம் முதல் துணைசெய்து வரும் குருஜி காயத்ரி அருள்மாமணி ஸ்ரீ வீரமணி சுவாமிகள், தவத்திரு பர்வதமலை சித்தர், ஸ்ரீலஸ்ரீ ஜோதி ராமலிங்க சாமிகள், நங்கநல்லூர் மணவழகர் மாலை மாதஇதழ் ஆசிரியரும், மேனாள் தமிழ்நாடு மின்சார செயற்பொறி யாளருமான கோவூர் திரு. கே. பி. துரை சேலையூர் திரு சாய்ராம். மேற்கு மாம்பலம் என். ஆர். வெங்கடேசன் திருவான்மியூர் பாம்பனடிமை குகஸ்ரீ வே.நா. சௌந்தராஜன் – பிரகதா தம்பதியர், கயிலைப் புனிதர் ஷண்முகம் (மேனாள் சாரப்திவாளர் பதிவுத் துறை)

பேராசிரியர். திரு. ஆர். ராதாகிருஷ்ணன் (அண்ணா பல்கலைக் கழகம்) தேனாம்பேட்டை கட்டுமானப் பொறியாளர் திரு. ஜெயராமன் திரு. ராஜகணபதி மேனாள் ரிசர்வ் வங்கி அதிகாரி சிவஸ்ரீ ராஜா. சென்னை மயிலைசேவாசக்ரா சிவஸ்ரீ நாராயண சாமி இருதய சிறப்பு மருத்துவர் சிவஸ்ரீ.டாக்டர் சிவகடாக்ஷம் (ஹார்வி ஹாஸ்பிடல்ஸ்) சிவஸ்ரீ.டாக்டர். அ. மாணிக்கம் (மீனாமருத்துவமனை, பல்லாவரம்), சிவஸ்ரீ. டாக்டர். வி. பி. ஆர். வரதராஜன் (ராம பாண்டியராஜ் கிளினிக்), சிதம்பரம் டாக்டர். சிவஸ்ரீ. பேராசிரியர். சோ. முருகன் (அண்ணா மலை பல்கலைக் கழகம்) டாக்டர். சிவஸ்ரீ. விசுவேசுவரன் (பத்மினி நர்சிங்ஹோம்), தி.நகர், திருமதி. விஜயா ஆனந்த் சிவஸ்ரீ. சுவர்ண குமார் (சிம்சன்), சிவஸ்ரீ வேதகிரி (சாந்தி புக் கவுஸ்), திருமதி. திரிபுரவல்லி (மாமி) திரு. புகழேந்தி ஆகிய அன்பர்களுக்கு எமது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக நமது எழுத்துப்பணிகளுக்கு நல்லாதரவு தந்து ஊக்கப்படுத்தி வரும் கலைமகள், மஞ்சரி இதழ்களின் அதிபர் திரு. நாராயணசுவாமி அவர்கள், எமது குருநாதரும் மஞ்சரி ஆசிரியருமான திரு. லைமன் (எ) லெட்சுமணன். கலைமகள் ஆசிரியர் திரு. கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## நன்றி மலர்கள்

இறைவன் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரி (ஆறாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பு (2006) வெளிவந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் முன்வெளியீட்டுத் *தொகை அளித்து உதவி செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அனைத்து அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வை அருள வேண்டும் என்று அவர் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன்.

வாழி நலம் சூழ! - அன்பன் பூசை. ச. அருணவசந்தன்

நல்லாதரவு தந்துவரும் வணக்கத்திற்குரிய கோயிலூர் மடலாயம்
**சீர்–வளர்–சீர்– நாச்சியப்பஞானதேசிக சுவாமிகள்** அவர்களுக்கு
எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

"கயிலைப் புனிதர்"
பேரா. சிவஸ்ரீ. **Dr. சோ. முருகன்**
தெற்கு ரத வீதி, சிதம்பரம்.

சிவஸ்ரீ. **M. ராஜசிம்ம மகேந்திரன்** ICICI
சிவஸ்ரீ. **S. மோகனசம்பத்**
மேநாள்அறங்காவலர், ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயம் பஞ்சேட்டி

சிவஸ்ரீ. **சங்கரநாராயணன்**
செட்டித் தெரு, புதுவை.

சிவஸ்ரீ. **N. லட்சுமணன்**
வெங்கடேஸ்வரா நகர்,
மல்கஜ்கிரி, ஹைதாராபாத்–47.

திருமதி. **C. லட்சுமி சிவராமகிருஷ்ணன்**
ஆழ்வார்திருநகர், சென்னை

"சித்தாந்த சேவாரத்தினம்"
சிவஸ்ரீ. **ம.சேகர்–பத்மாவதி**
55, வெண்ணிசாமி நகர், குருவப்பநாயக்கன் பாளையம்,
அரும்பார்த்தபுரம், புதுவை–11

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. **K. இரத்தினசபாபதி**
27, திருவேங்கடமுதலி முதல் தெரு,
புதுப்பேட்டை சென்னை – 2.

"திருப்பணிச் செல்வர்"
**Dr. தேவராஜன்.** M.B.B.S
திருமழிசை சென்னை.

சிவஸ்ரீ. **G.T. நாடியன் செல்வன்**
CISCO SYSTEMS, INC. BANGALORE-25.
விழுப்புரம் தென்னாற்காடு மாவட்டம்

சிவஸ்ரீ. **Prof. Dr.M.V. சத்தியநாராயணா**
தண்டீஸ்வரம் வேளச்சேரி, சென்னை–42.

சிவஸ்ரீ **A. வெங்கடேசன்**
கோரல் மினார், இராஜ அண்ணாமலை புரம்,
சென்னை – 28.

சிவஸ்ரீ. பொற்றாளம் **துரை ஆறுமுகம்**
மேற்கு மாம்பலம், சென்னை–33.

சிவஸ்ரீ **T.R. ரமேஷ்**
டிசில்வா சாலை, ஆழ்வார்பேட்டை, செ– 18.

சிவஸ்ரீ. **Dr.T.R. சுரேஷ்** M.B.B.S
காசிவிசுவநாதன் காலனி,
மேற்கு மாம்பலம், சென்னை– 33.

சிவஸ்ரீ **P.B. வெங்கட்ராமன்**
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. **Dr.C. ரவிசங்கர்** B.D.S
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, வில்லியனூர் சாலை,
ரெட்டி பாளையம், புதுவை 20.

சிவஸ்ரீ. **தி. அனந்த நாராயணன்**
மந்தைவெளி, சென்னை.

"சித்தாந்த ரத்தினம்" சிவஸ்ரீ. **S. வாசு**
மீடியாலிங்க் கான்செப்ட்ஸ், சென்னை

"தேனுபுரீஸ்வர தாசன்"
சிவஸ்ரீ. **இல. சங்கர்,** மாடம்பாக்கம், சென்னை

சிவஸ்ரீ K.P.P. **பன்னீர் செல்வன்** M.A (ECO), M.A (R.Admn). M.L.M.B.A,
சிறப்பு அதிகாரி / கூடுதல் பதிவாளர் தமிழ்நாடு வீட்டு
வசதிவாரிய கூட்டுறவு சங்கங்களின் இணையம்

"திருவாசகச் செம்மணி" இருமொழிச் சீராளர்
திருவையாறு **வே. இரமணன்,** திருவனந்தபுரம்

*இத்தொகைக்கு ஈடாக இப்பதிப்பின் அன்பர்களுக்குச் சலுகைவிலையில் வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆ-ர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஸ்ரீ. Prof. Dr.R. ராதாகிருஷ்ணன் Ph.D.,
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–23.

சிவஸ்ரீ சுவாமிநாதன் (எ) சிவா
S/o. சிவஸ்ரீ சாமி. சுப்பையா ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சீபுரம்.

சிவஸ்ரீ A. ராஜேந்திரன்
உரிமையாளர் சூரியலட்சுமி ஏற்றுமதிகள், திருப்பூர்

சிவஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
M/s. K.K. பிரஸ்டுல்ஸ் & காம்பனண்டஸ்
ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை–20.

சிவஸ்ரீமதி N. ஜெயலட்சுமி
சிருங்ககிரி மடம் சாலை, மந்தைவெளி, சென்னை–28.

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. வி.செங்குட்டுவன்–கல்யாணி
35, 2வது குறுக்குத் தெரு, திருமால் நகர், பாண்டி–13.

சிவஸ்ரீ B. கண்ணையன்
பெருமாளகரம் திருவேற்காடு, சென்னை.

"சித்தாந்த ரத்தினம்" சிவஸ்ரீ. S. ரவீந்திரன்
தனலட்சுமி வங்கி, சேலம்.

நாகை கோ. சிவப்பிரபு
சிஸ்டைம்ஸ் (பி) லிமிட், சென்னை.

திருமதி. வெ. சியாமளா
தலைமை மேலாளர், ஓரியன்டல் பேங்க் ஆப் காமர்ஸ் சென்னை

கயிலைமணி K.K. கோபாலன் சர்மா பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை –20.
சிவஸ்ரீ V.S. கல்யாணராமன் I.P.S. (Retd.) "சுக்ருதா" மாருதி நகர், நகர்பாவி ரோடு, பெங்களூர்

4–ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆகியோருக்கு எமது நன்றி உரித்தாகுக.

இந்நூலினைப் பலருக்கும் அறிமுகப்படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் பிரம்மஸ்ரீ. G. பரமேஸ்வரதீட்சிதர் திருவாவடு துறை ஆதின சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய இயக்குனர் ஈசானசிவம் திரு. கு. வைத்யநாத சிவாசாரியர் அன்பர்கள் புதுவை சைவ சித்தாந்த ரத்தினம் திரு. ம. சேகர். பரமக்குடி திரு&திருமதி. ஹரிவாசுதேவ் தம்பதியினர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நமக்கு மின்னச்சு செய்து தரும், தனம்லேசர் பிரிண்டர்ஸ், உரிமையாளர் திரு. செ. சிகாமணி. மின்தட்டச்சர்களான எனது சகோதரி கள் A. ஐரில். P. வனிதா. S. ஸ்ரீவித்யா ஆகியோருக்கும் மறுதோன்றி அச்சகத்தினர் தி. மனோகர் (மனோ பிரிண்டர்ஸ், திருவல்லிக்கேணி), நிழற் பிரதியாளர் சத்யாபிராசஸ் S. இராதாகிருஷ்ணன் ஆகியயாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்தது டாக்டர். உ.வே.சாமிநாதைய்யர் நூலகமாகும், அந்நூலகத்தின் மேனாள் காப்பாளர்களாக இருந்த சிவஸ்ரீ. பாலசாரநாதன், திருமதி. கீதாசேஷாத்திரி ஆகியோருக்கும் இந்நாள் காப்பாளர். திரு. ம.வே. பசுபதி அவர்களுக்கும் நூலகர் சிவஸ்ரீ K. பாஸ்கர், உடனாளர் திரு. எஸ்.சாய்ராமன், எழுத்தர், திரு.K. நடராஜன், பணியாளர்கள் பொன்னுவேல், M. மணி. ராமஜெயம். திருமதி. கன்னிகாமணி ஆகியோருக்கும் எமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. K. வசந்தா எனது அனைத்து சிவப்பணிகளுக்கும் உதவியாக இல்லப்பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருக்கின்றாள் அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவர்கள் யாவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலை யெம் மண்ணல் சகல செல்வ யோகமிக்கப் பெரு வாழ்வை அருள்பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
சிவப்பணியில் மீளா அடிமை

மணிவாசகர் விழா, திருமயிலை
28-07-2002 ஞாயிற்றுக்கிழமை

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை –18.

பூசை.ச.ஆட்சிலிங்கம்

பூசை.ச.ஆட்சிலிங்கம்
(எ) பூசை.ச.அருணவசந்தன்

சிவமஞ்சரி: சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்
சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை

# நூலின் உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| மலர் 26 | ஸ்ரீ பிரம்மபுரீசுவரர் | பக்கம் | 801 |
| மலர் 27 | ஸ்ரீ பன்னிரு திருமுறைகள் அறிமுகம் | ,, | 833 |
| மலர் 28 | ஸ்ரீ வேத, ஆகம, புராணேஸ்வரர் (வேத நாயகர். சிவாகமங்கள் ஸ்ரீ புராணேசுவரர்) | ,, | 865 |
| மலர் 29 | திருமாலீசுவரர் | ,, | 897 |
| மலர் 30 | ஸ்ரீ மூவராய் நின்ற முதல்வன் | ,, | 929 |
| | அரியர்த்தர் – சங்கர நாராயணர் | ,, | 955 |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலிய தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.

பேரன்புடைய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகிறது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைப்படங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள ஐந்து நூல்கள் இந்த ஆறாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.)

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமாஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க) தியாகராஜர்
21. கேதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. ஸ்ரீ கல்யாணசுந்தரர்
26. **ஸ்ரீ பிரம்மபுரீசுவரர்**
27. **பன்னிருதிருமுறைகள் அறிமுகம்**
28. **வேத, ஆகம, புராணேசுவரர்**
29. **திருமாலீசுவரர்**
30. **மூவராய்நின்ற முதல்வன்**
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. ஸ்ரீ தீர்த்தேசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவர்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

**சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்.**

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள். தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்–வளர்–சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் "சிவமஞ்சரிச் செம்மல்" என்ற பட்டத்தையும், அகில உலக பக்தி இலக்கியப் பேரவையினர் "அருட்பணி அரசு" என்ற பட்டத்தையும், சென்னை இந்து தர்ம மன்றத்தினர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் பீடாரோகணப் பொன் விழா விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர். ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்



# பிரம்மபுரீசுவரர்

ஆதிசிவன் உலகைத் தோற்றுவிக்கத் திருவுள்ளம் கொண்டார். அந்த வேளையில் அவருடைய அருள்தன்மை அவரிடமிருந்து பெண்ணுருக் கொண்டு வெளிப்பட்டு அவரது இடப்பாகத்தில் பராசக்தியாக அமர்ந்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து உலகத்தையும் அதில் உயிர்த்தொகுதிகளையும் உண்டாக்கினர். தொடர்ந்து உலகம் தொழிற்பட பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் என்ற ஐவரைப் படைத்து அவர்களுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் அளித்தனர்.

இதில் முதலாவது மூர்த்தியாகத் திகழும் பிரம்மதேவன் யாகங்களின் தலைவனாகவும், அறிவின் கடவுளாகவும், படைப்புக் கடவுளாகவும் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றான். இவன் தேவர்களுக்கு வழிகாட்டியாகவும், சிறந்த சிவபக்தராக்வும் திகழ்கின்றான்.

பிரம்மா கர்வம் கொண்டபோது, சிவபெருமான் அவனுடைய கர்வத்தை அடக்க அவனுடைய ஐந்தாவது தலையை வெட்டினார். அதனால் அஞ்சிய பிரம்மன் அனேக இடங்களில் சிவபூசை செய்து சிவனருள் பெற்றான். அவன் பூசித்த அனேகத் தலங்கள் அவன் பெயரால் பிரம்மபுரங்கள், பிரம்மபுரி என்று பலவாறு அழைக்கப்படுகின்றன. இந்தியா முழுவதிலும் அனேக பிரம்மபுரங்களைக் காண்கிறோம்.

மேலும் ஒரு முறை விண்ணுக்கும், பாதாளத்திற்கும் தழலாய் நின்ற சிவபெருமானின் திருமுடியைக் காண முயன்று தோற்றான் பிறகு அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் முடியைக் கண்டேன் என்று பொய் கூறினான். அதனால் கோபம் கொண்ட சிவபெருமான் அவனுக்குக் கோயிலும் தனிப் பூசையும் இல்லாமல் போகட்டுமென்றுச் சபித்துவிட்டார். அதனாலும் வருந்திச் சிவபெருமானை அவன் பல இடங்களில் பூசை செய்தான்.

மேலும், இப்படி அவன் அனேக தடவைகள் சிவபூசை செய்ததைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. பிரம்மா சிவவழிபாட்டில் ஒரு முக்கியமான தேவதையாகப் போற்றப்படுகிறார். சிவாலயங்களில் அவருக்குக் கருவறையின் வடக்குக் கோட்டத்தில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. நித்திய சிவவழிபாட்டிலும் பிரம்மனுக்கு மந்திர பூர்வமாகப் பூசை செய்யப்படுகிறது.

சிவமஞ்சரியின் இந்த இருபத்தாறாவது மலர் பிரம்ம தேவனின் பெருமைகளை விளக்குவதுடன் சிவவழிபாட்டில் பிரம்மனுக்குரிய சிறப்பிடத்தையும், தனிச் செய்திகளையும் விளக்குவதாக மலர்கிறது. இதில் பிரம்மன் வழிபட்ட பிரம்மபுரங்கள், பிரம்ம தீர்த்தங்கள், சதுர்வேத மங்கலங்கள், முதலான அனேக செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. வேதஞானவல்லி உடனாய ஸ்ரீ ஞானபிரம்மபுரீசுவரர் அன்பர்களுக்குச் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றோம்.

– சிவமஞ்சரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்மதேவன் - சிந்தனைத்துளிகள்

சிவபெருமானால் படைக்கப்பட்டு படைக்கும் தொழிலுக்கு அதிபதியாக்கப்பட்ட தேவன், பிரம்மன் என்று அழைக்கப்படுகிறான்.

❁ அவன் தேவர்களின் வழிகாட்டி, அவர்களுக்குத் துன்பம் நேரும் பொழுதெல்லாம் நல்வழிப் படுத்தி அவர்களின் மனதிற்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் தருபவன்.

❁ எளிதில் வரம்தரும் இனிய இயல்பு கொண்டவன். தேவர், அசுரர், முனிவர் என்று எவர் உக்கிரமான தவத்தைச் செய்தாலும் அவர்கள் மீது அன்பு கொண்டு அனேக வரங்களைத் தருபவன். பின்பு அவர்களுக்குக் கட்டுப்பட்டு இருப்பவன்.

❁ காலை, நண்பகல், மாலை என்ற மூன்று சந்தியா காலங்களுக்கும் தேவதைகளாகத் திகழும் காயத்ரி, சாவித்திரி, சரஸ்வதி ஆகியோரைத் தேவியராகப் பெற்றவன்.

❁ தேவர்கள் செய்யும் யாகங்களை நடத்திவைக்கும் தேவப் புரோகிதன். சிவன், திருமால், விநாயகர், முருகன் ஆகிய எல்லோருடைய திருமணங்களையும் நடத்திவைத்த சிறப்பைக் கொண்டவன்.

❁ இவனுடைய மானசபுத்திரிகளே சித்தி, புத்தி, என்னும் இரண்டு பெண்கள் ஆவர். அவர்கள் விநாயகரை நோக்கித்தவம் செய்து அவரைக் கணவராகப் பெற்றனர்.

❁ இவன் சூரியமண்டலாதி பதியாகவும், வானுலகின் காவல் தெய்வமாகவும் போற்றப்படுகிறான். அதனால் அந்தரன், அம்பரன் என்று அழைக்கப்படுகிறான்.

❁ தாரகமந்திரமான பிரணவத்தின் காவலன் எனவே தாரகப்பிரம்மன் என்று அழைக்கப்படுகின்றான். என்றாலும் தாரகமந்திரத்தின் பொருள் தெரியாது விழித்து முருகனால் சிறையிடப்பட்டவன். சிவபெருமான் அவனைச் சிறையிலிருந்து விடுதலை செய்தார்.

❁ பிரம்மன் தனது நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களை ஓயாது ஓதிக் கொண்டேயிருக்கின்றான். அதனால் வேதி, வேதன், என்று பலவாறு அழைக்கப் படுகின்றான். வேத வேள்விகளைச் செய்யும் நிபுணன். இதனால் வேதா என்றும் தேவப்புரோகிதன் என்றும் அழைக்கப்படுகிறான்.

❁ பிரம்மன் சத்தியம், நீதி, நியாயம் முதலியவற்றின் தலைவன். எனவே சத்தியசந்தன், நீதிமான், நியாயாதிபதி, எனப்பலவாறு புகழப்படுகின்றான். அவனுடைய உலகம் சத்தியலோகம் என்று அழைக்கப்படுகிறது.

❁ பிரம்மனுக்கு மானசபுத்திரர்களாக அனேகர் தோன்றினர். அப்படி ஒரு சமயம் பத்துப் புதல்வர்கள் தோன்றினர். அவர்கள் துணைப்பிரமர்கள், சிறுவிதிகள் எனப்பலவாறு அழைக்கப்பட்டனர். இவர்களில் உயர்ந்தவனாகத் தட்சன் விளங்கினான். இவனுக்கு மகளாகப் பார்வதிதேவி தோன்றினாள். இவளே தாட்சாயணி ஆவாள். (விரிவுவேறுமலரில்)

❁ தட்சன் சிவபெருமானை விலக்கிவிட்டுச் செய்த வேள்வியில், பிரம்மதேவன் தலைமைப் புரோகிதனாக விளங்கினான். சிவபெருமான் அனுப்பிய வீரபத்திரன், தட்சனின் வேள்வியை அழித்ததுடன் பிரம்மனையும் கர்வபங்கம் செய்தான். சரஸ்வதியின் மூக்கை அரிந்தான். பிறகு பிரம்மன் சீர்காழியில் சிவனை ஆராதித்து அருள் பெற்றான்.

❁ பிரம்மன் ஒருசமயம் நந்தி வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். அவ்வேளையில் அவன் பிரம்ம நந்தி என்றழைக்கப்பட்டான். பெரிய சிவாலயங்களில் வெளிப் பிராகாரத்தில் மிகப்பெரிய சுதைச் சிற்பமாக பிரம்ம நந்தி எழுந்தருளியிருப்பதைக் காணலாம். திருவண்ணாமலையில் பெரிய கல்நந்தியாக பிரம்மநந்தி அமைந்துள்ளது.

❁ புராணங்களில் உருத்திரன், திருமால் ஆகியோர் மிகுந்த அழகிய முகமும் இளமையான தோற்றமும் வலிமையும் கொண்டவர்களாகக் காட்டப் படுகின்றனர். இதற்கு மாறாகப் பிரம்மனை மென்மையானவனாகவும், வயதால் மூத்து நீண்ட தாடி கொண்டவனாகவும் காட்டுகின்றனர். இதையொட்டி அவன் பங்கயக்கிழவன் தொன்முது கிழவன் என்று இலக்கியங்களிலும் அழைக்கப்படுகின்றான்.

❁ பதினெட்டு புராணங்களுள் பிரம்மனின் பெருமைகளை விளக்குவது பாத்ம புராணமாகும். இது 6 கண்டங்களும் 628 அத்தியாயங்களும் 55000 சுலோகங்களையும் கொண்டது. பிரம்மனின் சிருஷ்டியையும் ஹரிஹரர்களின் பெருமைகளையும் விளக்குவது. பகவத்கீதையின் பெருமைகளை பல்வேறு கதைகளுடன் சிறப்பாகப் போற்றுகிறது. ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்மனின் தோற்றமும் உலக உற்பத்தியும்

இறைவன் உலகத்தைப் படைத்தபின் அது தொடர்ந்து நடைபெறவேண்டுமென்று எண்ணினான். அதற்காகத் தன்னைப் போலவே ஒரு தேவனைப் படைத்தான். அவனே "பிரம்மன்" என்று அழைக்கப்படுகிறான். பிரம்மன் தோன்றியதைப் பல புராணங்கள் பலவகையாகக் குறிக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்:-

(1)

ஒரு கற்பத்தில் இறைவன் பொன்முட்டை ஒன்றை உற்பத்தி செய்தான். அதனுள் தோன்றிய பிரம்மன் அனேக காலம் அங்கேயே தவம் இருந்தான். அவனுக்கு உலகத்தைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால் அவன் அந்த பொன் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தான். பொன் முட்டையில் நெடுங்காலம் வீற்றிருந்ததால் அவனுக்கு 'இரண்யகர்ப்பன்' என்பது பெயராயிற்று.

அவன் படைத்த உலகிற்கும் இரண்ய கர்ப்பம் என்பது பெயராயிற்று. இந்தப் பெயர் என்றும் நிலைக்க அவன் பூமிக் கடியில் தங்கத்தை அமைத்தான். அவற்றையே நாம் இப்பொழுது தோண்டி எடுக்கின்றோம்.

பொன்போன்று மஞ்சளாகப் பிரகாசிப்பதால் அவனுக்குப் பொன்னன். என்பது பெயராயிற்று. மஞ்சள் நிறத்து ஆடைகள், மஞ்சள் அபிஷேகம், மஞ்சள் நிற மலர்கள் முதலியனவும் அவனுக்கு உரிய பொருட்களாகும். புஷ்பராகக் கற்கள் பதித்த நகைகள் உரியதாகப் போற்றப்படுகின்றன. அவனை வெண்மையான திருமேனி கொண்டவனாகவும் புராணங்கள் கூறுகின்றன.

பிரம்மன் சிவசக்தியரை வேண்டி உலகத்தை படைக்கத் தொடங்கினான். அவனுடைய முகத்திலிருந்து நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும், புராணங்களும் தோன்றின. அவனுடைய மனத்திலிருந்து மானச புத்திரர்களாக மரீசி, அத்திரி, ஆங்கீரசன், புலத்தியன், புலகன், கத்ரு, பிரசேதஸ், வசிட்டன், பிருகு, நாரதன் முதலிய அனேக ரிஷிகள் தோன்றினர்.

வலதுகால் கட்டை விரலிலிருந்து தட்சனும் மற்றைய விரல்களிலிருந்து ஒன்பது பிரஜாபதிகளும் தோன்றினர். நாபியில் திருமால் தோன்றினான். மனதிலிருந்து மன்மதனும், புருவத்தில் குரோதனும் அதரத்தில் லோபனும், புத்தியில் மோகனனும், அகங்காரத்தில் மனசும், காதில் பிரமோதனும், கண்ணிலிருந்து மிருத்யுவும் அங்கங்களிலிருந்து அப்சரஸ் முதலான அனேக பெண்களும் மனதில் காயத்திரி தேவியும் தோன்றினர். இன்னும் அனேகரை அவன் தனது அங்கங்களிலிருந்து படைத்து தனது துணைவர்களாகக் கொண்டான்.

அவர்கள் மூலமாக உலகில் உற்பத்தி தொடர்ந்து நடைபெற்றது. பிறகு உலக உயிர்களுக்கு அருள்புரிய அவன் அர்த்த நாரியாக நின்றான். அவனுடலிலிருந்த பெண்மைப் பகுதி தனியே வெளிவந்து பெண்ணானது. அவள் சதரூபவதி எனப்பட்டாள். அவள் நூறு வடிவங்கள் தாங்கிப் பிரம்மனுடன் சேர்ந்து உயிர்களின் அறிவை விளக்கப்படுத்தினாள்.

காயத்ரி-சாவித்ரி தேவியுடன் பிரம்மதேவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள் சரஸ்வதி எனும் பெயரில் அறிவு சோதியாக விளங்கினாள். அவளைக்கண்டு பிரம்மன் மோகம் கொண்டு அன்புடன் நோக்கினான். அவள் நான்கு திசைகளிலும் ஓட, அவன் நான்கு திசைகளிலும் தனித்தனி முகம் கொண்டு பார்த்தான். அவள் வானில் ஓட ஐந்தாவது முகம் கொண்டு அவளைப் பார்த்தான் அதனால் ஐம்முகம் கொண்டவனாக விளங்கினான்.

அவனும், அவளும் சேர்ந்து உலகினில் படைப் புத் தொழிலைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

(2)

ஒருயுகப் பிரளயத்தில் எங்கும் தண்ணீர் மயமாக இருந்தது. அந்தத் தண்ணீருக்கு மத்தியில் சிவபெரு மான் பிரகிருதி என்ற பெண்ணையும், புருஷன் என்ற ஆணையும் படைத்தார். தண்ணீருக்கு இடையில் தோற்றுவிக்கப்பட்டதால் அந்தப்புருஷன் நாராயணன் என்று அழைக்கப்பட்டார். அந்த நாராயணன் யோகத் தில் வீற்றிருந்து சிவபெருமானைப் போற்றினார். அவர் அருள் பெற்று பூமியை படைக்க எண்ணினார். அவரு டைய தொப்பூழிலிருந்து ஆயிரம் இதழ்கள் கொண்ட ஒரு பொன் தாமரைப் பூ ஒன்று தோன்றியது.

அதில் பிரம்மன் தோன்றினான். அவனும் யோகத் தில் நிலைபெற்றுச் சிவனைத் தியானித்து உலகினைப் படைக்கத் தொடங்கினர். அவன் பத்து பிரஜாபதிக ளையும், ரிஷிகளையும், முனிவர்களையும் படைத் தான். அவர்கள் வழிவந்த காசிபமுனிவனாலும் அவ னுடைய பதிமூன்று மனைவிகளாலும் இந்த உலகி லுள்ள அனைத்து உயிர்களும் பிறப்பிக்கப்பட்டன.

பிரம்மன்-சரஸ்வதி ஆகியோர் அருளால் உயிர்கள் அறிவைப் பெற்று மகிழ்வெய்தின. உலக உற்பத்தியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்னும் அநேக புராணங்களிலும் நாட்டுப்புற கதைகளிலும் பிரம்மன் தோற்றுவிக்கப்பட்டதும், அவனால் உலகம் உண்டாக்கப்பட்டதும், தனிச்சிறப் பாகப் பலவேறு வகைகளில் கூறப்பட்டுள்ளன ❁

## பிரம்மதேவன் ஆலயங்கள்

சிவன் அளித்த சாபத்தால் பிரம்மனுக்கு சிறப்பான ஆலயங்கள் இல்லாமல் போய் விட்டது. என்றாலும், விதிவிலக்காகப் பிரம்மனுக்குத் தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவற் றில் முதன்மையானது ஆஜ்மீருக்கருகிலுள்ள புஷ்கரில் அமைந்துள்ள தாகும். மிகுந்த கலையழகுடன் திகழும் இந்த ஆலயம் "ஜகத் பீட ஸ்ரீ பிரம்மா மந்திர்" என்றழைக்கப்படுகிறது. பத்ம புராணத்தில் இத்தலம் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

தாமரைத் தடாகங்கள் நிறைந்த தலமாதலின் இது புஷ்பகரம் என வழங்கப்பட்டது. இப்பொழுது புஷ்கர் என்று அழைக்கப்படுகிறது. சலவைக்கல்லால் மிகப்பெரிய அளவில் கட்டப்பட்ட பிரம்மன் ஆலயம் இங்கே உள்ளது. கருவறையில் பிரம்மதேவன் சாவித்திரி தேவியுடன் வீற்றிருக்கின்றார். சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன ஏராளமான மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர்.

❁ ஆந்திரமாநிலத்திலுள்ள குண்டூருக்கு அருகிலுள்ளச் சேப்ரு கோவாவுக்கு அருகிலுள்ள கர்மளி (கரம்போலன்) முதலிய இடங் களில் பிரம்மாவுக்குத்தனி ஆலயம் உள்ளதைக் காண்கிறோம்.

❁ தென்னகத்திலுள்ள பல ஆலயக் கல்வெட்டுக்கள் சதுர்முகக் கோயில் என்ற கோயிலைக் குறிக்கின்றன. இவை நான்முகனான பிரம்மனுக்கு அமைக்கப்பட்டதா அல்லது நான்கு முகங்களைக் கொண்ட லிங்கங்களுக்கு அமைக்கப்பட்டதா என்பதைத் தெளிவாகத் தெரிந்துக் கொள்ளமுடியவில்லை. ❁

ஸ்ரீ பிரம்மா-சாவித்திரி-புஷ்கர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்ம சிரகண்டீசுவரர்

சிவபெருமான் செய்த அதியுன்னத வீரச்செயல்கள் எட்டில் முதலாவதாக போற்றப்படுவது, அவர் பிரம்மனின் ஐந்தாவது தலையை அறுத்து அவனுடைய கர்வத்தை அழித்ததாகும்.

ஆதியில் சிவபெருமானால் படைக்கப்பட்ட பிரம்ம தேவன் அவரைப் போலவே எட்டு தோள்களும் ஐந்து முகங்களும் கொண்டவராக விள்ங்கினான். அதனால் தேவர்களும், முனிவர்களும் அவனைச் சிவபெருமானாகவே போற்றி வணங்கினர். இதனால் அவனுக்கு அளவுகடந்த கர்வம் உண்டாயிற்று. அதனை அறிந்த சிவபெருமான் பைரவனை படைத்து அவனுடைய ஐந்தாவது தலையை வெட்டி எறியும்படிக் ஏவினார். அதன்படியே வைரவனும் பிரமனின் ஐந்தாவது தலையை வெட்டி அதனைப் பிரம்ம கபாலம் என்னும் பானபாத்திரமாக ஆக்கிக் கொண்டார்.

அதன்பிறகு யுகங்கள் தோறும் தோன்றிய பிரம்மனுக்கு நான்கு முகங்களே இருந்தன. எனவே அவன் நான்முகன் எனப்பட்டான். திருமாலால் தோற்றுவிக்கப் பட்ட பிரம்மர்கள் யாவரும் நான்கு முகம் கொண்டவர்களேயாவர்.

சிவபெருமான் பிரமனது தலையை வெட்டிய நிகழ்ச்சிக்குத் தத்துவநோக்கில் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அதன்படி ஒவ்வொரு உயிருக்கும் படிப்பினாலும், அறிவினாலும் கர்வம் உண்டாகிறது. அந்த வித்யா கர்வத்தினால், ஆணவமும், செருக்கும் உண்டாகின்றன. அதன் மூலம் அவை பிற உயிர்களுக்குப் பல வகைகளில் தீமையையும் துன்பத்தையும் உண்டாக்குகின்றன. அந்த கர்வம் இருக்கும் வகையில் அந்த உயிர் தானும் ஈடேறுவதில்லை. அடுத்த உயிரையும் ஈடேற்றுவதில்லை. எனவே உயிர்களுக்கு ஆணவமும், இறுமாப்பும் ஏற்படுகின்றபோது இறைவன் பல விதமான தடைகளை ஏற்படுத்தி அதனை அழிக்கின்றான். பிரம்மனின் சிரத்தை அறுத்தல் என்பது அவனால் படைக்கப்பட்டுள்ள உயிர்களின் அறியாமையையும் ஆணவத்தையும் அழித்தல் என்பதே என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இது பிரம்ம 'சிரச்சேதனம்' என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய பிரம்ம சிரச்சேதனமென்பது பல முறை நடைபெற்றுள்ளதாலும், நீண்ட நெடிய காலத்திற்கு முன்பாக நடைபெற்ற பழங்கதை ஆதலாலும் பலரால் பலவிதமாக சொல்லப்பட்டுள்ளது. இதைப் போலவே பழைய புராணங்களிலும் இதுபற்றிப் பலவிதமான கதைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் காணலாம்:-

## சிவபுராணத்தில் பிரம்ம சிரகண்டீசுவரர்

சிவமகாபுராணத்தில் சிவபெருமான் பிரமனின் தலையை வெட்டியதற்கான காரணம் வித்யேசுவர சம்ஹிதையில் சொல்லப்பட்டுள்ளது. அதன்படி:-

ஒரு சமயம் நீண்ட நெருப்புத் தூணாக நின்ற, சிவபெருமானின் அடியையும், முடியையும் காணத் திருமாலும், பிரமனும் முயன்றனர். காலங்கள் பல கடந்தன. திருமால், அடியைக் காணாது திரும்பி விட்டார். தனது தோல்வியையும் ஒப்புக் கொண்டார்.



பிரம்மசிரகண்டீசுவரர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மதேவன், வானில் நெடுந்தூரம் பறந்தும் அவருடைய முடியைக் காண முயன்று முடியாமல் தோல்வியுற்றுத் திரும்பினான். ஆனால் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளாது, திரும்பத் திரும்ப தான் அவருடைய முடியைக் கண்டதாகப் பொய் கூறினான். சிவபெருமானின் முடியிலிருந்து வீழ்ந்த தாழம்பூவையும் பொய்சாட்சி சொல்லும்படி செய்தான். குறிப்பாக, அவனுடைய ஐந்தாவதான உச்சித்தலை அந்தப் பொய்யைத் திரும்பத்திரும்பச் சொன்னது.

அதைக் கேட்ட திருமால், உண்மையை அறியாமல் பிரம்மதேவனை ஆற்றல் உள்ளவனாகக் கருதி அவனுக்கு அனேக உபசாரங்களைச் செய்து வழிபட்டார். அப்போது ஜோதி வடிவாக விளங்கிய தூணிடமிருந்து, சிவபெருமான் வெளிப்பட்டார். அவர் பிரமனைக் கொல்ல உக்கிரத்துடன் வந்தார்.

அதைக் கண்டு அஞ்சிய திருமால் அவருடைய கால்களில் வீழ்ந்து வணங்கினார். திருமாலின் பூசையால் மகிழ்ந்த சிவபெருமானின் கோபம் குறைந்தது. அவர் திருமாலைத் தழுவி மகிழ்ந்தார்.

அன்பனே, "நீ உண்மையானவனாக இருப்பதால் இனி உன்னை உலகில் விக்கிரக வடிவில் அன்பர்கள் வழிபடுவார்கள். உனக்குக் கோயில்கள் அமைத்து விரிவான பூசைகளையும், விழாக்களையும் செய்வார்கள் என்று பல வரங்களையும் அளித்தார்.

பின்னர் பிரம்மனை நோக்கிக் கோபத்துடன், "உனக்கு உலகத்தில் கோயில்களும் பூசைகளும் இல்லாது போகட்டும், என்றார். பிறகு தாழை மலரை நோக்கி நீ எனது பூசைக்கு உபயோகமற்றவனாக ஆனாய்" என்றார்.

மீண்டும் சினம் அடங்காதவராகத் தனது புருவ மத்தியில் இருந்து பைரவ தேவனை உற்பத்தி செய்தார். அவனை நோக்கி, 'குமாரனே, இந்தப் பிரமனின் பொய் கூறிய சிரங்களை அறுத்தெறிக' என்றார். அவனும் பாய்ந்து பிரம்மனின் உச்சித் தலையைப் பற்றி அறுத்தெறிந்தான். தொடர்ந்து மற்ற தலைகளையும் வெட்ட முயன்றான்.

அப்போது பிரம்மனின் தகப்பனான திருமால் சிவபெருமானை வணங்கி, "பெருமானே, அவன் செய்த பிழைகளை மன்னியுங்கள் முன்பு அவன் செய்த தவத்திற்கு மகிழ்ந்து அவனுக்கு ஐந்தாவது முகத்தை அளித்தீர்கள். இப்போது மீண்டும் அவன் நான்முகனாகி விட்டான் அவனை மன்னியுங்கள்", என்று பலவாறு துதித்துப் போற்றினார்.

பிரம்மனும், அவரை வணங்கி, ஐயனே, எனது பொய்சொன்ன தலையை அறுத்தெறிந்தது பற்றி மகிழ்ச்சியே, நான் சத்தியசந்தனாக விளங்க எனக்கு அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்தான். அதனால் மேலும் மகிழ்ந்த சிவபெருமான் பிரமனை நோக்கி, உலகத்திற்கு அரசனில்லாவிட்டால் அது கேடு அடையும். ஆதலால் உலகிலுள்ள வேதம் ஓதுபவர்க்கெல்லாம் அரசனாக இருப்பாய். அக்கினி ஹோத்திரம் முதலான அனைத்து வேள்விகளுக்கும், நீயே குரு உன்னை விடுத்து எத்தனை பக்தியுடனும் சிரத்தையுடனும் செய்தாலும் யாகங்கள் உரிய பலனைத்தராது என்று அவனை யாகாதிபனாக்கினார்.

அனைவரும் விடை பெற்றுக் கொண்டு தமதிருப்பிடம் சென்றனர். அவனும் சத்தியயோகம் என்னும் தமதிடம் சேர்ந்தான். பின்னர் சிவபெருமான் பைரவனுக்கு தனி உலகினைப் படைத்து அவனை அங்கே செல்லுமாறு கூறினார்.

## இன்னும் ஒரு கதை

சிவபுராணத்திலுள்ள ஞான சம்ஹிதையிலும் பிரம்மதேவன் கர்வபங்கம் செய்யப்படுவதும்; பிரம்ம கபாலம் காசியில் நிலைப்படுத்துவதும் கூறப்பட்டுள்ளன. இந்தக் கதையைச் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறினார்.

ஒரு சமயம் உலக நலன்களை விசாரித்தறியத் திருவுள்ளங்கொண்டுச் சிவபெருமான் ஒவ்வொரு இடத்திற்கும் சென்றார். அவ்வகையில் பிரம்ம லோகத்திற்கும் சென்றார். அவரைப் பிரம்மதேவன் தமது தேவியருடன் வரவேற்றுப் பூசைசெய்தான். அவனுடைய நான்கு முகங்கள் சிவபெருமானைத் துதிக்க, ஐந்தாவது முகம்மட்டும் குறைகூறியது.

அதைக் கேட்ட, சிவபெருமான் மிகுந்த கோபம் கொண்டார். பிரம்மனின் இந்த துஷ்டமுகம் அவனுடைய பெருமையைக் குறைக்கின்றது. இதை அவனுடைய நன்மைக்காகவே அறுத்தெறிய வேண்டுமென்று எண்ணினார்.

தனது நெற்றிக் கண் நெருப்பை உமிழ, அவனை அணுகித் தனது இடது கரத்தால் அவனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்தார். அது அவருடைய கையில் ஒட்டிக் கொண்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் சிவபெருமான் காசி நகரம் சென்று அந்த பிரம்ம கபாலத்தை நிலைப்படுத்தினார். பிரம்மனும் பேறு பெற்றவனாவான். அப்பொழுது முனிவர்கள் சூதமுனிவரிடம், "முனிவரே! பிரம்மன் மிகுந்த சிவபக்தன் அவனுடைய நான்கு முகங்கள் அவரைத் துதிக்க, ஐந்தாவது முகம் ஏன் துதிக்க மறுத்ததுடன் தூஷித்தது" என்ற கேள்வியைக் கேட்டனர். அப்போது சூதமுனிவர் ஒருசமயம் பிரம்ம தேவன் சரஸ்வதியைப் படைத்தான். அவளுடைய பேரழகில் மயங்கி 'என்னைத் தழுவி மகிழ்க' என்று சொல்லி அவளைத் தாவி அணைத்தான். அதனைக் கண்டு கொதித்த சரஸ்வதி தேவி 'என்னை மகளென்றும் பாராமல் தகாத வார்த்தை கூறினீர். உமது ஐந்தாவதுசிரம் எப்போதும் கெட்ட வார்த்தைகளையே பேசி சிவனால் அறுக்கப்படட்டும்' என்று சாபமிட்டாள். அதன் காரணமாகவே அது சிவபெருமானால் அறுக்கப்பட்டது என்றார்.

## சாக்த தந்திரங்களில்

பராசக்தியைத் தலைமைத் தெய்வமாகக் கொண்ட சாக்த நூல்களிலும் பிரம்மனின் ஐந்தாவது தலை அறுக்கப்பட்ட நிகழ்ச்சி குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி...

ஒரு சமயம் பராசக்தி சிவலிங்கத்தை அமைத்து சிவபூசை செய்து, சிவயோகத்தில் வீற்றிருந்தாள். பகல் பொழுது கழிந்த மாலைப் பொழுதாயிற்று.

அந்த வேளையில் பிரம்மதேவன் அந்த இடத்திற்கு வந்தான். சிவத்தை சிந்தையில் தேக்கி நின்றதாலும், மாலைப் பொழுதின் தன்மையாலும், அவள் ஐந்து முகத்துடன் வந்த பிரம்ம தேவனைச் சிவன் என எண்ணிப் பணிந்து வணங்கினாள்.

அப்போது சிவ பெருமானும் அங்கே வந்தார். அவர் ஜகன்மாதாவான பார்வதி தன்னை வணங்கும் போது அதனை விலக்காமல், மகிழ்ச்சியுடனும் அகந்தையுடனும் ஏற்றுக் கொள்ளும் பிரம்ம தேவனைக் கண்டு கோபித்தார். விரைந்து சென்று அவனது ஐந்தாவது தலையைத் தனது நகத்தால் கிள்ளியெடுத்தார். அது அவருடைய கையில் ஒட்டிக் கொண்டது.

பிறகு ஒரு லீலையாக அதனை ஏந்தியவாறு பன்னிரண்டாண்டு காலம் மூன்று உலகங்களிலும் பிச்சை ஏற்றார். இறுதியில் காசி நகரம் சென்று அன்னபூரணியிடம் பிச்சை ஏற்றார். அவள் இட்ட ஒரு கரண்டி சோற்றால் அது நிறைவுற்று அவர் கையிலிருந்து வீழ்ந்தது. அவர் அதைக் காசியில் நிலைப்படுத்தினார். அந்த இடம் "கபால மோசன தீர்த்தம்" என்ற பெயரில் விளங்கி வருகின்றது.

## புராணங்களில்...

ஒரு சமயம் பிரம்மதேவன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து, "நீங்கள் எமக்கு மகனாகவருக" என்றான். சிவனும் அப்படியே ஆகட்டும் என்றார்.

அதன்படி அவன் யோகத்தில் வீற்றிருக்கும் போது சிவபெருமான் அவனுடைய புருவ மத்தியிலிருந்து உருத்திரனாகத் தோன்றினார். அவன் அந்த உருத்திரக் குழந்தையைத் தோள்மீது வைத்துக் கொண்டு, "ஹே, கபாலி" என்று பல முறை அழைத்தான்.

அப்போது குழந்தையாக இருந்த உருத்திரர் அவனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்து விட்டார். பிரம்மன் அஞ்சி அவரைத் தொழுதான். அவர் அன்பனே, "நீ எம்மைக் கபாலி என்றழைத்ததால் இப்படிச் செய்தேன்" என்று கூறிச் சிரித்தார்.

பிறகு அந்தக் கபாலத்துடன் பல இடங்களில் திரிந்து, பிச்சையேற்று உண்டபின் கயிலைமலைச் சாரலில் வீசினார். அது விழுந்த இடத்தில் ஒரு தீர்த்தம் உண்டாயிற்று. அதுவே கபாலமோசன தீர்த்தமாகும்.

பதினெண் புராணங்களில் பல இடங்களில் சிவபெருமான் பிரம்மனின் தலையைக் கொய்த வரலாறு காணப்படுகின்றது.

### பெண்வேடத்தில் சிவன் பிரமனுக்கு அருளுதல்:

பிரம்மன் அனேக கலைகளைக் கற்றவனாக இருந்த போதிலும் சில சமயங்களில் பெண்மோகம் கொண்டவனாக விளங்கினான். திலோத்தமை, சரஸ்வதி, உமாதேவி முதலான தெய்வப் பெண்களைக் கண்டு மோகமடைந்து தகாத வார்த்தைகளைப்பேசி அவர்களால் அவமானமடைந்தான் என்று பல புராணங்கள் கூறுகின்றன. ஒரு சமயம் கடும்தவம் செய்த பிரம்மதேவனுக்கு அருள்புரியச் சிவ பார்வதியர் அவன் முன்னே தோன்றினர். அப்போது அவனுடைய மோக மதியைப் பரிகசிக்க, ஒரு திருவிளையாடலாகச் சிவன் பராசக்தியின் வேடத்தையும், பார்வதி சிவனின் வேடமும் புனைந்து அவனுக்குக் காட்சியளித்தனர். உண்மையை உணர்ந்த பிரம்மன் நாணித் தலை கவிழ்ந்தான்.

இதனை உணர்த்தும் வகையில் திருவானைக் கோயில் ஜம்புகேசுவரர் ஆலய வசந்த உற்சவத்தில் சோமாஸ்கந்தருக்குப் பெண்அலங்காரமும், தனி அம்பிகைக்குச் சிவ அலங்காரமும் செய்து விழா செய்கின்றனர். இதன் விளக்கத்தைத் தலபுராணத்தில் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்ம சிரகண்டீசுவரர்

பிரம்ம சிரகண்டீசுவரர்-காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

சிவபெருமான் தனது உக்ரமான மகாகோபத்திலிருந்து பைரவமூர்த்தியை உண்டாக்கி பிரம்மதேவனின் அகங்காரத்தை அடக்கி அவனுடைய சிரத்தை வெட்டும்படிச் செய்தார். அப்படிக் கோபத்தால் உண்டாக்கப்பட்ட பைரவ மூர்த்தி பிரம்ம சிரகண்டீசு வரர் என்றழைக்கப்படுகிறார்.

சிற்பநூல்கள் இவருடைய திருக்கோலத்தைத் தனிச் சிறப்புடன் பேசுகின்றன. அதன்படி இவர் வெண்மையான நிறம் கொண்டவர். மூன்றுகண்கள், எடுத்துக் கட்டிய சடைமுடி, வலது காதில் ஓலைச்சுருளும் இடதுகாதில் குண்டலமும் அணிந்துள் ளார். நான்கு கரங்கள். மேற்கரங்களில் வச்சிரமும் சூலமும்இருக்க கீழ்க்கரங்களில் பரசுவும் (கோடாரியும்) பிரம்ம கபாலமும் உள்ளன. மகா உக்கிரம் கொண்டவராக இருப்பதால் வாயின் கடையோரம் கோரைப் பற்களும் காட்டப்பட்டுள்ளன. இவருக்கு இடப்புறம் பிரமனும் வலப்புறம் திருமாலும் நிற்கின்றனர்.

❁ பிரம்ம சிரகண்டீசுவரின் அழகிய கதை விளக்கச் சிற்பம் ஒன்று காஞ்சீபுரம் கயிலாய நாதர் ஆலயத்தில் உள்ளது. இதில் பிரமன் ஒரு தலையை இழந்த அச்சத்துடன் வீற்றிருக் கின்றான். பின்னணியில் பிரமனின் கொய்த சிரத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பைரவமூர்த்தியைக் காண்கிறோம். எட்டுக் கரங்களில் வில், வியோமமுத்திரை, வெட்டுண்ட தலை, மழு முதலியன உள்ளன. தெற்றிப்பல் கடுங்கோபத்தை உணர்த்த முகத்தில் அலட்சியம் தெரிகிறது. சடைமீது பாம்புகள் உள்ளன. வலது கையிலுள்ள மழு அடுத்த தலையையும் வெட்டும் பாவனையில் ஓங்கப்பட்டுள்ளது. ஒருகாலை ஊன்றி மறுகாலை மடித்துள்ளது. அவர் விரைந்து வருவதைக் காட்டுகிறது. பிரம னுக்குப் பின்புறம் ஒரு மனிதன் அச்சத்துடன் கையைக் கட்டிக் கொண்டுள்ளான். இத்தகைய சிற்பத்தை வேறெங்கும் காண முடியவில்லை. ❁

## கண்டியூர் வீரட்டம்

சிவபெருமானின் அட்ட வீரட்டத்தலங்களில் முதன்மையானது கண்டியூராகும். அவர் இந்த இடத்தில் பிரமனின் சிரத்தைக் கண்டித்துத் துண்டித்த காரணத்தால் இது கண்டியூர் எனப்பட்டது.

தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் 9 ஆவது கி.மீ. தொலைவில் உள்ளது. இறைவன் பிரம்ம சிரகண்டீசுவரர். அம்பிகையின் பெயர் மங்கள நாயகி என்பதாகும். இக்கோயில் கருவறை மேற்கு நோக்கியுள்ளது. மாசி மாதம் 13,14,15 ஆகிய நாட்களில் மாலையில் 5.30 மணிக்குச் சூரியனின் கதிர்கள் சிவலிங்கத்தின் மீது படிகின்றன.

தனது ஐந்தாவது தலையை இழந்த பிரமன் இங்கு வழிபட்டுச் சிவனருள் பெற அமைத்த தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

மற்ற வீரட்டத் தலங்கள் ஏழிலும் இருப்பதுபோல் இங்கு வீரம் புரிந்த சிவபெருமானுக்குத் திருவுருவமோ. தனிச்சபையோ இல்லை. பிரம்மனின் தலையைக் கிள்ளிய வடுகமூர்த்திக்கு மட்டும் சிறிய சிலை கதவோரமாக உள்ளது. கல்வெட்டுக்களில் பெருமான் கண்டியூர் வீரட்டானத்து மகாதேவர் என்று குறிக்கப்படுகின்றார். இப்போது இறைவன் பிரம்மசிரகண்டீசுவரர் என்றும், அம்பிகை மங்கள நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

❁ சிவபெருமானின் அட்ட வீரட்டத்தில் இந்த ஒன்றில் மட்டுமே வீரட்டகாசம் புரியும், சிவமூர்த்தம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்ம தாண்டவம்

சிவபெருமான் எப்போதும் தனித்து நின்று ஆனந்த நடனம் புரிகின்றார். பக்தர்கள் அரியதவங்களைச் செய்து அவருடைய ஆனந்தப் பேரின்ப வெள்ள நடனக் காட்சியைக் காணவிரும்பும் போது, அவர்களுக்குச் சிறப்புடன் தனது நடனக் காட்சியைக் காட்டி அருள்பாலிக்கின்றார். அப்படிக் காட்சியளிக்கும் போதெல்லாம் பிரமன் பொன்தாளமிட திருமால் மத்தளம் வாசிக்கின்றார். இந்திரன் புல்லாங்குழலை இசைக்க, லட்சுமி கரதாளமிட்டுக் கஞ்சிராவை இசைக்கிறாள். சரஸ்வதி வீணையை மீட்ட, பூதங்களும், பேய்களும் ஏழுகோடி இசைக் கருவிகளை இசைக்கின்றன.

இப்படிப்பட்ட இசைத் தொகுதியில் நின்று பிரம்மதேவன் அளவற்றமுறை இறைவனின் நடனக் காட்சியைக் கண்டுகளித்திருக்கின்றான். என்றாலும், தனக்காகத் தனியே சிவபெருமான் நடனகாட்சியையினை அருளவேண்டும் என்று விரும்பி பலமுறை அரிய தவத்தினைச் செய்தான். சிவபெருமானும் அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்து தனது நடனக் காட்சி அவனுக்கு காட்டியருளினார். அவன் பெயரால்அந்தத் தாண்டவம் பிரமதாண்டவம் என்று அழைக்கப்படுகின்றது. இதனை அவர் பிரமனுக்காகப் பலதலங்களில் ஆடிக்காட்டியிருந்தாலும் அவற்றுள் திருப்பாண்டிக் கொடுமுடி, கூடலையாற்றூர், திருமுருகன்பூண்டி, திருக்களர் முதலிய தலங்கள் தனிச் சிறப்பிடத்தைப் பெறுகின்றன.

சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கூடலையாற்றூரில் கோயில் கொண்டருளும் சிவபெருமான் பிரமனுக்குத் தாண்டவ தரிசனத்தை அருளியதால் நர்த்தன வல்லபேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். இத்தலம் மணிமுத்தாறும், வெள்ளாறும் கூடுமிடத்தில் இருப்பதால் கூடலையாற்றூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குப் பிரம்மன் அமைத்த பிரம்ம தீர்த்தம் உள்ளது.

கொங்குநாட்டுத் தலமான திருப்பாண்டிக் கொடுமுடியில் பிரமனுக்குத் தாண்டவதரிசனம் அருளிய சிவபெருமான் சதுரதாண்டவ கோலத்தில் உள்ளார். ஆதியில் பிரம்மன் கண்ட, இந்தத் தாண்டவத்தைப் பின்னாளில் சிவபெருமான் பரத்துவாச முனிவருக்காக மீண்டும் ஆடிக்காட்டியருளினார் என்றும் கூறப்படுகின்றது. அதனால் இவர் சதுர்முகத் தாண்டவர் என்றும் அழைக்கப்படுகின்றார். இந்த மூர்த்தம் மிகவும் அழகியதாகும். மேலும் இது சித்திரா பௌர்ணமியன்று பரத்வாஜ முனிவருக்காக ஆடப்பட்டதால் சித்திர நடனம் என்றும் அழைக்கப்படுகின்றது.

பிரமன் காண தேர்மீது ஆடியதாண்டவம்-தஞ்சைஓவியம்

இதே மண்டலத்திலுள்ள திருமுருகன் பூண்டியிலும் பிரமனுக்காகச் சிவபெருமான் நடனம் காட்டினார் என்று அவ்வூர்த் தலபுராணம் கூறுகின்றது. இங்கே பிரமன் அமைத்த தீர்த்தம் பிரம்மதீர்த்தம் என்ற பெயரில் உள்ளது. பிரம்ம தேவனுக்காக ஆடியருளிய கோலத்தில் இங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான் பிரம்ம தாண்டவமூர்த்தி என்று அழைக்கப்படுகின்றனர். தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ள இப்பெருமானைச் சிறப்புடன் போற்றுகின்றனர்.

மேலும் சோழநாட்டுத் திருத்தலமான "திருக்களர்" எனும் தலத்தில் பிரமன் வழிபட்டுச் சிவபெருமானின் தாண்டவதரிசனத்தைக் கண்டார் என்றும், பின்னாளில் துர்வாசர் அக்காட்சியைக் காண வேண்டி இங்கே தவம் செய்தார் என்றும் கூறுகின்றார். அவருக்காக மாசி மாதப்பௌர்ணமியில் இறைவன் தனது பிரமதாண்டவத்தை ஆடிக்காட்டி அருள்பாலித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தார் என்றும் கூறப்படுகிறது. அது ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மறுநாளான மாசி பௌர்ணமியில் பிரம்மதீர்த்தமான சிந்தாமணி தீர்த்தத்தில் தீர்த்த வாரியும் நடைபெறுகின்றன.

திருமுறைத் தலமான திருப்பனந்தாளிலும் பிரம்ம தேவன் சிவபெருமானின் ஆனந்த திருத்தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்ததாக அவ்வூர், தலபுராணம் கூறுகிறது. இங்கு அவனமைத்த ஆலயம் அயநீச்சுரம் என்றும், தீர்த்தம் பிரம்மதீர்த்தம் என்றும் அழைக்கப் படுகின்றன.

புராணங்களில் சொல்லப்பட்டுள்ள இந்த பிரம்ம தாண்டவத்தைத் தவிர, தமிழ் இலக்கியங்களில் பிரம தேவன் காணும்படியாகச் சிவபெருமான் ஆடிய தாண்டவங்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கது. திரிபுரங்களை எரித்தபின்னர் சிவ பெருமான் தேவர்கள் அமைத்த தேரின் முன்னே நின்று தேர்ப்பாகனான பிரமன் காணும்படியாக ஆடிய பாண்டரங்கம் என்பதாகும். இதனை **'தேர்முன் நின்ற திசைமுகன் காண, பாரதி ஆடிய வியன்பாண்டரங்கம்'** என்று சிலப்பதிகாரம் கூறுகிறது'.

மேலும் பிரம்மனின் சிரத்தைக் கொய்த பின் அதனைக் கபாலமாக ஏந்திக் கொண்டு பிரமன் அஞ்சுமாறு தாண்டவம் புரிந்தார். அது 'காபாலம்' என்ற கூத்தாகும். இதனைக் கலித்தொகை என்ற சங்க நூல் **"தலை அங்கைக் கொண்டு நீ காபாலம் ஆடுங்கால்"** என்று குறிக்கின்றது. தொடர்ந்து அந்த ஆட்டத்திற்கு ஏற்ப பார்வதி பாணி என்ற தாளத்தை தட்டினாள் என்றும் கூறுகின்றது. காஞ்சீபுரத்திலுள்ள பிரம்மசிர கண்டீசுவரர் சிற்பம் இந்தக் காபால தாண்டவத்தை உணர்த்துவதாகவே உள்ளது.

இன்னும் பலதலங்களில் பிரமன் கண்டு மகிழவும், அஞ்சித் தொழவும் நடைபெற்ற பிரம்ம தாண்டவங்களையும் காண்கிறோம்.

❁ பிரம்மதாண்டவம் என்பது பிரம்மனுக்காக ஆடிய தாண்டவம் என்ற பொருளைத் தருவதோடு, பெரிய தாண்டவம் என்ற பொருளையும் தருகிறது. இதனைத் தமிழ் இலக்கியங்கள் **"எல்லையில் பெருங் கூத்து"** என்று குறிக்கின்றன.

❁ சில இடங்களில் பிரமர தாண்டவம் என்பது மருவி பிரம்மதாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. பிரமரம் என்றால் வண்டு என்பது பொருள். பூவினில் தேனுண்ணவரும் வண்டு முதலில் அதைச் சுற்றிச் சுற்றியும் மேலும் கீழும் தாழ்ந்து உயர்ந்தும் பறந்த பிறகு ரீங்காரமிட்டுக் கொண்டே பூவினில் குடைந்து ஆடுவதுபோல ஆடுவதாகும். திருக்கோளிலியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஆடும் நடனம் இத்தகைய வண்டு நடனமாகும். இது பிரமன்காண ஆடியதால் பிரம்ம தாண்டவம் என்றும் அழைக்கப் படுகிறது. இத்தலத்து இறைவன் பிரம்மபுரீசுவரர் என்றழைக்கப்படுகின்றார். ❁

## பிரம்ம சாரத்தியம்

உலகத்திலுள்ள தேர்களில் மிகப்பெரியது சிவபெருமானின் தேரேயாகும். இது ஆழித்தேர் எனப்படும். இதில் சிவபெருமான் பயணம் செய்யும்போது அதைப் பிரம்மன் ஓட்டுகின்றான். நான்கு வேதங்கள் குதிரைகளாகவும். சந்தஸ் (வேதங்களை ஓதவேண்டிய இசை) சாட்டையாகவும் சூரிய, சந்திரர்கள் சக்கரங்களாகவும் இருக்கின்றனர்.

மேலும் ஒரு முறை முப்புராதிகளை வெல்லச் சிவபெருமான் ஏறிச் செல்வதற்கான பெரிய தேரைத் தேவர்கள் அமைத்தனர். இதற்கும் பிரம்மனே தேரோட்டியாக விளங்கினான். இதையொட்டி சிவாலயங்களில் கொண்டாடப்படும் தேர்விழாவில் பிரம்மதேவனைத் தேரோட்டியாக அமைக்கின்றனர். இப்படி அமையும் பிரம்மனின் திருவுருவம் மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது. அவன் வலது கையில் சாட்டை ஏந்தி இடது கரத்தில் குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துள்ளான். ❁

## பிரம்மன் வழிபடும் நான்முகலிங்கம்

நான்கு முகம் கொண்டவனானப் பிரம்மதேவன் நான்கு முகம்கொண்ட லிங்கங்களை மிகவும் போற்றி வழி படுகின்றான். திருவண்ணாமலையில் பிரம்மதேவன் பிரம்மதீர்த்தத்தை அமைத்து அதன் கரையில் நான்கு முகங்கொண்ட லிங்கத்தை அமைத்து வழிபாடு செய்துள்ளதைக் காண்கிறோம். திருப்புனவாயிலில் பிரம்மன் அமைத்த சதுர்முகலிங்கமும் பிரம்மதீர்த்தமும் உள்ளன. காளத்தி, திருவதிகை முதலிய அனேக தலங்களில் பிரம்மன் வழிபட்ட நான்கு முகலிங்கங்களைக் காண்கிறோம். நேப்பாளத்திலுள்ள பசுபதிநாதலிங்கம் பிரம்மனால் யுகப்பிரளய வெள்ளத்திலிருந்து எடுத்து நிலைப்படுத்தப் பட்டதாகும். இங்குச் சிவபெருமான் அவனுக்கு நான்கு முகலிங்கமாகக் காட்சியளித்ததைக் காண்கிறோம். ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்ம தீர்த்தங்கள்

சிவபூசை செய்யவும், நீராடித் தூய்மை பெறவும், பிரம்மதேவன் பல தலங்களில் தீர்த்தங்களை அமைத்தான். அவை அவன் பெயரால் பிரம்ம தீர்த்தங்கள் என்று பெயர் பெறுகின்றன. சில சமயங்களில் அவன் தனது கமண்டலத்திலுள்ள நீரை வார்த்துத் தீர்த்தங்களை உருவாக்கினான். அவை கமண்டல தீர்த்தங்கள் என்று பெயர் பெறுகின்றன.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களான, கீழ்வேளூர், திருக்கொள்ளம்பூதூர், சிவபுரம், நறையூர், புறம்பியம், நன்னிலம், தருமபுரம், நெல்லிக்கா திருப்பாச்சிலாச் சிராமம், பாம்புரம், காஞ்சீபுரம் முதலான அனேகதலங்களில் பிரம்மதீர்த்தங்கள் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

திருக்குருகாவூரில் ஆதிபிரம்ம தீர்த்தம் என்ற குளம் உள்ளது. இது ஆதிப்பிரம்மன் ஐந்து திருமுகங்களோடு இருந்தபோது அமைத்த தீர்த்தமாகும்.

திருமுருகன் பூண்டியில் பிரம்மன் அமைத்த தீர்த்தம் உள்ளது. இது உடற்பிணியையும் மனப்பிணியையும், நீக்கும் தன்மை கொண்டது. மனநிலை பாதிக்கப்பட்ட அன்பர்கள் இங்குத் தங்கித் தினமும் இதில் நீராடிப் பயன்பெறுகின்றனர்.

பிரம்மனைப்போலவே அவன் மனைவியான சரஸ்வதியும், அவனது வாகனமான அன்னமும் தீர்த்தங்கள் அமைத்துள்ளதைப் புராணங்கள் கூறுகின்றன. திருக்குருகாவூரில் ஆதிப்பிரம்மதீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் (வடக்கன் குளம்) அம்ச தீர்த்தம் ஆகிய மூன்று தீர்த்தங்கள் உள்ளன.

சிலதலங்களில் கிணறுவடிவாகவும், சில இடங்களில் சுனைவடிவாகவும், சில இடங்களில் கடலாகவும் பிரம்ம தீர்த்தங்கள் உள்ளன. பெரிய திருக்கோயில்களில் பெரிய அளவில் பிரம்ம தீர்த்தங்களைக் காண்கிறோம். திருவண்ணாமலையில் பிரம்மன் அமைத்து வழிபட்ட சதுர்முகலிங்கமும் பிரம்மதீர்த்தமும் கிளிக் கோபுர பிராகாரத்தில் உள்ளன.

சீர்காழியில் பிரம்மதேவன் அமைத்த பிரம்ம தீர்த்தம் உள்ளது. இதன் கரையில்தான் திருஞான சம்பந்தருக்குச் சிவபார்வதியர் தங்கக் கிண்ணத்தில் பால் அளித்துத் தமிழ்வேதம் பாடும் வரத்தை அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❀ ❀ ❀

பிரம்மனது வெட்டுண்ட தலை வீழ்ந்த இடங்களும், தீர்த்தக் குளங்களாக மாறியுள்ளன. இமயமலைச் சாரலில் உள்ள திருக்கேதாரம், பத்ரிநாத் முதலிய பல இடங்களிலும், காசியிலும் தென்னகத்தில் பல இடங்களிலும் இத்தகைய தீர்த்தங்கள் உள்ளன. இவை கபாலதீர்த்தம், கபாலமோசன தீர்த்தம் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

திருக்கண்டியூரில் கபாலதீர்த்தம், சூலதீர்த்தம் என்ற பெயரில் தீர்த்தக் குளங்கள் உள்ளன. மகாபாரதத்தில் பிரம்மவேதி என்ற குளத்தில் மூழ்கிப் பாண்டவர்கள் தமது எதிரிகளைக் கொன்ற பாவத்தினை நீக்கிக் கொண்டனர் என்றும் இதில் மூழ்குவோர் தெய்வ ஒளியைப்பெறுவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ❀

## அன்னமாம் பொய்கை

பிரம்மதேவன் சிவபெருமானின் (அடி) முடியைத்தேடி அன்னமாகப் பறந்து சென்று மீண்டபோது பொய் சொன்னதால் சிவபெருமான் அவனை அந்த அன்னப் பறவை வடிவிலேயே இருக்கும்படி சபித்து விட்டார். அவன் தன்னுடைய பழையவடிவத்தை அடைய விரும்பி அம்பரிலும், திருப்பாச்சிலாச்சிரமத்திலும் தீர்த்தங்கள் அமைத்து அதில் மூழ்கிச் சிவவழிபாடு செய்தான். இதன் பயனால் அவனுடைய அன்னவடிவம் நீங்கி மீண்டும் தேவ வடிவம் பெற்றான். அதையொட்டி இவை "அன்னமாம் பொய்கை" என்று அழைக்கப்படுகின்றன.

இவ்விரு தலங்களிலும் உள்ள பொய்கைகள் தேவாரத்துள் இணைத்துப்பாடப்பட்டுள்ளன. இதனை

"அன்னமாம் பொய்கை சூழ்
அம்பரானை ஆச்சிராம நகரும்" என்று

திருநாவுக்கரசர் திருநாகைத் தேவாரத்தில் குறித்துள்ளார். மேலும்,

"அன்னமாம் பொய்கைசூழ்
பாச்சிலாச்சிரமத் துறை அடிகள்" என்று

சுந்தரரும் அருளியுள்ளதால் அறிகிறோம். இவற்றில் மூழ்கி வழிபடுவதால் நல்ல கல்வியறிவும் பணிவும் உண்டாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அம்பரில் அயன் செய்த வழிபாடு

"அம்பரம்" என்பதற்கு ஆகாயவெளி என்பது பொருள். நம்மைச் சுற்றியுள்ள எட்டு திசைகளையும் எட்டு திக்பாலகர்கள் காப்பது போலவே, மேலே ஆகாயவெளியிலிருந்து பிரம்ம தேவனும், கீழே பாதாளத்திலிருந்து திருமாலும் காவல்புரிந்து அருள்பாலிக்கின்றனர். ஆகாய வெளியான அம்பரத்தின் அதிபதியாதலின் பிரம்மா "அம்பரன்" எனப்பட்டான். அவன் பூசித்த ஊர் அம்பர் எனப்பட்டது. (அவன் ஆகாயத்தின் அதிபதியாக இருப்பதா லேயே அன்ன வடிவுடன் ஆகாயத்தில் விரைந்து முடியைத் தேடி ஓடினான் என்பர்.) அவர் அம்பரில் செய்த வழிபாடு தனிச்சிறப்பு பெறுவதாலும், இந்தத் தலத்தில் அது ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுவதாலும் சற்று விரிவுடன் கூறப்படுகிறது.

ஒரு சமயம் முனிவர்களும், ரிஷிகளும் ஒன்று கூடியிருந்தபோது அவர்களுக்குள் வேதங்கள் குறிப்பி டும் "பிரம்மம்" என்பது யார்? என்ற விவாதம் ஏற்பட்டது. அதை மும்மூர்த்திகளிடமே கேட்டுவிடலாமென்று முடிவு செய்தனர். அவர்கள் ஒன்றாகக் கூடிக் கயிலாய கிரியின் சிகரங்களில் ஒன்றான 'முஞ்சமான்' என்ற சிகரத்தை அடைந்தனர். அங்கு பிரம்மதேவன் பெரிய சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

அவர்கள் அவனைப் பணிந்து, "நான்கு வேதங் களையும் ஓதும் பிரம்ம தேவனே, பிரம்மம் என்பது யார்? பிரம்மத்தைப் பற்றி அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கின்றோம். அதை எமக்குக் கூறுக," என்றனர். அப்போது தமோகுண மிகுதியினால் ஆணவம் மேலிட்ட அவன், "நானே பிரம்மம். உலகம் என்னால் படைக்கப்படுதலின் நானே இறைவன் சுயம்பு, பிரபு" என்றான். அந்த பதிலால் திருப்தியுறாத முனிவர்களும் இருடிகளும் வேதங்கள்கூறும் பிரம்மம் நீயா? என்றனர்.

"ஆம், நானே" என்றான். அந்த பதிலால் திருப்தி அடையாத முனிவர்களும், மற்றவர்களும் அங்கு வேறொரு மலையில் வீற்றிருக்கும் திருமாலை அடைந்து தமது ஐயத்தைக் கேட்டனர். அதற்குத் திருமால் உலகனைத்தையும் காத்துவரும், நானன்றோ பிரம்மம். இந்த உலகைப் படைக்கும் பிரம்மன் என் உந்தித் தாமரையிலிருந்து என்னால் படைக்கப்பட்டவ னல்லவா. அப்படிப் படைக்கப்பட்ட பிரம்மனின் நெற்றி யிலிருந்தன்றோ? உருத்திரன் தோன்றினான். ஆதலால் இவர்களைப் படைத்துக் காக்கும் நானன்றோ பரப்பிரம் மம் என்றான். பிறகு அடாது தன்னைத்தானே பிரம்மம் என்று கூறும் பிரம்மன் உடனே இங்கு வரட்டும் என்றான். அதன்படி பிரமன் அங்கே தோன்றினான். அவன் திருமாலை வணங்காமலும் மதியாமலும் இருந் தான். அவனை நோக்கி, "என் மகனான நீ என்னை வணங்காமலும் மதியாமலும் இருப்பதேன்? நீயா பிரம்மம், உன் கர்வத்தை விடுக" என்றான்.

இப்படிப் பலவாறாகப் பேசிக் கொண்டேயிருந்த திருமாலைக் கண்டு பிரமன் கோபம் கொண்டான். திருமாலே படைக்கும் கடவுள் நானன்றோ? நீ பத்து பிறவிகள் எடுத்தபோது உன்னைப் படைத்தவன் நானன்றோ? என்று பலவாறு கூறினான். வார்த்தைகள் தடித்து இறுதியில் அவர்களுக்குள் போர் மூண்டது. இருவரும் கடுமையாகத் தாக்கிக் கொண்டனர்.

நீண்ட நேரத்திற்குப் பிறகு திருமால் பிரமனை நோக்கி "இப்படி நாமே நமக்குள் போரிட்டுக் கொண்டி ருந்தால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. நம்மை விலக்குப வர் எவருமில்லை. தேவர்கள் முனிவர்களின் ஐயமும் தீரவழியில்லை. ஆதலால் வேதங்கள், காயத்திரி பிரணவமந்திரம் ஆகியவற்றை இங்கு வருவித்துக் கேட்போம்" என்றான்.

பிரமனும் அதற்கு உடன்பட திருமால், "உடனே வேதங்கள், காயத்திரி, பிரணவமந்திரம் ஆகியன இங்கு வரட்டும்" என்றார். அந்த நிமிடத்தில் அவை தேவஉருவுடன் அங்கே தோன்றின.

திருமால் அவற்றை நோக்கி, "மும்மூர்த்திகளில் யார்? பிரம்மம் என்பதை உண்மையாகக் கூறுங்கள்? என்றார். இருக்குவேதம்", பஞ்ச பூதங்கள் எவனிட மிருந்து தோன்றி அவனிடமே ஒடுங்குமோ அவன் மகேசுவரன் எனப்படுவான். அவனே பிரம்மம் என்றது.

யசுர் வேதம், "எல்லா யாகங்களுக்கும் தலைவ னும், யோகிகளாலும் ஞானிகளாலும் பூசிக்கப்படுகின்ற பினாகபாணியான பரமேசுவரனே பிரம்மம்" என்றது.

சாமவேதம்", அண்டச் சக்கரம் எவனுடைய ஆற்றலால் ஓயாது சுழல்கிறதோ, எவன் அணுவுக்கணு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாய் எங்கும் நிறைந்து நிற்கிறானோ அவனே யோகியர் உணரும் பரப்பிரம்மம்" என்றது.

அதர்வணவேதம்", ஐம்புலன்களை அடக்கி அருந்தவம் செய்பவர்களால். அகக்கண்ணால் காணப் படுபவனும், வேதமுதல்வனும், முத்தொழில் நடத்து வோனும் ஆகிய பரமேசுவரனே பிரமம் என்றது.

காயத்திரி மந்திரம், "அன்பர்களே, பரசிவத்தின் பலமூர்த்தங்களை எங்களில் ஒவ்வொருவரும் அவர வர் தெய்வமாகப் பாவிக்கிறோம். அவை எல்லாம் பிரம்மமே" என்றது.

பிரம்ம காயத்ரி, "ஐந்தொழில் நடத்துவோனும், பேரொளியாய் நிற்பவனும் பராசக்தியுடன் கூடிய பர்க்கன் என்னும் மூர்த்தியே பிரம்மம்", என்றது.

பிரணவ மந்திரம், "வாக்கு, மனங்களுக்கு எட்டா தவனும், நாம, ரூப குணங்களாலே அறியமுடியாத வனும், பரஞ்சோதியும், நிஷ்கள மூர்த்தியும் ஆகிய முக்கட் செல்வனே பிரம்மம்" என்றது.

இப்படி எல்லா மந்திரங்களும் சிவபெருமானே பிரம்மம் என்று கூறுவதைக் கேட்டு பிரம்மன் கொதித்துப் போனான். அகங்காரத்தினால் பொறுமை தொலைய வரம்புமீறி, மலைமகளை மணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்று உழல்பவனா "பிரம்மம்" என்றான். அப்போது பிரணவம்," மழுவேந் திய பரமசிவன் வேறான ஒரு பெண்ணுடன் கூடிய தில்லை. அவனுடைய ஆனந்தமான சக்தியே அவனு டன் உறையும் உமாதேவி இதைத் தெளிவாக உணர்க என்றது. இப்படி இவை பலவாறு கூறியும் அவர் கள் மனம் மாறாததால் அவை தமதிருப்பிடம் சென்று விட்டன.

அவர்களுக்கிடையே மீண்டும் கடுமையான யுத்தம் எழுந்தது அதைக் கண்டு தேவர்களும் முனி வர்களும் கலக்கமடைந்து, சிவபெருமானைத் துதித்தனர்.

சிவபெருமான் அந்த இருவரின் அகங்காரத்தி னையும் அடக்கக் கருதி அவர்களுக்கெதிரில் முதலும் முடிவுமற்ற நெடிய சோதி வடிவில் நின்றார். அவரு டைய அடி பாதாளங்களையும் கடந்து சென்றது. முடியோ அண்ட முகடுகளை ஊடுருவிச் சென்றது. அச்சோதியைக் கண்டு அதிசயித்துத் திகைத்தனர்.

பிரமனும், திருமாலும் தங்களுக்குள் செய்யும் சண்டையை நிறுத்தினர். அப்போது சோதிக்குள் அழகிய லிங்கமும், அதனுள் மழு, மான் ஏந்திய

ஸ்ரீ பிரம்மதேவர் உலாத்திருமேனி - அம்பர்

பிறைசூடிய முக்கண் பெருமானாய் சிவபெருமானும் தோன்றினர்.

அவர், பிரமனையும், திருமாலையும் நோக்கி நானே பிரம்மம், "நானே பிரம்மம்" என்று போரிட்டுக் கொள்ளும் பேதைகளே, இங்கே வாருங்கள்.

"இந்தச் சோதியின் அடியை ஒருவரும் முடியை ஒருவரும் தேடிக் கண்டு பிடியுங்கள். யார் அப்படிச் செய்கிறாரோ அவரே பிரம்மம். அப்பணியை இப்போதே தொடங்குக" என்றார்.

திருமால், "அப்படியே ஆகட்டும் இச்சோதியின் அடியைக் கண்டு வருவேன் என்று சொல்லி வராக உருவம் எடுத்தார்."

தன்னுடைய வலிய கொம்பாலும் குளம்பாலும் பூமியைத் தோண்டிக் கொண்டே அடியைக் காணச் சென்றார்.

பிரமன், நான் முடியைக் காண்பேன் என்று சொல்லி அன்னப் பறவை உருவம் தாங்கி விண்ணில் எழுந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓராயிரம் தேவ ஆண்டுகள் உருண்டோடின. திருமால் எவ்வளவு முயன்றும் அவரால் அடியை எட்ட முடியவில்லை. மனம் சலித்தது, கொம்பும் குளம்பும் தேய்ந்து உடலும் சோர்ந்து விட்டது. அவர் மேலே வந்து பெருமானை வணங்கி, "நீரே பிரம்மம்" எனது அறியாமையைப் பொறுத்தருள்க", என்றார்.

சிவபெருமான் அவரை ஆரத்தழுவி உன் பிழை பொறுத்தேன். உன்னை அர்ச்சா ரூபமாக மக்கள் வழிபடுவார்கள் உனக்கென சிறப்பான கோயில்களும் பூசைகளும் அமையுமென்றார்.

••• ••• •••

மேலே சென்ற பிரம்மனின் சிறகுகள் தீய்ந்தன, மனமும் உடலும் சோர்வுற்றன. ஆனால் அகங்காரம் மட்டும் முன்னிலும் அதிகமாக வளர்ந்துவிட்டது.

திருமாலைப் போல நாம் தோல்வியை ஒப்புக் கொள்ளக் கூடாது. அப்படி ஒப்புக்கொள்வது அவமானம் என்று எண்ணினான். உடனே தாழம்பூ ஒன்றைத் தோற்றுவித்தான். அதனிடம், "மலரே, கீழே சென்றதும், நான் திருமுடியைக் கண்டதாகச் சாட்சி கூறுக", என்றான். பிறகு மண்மீது அதனுடன் வந்தான் அவன், இறுமாப்புடன் நிற்பதைக் கண்டு தேவர்கள் ஆச்சர்யமடைந்தனர்.

அவன் தேவர்களை நோக்கி, "ஓ, தேவர்களே நான் இந்த சோதியின் முடியைக் கண்டுவிட்டேன். அதற்கு இந்தத் தாழம்பூவே சாட்சி. ஆதலால் நானே பிரம்மம்" என்று கொக்கரித்தான். உண்மையை அறியாத திருமாலும், சகல தேவர்களும் அவனைப் பணிந்து போற்றி வணங்கினர்.

பிறைசூடிய பெருமான் முன்போலவே லிங்கத்தில் தோன்றினார். "அடே, பிரம்மனே தானே பிரம்மம் என்றதோடு நில்லாமல் பொய்யும் புகன்றாய், பொய் சாட்சிகளையும் உண்டாக்கி உண்மையை மறைத்தாய். உனது அன்ன வடிவம் நீங்காது இருக்கட்டும். பொய் சாட்சி சொன்னதால் தாழம்பூவே நீ எனக்கு உகந்தவனும் ஆகாய் என்றார். அனைவரும் சிவபெருமானே பரம்பொருள் என்பதைச் சந்தேகமற உணர்ந்து தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

••• ••• •••

அன்ன வடிவத்துடன் நின்ற பிரம்மன் கலங்கினான். சிவபெருமானைப் பணிந்து தமது பிழையைப் பொருத்தருள வேண்டினான். அவனுடைய அகந்தையும், ஆற்றலும், கர்வமும் இருக்குமிடம் தெரியாமல் அழிந்தன.

அவனுக்காக இரங்கிய பரமன், "வேதனே பூமியில் காவிரிக் கரையில் புன்னைவனம் என்ற தலம் உள்ளது. அங்குச் சென்று தவம்செய்க அதன் பயனாக நீ உனது சுயவடிவைப் பெறுவாய்" என்றார்.

அதன்படியே, பிரம்ம தேவன் புன்னாக வனத்தை அடைந்து கடுந்தவம் புரிந்தான். அவனுடைய அதி உக்ரமயமான தவத்தால் தேவலோகம் கொதித்தது. தேவர்கள் திருமாலையடைந்து அதைக் கூறினர். அவர் அவர்களுடன் கயிலை மலைக்குச் சென்று தவக்கனல் வெம்மையைத்தீர்க்க வேண்டிச் சிவனைப் பணிந்தனர்.

சிவபெருமான் மகிழ்ந்து உமையொடும் கணங்களோடும் புன்னைவனத்தில் தோன்றினார். அவரைக் கண்டு அளவற்ற பக்தி உடையவனாகப் பிரமன் தாழ்ந்து போற்றினான். நான் அன்ன வடிவில் இருப்பதால் என்னால் ஆகம முறைப்படி பூசைகள் செய்ய முடியவில்லை. என்றாலும் இயன்றவரை செய்வேன் என்றுகூறி, அருகில் ஒரு கிணற்றைத் தோண்டினான். அதில் கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்கள் வந்து தோன்றின. அதில் மூழ்கிய உடனே அவனுடைய அன்ன வடிவம் நீங்கியது. அவன் மிக்க மகிழ்ந்து சிவபெருமானைப் பணிந்து ஐயனே எனக்குக் காட்சியளித்ததுபோல் எல்லா கணங்களுடன் இங்கே நீங்காதிருந்து அருள் புரியவேண்டும் என்றான். அவனுக்குப் பல வரங்களைத் தந்தபின் சிவபெருமான் உமாதேவியுடனும் கணங்களோடும் அந்த லிங்கத்தில் மறைந்தார்.

நெடுங்காலம் அங்கே தங்கிச் சிவபூசைசெய்து மகிழ்ந்து, பிரம்மதேவன் தனது உலகம் சேர்ந்தான்.

## இந்நாளில் அம்பர் பெருங்கோயில்

பிரம்மன் பூசித்துப் பேறுபெற்ற புன்னை வனம் தேவாரத்துள் அம்பர் என்று பாடப்பட்டுள்ளது. அது மருவி இந்நாளில் அம்பல் என வழங்குகின்றது. நாகை மாவட்டத்தில் பூந்தோட்டம்-காரைக்கால் செல்லும் பாதையில் உள்ளது.

ஊரின் மையத்தில் அமைந்துள்ள இக்கோயில் மாடக்கோயிலாகத் திகழ்கிறது. இறைவர் பிரம்மபுரீசுவரர்; அம்பிகை பூங்குழலாள். மாடமாக அமைந்த கட்டுமலை "பிரம்மகிரி" என்றழைக்கப்படுகிறது. கருவறையில் சிவலிங்கத்தின் பின்னணியில் பிரம்மனுக்குக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சியளித்த கோலத்தில் பெருமான் உமை, குகனோடு சோமாஸ்கந்தராக எழுந்தருளியுள்ளார்.

பிரமனின் அன்ன உருவை நீக்கிப் பொன்னுடல் அளித்த "அன்னமாம் பொய்கை" நாழிக்கிணறாக பிரா காரத்தின் தென்கிழக்கு முனையில் அமைந்துள்ளது. இதன் உள்ளே சென்றுவர படிக்கட்டுக்கள் உள்ளன.

பிரம்மனுக்குச் சிவபெருமான் காட்சியளித்த நாள், "மாசிமாத மக நட்சத்திரமாகும் அதையொட்டி பிரம்மனுக்குக் காட்சிதருதல், அவனுடைய அன்ன வடிவம் நீங்குதல் முதலியன விழாவாகக் கொண்டாடப் படுகின்றன.

பிரம்மதேவனின் அழகிய உலாத்திருமேனி உள்ளது. அதனை மூடும் வகையில் அன்ன உருவம் உள்ளது. அந்த அன்னத்திற்குள் பிரம்மனை வைத்து மூடி, அவன் அன்னவடிவில் விளங்குவதும், இங்கே அன்னமாக இருந்து சிவனைப் பூசிப்பதும் காட்டப் படுகிறது. பிறகு அன்னவடிவுடன் அன்னமாம் பொய் கைக்குள் இறக்கி நீராட்டி அன்னத்தை எடுத்துவிட்டு பிரம்ம தேவனாக வெளிக் கொணர்கின்றனர். அப் போது பஞ்ச மூர்த்திகளும் அவருக்குக் காட்சி தரும்



பிரம்மகிரி - பிரம்மபுரீசுவரர் ஆலயம் - அம்பல்

ஐதீகம் நடத்தப்படுகிறது. பிறகு அனைவரும் அந்தக் கிணற்றில் மூழ்கி ஆலயத்தில் வழிபடுகின்றனர்.

அண்மையில் திருப்பணி செய்யப்பட்டு ஆல யம் பொலிவுடன் விளங்குகின்றது. இங்குள்ள சோமாஸ் கந்தர் "கூடும் நாயகர்" என்று குறிக்கப்படுகின்றார். ஊருக்கு அருகில் அரிசிலாறு ஓடுகிறது.

## காஞ்சீபுரத்தில் பிரம்மன் வழிபட்ட லிங்கங்கள்

காஞ்சீபுரத்தில் பிரம்மதேவன் அனேகலிங்கங் களை அமைத்து வழிபாடு செய்து பேறுபெற்றான். அதனால் காஞ்சீபுரத்திற்குப் "பிரம்மபுரி" என்பதும் பெயராயிற்று.

காஞ்சியில் பிரம்மன் தலைமையில் தேவர்கள் கூடிவழிபட்ட தலம், மகாலிங்கத்தானம் என்று அழைக் கப்படுகிறது. இதில் பெரிய லிங்கவடிவில் சிவபெரு மான் இருக்கின்றார். இதனைப் பிரம்ம லிங்கம் எனவும் அழைப்பர்.

பிரம்மன் தனது படைப்புத்தொழில் சிறக்க வேண்டிக் காஞ்சியில் முருக்க மரத்தின் கீழ் சோதிவடி வாக எழுந்த சிவலிங்கத்தை வழிபட்டான். அதுவே இந்நாளில் கச்சபேசுவரர் என்றழைக்கப்படுகிறது. மேலும் இங்கு அவன் வேதங்களை வேண்டிப் பூசித்த வேதசித்தீசரம் உள்ளது. இதனுள் நான்கு முகலிங்கம் அமைந்துள்ளது.

ஒருமுறை பிரம்மன் அளப்பரிய வரங்களை வேண்டி பெரிய வேள்வி ஒன்றைச் செய்தான். அங்கு சிவபெருமான் ஒளிவடிவமாகத் தோன்றி அருள்பாலித் தான் அந்த இடம் இந்நாளில் சிவாஸ்தானம் என்றழைக் கப்படுகிறது. அவன் ஏகாம்பரநாதரை வணங்கி அவர் அருகில் வெள்ளக்கம்பர் என்ற லிங்கத்தை அமைத்து வழிபாடுசெய்தான். அதனால் அவனுக்குப் படைப்புத் தொழில் எளிதில் கைவந்தது.

யுகப் பிரளயகாலத்தில், தாம் அழியாதிருக்க வரம் வேண்டித் தவம் புரிந்த இடம் காயாரோகணம் ஆகும். இதன்பயனாக இறைவன் அவனைத் தமது வலது தோளில் தாங்கி அருள்பாலித்தார்.

பிரம்மன் தனது ஐந்தாவது தலையை வைரவன் வெட்டியதால் அஞ்சிவழிபட்ட தலம் காஞ்சியாகும். 'கா' என்றால் பிரம்மன், அவன் அஞ்சி வழிபட்ட தலமாதலின் இது காஞ்சி எனப்பட்டது என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது.

காஞ்சிபுரத்திலுள்ள அனேக ஆலயத் தூண் களில் பிரம்மன் சிவ பூசை செய்யும் காட்சி புடைப்புச் சிற்பமாக இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்மன் வழிபட்ட பிரம்மபுரங்கள்

பிரம்மதேவன் சிவநிந்தனை செய்தது, அடிமுடி தேடியபோது பொய் கூறியது, சிவனைமதியாத தட்சனின் யாகத்தில் கலந்து கொண்டது, முதலான அனேக பாவங்கள் தீரச் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தான்.

அப்படி பிரம்மன் வழிபட்ட தலங்கள் பிரம்மபுரங்கள், பிரம்மபுரீசுவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தியா முழுவதிலும் பிரம்மன் வழிபட்ட பிரம்மபுரங்கள் அனேகம் உள்ளன இவற்றின் பெயர்கள் காலப்போக்கில் மாறிவிட்டன அவற்றில் சிலதங்களை இங்கே காணலாம்.

## பெருநகர் பிரம்மபுரீசுவரர்

காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள தலம் பெருநகர் என்றழைக்கப்படும் பிரமநகராகும். காஞ்சிப் புராணத்தில் குறிக்கப்பட்டுள்ள இருபத்தெட்டு ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். படைப்புத்தொழிலை நன்கு இயற்றும் வல்லமையைப் பெற பிரமன் பூசித்த தலங்களில் ஒன்று. இறைவன் பிரம்மபுரீசுவரர் (பிரமீசர்) அம்பிகை பட்டுவதனாம்பிகை. தீர்த்தம் அன்னமாம் பொய்கை. பிரமனைத் தண்டித்த வைரவரும் இங்கே எழுந்தருளியுள்ளார். இங்குள்ள கல்வெட்டுக்கள் பெருமானைப் பிரமீச்ரமுடையார் என்று குறிக்கின்றன.

## நீலக்குடி பிரம்மபுரீசுவார்

தேவாரப் பாடல் பெற்ற தலமான திருநீலக்குடி ஆடுதுறைக்கு அருகிலுள்ள திருத்தலமாகும். பாற் கடலில் பிறந்த விஷத்தை அருந்திய சிவபெருமான் இங்கே நீலகண்டராக வீற்றிருக்கின்றார்.-:

ஒருமுறை பிரம்மதேவன் தன்னுடைய தொடையிலிருந்து ஒரு பேரழகியைப் படைத்தார். அவளுடைய ஒப்பற்ற பேரழகு அவரை மயக்கியது. மோகத்தால் தன்னை மறந்து அவள் பின்னே ஓடினார். அதனால், அவருக்குப் பெரும்பழி உண்டாயிற்று. அப்பாவம் நீங்க அவர் நீலக்குடிக்கு வந்து தன்பெயரால் ஒருலிங்கமும், தீர்த்தமும் அமைத்து வழிபாடு செய்து பழிநீங்கப் பெற்றார்.

அவர் வழிபட்டதால் இவ்வூருக்குப் பிரம்மபுரி என்பது பெயராயிற்று. சுவாமியும் பிரம்ம புரீசுவரர் என்றழைக்கப்படுகின்றார் அநூபமஸ்தினி, பக்தா பீஷ்டநாயகி என்ற இரண்டு அம்பிகை சந்நிதிகள் உள்ளன. பிரம்ம தீர்த்தம் வெளிப்பிரகாரத்தில் தென் கிழக்கு மூலையில் கிணறு வடிவில் உள்ளது. இது திருவாவடுதுறை ஆதீனக் கோயிலாகும்.

## சீர்காழி பிரம்மபுரம்

உலகப் படைப்பின் தொடக்கத்தில் சிவபெருமான் மும்மூர்த்திகளைப்படைத்தார். பிறகு பிரம்மனை நோக்கி, "படைப்புத் தொழிலைச் செய்க" என்றார். அவன் படைப்புத்தொழிலை இயற்றும் முன்னர் தமக்கு முன்னே தோன்றியழிந்த பிர்மர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற பிரம்மபுரியான சீர்காழியை அடைந்தான். சிவ பெருமானைத் தியானித்துப் பஞ்சாட்சர உபதேசம் பெற்று வேணுவனத்தில் சுயம்புவாய் முளைத்த லிங்கத்தைப் பூசைசெய்தான். அதிலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் அவனுக்கு நீண்ட ஆயுளையும், படைப்புத் தொழிலைத் திறத்துடன் ஆற்றும் வலிமையையும் தந்தார்.

பிரமன் மகிழ்ந்து அங்கே பெரிய ஆலயத்தை அமைத்தான். அவன் வழிபட்டதால் இறைவர் பிரம்ம நாதர் என்றும் தலம் பிரமபுரம் என்றும் தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் என்றும் பெயர் பெற்றன. இது பிரமாபுரம் என்று ஞானசம்பந்தரால் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.

## கோளிலியெம்பெருமான்

தமது படைப்புத்தொழில் மேன்மை அடையவும் அதனால் வரும் குற்றங்கள் நீங்கவும் பிரம்மதேவன் வெண்மணல் கொண்டு சிவலிங்கம் அமைத்து வழிபட்ட இடம் 'திருக்கோளிலி' ஆகும். பிரம்மன் தவம் செய்த இடமாதலின் இதனைப் 'பிரம்ம தபோவனம்' என்று புராணம் கூறுகிறது. இங்கு சுவற்றில் பிரம்மன் வழிபடுவது புடைப்புச்சிற்பமாகக் அமைந்துள்ளது.

## மழபாடி மாணிக்கம்

பிரம்மன் தன்னுலகில் வைரத்தாலான சிவலிங்கத்தை வைத்து வழிபாடு செய்து வந்தான். ஒருநாள் புருஷாமிருகம் அதனை எடுத்துவந்து மழபாடியில் வைத்து, பூசை செய்யத் தொடங்கியது. அதையறிந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமன் பூமிக்கு வந்து அந்த லிங்கத்தைக் பெயர்த்துக் கொண்டுபோக முயற்சித்தான். என்ன செய்தும் அவனால் அதைப் பெயர்த்தெடுக்க முடியவில்லை. அதனால் "வைரத்தூண்" என்று போற்றி வழிபாடு செய்து விட்டுத் தன்னுலகம் சேர்ந்தான்.

❁ எல்லோரா கயிலாயநாதர் கோயிலில் உள்ள புடைப்புச் சிற்பம் இக்கதையை விளக்குவதாக உள்ளது. இதில் தூண்போன்று நெடியதான லிங்கத் தைப் பிரம்ம தேவன் தனது முன்னிருகைகளால் தழுவிக் கொண்டுள்ளான். முகத்தில் காட்டப்பட்டுள்ள இறுக்கமும் கால்களை அகற்றி வைத்துள்ள முறையும் அவன் சிரமப்பட்டு லிங்கத்தைப் பெயர்ப்பதைக் குறிக்கின்றன. ❁



பிரம்மன் லிங்கத்தைப் பெயர்த்தல் - எல்லோரா

## பிரம்மன் பல்வேறு பெயர்களில் வழிபட்டதலங்கள்

*பிரம்மனுக்கு வேதங்களை ஓதுவதால் வேதி, வேதியன் என்றும், கஞ்சமலராகிய தாமரையில் வீற்றிருப்பதால் கஞ்சன். கஞ்சமலரான் என்றும், 'நளின' மலராகிய தாமரையில் வீற்றிருப்பதால் நளினாசனன் என்றும், பொன்போல் பிரகாசிப்பதால் பொன்னன், என்றும் சிறப்புப் பெயர்கள் அமைகின்றன. அத்தகைய சிறப்புப் பெயர்களுடன் அவன் சிவவழிபாடு செய்த தலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.*

### வேதிகுடி பிரம்புரீசுவரம்

பிரமன் வேதங்களை ஓதிக் கொண்டேயிருப்ப தால் வேதியன் என்றும், வேதி என்றும் அழைக்கப்படு கின்றான். அவன் பூசித்த தலங்களில் ஒன்று வேதிகுடி யாகும். தஞ்சாவூர்-திருவையாறு சாலையிலுள்ள கண் டியூரிலிருந்து 1கி.மீ தொலைவில் உள்ளது. இறைவன் வேதபுரீசுவரர் இறைவி மங்கையர்க்கரசி. பிரமன் வில்வமரத்தடியில் ஆதியில் சிவலிங்கம் அமைத்துப் பூசித்ததால் வில்வம் தலமரமாயிற்று. பிரமன், நான்கு முகங்களாலும் ஓதும் நான்கு வேதங்களையும் செவி சாய்த்துக் கேட்டதனால் இங்குள்ள விநாயகர் வேத விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார்.

பின்னாளில் சோழமன்னர்கள் வேதம் ஓதும் பிராமணர்களுக்கு இவ்வூரைத் தானமாக அளித்து 'பரகேசரி சதுர்வேத மங்கலம்' என்று பெயர் சூட்டி யிருந்தைக் கல்வெட்டால் அறியப்படுகிறது.

### கஞ்சனூர்

கஞ்சம் என்றால் தாமரை, அதில் வீற்றிருப்பதால் பிரமனுக்குக் கஞ்சமலரோன், கஞ்சன் பெயர்களாயின. இப்பெயருடன் அவன் வழிபாடு செய்த சிவத்தலங்க ளில் ஒன்று கஞ்சனூர் ஆகும். இத்தலத்தில் பிரம்மன் பூசித்து, இமயமலையில் நடைபெற்ற சிவபெருமானின் திருமணக்கோலத்தைக் கண்டான் என்று கூறப்படு கிறது இந்நாளில் இறைவன் அக்னீசுவரர் என்றும் அம்பிகை கற்பகவல்லி என்றும் அழைக்கப்படுகின் றனர்.

### வட கஞ்சனூர்

சுந்தரர் தேவாரத்தில் வடகஞ்சனூர் என்ற தலம் குறிக்கப்பட்டுள்ளது. இதன் இருப்பிடம்தெரியவில்லை. சிலர் மேலே குறிக்கப்பட்ட கஞ்சனூர் காவிரியின் வடக்கில் அமைந்துள்ளதால் இதுவே வடகஞ்சனூர் என அழைக்கப்படுகிறது என்று குறித்துள்ளனர்.

### நளினாசன ஈசுவரர்

நளினம் என்றால் தாமரை, தாமரையில் வீற்றிருப் பதால் பிரம்மன் நளினாசனன் என்று அழைக்கப்படுகின் றான். ஸ்ரீவாஞ்சியத்தில் பிரம்மன் வழிபட்டுப்பேறு பெற்றதால் சிவபெருமானுக்கு நளினாசனேசுவரர் என்பதும் ஒரு பெயராயிற்று. தலபுராணத்தில் இப்பெயர் காணப்படுகிறது.

### பொன்னூர் பிரம்மபுரீசுவரர்

பொன் வண்ணத்துடன் இருப்பதால் பிரம்மன் பொன்னன் என்றழைக்கப்படுகின்றான். தமிழ்த்திரு மறை அவனைப் பொன்னன் என்றே அழைக்கின்றது. வந்தவாசிக்கு அருகிலுள்ள பொன்னூர் பிரம்மன் வழிபட்ட தலங்களில் ஒன்றாகும். இது வைப்புத் தலங் களில் ஒன்றாகும். ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அயனீச்சுவரங்கள்

பிரம்மனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று அயன் என்பதாகும். இப்பெயரால் அவன் அமைத்த ஆலயங்கள் அயனீச்சுவரம், அயவந்தீச்சுரம் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

## திருச்சாத்தமங்கை-அயவந்தீச்சுவரம்

திருமருகலில் இருந்து - நாகூர் செல்லும் சாலையிலுள்ள கோயில் சீயாத்தமங்கைப் பிரிவிலிருந்து வடக்கே 1 கி.மீ. சென்றால் இக்கோயிலை அடையலாம்.

ஸ்ரீயாகிய மகாலட்சுமியாலும் மாசாத்தானாகிய பிரமனாலும், அவன் மனைவி நாவியலும் மங்கையான சரஸ்வதியாலும் வழிபடப்பட்டதால் இத்தலம் ஸ்ரீசாத்த மங்கை என்று பெயர் பெற்றது. அதுவே மருவி சீயாத்தமங்கை என்று வழங்குகிறது.

இங்குள்ள ஆலயம் அயனால் வந்திக்கப்பட்டதாதலின் அயவந்தி, அயவந்தீசுவரம் என்றழைக்கப்படுகிறது. இந்நாளில் இறைவன் பிரம்மபுரீசுவரர் என்றும் அம்பிகை, இருமலர்க் கண்ணி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

## வழுவூர் அயனீச்சுரம்

சென்னை - திருச்சி நெடுஞ்சாலையிலுள்ள புகழ்பெற்ற சக்தித்தலமான மேல் மருவத்தூரிலிருந்து - வந்தவாசி செல்லும் சாலையில் மருதாடு என்ற ஊர் உள்ளது. இதன் வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்திருப்பது வழுவூர் ஆகும். இவ்வூர் ஆலயம் கல்வெட்டுக்களில் "அயனீச்சரம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒருசமயம் பிரம்மதேவன் சிவபெருமானை மட்டும் ஆராதனை செய்து விட்டு தனது படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கினான். அப்போது படைக்கப்பட்டவைகள் யாவும் ஆண்களாகவே இருந்தன. அதனால் பிரம்மதேவன் திகைத்து யோகத்தில் ஆழ்ந்தான்.

அயனீச்சரம் - திருப்பனந்தாள்

சிவசக்தியை வணங்காததனாலேயே இப்படி நிகழ்ந்தது என்பதை உணர்ந்து இங்கு லிங்கத்துடன் அம்பிகையையும் சேர்த்து வழிபாடு செய்தான். அவனுக்குப் பார்வதிதேவியுடன் சிவபெருமான் காட்சியளித்தார். அம்பிகை அவனுக்கு அருள்புரிந்து அவனால் படைக்கப்படும் உயிர்களுக்கு ஆசையையும், இச்சையையும் கொடுத்தாள். இதனால் அவளுக்குக் "காமரசவல்லி" என்பது பெயராயிற்று. அயனால் வந்திக்கப்பட்டதாதலின் கோயில் "அயனீச்சரம்" எனப்பட்டது. இந்நாளில் இறைவன் பிரம்மபுரீசுவரர் என்றழைக்கப்படுகின்றார். பிரம்மதேவனின் படைப்பில் உண்டான வழுவை (வழு-குற்றம்) நீக்கியதால் இவ்வூர் வழுவூர் எனப்பட்டது. அண்மையில் திருப்பணி செய்யப்பட்டுப் புதிய பொலிவுடன் உள்ளது.

## வைப்புத்தலமான அயனீச்சம்

தேவாரத்துள் 'அயனீச்சரம்' என்ற (வைப்புத் தலத்தை அப்பரடிகள் குறித்துள்ளார். ஆராய்ச்சியாளர்கள் நெல்லைமாவட்டம் அம்பாசமுத்திரத்தை அடுத்துள்ள பிரமதேசத்தை அயனீச்சரம் என்று குறித்துள்ளனர். (என்றாலும் மேலே குறிக்கப்பட்டுள்ள வழுவூர் கல்வெட்டில் அயனீச்சரம் என்று குறிக்கப்பட்டுள்ளதால் இதையே சில ஆராய்ச்சியாளர்கள் தேவார வைப்புத்தலமாகக் கூறுகின்றனர். மேலே குறித்த பிரம்ம தேசத்திலுள்ள இறைவர் கயிலாயநாதர்; அம்பிகை பெரியநாயகி: தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் ஆகும்.

## திருப்பனந்தாள் அயனீச்சரம்

பாடல்பெற்ற திருத்தலமான திருப்பனந்தாளில் அயனீச்சரம் என்ற தனி ஆலயம் உள்ளது. இவ்வூர்த் தல புராணத்தில் பிரம்ம தேவன் சோதிவடிவாய் நின்ற சிவபெருமானின் முடியைக் கண்டேன் என்று பொய் கூறி அவருடைய சாபத்திற்கு ஆளானான் என்றும், அப்படிப் பொய் சொன்ன பாவம் நீங்க இங்கு சிவலிங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கம் அமைத்து வழிபட்டான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அவன் வழிபட்டுப்பேறு பெற்ற கோயில் இந்நாளில் ஊருடையப்பர் கோயில் என்றழைக்கப்படுகிறது. மாடக் கோயிலாக சிறிய கட்டுமலை மீது அமைந்துள்ள இக்கோயிலின் விமானம் பெரிய கீர்த்தி (சிங்க) முகத்துடன் விளங்குகிறது. அம்பிகையின் பெயர் திரிபுர சுந்தரி என்பதாகும்.

இக்கோயிலுள்ள கல்வெட்டுக்கள் இதனை அயனீச்சரம் என்று குறிக்கின்றன. தேவார வைப்புத் தலமாகும். இங்கு பிரம்மன் அமைத்த தீர்த்தம் உள்ளது. இதில் மார்கழி, மாசி, ஆகிய மாதங்களின் முப்பது நாளிலும் மூழ்குவோர் பிரம்மபதம் அடைவர் என்று நம்புகின்றனர். இந்நாளில் இது பொய்கை என்று அழைக்கப்படுகிறது.

## விரிஞ்சிபுரம் வழித்துணைநாதர்

விரிஞ்ஞன் என்பது பிரம்மனுக்கு உரிய பெயர்களில் ஒன்றாகும். பிரம்மதேவன் மானுடனாகச் சிவவேதியர் குலத்தில் உதித்துச் சிவபூசை செய்ததலம். அவன் பெயரால் விரிஞ்சிபுரம் என்றழைக்கப்படுகின்றது.

வடாற்காடு மாவட்டம் வேலூருக்கு அருகில் அமைந்துள்ளதலம் விரிஞ்சிபுரம் ஆகும். வேதாரண்யம் விளக்கழகு, திருவாரூர் தேரழகு, திருவிரிஞ்சை மதிலழகு என்று போற்றப்படும் சிறப்பினைப் பெற்ற தலம். இங்கு பிரம்மன் பூசித்த மார்க்கசகாயர் (வழித்துணைநாதர்) ஆலயம் அமைந்துள்ளது.

ஒரு சமயம் அழல்வடிவாய் நின்ற அண்ணாமலையாரின் அடியைக் காணத் திருமாலும் திருமுடியைக் காணப் பிரமனும் சென்றனர். திருமால் வருந்தி மீண்டு தனது தோல்வியை ஒப்புக்கொண்டார். பிரமன் தோற்றான் என்றாலும் முடியைக் கண்டதாகப் பொய் சொல்லி அனைவரையும் நம்பவைத்தான். சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு திருமாலைத் தழுவி மகிழ்ந்தார். பிறகு பிரம்மனை நோக்கி, பொய் புகன்றதால் பூமிக்குச் சென்று பிறப்பாய் என்று சாபமிட்டார். பிரமன் சிவபெருமானைப் பலவாறு துதித்துத் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

பிறகு பூவுலகில் கரபுரம் எனும் தலத்தில் சம்பு சர்மன் - நயன நந்தினி என்பவர்களுக்கு மகனாகத் தோன்றினான். அவனுக்கு ஐந்து வயது நிரம்பு முன்பே சம்புசர்மன் சிவகதி அடைந்துவிட்டார். அந்நிலையில் அவனுடைய தாயாதிகள் அவனுடைய கோயிற்காணிகளை அபகரிக்கத் திட்டமிட்டனர்.

அதனால் வருந்திய நயனநந்தினி இறைவனிடம் முறையிட்டாள் சிவபெருமான், அவளுடைய கனவில் தோன்றி "நாமே வந்து உன்மகனுக்கு உபநயனமும் தீட்சையும் செய்து வைப்போம் வருந்தற்க" என்றார்.

மறுநாள் வேதியர் வடிவம் தாங்கிச் சிவபெருமான், நயனநந்தினியின் வீட்டுக்கு எழுந்தருளினார். தாயாதிகளை அழைத்துத் தாம் அவர்களின் உறவினன் என்பதை நம்பவைத்தார். பிறகு, சிவசருமனுக்கு உபநயனமும் சிவதீட்சையும் செய்வித்து கோயிலுக்கு அழைத்து வந்தார். அங்கு அவனிடம் அபிஷேகக் குடத்தைக் கொடுத்து "இறைவனை முழுக்காட்டுக", என்றார். சிறுவனான சிவசர்மன் உயர்ந்து நிற்கும் லிங்கத்தைக் கண்டு மலைத்தான். பூர்வ நினைவுவர, "அண்ணலே அன்று உம்முடியை அறிந்திலேன். இன்றும் உம்முடியைத் தொட்டு அபிஷேகிக்க முடியாது நிற்கிறேன்" என்று கண்ணீர் சிந்தினான். பரம கருணாநிதியாகிய சிவபெருமான் அதை உணர்ந்து, சிவலிங்கத்தைத் தலை சாயும்படிச் செய்தார். இன்றும் சிவலிங்கம் அக்கோலத்திலேயே உள்ளதைக் காண்கிறோம்.

சிவசருமன் மகிழ்ந்தான் விரிவான பூசைகளைச் செய்தான் அதைக்கண்டு தாயாதிகள் அச்சமும், ஆச்சர்யமும் அடைந்தனர். நெடுநாட்கள் பூசித்த பின் பிரம்மன் தன்னுலகம் சேர்ந்தான்.

*பின்குறிப்பு : அச்சாகி வெளிவந்துள்ள விரிஞ்சைப் புராணத்தில் பிரமன் தனது படைப்புத்தொழில் சிறக்கவே கரபுரமான இத்தலத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான் என்றும் அன்று முதல் அவன் பெயரால் இவ்வூர் விரிஞ்சிபுரம் என ஆனதென்றும் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் வேறொரு அந்தணப் பாலகனுக்காகவே முடி வளைத்தான் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், மக்கள் வழக்கில் சிவசர்மனாக வந்த பிரம்மனுக்காகவே சிவபெருமான் தலை வளைத்ததாகக் கூறுகின்றனர்.*

*கையில் அபிஷேக கலசத்துடன் விளங்கும் சிவ சர்மனின் உலாத்திருமேனி விரிஞ்சிபுரத்தில் உள்ளது. இறைவன் தன் தலையை வளைத்து பாலகனின் அபிஷேகத்தை ஏற்றுக் கொண்ட நாள் கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமையாகும். இறைவன் மார்க்கசகாயர். இறைவி மரகதவல்லி தீர்த்தம் பிரம்ம தீர்த்தம்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரம்ம சாதனங்கள்

பிரம்மம் என்பதற்கு அளவிட முடியாதது பெரியது சிறந்தது முதலான பல பொருட்கள் உள்ளன. சிவாலயங்களில் அளவால் பெரியதாகவும் சிறப்புமிக்கதாகவும் உள்ள பொருட்களுக்கு பிரம்ம என்ற அடைமொழியைச் சேர்த்து வழங்குகின்றனர். ஆனால் பிரம்மத்திற்கும் பிரம்மாவிற்கும் வேறுபாடு புரியாத பலர் இவற்றை பிரம்மனோடு சேர்த்துப் பொருள் கூறியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

## பிரம்மதாளம்

கோயிற் பூசைகளில் முக்கியமான இடம் பெறுவது பிரம்மதாளமாகும். இது ஓதுவார்களும். இசைக் கலைஞர்களும் வைத்துள்ள தாளத்தைவிடப் பல மடங்கு பெரியது. இதன் ஓசை நெடுந்தொலைவு கேட்கும். அடித்து விட்டபின் அதன் ரீங்காரம் அடங்கச் சிறிது நேரமாகும்.

நடராசர் சிற்பங்களில் பிரம்மன் தாளம் போடுவது போல் அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம். இவன் இந்தத் தாளத்தைப் போடுவதால் இந்தத் தாளத்திற்கே பிரம்மதாளம் என்பது பெயராயிற்று என்பாரும் உண்டு.

## பிரம்ம சந்தி

திசைகள் சந்தித்துக் கொள்ளும் இடங்களுக்குச் சந்திகள் என்று பெயர். நான்கு திசைகளும் அவற்றின் இடைத் திசைகளும் கூடும் இடங்களை ஆலயங்களில் சந்திகள் என்று அழைக்கின்றோம். இவற்றில் அட்டதிக்குப்பாலகர்களுக்கு பலி அளிக்கப்படும். இவைதவிர உலகிலுள்ள அப்சர, பூத, வேதாள, பைசாச, முதலான அனேக கணங்களுக்கு பலி அளிக்கப்படும் இடம் ஆலயத்தில் பெரியநந்தி (கொடிமர)த்திற்கு அருகிலுள்ள பலிபீடமாகும். இதற்குப் பிரம்ம சந்தி என்பது பெயராகும். இந்த பலிபீடத்திற்கு தினமும் சிறப்புப் பூசை செய்து இதில் உலகிலுள்ள அனைத்து கணங்களுக்கும் பலி அளிக்கப்படுகின்றது.

### பிரம்மனின் பல்வேறு பெயர்கள்

உலகப் பிதாவான பிரம்மதேவனை இலக்கியங்களும் புராணங்களும் பலநூறு பெயர்களால் அழைத்து மகிழ்கின்றன. அவற்றில் சில பிரஜாபதி, விதி, வேதா, மலரோன், வேதியன், கஞ்சன், சதுர்முகன், திசைமுகன், சத்தியன், பொன்னன், நூலான், தாமரையான், கமலவாகனன், கமலயோனி, கமலஜாதன், ஹரிஜனனன், ஹிரண்யகர்பன், அன்ன வாகனன், நளினாசனன், சாத்தன், அந்தரன், அம்பரன், அயன், வாகீசன், லோகபாலன், விரிஞ்சன், விமலன், ஹரிசுதன், புஷ்பஜாதன், அம்சவாகனன், நீரில்லா தாமரையான், கலைமகன் கேள்வன் என்பனவாகும்.

## பிரமரந்திரக்கல்

பிரமரந்திரம் என்பதற்குப் பெரிய அகண்ட வெளி என்பது பொருள். இந்த வெளி ஒவ்வொரு பொருளின் உச்சியிலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது மனிதனின் தலைக்குமேல் பன்னிரண்டு அங்குல உயரத்தில் உள்ளதென்றுயோக நூல்கள் கூறுகின்றன. ஆலயங்களில் உள்ள கோபுரங்களிலும் விமானங்களிலும்! இந்தவெளி கலசத்திற்குக்கு கீழே அமைகிறது. இதனை மூடும்கல் பிரமரந்திரக்கல் என்று அழைக்கப்படுகின்றது. இதனைக் கபாலக்கல் என்றும் கூறுவர். பெரும்பாலும் சந்தனக் கல்லையே பிரமரந்திரக் கல்லாகப் பயன்படுத்துகின்றனர்.

## பிரமசக்தி அம்மன்

பிரம்மனின் அருட்சக்தியாக வெளிப்பட்டவள் பிராம்ஹி. இவளைப் பிரம்மசக்தி என்று சமய நூல்கள் குறிக்கின்றன. சப்தமாதர்களில் ஒருத்தியாக விளங்கும் இவள் பிரம்மனைப்போலவே அன்னவாக னத்தில் கமண்டலம், அட்சமாலை ஏந்தி நான்கு முகத்துடன் திகழ்பவள்.

சிதம்பரத்தில் இவளுக்கென அமைக்கப்பட்ட தனி ஆலயமே இந்நாளில் தில்லையம்மன் கோயில் என வழங்குகின்றது. இதனுள் தில்லைக்காளி தனிச் சந்நிதியில் வீற்றிருக்கின்றாள். இது தவிர தென்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாவட்டங்களில் பிரம்மசக்தி என்ற அம்பிகை பல ஊர்களில் வீற்றிருப்பதைக் காண்கிறோம் இவளுடைய சிறப்புகளை வில்லுப்பாட்டு, கதைப்பாடல் முதலியவற்றில் விரிவாகக் காணலாம்.

## பிரம்மகிரி

பிரமன் சிவபெருமானைக் குறித்துத் தவம் இயற்றிய மலை பிரம்மகிரியாகும். இவ்வகையில் பிரம்மன் வீற்றிருக்கும் இமயமலைச் சிகரங்களில் ஒன்று பிரம்மகிரி என்றழைக்கப்படுகிறது. காளத்திக்கு மேற்கில் அமைந்துள்ளமலை பிரம்மகிரியாகும் இங்கு பிரமன் தவம் செய்தான் என்று காளத்திபுராணம் கூறுகிறது. பொன்முகலி ஆறு இம்மலையில் தான் உற்பத்தியாகிறது. அம்பர் தலத்திலுள்ள கட்டு மலைக்கும் பிரம்மகிரி என்பதே பெயராகும்.

## பிரம்மோத்சவம் (பெருந்திருவிழா)

'பிரம்ம' என்ற சொல் இங்கு பெரிய என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது ஆலயங்களில் கொடியேற்றிச் செய்யப்படும் 'பெரிய விழா' பிரம்மோற்சவம் எனப்பட்டது. சிலதலங்களில் பிரம்மனே முன்னின்று இந்தப் பெரியவிழாவைக் கொடியேற்றிச் செய்தான் என்பதையும் புராணங்கள் கூறுகின்றன. அதனாலும் இவ்விழா பெருந்திருவிழா பிரம்மோத்சவம் எனப்பட்டது.

## பிரம்மலோகம்

வேத முழக்கங்களாலும், ஓமப் புகையாலும், நாரதர் முதலான ரிஷிகளாலும் நிறைந்திருப்பதாகும். எண்ணற்ற தாமரைப் பொய்கைகளைக் கொண்டது. அதனை ராஜ அன்னங்களும் சாரச பறவைகளும் அணி செய்கின்றன. வண்டுகள் ரீங்காரமிடுகின்றன. வேத ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து சிறந்த முறையில் வாழ்பவர் இந்த லோகத்தை அடைகின்றனர்.

## பிரம்ம தண்டம் - 1

இது சிவபெருமானின் கரத்திலுள்ள தண்டமாகும். இதன் மீது நந்தியின் சிறிய உருவம் அமைந்துள்ளது. திருஒற்றியூரில் பலிபீடத்திற்கு முன்பு பிரம்ம தண்டத்தை உணர்த்தும் தூணும் அதன் உச்சியில் நந்தியின் வடிவமும் உள்ளது. ரிஷிகள் யோகதண்டத்தையும், ஞானிகள் பிரம்ம தண்டத்தையும் ஏந்துகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

❁ சதுர்முக சண்டிகேசுவரர்

## பிரம்மஸ்தானம்

சிவாலயங்களில் உள்ள மகாமண்டபம் பிரம்மஸ்தானம், அல்லது பிரம்ம பதம் என்றழைக்கப்படுகிறது. இந்த இடத்தில் கூடியிருந்து முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டதாக பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## பிரம்ம சிரமாலை

இதுவரை கழிந்துபோன காலங்களில் அனந்த கோடிப் பிரமர்கள் தோன்றி மறைந்துள்ளனர் அவர்களுடைய தலைகளை மாலையாகக் கோர்த்துச் சிவ பெருமான் அணிந்துள்ளார். இது அவருடைய அழிவின்மையைக் காட்டுவதாகும். திருவண்ணாமலை அருணாசலேசுவரர். திருவாரூர் தியாகராஜர் முதலிய மூர்த்திகளுக்குப் பொன்னால் செய்த பிரம்ம சிரமாலை அணிவிக்கப்படுவதைக் காண்கிறோம்.

வைரவர், வீரபத்திரர், மகாகாளர் முதலிய சிவ மூர்த்தங்களுக்குக் கபாலமாலை அணிவிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## பிரம்மதண்டம் - 2

ஒரு கற்பத்தில் பிரம்மதேவன் வேதங்களை ஓதி மகிழ்ந்ததுடன் ஒரு பெரியவேள்வியைச் செய்ய எண்ணினான். அதை செய்து வைக்கத் தகுந்த பெரிய ரித்விக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் அவன் எண் ணத்தில் வேள்வி செய்ய வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் உறுதிபெற்றது. ஒரு நாள் பிரம்மன் தும்மிய போது அவன் எண்ணம் ஒரு மனிதனாக உருப்பெற்று வெளிவந்தது. பிரம்மன் அவனுக்கு 'க்ஷுபன்' என்று பெயர் சூட்டித் துணைப் பிரம்மனாக்கி னான் அவன் நெடுநாள் தவம் செய்து ஒரு தண்ட வடிவம் கொண்டான். பிரம்மனும், சிவனும் அந்த தண்டத்தை ஏந்தினர். அதனிடமிருந்து நீதி சாத்திரங்க ளும், தரும நியாயங்களும் தோன்றின. பின்னர் அதிலி ருந்து சரஸ்வதி தோன்றி பிரம்மனை அடைந்தாள்.

## பிரம்ம கூர்ச்சம்

பிரம்மனிடமிருந்து ஆதியில் வெளிப்பட்ட சரஸ் வதி ஐம்பது அட்சர தேவதையாக மாறினாள். அவள் பிரம்ம சரஸ்சில் ஐம்பது தர்ப்பைப் புல்லாக இருந்து தவம் செய்தாள். பிரம்மன் அந்த ஐம்பது தர்ப்பைக ளையும் ஒன்றாகக் கட்டி தனது கைகளில் ஏந்தினான் அதற்கு 'பிரம்ம கூர்ச்சம்' என்பது பெயராயிற்று. வேதவேள்விகளிலும், ஆகம வேள்விச் சாலைகளி லும் இந்த பிரம்ம கூர்ச்சம் முதன்மைக் கலசத்தில் வைக்கப்படுகிறது.

இதைக் கொண்டு உடலைத் தடவுவதால் நோய் கள் நீங்குவதுடன் மனதிற்குப் புத்துணர்ச்சியும், மகிழ்ச்சி யும் உண்டாகின்றன.

## பிரம்மஹத்தி

பிரம்மத்தை உணர்ந்து பரமஞானிகளாக விளங் கும் பெரியோர்களை அவமதித்து அவர்களைத் துன்பு றுத்திக் கொன்று விட்டால் கொன்றவர்களைப் பெருந் துன்பம் பீடிக்கும். அது கொடிய அரக்கன் வடிவில் அவர்களைத் தொடர்ந்து வந்து துன்புறுத்தும். ஒரு பிராமணனைக் கொன்றதால் சோழமன்னனைத் தொடர்ந்து வந்த பாவம் திருவிடைமருதூர் ஆலயத் தின் வாயிலில் நின்று விட்டது. அதன் உருவம் அங்கே அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது கோரமான பெண்ணுருவம் கொண்டது என்று சில புராணங்கள் கூறுகின்றன.

## பிரம்ம தேசங்கள்

பிரம்மதேவனை வேதம் ஓதுபவர்களுக்கு அரசனாகச் சிவபெருமான் முடிசூட்டினார். எனவே வேதம் ஓயாது ஓதும் இடங்கள் அவனுடைய தேசங் களாகக் கருதப்பட்டன. ஆதியில் வேதம் ஓதும் அந்தணர்கள் தமக்கு எரியோம்பவும் தீர்த்தங்கள் ஆடவும் வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு உலக நன்மையைக் கருதி வேள்விகளைச் செய்தனர். வேள்விக் காலம் தவிர்ந்த நேரங்களில் வேதங்களை ஓதுதல், ஓதுவித்தல் பிறருக்கு வேதக்கருத்துக்களை விளக்குதல் முதலியவற்றைச் செய்து வந்தனர். இவர் களின் பணி தடைபடாதிருக்க அரசர்கள் பலவிதமான வரிகளையும் நீக்கி விளைநிலங்களையும், குடியிருப் புக்களையும் அமைத்துத் தந்திருந்தனர். இவற்றைக் கைகொண்ட அந்தணர்கள் தனது வேதவேள்விகளை ஆற்றியதுடன் சிவாலயங்களில் வேதங்களை முழக்கி னர். இவர்களின் இருப்பிடங்கள் பிரம்மதேவன் பெய ரால் பிரம்ம தேசங்கள் என்று அழைக்கப்பட்டன.

திருவீழிமிழலை, நங்கவரம், திருமால்பூரை அடுத்த புதுப்பாக்கம், சிறுபழுவூர் முதலிய அனேக தலங்கள் கல்வெட்டுக்களில் பிரம்ம தேசங்கள் என்றே குறிக்கப்பட்டுள்ளன. அரசர்கள் இவற்றைச் சிறப்புடன் போற்றியுள்ளதையும் அறிகிறோம்.

மேலும், திருநெல்வேலி, வடாற்காடு, தென்னாற் காடு முதலிய மாவட்டங்களில் இன்றும் பிரம்மதேசம் என்ற பெயர் கொண்ட பல ஊர்களைக் காண்கிறோம்.

## பிரம்மாண்ட தானம்

பிரம்ம தேவனைக் குறித்துச் செய்யப்படும் தானங்களில் மிகவுயர்ந்தது பிரம்மாண்ட தானமாகும். இதில் சுத்தமான பொன்னால் எட்டு திசைகளிலும் எட்டு யானைகள் தாங்குவதுபோல பெரிய முட்டை யைச் செய்து, அதன்மீது நான்கு முகங்களும் எட்டு கரங்களும் கொண்டவராகப் பிரம்மதேவனின் திரு வுருவத்தை அமைக்கின்றனர். பிறகு உரிய விதிகளின் படி அவருக்குப் பூசனை செய்கின்றனர். பூசை முடிந்த பின்னர் இந்தத் திருவுருவத்தை வேதம் ஓதும் பிராம ணர்களுக்குத் தானமாக அளிக்கின்றனர். இதனைச் செய்பவர்களுக்கு அண்டங்களை ஆளும் ராஜ்ய சுகம் கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பல்வகை பிரம்மர்கள்

சிவபெருமானால் ஆதியில் படைக்கப்பட்ட பிரம்மதேவன் காலப்போக்கில் தனிப்பெருங்கடவுளானான். அவன் அன்பர்கள் விரும்பியபோது பல வடிவங்களைத் தாங்கி வந்து அருள்புரிந்தான். அவன் தனியாக தனக்கென உலகத்தினைப் படைத்துக் கொண்டான். அவனுடைய பக்தர்கள் அவனைப் பலகோலங்களில் அமைத்து வழிபடுகின்றனர். அப்படி வழிபடும் கோலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

## ஆதிப்பிரமன்

ஆதிநாளில் சிவபெருமானால் படைக்கப்பட்ட பிரம்மதேவன் ஐந்து முகங்கள் கொண்டவனாகவே இருந்தான். பின்னர் சிவபெருமானை அவமதித்தமையால் உச்சிமுகம் கிள்ளப்பட்டு நான்முகனானான்.

கொங்குநாட்டுத் தலங்களில் அமைந்த அனேக புராணச்சிற்பங்களில் பிரமன் ஐந்து முகத்தோடேயே காட்டப்பட்டுள்ளான். எடுத்துக்காட்டாக பேரூர் அரசம் பலத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊர்த்துவதாண்டவர் சிற்பத்தில் ஐந்துமுகம் கொண்ட பிரம்மா தாளமிடக் காண்கிறோம். இவ்வாறே தாரமங்கலம் கயிலாயநாதர் ஆலயத்திலுள்ள லிங்கோற்ப வடிவத்திலும் பிரம்மா ஐந்து முகத்தோடேயே காணப்படுகின்றான். இவன் ஐந்து முகத்தோடு இருந்து தீர்த்தம் அமைத்ததைக் குருகாவூரில் காண்கிறோம். இதற்கு ஆதிப்பிரம்ம தீர்த்தம் என்பது பெயராகும்.

தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலய முதன்மை ராஜ கோபுரத்தில் ஐந்துமுகப் பிரம்மனைக் காண்கிறோம். இவர் அர்த்தபத்மாசனத்தில் நான்கு கரங்களுடன் விளங்குகிறார். நான்கு கரங்களில் முறையே ஜெப மாலை, கெண்டி அபய முத்திரை சுவடி ஆகியன உள்ளன.

## ஐவகைப் பிரம்மர்கள்

ஆதிப்பிரம்மன் ஐந்து முகங்களோடு விளங்கியது போலவே ஐந்து வடிவங்கள் தாங்கியும் அருள் பாலிக்கின்றான். இவர்களைச் சிற்பநூல்கள் பஞ்சப் பிரம்மர்கள் என்று அழைக்கின்றன.

இந்தப் பஞ்ச பிரம்மர்கள் முறையே வித்வான் (சௌமியன்), விசுவகர்மா, பிரஜாபதி, விதி, லோகபாலன், என்று செய்தொழில் நோக்கி அழைக்கப்படுகின்றனர்.

சௌமிய பிரம்மன் என்பது படைப்புத்தொழிலை நடத்த அனைத்தினையும் கற்று வித்வானாகத் திகழ்வதாகும். விசுவகர்மனாக இருந்து உலகைப் படைக்கின்றான். அதில் பிரஜைகளை (மக்களை)ப் படைத்து அவர்களுக்கு அரசனாகத் திகழ்கின்றான். அவனுடைய அரசகோலம் பிரஜாபதி என்றழைக்கப்படுகின்றது.

உயிர்களுக்கு விதியை நிர்ணயிப்பதால் அவன் விதி என்று அழைக்கப்படுகின்றான். மேலும், வானில் பரந்து நின்று உலகினைக் காப்பதால் லோகபாலன் என்றும் அழைக்கப்படுகின்றான்.

ஸ்ரீதத்துவநிதி என்னும் நூலில் இந்த ஐவகைப் பிரம்மர்களும் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வடிவம், உருவஅமைதி முதலியவை அந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.



(ஆதிப்பிரம்மன் - தஞ்சாவூர் சிற்பம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சலிப் பிரம்மன் - சிதம்பரம்
நன்றி : திருவாவடு துறை ஆதீனம்

## அஷ்ட பிரம்மர்கள்

சிவபெருமானின் துணைவர்களாக அட்டவித்யேசுவர்கள் இருப்பது போலவே பிரம்மனுக்கும் அட்டவித்யேசுவரர்கள் உள்ளனர். இவர்கள் முறையே சதர்மகர், பிரியோத்பவர், யக்ஞர், விஜயர், யக்ஞபத்ரகர், சர்வகாமிகர், விபவர், சர்வசாந்திகர் என்று அழைக்கப்படுகின்றனர்.

இவர்கள் தாமரை, சுருக், புத்தகம், கெண்டி (கமண்டலம்), ஆகமம், விசிரி சுருவம், தர்பாசனம் (பலகை) கதை, கேடயம், பாசம், அங்குசம் முதலியவற்றை ஏந்தியுள்ளனர்.

பிரம்மனை பூசிக்கும்போது அவன்வீற்றிருக்கும் தாமரையின் எட்டுதளங்களிலும் இவர்கள் எழுந்தருளி வைத்துப் பூசிக்கப்படுகின்றனர். மேலும் சில நூல்களில் பிதாமகர், விதிதா, பிரஜாபதி அஜர், விதி ஸ்ரஷ்டா, பத்மோத்பவர், வக்தா என்ற எண்மர் அஷ்ட வித்யேசுவரப் பிரம்மர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர்.

## நவப்பிரம்மாக்கள்

பிரம்மதேவன் ஒன்பது விதமான வடிவங்களைக் கொண்டு அன்பர்களுக்கு அருள் புரிகின்றான். இந்த நவப்பிரம்மர்களின் ஒன்பது வடிவங்கள் முறையே 1) குமாரப்பிரம்மன், 2) அர்க்கப் பிரம்மன் 3) வீரப்பிரம்மன் 4)பாலப்பிரம்மன் 5) சுவர்க்கப் பிரம்மன் 6) கருடப்பிரம்மன் 7) விசுவப்பிரம்மன் 8) பத்மப் பிரம்மன் 9) தாரகப்பிரம்மன் என்பனவாகும். இந்த ஒன்பது வடிவுடன் அவன் ஒன்பது சிவலிங்கங்களை தனித்தனிக் கோயில்களில் வைத்து வழிபட்ட இடம் ஆந்திரப் பிரதேசம், மெகபூப் நகர் மாவட்டம் ; அலம்பூர் ஆகும். இங்கு இக்கோயில்கள் சிறப்புடன் திகழ்கின்றன. மத்திய அரசு தொல்லியில் துறையினரால் இவை நன்கு பராமரிக்கப்படுகின்றன.

தென்னகத்தில் இது பற்றிய கோயிற் செய்திகள் இல்லையென்றாலும் இது பற்றிய புராணச்செய்திகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

1. குமாரப்பிரம்மன் என்பது திருமாலுக்கு மகனாகப்பிறந்து படைப்புத் தொழிலை நன்கு ஆற்ற தவம்புரியும் நிலையைக்குறிக்கிறது. 2. அர்க்கப் பிரம்மன் என்பது சூரியமண்டலத்தினில் விளங்கும் பிரம்மனை குறிக்கிறது. சிவாசனத்தின் ஓர் அங்கமாக விளங்கும் சூரியமண்டலத்தில் இந்த அர்க்கப் பிரம்மன் சிறப்புடன் பூசிக்கப்படுகின்றான். 3. வீரப்பிரம்மன் என்பது அவன் அறியாமைமிகுந்த அரக்கர்களோடு போரிட்ட கோலத்தைக் குறிக்கிறது. 4. பாலப்பிரம்மன் அத்திரி - அனுசுயா தம்பதியரிடம் குழந்தையாகத் தவழ்ந்த நிலையில் உள்ளவன். 5. யாகாதிகளால் மேன்மைபெற்றவர்கள் வசிக்கும் சுவர்கத்தைக் காப்பவனாக சுவர்க்கப் பிரம்மன் விளங்குகின்றான். 6. சிவபெருமானின் முடியைக் காணச் சென்றபோது பருந்து வடிவுடன் விளங்கினான். பின்னும் ஒருசமயம் பறவை வடிவில் இருந்த முனிவர்களுக்குப் பருந்து வடிவம் கொண்டு உபதேசித்தான். அதனால் கருடப் பிரம்மன் என்றழைக்கப்படுகின்றான். 7. உலகினைப் படைக்கும் போது விசுவப்பிரம்மன் எனப்பெயர் பெறுகின்றான். 8. திருமாலின் கொப்பூழிலிருந்து தோன்றி தாமரையில், பத்மாசனத்தில் வீற்றிருப்பதால் பத்மப்பிரம்மன் என்று அழைக்கப்படுகின்றான். 9 தாரகமந்திரத்திற்குத் தலைவனாக இருப்பதால் அவன் தாரகப்பிரம்மன் என்று அழைக்கப்படுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டவசு, ஏகாதச ருத்திரர், அட்டபைரவர் போன்று இந்த நவப்பிரமர் வடிவங்கள் பிரபலமாக இல்லை.

## வாஸ்துப் பிரம்மன்

அந்தகாசுர யுத்தத்தின் போது சிவபெருமானின் திருமேனியிலிருந்து வியர்வைத் துளிகள் கீழே சிந்தின. அவை ஒன்று சேர்ந்து ஒரு பூதமாக உருப் பெற்றது. அது மூவுலகங்களையும் ஒருசேர அழிக்கத் தக்க வல்லமை பெற்றிருந்தது. அதன் கர்ச்சனையால் உலக உயிர்கள் துன்புற்றன. அதையறிந்த சிவபெருமான் அதிபலன் என்ற உருத்திரனைப் படைத்து அந்த பூதத்தை அடக்குமாறு அனுப்பினார். அவன் நாற்பத்தி ஒன்பது மாயா பாசங்களை படைத்து அவற்றால் அந்த பூதத்தைக் கட்டிப் பூமியில் வீழ்த்தினான்.

அந்த பூதம் அடிக்கடி புரண்டதால் உலகம் தடுமாறியது. அதிபலன் அந்த பூதத்தின் மீது நாற்பத்தொன்பது பதங்களை அமைத்து மத்தியில் பிரம்ம தேவரையும் சுற்றிலும் அரியமான், விஸ்வகர், முதலான நாற்பத்தெட்டு தேவர்களை அமர்த்தினான். அதனால் அந்த பூதம் அசைவின்றி நின்றது. தேவர்கள் தமது உடலில் வசிக்கும்படியாக இருந்தால் அந்தப் பூதம் வாஸ்துபுருஷன் என்றழைக்கப்பட்டது.

பூமி பூஜை, கொடியேற்றம், முதலான சுபவேளைகளில் வாஸ்து பூஜை நடத்துவது வழக்கம். அரிசியைப் பரப்பி அதன்மீது 49 கட்டங்களை எள்ளால் வரைந்து அதன் நடுவில் பிரம்மதேவனும் சுற்றியுள்ள கட்டங்களில் மற்றவர்களும் பூசிக்கப்படுகின்றனர். இந்த வாஸ்துப் பிரம்மனைப் பூசிப்பதால் அந்த இடத்தில் சாந்தியும், சந்தோஷமும் நிலைபெற்றிருக்கும் என்பது நம்பிக்கையாகும்.

## விசுவப் பிரம்மன்

சிவபெருமானே உலகில் பலதொழில் விளங்க விசுவப் பிரம்மனாகத் தோன்றினான். அவன் சதாசிவத்தைப் போன்று ஐந்து முகங்களும், பத்து கரங்களும் கொண்டவனாக விளங்கினான். தாமரை, நீலோற்பலம் சூலம், அங்குசம், பாசம், வில், யோகமுத்திரை, வீணை முதலியவற்றை ஏந்தி, தாமரை மலரில் வீற்றிருந்தான்.

அவனிடமிருந்து மனு, மயன், துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞன் என்ற ஐவர் தோன்றினர். மனு இரும்பு வேலைகளையும், மயன் மரத்தச்சுத் தொழிலையும்

விஸ்வப்பிரம்மன்

துவஷ்டா செம்பு, வெள்ளி வேலைகளையும், சிற்பி கல் வேலைகளையும், விசுவக்ஞன் பொன் வெள்ளி வேலைகளையும் மேற்கொண்டு உலக மக்களுக்குத் துணைநின்றனர். இவர்கள், மானசாரம், மயமதம் முதலான அனேக நூல்களைப் படைத்தனர்.

பிறகு, விசுவப்பிரம்மனானச் சிவபெருமான் தன்னைப் போலவே விசுவகர்மன் என்பவனைப் படைத்துத் தேவர்களுக்கு நுண்தொழில் வல்லுனனாகத் தந்தான். இவனை தேவதச்சன் எனவும் அழைப்பர் விசுவகர்மா இந்திரனின் மகளை மணந்தான். இவனிடமிருந்து அனேகர் தோன்றிச் சிறந்த கலைப் படைப்புக்களை ஆக்கினார்கள். விசுவகர்மன் திருவாரூரில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அந்த ஆலயம் விசுவகர்மேசுவரம் என்ற பெயரில் வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. இது சிறந்த கலைக் கோயிலாகும்.

மேலே சொல்லப்பட்டவர்கள் தவிர இன்னும் அநேக பிரம்மர்களைப் புராணங்கள் தனிச் சிறப்புடன் பேசுகின்றன. அவற்றை பின்வரும் மலர்களில் அறிந்து மகிழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## யோகப் பிரம்மன்

அனைத்து தேவர்களும், மும்மூர்த்திகளும் யோகத்தில் விருப்பமுடையவர்களாய் யோகம் புரிகின்றனர். என்றாலும் சிவபெருமானும், பிரம்மதேவனுமே அதிகஅளவில் யோகக் கடவுளராகப் போற்றப்படுகின்றனர். சிவபெருமான் யோகநாதராகப் பலதலங்களில் வீற்றிருக்கின்றார்.

யோகப்பிரம்மன் - ஆத்தூர் - நெல்லை மாவட்டம்

அபூர்வமாகச் சிலதலங்களில் பிரம்மன் யோகத்தில் வீற்றிருப்பதைக் காண்கிறோம். திருப்பட்டூரில் தனிச்சன்னிதியில் வீற்றிருக்கும் பிரம்மன் யோகப்பிரம்மனாகவே காட்சியளிக்கின்றார். எரும்பூர் கடம்பவனேசுவரர் ஆலயத்தில் கோட்டத்தில் விளங்கும் பிரம்மன் பத்மாசனத்தில் யோகமூர்த்தியாக இருக்கின்றார்.

சில தலங்களில் ஸ்ரீவிமானத்தில் யோகப்பிரம்மன் வீற்றிருக்கின்றார். ஆலந்துறை முதலிய இடங்களில் இக்காட்சியைக் காணலாம்.

பிரம்மன் யோக நிலையில் வீற்றிருந்தபோது அவனுடைய அருட்காட்சியில் சிவபெருமான் நான்கு முகங்களும் எட்டுதோள்களும் கொண்டவராக வெண்மையான நிறத்துடன் தாமரையில் வீற்றிருக்கும். யோக சிவனாகக் காட்சியளிக்கின்றார். அந்த உருவைத் தியானித்தவாறே பிரம்ம தேவன் தனது படைப்புத் தொழிலைச் செம்மையுடன் செய்கின்றான். அந்நிலையில் அவன் சிவமாகவே விளங்குகின்றான். இதனைத் திருஞானசம்பந்தர் சிவபுர தேவாரத்தில்,

*"பவமலி தொழிலது நினைவோடு பதுமநன் மலரது மருவிய*
*சிவனது சிவபுரம் நினைபவர் செழுநிலனில் நிலைபெறுவரே"*

என்று அருளிச் செய்துள்ளார். (இதன் பொருளைச் சிவமஞ்சரி 30ஆம் மலரில் காண்க.)

பிரம்மன் சிவனை தியானித்துக் கொண்டு பெரிய யோகத்துடன் நிலைபெற்றிருப்பதால் பிரம்ம யோகி அல்லது யோகப்பிரம்மன் என்று அழைக்கப்படுகிறான்.

## திருப்பிடவூர் யோகப் பிரம்மன்

சைவநல்லுலகில் 'திருப்பிடவூர்' என்று போற்றப்பட்ட திருத்தலம் இந்நாளில் 'திருப்பட்டூர்' என்றழைக்கப்படுகிறது. இது திருச்சிக்கு அருகிலுள்ள தலமாகும். ஒருமுறை தனது ஒளியைஇழந்த பிரம்மா இத்தலத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு மீண்டும் அதனைப் பெற்றார். அதனால் இறைவன் பிரம்மபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

இக்கோயில் வெளிப்பிராகாரத்தின் தென் மேற்கு முனையில் பிரம்மாவின் பெரியசந்நிதி உள்ளது. இதில் பிரம்மா நான்கு கரங்களுடன் உள்ளார். பின்னிருகரங்களில் கெண்டி அட்சமாலை ஏந்தி முன்னிருகரங்களை தியானமுத்திரையில் மடிமீது வைத்துள்ளார். பிரம்மா பொன்மயமாகவும், பொன்வண்ணம் கொண்டவனாகவும் விளங்குவதால் இத்தலத்தில் பொன்னிறமான மஞ்சள் பொருட்கள் பூசைப் பொருட்களாக உள்ளன. மஞ்சள் நீரால் அபிஷேகம் செய்தல், மஞ்சள் வண்ண ஆடைகளை அணிவித்தல், மஞ்சள்நிற மலர்களைக் கொண்டு அர்ச்சித்தல், மஞ்சள்நிற மலர்மாலைச் சூட்டுதல் முதலியன சிறப்பாகப் போற்றப்படுகின்றன.

இந்தத் தலம் மும்மூர்த்தித் தலமாகவும் திகழ்கிறது. இங்கு பிரம்மா, சிவபெருமானுடன் திருமால் ஆலயமும் உள்ளன. இங்கு பன்னிரண்டு சிவலிங்களை வைத்து ஜோதிர் லிங்கங்களாக வழிபட்டு, தனது இழந்த ஒளியைப் பெற்றான் என்று செவிவழிக் செய்திகள் கூறுகின்றன. அதற்கேற்ப இங்கே பன்னிரண்டு சிவலிங்கங்கள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் நல்ல படிக்கட்டுக்களுடன் பிரம்மதீர்த்தம் அமைந்துள்ளது. இது சிறந்த பிரார்த்தனைத்தலமாகத் திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அர்க்கப் பிரம்மன் பிரம்ம சூரியன்



சூரியனைச் சைவர்கள், சிவசூரியன் என்றும், வைணவர்கள் சூரியநாராயணன் என்றும் அழைக்கின்றனர். இதைப்போன்றே பிரம்மனை வழிபடுவோர் சூரியனைப் பிரம்ம சூரியன் அல்லது சூரியப்பிரம்மன் என்று அழைக்கின்றனர்.

சைவர்கள் சூரியமண்டலத்தின் மத்தியில் பிரம்மன் வீற்றிருப்பதாகத் தமது பூஜா நூல்களில் குறித்துள்ளனர். மேலும் சூரியமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் ஆதிப்பிரம்மனாக நான்கு முகங்களும் எட்டுதோளும் கொண்டவராகவே விளங்குகின்றார். அதில் சிவபெருமான் சக்தியுடன் கூடிய அர்த்தநாரீசு வரராகவே காட்சியளிக்கின்றார். கையில் அட்சமாலை, பாசம், கத்தி, அங்குசம், கபாலம் ஆகியவற்றை ஏந்தியுள்ளார். இவரை நினைந்தே பிரம்மன் தனது படைப்புத் தொழிலைச் செய்கின்றான் என்று சைவ பூஜாபத்ததி நூல்கள் குறிக்கின்றன.

சூரியனின் சதுர்த்த வடிவங்களான ஆதித்தியன், பானு, பாஸ்கரன், ரவி ஆகிய நால்வரும் நான்கு முகங்களுடன் பிரம்ம தேவனைப் போன்றே காட்சியளிக்கின்றனர்.

சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வருவதைப் போலவே சூரியப் பிரம்மன் ஏழு அன்னங்கள் பூட்டிய தேரில் வலம் வருகின்றான். இவை வானவில்லின் ஏழு வண்ணங்களைக் கொண்டுள்ளன என்று விஷ்ணு புராணம் கூறுகிறது.

சூரியனுக்குரிய பெயர்களில் ஒன்றான சௌமியன் என்ற பெயரால் பிரம்மன் 'சௌமியப் பிரம்மன்' என்றழைக்கப்படுகின்றார்.

## அன்னமாய், கழுகாய் .....

பிரம்மதேவன், அன்னவடிவம்தாங்கிச் சிவபெருமானின் திருமுடியைக்காண விண்ணில் பறந்தானென்று புராணங்கள் கூறுகின்றன. இதனால் அண்ணாமலையார் வடிவத்தில் அவன் அன்னவடிவத்துடன் காட்சியளிக்கின்றான். சில கலைஞர்கள் இவரை இடுப்பின்கீழ் அன்னமாகவும் மேலே நான்குமுகம் கொண்ட தேவடிவிலும் அமைத்துள்ளனர்.

வடநாட்டுப் புராணங்களில் பிரமன் கழுகுவடிவம்தாங்கிப் பெருமானின் முடியைக் காணச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. அபூர்வமாகச் சில தென்னிந்திய புராணங்களிலும் பிரமன் கழுகுருவம் கொண்டது கூறப்பட்டுள்ளது.

தமிழ் மறையான தேவாரத்திலும் பிரம்மன் கழுகு உருவம் கொண்டது குறிக்கப்பட்டுள்ளது. ஏனங்கழுகானவர் (மறைக்காடு); ஓவாது கழுகுமாய் (முதுகுன்றம்) பருந்துருவாகி விண்ணடைந்தவன் (ஐயாறு) வென்றிப் பறவையாய் (நள்ளாறு - ஆலவாய்) என்று பல இடங்களில் திருஞானசம்பந்தர் பாடிப்பரவுவதைக் காண்கிறோம். திருக்கழுக்குன்றத்தில் பிரம்மன் கழுகுவடிவத்துடன் பூசித்தான் என்று கூறப்படுகின்றது. கருடவடிவத்துடன் பிரமன் பூசித்த ஆலயம் ஆந்திரமாநிலம் அலம்பூரில் உள்ளது. இது கருடப்பிரமர்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இந்தோனேஷியா, ஜாவா முதலிய தீவுகளில் வழங்கும் புராணக் கதைகளிலும் பிரம்மன் கழுகு வடிவத்துடன் அன்பர்களுக்கு காட்சியளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# உருத்திரர்களும் பிரம்மதேவனும்...

ஆதிசிவனால் நேரடியாகவும், பலசமயங்களில் திருமாலின் வழியாகவும் பிரம்மதேவன் படைக்கப்பட்டு அவனுக்கு படைப்புத் தொழில் அளிக்கப்பட்டது. அவன் அனேக முறை தியானத்தில் மூழ்கிய போதும், அஞ்சிச் சோர்ந்த போதும் அவனிடமிருந்து சிவபெருமானின் அம்சம் உருத்திரராக வெளிப்பட்டது என்று பலவேறு புராணங்கள் கூறுகின்றன.

ஒரு சமயம் நீலலோகிதர் என்ற திருவுருவுடன் சிவபெருமான் விளங்கினார். அப்போது உண்டாக்கப்பட்ட உலகம் நீலலோகித கற்பம் என்று வழங்கப்பட்டது. அந்த கற்பத்தில் தோன்றிய பிரம்மன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். சிவபெருமான் நீலலோகிதன் என்ற உருத்திரராகத் தோன்றினர்.

பின்பு எட்டு உருவங்களுடன் அவனுக்குக் காட்சியளித்துப் படைப்பாற்றலை அளித்தார். இவை அட்ட மூர்த்தங்கள் எனப்படும். (பிரம்மாண்ட புராணத்தில் குறிக்கப்பட்டுள்ள இதன் விளக்கத்தை முதல் தொகுதியில் காண்க.) சிவனருள்பெற்ற பிரம்மன் 10,000 தேவ ஆண்டுகள் தனது தொழிலைத் திறம்பட ஆற்றினான். இறுதியில் அவன் சோர்ந்தான். அவனுக்கு இயலாமையால் அழுகை வந்தது. அந்த கண்ணீர்த் துளிகள் ஒன்று சேர்ந்து ஒரு பூதமானது. அதன் கோர உருவத்தைக் கண்டு அஞ்சி அலறி உயிரை விட்டு விட்டான். அவனுடைய உடல் கூறுகளிலிருந்து சிவபெருமான் உருத்திரர்களைத் தோற்றுவித்தார்.

அவனுடைய உயிர் பார்வதிதேவியை அடைந்தது. அவள் அந்த உயிரிலிருந்து அனேக சக்திகளைத் தோற்றுவித்தாள். அந்தச் சக்திகளும் ருத்திரர்களும் ஒன்று சேர்ந்து, ஒரு பெரிய சோதியை உண்டாக்கினர். அதனைச் சிவபெருமான் ஏற்று புதிய பிரம்மனாகப் படைத்து அளித்தார் அந்தப் பிரம்மன் மகிழ்ச்சியுடன் படைப்புத் தொழிலை ஏற்றுத் திறம்பட உலகை நடத்தினான். புதியதாகப் பிறந்த அந்தப் பிரம்மன் உருத்திர குமாரன் எனப் பெயர் பெற்றான்.

ஒரு கற்பத்தில் பிரம்மன் படைப்புத் தொழிலைச் செய்ய முயன்றபோது படைக்கப்பட்டதெல்லாம் பூதம் பிசாசுகளாக மாறிவிட்டன. அதைக் கண்டு அஞ்சி நடுங்கி வீழ்ந்து இறந்தான். அவனுடைய உடல் பதினோரு துண்டுகளானது. சிவபெருமான் அவற்றை உருத்திரர்களாக்கி விட்டுப் பிரம்மனுக்குப் புதிய வடிவம் அளித்தார். அந்தப் பதினோரு ருத்திரர்களே ஏகாதச ருத்திரர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

பிரம்மன் அந்த உருத்திரர்களைக் கண்டு பயந்தான். சிவபெருமானை வணங்கித் தம்மை அவர்களிடமிருந்து காக்குமாறு வேண்டினான். சிவபெருமான் அவனுக்கு முன்னே தோன்றி அருள்பாலித்தார். பிறகு உருத்திரர்களுக்குத் தனி உலகத்தைப் படைத்து அவர்களை அங்கே செல்லுமாறு பணித்தார்.

இதையொத்ததாக உருத்திரனுக்கும், பிரம்மனுக்கும் உள்ள தொடர்புகள் இன்னும் அனேக புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

## பிரம்மன் கண்ட பஞ்சதேக தரிசனம்

உலக உற்பத்தியின்போது சிவபெருமான் ஐந்து திருமுகங்களும், பத்து திருத்தோள்களும் கொண்ட சதாசிவமூர்த்தியாகத் தோன்றினார். அந்தச் சதாசிவ மூர்த்தியிடமிருந்து ஐந்து திருமேனிகள் தோன்றின. அவை சத்தியோஜாதம், அகோரம், வாமதேவம், ஈசானம், தத்புருஷம் என்ற ஐந்து மூர்த்திகளாக உலகப் பொருள்களில் ஊடுருவி நிற்கின்றன. இவற்றைத் தரிசிப்பது அவ்வளவு எளிதல்ல.

பிரம்மன் நீலலோகித கல்பத்தில் சிவபெருமானின் அஷ்டமூர்த்த வடிவங்களைக் கண்டு அருள் பெற்றது போலவே பின்னர் வந்த ஒவ்வொரு கல்பத்திலும் ஒவ்வொரு மூர்த்தமாக இந்த ஐந்து மூர்த்தங்களைத் தரிசித்து அருட்பேறு பெற்றான்.

அவன் சுவேதலோகித கற்பத்தில் சத்யோஜாத மூர்த்தியாகவும்; நீலலோகித கற்பத்தில் சத்யோஜாத மூர்த்தியையும்; இரக்த கற்பத்தில் ஈசானமூர்த்தியையும் தரிசித்தான். நீல கற்பத்தில் அகோர மூர்த்தியாகவும் இப்போது நடைபெறும் சுவேத வராக கல்பத்தில் வாமதேவமூர்த்தியாகவும் சிவபெருமானைத் தரிசித்து தன் தொழிலை நடத்துகின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வேதன் கொண்ட மான் வடிவம் ....

சுகம், இன்பம் ஆகியவற்றின் குறியீடு "கிளி" ஆகும். சுகத்தை அளிப்பவளாக இருப்பதால் அம்பிகை தனது கரத்திலும் தோளிலும் கிளியை ஏந்துகின்றாள். இதுபோன்றே வேதத்தின் குறியீடு "மான்" ஆகும்.

தேவாரத்துள் அனேக இடங்களில் வேதம், மான் வடிவில் இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சிவபெருமானின் இடது மேல்கரத்திலுள்ள மான் ஓயாது அவரது இடது செவியில் வேதத்தை ஓதிக் கொண்டேயிருக்கின்றது என்று புராணங்கள் கூறுகின்றன.

வேதனான பிரம்மனும் பலசமயம் மான் வடிவம் கொண்டான் என்று புராணங்கள் கூறுகின்றன. ஒரு சமயம் பிரம்மன் சரஸ்வதியைப் படைத்தான். பிறகு அவளுடைய அழகில் மயங்கி அவளை அணைக்க முயன்றான். அவள் அச்சம் கொண்டு பெண் மான் வடிவம் கொண்டு ஓடினாள்.

பிரம்மதேவன் ஆண்மான் வடிவம் கொண்டு அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான். இதனால் படைப்புத்தொழில் தடைப்பட்டது. இதையறிந்த சிவபெருமான் வேடவடிவம் கொண்டு அங்கு தோன்றினர். வில்லை வளைத்து ஆண்மான் வடிவில் இருந்த பிரம்மதேவன் மீது அம்பு தொடுத்தார். அடிபட்ட பிரம்மன் வீழ்ந்து இறந்தான். அவன் உடலிலிருந்து ஒரு சோதி தோன்றி விண்ணை அடைந்து நட்சத்திரமாக மாறி நிலைபெற்றது. சிவபெருமான் அதற்கு "ஆதிரை" என்று பெயரிட்டுத் தனக்குரிய நட்சத்திரமாக ஏற்றுக் கொண்டார்.

வேடவடிவில் நின்ற சிவபெருமானை சரஸ்வதி வணங்கினாள். சிவபெருமான் அவளுக்காக இரங்கி, "பெண்ணே, பிரம்மன் புதிய உடலும், எண்ணமும் பெற்றதால் அவனைக் கணவனாக அடைவாய்" என்று கூறி, அவனை உயிர்ப்பித்து அளித்தார். பிரம்மனுக்கும் சரஸ்வதிக்கும் திருமணம் நடைபெற்றது.

பிரம்மதேவன், தனது அறிவு மழுங்கியதற்குக் காரணம் மன்மதன் என்பதை அறிந்தான். தன்னைப் போலவே அவனும் சிவபெருமானால் அழியட்டும் என்று சாபமிட்டான். அதன் காரணமாகவே மன்மதன் சிவபெருமானால் அழிக்கப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டான்.

சில புராணங்களில் பிரம்மதேவன் திலோத்தமையைப் படைத்து அவள் அழகிய மயங்கினான் என்றும், அவள் மானாகி ஓடியதால் தானும் மானாகி அவளைப் பின் தொடர்ந்தான் என்றும், கூறப்பட்டுள்ளது. அப்போது இந்திரன், சிவபெருமானை வேண்ட, அவர் வேட வடிவத்துடன் தோன்றி அம்பெய்து அவனைக் கொன்றார் என்றும் பின்னர் கலைமகள் வேண்ட உயிர்ப்பித்தார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

### வேதன் கொண்ட கோமுகம்

கொங்குநாட்டுப் பேரூரில் திருமாலும், பிரமனும் முறையே பட்டிமுனி, கோமுனி என்ற பெயரில் தவம் செய்து சிவபெருமானின் நடனக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். கோமுனி வடிவத்துடன் விளங்கும் பிரம்ம தேவனுக்குப் பசுமுகம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிரமன் வாள் பெறுதலும் கமண்டலம் பெறுதலும்

சிவபெருமான் பிரமனைப் படைத்து அவனை படைப்புக்கடவுளாக்கினார் பின்னர் ஒரு சமயம் அவன் செய்த கடுந்தவத்திற்கு மகிழ்ந்து. பெரிய வாளாயுதத்தை அளித்தார். இது ஞான வாளாயுதம் ஆகும் அஞ்ஞானத்தினை அகற்றுவதாகும். சிவன் பிரமனுக்கு வாளாயுதம் அளித்ததைத் திருமூலர் திருமந்திரத்தில்

"ஆழி கொடுத்தனன் அச்சுதற்கு அவ்வழி
வாழி பிரமற்கு வாள் கொடுத்தானே"

என்று குறித்துள்ளார். (இதன் பொருள் அச்சுதனான திருமாலுக்கு சிவபெருமான் சக்கராயுதத்தை அளித்தான். அந்த வழியில் பிரம்மதேவனுக்கு வாள் கொடுத்தான் என்பதாகும்)

மேலும் ஒருசமயம் பிரம்மன் மனிதர்களைப் படைத்தபின் அவர்களின் தற்காப்புக்காகவும், எதிரி களைவெல்லவும் ஆயுதங்களைப் படைத்துத் தர விரும்பினான். அதற்காகச் சிவபெருமானைக் குறித்து பெரிய வேள்வி ஒன்றைச் செய்தான் அதிலிருந்து பெரிய சிவபூதம் தோன்றியது அதைக்கண்டு பிரம்ம தேவனே அஞ்சி ஓடிவிட்டான்.

சிவபெருமான் வெளிப்பட்டு அந்த பூதத்தை ஒடுக்கி ஒரு வாளாயுதமாக மாற்றிப் பிரமனிடம் தந்தார். அதற்குக் கத்தி என்பது பெயராகும். பிரமன் அதனை அரசர்களுக்கு அளித்தான். அன்று முதல் அரசர்களுக் குரிய ஆயுதங்களில் கத்தி முதன்மை பெற்றது.

இந்தக் கத்தியிலிருந்து பின்னாளில் அனேக ஆயுதங்கள் தோன்றின.

உலக உயிர்களின் வாழ்விற்கு இன்றியமையாதது நீராகும் இதனால்தான் வள்ளுவன் 'நீரின்றி அமையாது உலகு' என்றார்

ஓர் ஊழிக்காலத்தில் சிவபெருமான் உலகினை யும் உயிர்த்தொகுதியையும் படைத்தான். படைப்புத் தொழிலைச் செய்ய பிரம்மனைப் படைத்தான். பிரம்மன் பெரிய கடுந்தவம் செய்தான். அவனுக்குச் சிவபெருமான் சூரிய மண்டலத்தின் மத்தியில் நான்கு முகங்களும் எட்டு தோள்களும் கொண்டவராக வெளிப்பட்டார். பிரமன் அவரை வணங்கி படைப்புத் தொழிலை நன்கு நடத்த அவருடைய தலையில் உள்ள கங்கைநீரைத் தருக என்றான். சிவபெருமான் அவனுக்கு கமண்டலத்தில் (என்றும் வற்றாதபடிக்கு) கங்கையை அளித்ததுடன் அவனை சூரிய மண்டலத் தின் மத்தியில் அமர்த்தி அருள் புரிந்தார். பிரம்மதேவன் ஊழிக்காலத்து கதிரவனைப் போல எல்லையற்ற பிரகா சத்துடன் வீற்றிருந்தான். (இதனையொட்டியே சிவாச னத்தில் உள்ள கமலத்தின் நுனிவட்டங்களில் சூரிய மண்டலத்தையும் அதன் மத்தியில் பிரம்ம தேவனை யும் போற்றி வழிபடுகின்றோம்).

இந்தச் செய்தியும் சுருக்கமாக திருமந்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது 367 வது மந்திரமாக உள்ள

"ஊழி வலஞ்செய்தங்கு ஒரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே"

என்றபாடல் இதனை விளக்குகின்றது. இதற்கு ஊழிக் காலத்திற்குப் பிறகு தவம் செய்த ஒருவனான பிரம்ம னுக்கு நான்கு முகம் கொண்டவனாகச் சிவபெருமான் வெளிப்பட்டான். அவனிடம் பிரம்மன் திருமுடியில் உள்ள கங்கைநீரைப் படைப்புத் தொழிலைச் செய்யத் தருக என்று கேட்க அதை தந்ததுடன் பெரிய சூரிய மண்டலத்தின் நடுவில் அவனை வீற்றிருக்கச் செய் தான் என்பது பொருளாகும்.

### பிரமனின் சடைகள் தெரியும் சிவலிங்கம்

விரிஞ்சிபுரத்தில் பிரமன் சிவாசாரியார் குலத்தில் பிறந்து சிவபூசை செய்ததைப் போலவே, திருவியலூர் என்ற தலத்தில் விஷ்ணுசர்மா என்பவரின் மகனாகத் தோன்றி ஒப்பற்ற சிவபூசையைச் செய்தான். ஒருசிவராத் திரியின் போது அவனும் அவனுடைய ஏழு சகோதர்க ளும் எல்லோரும் காண அந்த சிவலிங்கத்துள் புகுந்து மறைந்தனர். அதனை உலகிற்குக்காட்ட அவர்களின் சடைமுடி மட்டும் லிங்கத்திருமேனியில் நிலைபெற்றது. இப்போதும் வரிவரியான சடை அமைப்பை இவ்வூர்ச் சிவலிங்கத்தின் மீது காண்கிறோம். அஷ்டப் பிரம்மர் களே எட்டு குமாரர்களாகத் தோன்றி இங்குச் சிவவழி பாடு செய்தனர் என்பர்

இத்தலம் கும்பகோணத்திற்குக் கிழக்கே 4மைல் தொலைவில் உள்ளது. சுவாமி சிவயோகநாதேசுவரர். அம்பிகை சாந்தநாயகி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவாலயங்களில் பிரம்மதேவர்

சிவாலயங்கள் அனைத்திலும் கருவறைக் கோட்ட தெய்வமாகப் பிரம்மதேவன் எழுந்தருளியுள் ளார். அவர் வடக்கு நோக்கிய கருவறை மாடத்தில் வடக்கு நோக்கியவாறு நின்ற நிலையில் நான்கு முகங் களுடன் நான்கு கரங்கள் கொண்டவராக விளங்குகின் றார். மேற்கரங்களில் அட்சமாலை, கெண்டியும் இருக்க கீழ்வலது கரம் அபயமுத்திரை காட்ட இடது கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார். இடையில் பொன்னாடை களும், மார்பில் பொன்பூணூலும் விளங்குகின்றன.

அபூர்வமாகச் சிலதலங்களில் நீண்ட வெண்தாடி கொண்டவராகவும், கையில் பொற்கிழி கொண்டவராக வும் காட்டப்படுகின்றார். இரண்டுபுறமும் அவரைத் தொழுபவராக முனிவர்கள் உள்ளனர்.

கோட்டங்களில் விளங்கும் பிரம்மன் பொதுவாக நின்ற நிலையிலேயே அமைக்கப்படுகிறார் என்றாலும் சிலதலங்களில் அவர் இராஜகோலத்தில் சிம்மாசனத் தில் அமர்ந்த நிலையிலும், சிலதலங்களில் யோக நிலையில் வீற்றிருப்பதையும் காண்கிறோம்

இராஜகோலம் என்பது மேற்கரங்களில் கெண்டி ஜெபமாலை இருக்கக் கீழ் வலதுகரம் அபயமுத்திரை தாங்க இடதுகரத்தைத் தொடைமீது வைத்துக்கொண்டு வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடித்து உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பதாகும்.

யோக நிலையில் பிரம்மன் பதுமாசனத்தில் அமர்ந்து முன்இரண்டு கரங்களையும் மடிமீது தியான முத்திரையில் வைத்துள்ளார்.

முதலில்சொன்ன ராஜகோலத்தைத் தக்கோலம் சோமநாதீசுவரர் ஆலயத்திலும் யோகப் பிரம்மனை எரும்பூர் கடம்பவனேசுவரர் ஆலயக் கருவறைக் கோட்டத்திலும், ஆலந்துறை மகாதேவர் கோவில், ஆற்றூர் சோமநாதீசுவரர் கோயில் முதலிய ஆலயங்களின் ஸ்ரீ விமானத்திலும் காணலாம்.

மேலும் சிவபூசனை செய்துகொண்டு அஞ்சலி ஹஸ்தராக விளங்கும் பிரம்மனையும் பல தலங்களில் காண்கிறோம். எடுத்துக்காட்டாக சிதம்பரம் நடராசர் ஆலயத்திலுள்ள நான்கு கோபுரங்களிலும் உள்ள அடித்தளக் கோட்டங்களில் அஞ்சலி ஹஸ்தராக இருக்கும் பிரம்மதேவனைக் காண்கிறோம் அழகிய

ஸ்ரீ ராஜப்பிரம்மன் - தக்கோலம்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

அன்ன வாகனத்தில் வீற்றிருக்கும் இவருடைய மேற் கரங்களில் ஜெபமாலையும், கமண்டலமும் உள்ளன. முன்கரங்களைக் குவித்து அஞ்சலி முத்திரையில் வைத்துள்ளார். அதன் இடையில் ஜபமாலையொன் றையும் காண்கிறோம். (பார்க்க பக்கம் : 824)

கருவறைக் கோட்டம் தவிர கோபுரங்களிலும், விமானங்களிலும் வடக்கு நோக்கிய நிலைகள் ஒவ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மன் - உலாத்திருமேனி

வொன்றிலும் பிரம்மதேவன் அமைக்கப்பட்டுள்ளார். பெரும்பாலும் இவர் தனியாக அமைக்கப்பட்டுள்ளதையே காண்கிறோம். பெரிய ஆலயங்களில் உள்ள சிற்பங்களில் இவருடன் இரண்டு புறமும் வாணி, சரஸ்வதி என்னும் தேவியர் வீற்றிருக்கின்றனர். மேலும் இவரை தண்டாயுதம்,சுருக், சுருவம் (ஓமக்கரண்டிகள்) ஏந்தியவராகவும் நான்கு அல்லது எட்டு கரங்கள் கொண்டவராகவும் பெரிய தாமரை மலரில் வீற்றிருப்பவராகவும், அன்னவாகனத்தில் அமர்ந்திருப்பவராகவும் காண்கிறோம்.

மிக அபூர்வமாகவே, பிரம்மனின் திருவுருவச் சிலைகள் உலாத்திருமேனியாக அமைக்கப்படுகின்றன. கல்யாணசுந்தரர் தொகுப்பில் திருமணவேள்வி செய்பவராகவும், நடராசர் திருமேனியுடன் மத்தளம் வாசிப்பவராகவும் அவரைக் காண்கிறோம்.

பிரம்மன் வழிபட்ட தலங்களான அம்பர், திருப்போரூர் மயிலாப்பூர் முதலிய தலங்களில் பிரம்மனின் உலாத்திருமேனிகள் அமைந்துள்ளன.

ஆகம, சிற்பநூல்கள் பிரம்மதேவன் அபய வரத முத்திரை. தர்ப்பைக்கட்டு நெய்கிண்ணம், ஸுருக், ஸுருவம், விசிரிக மண்டலம் ஆகியவற்றைத் தாங்கியவர் என்று குறிக்கின்றன. அம்சுமத் சுப்ரபேதம், முதலிய ஆகம நூல்களும் ரூப மண்டனம் சில்பரத்தினம் முதலிய சிற்ப நூல்களிலும், ஆதித்யபுராணம், விஷ்ணு புராணம் முதலிய புராணங்களும் பிரம்மனைப் பற்றிய அனேக செய்திகளைக் குறிக்கின்றன.

பிரம்மன் - கோட்டதெய்வம்

பிரம்மதேவனுக்கெனத் தனி ஆலயம் அமைக்கும்போது விசுவகர்மா, ஆதிசேடன் ஆகிய எண்மருடன் அம்சவாகனத்தையும் அமைக்க வேண்டும் என்று சிற்பநூல்கள் கூறுகின்றன.

## நான்முகத் தெய்வங்கள்

நான்முகன் என்றதும் நமக்கு பிரம்மதேவனே நினைவுக்கு வருகின்றார். ஆனால் நான்கு முகமுடைய தெய்வங்கள் பலவற்றை ஆலயங்களில் காண்கிறோம். சிவாலயங்களில் ஆதிசண்டியாக விளங்கும் சண்டீசுவரர் நான்கு முகம் கொண்டவராக விளங்குகின்றார். இதனை திருமீயச்சூர், சிதம்பரம், திருக்கச்சூர் முதலிய தலங்களில் காணலாம்.

சூரியமண்டலத்தில் விளங்கும் சிவபெருமான் நான்குமுகம் கொண்டச் சிவசூரியனாகக் காட்சியளிக்கின்றார். இந்தச் சிவசூரியனைக் காளத்தி, தாராசுரம் சிதம்பரம் முதலிய தலங்களில் காண்கிறோம்.

சூரியமண்டலத்தில் நான்கு முகங்களுடன் வீற்றிருக்கும் முருகன் 'சௌரபேயன்' என்று அழைக்கப்படுகிறார். மேலும் சிவாலயங்களில் பிராம்மஹி, பிரம்மசக்தியம்மன், முதலிய அனேக நான்முகத் தெய்வங்களைக் காண்கிறோம்.

ஸ்ரீ வேத ஞானவல்லி உடனாய பிரம்மபுரீசுவரர் அருளினால் அன்பர்கள் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வைப் பெற்றுவாழப் பிரார்த்திக்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சாத்திரமும், தோத்திரமும் ஆனாய் போற்றி!



# பன்னிரு திருமுறை - அறிமுகம்

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழி தெய்வத்தமிழ் என்ற மேன்மையைப் பெற்றது. சிவபெருமானே "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்" என்ற பெயரில் முதல் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக வீற்றிருந்து தன்னை வளர்த்த பெருமை கொண்டது.

தன்னிகரற்ற தெய்வத் தமிழ்மொழியில் எழுந்த நூல்கள் ஏராளமாகும். இவற்றில் முதன்மைபெற்று காலங்களைக் கடந்து தெய்வீக நிலையில் வாழ்ந்து வருவது தேவாரமும் அதைத் தொடர்ந்தெழுந்த திருமுறை நூல்களுமாகும். தேவாரம் என்ற சொல்லுக்குத் தெய்வத்தின் இருப்பிடம் என்பது பொருள். இதனையொட்டி ஞான சம்பந்தர் தேவாரத்தை தெய்வத் தமிழ், சங்கமலி செந் தமிழ் ஞானத் தமிழ் என்று பலவாறு அழைக்கின்றனர்.

சிவபெருமான் அடியவர் பெருமக்களாகிய அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்னும் மூவரின் உள்ளத்தில் நீங்காதிருந்து தனது கருத்தாகவே இவற்றைப்பாடி அருளினன் என்பர். எனவே இதுவே "ஆகமமும், வேதமும்" ஆகும்.

இவை அனேக அற்புதங்களை விளைவித்த நூல்களாகும். பாலை நிலத்தை நெய்தலாக்கியும், இறந்து போனவர்களை உயிர்ப்பித்தும், நோய்களை நீக்கியும், ஊமைகளைப் பேச வைத்தும் மழையைப் பொழிவித்தும் செய்த அருட்செயல்கள் அளவிலாதன. படைத்தல் காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்ய வல்லவை.

ஆன்றோர்களால் இவை சிவபெருமானாகவே எண்ணிப் போற்றப்படுகின்றன. இவற்றைப் பாராயணம் செய்து வந்தால் வாழ்வில் அனேக சிறப்புக்களை அடைய முடியும் என்பது கண்கண்ட உண்மையாகும்.

ஒருவனுக்கு வாழ்வும், தாழ்வும் அவன் செய்த வினைகளாலேயே வருகின்றன. நல்வினை, தீவினை என்ற இரண்டும் உயிர்களை உலகவாழ்வில் சுழலவைக்கின்றன. வினைகளை வென்று அவற்றை நீக்கிய உயிர்களே உயர்பதவியாகிய மோட்சத்தைப் பெறுகின்றன. வினைகளை வெல்லப் படைக்கலமாக இருப்பது இந்த தெய்வத் திருமுறைகளான தமிழ் மறைகளேயாகும். இவை இகவாழ்வில் இன்பங்களுடன் மேன்மையையும் பரவாழ்வில் மோட்சத்தையும் தருவனவாகும்.

ஒப்பரிய தெய்வத் தமிழ் மறையை விளக்கிப் போற்றுவதாகச் சிவமஞ்சரியின் இந்த இருபத்தேழாவது மலர்மலர்கிறது. தமிழ்மறையை அருளிச்செய்த ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இருபத்தேழு என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருமுறையுள் இடம் பெற்றுள்ள நூல்களைப் பற்றிய சிறு குறிப்புக்களும், இவற்றைப்பாடிய ஆசிரியர்களின் வரலாற்றுச் சுருக்கமும், நூலின் மேன்மைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

மாமறையாகி நின்ற சிவபெருமானும், ஞானவல்லியாகிய உமாதேவியும் அடியவர்களுக்கும் அன்பர்களுக்கும் சகல செல்வயோக மிக்கப் பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன்.- ***சிவசுந்தரி***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# "பதிகப் பெருவழி"

இறைவனை எளிதில் அடைவதற்கு உதவியாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகள் உள்ளன. இவற்றைக் காட்டிலும் எளிய ஐந்தாவ தான ஒரு வழி உள்ளது. இது பதிகப்பெருவழி என்று அழைக்கப்படுகிறது. இது மூவர் அருளிய தமிழ் மறையான தேவாரத்தைப் படிப்பது, பாடுவது, பாடச் சொல்லிக் கேட்பது முதலியனவாகும். இது உலகிலுள்ள அனைத்திலும் மிகச் சிறந்த புண்ணியச் செயல் ஆகும்.

மண்மேல் வந்து பிறந்த மறை முதல்வர்களின் உள்ளத்தில் நீங்காது நின்று சிவபெருமானே இதை அருளிச் செய்துள்ளான். திருஞானசம்பந்தப் பெருமான் இதனை உறுதி செய்து இலம்பையங்கோட்டூர்ப் பதிகத் தில் எனதுரை தனதுரையாகஎன்று அருளிச்செய்துள்ளார்.

தமிழ் வேதமாகிய தேவாரத்தினை மனமகிழ்ச்சி யோடு படிப்பதால் நல்ல இளமையையும் அழகும் பெறுவதுடன் லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை, ஆகியோரு டைய அருளால் செல்வம், அறிவு, வீரம், புகழ் ஆகிய வற்றைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்வார்கள் என்பதைத் திருஞானசம்பந்தர்,

தமிழ் விரகன் ஒருபதும்
மனம் மகிழ்வோடு பயில்பவர் எழில்
மலர்மகள், கலைமகள், ஜெயமகள்
இனமலி புகழ்மகள் இசைதர
இருநிலநிடை இனிது அமர்வரே

என்று அருளியுள்ளார். மேலும்,

பண்ணோடு தேவாரம் பாடும் ஓதுவார்களை ஆதரித்து உள்ளம் உருகும்படியாக பாடும்போது கேட்டு மகிழ்பவர்களை தீவினைகள் அணுகித் துன்பப்படுத் தாது என்றும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையே சேரும் என்றும் உறுதிபடக் கூறுகின்றார். இதனை விளக்கி வலஞ்சுழிப் பதிகத்தில்,

"ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக்
கேட்டு உவந்தார் தம்மை
வாதியாவினை இம்மைக்கும் மறுமைக்கும்
வருத்தம் வந்து அடையாவே"

என்று அருளியுள்ளதைக் காண்கிறோம்.

தனது உள்ளத்திருந்து இறைவன் அருளிய நற்றமிழ் மாலையாகிய தேவாரத்தை மனம் மகிழ்ந்து பொருள் உணர்ந்து நவில்பவர்கள். இந்த உடலில் பற்றியுள்ள பிணிகள் நீங்கி, மனம் அமைதி பெற்று மண்ணில் சிறப்புடன் வாழ்ந்து இறுதியில் மீட்டும் வார முத்தியுலகம் சேருவர். அதற்குள் நான் உறுதி அளிக்கின்றேன் என்பதைக் கழுமலப் பதிகத்தில்,

ஞானசம்பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊன சம்பந்தத்து உறுபிணி நீங்கி
உள்ளமும் ஒரு வழிக் கொண்டு
வானிடை வாழ்வார் மண்மிசைப் பிறவார்
மற்று அதற்கு ஆணையும் நமதே

என்று அருளிச் செய்துள்ளதைக் காண்கிறோம்.

உயிர்க்கு உறுதியைத் தந்து மேநிலை அளிப்பது தேவாரமேயாகும். அதனால் அது நமக்குப் "பரம்" எனப்பட்டது. (பரம்-வழி). இந்த வழியைப் போற்றி உணர்ந்து தேவாரத்தைப் பாடுபவர்கள் தேவர்கள். எதிர் கொள்ளச் சிவலோகம் அடைவார்கள் என்பதை

... ஞானசம்பந்தன் சொல்
நம்பரம் இதுவென நாவினால் நவில்பவர்
உம்பரர் எதிர்கொள்ள உயர்பதி அணைவாரே

என்று பாடியருள்கின்றார். இது சத்திய வாக்கென்பதை சுந்தரமூர்த்திகளின் வரலாறு மெய்ப்பிக்கின்றது. சுந்தரர் ஞானசம்பந்தரின் பாடல்களைப் பாடிப் பரவியவர். அவரைப் போலவே இறைவனிடம் அனைத்தையும் கேட்டுப் பெற்றவர். அவரைப் போலவே பாடி மகிழ்ந் தவர். அவர் இறுதியில் இறைவன் ஆணைப்படி தேவர் கள் எதிர்கொள்ள உயர்பதியாகிய திருக்கயிலாயத்தை அடைந்தார் என்பது எண்ணத்தக்கது. ஆதலின் தேவா ரம் அன்பர்களுக்கு அனைத்தையும் நல்கும் என்பதில் மாற்றமில்லை. இதுவே வாழ்வுக்கோர் வழித்துணை யாகும். இதனைத் திருஞானசம்பந்தர்

"வாழுந்துணையாக நினைவார் வினையிலரே"

என்று அருளிச்செய்துள்ளார்.

வேதம் - எழுதாக்கிளவி (எழுதப்படாமல் செவி வழியாகவே பயின்று வருவது)

திருமுறைகள் - எழுதுமறை (அன்பர்களால் ஏடுகளில் எழுதிவைத்துப் பூசித்து வாசிக்கப்படுவது) இறைவனே தன் கைப்பட எழுதிய திருமுகப்பாசுரமும், திருக்கோவையாரும் திருமுறைகளில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

உ

## தெய்வத்திருநெறித் தமிழ் வேத 12 திருமுறைகளை அருளிச்செய்த மூர்த்திகள்




சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ

சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமுறைகள் அறிமுகம்

சந்தமலி செந்தமிழால் அருளப்பெற்ற திருமுறைகள் பன்னிரெண்டாகத் தொகுக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கைக் குறிப்பில் பன்னிரெண்டு என்பது "ஒளி" எண்ணாகும். இதை ஒட்டியே உலகின் ஒப்பற்ற ஒளியாகிய சூரியன் பன்னிரெண்டு பெயர்களால் குறிக்கப்படுகின்றான். அஞ்ஞான இருளில் சிக்கிக் கொண்டிருக்கும் உயிர்களைக் கரையேற்றும் ஞானச் சூரியனாக இருப்பதால் தமிழ் திருமுறைகளும் பன்னிரெண்டு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டதுபோலும். இறைவனின் ஞான ஒளியை விளக்கும் தலங்களுக்குப் பன்னிரெண்டு பெயர்களை இட்டு அழைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. தேவாரத்துள் திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழிக்குப் பன்னிரெண்டு பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பதும், அத்தலத்தில் பாடப்பட்ட பதிகங்களில் பன்னிரெண்டு பாடல்கள் இடம்பெற்றிருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

பன்னிரெண்டு திருமுறைநூல்களில் முதல் மூன்று திருமுறைகளை அருளியவர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவார். இவர் தமது மூன்றுவயதில் சிவனருளால் உமையவளின் திருமுலைப் பாலை உண்டு, "தோடுடைய செவியன்" என்று பாடத் தொடங்கினர். பதினாறாவது வயது வரை வாழ்ந்த இவர் பல தலங்களுக்குச் சென்று பாடிப்பரவி இறுதியில் ஆச்சாள் புரத்தில் தன் மனைவி மற்றும் சுற்றத்தாருடன் சிவனடிசேர்ந்தார். இவர்பாடிய பதிகம் 16000 என்பர். இவற்றுள் இப்போது கிடைத்துள்ளவை 384 பதிகங்களாகும்.

நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளை அருளிச் செய்தவர், திருநாவுக்கரசு நாயனார் ஆவார். நெடுங்காலம் சமணசமயத்துள் தலைமைச் சமயவாதியாய் திகழ்ந்த இவர் தமது 77வது வயதில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு சைவம் சார்ந்தார். 81-வது வயதில் பேரின்பவீடு பெற்றார். இவர் அருளிச்செய்த பதிகங்கள் 4900 ஆகும். இவர் அருளிய பண்சுமந்த பாடல்கள் யாவும் நான்காம் திருமுறையாகவும், குறுந்தொகை எனும் பாவகையால் அமைந்த பாடல்கள் முழுவதும் ஐந்தாம் திருமுறையாகவும், தாண்டகமெனும் பாவகையால் ஆன பதிகங்கள் ஆறாம் திருமுறை யாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதிகங்கள் யாவும் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.

இவை ஏழையும் முறைப்படுத்தித் தொகுத்தவர் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்ற "நம்பியாண்டார் நம்பிகள்" ஆவார். இவர் அருளிய நூல்கள் பதினோராம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்குப் பண்வகுத்து இசைநெறிப் படுத்தியவர் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வழிவந்த ஒரு பெண்மணியாவர்.

சிவபெருமானால் சிவமாக்கி திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகரால் அருளப் பெற்றவை திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவை எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன.

ஒன்பதாம் திருமுறையுள் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் இடம் பெற்றுள்ளன. இவை திருமாளிகைத் தேவர் கருவூரார் முதலான ஒன்பதின்மர் பாடிய இசைப் பாடல்களின் தொகுப்பாகும்.

பத்தாம் திருமுறையாக விளங்குவது "திருமந்திரம்" ஆகும். ஆகமங்களின் சாரமாக அமைந்த இந்நூலை அருளிச் செய்தவர் திருமூலர் ஆவார். இவர் செம்மைசேர் சிவநெறிச் சித்தராவார்.

பதினோராம் திருமுறை நாற்பத்தியோரு நூல்களின் தொகுப்பாக அமைகின்றது. காரைக்காலம்மையார், நக்கீரர், பரணர் முதலான பதினோரு பேர்களால் பாடப்பட்டது. இதில் விநாயகர், முருகன் ஆகியோரைப் போற்றும் நூல்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், கண்ணப்பர் முதலான அடியவர்களின் பெருமைகளை விளக்கும் நூல்களும் இடம் பெற்றுள்ளன. இறைவன் தன் அடியவரான பாணபத்திரனுக்குப் பொருள் தரவேண்டி சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய கடிதம் (சீட்டுக்கவி) இதில் முதல் நூலாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏழாந்திருமுறையில் இடம்பெற்றுள்ள திருத்தொண்டர் தொகை என்னும் பாசுரம் பதினோராம் திருமுறையில் திருத்தொண்டர் திருவந்தாதியாக விரிவு பெற்றுப் பன்னிரெண்டாம் திருமுறை எனும் தனிநூலாக மலர்ந்துள்ளது. பன்னிரெண்டாம் திருமுறை அடியவர்களின் பெருமையைப் போற்றுவதுடன் இறைவனின் அருள் தன்மையையும் விளக்குகின்றது. இதனை இயற்றியவர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

பன்னிரெண்டு திருமுறைகளிலும் இறைவன் நீங்காது நின்று இதனைப் படிக்கும் அன்பர்களுக்குப் பயனைத் தருகின்றான் என்பது உண்மையாகும். ❖

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருஞானசம்பந்தர் வரலாறு

தெய்வத் தமிழ் சொல் மாலையான திருமுறையுள் முதல் மூன்றை அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவார்.

சோழவளநாட்டிலுள்ள சீர்காழியில் சிவபாத இருதயர்-பகவதி தம்பதியருக்குத் திருவாதிரை நாளில் இவர் அவதரித்தார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் ஆளுடைய பிள்ளையார் என்பதாகும்.

இவர் தனக்கு மூன்று வயதாகும் பொழுதில் ஒரு நாள் தந்தையுடன் சீர்காழியிலுள்ள பிரம்மபுரீசுவரர் கோயிலுக்குச் சென்றார். இவருடைய தந்தையார் அங்கிருந்த பிரம்ம தீர்த்தக் கரையில் இவரை அமர்த்திவிட்டு நீருள் மூழ்கி அகமர்ஷண மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார். நெடுநேரமானதால் தந்தையாரைக் காணாது பிள்ளையார் அழுதார். அழுகை ஒலியைக்கேட்ட சிவபெருமான் உமாதேவியுடன் அவர் முன் தோன்றினார். உமாதேவியார் தம் மார்பில் சுரந்த பாலைப் பொற் கிண்ணத்தில் இவருக்கு ஊட்டினார். இருவரும் இவருக்கு அருள் புரிந்து மறைந்தனர். கரையேறிய தந்தையார் பிள்ளையாரிடம், நீ யார்தந்த பாலை அருந்திக் கொண்டிருக்கின்றாய் என்று கேட்கப் பிள்ளையார் கோயில் விமானத்தைச் சுட்டிக் காட்டித் "தோடுடைய செவியன் என்ற பதிகத்தைப் பாடினர். அந்தப் பதிகம் நிறைவுபெறும்போது மீண்டும் உமாதேவியுடன் சிவ பெருமான் அவருக்குக் காட்சியளித்தார். தந்தையார் நிகழ்ந்ததை அறிந்து மகிழ்ந்தார்.

சில நாட்கள் சென்றன. பிள்ளையாரும் தந்தையாரும் திருக்கோலக்கா சென்றனர். அங்கு சிவாலயத்தில் பிள்ளையார் கையால் தாளமிட்டுப் பாடும்போது கைகள் சிவந்தன. அதைக் கண்ட இறைவன் அவருக்குப் பொற்றாளம் அளித்தார். இறைவி அத்தாளத்திற்கு ஓசை கொடுத்தாள். பின்னர் தன் தாயின் ஊராகிய நனிபள்ளியை அடைந்தார். அந்நாளில் அது வளமற்ற பாலை நிலமாக இருந்தது. அதை வளமான பூமியாக்க நினைந்து பதிகம் பாடினார். அப்பாடல் முடியுமுன்னே அது நெய்தல் நிலமாயிற்று.

இவரைப் பற்றிக் கேள்வியுற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் மனைவியாருடன் வந்து இவரை வணங்கினர். பிள்ளையார் தம்பாடலுக்கு யாழ்மீட்டும் பணியை அவருக்கு அளித்தார். பிள்ளையார் நீலகண்டருடன் பலதலங்களை வணங்கி தில்லையை அடைந்து பெருமானைப் போற்றினர். அங்கு அவருக்கு தில்லை மூவாயிரவரும் சிவகணமாகத் தோன்றினர். பிள்ளை

யாரும் அடியவர்களும் திருமுதுகுன்றம் பெண்ணாடகம் முதலிய தலங்களை வணங்கித் திருவரத்துறையினை அடைந்தனர். அங்கு ஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துக்குடை, முத்துச் சிவிகை, திருச்சின்னம் ஆகியவற்றை அளித்தார். பலதலங்களை வணங்கிய பின் அவர்கள் சீர்காழியை அடைந்தனர்.

ஞானசம்பந்தருக்கு ஏழு வயதாயிற்று. பெற்றோர்கள் அவருக்கு வேதவிதிப்படி உபநயனம் செய்தனர். அந்த வேளையில் அவர் ஐந்தெழுத்தின் பெருமையை அங்கிருந்த மறையவர்களுக்கு உணர்த்தினார். திருஞானசம்பந் தரின் அற்புதங்களைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசர் சீர்காழிக்குவந்து அவரைச்சந்தித்து மகிழ்ந்து பின்னர் விடைபெற்றுக்கொண்டு தனது தல யாத்திரையைத் தொடர்ந்தார்.

சீர்காழியில் தங்கியிருந்த காலத்தில் சம்பந்தர் மொழி மாற்று, மாலைமாற்று, ஏகபாதம் முதலான பல புதிய இலக்கிய வடிவங்களில் பாசுரங்கள் பாடினார்.

பிள்ளையார் தமிழகத் தலங்களை தரிசிக்கும் விருப்பமுடன் தம் அடியார் குழாத்துடன் பலபதிகளை வணங்கி திருப்பாச்சிலாச்சிரமம் என்ற தலத்தினை அடைந்தார். அப்பகுதியை அரசாண்டுவந்த கொல்லி மழவன் மகளைப் பற்றியிருந்த முயலகன் என்னும் நோய் விலகப் பாடினார். பின்னர், அவர்கள் திருச்செங்கோட்டினை அடைந்தனர். அங்கு அடியவர்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பனிநோய் தாக்கியது. பிள்ளையார் அவ்வினைக்கிவ் வினை என்ற பதிகம்பாடி அந்த நோயை அகற்றினார். பிறகு அவர்கள் பட்டீச்சரம் வந்தனர். கோடைக்காலமாக இருந்ததால் இறைவன் பிள்ளையாருக்கும் அடியார் குழாத்திற்கும் பெரிய முத்துப் பந்தலை அளித்தான். அங்கு வழிபட்ட பின் அவர்கள் திருவாவடுதுறையை அடைந்தார். அங்கு பிள்ளையாரின் தந்தையாரான சிவபாத இருதயர் தம் குலமரபுப்படி வேள்வி செய்ய பொருள் வேண்டுமென்றார். பிள்ளையார் இறைவனை நோக்கி இடரினும் தளரினும் என்ற பதிகம் பாட இறைவன் ஒரு பொற்கிழியை பலிபீடத்தின் மீது வைத்து எடுத்துக் கொள்ளும்படிக் கூறினான். சம்பந்தர் அதையெடுத்து தந்தையிடம் அளித்து, சீர்காழிக்குச் சென்று விதிப்படி வேள்வி செய்க என்றார். திருவா வடுதுறையை வழிபட்டபின் பல தலங்களை வணங்கிய பின் அடியவர் குழாத்துடன் தருமபுரத்தை அடைந்தனர். யாழில் இசைக்க இயலாத யாழ்முரி என்னும் பதிகத்தை திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளின்படிப் பாடினார்.

திருநள்ளாறு சென்று பணிந்து திருநீலநக்கர் பணி செய்யும் சாத்தமங்கை சென்று வழிபட்டு அங்கு தங்கியி ருந்தார். தொடர்ந்து அருகிலுள்ள திருச்செங்காட்டங் குடிக்குச் சென்று சிவபெருமானையும் அங்கு பணி செய்து வந்து சிறுத்தொண்டரையும் போற்றினர். பிறகு திருமருகலை அடைந்து தங்கியிருந்தார். அங்கு வந்த ஒருத்தி தனது மாமன் பாம்பு கடித்து இறந்துபோக அழுது கொண்டிருந்தாள். பதிகம்பாடி இறந்தவனை உயிர்ப்பித்து அப்பெண்ணை அவனுக்கு மணம் முடித்து வைத்தார். அருகிலுள்ள திருப்புகலூர் சென்று பெருமானைப் பாடிப்பரவி முருக நாயனாரின் திருமடத்தில் தங்கியிருந்தார்.

திருநாவுக்கரசர் திருவாரூரை வழிபட்டபின். திருப்புகலூர் வந்து சம்பந்தரைச் சந்தித்தார். அவருக்கு திருவாரூர் விழாவின் சிறப்புக்களைக் கூற சம்பந்தர் அதைக் காணும் விருப்புடன் திருவாரூர் சென்றார். ஆரூர்ப் பெருமானைப் பாடியபின் திருப்புகலூர் திரும்பினார்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் இணைந்து அம்பர், அம்பர்மாகாளம் முதலிய பதிகளை வணங்கி திருவீழிமிழலையை அடைந்தனர். அந்நாளில் மழையின்றிப் பஞ்சமாக இருந்ததால் இறைவன் இரு வருக்கும் பொற்காசுகளை அளித்து அடியவர்களுக்கு உணவிடுமாறு செய்தார். சம்பந்தருக்கு அளிக்கப்பட்ட காசுக்கு வாசி அளிக்க வேண்டியிருந்தது. எனவே, வாசி தீரவே காசு நல்குவீர் என்று பாடி நல்லகாசு பெற் றார். சில நாட்களுக்குப் பிறகு தமது அடியவர் கூட்டத் துடன் அவர்கள் திருமறைக்காட்டை அடைந்தனர். அங்கு வேதங்கள் பூசித்து அடைத்திருந்த கதவை திருநாவுக்கரசர் திறக்கப் பாடினார். வழிபட்டபின் மீண்டும் மூடும்படி சம்பந்தர் பாடினார்.

அந்நாளில் பாண்டியநாட்டில் சமண சமயத்தின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. பாண்டிய மன்னனும் மக்களும் சமண சமயத்தைக் கடைப்பிடித்தொழுகினர். சைவம் குறைவுபட்டிருந்தது. சிறந்த சிவபக்தையான பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்த ரின் பெருமைகளைக் கேள்வியுற்றுச் சில தூதுவர்களை அனுப்பி பாண்டிய நாட்டுக்கு வந்து சைவத்தை மேன் மையுறும்படிச் செய்ய வேண்டினார். தூதுவர்கள் திரு மறைக் காட்டில் ஞானசம்பந்தரை தரிசித்து பாண்டிமா தேவியின் வேண்டுகோளைக் கூறினர். அதைக் கேட்டு மகிழ்ந்த சம்பந்தர் மதுரைக்குப் பயணமானார். அவ் வேளையில் அப்பர் சுவாமிகள் சமணர்களின் செல் வாக்கு அதிகம். மேலும், நாளும் கோளும் நன்றாக இல்லை என்றார். சம்பந்தர் "வேயுறு தோளிபங்கன்" எனும் பாசுரத்தை அருளிச் செய்து நாளும் கோளும் பிறவும் அடியவர்களுக்கு எப்போதும் நன்மையே செய்யும் என்று கூறிப் பயணத்தை மேற்கொண்டார். திருநாவுக்கரசர் விடைபெற்றுக் கொண்டு திருவாய்மூர் நோக்கிப் பயணமானார்.

திருஞானசம்பந்தர் பலபதிகளை வணங்கிபின் மதுரையை அடைந்தார். அங்கு மந்திரி குலச்சிறையார் அவரை வரவேற்று ஒரு மடத்தில் தங்க வைத்தார். ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியையும், குலச்சிறையா ரையும் புகழ்ந்து ஆலவாய் அண்ணலைப் பாடினார். இவருடைய வரவைத் தெரிந்து கொண்ட சமணர்கள் இவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர்.

சம்பந்தர் அந்தத் 'தீ' பாண்டியனைப் பற்றும்படி செய்ய அது அவனுடலில் வெப்பு நோயாகப்பற்றி அவனை வருத்தியது. துன்புற்ற அவனைக் குணப் படுத்த சமணர் பலவாறு முயன்றும் தணியாது அது மேலும் வளர்ந்தது.

பாண்டிமாதேவி ஞானசம்பந்தரின் பெருமை களைக் கூறி அவரை நோய்தீர்க்க அழைப்போம் என்றாள். மன்னனும் அப்படியே ஆகட்டும் என்றான். அரசியின் அழைப்பை ஏற்ற ஞானசம்பந்தர் மதுரை சோமசுந்தரக் கடவுளின் அருளுடன் அரண்மனைக்குச் சென்று, திருநீற்றுப் பதிகம்பாடி மன்னனின் வெப்பு நோயை நீக்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுரையில் சமணர்களுக்கும், சம்பந்தருக்கும் பல வாதங்கள் நிகழ்ந்தன. அனல், வாதம் புனல் வாதம் முதலிய பலவாதங்களில் சமணர்களைச் சம்பந்தர் வென்றார். சமணர்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு கழுவேறி உயிர் நீத்தனர். சம்பந்தரின் அடியவனாகிப், பாண்டியன் சைவம் தழுவினான். சம்பந்தர் அவன் உடலிலிருந்த கூனை நிமிர்த்தி அவனை நின்ற சீர் நெடுமாறனாக்கினார். பாண்டிய நாட்டில் சைவம் புதிய வேகத்துடன் எழுந்தது. அவர் பாண்டிய மன்னன், பாண்டிமாதேவி, குலச்சிறையார் மற்றும் அடியவர்களுடன் யாத்திரையைத் தொடர்ந்தார்.

பாண்டியநாட்டுப் பதிகளை வணங்கி இராமேசுவரம் சென்று வழிபட்டார். அங்கிருந்தே ஈழ நாட்டுத் தலங்களைப் பாடினார். அங்கே பாண்டியன், அரசி மந்திரி முதலியோரிடம் விடைபெற்றுக் கொண்டார்.

பிள்ளையார் திருக்கொள்ளம்புதூரை தரிசிக்கச் சென்றார். அங்கு முள்ளியாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியதால் ஓடத்தைச் செலுத்துவாரில்லை. அவர் ஓடத்தில் அடியவர்களை ஏற்றி கொட்டமே கமழும் என்ற பாசுரம்பாட ஓடம் தானாகவே கொள்ளம் புதூரை அடைந்தது. அங்கு வணங்கியபின் பலபதிகளைக் கடந்து போதி மங்கை என்னும் தலத்தினை அடைந்தனர். அங்கு புத்த நந்தி என்பானுக்கும், சம்பந்தருக்கும் பெருத்த வாதம் ஏற்பட்டது. சம்பந்தரின் அடியவர் ஒருவர் "புத்தர் சமணர்" என்ற பாடலைப்பாட அவன் தலையில் இடிவிழுந்தது. அங்கிருந்த சாரிபுத்தனையும் திருஞானசம்பந்தர் வாதில் வென்றார்.

பின்னர் திருக்கடவூருக்கு வந்து பெருமானை வணங்கி அப்பரடிகள் பூந்துருத்தியில் இருப்பதையறிந்து அங்கு சென்றார். இருவரும் சேர்ந்து பலதலங்களை வணங்கினர். அப்பர் விடைபெற்றுக் கொண்டு பாண்டிய நாட்டுக்குப் பயணமானார். சம்பந்தர் தாம் அவதரித்த சீர்காழிக்குத் திரும்பினார்.

சிலநாட்களுக்குப் பிறகு தொண்டை நாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். சிதம்பரம் மாணிக்குழி, வடுகூர் முதலான தலங்களை வணங்கி திருவதிகையைப் பணிந்தார். தொடர்ந்து திருவண்ணாமலை சென்று வணங்கியபின் திருவோத்தூரை அடைந்தார். அங்கு சிவநிவேதனத்திற்கு அடியவர் ஒருவர் வளர்த்த பனை மரங்கள் ஆணாக இருக்கக் கண்டு பாசுரம்பாடி பெண் பனைகளாக்கி காய்க்கும்படி செய்தார். காஞ்சீபுரம் வழியே காளத்தி சென்றார். அங்கிருந்தவாறே வட நாட்டுப் பதிகளைப் பாடினார்.

திருவாலங்காடு முதலான தலங்களை வணங்கி திருஒற்றியூர் பணிந்து மயிலாப்பூருக்கு வந்தார். மயிலாப்பூரில் சிவநேசஞ் செட்டியார் என்பவரின் மகள் பாம்பு தீண்டி இறந்தாள். அவளுடைய எலும்புகளையும் சாம்பலையும் செட்டியார் ஒரு குடத்தில் இட்டு வைத்திருந்தார். அவர் ஞானசம்பந்தரை வணங்கி வரவேற்றார். சம்பந்தர் அந்தப் பெண்ணின் சாம்பல் நிரம்பிய குடத்தை எடுத்து வரச் செய்து "மட்டிட்ட புன்னை" எனும் பாசுரத்தை அருள அப்பெண் அழகிய உடல் பெற்று எழுந்தார்.

பிள்ளையார் பல தலங்களை வணங்கி அச்சிறுபாக்கத்தை அணைந்தார். அங்கு "கைச்சிறு மறியவன் கழலலால் பேணாக் கருத்துடை ஞான சம்பந்தன்" என்று தம்முடைய சிவபக்தியின் உறுதியைக் கூறினார். பின்னர் பல பதிகளைப் போற்றியபின் சீர்காழியை அடைந்தார். அவருக்கு வயது பதினாறு தொடங்கியது.

இவருடைய பெற்றோர்களும் சுற்றத்தினரும் இவருக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்தனர். சீர்காழிக்கு அருகிலுள்ள நல்லூர் (ஆச்சாள்புரம்) தலத்திலிருந்த நம்பாண்டார் நம்பி என்பவரின் திருமகளை மணம்பேசி முடித்தனர். திருமணம் நன்கு நடந்தது. சம்பந்தர் அவளுடன் அந்தமில் சிவன் தாள் சேர எண்ணினார். அங்குள்ள பெருமணம் கோயிலுள் சென்று பெருமானை வழிபட்டார். சிவபெருமான் சோதியாகக் கருவறையில் தோன்ற திருஞானசம்பந்தரும் அவர் மனைவியும் திருமணத்திற்கு வந்த அடியவர்களும் அந்த சோதியுள் புகுந்தனர். அவ்வொளி லிங்கத்துள் ஒடுங்கிற்று. அவர்கள் சிவசோதியில் கலந்த நாள் வைகாசி மாதம் மூலத்திருநாளாகும்.

## தேவாரப் பாடல் தொகை

திருஞானசம்பந்தர் "தோடுடைய செவியன்" என்று தொடங்கி "கல்லூர்ப் பெருமணம்" என்பது ஈறாகப் பாடிய பதிகங்கள் 1600 ஆகும். இதில் இப்போதுள்ளது 385 பதிகங்களே ஆகும். இவற்றில் ஏறத்தாழ 4215 பாடல்கள் உள்ளன.

திருநாவுக்கரசர் "கூற்றாயினவாறு" எனத் தொடங்கி "பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்பது ஈறாகப்பாடிய பதிகங்கள் 4900 அதில் இடம் பெற்ற பாசுரங்கள் 49000 ஆகும். இப்போது கிடைத்திருப்பது 310 பதிகங்கள் மட்டுமே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பித்தாபிறை சூடி" எனத் தொடங்கி தானெனை முன்படைத்தான் என்பது வரையாகப் பாடிய பதிகங்கள் 3800 ஆகும். இதில் இப்போது அச்சாகியுள்ளது 100 மட்டுமேயாகும். மூவரும் அருளிச்செய்த பதிகங்கள் 10300 எனவும், அவற்றிலுள்ள பாடல் தொகை 10,3000 ஆகும். காலவெள்ளத்தால் போனதுபோக, இப்பொழுது அச்சாகியுள்ளவை 796 திருப்பதிகங்களாகும். இவற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களின் தொகை 8250 ஆகும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## முதல்திருமுறை

திருஞானசம்பந்தப் பெருமான், உமையவள் ஊட்டிய சிவஞானம் குழைத்த ஞானப்பாலை உண்டபின்பு அருளிய 'தோடுடைய செவியன்' என்ற திருப்பதிகத்துடன் இந்தத் திருமுறை தொடங்குகிறது.

யாழில் வாசிக்க முடியாத பாடல்கள் யாழ்முரி எனப்படும். இது யாரும்பாடாத அமைப்பாகும். இந்த முரி அமைப்பில் திருஞானசம்பந்தர் திருத்தரும புரத்தில் நீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளின் படி பாடிய 'மாதர் மடப்பிடி' எனத்தொடங்கும் பாடல் இந்தத் திருமுறையின் இறுதிப்பதிகமாக உள்ளது.

ஆளுடைய பிள்ளையார் ஞானப்பால் அருந்தி நின்றபோது, தந்தை, பால் கொடுத்தது யார் என்று கேட்க அவரை நோக்கி அருளியதும் (தோடுடைய செவியின்); கொல்லி மழவன் மகளைப் பற்றியிருந்த முயலகன் எனும் நோய் நீங்கவும் (அவ்வினைக் கிவ்வினையாம்); அனல் வாதத்தில் சமணர்களை வெல்லப் பயன்படுத்தியதும் (போகமார்த்த பூண் முலையாள்); திருஒத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கவும் (பூர்த்தேன் தாயன); திருவீழிமிழலையில் பெற்ற பொற்காசின் வாசிதீரப் பாடியதும் (வாசிதீரவே); ஆன அருள் அற்புதப் பதிகங்கள் இந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

இதில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் 136 ஆகும். இதிலுள்ள பாடல்தொகை 1469 ஆகும். 7 வகையான பண்களில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

## இரண்டாம் திருமுறை

இந்தத் திருமுறையில் திருஞானசம்பந்தர் இந்தளம், சீகாமரம் முதலான ஆறுபண்களில் அருளிச் செய்த நூற்றியிருபத்தியிரண்டு திருப்பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. "செந்நெலங்கழனி" எனத்தொடங்கும் பதிகம் இந்தத் திருமுறையின் முதல் பதிகமாக அமைகிறது. சீர்காழியின் மற்றொரு பெயரான "திருப்புகலி" என்பதை முன்னிருத்திப் பாடிய விடைய தேறி எனத் தொடங்கும் பதிகம் இறுதிப் பதிகமாக அமைந்துள்ளது.

நனிபள்ளியில் பாலையை நெய்தலாக்கப் பாடியதும் (காரைகள் கூகை முல்லை); திருநெல்வாயிலில் இறைவனிடம் முத்துச் சிவிகை குடை திருச்சின்னம் பெற்ற பின்னும் (எந்தையீசன்); திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பிக்கவும் (சடையாய் எனுமால்); திருமறைக்காட்டில் திருக்கதவை மூடவும் (சதுரம் மறைதான்); சமணர்களை வெல்ல மதுரைக்குப் புறப்பட்ட போது நாளும் கோளும் நன்றாக இல்லை என்று திருநாவுக்கரசர் கூறியதற்குப் பதிலாகக் கூறியதும் (வேயுறு தோளிபங்கன்); மதுரையில் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கப்பாடியதும் (மந்திரமாவது நீறு) திருமயிலாப்பூரில் எலும்பைப் பூம்பாவையாக ஆக்கப்பாடியதும் (மட்டிட்ட புன்னை); ஆகிய அருட்பதிகங்கள் இந்தத் திருமுறையுள் இடம்பெற்றுள்ளனவாகும்.

இதில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் 122 ஆகும். இதிலுள்ள பாடல்தொகை 1331 ஆகும். 6 வகையான பண்களில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

## மூன்றாம் திருமுறை

இந்த மூன்றாம் திருமுறையுள் ஆளுடைய பிள்ளையார் காந்தாரம், பஞ்சமம், கொல்லி கொல்லிக் கௌவாணம், கௌசிகம் முதலிய ஒன்பது பண்களில் அருளிய பதிகங்கள் இடம் பெற்றுள்ளன.

பிள்ளையார் தில்லையில் அருளிச்செய்த 'ஆடினாய் நறு நெய்யொடு' என்று தொடங்கும் பதிகம் இத்திருமுறையின் முதற்பாடலாக அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் திருமணம் செய்து கொண்டு எல்லோரையும் சிவலோகத்திற்கு அழைத்துச் செல்லப் பாடிய "கல்லூர்ப் பெருமணம் வேண்டாக் கழுமலம்" என்ற பதிகம் இறுதிப் பாடலாக அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தருக்கு உபநயனம் நடந்தபோது அவர் அங்கு குழுமியிருந்த வேதியர்களுக்கு ஐந்தெழுத்தின் மந்திர வன்மையை உபதேசித்தும் (துஞ்சலும்); தந்தையின் வேள்விக்குப் பொருள் வேண்டி ஆவடுதுறை அரனிடம் வேண்டியும் (இடரினும் தளரினும்); மதுரையில் தாம் தங்கியிருந்த மடத்திற்குத் தீவைத்த போது அந்தத் தீ பாண்டிய மன்னனைப் பற்றும்படிக் கூறியும் (செய்யனே); சமணருடன் வாது செய்யத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைப்பட்டபோது ஆலவாய் அண்ணலின் அருள் வேண்டிப்பாடியதும் (காட்டுமாவது வேதவேள்வியை); சமணரோடு அனல் வாதம் செய்தபோது தீயிலிட்டதும் (போகமார்த்த பூண்முலையாள்); புனல் வாதத்தில் ஏடு ஆற்று வெள்ளத்தை எதிர்த்துச்செல்லப் பாடியதும் (வாழ்க அந்தணர்); திருக்கொள்ளம் பூதூரில் ஓடத்தைச் செலுத்தவும் (கொட்டமே கமழும்); திருமணம் நிறைவுற்றபின் எல்லோரையும் முத்தியின்பச் சோதியுள் செலுத்தப் பாடியதும் (காதலாகிக்கசிந்து); ஆகிய பதிகங்கள் இந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ள அற்புதப் பதிகங்களாகும்.

இதில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் 125 ஆகும். இதிலுள்ள பாடல்தொகை 1358 ஆகும். 7 வகையான பண்களில் இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

## திருஞானசம்பந்தர் தேவாரம் - சிந்தனைத் துளிகள்

❖ திருஞானசம்பந்தர் அருளியவற்றில் இப்போது கிடைத்துள்ளவை 383 திருப்பதிகங்களாகும். அண்மையில் திருவிடைவாசல் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டில் கிடைத்த பதிகத்தையும் சேர்த்து 384 ஆனது. இதிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 4158 ஆகும். இவை 22 பண்களில் அமைந்துள்ளன.

❖ திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களில் ஒவ்வொரு பதிகத்திலும் பதினொரு பாடல்கள் உள்ளன. முதல் 10 பாடல்கள் தலத்தையும் இறைவனையும் அவனது இயல்புகளையும் அருளாற்றலையும் போற்றுகின்றன. பதினோராவது பாடலில் பதிகத்தைப் படிப்பதால் உண்டாகும் பயனையும் பாடிய தன்னைப் பற்றியும் திருஞானசம்பந்தர் குறிக்கின்றார். இந்தப் பதிகங்களிலுள்ள ஒவ்வொரு எட்டாவது பாடலிலும் இராவணன் கயிலையைப் பெயர்க்க இறைவன் அவனை அடர்த்து அருள்செய்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. ஒன்பதாம் பாடலில் சிவபெருமான் அயனும், அரியும் தேடி அறியமுடியாத ஒண்சுடராகி நிற்பதுவும்; பத்தாம் பாடலில், சமணர் பௌத்தர்களின் இயல்பும் அவர்களின் இயற்கைக்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களான நீராடாமை, பல்விளக்காமை, நின்று உண்ணுதல், சுடுபாறையில் கிடத்தல் முதலான கொள்கைகளைச் சாடி அவர்களையும் அவர்தம் கொள்கைகளையும் விலக்க வேண்டுமென்றும் குறிக்கப்படுகின்றன.

பதினோராம் பாடல்களில் திருஞானசம்பந்தர் சிவபிரானது ஒப்பற்ற தன்மையையும், தமிழின் மேன்மையையும் தன் குலப் பெருமையையும் தனது பாடல்களைப் பாராயணம் செய்வதால் உண்டாகும் மேன்மைகளையும் பயன்களையும் குறிக்கின்றார். இந்தப் பதினோராம் பாடல்கள் "திருக்கடைக்காப்பு" என வழங்கப்படும். இதையொட்டித் திருஞானசம்பந்தர் பாடி அருளிய பதிகங்களுக்கு "திருக்கடைக்காப்பு" என்பது சிறப்புப் பெயராயிற்று.

❖ பொதுவாகத் திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களில் பதினோரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. என்றாலும், சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களையும் குறித்துச் சிறப்பித்துப் பாடிய பதிகங்களில் பன்னிரண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

❖ திருஞானசம்பந்தர் சைவத்தின் மேன்மையை மதுரையில் நிலைநாட்டத் தன்னை அழைத்த பாண்டிமா தேவி மங்கையர்க்கரசியாரையும், மந்திரி குலச் சிறையாரையும் சிறப்பித்துத் தனது ஆலவாய்ப் பதிகத்தில் போற்றியுள்ளார். இவ்வாறே சிறுத்தொண்டர், கணம்புல்லர், நீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய நாயன்மார்களையும் போற்றியுள்ளார்.

❖ திருஞானசம்பந்தர், தமது பதிகங்களைப் பாடுவதால் முந்தை வினைகள் கெடும். அன்பர்கள் வானில் அரசாள்வார். மண்ணிடை மீண்டும் பிறக்கமாட்டார்கள். செல்வம் பெருகச் சிறப்புடன் வாழ்வார்கள் என்ற உறுதி மொழிகளைத் தந்து "இது நமது ஆணை" என்றார். பலதலப் பாடல்களில் இவ்வாறு ஆணையிட்டு மொழிந்து பாடியுள்ளதால் இவரை அன்பர்கள் "ஆணை நமதென்ற பெருமான்" என்று சிறப்பித்துள்ளனர்.

❖ திருஞானசம்பந்தர் சமணர்களையும், பௌத்தர்களையும் வாதில்வென்று மேன்மை கொள் சைவத்தை நிலைநாட்டினார். அவர் அருளிய செந்தமிழ்ப் பதிகங்கள் இதற்குத் துணைநின்ற சிவனருளைப் பறைசாற்றி நிற்கின்றன. இதனைபொட்டித் திருஞானசம்பந்தர் "வாதுசெய் வாரண நம்பி" என்று அழைக்கப்படுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருஞானசம்பந்தரின் விருந்தாய சொல்மாலை

திருஞானசம்பந்தப்பெருமான் தமிழில் பல புதிய இலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்தார். இவற்றை இலக்கண நூலார் மிறைக் கவிகள், சித்திரக் கவிகள் விருந்து, வனப்பு என்று பலவாறு அழைக்கின்றனர். திருஞான சம்பந்தர் இதனை "விருந்தாய சொல்மாலை" என்று தமது பதிகத்தில் குறித்துள்ளார். அவற்றின் சிறப்புக்களை இங்கே காணலாம்.

### திருஎழுகூற்றிருக்கை

இந்தப் பாடல் அமைப்பு திருஞானசம்பந்தரால் முதன் முதலாகப் பாடப்பட்டதாகும். இதனைத் தேர்ப் பந்தம் எனவும் அழைப்பர். இது இயற்றுவதற்குக் கடின மானதாகும். 47 அடிகளால் ஆன இதனைத்தினமும் ஓதினால் ஞானசம்பந்தர் அருளிய அனைத்தையும் ஓதிய பலனைத் தருவதாகும். ஞானசம்பந்தரை அடியொற்றி அருணகிரிநாதர், வண்ணச்சரபம், தண்ட பாணி சுவாமி கள் முதலிய மிகச்சிலரே எழுகூற்றிருக் கையைப் பாடி யுள்ளனர்.

### ஏகபாதம்

ஒரு பாடலின் முதல் அடியிலுள்ள சொற்களே பின்வரும் மூன்று அடிகளிலும் வரிசைமாறாமல் வருவதே ஏகபாதம் எனப்படும். சொற்கள் ஒன்றாக இருந்தாலும் அடிகள் தோறும் பொருள் மாறிவரும் தன்மை உடையது.

### யாழ்முரி

திருஞானசம்பந்தரிடம் திருநீலகண்ட யாழ்ப் பாணர் யாழில் அடங்காமல் இருக்கும்படியான இசைப் பாடலை அருளும்படிக் கேட்க அவர் பாடியதே யாழ் முரியாகும். இது தருமபுரத்தில் அருளியதாகும். இதை யொட்டி இங்குள்ள சிவபெருமான் யாழ்முரிநாதர் என்று அழைக்கப்படுகின்றார்.

### மொழிமாற்று

இந்தப் பாடல்களில் உள்ள சொற்களை இடம் மாற்றிக் கொண்டு கூட்டினால்தான் பொருள்தரும். மொழி களை மாற்றி பொருள் காண்பதால் இது மொழி மாற்று எனப்பட்டது. இதில் தமது பாடலை ஞானசம்பந்தர் ஞானத்தமிழ் என்று குறித்துள்ளார்.

### மாலைமாற்று

ஒரு பாடலை முதலிலிருந்து படித்தாலும், இறுதியி லிருந்து தலைகீழாகப் படித்தாலும் ஒரே மாதிரியாக இருப்பதே மாலைமாற்று ஆகும்.

### வழிமொழி திருவிராகம்

இது ஒரு பாடலின் அடி முதற்சீரின் இரண்டாம் எழுத்துப் பின்வரும் சீர்களில் ஒன்றி வழியெதுகையாய் வருவது மேலும், சீர்காழிக்குரிய பன்னிரெண்டு பெயர்கள் வந்த வழியைக் கூறுவது என்பதும் ஆகும். இதனை சம்பந்தர் "வழிமொழிகள்" என்று குறித்துள்ளார்.

### இருக்குக் குறள்

இருக்கு வேதத்தினைப்போன்று இருசீர் கொண்ட குறளடி நான்கினால் பாடப்பட்டதாதலின் இப்பெயர் பெற்றது.

### ஈரடிமேல்வைப்பு

ஈரடிச் செய்யுள்களின் மேலும் இரண்டு அடிகளை ஈரடியாக வைத்துப் பாடப்பட்டதால் இப்பெயர் பெற்றது. முன் இரண்டடி ஒரு எதுகை சந்தமாகவும், அடுத்த இரண்டடிகள் வேறு எதுகை சந்தமாகவும் அமைவதாகும்.

### நாலடிமேல்வைப்பு

நாலடிச் செய்யுள்மீது மீண்டும் இரண்டு அடிகள் வரும்படிப் பாடியது இதுவாகும்.

### சக்கரமாற்று

இதில் சொற்கள் திரும்பத்திரும்ப வந்து சக்கரம் போல் அமைவது இது சீர்காழியின் பன்னிரண்டு பெயர்க ளும் ஒரு வட்டம் போல் திரும்பத் திரும்ப வரும்படி யாகப் பாடப்பட்டுள்ளது.

### கோமூத்திரி

ஒரு செய்யுளின் இரண்டு அடிகளில் வரிகளின் எழுத்துக்களை மேலும் கீழுமாக ஒன்றிடை விட்டுப் படித்தாலும் அதே பாடல் வரும்படிப் பாடுவதாகும். பசுவின் மூத்திரம் படிந்த ரேகை போல் இருப்பதால் இப்பெயர் பெற்றது.

### கூடற்சதுக்கம்

நான்கு தலங்களின் இறைவனை ஒன்றாகப் போற்றுவது. மயேந்திரபள்ளி, ஆரூர், கயிலை, ஆனைக்கா ஆகிய நான்கு தலங்கள் இதில் போற்றப் பட்டுள்ளன.

### பூட்டுவிற்பொருள் கோள்

இதில் பாடலின் இறுதி அடியை மேலடிகளில் பூட்டிப் பொருள் கொள்வதால் இப்பெயர் பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அப்பரடிகள் வரலாறு




நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறை களை அருளிச்செய்தவர் அப்பரடிகள் ஆவார். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார் - மாதினியார் தம்பதியருக்கு இளைய மகனாக அவதரித் தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பதாகும். இவருடைய இளம் வயதிலேயே தாய் தந்தையர் இயற்கை எய்தினர். தமக்கை திலகவதியா ருக்கு மணம் பேசினார். திருமணம் ஆகுமுன்பே மண மகன் இறந்ததால் தானும் உயிர்துறக்க எண்ணினார். பின்னர் தம்பிக்காகத் தனது முடிவை மாற்றிக் கொண்டு கன்னியாகவே வாழ்ந்தார். மருள்நீக்கியார் வளர்ந்த பெரியவனான பின்னர் சமண முனிவர்களின் கருத்துக் களால் கவரப்பட்டு அம்மதம் சார்ந்தார். அங்கு சமய நெறியில் உயர்நிலை அடைந்து "தருமசேனர்" என்ற புதிய பெயர் சூட்டப்பட்டார். இவர் சமணம் சார்ந்ததை அறிந்த திலகவதியார் மனம் வருந்தினார். திருவதி கைக்குச் சென்று ஆலயப் பணிகள் செய்துகொண்டு வாழத் தொடங்கினார்.

திலகவதியார் திருவதிகைப் பெருமானை வணங்கித் தம்பியை ஆட்கொள்ளவேண்டுமென்று வேண்டினார். இறைவன் தருமசேனரைச் சூலைநோய் பற்றும்படிச் செய்தார். நோயால் கடுந்துன்பம் எய்திய தருமசேனரை குணப்படுத்தச் சமணர்கள் அனேக முயற்சி எடுத்தும், அவை யாவும் தோற்றன. சமணர்கள் தமது முயற்சிகள் பலிக்காததால் கைவிடவே தரும சேனர் தன் தமக்கையைக் காண விரும்பி அதிகாலை வேளையில் திருவதிகை சென்றார். திலகவதியார் திரு நீறு அளித்து சிவபெருமானை வணங்கினால் நோய் தீருமென்றார். அப்போது அவருக்குள் திருப்பதிகம் பாடவேண்டு மென்ற மெய்யுணர்வு தோன்றியது. "கூற்றாயினவாறு" எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அது முடியுமுன்பே அவருடைய நோய் அகன்றது. அவர் சைவ சமயம் சார்ந்தார். இறைவனால் நாவுக்கரசர் என்று பெயர் சூட்டப்பட்டார்.

திருநாவுக்கரசர் சைவ சமயம் சேர்ந்ததை அறிந்த சமண சமயத் தலைவர்கள் கோபம் கொண்டனர். பல்லவ மன்னனிடம் கோள் சொல்லி அவரைத் தண்டிக் கும்படித் தூண்டினர். அரசன் அடிகளாரை அழைத்து வரும்படிக் கூறினான். அமைச்சரும் சேனைகளும் புறப்பட்டு திருவதிகையை அடைந்து அடிகளாரிடம் அரசன் ஆணையைக் கூறினர். அடிகள் முதலில் அரசனைச் சென்று சந்திக்க மறுத்தாலும் பின் ஒப்புக் கொண்டு சென்று சந்தித்தார். அப்போது அரசன் சமணர்களிடம் இவருக்குரிய தண்டனைகளை நீங்களே அளியுங்கள் என்றான். அவர்கள் அடிகளாரைச் சுண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ணாம்புக் காளவாயில் இட்டுத் தீமூட்டினர். ஏழு நாட்க ளுக்குப் பிறகு திறந்தபோது அடிகளார் குளிர்ந்த சோலையில் இருப்பது போல் இருந்தார். பால் சோற்றில் விஷத்தைக் கலந்து அளித்தனர். அதனாலும் அடிகளா ருக்குத் துன்பம் உண்டாகவில்லை. கோபமடைந்த சமணர் யானையின் காலால் மிதித்துக் கொல்ல ஏற்பாடு செய்தனர். அவரைக் கொல்ல வந்த யானை அவரை வணங்கி ஓடிவிட்டது. எல்லா முயற்சிகளிலும் தோற்ற அவர்கள் அடிகளாரைப் பெரிய கல்லில் சங்கிலிகளால் கட்டிக் கடலில் எறிந்தனர். கடலரசன் கல்லைத் தெப்ப மாக்கி அவரைக் கரை சேர்த்தான்.

திருப்பாதிரிப்புலியூரில் கரையேறிய அடியார் அங்கு பெருமானைப் பாடிப்பரவினார். பிறகு பலதலங் களை வணங்கித் திருப்பெண்ணாகடம் சேர்ந்தார். அங்கு இவருடைய வேண்டுகோளின் பேரில் சிவபெருமான் இவருடைய தோள்களில் சூலக்குறியும், இடபக்குறியும் பொறித்தான். அங்கிருந்து தில்லைக்குச் சென்று சிவனை தரிசித்தார். பலதலங்களை வணங்கியபின் சீர்காழிக்குச் சென்று திருஞான சம்பந்தரைக் கண்டு மகிழ்ந்தார்.

அங்கிருந்து பலதலங்களை வணங்கியபின் நல்லூ ருக்குச் சென்று வழிபட்டார். அங்கு இறைவன் அவ ருக்கு தனது திருவடி சூட்டினான். சுற்றியுள்ள தலங் களை வணங்கிப் போற்றி திங்களூர் சென்றார். அங்கு தம்பெயரால் பல தருமங்களுடன் "தண்ணீர்ப் பந்தல்" வைத்துத் தொண்டாற்றிய அப்பூதியடிகளை சந்தித்தார். அவருடைய வீட்டிற்கு உணவருந்த உட்பட்டார். உணவிடுவதற்கு வாழை இலை அறுக்கச் சென்ற அவருடைய மகன் பாம்பு தீண்டி இறந்தான். அடிகளார் விடம் தீர்க்கும் பதிகம்பாடி அவனை உயிர்பித்தார்.

இந்த அதிசயத்திற்குப் பிறகு அவர் திருவாரூரை அடைந்து வழிபட்டார். அப்போது திருவாதிரை விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைக் கண்டு மகிழ்ந்த அவர் திருப்புகலூரை அடைந்து இரண்டாம் முறையாக திருஞானசம்பந்தரை தரிசித்தார். அங்கிருந்து அவர்கள் பல தலங்களைப் போற்றி வழிபட்டபின் திருவீழிமிழ லையை அடைந்தனர். அங்கு இறைவன் பஞ்சம்தீர்க்க இருவருக்கும் பொற்காசு தினமும் அளித்தான். சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் திருமறைக்காட்டை அடைந்தனர். அங்கு வேதங்கள் பூசித்து மூடிச்சென்றி ருந்த கதவை அப்பரடிகள் திறக்கவும், ஞானசம்பந்தர் மூடவும் பாடினர். சில நாட்களுக்குப் பிறகு திருஞான சம்பந்தர் பாண்டிமா தேவியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு பாண்டிய நாட்டுக்குப் பயணமானார். அப்பரடி கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாய்மூர் சென்றார். பலதலங்களை வணங்கியபின் பழையா றையை அடைந்தார். அங்கு சமணர் தம் சூட்சியால் மூடியிருந்த சிவாலயத்தை உண்ணாவிரதம் மேற் கொண்டுத் திறந்து வைத்தார். பின்னர் திருபைஞ்ஞீலி சென்றார். அங்கு பசியால் வாடிய அவருக்கு இறைவன் பொதிசோறு அளித்து உபசரித்தார்.

அங்கு வழிபட்டபின் திருவண்ணாமலை, காஞ்சீ புரம் முதலிய பதிகளைப் போற்றிக் காளத்தியை அடைந்தார். அங்கு வழிபட்ட பின் கயிலை நாதனைக் காணும் ஆவலில் கயிலையை நோக்கி வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். கயிலைமால் வரையை அடைந்து அதன்மீது ஏறத் தொடங்கினார். அவருடைய வயதும் கடும்நோன்புகளும் வாட்டின. கால்கள் தளர்ந்தன. மெய்சோர்ந்தது. அப்போது இறைவன் ஒரு அடியவர் கோலத்தில் தோன்றி, "அன்பனே கயிலையை அடைதல் எளிதல்ல. நீ உன்னாட்டுக்கு மீள்க" என்றார் அப்பரடிகள் "கயிலை நாதனைக் கண்டு தொழுதல் அன்றி மாளும் உடல் கொண்டு மீளேன்" என்று உறுதி யுடன் நடந்தார். அப்போது அடியவர் வேடத்திலிருந்த சிவபெருமான், இக்குளத்தில் மூழ்கி எழும்போது நீர் கயிலைக் காட்சியைக் காணலாம் என்றார். அதன்படியே அப்பரடிகள் மூழ்கித் திருவையாற்றில் எழுந்தார். அங்கு எல்லாம் அவருக்கு இணை இணையாகத் தோன்றின. சிவனையும் உமாதேவியையும் பரிவாரங்களுடன் பல் வகைக் கணங்கள் சூழக் கண்டு தரிசித்தார். அப்போது போற்றித் திருத்தாண்டகம் பாடினார். பிறகு பூந்துருத்தி சென்று மடம் அமைத்துத் தங்கியிருந்தார். அங்கு அப்பர் இருப்பதைக் கேள்வியுற்ற ஞானசம்பந்தர் வந்து தரிசித்தார். அங்கிருந்து விடைபெற்றுக் கொண்ட சம்பந் தர் தொண்டை நாட்டிலுள்ள தலங்களை தரிசிக்கப் பய ணமானார். அப்பரடிகள் பாண்டிய நாட்டிற்குச் சென்றார். பாண்டிய நாட்டுப்பதிகளைப் போற்றி வணங்கியபின் திருவாரூர் வந்து வணங்கி திருப்புகலூர் சேர்ந்தார். அங்கேயே நிரந்தரமாகத் தங்கி பதிகங்களைப் பாடிப் பரவியதுடன் உழவாரப் பணியையும் செய்து வந்தார்.

புகலூர்ப் பெருமான் ஒரு சித்திரைச் சதயநாளில் அவரை சிற்சோதியில் கலந்தருளும்படி செய்தார். திரு நாவுக்கரசப் பெருமான் இறுதியாக அருளிய பதிகம் எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ என்பதா கும். இதன் இறுதி அடிகள் "பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று இறைவனைப் போற்றுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## நான்காம் திருமுறை

திருநாவுக்கரசர் பாடிய பண்சுமந்த பதிகங்கள் யாவும் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. கொல்லி, காந்தாரம் முதலான பத்துப் பண்களில் அமைந்த பாடல்களும் அதைத் தொடர்ந்து, திருநேரிசை திரு விருத்தம் என்னும் யாப்பில் அமைந்த பாக்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர் முதலாவதாக அருளிச்செய்த "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்ற பாடலுடன் இந்தத் திருமுறை தொடங்குகிறது. காலன் அறிந்தான் அறிதற்கு அறியான் கழலடியே என்ற இறுதி அடிகளுடன் முடிகிறது.

அப்பரடிகள் சூலையால் வருந்திப் அதனை விலக்கச் சிவபெருமானை வேண்டியபோதும் (கூற்றாயி னவாறு) யானையால் இடறச் செய்தபோதும் (சுண்ண வெண் சாந்து); கல்லுடன் இணைத்துக் கடலில் விட்ட போதும் (சொற்றுணை வேதியன்) இறைவன் கரையேற்றி விட்டபின்னும் (ஈன்றாளுமாய்); உடம்பினைத் தூய்மை யாக்க வேண்டியும் (பொன்னார் திருவடிக்கு); அப்பூதி அடிகள் மகன் பாம்பு கடித்து இறந்தபோது உயிர்ப்பிக்க இறைவனை வேண்டியும் (ஒன்று கொலாம்); கயிலையை நோக்கி உறுதியுடன் நடந்தபோதும் (ஆளும் நாயகன் கயிலை கண்டு, அன்றி மாளும் இந்த உடல் கொண்டு மீளேன்); இறைவன் கயிலையில் தடுத்து அங்குள்ள குளத்தில் மூழ்குக, என்று சொன்னபோது அவ்வாறே மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கண்டறியாதன கண்ட போதும் (மாதர்பிறைத் கண்ணியானை); பாடிய அருட்பதி கங்கள் இந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

இதில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் 113 ஆகும். இதிலுள்ள பாடல்தொகை 1069 ஆகும்.

## ஐந்தாம் திருமுறை

அப்பர்சுவாமிகள் அருளிய திருக்குறுந் தொகைப் பாடல்கள் அனைத்தையும் ஒன்று சேரத் தொகுத்து ஐந்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

'அன்னம் பாலிக்கும்' என்ற பதிகத்துடன் தொடங்கும் இந்தத் திருமுறை ஆதிபுராணக் குறுந் தொகையுடன் நிறைவடைகிறது.

இதில் இடம்பெற்றுள்ள 100 பதிகங்களில் 88 பதிகங்கள் 76 தலங்களில் வீற்றிருக் கும் பெருமானைப் போற்றுகின்றன. எஞ்சிய பன்னிரெண்டு பொதுவான வையாகும். யமன்தன் தூதருக்கு விடும் ஆணையான காலபாசக் குறுந்தொகை; அடிய வர்களின் பேரியல்பையும் அவர்களுக்கு இறைவன் எளிதாக அருள்புரிவதையும் விளக்குகின்ற "லிங்க புராணத் குறுந்தொகை", சமணர்கள், சுண்ணாம்புக் காளவாயில் இட்டபோது பாடிய மாசில் வீணையும் எனும் முதலடி கொண்ட தனிதிருக் குறுந்தொகை. சிவபெருமானின் முழு முதற்தன்மையை விளக்கும் ஆதிபுராணக் குறுந்தொகை முதலியன தனிச்சிறப்புக் கொண்டவை.

இத்திருமுறையில் இடம் பெற்றுள்ள பாடல்களின் தொகை 1015 ஆகும்.

## ஆறாம் திருமுறை

சிவபெருமானின் அருட்குணங்களை விளக்கி அவரைப் போற்றுமுகமாகவும் தன் நெஞ்சத் திற்கும், எதிரிலுள்ள பிறருக்கும் அவர்பெருமைகளை விளக்கு வதாகவும் அமைந்த பாடல்களைக் கொண்டது இந்தத் திருமுறையாகும்.

'தாண்டகம்' என்னும் யாப்பு வகையில் அப்பர டிகள் அருளிய அனைத்துப் பாடல்களும் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வகையான பாடல்களைப் பாடுவது மிகவும் கடினம் என்பதாலும், அப்பரடிகள் இவற்றைப் பாடுவதில் தனிப்பெறும் ஆற்றல் பெற்றிருந்ததாலும் அவர் 'தாண்டக வேந்தர்', தாண்டகச்சதுரர்' என்று பலவாறு அழைக்கப்படுகின்றார்.

இந்தத் திருமுறை 'அரியானை அந்தணர்தம் சிந்தையானை' என்று தொடங்கும். கோயில் பெரிய தாண்டகத்துடன் தொடங்குகிறது. "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" எனத் தொடங்கும் திருப் புகலூர் திருத்தாண்டகத்துடன் நிறைவடைகிறது.

இவற்றில் பெரும்பாலன பதிகங்கள் தலங்களின் பெருமைகளை விளக்கி அதில் வீற்றிருக்கும் பெருமா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னைப் போற்றுவது. எஞ்சியவை பொதுவாகப் பாடப் பட்டதாகும்.

பலவகைத் திருத்தாண்டகம், என்பது பூந்துருத்தி, ஐயாறு முதலிய தலங்களின் பெயர்களைக் கூறினா லேயே நன்மைகள் கிடைக்குமென்றும் 'நமச்சிவாய' என்று தொழுபவர்கள் "வானிடை வைகுவர்" என்றும் கூறுகிறது. நின்ற திருத்தாண்டகம் என்பது இறைவன் உலகிலுள்ள அனைத்துமாகி நிற்பதைக் கூறுகிறது. இதனைத் தமிழில் அமைந்த ஸ்ரீருத்திரம் என்பர். அப் பரடிகள் திருமடத்தில் வீற்றிருந்தபோது இறையருளை யும் தாம் சென்ற தலங்களையும் சிந்தித்து அருளியவை இவைகளாகும்.

இந்தத் திருமுறையில் இடம்பெற்றுள்ள க்ஷேத்திரக் கோவையில் பலபதிகளின் பெயர்களை வரிசையாகக் கூறி ஒவ்பொருபாடலின் இறுதியிலும் இங்குச் சென்றால் கயிலாயநாதனைக் காணலாமே என்று அப்பர் குறிக்கின் றார். பலதலங்களுக்குச் சென்று தரிசிக்க முடியாதவர்கள் இதைப் பாராயணம் செய்தால் நிறைந்த பலன் விளையு மென்று நம்புகின்றனர். இதில் இடம் பெற்றுள்ள பதிகங் கள் 99 ஆகும். இதிலுள்ள பாடல்தொகை 980 ஆகும்.

## அப்பரடிகள் தேவாரம் - சிந்தனைத் துளிகள்

❖ அப்பரடிகள் அருளிய மூன்று திருமுறைகளில் இடம்பெற்றுள்ள திருப்பதிகங்கள் முன்னூற்றுப் பன்னிரண் டாகும். இவற்றில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுபத்தி நான்கு ஆகும் (3064)

❖ அப்பரடிகள் அருளிய பதிகங்களில் பத்து பாடல்களே இடம்பெற்றுள்ளன. பத்தாம் பாடலில் இறைவன் இராவணனின் ஆற்றலையும், அகங்காரத்தையும் அடக்கி அவனுக்கு அருள் செய்தமை குறிக்கப்பட்டுள்ளன.

❖ தனது பதிகங்களில் அப்பர் பெருமான் தன்னுடைய வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்துள்ளார்.

❖ அப்பர் தேவாரத்துள் அனேக புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன. சிவபெருமான் செய்த வீரச் செயல்கள் எட்டும் அடிக்கடி கூறப்படுகின்றன.

❖ பழம்பாடல்களாகிய வேதம் ஆகமம் உபநிடதம் ஆகியவற்றின் கருத்துக்களை அப்பரடிகள் பல இடங்களில் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறித்துள்ளார்.

❖ அப்பரடிகள் அனேக பழமொழிகளைக் கையாண்டுள்ளார். திருவாரூரில் அருளியுள்ள மெய்யெல்லாம் என்ற பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழி இடம் பெற்றிருக்கிறது.

❖ சிவபெருமானச் சித்தத்துள் சிந்திக்கும் திறத்தை கூறுவது சித்தத் தொகை திருக்குறுந்தொகை ஆகும். இதில் 30 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் இரண்டாம் பாடலிலிருந்து வரும் பாடல்களின் முதலெழுத்துக்கள். "அ" முதல் "ஃ" வரை "க" முதல் "ன" வரை உள்ள எழுத்துக்களாக உள்ளன.

❖ அப்பரடிகள் அப்பூதி அடிகளின் மகனை உயிர்ப்பிக்கப்பாடிய ஒன்றுகொலாம் என்ற பாடல் எண்ணலங்கார வகையினதாகும். இதில் ஒன்று முதல் பத்துவரை எண்கள் ஏறு வரிசையில் குறிக்கப்பட்டுள்ளன. தனித் திருக் குறுந்தொகை என்ற பாசுரமும் இதைப் போன்றதேயாகும்.

❖ தேவாரம் : என்பதற்கு தெய்வத்தைக் குறித்த இசைப்பாட்டு என்பது பொருள். (வாரம் இசையோடு சேர்ந்த பாடல்) இதனை தேவ + ஆரம் எனப்பிரித்து இறைவனுக்கு சூட்டப்பட்ட சொன்மாலை எனப் பொருள் கூறுவர். தேவ + வாரம் - தெய்வத்திடம் கொள்ளும் அன்பு என்றும் கூறுவர். இங்கு வாரம் என்பதற்கு அடிமை அல்லது அன்புசெய்தல் என்பது பொருள் கொள்ளப்படுகிறது. தேவ + வாரம் : வாரம் என்பதற்கு இடம் என்பது பொருள் தெய்வத்திற்குரிய இடமாக இருப்பதால் இந்நூல் தேவாரம் எனப்பட்டது.

❖ இப்போது நாம் "தேவாரம்" என்றதும், மூவர் முதலிகள் அருளிச்செய்த திருப்பதிகங்களையே எண்ணுகிறோம். ஆனால், தேவாரம் என்ற சொல் "ஆதியில்" வழிபடும் இடத்தைக் குறித்தது. அரசர்களின் அரண்மனையில் இருந்த பூஜா மண்டபம் தேவாரம் என்றும், அதில் எழுந்தருளும் இறைவடிவம் தேவார தேவர் என்றும், அங்கு திருப்பதிகம் பாடுவோர்கள் தேவார நாயகம் என்றும்; பதிகத்தை நின்று பாடும் இடம் தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி என்றும் அழைக்கப்பட்டன.

❖ தேவார ஆசிரியர்கள் பல புதிய பண்வகைகளைத் தோற்றுவித்தனர். அவற்றை இசையறிஞர்கள் "தேவார வர்த்தினி" என்ற புதிய ராகங்களாக அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஏழாந்திருமுறை

சுந்தரமூர்த்திசுவாமிகளால் அருளப்பட்டது ஏழாந்திருமுறையாகும். இவர் தம்முன்னோர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இருவரையும் அடியொற்றியே தமது பாடல்களைப் புனைந்துள்ளார். அவர்கள் சென்ற தலங்கள் அனைத்திற்கும் சென்று பணிந்து பாடிப்பரவியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவபெருமானின் பிரதி பிம்பமாகத் தோன்றியவர். கயிலையில் அவருக்கு அணுக்கத் தொண்டராக இருந்தவர். ஒருநாள் நந்தவனத்தில் பூப்பறிக்கச் செல்கையில் பார்வதியின் தோழியரான அநிந்திதை. கமலினி என்பவர்களை ஆவலுடன் நோக்கினார். அவர்களும் அவரை நோக்கினர். இதையறிந்த இறைவன் மூவரையும் மண்மேல் பிறந்து இன்பம் துய்த்து மீண்டும் வருக என்றார்.

அதன்படியே சுந்தரர் நாவலூரில் சிவாச்சாரியார் குடியிலும். அநிந்திதை ஞாயிறு எனும் ஊரில் வேளாளர் குடியிலும் கமலினி திருவாரூரில் பதியிலார் குலத்திலும் பிறந்தனர். ஞாயிறுகிழார் தம் குலத்தில் பிறந்த பெண்ணுக்குச் சங்கிலியார் என்று பெயர் சூட்டினார். திருவாரூரில் பதியிலார் குலத்தில் பிறந்த பெண்ணுக்குப் பரவையார் என்றும் பெயர் சூட்டப்பட்டது.

திருநாவலூரில் இசை ஞானியார் - சடையனார் என்பவர்களின் குமாரனாகப் பிறந்த சுந்தரனுக்கு நம்பியாரூரர் என்னும் பெயர் சூட்டினார்கள்.

சுந்தரரின் அழகையும் அறிவையும் கண்ட நரசிங்க முனையர் என்னும் நடுநாட்டு மன்னர் சுந்தரரை எடுத்து வளர்த்தார். உரியபருவத்தில் அவருக்குத் திருமண ஏற்பாடுகள் விரிவாக நடைபெற்றன.

இறைவன் திருமணம் நடக்க இருந்த இடத்துக்கு வந்து அதைத் தடுத்து நிறுத்திச் சுந்தரரைத் தன் அடிமை என்று கூறி அழைத்துச் சென்று திருவெண்ணை நல்லூர் கோயிலில் விடுத்து. மறைந்தார். சுந்தரர் திகைத்து நிற்க, 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படிக் கூறினார். அன்று தொடங்கி சுந்தரர் பலதலங்களுக்கும் சென்று பதிகம் பாடிச் சிவபெருமானைப் பரவினார்.

சிவராஜதானியான திருவாரூர் சென்ற சுந்தரர் அங்கு திருவாரூர்ப் பெருமானிடம், ஆறாக்காதல் கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். அங்கு பதியிலார் குலத்தில் பிறந்து ஆரூர்ப் பெருமானுக்கு அடிமை பூண்டு பணிசெய்து வந்த பரவையாரை மணந்து இல்வாழ்வு நடத்தினார். சில காலத்திற்குப் பிறகு, பல தலங்களையும் தரிசித்த பின்னர் திருஒற்றியூர் சென்றார். அந்நாளில் ஞாயிறு தலத்திலிருந்து திருஒற்றியூருக்கு வந்து கன்னிமாடத்தில் வசித்து வந்த சங்கிலியாரைக் கண்டு சிவபெருமானின் அருளுடன் அவரைத் திருமணம் செய்து கொண்டார்.

மீண்டும் திருவாரூருக்குச்சென்ற அவர், பலகாலம் தங்கியிருந்த பின்னர், இறுதியில் சேரநாட்டிலுள்ள திருவஞ்சைக்களம் எனும் தலத்திற்குச் சென்று சேரமான் பெருமான் நாயனாருடன் வசித்து வந்தார். ஒரு ஆடிச் சுவாதி நாளில் இறைவன் வெள்ளை யானையை பூதங்களுடன் அனுப்பத் "தான் எனை முன்படைத்தான்" என்ற பாடலைப் பாடியவாறே யானை மீதேறிக் கயிலாயம் சென்றார்.

இவர் அருளிய பதிகங்கள் 3800 ஆகும். இப்போது கிடைத்து அச்சாகி வழக்கத்தில் உள்ளது 100 பதிகங்கள் மட்டுமே ஆகும். இவற்றில் இடம் பெற்றுள்ள பாடல்கள் எண்ணிக்கை 1026 ஆகும். இவை பதினேழு வகையான பண்களில் அமைந்துள்ளன.

இந்தத் திருமுறையின் முதற்பாடல் இறைவனால் அடியெடுத்துக் கொடுத்த "பித்தா" என்ற சொல்லுடன் 'பித்தா' பிறைசூடி என்று தொடங்குகிறது. இறுதிப் பதிகம் இறைவன் அழைக்க யானைமீது ஏறி பாடிய "தானெனை முன்படைத்தான்" என்ற பதிகமாகும்.

ஆரூரன் அடியார்க்கு அன்பராகிப் பாடிய (தில்லைவாழ் அந்தணர்) ஐந்தெழுத்தின் மேன்மையை பாடியது (நமச்சிவாயப் பதிகம்) கண்பெற்றுப் பாடியது (ஆலந்தான் உகந்து) பொன்வேண்டிப் பாடியது (நெய்யும் பாலும்) நெல்வேண்டியும் அவற்றை அட்டித் தரவும் பாடியது (நீளநினைந்தடியேன்) முதலான அனேக அற்புத பதிகங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

❁ திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் பதினோரு பாடல்களைப் பாடுவது வழக்கம். பதினோராவது பாடலில் அதனைப் படிப்பதால் பயன் கூறப்படும். அப்பர் அருளிய பதிகங்கள் 10 பாடல்களைக் கொண்டதாகும். சுந்தரர் அருளிய பாசுரங்களில் 10 இடம் பெற்றவையும், 11 இடம்பெற்றவையும் உள்ளன. இவற்றின் இறுதிப் பாடலில் பலனும் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❈ சுந்தரர் திருவாரூர்ப் பெருமானுடன் ஆராக் காதல் கொண்டவர். அங்கேயே தங்கி வாழ்ந்தவர் திருவாரூர்ப் பெருமான் இவருக்குத் தோழமை தந்து தம்பிரான் தோழர் என்ற பெயரும் அளித்தார். இவர் நடத்திய இல்வாழ்வுக்கு இறைவன் அன்பர்கள் மூலமாகப் பொன்னையும் பொருளையும் அளித்ததை அவர் பாடல்கள் மூலமாகவே அறிகிறோம்.

❈ நம்பியாரூரரான சுந்தரர் திருவாரூர் பெருமானின் ஆணையின்வண்ணம் சிவனடியார்களைப் போற்றி அடிமைத்திறம் கொண்டு சுருக்கமாகப் பாடிய திருத் தொண்டர் தொகையே பதினோராம் திருமுறையில் திருத்தொண்டர் திருவந்தாதியாக விரிவுபெற்றுப் பின், பன்னிரண்டாம் திருமுறை என்ற முழுநூலாக மலர்ந் துள்ளது.

❈ பெரியபுராணத்தில் பெரும்பகுதி திருஞான சம்பந்தரைப் போற்றுவதாகவே இருந்தாலும் கதைத் தலைவனாகச் சுந்தர மூர்த்திகள் வரலாறே இடம் பெற் றுள்ளது.

❈ ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் சுந்தரமூர்த்திகளின் புராணம் படிக்கப்பட்டதைச் சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எடுத்துக்காட்டாக திரு ஒற்றியூரில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜேந்திர சோழ காலத்திய கல்வெட்டு இச்செய்தியைக் குறிக்கிறது.

❈ சுந்தரர் பாடிப் பரவிய தலங்கள் 83 ஆகும். இவற்றின் மீது பாடப்பட்ட பதிகங்கள் 94 ஆகும். நான்கு பதிகங்கள் "தொகை" பதிகங்கள் என்று பெயர் பெறுகின்றது. இரண்டு பதிகங்கள் இறைவன் அடிய வர்க்கு அடியவராக நிற்பதையும் நம்பியாக இருப்பதை யும் குறிக்கின்றன.

❈ தொகைப் பதிகங்கள் நான்கு. அவை முறையே: இடையாற்றுத் தொகை, ஊர்த்தொகை, திரு நாட்டுத்தொகை, திருத்தொண்டத் தொகை என்பன வாகும்.

❈ இடையாற்றுத் தொகை என்பது, திரு இடை யாற்றையும் இடை மருதூரையும் இணைத்துப் பாடிய தாகும். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்ப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

❈ ஊர்த் தொகை என்பது சுந்தரர் திருவாரூரில் இருந்தபோது பலதலங்களையும் நினைத்து மகிழ்ந்து பாடியதாகும். இதிலும் பல தலங்களின் பெயர்கள் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன.

❈ திருத்தொண்டத் தொகை அடியவர்களின் பெயர்களை வரிசையாகக் கூறி, அவர்களுக்கு அடியேன் என்றும் ஆரூர்ப் பெருமானுக்கு ஆளாகி இருப்பதையும் குறிக்கிறது.

## பண்முறை - தலமுறை

❈ மூவர் அருளிய தேவாரப் பதிகங்கள் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை பண்முறை - தலமுறை என்ற இரண்டு வகையாக உள்ளன. பண்முறையே பழைய நாளில் வழங்கியதாகும். இதில் ஒரு பண்ணில் (இராகத்தில்) அருளப்பட்ட பாடல்கள் யாவும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இதன்படி முதல் பதிகமான தோடுடைய செவியன் முதலில் வைக்கப்பட்டு அது அமைந்த நைவளம் என்ற பண்ணில் அமைந்த பாடல்கள் ஒருசேர தொகுக்கப்பட்டுள்ளன. இப்படியே ஒவ்வொரு பண்ணாக எடுத்துக் கொண்டு அந்தப் பண் வகைப் பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப்பட்டுள்ளன.

தலமுறை என்பது பிற்காலத்தில் தோன்றியதாகும். இதில் கோயில் திருவேட்களம் எனத் தொடங்கி திருப்பதிகக் கோவையில் உள்ளபடி வரிசையாக தலங்களின் பெயரால் பதிகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு தலத்திற்கும் உரிய பதிகங்கள் ஒருசேர தொகுக்கப்பட்டுள்ளன.

மூவர் அருளிய தேவாரம் முழுமையும் அடங்கியுள்ள நூல் "தேவார அடங்கன் முறை" என்றழைக்கப்படுகிறது.

## தேவாரத் திரட்டு நூல்கள்

தேவாரம் அனைத்தையும் தினமும் பாராயணம் செய்வது எளிதல்ல. ஆதலால் அதில் குறிப்பிடத்தக்கப் பாடல்களைத் திரட்டி தனிநூலாக அமைக்கின்றனர். இவை தேவாரத்திரட்டு என்று அழைக்கப்படுகின்றது. அகத்தியர் தேவாரத்திரட்டு அருள்முறைத் திரட்டு என்ற பல தேவாரத்திரட்டு நூல்கள் வழக்கில் உள்ளன.

❈ நாம் நடைமுறையில் மூவர் அருளிய நூல்களையும் தேவாரம் என்றே குறிக்கின்றோம். ஆனால் திருஞான சம்பந்தர் அருளிய பதிகங்கள் "திருக்கடைக் காப்பு" என்றும் அப்பர் சுவாமிகள் அருளிய பாசுரங்கள் "தேவாரம்" என்றும், சுந்தரர் அருளிய பாசுரங்கள் "திருப்பாட்டு" என்றும் பெரியோரால் அழைக்கப்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# எட்டாம் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த இந்தத் திருமுறை இரண்டு பகுதிகளாக உள்ளது. முதல் பகுதி திருவாசகம் ஆகும். இரண்டாம் பகுதி திருக்கோவையார் ஆகும். சுவாமிகள் திருவாதவூரில் ஆதிசைவ அந்தண குலத்தில் சம்புபாதாசிருதர்-சிவஞானவதி தம்பதியருக்கு மகனாகத் தோன்றியவர். இவர் வாலிப வயதை அடைந்த போது இவருடைய பக்தியையும், அறிவுத்திறத்தையும் கேள்விப்பட்ட அரிமர்த்தன பாண்டியன் தமது அமைச்சராக ஆக்கிக் கொண்டான். இவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்துடன் ஏராளமான செல்வத்தையும் அளித்தான்.



குருந்தமரத்தின் கீழ் வீற்றிருந்து சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு சிவஞான உபதேசம் செய்தல்.

ஒரு முறை அரசன் பெரும்பொருளை இவரிடம் கொடுத்துக் குதிரைகளை வாங்கிவருமாறு துறைமுகத்திற்கு அனுப்பினான். இவர் செல்லும் வழியில் திருப்பெருந்துறை எனுமிடத்தில் சிவபெருமான் குருந்த மரத்தின் கீழ் ஞானாசிரியனாகத் தோன்றி, இவருக்கு அருள்புரிந்தான். குதிரைவாங்கக் கொண்டு சென்ற பெரும்பணத்தைக் கொண்டு இவர் அங்கே சிவபெருமானுக்குப் பெருங்கோயிலைக் கட்டினார். இதை அறிந்த அரசன் இவரைச் சிறையிலிட்டான்.

சிவபெருமான் இவருக்காக நரிகளைப் பரிகளாக்கி அரசனிடம் அனுப்பினார். பின்னர் அவைகளை மீண்டும் நரிகளாக்கியும், வைகையை பெருகிவரச் செய்தும் எண்ணற்ற திருவிளையாடல்களைச் செய்தான். இவருடைய பெருமைகளை உணர்ந்த அரசன் இவரை வணங்கிச் சிறைவிடுத்தான். இவர் துறவுபூண்டு பல தலங்களை வணங்கிப் பதிகங்கள்பாடினார். ஊமைப் பெண்ணைப் பேசவைத்தது முதலான பல அற்புதங்களைச் செய்தார். இறுதியில் தில்லையை அடைந்தார். அங்கு சிவபெருமான் இவரிடம் திருக்கோவையாரைச் சொல்லச் செய்து தன்கைப்பட எழுதி 'இவை சிற்றம்பலவன் கையெழுத்து' என்று பதித்து, சிற்றம்பலப் படிகளில் வைத்தார். மறுநாள் கோயிலைத் திறந்த தில்லைமூவாயிரவர் படிகளின் மீது இருந்த புத்தகத்தைக் கண்டு அதிசயித்து அடிகளாரிடம் சென்று இதன் பொருளை விளக்க வேண்டுமென்று கேட்டனர். இவர் அவர்களை தில்லைச்சிற்றம்பலத்திற்கு அழைத்துச் சென்று **'தில்லைக்கூத்தனே'** இதன் பொருள் என்றுகூறி சிற்றம்பல ஜோதியில் கலந்தார். அந்நாள் ஆனிமக நாளாகும்.

## திருவாசகம்

இந்நூலின் தொடக்கத்தில் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்ற நான்கு நெடும்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து திருச்சதகம், அறிவுறுத்தல், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி முதலான 47 பதிகங்கள் இடம் பெற் றுள்ளன. இவற்றின் மொத்த எண்ணிக்கை 658 ஆகும்.

இவையாவும் மணிவாசகர் தாம் உணர்ந்த ஞான அனுபவத்தின் வெளிப்பாடு ஆகும் "சிவபுராணம்" "நமச்சிவாய வாழ்க" என்று சிவபெருமானை வாழ்த்துவதுடன் தொடங்கி மனிதப்பிறப்பின் பல்வேறு நிலைகளை உணர்த்தி, இறைவன் அருளின்பத்தை உணர்ந்து, பேரின்ப நிலையாகிய சிவபுரத்தில் சேர்வதைக் குறிக்கின்றது.

கீர்த்தித் திருஅகவல் இறைவனின் எல்லையில்லாத பெருங்கீர்த்திகளையும் அவனுடைய வீரம் செறிந்த வரலாறுகளையும், எளிதில் வந்து கருணையால் அன்பர்களை ஆட்கொள்வதையும் குறிக்கிறது.

திருவண்டப்பகுதி இறைவனின் அளவிலா ஆற்றலையும் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதையும், எளிதில் வந்து அருளும் இயல்பையும் விளங்குகிறது.

போற்றித் திருஅகவல் மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியை விளக்கி இறைவனின் அருட்பெருமைகளைக் கூறிப் பலவகையாகப் போற்றுகிறது.

இதைத் தொடர்ந்து வருவன 100 பாடல்களைக் கொண்ட சதகமாகும். இதில் 10 தலைப்புக்களில் பல்வேறு செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து வரும் நீத்தல் விண்ணப்பம் எனும் பிரபஞ்ச வைராக்கியம் 50 பாடல்களைக் கொண்டதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றைத் தொடர்ந்து 10 அல்லது 20 பாக்களைக் கொண்டு பல்வேறு தலைப்புக்களில் இறைவனின் கருணையும் புகழும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி, முதலியன சிறப்பு மிக்கனவாகும்.

❁ தேவாரத்துள் கூறப்படாத அனேக சிவலீலைகள் திருவாசகத்துள் இடம் பெற்றுள்ளன. இறைவன் ஆகமங்களை உமைக்கு உபதேசித்தது; கடலில் மீன் பிடிக்க வேடனாகச் சென்றது; மண்டோதரிக்கு அருள் புரிந்தது, பன்றிக்குப் பால் கொடுத்தது முதலியன இவற்றில் குறிப்பிடத் தக்கனவாகும்.

❁ திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பதும் தேனாய் தித்திக்கும் திருவாசகம் என்பதும் பழமொழிகளாகும். மார்கழித் திருவாதிரையை ஈறாகக் கொண்ட 10 நாட்கள் திருவெம்பாவை நோன்பாகக் கொண்டாடப்படும். அந்நாளில் மற்ற திருமுறைகளை ஓதாமல் திருவாசகத்தை மட்டுமே ஓதுவது மரபு. சயாம் நாட்டில் முக்கியமான மதச் சடங்குகளில் திருவெம்பாவை பாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

❁ 'திருவாசகத்தில் பலபாடல்கள் சிறுமியர் பாடுவதாக அமைந் துள்ளன. எடுத்துக்காட்டாகப் பொற் சுண்ணமிடித்தல், பொன்னூசல் ஆடல் உந்திபற போன்றவற்றைக் கூறலாம்.

## திருக்கோவையார்

திருச்சிற்றம்பலக் கோவையார் என்று பெயர் கொண்ட இந்த நூல் தனிச்சிறப்பும் தகுதியும் நோக்கித் திருக்கோவையார் என வழங்குகிறது. மாணிக்கவாசகரிடம் சிவபெருமான் (திருவெம்) "பாவை பாடிய வாயால் கோவையும் பாடுக" என்று கேட்டு, அவர் சொல்லச் சொல்ல ஏட்டில் எழுதினான். அடியில் இது சிற்றம்பலவன் கையெழுத்து என்று, தன் கையெழுத்தையும் இட்டு வைத்தான் என்று புராணவரலாறு கூறுகிறது.

கோவை என்பது தமிழ் இலக்கிய நூல்வகைகளுள் அகத்துறையைச் சார்ந்தது. நானூறு பாடல்களால் ஆக்கப்படுவது. ஒருதலைவனும், தலைவியும் கூடி அன்பு கொண்டு இன்பவாழ்வு வாழ்தலே அகத்துறையாகும்.

இந்நூலில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்து அன்பு கொள்ளுதல். தலைவன் தலைவியின் தோழி மூலம் காதலை அறிந்து கொள்ளுதல், தோழி தூது செல்லுதல், தோழி தலைவனை நினைந்து இரங்குதல் இடைமெலிதல், நாணிக்கண் புதைத்தல், குறிப்பை அறிதல், இரவுக்குறி, காதலர்கள் சந்தித்துக் கொள்ளுதல், அவர்கள் கூடி ஊரை விட்டுச்சென்றுத் தனிவாழ்வு மேற்கொள்ளுதல், தலைவன் பொருள்தேடி தலைவியைப் பிரிதல், மகளைத் தேடி தாய் செல்லுதல் முதலிய வாழ்வியல் நிகழ்வுகள் 400 பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட்டின் அடியிலும், அப்பாடலின் இலக்கிய நோக்கம் சொல்லப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடலிலும் தில்லைச் சிற்றம்பலவனின் பெருமையும் அவன் மேல்வைத்த அன்பும். அவனுடைய ஆற்றலும் அவன் இயல்பும் உவமைகளாகப் பேசப்பட்டுள்ளது. இந்நூல் மேலோட்டமாகப் பார்க்கும் போது அகத்துறை இலக்கியமாக இருந்தாலும் இது பேரின்ப வாழ்வைத்தரும் நூலாகும். இதன் நுண்பொருளை உணர்ந்தவர்கள், இதனை ஆகமசாரம், வேதசாரம், இலக்கணநூல், தெய்வத்தன்மை பொருந்திய நூல் என்று உரைக்கின்றனர்.

❁ இதற்குப் பல உரைநூல்கள் எழுந்துள்ளன. ஆலயங்களில் இந்நாளில் திருக்கோவையாரை ஓதும் வழக்கம் காணப்படவில்லை.

❁ திருவாவடுதுறை ஆதீனத்தில் தினமும் நடை பெறும் ஆனந்தமா நடராசப் பெருமானின் பூசையின் போது திருக்கோவையார். ஓதப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அருளாளர்கள் தம்மைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு காவியம் பாடுவதே மரபு என்றாலும், திருக்கோவையாரில் வழக்கத்திற்குமாறாக மணிவாசகர் ஆன்மாவைத் தலைவனாகவும், தில்லையம்பலவாணனைத் தலைவியாகவும் கொண்டு அரிய உன்னதமான தத்துவங்களை விளக்கும் வகையில் இந்நூலைப் பாடியுள்ளார். இது யாரும் அன்று முதல் இன்று வரை செய்யாத புதுமையாகும். செய்தி உதவி - பி.எம். இராஜகணபதி.

**திருவாசகலிங்கம் :** பனைஓலைகளைப் பலவேறு அளவுள்ள வட்டமான அமைப்பில் வெட்டி அதில் திருவாசகத்தை எழுதி ஒரு சிவலிங்கம் போல அமைத்து அதன் உருத்திரபாகமாக ஒரு உருத்திராட்சத்தை அமைக்கின்றனர். இதற்கு திருவாசகலிங்கம் என்பது பெயராகும். இலங்கையில் பல இல்லங்களில் இத்தகைய லிங்கத்தைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஒன்பதாம் திருமுறை

இந்தத் திருமுறையில் இசைப் பாடல்களான 29 பதிகங்களும் இறைவனுக்குப் பல்லாண்டு கூறும் திருப் பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் இடம்பெற்றுள்ள பாடல் தொகை 301 ஆகும்.

இதில் பதினைந்து பதிகங்கள் தில்லை சிற்றம்பலமாகிய கோயில் பற்றி எழுந்தனவாகும். எனவே இவற்றை, முதற்பாடலின் முதல் அடியால் பெயரிடப்பட்டுள்ளன. எஞ்சிய பதினான்கு பதிகங்கள் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருக்களந்தை, கீழ்க் கோட்டூர் திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழபுரம், பூவணம், திருச்சாட்டியக் குடி, தஞ்சாவூர் திருவிடைமருதூர், திருவாரூர் முதலிய ஊர்களில் எழுந்தருளியுள்ள பெருமான் மீது பாடப்பட்டதாகும்.

இந்த இசைப் பாடல்களை அருளிச்செய்த அடியார்கள் ஒன்பதின்மர் ஆவர். இவர்களைப் பற்றியும் இவர்கள் அருளிய நூல்களையும் தொடர்ந்து காணலாம்.

## திருமாளிகைத் தேவர்

மாபெரும் சித்தரான திருமாளிகைத் தேவர் சிதம் பரம் நடராசர் மீது பாடிய நான்கு திருவிசைப்பாக்கள் இந்தத் திருமுறையில் முதலில் இடம் பெற்றுள்ளன. சித்தர் திருவிடைமருதூரில் சோழ மன்னர்களின் தீட்சா குருவாக விளங்கிய ஐந்து கொத்தாருள் ஒருவராகிய சைவராயர் மரபில் வந்தவர். இவர்கள் சுத்தசைவ வேளாளர்கள் இனத்தினராவர். இவர்கள் மாளிகை மடம் எனுமிடத்தில் வீற்றிருந்ததால் மாளிகைக்காரர் கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வழிவந்த சித்தர் மாளிகைத் தேவர் என்று பெயர்பெற்றார். இவர் போகரி டம் உபதேசமும் துறவறமும் பெற்றுத் திருவாவடு துறைக்கு வந்து அரச மரத்தின் கீழ் யோகம் புரிந்தார். இவர் புரிந்த அருஞ்செயல்கள் ஏராளமாகும். திருவீழி மிழலையில் தேரைத் தானே ஓடவைத்து, தன்னைக் கைது செய்ய வந்த பல்லவன் படைகள் மீது திருவாவடு துறை ஆலய மதிலில் இருந்த நந்திகளை உயிர் பெறச் செய்து ஏவியது, கொங்கணர் கமண்டலத்தில் என்றும் வற்றாத கங்கையை வற்றச் செய்தது, சிவநிவேதனமா கிய பயற்றஞ் சுண்டலை மடத்து வயலில் விதைத்து முளைத்துப் பயன் தரச் செய்தது முதலியன முக்கியமா னதாகும்.

திருவாவடுதுறை ஆதீன மடாலயத்துள் குரு முதல்வரான நமச்சிவாய மூர்த்திகளின் ஆலயத்திற்கு அருகில் இவருடைய ஆலயம் உள்ளது. அதனுள் மேற்கரங்களில் தீப்பந்தங்களையும் வலது முன் கரத்தில் சின்முத்திரையும் இடது முன்கரத்தில் சுண்டல் பாத்திர மும் கொண்ட அரச கோலத்துடன் இவருடைய திருவுரு வம் அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு முன்பாக போகரின் திருவடிகள் அமைந்துள்ளன.

இவர் அருளிய பதிகங்கள், ஒளிவளர் விளக்கே, உயர் கொடியாடை, உறவாகிய யோகம், இணங்கிலா ஈசன் என்று தொடங்குவதால் அப்பெயராலேயே குறிக்கப்படுகின்றன.

முதல் பதிகம் தொண்டனாகிய தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறது. இரண்டாவது பதிகம் சிவபெருமானின் பாதம், கணைக்கால், இடை என்று தலைவரை ஒவ்வொன்றாகத் தன்மனத்துள் புகுந்ததைக் குறிக்கிறது. மூன்றாம் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் பெருமான் மகேந்திர மலையில் வீற்றிருப்பதைக் குறிக்கிறது. நான்காம் பதிகம் தில்லைப் பெருமானுக்கு அன்பு செய்யாதவர்களைப் பேய்கள் என்று இகழ்ந்து அவருடன் தொடர்பு கொள்ளமாட்டேன் என்று கூறுகிறது.

## சேந்தனார்

இவர் பட்டினத்தாரிடம் கணக்கராக இருந்தவர். பட்டினத்தார் துறவு மேற்கொண்டபின் விறகு வெட்டிப் பிழைத்தார். இவர் அளித்த களியை உண்டு இவர் மீது கொண்டருளிய அன்பைச் சிவபெருமான் வெளிப்படுத் தினார். ஒருசமயம் சிதம்பரத்தில் ஓடாது நின்ற திருத் தேரைத் திருப்பல்லாண்டு பாடி ஓட வைத்தார். இவர் அருளிய இசைப்பா மூன்றாகும்.

முதல்பதிகம் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் பெருமானைப் புகழ்கிறது. இரண்டாம் பதிகம் திரு வாவடுதுறைப் பெருமான் மீது அருளப்பட்டதாகும். காதல் கொண்ட தலைவி தலைவனை நினைந்து பாடு வதாக அமைந்துள்ளது. மூன்றாம் பதிகம் திருவிடைக் கழி முருகன் மீது பாடப்பட்டதாகும். ஒரு தலைவி தலைவன் மீது கொண்டுள்ள காதலால் வாடுவதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவளுடைய தாய் அறிந்து அவளுக்காக மனம் கசிந்து கூறும் நிலையில் அமைந்துள்ளது. இதன் ஒவ்வொரு பாடலிலும் திருவிடைக்கழியில் குராமரத்தின் கீழ் முருகன் நிற்பது குறிக்கப்பட்டுள்ளது.

## கருவூர்த் தேவர்

சித்தர் மரபில் வந்த கருவூர்த் தேவர் இராஜராஜ சோழனுக்குக் குருவாக விளங்கியவர். கொங்குநாட்டுக் கருவூரில் தோன்றியவர். சிவனருளால் ஆற்றில் பொங்கிப் பெருகும் நீரின் மீது நடந்தவர். அகத்தியர் அருள்பெற்றவர். தஞ்சையில் இராஜராஜசோழன் கட்டிய பெரிய கோயிலில் பெருவுடையாருக்கு அஷ்ட பந்தனம் பொருந்தாதபோது இவர் அதைக் கட்டி நிறுத்தியவர்.

கருவூர் பசுபதீசுவரர் ஆலயத்திலும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் இவருக்குத் தனிச் சந்நிதிகள் அமைந்துள்ளன.

இவர் அருளிய திருவிசைப்பா பதிகங்கள் பத்தாகும். "**கணம்விரி**" எனத்தொடங்கும் முதல்பதிகம் சிதம்பரம் நடராசப் பெருமானைப் போற்றுகிறது. இதில் சிதம்பரத்தின் வளம் சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது பதிகம் தஞ்சை மாவட்டத்தில் இப் போது களப்பாள் என்று அழைக்கப்படும் ஆதித்தியேச் சுரத்து இறைவன் மீது பாடப்பட்டதாகும். இதில் இறை வனின் எளிதில் வந்து அருளும் கருணைத்திறம் பேசப்பட்டுள்ளது.

மூன்றாவது பதிகம் மன்னார் குடி - திருவாரூர் சாலையிலுள்ள கோட்டூரின் ஒரு பகுதியாகத் திகழும் மணியத்துள் பெருமான் நின்றாடும் பெருமான் மீது மையல் கொண்ட பெண் பாடுவதாக அமைந்துள்ளது. இறுதிப்பாடலில் கருவூர்தேவர் தன்னை வேதம் வல்லோன் என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நான்காம் பதிகம் திருத்துறைப்பூண்டியிலிருந்து வேதாரண்யத்திற்கு 4 மைல் தொலைவில் அமைந்துள்ள முகத்தலை என்னும் தலத்து இறைவன் மீது பாடப்பட்டதாகும். இந்நாளில் இத்தலம் பன்னத்தெரு என்று வழங்குகிறது. இறைவர் பன்னகாபரணர். இறைவி சாந்தநாயகி. இறைவன் எளிதில் வந்து தன்னகத்துள் அமர்ந்து அருள்புரிவதை ஒவ்வொரு பாடலும் குறிக்கிறது.

ஐந்தாம் பதிகம் கோடைத் திரைலோக்கிய சுந்தரத்தில் எழுந்தருளியுள்ள, பெருமான்மீது பாடப்பட்டதாகும். ஆடுதுறை - திருப்பனந்தாள் சாலையில் துயிலிக் கோட்டூர் என்றதலமும் அதையொட்டித் திரைலோக்கி என்ற ஊரும் உள்ளன. இரண்டும் சேர்த்து கோடைத் திரைலோக்கிய சுந்தரம் என அந்நாளில் வழங்கப்பட்டது. திரைலோக்கியில் உள்ள பெருமான் ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ சுந்தரேசுவரர். இப்பதிகத்தில் இறைவன் மீது காதல் கொண்ட பெண் உருகிப்பாடுவதாக இரண்டு பாடல்களும் அதைக்கேட்டுத் தோழி தலைவனிடம் சென்று கூறுவதாக எஞ்சிய பாடல்களும் அமைகின்றன.

ஆறாம்பதிகம் கங்கைகொண்ட சோழீசுவரர் மீது பாடப்பட்டதாகும். இக்கோயில் இராஜேந்திர சோழனால் கங்கை வெற்றியின் நினைவாக எடுக்கப்பட்டதாகும். அன்னமாய் என்று தொடங்கும் இப்பதிகம் எளிதில் வந்து பக்தனின் உள்ளத்தில் வீற்றிருந்து சிவபெருமான் எண்ணற்ற செல்வங்களை அளிக்கிறான் என்று குறிக்கின்றது இறுதிப்பாடலில் அங்கையில் பலியேற்கும் கருவூரான் என்று தன்னைக் குறிக்கின்றார்.

ஏழாம்பதிகம், பாண்டிநாட்டுப் பழம்பதிகளில் ஒன்றாகவும் பாடல் பெற்ற திருத்தலமாகவும் விளங்கும். திருப்பூவணம் தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் மீது பாடப்பட்டதாகும் இதுவும் இறைவனின் எளிதில் வந்த கருணையை விளக்கிநிற்கிறது.

எட்டாம்பதிகம் திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள திருச்சாட்டியக் குடிஎனும் தலத்து இறைவர் மீது பாடப்பட்டதாகும். இது இறைவனின் மகாஅக்கினி வடிவம் பற்றிக் கூறுவது குறிக்கத்தக்கது.

ஒன்பதாம் பதிகம் தஞ்சைப் பெரியகோயில் மீது பாடப்பட்டதாகும். இப்பதிகத்தில் தஞ்சையின் வளமும், பக்தர்களின் கசிந்தமனநிலையும் இறைவனின் அருள் திறமும் விளக்கப்பட்டுள்ளன.

பத்தாம் பதிகம் திருவிடை மருதூர்ப் பெருமான் மீது அருளப் பெற்றதாகும். இப்பதிகத்தில் இறைவனின் பிட்சாடனக் கோலம், நள்ளிருளில் ஆடும் கோலம், இறைவன் தன்னுள் கலந்தது முதலியவற்றை கருவூரார் குறிக்கின்றார்.

இப்பதிகத்தின் இறுதிப்பாடலில் கருவூரார் வேதம் வல்லோன் என்றும், சித்த மருந்துகள் அருந்தி அல்லல் தீர்த்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பூந்துருத்தி நம்பிகாடநம்பி

தஞ்சாவூர் - திருவையாறு சாலையிலுள்ள கண்டியூருக்கு மேற்கில் அமைந்திருப்பது பூந்துருத்தியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வூரில் வாழ்ந்தவர் நம்பிகாட நம்பி ஆவார். இவருடைய வரலாறு விளக்கமாகத் தெரியவில்லை. இவருடைய பாடல்கள் மூலம் இவர் திருமுறைகளில் மிக்கபற்றுடையவர் என்பதும் தலங்கள் தோறும் சென்று வழிபட்டவர் என்பதும் தெரிகிறது. திருவாரூர் பெருமான் மீதும் தில்லைச் சிற்றம்பலத்தின் மீதுமாக திருவிசைப்பா பாடியுள்ளார். தேவாரத்தில் இல்லாத சாரளபாணி என்ற பண்ணில் பதிகம் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும் கண்ணப்பர், கணம்புல்லர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலான பல அடியவர்களைத் தம்பதிகத்துள் போற்றியுள்ளார்.

திருவாரூர் மீது பாடப்பட்டுள்ள கைக்குவான் எனத் தொடங்கும் பதிகத்தில் இரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. இரண்டுபால்களிலும் திருவாரூர்ப் பெருமான் திருவீதிகளில் நடம்புரிந்த அழகைப் போற்றுகிறது.

கோயிலாகிய சிதம்பரத்தின் மீது அருளப்பட்டுள்ள பதிகம். முத்து வயிரமணி என்று தொடங்குகிறது. இப்பதிகத்தின் இரண்டாம் பாடலில் கண்ணப்பரும் மூன்றாம் பாடலில் திருநாவுக்கரசரும், நான்காம் பாடலில் சம்பந்தரும், ஐந்தாம்பாடலில் சுந்தரர் (கயிலை சென்றதும்) குறிக்கப்பட்டுள்ளனர். திருச்சிற்றம்பலப் பெருமானுக்கு ஆடும் அரங்காக இருப்பதும் அதில் பெருமான் உவந்து அதிசய நடம் புரிவதும் சிறப்புடன் இப்பதிகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

## கண்டராதித்தர்

சோழப் பேரரசரான கண்டராதித்தர் எல்லையற்ற சிவபக்தர் இவரைச் சிவஞானக் கண்டராதித்தர் என்று ஒருகல்வெட்டு குறிப்பிடுகிறது. இவருடைய மனைவியான செம்பியன் மாதேவியார் பலகோயில்களைக் கற்றளியாக்கியவர். இவர்களின் பேரனே இராஜராஜ சோழன் ஆவார். இவர் அருளிய பதிகம் ஒன்றாகும்.

"மின்னார் உருவம்" என்ற அப்பதிகம் தில்லைச் சிற்றம்பலத்தைப் புகழ்கிறது. தில்லைச் சிற்றம்பலவன் மீது அன்பு கொண்ட ஒருவர் "அவரை என்று காண்பது" என்று இரங்குவதாக இது அமைகிறது. பத்தாம்பாடலில் இப்பதிகத்தைப் பாடுவதால் இவ்வுலகில் பெருமையையும் இன்பத்தையும் எய்துவர் என்று பலனும் சொல்லப்பட்டுள்ளது.

## வேணாட்டு அடிகள்

திருவாங்கூருக்கு அருகிலுள்ள பகுதி வேணாடு என்றழைக்கப்பட்டது. அந்தவேணாட்டைச் சேர்ந்த இவர் சிறந்த சிவத்துறவி. பலதலங்களுக்குச் சென்று பாடியவர். இவரைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கிடைக்கவில்லை.

'துச்செனத்' தொடங்கும் இவருடைய பாடல் தில்லைச் சிற்றம்பலத்தைப் புகழ்கிறது. ஒவ்வொரு பாடலும் 'திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே' என்ற மகுடத்துடன் முடிகிறது.

## திருவாலி அமுதனார்

இவர் திருமயிலையாகிய மயிலாடுதுறையில் வைணவ அந்தணக் குடியில் தோன்றியவர். திருவாலி என்பது சீர்காழிக்கு அருகிலுள்ள வைணவத்தலமாகும். இங்குள்ள திருமால் அமுதன் என்று அழைக்கப்படுகின்றார். அதையொட்டி இவருக்குத் திருவாலியமுதன் என்று பெயர் சூட்டப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவர் மயிலாடுதுறைக்கு அரசனாக இருந்தவர் மறைகுலத்துச் செல்வர் என்பனவற்றை இவர்பாடலால் அறிகிறோம். இவர் அருளிய நான்கு திருவிசைப் பாக்களும் தில்லைச் சிற்றம்பலம் பற்றியதேயாகும்.

"பாதாதிகேசம்" என்னும் தலைப்பிலான முதல் பதிகத்தில் சிவபெருமானின் பாதம் தொடங்கி ஒவ்வொரு அங்கமாகத் தன்னுள்ளத்தில் புகுந்ததை ஒவ்வொரு பாடலில் குறித்துள்ளார். எனவே இது பாதாதி கேசம் எனப்பட்டது.

பவளக்குன்றம் என்னும் இரண்டாவது பாடல் இறைவனின் பேரழகைக் கண்டு வியந்து அவன்மீது காதல் கொண்டபெண்ணின் மனஒட்டத்தையும் துன்பத்தையும் விளக்குகிறது. அந்தாதியாக உள்ளது.

"அல்லலாய்ப் பகலாய்" என்று தொடங்கும் மூன்றாம் பதிகம் தில்லையுள் பெருமான் ஆடும் எழிற் கூத்தை விளக்குகிறது. ஒவ்வொரு பாடலும் 'குழகன் ஆடுமே' என்ற மகுடம் பெற்றுள்ளது.

"கோலமலர்" என்று தொடங்கும் நான்காம் பதிகம் அந்தாதியாகும். இது பெருமான்மீது காதல் கொண்ட பெண் பாடுவதாக அமைந்துள்ளது.

## புருடோத்தம நம்பி

இவரும் வைணவ அந்தண குலத்தில் பிறந்து சைவநெறியில் திளைத்தவர். 'தம்மை மாசிலா மறைபல ஒது நாவன்' என்று குறிப்பது எண்ணத்தக்கது. இவர் பாடிய பதிகங்கள் இரண்டாகும். இரண்டுமே தில்லையைப் பற்றியதாகும். அந்தாதி அமைப்பிலானது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"வாரணி" என்று தொடங்கும் பதிகம். சிவபெருமான் மீது மையல் கொண்ட பாவை தன் வீதிவழியாக அவரை உலா வரும்படியும் தம்மை ஏற்றுக் கொள்ளும் படியும் வேண்டுவதாக அமைந்தது.

"வானவர்கள்" எனத்தொடங்கும் இரண்டாம் பதிகமும் தலைவி சிவபெருமான்மீது காதல் கொண்ட தாகவும் அவரை எண்ணி வருந்துவதாகவும் அமைகிறது. தனது வளையல், தோள்வளை முதலியன கழலுமாறு தன்மேனி இளைத்ததைத் தலைவி கூறுகின்றாள்.

## சேதிராயர்

இவர் சேதி நாட்டு மன்னர். திருக்கோயிலூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவர். இவரைப்பற்றிய விரிவான செய்திகள் தெரியவில்லை. இவர் பாடியது சிதம்பரத்தைப் பற்றி ஒருபதிகமாகும்.

"சேலுலாம்" என்று தொடங்கும் இப்பதிகம் அந்தாதித் தொடையலாகும்.

சிவபெருமான்மீது காதல் கொண்டு மயங்கிநிற்கும் பெண்ணின் தாய் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தன் பெண்ணின் மையலை நீக்கி ஆட்கொள்ள வேண்டி இறைவனிடம் தாய் வேண்டுகிறாள். இதன் ஒவ்வொரு பாடலிலும் ஒரு புராணக் கதை இடம் பெற்றுள்ளது.

## திருப்பல்லாண்டு

இதனை அருளியவர் சேந்தனர் ஆவார். (இவரைப் பற்றிய குறிப்பு முன்னமே இடம்பெற்றுள்ளது). ஒரு சமயம் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரையின் போது, தேர்ஓடாது நின்றுவிட்டது. அப்போது சேந்தனார் இந்தத் "திருப்பல்லாண்டைப்" பாட, இழுப்பவர் எவருமின்றித்தேர் தானே சென்று நிலையை அடைந்தது.

'மன்னுகதில்லை' என்று தொடங்கிச் சிவபெருமானுக்கு பல்லாண்டு கூறும் இப்பதிகம் பதிமூன்று பாடல்களைக் கொண்டதாகும்.

❁ சிவாலங்களில் தீபாராதனையின் போது பஞ்ச புராணங்களில் ஒன்றாகத் திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் நாள்தோறும் ஓதப்படுகின்றன.

❁ சிவாலயங்களில் தேரோட்டத்திற்கு முன்பாக 'திருப்பல்லாண்டினை' ஓதும் வழக்கம் பல ஆலயங்களில் உள்ளது.

## திருமுறைக் கோயில்கள்

சிவாலயங்களில் சிவபெருமான் உமாதேவியர் கணபதி முதலான திருவுருவங்களை அமைத்து உரிய பூசைகள் செய்வது போலவே திருமுறை எழுதிய ஏடுகளை உரிய பீடத்தில் எழுந்தருளி வைத்துப் பூசித்தனர். இப்படித் திருமுறை நூல்கள் எழுந்தருளியிருந்த சந்நிதிகள் "திருமுறைக் கைக்கோட்டிகள்" என்று அழைக்கப்பட்டன.

குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் சீர்காழியில் இத்தகைய திருகைக் கோட்டி இருந்ததை கல்வெட்டால் அறிகிறோம். இதற்காக நிலம் அளிக்கப்பட்டது. மேலும், இங்கு திருமுறைகளைக் காப்பு நீக்கி (அவிழ்த்து) தூய்மைப் படுத்தவும், அழிந்துபோன ஏடுகளை நீக்கிப் புதியதாக எழுதிச் சேர்த்து வைக்கவும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தமிழ்விரகர் என அழைக்கப்பட்டனர்.

திருவீழிமிழலை, திருக்காறயில் (திருக்கார வாசல் எனும் விடங்கத் தலம்) திருவுசாத்தானம் முதலிய பல தலங்களில் திருமுறைக் கோயிலான திருக்கைக் கோட்டிகள் இருந்தனவென்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இவற்றில் பதிகம் பாடுபவர்கள் பலர் இருந்தனர். இவர்களுக்கு உணவிட பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

திருவீழிமிழலையில் "திருத்தொண்டத் தொகையான்" மடம் எனும் பெயரில் ஒருமடம் இருந்ததை (பதிமூன்றாம் நூற்றாண்டில் அரசு செலுத்திய) இராஜேந்திர சோழ மன்னனின் கல்வெட்டால் அறிகிறோம். இங்கு பணிபுரிந்தவர் பாட்டோதும் திருமேனி என்று அழைக்கப்பட்டுள்ளார். மேலும், சடையவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்தியக் கல்வெட்டு இங்கு திருமுறைகளுக்கு அளிக்கப்பட்ட சிறப்பை விளக்குகிறது. இதன்படி திருமுறை ஏடுகள் சிங்காதனத்தில் எழுந்தருளி வைக்கப்பட்டிருந்தன. அவை "திருமுறையார்" என்று அழைக்கப்பட்டன. இங்கு பூசிக்கும் தமிழ்விரகர் "திருமுறையார் நோக்கும் திருமேனி" என்றும் பாட்டுகளைப் பாடுவோர் "பாட்டோதும் திருமேனிகள்" என்றும் அழைக்கப்பட்டனர். திருமுறைப் பணியாளர்கள் அவ்வப்போது திருமுறையாரைக் காப்பு நீக்கி (அவிழ்த்து) அழிந்து போனவற்றை எழுதிச் சேர்த்தனர். திருமுறையாருக்கு தினமும் புதிய ஆடைகள் அணிவிக்கப்பட்டு திருவமுது வியஞ்சனங்களுடன் படைக்கப்பட்டது. மாலைகள் அணிவித்து தூபதீபம் காட்டிப் பூசிக்கப்பட்டது. கைக்கோட்டியின் பூசைக்கும், மற்றும் செலவுகளுக்கும் அளிக்கப்பட்ட நிலங்கள் "திருக்கைக் கோட்டிப் புறங்கள்" என்று குறிக்கப்பட்டன.

❁ சிவபெருமான் திருமுறைகளின் வடிவமாக விளங்குகின்றான். எனவே, இந்நூல்களை வாசிப்பதும் வணங்குவதும் ஞானச் சிவபூசையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பத்தாம் திருமுறையாகிய திருமூலர் அருளிய திருமந்திரம்

கயிலை மலையிலிருந்து, தென்பொதிகையில் அகத்தியரைக் காண சுந்தர முனிவர் விண்வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது காவிரிக் கரையில் தன்னை மேய்ப்பவன் இறந்ததால் வருந்தி அழுது நிற்கும் பசுக் கூட்டத்தைக் கண்டார். அவற்றின் மீது இரக்கம் கொண்டு (தன்னுடலை ஓரிடத்தில் வைத்துவிட்டுக் கூடுவிட்டுக் கூடு பாயும் முறையில்) மேய்ப்பவனின் உடலில் புகுந்து எழுந்தார். அதனால் பசுக்கள் மிகவும் மகிழ்ந்தன. மாலை வந்தது. பசுக்கள் மேச்சலை விட்டு வீடுதிரும்பின. (மூலன்என்னும்) மேய்ப்பவன் வடிவில் இருந்த முனிவரும் பசுக்களுடன் ஊருக்குள் வந்தார். அவைதம்மிடம் சேர்ந்த பின் மீண்டும் காட்டிற்குவந்து தனது உடலைத் தேடினார். அது கிடைக்கவில்லை. இறைவன் இவ்வுடலி லேயே இருந்து திருமந்திரத்தை அருளத் திருவுள்ளம் கொண்டிருப்பதை அறிந்தார். அருகி லிருந்த திருவாவடுதுறைக்குச் சென்றார். அங்கிருந்த படர்அரசின் கீழ் வீற்றிருந்து ஆண்டுக்கு ஒருமந்திரம் வீதம் மூவாயிரம் மந்திரப் பாடல்களை அருளிச்செய்வார். அதுவே திருமந்திர மாகும் (இவர் வரலாற்றின் விரிவைச் சிவமஞ்சரி மலர் 6-ல் காண்க)

சிவாகமங்கள் தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூன்று அளவைகளைக் கொண்டதாகும் இதில் தந்திரக் கலையென்பது வேத, ஆகமங்களில் கூறப்படுவதாம். மந்திரக்கலை என்பது மனம், புத்தி ஆகியவற்றை அடக்கி உபாசனா காண்டத்தில் கூறப்பட்டுள்ளபடி மந்திரங்களை ஜெபித்து இறையருளைப் பெறுதலாகும். மூன்றாவதான உபதேசம் என்பது ஞானகாண்டத்தை விளக்கி நிற்கும். மூலமும் முடிவும் இல்லாத இறைவ னின் தன்மைகளைத் தான்உணர்ந்து, அப்படித்தான் உணர்ந்ததை பிற உயிர்கள் எளிதில் உணரும்படிச் செய்தலாகும். இந்த மூவகை உரைத்திறங்களும் ஒருங்கே பெற்றநூல் திருமந்திரமாகும்.

மேலே குறித்த மூன்றில் முன்னுள்ள தந்திரத்திற் கும் பின்னுள்ள உபதேசத்திற்கும் பிரிவின்றித் தொடர்பு டையதாய் நடுவில் இருப்பது மந்திரமாகும். இதனை யொட்டியே திருமூலர் தனது நூலுக்குத் திருமந்திர மாலை என்ற பெயரை இட்டுள்ளார். நடைமுறையில் இந்நூல் திருமந்திரம் எனப்படுகிறது. மேலும் தமிழ் மறை, மூவாயிரம் தமிழ் எனப்பலவகையாகவும் இந்நூல் அழைக்கப்படுகிறது.

திருமூலர் பாடியவை மூவாயிரம் பாடல்களே என்றாலும், இப்போது வெளிவரும் பதிப்புக்களில் 3100 பாடல்களைக் காண்கிறோம். இதற்குக் காரணம் சில பாடல்கள் இரண்டு முறை வந்துள்ளன. சில பாட பேதங்களால் உருத்திரிந்து வெவ்வேறு பாடல்களாக உள்ளன. சில அறிஞர்கள் இதைபோன்றே பாடல்களை இயற்றித் தமது நூலில் புதிய மேற்கோளாகக் குறித்தி ருக்க அவற்றையும் சேர்த்து இந்நூலில் பதிப்பித்தது முதலியனவாகும். எடுத்துக்காட்டாக முதற் பாடலான ஐந்து கரத்தினை என்று தொடங்கும் விநாயகர் வணக் கமும் இறுதியில் உள்ள வாழ்த்தும் பிற்காலத்தவரால் இணைக்கப்பட்டது என்பதை ஆராய்ச்சியாளர்கள் விரிவாகக் குறித்துள்ளனர்.

இந்நூல் ஒன்பது பகுதிகளைக் கொண்டதாகும். திருமூலர் காரணம் காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம் வியாமளம், காலோத்திரம் சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் விளக்கமாக இதை அருளிச் செய்தார் என்று கூறுவர். இவை ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு ஆகமத்தின் சாரம் என்பர். அது ஏற்புடைய தல்ல. ஒன்பது ஆகமங்களையும் மனதில் நன்கு வாங்கி அவற்றின் திரண்ட கருத்தையே ஒன்பது பகுதிகள் கொண்ட நூலாக்கியுள்ளார் என்பதே உண்மையாகும்.

இந்த ஒவ்வொரு பகுதிக்கும் தந்திரம் என்பது பெயராகும். முதல் தந்திரத்தில் இருபத்து நான்கு அதிகா ரங்கள் உள்ளன. இவற்றில் மேன்மையான உபதேசங்க ளும், வாழ்வின் நிலையாமையும், உயிரின் நிலையா மையும் ஒழுக்கநெறிகளும் அன்புடைமை முதலான அக ஒழுக்கநெறிகளும் சைவசித்தாந்திற்கு மாறுபாடில் லாமல் சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாம் தந்திரத்தில் அகத்தியம் முதல் பெரி யாரைத் துணைகோடல் வரையிலான 25 அதிகாரங்கள் உள்ளன. இதில் கருவுற்பத்தி, மலங்களை உடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்களின் நிலை, ஜீவமார்க்கம், திருக்கோயில்கள், செய்யத்தகாத குற்றங்களான சிவநிந்தனை, குரு நிந்தனை ஆகியவை அவற்றைப் புரிவதால் வரும் தீமைகள் முதலியன விளக்கப்படுகின்றன.

மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்கயோகம் முதல். சந்திரயோகம் வரையிலான 21 தலைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. யோகத்தின் உறுப்புக்கள் அட்டமாசித்தி கள். உயிர் உடலில் நெடுங்காலம் நிலைபெற்றிக்க உபாயம் முதலியன அறிவுருத்தப்பட்டுள்ளன.

யோக நெறி வழி நிற்பாற்கு மந்திரங்கள், யந்திரங் கள் ஆகியவற்றின் சாதனையால் வரும் உதவி மிகவும் அவசியமாகும். நான்காம் தந்திரத்தில் திருவம்பலச் சக்கரம், திரிபுரைசக்கரம் போன்ற பலவகையான சக்கரங் களும் அதனால் அடையும் பயன்களும் விவரிக்கப் பட்டுள்ளன.

ஐந்தாம் தந்திரத்தில் நால்வகை சைவம், நால்வகை நன்னெறிகள், அவற்றைக் கடைப் பிடிப்பதால் உண்டா கும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனும் நால் வகைப்பேறுகள், சாதகனின் தீவிரம் தீவிரதரம் முதலிய நால்வகை நிலைகள் தெரிவிக்கப்படுகின்றன.

ஆறாம் தந்திரத்தில் உயிர்களின் இயல்பு, பசு, பதி, பாச உண்மை, சைவசாதனங்கள் குருவருள் முத லியன விவரிக்கப்படுகின்றன. இதில் சிவகுருதரிசனம் முதல் பக்குவன் என்பதீறாக பதினான்கு உட்பிரிவுகள் உள்ளன.

ஏழாம் தந்திரத்தில் ஆறாதாரம் தொடங்கி இதோ பதேசம் வரையிலான முப்பத்தெட்டு உட்பிரிவுகள் உள்ளன. இவற்றில் ஆறாதாரம், சிவலிங்கத்தின் அறு வகை பேதங்கள், ஆதித்தன் இயக்கம் ஐம்பொறிகளை அடக்கும் முறை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இது நல்லொழுக்கங்களில் நிலைபெற்று (உள்ளுக்குள்ளே) சிவதரிசனம் பெற்று சிவநெறியில் நிற்பதை விளக்குவதாம்.

43 பிரிவுகளை கொண்ட எட்டாம் தந்திரத்தில் உடலில் உள்ள ஐவகை வேறுபாடு, உயிரின் மூவகை நிலை, அறிவு உதயம், ஆநந்தம், பக்தியுடைமை, ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன. இவை மேலோட்ட மாகப் படித்தால் புரியாது. அனுபவம் பெற்றவர்கள் வாயிலாகவே கேட்டு உணர்ந்து தெளிதல் வேண்டும் சுருக்கமாக சொன்னால் இது சிவனோடு கூடி நிற்றல் என்பதை விளக்குவதாகும்.

ஒன்பதாம் தந்திரத்தில் குருமடதரிசனம் என்பது தொடங்கி சர்வவியாபி என்பது வரையிலான 22 தலைப்புகளில் சிவபோகம் பேசப்பட்டுள்ள தென்பர். இவை யாவும் சிவயோகிகள் சிவபெருமானைக் கண் ணாரக்கண்டு அவனோடு சேர்ந்திருந்து இன்புறும் நிலையை விளக்குவதாகும். குறிப்பாகப் பஞ்சாட்சர ஜெபத்தால்வரும் பெரும்பயனை விளக்குகிறது. கூத்து தரிசனம் என்ற பகுதி சைவ சித்தாந்தத்தின் நுண் பொருளை விளக்கி இறைவனின் ஆனந்தக்கூத்தை அனுபவிக்கச்செய்கிறது.

❁ திருமந்திரத்தில் நேரடியாகவும் உள்ளுறையாக வும் அனேக திருக்குறட்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

❁ திருமுறைகளில் பலபாடல்கள் திருமந்திரக் கருத்தை வலியுறுத்துகின்றன. சில அடிகள் அப்படி யேயும் பயிலப்பட்டுள்ளன.

❁ பின்னாளில் தோன்றிய மெய்கண்ட சாத்திர நூலுக்கு அடிப்படையாகக் திகழ்வது திருமந்திரமே யாகும். சொல்லாலும் பொருளாலும் சாத்திரநூல்கள் பல இடங்களில் திருமந்திரத்தைச் சார்ந்து நிற்கின்றன.

திருமூலர் வடமொழி, தென்மொழி முதலான பதினெட்டு பாஷைகளையும் கற்றுத் தெரிந்தவர். வேதங்களையும் - ஆகமங்களையும் ஒப்பு நோக்கி வேதத்தைப் பொது நூலென்றும் ஆகமத்தைச் சிறப்பு நூலென்றும் எடுத்துக்கொண்டு அவற்றின் திரட்சியைப் பிழிந்து தந்ததே திருமந்திரமாகும். திருமந்திரத்தில்தான் "சைவ சித்தாந்தம்" என்ற சொல்வருகிறது. இங்கு வேதங்கள் என்றது உபநிடதங்களைக் குறிக்கும் என்பர்.

பலர் திருமூலர் அருளிய முப்பது உபதேசம், முன்னூறு மந்திரம் ஆகியவற்றைத் தனி நூல்கள்என்று குறித்துள்ளனர். ஆனால், திருமூலரின் முப்பது உபதே சம் என்பது இதிலுள்ள முதல் தந்திரத்தின் முப்பது பாடல்களாகும். முன்னூறு மந்திரம் என்பது நான்காம் தந்திரத்திலுள்ள 300 பாடல்களைக் குறிப்பதாகும்.

திருமந்திரத்திற்கு மறுமந்திரம் இல்லை என்பது பழமொழியாகும். திருமந்திரம் சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் திகழ்கிறது. திருமந்திரத்திலுள்ள பராசக்தி வழிபாட்டை நன்கு எளிமைப்படுத்தித் தோத் திர நூலாக அருளப்பட்டதே அபிராமி அந்தாதியாகும். திருமந்திரத்திற்கான விளக்கத்தை அபிராமி அந்தாதியி லும், அபிராமி அந்தாதிப்பாடலுக்கான சில விளக்கங் களைத் திருமந்திரத்திலும் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பதினோராம் திருமுறை

இந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளவை நாற்பத்தியோரு சிறு நூல்களாகும். இவை சிறுபிரபந்தங் களின் களஞ்சியமாகத் திகழ்கின்றன. இவற்றை இயற்றிய அருளாளர்கள் பன்னிருவராவர். இவர்களில் ஒருவ ராகச் சிவபெருமானும் திகழ்கின்றார்.

இவற்றில் பலநூல்கள் தேவாரகாலத்திற்கு முன் பேயும், பலநூல்கள் தேவாரத்திற்கு நெடுங்காலத்திற் குப் பின்னரும் எழுந்தவையாகும். என்றாலும் இவற் றின் தகுதிநோக்கி ஒன்றாகக் கோர்க்கப்பட்டுள்ளன.

முதல் பத்து திருமுறைகளில் சிவபெருமான் மட்டுமே தலைவனாக ஏற்கப்பட்டு சிறப்புடன் போற் றப்படுகின்றார். ஆனால் இத்திருமுறையில் அடியவர் களின் பெருமைகளைப் பேசும் சில பெருமைமிக்க நூல்களும், சிவகுமாரர்களாகிய முருகனையும், விநாயக ரையும் போற்றும் நூல்களும் இடம்பெற்றுள்ளன.

மற்றைய பதினோரு திருமுறைகளைப் பாடியவர் கள் ஆண்பால் புலவர்கள் ஆவர். இந்தத் திருமுறை யினில் காரைக்காலம்மையார் எனும் பெண்பால் புலவரும் பாடியுள்ளார். இந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் 1388 ஆகும்.

இனி, இத்திருமுறையின் சிறப்புக்களை இயன்ற வரை காணலாம். இங்கு முதலில் இவற்றைப் பாடிய ஆசிரியரின் வரலாற்றுக் குறிப்பும் தொடர்ந்து நூலைப் பற்றிய குறிப்புரைகளும் இடம் பெற்றுள்ளன.

### 1. திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம்

பதினோராம் திருமுறையில் முதலாவதாக இடம் பெற்றிருப்பது திருவாலவாயுடையார் அருளிய திரு முகப்பாசுரமாகும்.

இது மதுரையம்பதியில் வீற்றிருக்கும் ஆலவாய் அண்ணலாகிய சொக்கநாதப் பெருமான் தன் அடியவ ரான பாணபத்திரனுக்குப் பொன்னும், பொருளும் தரும் படிச் சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதி அனுப் பிய சீட்டுக் கவியாகும்

கடித இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழும் இப்பாசுரம் விடுநர், பெறுநர், கடிதத்தின் நோக்கம் பொருள் ஆகியவற்றை நிரல்வரிசையில் கொண்டிருப் பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் பன்னிரெண்டு அடிகள் இடம் பெற்றுள் ளன. இதனைத் தினமும் பாராயணம் செய்துவந்தால் பொருள் தட்டுப்பாடு இருக்காது என நம்புகின்றனர்.

## காரைக்காலம்மையார் அருளியவை

திருவாலவாய் உடையாரின் பாசுரத்தை அடுத்து இடம் பெற்றுள்ளவை, இவர் சிவபெருமானால் அன்பு டன் அம்மையே என அழைக்கப்பட்டவர் காரைக் காலம்மையாரின் பதிகங்களாகும். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவார். தளராத பக்திகொண்டவர். தனதத்தன் என்பவனை மணந்து இல்வாழ்வு நடத்தி வருகையில் இவருடைய தெய்வத் தன்மையை அறிந்து கொண்ட இவரது கணவன் இவரைத் தெய்வமாகவே போற்றி, இவரைத் துறந்து தனித்து ஒழுகினான்.

அதனால் தன்னை முழுமையாக இறை வழிபாட் டில் ஈடுபடுத்திக் கொண்ட அம்மையார், இறைவனை வேண்டிப் பேய் உருவம் பெற்றார். பிறகுப் பலதலங் களை தரிசித்துக்கொண்டே கயிலை மலை அடைந்தார். அங்கு இறைவனைக் கண்டு மகிழ்ந்தபின் விடை பெற்றுக் கொண்டு, தொண்டை மண்டலத்தில் உள்ள திருவாலங்காட்டிற்கு வந்து நடராசப் பெருமானின் தூக்கிய திருவடிக் கீழ் அமர்ந்து நிலைபெற்றார்.

இவர் அருளிய நூல்கள் நான்காகும். அவற்றில் முதல் இரண்டு பதிகங்களாகும். தேவாரப்பதிகங்கள் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய தாதலின் மூத்த திருப்பதிகங்கள் என்று பெயர் பெறுகின் றன. இவற்றில் ஒன்று இறைவனின் ஆடல்கோலத்தை விளக்கும் பொதுப்பதிகமாகும். மற்றது திருவாலங் காட்டில் அருளிச் செய்ததாகும். அதனால் இது திரு வாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் என்று பெயர் பெறுகின் றது. மூன்றாவது நூல் இரட்டை மணிமாலையாகும். நான்காவது நூல் அற்புதத் திருவந்தாதியாகும். இனி இவற்றின் சிறு குறிப்புக்களை வரிசையாகக் காணலாம்.

### 2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

"நட்டபாடை" பண்ணில் அமைந்த இந்தப் பதிகம் திருவாலங்காட்டைப் பற்றிப் பேசுவதால் திரு வாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்று அழைக்கப்படு கின்றது. 'கொங்கை திரங்கி' எனத் தொடங்கும் இப்பதிகத் தில் பதினோரு பாடல்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் சிவபெருமான் ஆடும் இடுகாட்டின் வர்ணனை சிறப்பாக உள்ளது. பேய்கள், பூதங்கள், ஆந்தைகள், நரிகள் அலறி ஊளையிடும் சுடுகாட்டில் ஈமத்தீயை விளக்காகக் கொண்டு சிவபெருமான் அண்டமுற நிமிர்ந்தாடும் நடனத்தை விளக்குவதாக உள்ளது. பலவேறு பண்டைக்கால இசைக்கருவிகள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.

### 3. மூத்த திருப்பதிகம்

'எட்டி இலவம்' என்று தொடங்கும் இந்தப் பதிகமும் சிவபெருமானின் நடனத்தை விரிவாகப் பேசுகிறது. இதிலும் பேய்கள், சுடுகாட்டிலுள்ள, எட்டி, இலவம், தாளிப்பனை முள்ளி, கள்ளி, முதலிய செடி கொடிகள் பற்றியும் மத்தளம், முழவு, குழல் போன்ற இசைக் கருவிகள் முதலியவற்றைப் பற்றியும் விரிவாக குறிக்கப் பட்டுள்ளன.

மேற்குறித்த இரண்டு பதிகங்களின் இறுதிப் பாடல்களிலும் இப்பதிகங்களைப் பாடுவதால் "சிவகதி சேரும்" என்றும் பாடியாட பாவம் நாசம் ஆகுமென்றும் பலன்கள் கூறப்பட்டுள்ளன. தேவாரத்தில் பதிகத்திற்குப் பலன்கூறும் முறை இந்தப் பதிகங்களிலிருந்தே பெறப் பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

### 4. இரட்டை மணிமாலை

அம்மையார் அருளிய இரட்டை மணிமாலை 20பாடல்களைக் கொண்டதாகும். அந்தாதித் தொடை யாய் அமைந்தது.

### 5. அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்று என்று தொடங்கும் 100 பாடல்களை கொண்டது. 101-ஆவது பாடலில் இந்த அந்தாதியை ஓதுவதால், 'பேராக்காதல் பிறந்து ஆராத அன்பினோடு சிவபெருமானை அடைவர்' என்று பலன் கூறப்பட்டுள்ளது.

## ஐயடிகள் காடவர்கோன்

இவர் தொண்டைமண்டலத்தை ஆண்டுவந்த பேரரசர். பல்லவ மகேந்திரவர்மனுக்குப் பின்னர் வந்த அரசர். இவர் அருளியது க்ஷேத்திர வெண்பாவாகும்.

### 6. க்ஷேத்திர வெண்பா

இது பல்லவ மன்னர் தில்லைச் சிற்றம்பலம் தொடங்கி குடந்தைக் கீழ்க்கோட்டம், ஐயாறு ஆரூர், முதலான இருபத்திநான்கு தலங்களைத் தரிசித்து பாடிய 24 பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் தலங்களுக்கே முதன்மையளிக்கப்பட்டிருப்பதால் இது க்ஷேத்திர வெண்பா என்று அழைக்கப்பெறுகின்றது.

## சேரமான் பெருமாள் நாயனார்

இவர் சேரநாட்டு மன்னர். தில்லைச்சிற்றம்பலத் தில் பேரன்பு கொண்டவர். தினமும் பூசையின் இறுதியில் தில்லைச் சிற்றம்பலவனின் கழலொலியைக் கேட்கும் பேறுபெற்றவர். இத் திருமுறையில் முதற்பாடலாக இடம் பெற்றுள்ள திருமுகப்பாசுரம், இறைவனால் இவருக்கு எழுதி அனுப்பப்பட்டதேயாகும். இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பர். அறுபத்து மூன்று நாயன்மார்க ளில் ஒருவர். இவர் அருளிய நூல்கள் மூன்றாகும். அவை வருமாறு :

### 7. பொன் வண்ணத்தந்தாதி

"பொன்வண்ணம்" என்று தொடங்கி "பொன் வண்ணமே" என்று முடிவதால் இந்த அந்தாதி இப்பெயர் பெற்றது. 100 பாடல்களைக் கொண்டது 101வது பாடல் இந்நூல் இயற்றிய சேரமானின் புகழைக்கூறுகிறது. கடவுளி டம் மானிடப் பெண்கள் காதல்கொண்டு பாடுவதாக அமைந்த 40க்கும் மேற்பட்ட பாடல்கள் இதில் பெற்றுள் ளன. சிவபெருமானின் அட்ட வீரட்டங்கள், சிவபெருமான் இருவராய் நிற்றல் மும்மூர்த்திகளாய் நிற்றல், உலகின் இயல்பு முதலியன சிறப்புடன் இந்த நூலில் பேசப்பட்டுள்ளன.

### 8. திருவாரூர் மும்மணிக்கோவை

இந்நூல் அகவல், வெண்பா, கட்டளைக் கலித் துறை என்னும் மூவகைப் பாக்களால் அந்தாதித் தொடை யாலான முப்பது பாடல்களால் ஆனது. அகத்துறைப் பாடல்கள் நிறைந்தவை. திருக்கடவூர், திருவாரூர் முதலான பல தலங்கள் இந்நூலில் பேசப்பட்டுள்ளன.

### 9. திருக்கயிலாய ஞான உலா

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய மாபெ ரும் நூல் இந்தத் திருக்கயிலாயஞான உலாவாகும். உலா வரிசையில் முதன்முதலாகத் தோன்றியதால் ஆதியுலா என்றும் அழைக்கப்படுகிறது. சிவபெருமான் திருவுலா போந்தபோது அணிந்து கொண்ட அலங்கார அணிகள் சிவபெருமானுக்குத் தொண்டர்களாக விளங் கும் நந்தி, மகாகாளர், வசுக்கள், சப்தரிஷிகள், அட்ட திக்குப் பாலகர் முதலிய அனேகரின் தொண்டுகள், பெருமான் பவனி வருவதைக் கண்டு ஏழுவகைப் பெண்டிரும் உவந்து செய்யும் தொண்டுகள், சிவபெரு மான் பவனி வருவதைக் கண்டு ஏழுவகைப் பெண்டி ரும் அடைந்த நிலைகள் முதலியன 197 கண்ணிகளால் கூறப்பட்டுள்ளன. இறுதியில் ஒரு வெண்பா உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் இரண்டு திருக்குறட்பாக்களும் இடம் பெற்றுள்ளன. சுந்தர மூர்த்தி சுவாமிகளுடன் கயிலாயத்திற்குச் சென்ற சேரமான் பெருமாள் நாயனார், அங்கு, சிவபெருமானின் கொலுமண்டபத்தில் இந்நூலை அரங்கேற்றினார். இதனைச் செவிமடுத்துச் சிவபெருமான் மகிழ்ந்தார். பின்னர் அச்சபையில் வீற்றிருந்த மகாசாத்தன் இதனைப் பூமிக்குக் கொண்டு வந்து திருப்பிடவூர் என்னும் தலத்தில் வெளிப்படுத்தினார்.

இந்நூல் பூமியிலிருந்து கயிலைக்குச் சென்று மீண்டும் பூமிக்கு வந்தது என்ற பெருமையை உடையது. மேலும் "திருக்குறளைத் தன்னுள் கொண்டு அதனைச் சிவபெருமான் திருச்செவிகளில் ஓதுவித்தது" என்ற பெருமையையும் உடையது.

## நக்கீரதேவநாயனார்

சங்காலத்தில் வாழ்ந்தபுலவர் இறைவனிடம் வாது செய்து நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம்குற்றமே என்று கூறித்தமிழ் காத்தவர். இவர்பாடியதாகப் பத்து நூல்கள் இந்தத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவை முறையே :

### 10. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி

சொல்லும் பொருளும் எனத்தொடங்குவது. நூறு பாடல்களைக் கொண்டது. இதிலுள்ள ஒற்றைப் படஎண்ணிக்கைப் பாடல்கள் கயிலாயத்தையும் இரட்டைப் படை எண்ணிக்கையில் அமைந்த பாடல்கள் காளத்தியையும் சிறப்பிக்கின்றன. நிறையப் புராணக்கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

### 11. ஈங்கோய் மலை எழுபது

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஈங்கோய் மலையைச் சிறப்பித்து பாடப்பட்ட எழுபது பாடல்களைக் கொண்டது. சிவபெருமானின் பெருமைகளுடன் இந்த மலையின் சிறப்புக்களும் சிறப்புடன் இந்நூலில் பேசப்பட்டுள்ளது.

### 12. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை

கும்பகோணத்திற்கு அருகில் காவிரிக்கரையில் அமைந்துள்ளது திருவலஞ்சுழியாகும். இவ்வூர் இறைவர் மீது அகவல், வெண்பா கட்டளைகலித்துறை என்னும் மூன்று வகைப்பாடல்கள் மாறிமாறிவர 15 பாடல்கள் இந்நூலில் உள்ளன.

### 13. திருவெழுகூற்றிருக்கை

இரதபந்தமாக ஒன்றுமுதல் ஏழுவரை ஏறி இறங்கும்படிச் சொற்கள் அமைக்கப்பட்ட 55வரிகளை உடையது. இதைத் தொடர்ந்து வெண்பா ஒன்று உள்ளது இதில் நிறைய புராணக்கதைகள் குறிக்கப்பட்டுள்ளன.

### 14. பெருந்தேவப் பாணி

ஆசிரியப்பாவினால் அறுபத்தேழு அடிகளில் பாடப்பெற்றது. இப்பாடல் பெருந்தேவனாகிய இறைவன்மீது பாடப்பட்ட இசைப்பட்டாதலின் பெருந்தேவப் பாணி எனப்பட்டது. திருஆலவாயில் வீற்றிருக்கும் (மதுரை) சோமசுந்தரப் பெருமான் மீது பாடப்பட்டது. இதைத் தொடர்ந்து பிழை பொறுத்தருள வேண்டும் என்ற வெண்பா ஒன்றும் உள்ளது.

### 15. கோபப் பிரசாதம்

கோபத்தால் பக்தனை ஒறுத்துப் பின்னர், அவனை ஆட்கொண்டு அவனுக்கு அருளும் இறைவனின் தகைமையை உணர்த்துவதால் இந்தநூல் கோபப்பிரசாதம் எனப் பெயர் பெற்றது. தவறுபெரிதுடைத்தே என்று இரண்டு முறை கூறித்தொடங்கி அதே அடிகளால் முடிகிறது. இது ஆசிரியப்பாவால் இயன்ற 99 அடிகளைக் கொண்டது. திருமாலுக்கு ஆழி அளித்தது தொடங்கி, சிவபராக்கிரமங்கள் பல பேசப்படுவதுடன் இறைவனின் எளிமையும் பேசப்பட்டுள்ளன.

### 16. கார் எட்டு

இது கார்காலத்தின் சிறப்பை எட்டு பாடல்களில் கூறுகிறது. சிவபெருமானின் சடைகளின் இயல்பைப் பலபடக் கூறுகிறது. அவருடைய கழுத்தினைப் போன்று கார் காலம் கருத்திருக்கின்றது என்று எட்டு பாடல்களிலும் கூறப்பட்டுள்ளது. மேகங்கள் இடித்து மின்னி முழங்குவது. சடைகள் எண்திசைகளிலும் பரவிநிற்றல், நந்தியின் இடிகுரல், திருநீலகண்டம், சங்கநாதம் முதலியவை உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### 17. போற்றிக்கலிவெண்பா

இறைவனின் அருட்செயல்களைப் போற்றி உரைக்கும் கலிவெண்பா ஆதலின் இப்பெயர் பெற்றது. 45 கண்ணிகளை உடையது. "திருத்தங்கு" என்று தொடங்கி, அடிமுடிதேடியது, அருச்சுனர்க்குப் பாசுபதந் தந்தது முதலான கதைகளைக் கூறுகிறது. இறுதியில் இந்நூல் காளத்தியையும், கயிலை மலையையும் போற்றி, சிவனை நினைப்பவர்கள் இமையவர்கள் போற்ற அத்தனடி சேர்வர் என்ற பலனையும் கூறுகின்றது.

### 18. திருமுருகாற்றுப்படை

இது முருகனைப் பற்றி அமைந்த ஆற்றுப்படை நூலாகும். "உலகம் உவப்ப" என்று தொடங்கி முருகப் பெருமானின் அறுபடைவீடுகளின் சிறப்பு, இயற்கை காட்சிகள், மகளிர் நிலை அருட்திறன் ஆகியவற்றைக் கூறுகிறது. சங்க இலக்கியமான (பத்துப்பாட்டில்) முதல் பாட்டாகத் திகழ்வது. 317 வரிகள் இடம் பெற்றுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடர்ந்து நேரிசை வெண்பாவில் அமைந்த 10 பாடல்கள் உள்ளன. ஒரு வள்ளலைக் கண்டு பரிசில்பெற்ற புலவர். இன்னொரு புலவருக்கு வள்ளலின் கொடைத் தன்மையையும், அவர் இருப்பிடத்தையும் கூறி ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படையாகும்.

19. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான கண்ணப்பதேவ நாயனாரின் (கண்ணிடந்து அப்பிய) வீரத்தைப் பற்றிப் பேசுவதால் இப்பெயர் பெற்றது. நக்கீரதேவருக்குக் காளத்திமேலும் கண்ணப்பர் மேலும் உள்ள அன்பை விளக்கும் நூல். கண்ணப்பன் செய்த பூசையின் திறத்தையும் அன்பையும் விரிவாக விளக்குகிறது. 157 வரிகளால் இயன்ற இந்நூலின் இறுதியில் கண்ணப்ப நாயனாரைப் பற்றிய சிறு குறிப்பைத் தரும் வெண்பா ஒன்றும் உள்ளது.

## கல்லாட தேவநாயனார்

இவர் சிவநெறிநின்ற கல்லாடர். சங்ககாலப் புலவரான கல்லாடரிடமிருந்து வேறானவர். இவரைப் பற்றிய பிறசெய்திகள் தெரியவில்லை. இவர் அருளியநூல் கண்ணப்பதேவர் மறம் ஆகும்.

20. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

நக்கீரர் அருளியதைப் போலவே கல்லாடதேவ நாயனாரும் கண்ணப்ப தேவரின் பக்தியையும் வீரத்தையும் புகழ்ந்து பாடியுள்ளார். கண்ணப்பதேவரின் திருவுருவ வர்ணனையுடன் தொடங்கும் இந்நூல் சுருக்கமாக அவர் செய்த பூசை, கண்ணிடந்து அப்பியது ஆகியவற்றைக் கூறுவதுடன் கண்ணப்பரை வழிபட்டாலே நமது பிறப்பினை அறுத்து வினைகளை ஒழித்து வீடு பெறலாம் என்ற பயனையும் 38 அடிகளில் கூறுகிறது.

## கபிலதேவர்

இவர் சங்ககாலக் கபிலரிடமிருந்து வேறானவர். சைவநெறி நின்ற பெரும்புலவர். விநாயகர் மீதும் சிவபெருமான் மீதும் பாடிய அருளாளர். இவரைப்பற்றிய விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. இவர் பாடியவை மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, சிவபெருமான். திருஇரட்டை மணிமாலை சிவபெருமான் திருவந்தாதி முதலிய மூன்றாகும்.

21. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை

"திருவாக்கும் செய்கருமம் எனக்கூட்டும்" என்று தொடங்கும் இந்நூலில் இருபது பாடல்கள் உள்ளன. முழுக்க விநாயகப் பெருமானின் திருவடிகளைச் சேர்வதையே பாடுகின்றது. (வெண்பாவும் - கட்டளைக் கலித்துறையும் அடுத்தடுத்து பாடப்பட்டுள்ளன)

22. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை

வெண்பாவும் - கட்டளைக் கலித்துறையுமாகிய இருவகை மணிகளால் மாறிமாறித் தொடுக்கப்பட்ட முப்பத்தேழு பாடல்களைக் கொண்டது. இதில் பல்வேறு தலங்கள் கூறப்பட்டுள்ளன.

23. சிவபெருமான் திருவந்தாதி

'ஒன்றெனத் தொடங்கி ஒன்றென' முடிவது. நூறு பாடல்களைக் கொண்டது பலபாடல்கள் அகத்துறையில் அமைந்துள்ளன.

## பரண தேவநாயனார்

இவரும் சங்ககாலப் புலவரான பரணரிலிருந்து வேறானவர். இவருடைய பாடலில் திருமந்திரக் கருத்துக்கள் நிறைய இடம் பெற்றுள்ளன. இவர் இயற்றி அருளியது சிவபெருமான் திருவந்தாதி ஆகும்.

24. சிவபெருமான் திருவந்தாதி

இதுவும் மேலே குறித்த (கபிலரின்) அந்தாதியைப் போலவே ஒன்றெனத் தொடங்கி ஒன்று என்று முடிகிறது. 101வது பாடலில் இந்த அந்தாதியின் ஒரு பாடலைப் படித்தாலும் சிவலோகம் கிடைக்கும் என்ற பலன். கூறப்பட்டுள்ளது. அதில் பல்வேறு தலங்களிலுள்ள சிவபெருமானின் பெருமைகளும் திருவிளையாடல்களும் பேசப்பட்டுள்ளன.

## இளம் பெருமானடிகள்

இவரைப் பற்றிய விளக்கம் தெரியவில்லை. இவர் அருளியநூல் சிவபெருமான் திருமும்மணிக் கோவையாகும்.

25. சிவபெருமான் திருமும்மணிக்கோவை

அகவல், வெண்பா, கட்டளை கலித்துறை ஆகிய மூவகைப்பாடலும் மாறிமாறி வரும்படி பாடப்பட்ட முப்பது பாடல்களைக் கொண்டது. இவை சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்ததாகும்.

## அதிரா அடிகள்

இவரைப் பற்றிய விளக்கமும் தெரியவில்லை. இவர்அருளியநூல் மூத்தபிள்ளையார் மும்மணிக் கோவையாகும்

26. மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை

இதில் இப்போது 24பாடல்களே உள்ளன. அகவல். வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாடல்களால் தொடுக்கப்பட்டது. விநாயகர் தாய் தந்தையை வலம் வந்து மாம்பழம் பெற்றது. அசுரர்களை வென்றது. சிவபெருமான் இமயவல்லியுடன் சேர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகரைப் பெற்றது. விநாயகரின் விசுவரூபம் முதலிய செய்திகள் பேசப்பட்டுள்ளன.

## பட்டினத்துப் பிள்ளையார்

திருவெண்காட்டு அடிகள் காவிரிப்பூம் பட்டினத் தைச் சேர்ந்தவர். அதனால் பட்டினத்துப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். இறைவனையே மகனாக அடைந்த பாக்யம் பெற்றவர். பெருவணிகராக இருந்து ஓரேநாளில் அனைத்தையும் துறந்தவர். அற்புதமான சித்தர். இவருடைய சீடர் பத்ரகிரியார் திருவிடைமரு தூரில் நெடுநாட்கள் தங்கியிருந்தவர். இவர் பலதலங் களைத் தரிசித்து இறுதியில் திருஒற்றியூரை அடைந்து சிவலிங்க வடிவமாகிவிட்டவர். இவர் அருளிய ஐந்து நூல்கள் இத்திரு முறையில் இடம் பெற்றுள்ளன. இவரி டம் கணக்குப் பிள்ளையாக இருந்த சேந்தனாரே திரு விசைப்பா பாடிய புலவராவார்.

### 27. கோயில் நான்மணிமாலை

கோயில் என்று புகழப்படும் சிதம்பரத்தில் எழுந் தருளியிருக்கும் நடராசனைப் போற்றுவது. வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் நால்வகைப் பாடல்களால் இயன்ற மணிமாலை. இவ்வகை இலக்கி யத்திற்கு இதுவே முன்னோடி நூலாகும் இதில் நாற்பது பாக்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் நாலாம் பாடலில் சிவபெருமானின் தசாங் கம் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் **"அடியவர்களின் பெயர் எழுதப்படும் நெடிய புத்தகம் கயிலையில் உள்ளதென்றும் அதில் தன்னுடைய பெய ரையும் எழுதிக் கொள்ள வேண்டுமென்றும் அடிகள்"** இறுதிப்பாடலில் சிவபெருமானிடம் வேண்டுகின்றார். மேலும், சிவபராக் கிரமங்களையும், சிவனின் அருள் புரியும் தன்மை களையும், அலங்காரங்களையும் கூறிப் போற்றுவது படித்து இன்புறத்தக்கதாகும்.

### 28. திருக்கழுமல மும்மணிக் கோவை

இது திருக்கழுமலம் என்று புராணங்களில் சிறப் பிக்கப்படும் சீர்காழியின்மீது பாடப்பட்ட நூலாகும். முதல்பாடலில் கழுமல புராணச் செய்திகள் திருஞானசம் பந்தருக்குப் பொற்கிண்ணத்தில் பால் அளித்தது. அவர் தோடுடைய செவியன் என்று பாடத்தொடங்கியது முத லான செய்திகள் பேசப்பட்டுள்ளன. இதில் பன்னி ரெண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன (சில நூல்களில் 30 பாடல்களும் அச்சிடப்பட்டுள்ளன. இதில் 13 முத லுள்ள பாடல்களில் வடமொழி சொற்கள் மிகுதியாக இருப்பதால் இவை பட்டினத்தடிகளால் பாடப்பட்டவை யல்ல என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

## திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமிபேரில் எல்லையற்ற பத்தியுடையவர். நெடுநாள் இத்தலத்தில் தங்கியிருந்தவர். இவ்வூர்ப்பெருமான் மீது பாடியதே இந்நூலாகும் அகவல், வெண்பா, கலித்துறை ஆகியவற்றால் இயன்ற முப்பது பாடல்களைக் கொண் டது. முதற்பாடல் உமையொருபாகக் கோலத்தைத் தனிச் சிறப்புடன் விளக்குகின்றது. இருபத்தெட்டாவது பாடல் திருவிடைமருதூர் தலவரலாற்றைச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் கூறுகிறது. இதில் வரகுணபாண்டியரின் சிவபக்தி சிறப்புடன் பேசப்பட்டுள்ளது.

### 30. திருவேகம்பமுடையார் திருவந்தாதி

காஞ்சிபுரத்தில் மாமரத்தடியில் எழுந்தருளியுள்ள ஏகம்பர் மீது பட்டினத்து அடிகளால் பாடப்பட்டது. இந் நூலாகும். 100 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பல் வேறு தலங்களின் பெயர்கள் வரும்படிச் சொல்லும் பொருளும் சிறக்கக் குறிக்கப்பட்டுள்ளன. பல அகத் துறைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. காஞ்சியின் வள மும் கயிலைமலை வளமும் சிறப்பாகப் போற்றப்பட் டுள்ளன.

### 31. திருவொற்றியூர் ஒருபா ஒருபது

பட்டினத்தடிகள் அருளியஇந்நூல் சென்னை யின் ஒருபகுதியாக உள்ள திருஒற்றியூர்ப் பெருமான் மீது பாடப்பட்ட (அகவல் பாடலால் அமைந்த) பத்து பாடல் களை உடையது. இதிலுள்ள முதல்பாடல் இப்பேரண் டமே சிவனுடைய அங்கங்களாகத் திகழ்வதைப் போற் றுகிறது. மூன்று சுடர்கள் கண்கள், வானம் எண்தோள், ஆடை, திசைகள், பாதாளம் திருவடிகள். காற்றே உயிர்ப்பு சக்தி என்று விரிவாகப் பேசுகிறது. இரண்டாம் பாடல் இறைவன் எளிமைக்கு எளிமையாய் நிற்பதை உணர்ந்துகிறது. இறுதிப்பாடல் போற்றித் திருஅகவலாக உள்ளது.

## நம்பியாண்டார் நம்பிகள்

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நாரையூர் என்னும் தலத்தில் தோன்றியவர். சிறுவயதிலேயே இவ்வூரிலுள்ள பொள்ளாப் பிள்ளையாரின் அருளைப் பெற்றவர். மூவர்முதலிகள் அருளிய திருமுறைகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுக்கும் பேறுபெற்றவர். இவர் அருளிய பத்துநூல்கள் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் முதல் நூல் விநாயகர் மீது பாடப் பட்டது. இரண்டாவது தில்லைச் சிற்றம்பலவன் மீது அருளப்பட்டது. மீதி எட்டில் ஒன்று அறுபத்து மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியார்களையும். மற்றொன்று திருநாவுக்கரசரையும் போற்றமற்ற ஆறு திருஞானசம்பந்தர் மீது பாடப்பட்டுள்ளன. இது நாரையூர் நம்பிக்குத் திருஞானசம்பந்தர் மீது இருக்கும் பக்தியை வெளிப்படுத்துகிறது. இவற்றில் ஞானசம்பந்தரின் பல்வேறு சிறப்புகளும் வரலாற்று அற்புதங்களும் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன.

### 32. திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை

தனக்கு அருள்புரிந்த திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் மீது நம்பியாண்டார் நம்பி பாடியது இந்நூலாகும். பொருட்சுவையுடன் சொற்சுவையும் நிரம்பியது. எடுத்துக்காட்டாக. கணபதியை, 'குலமலை மானிற் பிறந்த களிறு', அரசமகிழ் அத்தி என்றுபலவாறு போற்றுவது குறிக்கத்தக்கது. 20 பாடல்களைக் கொண்டது.

### 33. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

எழுபது பாடல்களைக் கொண்ட இந்நூல் திருச்சிற்றம்பத்தில் நடனமாடும் பெருமானைப் போற்றுவதுடன் நிறைய புராணச் செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

### 34. திருத்தொண்டர் திருவந்தாதி

ஏழாந் திருமுறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத்தொகையை விரித்து நம்பிகள் 88 பாடல்களில் அந்தாதியாகப் பாடியுள்ளார். நூல் தொடங்குவதற்கு முன்பாக நம்பிகளுக்கு வணக்கம் செலுத்திப்பாடிய பாடல் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இறுதியில் நூற்பயன் கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தரை "அடியேன் தொடுத்த அந்தாதி கொண்ட பிரான்" என்று சிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### 35. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி

திருஞானசம்பந்தர் பிறந்த சீர்காழியைப் போற்றும் பாடலுடன் தொடங்கும் இந்நூல் 100 பாடல்களைக் கொண்டது.

ஞானசம்பந்தரைக் காழியின் மன்னனாகவும், கவுணியர் குலதீபமாகவும், கண்ணப்பநாதனாகவும் பலநூறு சிறப்புக்களால் நம்பிகள் குறிக்கின்றார். சுருக்கமாகச் சொன்னால் இது திருஞான சம்பந்தரை உச்சியில்வைத்துப் போற்றும் தலைசிறந்த நூலாகும். ஞானசம்பந்தரின் பல அருட்செயல்கள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.

### 36. சண்பைவிருத்தம்

சண்பை என்பது சீர்காழிக்கு ஒருபெயராகும். இதில் இடம் பெற்றுள்ள பதினோரு விருத்தப் பாடல்களில் பத்து பாடல்கள் சண்பையர் காவலன் சம்பந்தனே என்று முடிகின்றன. இந்நூல் சண்பைநகரின் பேரழகைப் பேசுவதால் இப்பெயர் பெற்றது.

### 37. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

இது ஞானசம்பந்தர் மீது பாடப்பட்டது. ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களால் தொடுக்கப்பட்ட 30 பாடல்களைக் கொண்டது. அகத்துறையில் அமைந்த பலபாடல்கள் உள்ளன. ஞானசம்பந்தர் இறையருளால் செய்த அற்புத நிகழ்ச்சிகள் பட்டியலிட்டு ஒரு பாடலில் பாடப்பட்டுள்ளது. இது அரியபாடலாகும்.

### 38. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை

இதில் முதற்பகுதி திருக்கழுமலமாகிய சீர்காழியின் பல வளங்களையும், சிறப்புக்களையும், நடுப்பகுதி ஞானசம்பந்தரின் ஆற்றல்களையும் பிற்பகுதி அடியவர்கள் வேண்ட திருஞானசம்பந்தர் அணிமணிகள் பூண்டு உலாவந்ததையும் அதைக் கண்டு எழுவகை மகளிர் அடைந்த நிலைகளையும் விவரிக்கிறது. 147 வரிகளைக் கொண்டது.

இதில் ஒவ்வொரு நாயன்மாரைப் பற்றிய சிறு விளக்கமும் அவர் தம் சிறப்பும் இடம் பெற்றுள்ளன.

### 39. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

தமிழில் அமைந்துள்ள இலக்கியங்களில் தனித்தன்மை பெற்றது திருக்கலம்பகம் ஆகும். இது பலவகையான இலக்கிய வகைகளின் கலவையாகும். திருஞானசம்பந்தரின் அளப்பரிய பெருமைகளைப் பேசுவது. இதில் நாற்பத்தொன்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 40. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

அறுபத்தைந்து அடிகளால் தொடுக்கப்பட்டுள்ள இத் தொகை நூல் திருஞானசம்பந்தர் பிரம்ம தீர்த்தக் கரையில் அழுதது இறைவன் அருளால் உமையவளின் திருமுலைப்பால் அருந்தி ஞானம் பெற்றது முதலாக இறையருளால் செய்த அற்புதங்களை வரிசை யாகக் கூறித் திருமணம் செய்து கொண்டு, சிவசோதியில் கலந்தது வரையிலான செய்திகளைக் கூறுவதோடு திருஞானசம்பந்தரிடம் அன்பு பூண்டிருந்த குலச் சிறையாரையும் முருகநாயனார். நீலநக்கர் முதலியோரைப் பற்றியும் குறிப்பிடுகிறது.

### 41. திருநாவுக்கரசர் ஏகாதசமாலை

நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தர் மீது கொண்ட அளவற்ற பக்தியால் அவர் மீது ஆறு நூல்களை அருளிச் செய்தார். பின்னர், திருநாவுக்கரசர் மீது இந்த மாலையை அருளினார். இதில் 11 பாடல்கள் உள்ளன. திருநாவுக்கரசரின் சிறப்புக்கள் இதில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. திருவடி புகழ்ச்சியும் இடம் பெற்றுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பன்னிரெண்டாம் திருமுறை - திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பெற்ற பெரிய இலக்கியம் திருத்தொண்டர் புராணமாகும். அளவால் பெரியதாக இருப்பதாலும், பெருமைமிக்க அடியவர்களின் பெருமைகளைப் பேசுவதாலும் பெரிய புராணம் என்று அழைக்கப்படுகிறது.

சேக்கிழார் பெருமான் தொண்டைநாட்டிலுள்ள குன்றத்தூரில் 'சேக்கிழார்' எனும் குடியில் பிறந்தவர் இவருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். இவருடைய குடிப்பெயரால் சேக்கிழார் என்று அழைக்கப்படுகின்றார்.

இளம் வயதிலேயே மிக்க நுண்ணறிவு படைத்தவராகவும் ஆற்றல் மிகுந்தவராகவும் இருந்ததால் சோழ நாட்டை ஆண்ட குலோத்துங்கசோழர் இவரைத் தனது சபையில் முதலமைச்சராக நியமித்து, உத்தமசோழ பல்லவன் என்ற பட்டத்தையும் அளித்தார்.

இவர், ஒருநாள் அரசனிடம் சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறி, அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரவல்லது என்று கூறினார். அதைக் கேட்டு மகிழ்ந்த அரசன் அடியவர்களின் கதையில் மிக்க விருப்பம் கொண்டு அதை நூலாகப் பாடுமாறு இவரிடம் கேட்டுக் கொண்டான்.

சேக்கிழார், அடியவர் வாழ்ந்த தலங்களுக்கும், சிவத்தலங்களுக்கும் பயணம் செய்து அரிய தகவல்களைச் சேகரித்தார். சிதம்பரம் சென்று புராணத்தை ஆரம்பிக்க நடராசப் பெருமானைத் தொழுதார். அப்போது நடராசப் பெருமான், 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். சேக்கிழார் தொடர்ந்து பெரிய புராணத்தைப் பாடி முடித்தார்.

இதைக் கேள்வியுற்ற அரசன் சிதம்பரத்திற்கு வந்தான். சித்திரைமாதம் திருவாதிரையில் புராண அரங்கேற்றம் தொடங்கப்பட்டது. அரசன் தான் இருந்து கேட்டதுடன் அயல் நாட்டு மன்னர்களையும் பெரியோர்களையும் அன்பர்களையும் அழைத்து வந்து அவர்களையும் கேட்கும் படிச்செய்தான். ஓராண்டு காலம் புராணம் விரிவுரை செய்யப்பட்டு, சித்திரை திருவாதிரையில் நிறைவு பெற்றது. நிறைவுநாளில் மன்னன் சேக்கிழாரையும் பெரிய புராண ஏடுகளையும் யானை மேல் ஏற்றி நகர்வலம் செய்வித்தான்.

**நூல் அமைப்பு :-**

இந்நூல் இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்காண்டம் சுந்தரரின் வரலாற்றில்தொடங்கி பல அடியவர்களின் வரலாற்றை விவரித்துத் திருநாவுக்கரசர் புராணத்துடன் நிறைவடைகிறது. இரண்டாம் காண்டம் திருஞானசம்பந்தர் புராணத்துடன் தொடங்கி பல அடியவர்களின் வரலாற்றை விவரித்துக் கூறிச் சுந்தரர் கயிலைக்குச் செல்வதுடன் நிறைவுபெறுகிறது.

முதல் காண்டத்தின் முதலில் இடம் பெற்றிருப்பது திருமலைச் சருக்கமாகும். இதில் கடவுள்வாழ்த்து. சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையின் சிறப்பு.

சுந்தரரின் தோற்றம், அவர் கயிலையில் பணிபுரிதல், அநிந்தை கமலினியை ஆவலுடன் நோக்கியது. இறைவன் அவரை பூமிக்குச்சென்று நாவலூரில் பிறக்கச் செய்தல், நாவலூர்சிறப்பு, சோழநாட்டின்சிறப்பு, சிவராஜதானியான திருவாரூரின் சிறப்பு, சுந்தரர் மண்மீது வந்து பிறத்தல், அவருக்கு மணம் பேசுதல், இறைவன் அந்தத் திருமணத்தை ஒலைகாட்டித் தடுத்து சுந்தரரை திருவெண்ணை நல்லூருக்கு அழைத்துச் செல்லுதல். அங்குப் 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுத்து பாடச்செய்தல், சுந்தரர் இறையருள்பெற்றுப் பலதலங்களுக்கும் சென்று திருப்பதிகம் பாடுதல், திருவாரூருக்கு வந்து தங்கியிருத்தல் பரவையாரைத் திருமணம் புரிதல் "தேவாசிரிய மண்டபத்தில்" வீற்றிருக்கும் அடியவர்களை வணங்கி இவர்களை எப்படிப் போற்றுவேன் என்று கூறுதல், திருவாரூர்ப் பெருமான் அவருக்கு 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க அவர் திருத்தொண்டத் தொகை பாடுவது வரையில் கூறப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து சுந்தரர் பாடிய வரிசைப்படி தில்லை வாழ் அந்தணர் சரிதம் தொடங்கி திருநாவுக்கரசர் சரித்திரத்துடன் முதற்காண்டம் முடிவடைகிறது. இரண்டாம் காண்டம் திருஞானசம்பந்தர் சரித்திரம் தொடங்கி இசைஞானியார் சரிதம் வரையும் இறுதியாக சுந்தரர் கயிலை மலைக்குச் சென்று இறைவனிடம் அணுக்கத் தொண்டராக ஆதல் வரையும் சொல்லப்பட்டுள்ளது.

இதில் தனியடியார்கள் 63 பேர்களுடைய வரலாறுகளும் கூட்டமாக அமைந்த ஒன்பது அடியவர்கூட்டச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்பும் ஆக 72 பேர் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் காண்டத்தின் இறுதிப்பகுதியான வெள்ளை யானை சருக்கத்தில் சுந்தரமூர்த்திகள் சேரநாட்டிற்குச் செல்லுதல் திருவிஞ்சைக்களத்தில் தங்கியிருத்தல் சிவ பெருமான் வெள்ளையானையையும் கணங்களையும் அனுப்பிச் சுந்தரரைக் கயிலைக்கு அழைத்தல். அவர் அதன்படிச் செல்ல, சேரமான் பெருமான் நாயனார் குதிரையுடன் அவரைத் தொடர்தல். ஆகியன சொல்லப் பட்டுள்ளன. இறுதிப்பாடலில் சேரமான் பெருமான் நாயனார் தாம் இயற்றிய திருக்கயிலாய ஞான உலாவைக் கயிலையில் அரங்கேற்றியது. அதைக் கேட்ட சாத்தனார் திருப்பிடவூரில் வெளியிடுவது ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இடையிடையே வரும் நாயன்மார்களின் வரலாற் றில் சுந்தரர் வரலாறும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல் முடியும் வரிசை யில் நாயன்மார்களின் வரலாற்று முடிவில் சுந்தரருக்கு வணக்கமும் கூறப்பட்டுள்ளது.

❁ இந்தநூலுக்கு சுந்தரர் பாடியருளிய 'திருத் தொண்டத்தொகை' என்ற பதிகமே ஆதாரமாகும். திருத் 'தொண்டர்தொகையை' 100 பாடல்கொண்ட திருத் தொண்டர் திருவந்தாதியாக நம்பியாண்டார் நம்பிகள் விரித்துப்பாடினர். சுந்தரர் பாடியதில் அடியவர்களின் திருப்பெயர் மட்டுமே அமைந்துள்ளது. நம்பியாண்டார் அருளியதில் அடியவர்கள் வாழ்ந்த ஊர், நாடு, மரபு, செய்தபணி ஆகியன குறிக்கப்பட்டன. இவை இரண் டையும் அடியொற்றி விவரித்து, சேக்கிழார் புராணமாகப் பாடியுள்ளார்.

❁ சேக்கிழார் அருளியது 4253 பாடல்கள் என்றா லும் இப்போதுள்ள பதிப்புக்களில் 4286 பாடல்கள் உள்ளன. (33 பாடல்கள் இடைச் செருகல்கள் ஆகும்). சேக்கிழார் பெருமான் இந்நூலை இரண்டு காண்டங் களாகவும் பதிமூன்று சருக்கங்கள் கொண்டதாகவும் பாடியுள்ளார். முதலிலுள்ள திருமலைச்சருக்கம் இறுதி யில் உள்ள வெள்ளானைச் சருக்கம் போக எஞ்சிய பதினோரு சருக்கங்களுக்குச் சுந்தரர் அருளிச்செய்த தில்லைவாழ் அந்தணர் பதிகத்தின் ஒவ்வொரு பாடல் முதல் அடியைத் தலைப்பாக வைத்துள்ளார்.

❁ 4253 பாடல்களில் பெரும்பங்கான 1256 பாடல் கள் திருஞானசம்பந்தர் சரிதமாக திகழ்கின்றன. இதை யொட்டிப் "பிள்ளைபாதி புராணம்பாதி" என்னும் பேச்சு வழக்கு உண்டாயிற்று.

❁ இதில் குறிக்கப்பட்டுள்ள அடியவர்கள் அரசர் கள், வணிகர்கள், விவசாயிகள், கூலித்தொழிலாளிகள், வண்ணார், திருக்குலத்தார் எனும் பலவகையினராவர். அவர்களின் குலம், குடி, கோத்திரம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு அவர்கள் செய்த திருத்தொண்டின் மேன் மையை மட்டுமே கருத்திற்கொண்டு அவர்கள் போற்றப்பட்டனர்.

❁ இந்நூல் "உலகெலாம்" என்று தொடங்கி உல கெலாம் என்றே முடிகிறது. நூல் நெடுக ஐந்தெழுத்தின் பெருமை, சிவச் சின்னங்களான உருத்திராக்கம், விபூதி, கல்லாடை முதலியவற்றின் மேன்மை, சிவப்பதிகள் வரலாறு, புராணவரலாறுகள், தலவரலாறுகள் வேதச் சிறப்பு, வேதியர் சிறப்பு, தமிழர் வாழ்வியல் முதலியன பேசப்பட்டுள்ளன.

❁ அக்கால நடைமுறையில் இருந்த பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள், ஆசாரங்கள், வழிபாட்டு முறைகள் வீரவிளையாட்டுகள், பொழுது போக்குகள் முதலியனப் பேசப்பட்டுள்ளன. இதையொட்டி இது வாழ்வியல் நூலாகப்போற்றப்படுகிறது.

❁ தேவாரத் தலங்கள் பற்றிய அனைத்து குறிப்புக்களும் இதில் இடம்பெற்றிருப்பதுடன் அங்கு பாடப்பட்ட தேவாரங்களின் சிறப்புக்களும் குறிக்கப்பட் டுள்ளன. மலைகள், நதிகள், வாய்க்கால்கள், குளங்கள் முதலியவற்றின் வரலாறும் சிறப்புக்களும் என்றும் நிலைத்து நிற்கும் வண்ணம் கூறப்பட்டுள்ளன.

❁ உயிர்கள் பெறவேண்டிய ஞானத்தை அளித்தலின் இது ஞானநூல், இறைவனைப் போற்றி வணங்கும் வழிகளைக் கூறுவதால் வழிபாட்டுநூல். உலகவாழ்வின் தத்துவங்களையும் நிலையாமையையும் நிலைபேற்றுக்கு உரிய வழியையும் கூறுவதால் வாழ்வியல்நூல்; வரலாறுகளையும் கல்வெட்டுக்களையும், ஆவணங்களையும் ஒப்பு நோக்கி எழுதப்பட்டதால் வரலாற்றுநூல்: உவமைகளைக் கையாளுதல், இயற்கை நலன்களை விரித்துரைத்தல் சொல்லணி, முதலான அணிகளைப் பூண்டிருத்தல், பழக்கவழங்களை பறைசாற்றுதல் முதலியவற்றால் இது இலக்கிய நூலாகும். படித்துச் சிந்தித்து இறையருள் உணர்வில் கலந்து நிற்கத் துணையாயிருத்தலின் அருள் உணர்வு நூல் என்று பலவாறாக அறிஞர்களால் போற்றப்படுகிறது.

"மேன்மைகொள் சைவநெறி விளங்குக உலகமெல்லாம்" "வாழி வாழி நலம் சூழ வாழியவே"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

வேதமோடு ஆறங்கம் ஆனாய் போற்றி! விரிந்தநல் ஆகம வடிவே போற்றி! தொல்புகழ் புராணனே போற்றி! போற்றி!!

# ஸ்ரீ வேத ஆகம புராண ஈஸ்வரர்

சனாதன தர்மத்தின் அடிப்படை கருத்துக்களையும், ஞானவழியில் கண்ட தெளிவுகளையும், உயர்ந்த சிந்தனை வெளிப்பாட்டையும் ஆன்றோர்கள் ஞான நூல்களாகத் தொகுத்து வைத்துள்ளனர். இந்தச் சமய நூல்கள் ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவை வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள் என்பனவாகும்.

இவற்றில் வேதங்களும், ஆகமங்களும் ஆதியில் இறைவனாலேயே அருளப்பட்டவைகளாகும். சாத்திரங்கள் சமய அறிஞர்களாலும், தோத்திரங்கள் பக்திமான்களான அடியவர் பெருமக்களாலும் அருளப்பட்டவை. இவற்றையும் இறைவன் அவர்கள் இதயத்துள் வீற்றிருந்து தனதுரையாகவே அருளிச் செய்தான் என்று கூறுவர்.

ஆதி வேதநூல்கள் ருக், யசூர், சாமம், அதர்வணம் என்ற நான்காகும். இவை ஒவ்வொன்றும் மந்திரம், பிராமணம், உபநிஷதம், உபவேதம் என்னும் பல அங்கங்களை உடையதாகும். இவற்றில் இறைவனைக் குறித்த மந்திரங்கள், வேள்விகளைச் செய்தல், வாழ்வியல், அனுபவங்கள், வானசாத்திரம் முதலிய அனேக செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஆகமங்கள் சிவபெருமானால் அருளப்பட்டவை. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களை உடையன. இவற்றில் ஆலய நிர்மாணம், கிராமநிர்மாணம், ஆலய பூஜா முறைகள், தேர் முதலிய வாகனங்களைச் செய்தல், ஆன்ம ஞானத்தை விளக்குதல் முதலான அனேக செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. ஆகமங்களின் எண்ணிக்கை இருபத்தெட்டாகும்.

புராணங்கள் பண்டைய மக்களின் வாழ்க்கை அமைப்பை விவரிப்பதாகும். இவற்றில் உலகத்தோற்றம், மன்னர்கள், ஞானிகள், வரலாறு போர்கள், தத்துவ விளக்கங்கள் முதலிய ஆயிரமாயிரம் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் பரந்து கிடந்த கதைகளைத் தொகுத்து பதினெட்டு புராணங்களாக வகுத்தவர் வியாசபகவான் ஆவார். மகா புராணங்களை அடியொற்றி உபபுராணங்கள், தலபுராணங்கள் என்று பல புராண நூல்கள் எழுந்தன.

சாத்திரங்கள் என்பன சமய நுண்கலை நூல்களாகும். இவை ஆன்மாவின் இலக்கணம், கடவுள் தன்மை கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள இணைப்பு. உலகின் நிலை முதலியவற்றை விளக்கி மெய்ஞானத்தைப்பெற எழுந்தவையாகும். இவை பதினான்கு என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன. இவை வேதாந்த சாத்திரங்கள், சித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள் என்று பலவகைப்படுகின்றன.

தோத்திர நூல்கள் என்பன இறைவனின் எல்லையில்லாப் புகழைப் பரவிப் போற்றி அவனை வணங்கித் துதிக்கும் நூல்களாகும்.

இந்த நூல்களே சமய வாழ்வுக்கு அடிப்படையாகும். அன்பர்கள் இவற்றை ஓரளவேனும் அறிந்து கடைப் பிடிக்க முயலவேண்டும். இந்நூல்களின் தொகுப்புரையாகச் சிவமஞ்சரியின் இருபத்தெட்டாவது மலர் மலர்கின்றது. சாத்திரம், தோத்திரம் பற்றிய செய்திகள் பதினான்கு, இருபத்தேழு ஆகிய மலர்களாக வெளி வந்துவிட்டதால் வேதம், ஆகமம், புராணம் பற்றிய செய்திகளை விளக்குவதாக இம்மலர் மலர்கிறது.

சிவஞான வல்லியாகிய உமாதேவியை இடப் பாகம் கொண்ட ஞான ஒளிப்பிழம்பாகிய சிவபெருமான் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வையும், சாயுஜ்யத்தையும் அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து பிரார்த்திக்கின்றோம். – ***சிவசுந்தரி***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வேதவியாசர்

வேதங்களையும், புராணங்களையும் உலக மக்கள் நலம் பெறும் பொருட்டு தொகுத்து அளித்தவர் வியாசமா முனிவராவார். இவர் பராசரர் என்ற முனிவருக்கும் மச்சகந்தி (பரிமளகந்தி) என்ற மீனவப் பெண்ணுக்கும் மகனாகத் தோன்றியவர் வியாசருடைய மகன் சுக முனிவராவார்.

வியாசரைத் திருமாலின் அவதாரம் என்பர் இவர் துவைபாயனர், கிருஷ்ணர், பத்ரி நாராயணன் என்று பலவாறு அழைக்கப்படுகின்றார். இவருக்கு "அபாந்தரத தயஸ்" என்பதும் பெயராகும். இதற்கு உள்ளத்தில் அஞ்ஞான இருள் இல்லாதவர் என்பது பொருள்.

ஆதியில் எண்ணற்றுப் பரந்திருந்த வேதநூல்களை ஒழுங்குபடுத்தித் தொகுத்தளித்ததால் இவர் வேத வியாசர் என்றழைக்கப்படுகின்றார். இவர் வேதங்களை பைலர், வைசம்பாயனர், ஜைமினி, சுமந்தன் என்வர்களுக்கு அறிவித்தார். இவர்களின் பல சீடர்கள் மூலம் வேதம் உலகெங்கும் பரவியது. ஒவ்வொரு குருவும் வேதத்தை பலவாறு பிரித்து தமது சீடர்களுக்கு அளித்தார்கள். இந்தப் பிரிவுகளே சாகைகள் எனப்பட்டன. இறுதியில் வேதங்கள் பிராமணர்களை அடைந்தது அவர்களால் போற்றப்பட்டு வருகிறது.

வேதத்தில் சொல்லப்படாத பொருளே இல்லை. வேதத்தை விளக்கிச் சொல்லும் வகையில் உண்டானதே புராணங்களாகும். விரிந்து பரந்து கிடந்த புராணக் கதைகளை வகைப்படுத்தி பதினெட்டாகத் தொகுத்த வரும் வியாசரேயாவர். இதனால் புராணமுனி என்று புகழப்படுகின்றார். புராணங்களைத் தொகுத்தபின் அவற்றைத் தன் மகனான சுகமுனிவருக்கு விளக்கிக் கூறினார். சுகப்பிரம்மம் நைமிசாரண்ய முனிவர்களுக் கும் பிறருக்கும் புராணங்களை எடுத்துக் கூறி அதனைப் பிரகாசப்படுத்தினார்.

வியாசர் வேதத்தின் நுண்பொருளை விளக்கும் நூல்களையும் அருளிச் செய்துள்ளர். இவற்றில் குறிப்பி டத்தக்கது பிரம்ம சூத்திரமாகும். இதற்கு எண்ணற்ற வர்கள் உரை நூல்களைச் செய்துள்ளார்கள்.

வியாசர் மகாபாரதத்தை எழுதினார். அதுவும் வேதத்தின் நுண்பொருளை விளக்குவதாகவே அமைந் துள்ளது. அதில் இல்லாத பொருள் எதுவுமே இல்லை. சொல்லப்படாத தருமமும் இல்லை.

❈ ஒவ்வொரு மனுவந்தரத்திலும் நான்கு வியா சர்கள் தோன்றியுள்ளனர். இப்போது தோன்றியுள்ளவர் இருபத்தெட்டாவது வியாசராவார்.

❈ வியாசரை, பிரம்மச்சாரிகள், இல்லறவாழ்வினர் (உபகர்மா) ஆவணி அவிட்ட நாளிலும் துறவிகள் சாதுர்மாச விரதத்திலும் போற்றுகின்றனர். ஆடி மாதத் திய பௌர்ணமியை வியாசபூர்ணிமா அல்லது குரு பூர்ணிமா என அழைத்து வியாசரைப் பூசிக்கின்றனர்.

❈ காசிக்கு அருகில் வியாசகாசி உள்ளது. காசி விசுவநாதர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள சிவால யத்தை வியாசர் கோயில் என்று அழைக்கின்றனர். இது வியாசர் வழிபட்ட ஸ்தலமாகும். காஞ்சிபுரத்தில் வியாசர் வழிபட்ட தலம் வியாச சாந்தாலீசுவரர் எனும் பெயரில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

வேத நாயகா போற்றி! வேள்விக்கு இறைவா போற்றி! போற்றி!!

# வேதநாயகர்

இந்தியாவின் மிகத் தொன்மையான ஞான நூல்கள் ஆதி வேதங்களாகும். சிவபெருமான் தனது நான்கு திசைகளை நோக்கும் நான்கு முகங்களாலும் இவற்றை அருளிச்செய்தார். இவை சிவபெருமானா கவே போற்றப்படுகின்றன. இதையொட்டி பெருமான் வேதநாயகர், வேதநாதன் என்று பலவாறு அழைக்கப் படுகின்றார்.

வேதநூல்கள் மனித வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளன. இதிலிருந்தே எல்லா ஞான மும், மேன்மையும் கிளைத்தன என்று நம்புகின்றனர்.

சிவபெருமான் வேதங்களை எப்போதும் ஓதிக் கொண்டேயிருக்கிறான். அப்படி அவன் ஓதிக் கொண் டேயிருப்பதால்தான் உலகில் சகல ஞானங்களும், அறிவும் மங்காது பெருகுகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன.

நமது சமயம் கூறும் அனைத்து யாகங்களுக்கும் வேத மந்திரங்களே அடிப்படையாகும். வேதங்கள் சிவபெருமானையே யாகாதிபதியாகப் போற்றுகின் றன. சிவபெருமான் வேதவிதிப்படி செய்யும் யாகங்க ளாகவும் அந்த யாகங்களின் அதிபதியாகவும், அவை தரும் பயனாகவும் இருக்கின்றான்.

வேத வழிபட்ட அந்தணர்கள் வேதியர் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களின் தலைவனாக இருப்பதால் சிவபெருமான் வேதநாயகன், வேதியர் நாயகன் என்று புகழப்படுகின்றான்.

மனித குல மேன்மைக்குரிய தர்மமாக வேதம் விளங்குகிறது. அதனால் அது தலைசிறந்ததாக உள்ளது. அதிலிருந்தே அனேக தர்ம நூல்கள் தோன்றின. இவற்றால் சமய வாழ்வில் வேதங்கள் உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளன.

சிவமஞ்சரியின் இந்த இருபத்தெட்டாவது மலரின் முதல்பகுதி வேதத்தின் பெருமைகளையும், சைவ சமயத்துள் வேதம் பெற்றுள்ள இடங்களையும் விளக்குவதாக மலர்கின்றது. இதில் சிவபெருமான் வேதமயமாக இருப்பது, வேதங்கள் மனித உருவம் கொண்டு சிவபெருமானைப் போற்றுவது, வேதங்கள் சிவபெருமானுக்கு அங்கமாக இருப்பது முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

அன்பர்கள் யாவரும் வேதவல்லி உடனான வேதநாயகனான சிவபெருமான் அருளினால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வைப் பெற வேண்டு மென்று பிரார்த்திக்கிறோம். – சிவமஞ்சரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வேத நூல்கள் அறிமுகம்

இந்தியாவின் தொன்மை நூல்களான வேதங்கள் ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்காகும். இவற்றில் ருக் வேதம் இசையோடு பாடப் படுவதாகும். யஜுர் வேதம் அனேக ருக்வேதப் பாடல்களுடன் யாகங்களைப் பற்றிய விளக்கங்களைக் கொண்டதாகும். சாமம் என்பது வேள்விகளுக்கிடையே பாடப்படும் இசைப் பாடல்களாகும். இதனை சாம கீதங்கள் என அழைக்கின்றனர். அதர்வணம் என்பது யந்திரங்கள், தந்திரங்களின் அடிப்படைகளை விளக்குவதாகும்.

நான்கு வேதங்கள் ஒவ்வொன்றிலும் முதன்மைப் பகுதியாகத் திகழ்வது மந்திரபாகமாகும். இதை அடிபிற ழாமல் மனப்பாடம் செய்ய வேண்டும். அதனையடுத்த பகுதி பிராமணங்கள் ஆகும். இவை மேலே சொன்ன மந்திரங்களுக்கு விளக்கமாகவும். கிரியைகளின் விளக்க மாகவும் அமைகின்றன. ஒவ்வொரு வேதத்திற்கும் பல பிராமணங்கள் உள்ளன.

இதையடுத்து வேதத்தின் ஞானபாகமாகத் திகழ்பவை உபநிஷதங்களாகும். ஒவ்வொரு வேதத்திற்கும் பல உபநிஷதங்கள் உள்ளன. இவை வேதமார்க்கத்தின் தத்துவ விளக்கமாக அமைகின்றன. அனேக உபநிஷத்துக்கள் இருந்தாலும் பத்து உபநிஷத்துக்கள் முதன்மையாக கொள்ளப்பட்டுள்ளன. இவை தசோப நிஷத் என்று அழைக்கப்பட்டு, இவற்றிற்கு அனேக விளக்க நூல்கள் எழுதப்பட்டுள்ளன. நடைமுறையில் 108 உபநிஷதங்கள் உள்ளன.

வேதங்கள் பரந்துவிரிந்த கடலைப் போன்றிருப்ப தால் அவை அனைத்தையும் கற்று உணர்வது எளிதல்ல. எனவே வாழ்க்கைக்குத் தேவையான சாரத்தை தனியே எடுத்து தொகுத்துள்ளனர். இல்லத்தில் செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை விளக்குபவை கிருஹ்ய சூத்திரங்கள் என்றும்; வனத்தில் சென்று வாழும்போது செய்யவேண் டியவற்றை விளக்குபவை ஆரண்யகங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வேதத்திற்கும் தனித் தனியே அரண்யகம், கிருஹ்ய சூத்திரங்கள் என்ற துணைநூல்கள் உள்ளன.

வேதங்களை நன்கு கற்க உதவும் நூல்கள் அங்க நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை ஆறாகும். வேதங்களை விளக்கிக் கூறும் உரை நூல்கள் பல எழுந்தன. இவை பாஷ்யங்கள் எனப்பட்டன.

இனி தொடர்ந்து இந்நூல்களின் குறிப்புகளைக் காணலாம்.

## ருக் வேதம்

ருக் என்பது பாவின் இனங்களில் (பாடல் வகையில்) ஒன்றாகும். பல ருக்குகளைக் கொண்டிருப்ப தால் இந்த வேதம் ருக்வேதம் எனப்பட்டது. இது முதலில் தோன்றிய வேதமாதலின் ஆதிவேதம் என்று அழைக்கப்படுகிறது. இதன் வேதமொழிகளுக்கு ருக்குகள் அல்லது சூக்தங்கள் என்பது பெயர்.

இது இரண்டு வகையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. முதல் வகையில் 10 மண்டலங்களாகவும் 1017 சூக்தங்க ளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 10467 ருக்குகள் அடங்கியுள்ளன. இரண்டாவது வகையில் இவ்வேதம் எட்டு அஷ்டகங்களாகவும். அவை எட்டு எட்டு (64) அத்தியாயங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவை 85 அனுவாகங்களைக் கொண்டதாகும்.

இதற்குரிய உபநிஷதங்கள் (1) சம்ஹிதை (2) ஐத ரேயம் (3) பவாவிருத்த பிராம்மணோபநிஷதம் (4) கௌஷீதகம் என்ற நான்காகும்.

பிராம்மண நூல்கள் : ஐதரேயம்; கௌஷீதகம் எனுமிரண்டாகும்.

கிருஹ்ய சூத்திரங்கள் : ஆசுவலாயன கல்ப சிரௌத சூத்திரம், சாங்கியயான சிரௌதம் ஆகிய இரண்டு.

அரண்யகம் : 1) ஐதரேயரண்யகம், 2) கௌஷீதகம்

ருக்வேதத்திற்கு 21 சாகைகள் இருந்தன என்பர் இப்போது வழக்கில் உள்ளவை (1) சாலகம் (2) பாஷ்கலம் (3) ஆசுவலாயனம் (4) சாங்காயனம் (5) மாண்டுகாயனம் (6) ஐதரேயம் என்ற ஆறு மட்டுமேயாகும்.

இதன் உபவேதம் ஆயுர்வேதமாகும். (பார்க்க 872) ஆயுர்வேதத்திற்கான உபநிஷதங்கள் 21 ஆகும்.

இந்த வேதத்தில், இந்திரன் புகழப்படுகிறான். அவனே அனைத்துமாக இருக்கின்றான். மேலும் சோமன், சூரியன் அக்னி முதலியோர் புகழப்படுகின்றர். இதில் சூக்தம் என்னும் தொகுப்புகள் உள்ளன. இவை தனித்த சிறப்புக்களைக் கொண்டவை. இவற்றில் வாக்கு வாணி, மருந்து, உணவு, சிருஷ்டி, விசுவம், தேவர் முதலியவற்றைப் பற்றிய சூக்தங்கள் முக்கியமானவை ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வேதத்திலுள்ள மங்கள வாக்கியங்கள் தனியாகத் தொகுக்கப்பட்டு சுவஸ்தி வசனங்கள் அல்லது சுவஸ்தி ருக்குகள் என்றழைக்கப்படுகின்றன. விவாகம் முதலிய சுபசடங்குகளில் ஆசீர்வாதம் செய்து இவற்றைக் கூறுவர்.

## யஜுர்வேதம்,

இந்த வேதம் கிருஷ்ணயஜுர், சுக்லயஜுர் என்று இரண்டு பெரும்பிரிவுகளாக உள்ளது. இவ்வேதம் யாகாதிகளைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. ரிக்வேதத்திலுள்ள அனேக ரிக்குகள் இதில் இடம் பெற்றுள்ளன.

## கிருஷ்ணயஜுர் வேதம்

கிருஷ்ண யஜுர்வேதம் ஏழு காண்டங்களாகவும் 44 பிரச்சினாங்களாகவும் 651 அனுவாகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2198 கண்டிகைகள் உள்ளன. (யஜுர் வேத மொழிகளுக்குக் கண்டிகை என்பது பெயராகும்.

இது 50 வேதமொழிகள் சேர்ந்த தொகுதியாகும். கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு 101 சாகைகள் இருந்ததென்று கூறுவர். இப்பொழுது. (1) சரகம் (2) காடகம் (3) கபிஷ்டலம் (4) மைத்ராரண்யம் (5) தைத்ரிய சாகை (6) ஹிரண்யகேசி என்று 6 சாகைகளே கிடைக்கப்பட்டு வழக்கத்தில் உள்ளன. இவைகளும் முழுமையாக இல்லை.

கிருஷ்ணயஜுரின் உபநிஷதங்கள் : (1) தைத்ரீயம், (2) மகா நாராயணம் (3) கடம் (4) சுவேதாசுவதரம் (5) மைத்ராயணம் எனும் ஆறாகும்.

இதன் அரண்யகம் தைத்ரீய அரண்யகம்.

## சுக்ல யஜுர்வேதம்

இந்த வேதம் 40 அத்தியாங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது 303 அனுவாகங்கள் உள்ளன. 1549 கண்டிகைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வேதத்திற்கு 17 சாகைகள் இருந்தன. இவற்றில் 1) மாத்யான்னிகம், 2) காண்வம் என்னும் இரு சாகைகளே உள்ளன. இதன் உபநிஷதம் பிரகதாரண்யமாகும். இதன் அரண்யகம் பிரஹதாரண்ய அரண்யகமாகும். சுக்ல யஜுர் வேதத்திற்கான சூத்திரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. பிராமண நூல் சதபதப் பிராம்மணம் ஆகும்.

## சாமவேதம்

இசை வடிவமாக விளங்கும் சாமவேதத்தின் வேதமொழிகளுக்குக் கானங்கள் என்பது பெயர். பத்து கானங்களைக் கொண்ட தொகுதிகள் தசதிகள் எனப் பட்டன. தசதிகளின் கூட்டமைப்பு அத்தியாயங்கள் என்றும் அத்தியாயங்களின் கூட்டமைப்பு ஆர்ச்சிகம் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த வேதம் இரண்டு ஆர்ச்சிகங்களாகவும். 30 அத்தியாயங்களாகவும் 458 தசதிகளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இதில் 1549 கானங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த வேதத்திற்கு 1000 சாகைகள் இருந்ததாகக் கூறுவர். இப்போது உள்ளவை (1) கௌதம சாகை (2) ராணாயசாகை (3) ஜைமினீயசாகை என்ற மூன்றாகும்.

இந்த வேதத்தின் பிராம்மணங்கள் (1) பஞ்சவிம்சம், (2) சப்தவிம்சம், (3) சாமவிதானம், (4) ஆர்ஷேயம், (5) தல்வகாரம், (6) வம்சம் 7) தைவதம் கோபதம் என்ற ஏழாகும்.

உபநிஷதங்கள் (1) சாந்தோக்யம், (2) கேன எனுமிரண்டாம். இதற்கான பிராம்மணங்கள், சூத்திரங்கள், அரண்யங்கள் இல்லை. இதன் உபவேதம் இசை மாலையாகிய காந்தர்வம் ஆகும். காந்தர்வத்திற்கான உபநிஷதங்கள் 1000 ஆகும்.

## அதர்வண வேதம்

அதர்வண வேதத்தின் வேதமொழிகளுக்கு "மந்திரங்கள்" என்பது பெயர். இவ்வேதத்துள் 5847 மந்திரங்கள் இடம் பெற்றுள்ளன. இவை 733 வர்க்கங்களாகவும் 111 அனுவாகங்களாகவும், 34 பிரபாடங்களாகவும், 20 காண்டங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த வேதத்திற்குரிய சாகைகள், (1) பிப்பிலாதம், (2) தௌதம், (3) இளதம், (4) சௌனகீயம், (5) ஜாஜலம், (6) ஜலதம், (7) பிரமவதம், (8) தேவதர்சனம், (9) சாரண வைத்யம் எனும் ஒன்பதாகும். இவற்றில் பிப்லாதமும், சௌனகம் மட்டுமே கிடைத்துள்ளன.

இந்த வேதத்திற்குரிய பிராமணங்கள் கல்ப சூத்திரங்கள் அரண்யகங்கள் எதுவும் இல்லை. உபநிஷதங்கள் 1. முண்டகம், 2. பிரச்சினம், 3. மாண்டுக்யம் என்ற மூன்றாகும். இதன் உபவேதம் அர்த்தவேதமாகும். அர்த்த வேதம் 50 உபநிஷதங்களைக் கொண்டுள்ளது.★

❁ வேதம் என்னும் மரத்தின் பூக்கள் உபநிஷ தங்களாகும். அதிலிருந்து தோன்றிய வேதக்கனி பிரம்ம சூத்திரமாகும்.
❁ வேதவாக்கியங்களுக்குப் பிரபு ஸம்ஹிதா என்பது பெயர். இதற்குத் தலைவனின் (அரசனின்) ஆணைமொழி என்பது பொருள். இவற்றில் உள்ளதை அப்படியே ஏற்று நடக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஆறங்கம்

வேதம் பயில்வதை விளக்கிக் கூறும் அங்க நூல்கள் ஆறாகும். இதனை 'ஆறங்கம்' என்று கூறுவர். இவை 1) சிட்சை, 2) வியாகரணம், 3) சந்தஸ், 4) ஜோதிடம், 5) நிருக்தம் (நிகண்டு), 6) கல்பம் (கல்பசூத்திரம்) என்பன வாகும்.

இதில் "சிட்சை" என்பது வேதமந்திரங்களிலுள்ள சொற்களை உச்சரிக்கும் முறைகளை விளக்குவதாகும் இதில் எழுத்து, சுவரம், மாத்திரை முதலியன விளக்கப் பட்டுள்ளன. பாணினி இதற்கு விளக்க நூல் செய்துள் ளார். இதில் வேதம் மற்றும் உலக சப்தங்கள் இரண்டுக்கு முரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

"வியாகரனம்" என்பது வேதத்தின் இலக் கணத்தை விவரிப்பதாகும் பாணினி, பதஞ்சலி, காத்தி யாயனர் முதலியோர் வியாகரண விளக்கநூல்களைச் செய்துள்ளனர். தலைசிறந்த வியாகரணநூல் அஷ்டாத் யம் ஆகும். 3996 சூத்திரங்களைக் கொண்ட இந்நூலுக்கு இணையான நூல் இல்லை என்பர்.

சந்தஸ் என்பது வேதத்தை இசைக்கும் முறையில் எழுத்துக்களின் எண்ணிக்கையை விளக்குவதாகும். வேதத்தில் காயத்ரீ, உஷ்னிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்கி, த்ருஷ்ருப், ஜகதி என்னும் ஏழு சந்தஸ்கள் உள்ளன. வேதத்தினை எப்படி ஏற்றி இறக்கி ஓத வேண்டும் என்பதையும் வேதத்தின் ஒவ்வொரு அடியி லும் வரவேண்டிய எழுத்துக்களின் எண்ணிக்கையை யும் வரையறுப்பதாகும். பிங்கல முனிவர் இதற்கு நூல் செய்துள்ளார்.

"ஜோதிடம்" என்பது வானசாத்திரத்தை அடிப்ப டையாகக் கொண்டு வருங்காலத்தை விளக்குவதாகும். வேதங்களில் குறிக்கப்பட்டுள்ள யாகங்களையும், தானங்களையும் முறைப்படி உரியகாலத்தில் செய்ய வேண்டும் அதற்குக் காலத்தைப் பற்றிய அறிவு அவசிய மாகிறது. காலத்தை நிர்ணயிப்பதில் ஜோதிட நூல் துணைசெய்கிறது. ஆதித்தன் பாஸ்கரபட்டர் முதலியோர் இதற்கு நூல் செய்துள்ளனர்.

"நிருத்தம்" என்பது வேத மொழிகளுக்கும், அதன் ஒலிக்கும் விளக்கம் கூறும் அகராதி போன்ற தாகும் இதன் மூலம் வேதவாக்கியங்களின் உண்மைப் பொருளை அறியமுடிகிறது. இதற்கு பாஸ்கர ரிஷி முதலானவர் நூல் இயற்றியுள்ளனர்.

"கல்பம்" என்பது வேதங்கள் கூறும் மந்திரங் களின் அடிப்படையில் செய்யவேண்டிய செயல்களை வகைப்படுத்திக் கூறுவதாகும். இவை ச்ரௌதம், கிருஹ்யம், தர்மம் என்று மூன்று வகைப்படுகின்றன. ச்ரௌதம் என்பது வேள்விகளைச் செய்யவேண்டிய முறைகளை விளக்குவதாகும். கிருஹ்யம் என்பது இல்லத்தில் நடைபெறும் குழந்தைபிறப்பு பெயர் சூட்டு தல், உபநயனம், திருமணம், முதலியவற்றை வகைப் படுத்தி விளக்குவதாகும்.

"தர்மம்" என்பது ஆன்ம சாதனைகளை மேம்ப டுத்திக்கொள்ள எழுந்தவைகளாகும் கல்பங்களை எளிய சூத்திரங்கள் வடிவில் அமைந்துள்ளனர். இவை கல்ப சூத்திரங்கள் என்று பெயர் பெறுகின்றன. அனேக கல்பசூத்திரங்கள் வழக்கில் உள்ளன. இவற்றை அடிப் படையாகக் கொண்டே வாழ்வியல் சடங்குகளும் அதற் கான மந்திரங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

## உபாங்கங்கள்

வேதாங்கங்க நூல்களைத் தொடர்ந்து உபாங்க நூல்கள் எழுந்தன இவையும் ஆறாகும். இவைமுறையே சாங்கியம், யோகம், வைசேஷிகம் நியாயம், பூர்வமீ மாம்சை, வேதாந்தம் என்று பெயர்பெறுகின்றன. இவை வேதத்தின் நுண்பொருளை விளக்கும் சார நூல்களாகும்.

"சாங்கியம்" என்பது கபில முனியால் அறியப் பட்டதாகும். இதனைச் சாங்கிய தரிசனம் என்றும் கூறுவர். தத்துவவிசாரணைகளால் 25 தத்துவங்களையும் அதைத் தொடர்ந்த பல சிறப்பான தத்துவக்கருத்துக் களையும் கூறுகிறது. இது ஞானத்தைப் போதிப்பதாகும் விஞ்ஞான பிட்சு என்பவர் உரைஎழுதியுள்ளார். இதில் கடவுளைப் பற்றிய செய்திகள் அதிகமில்லை.

"யோகம்" பதஞ்சலி முனிவரால் செய்யப்பட்டது. 194 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் நான்குபாகங் களைக் கொண்டது. மனதை ஒருமுகப்படுத்தி உருவமும், குணங்களும் இல்லாத பரப்பிரம்மத்துடன் ஒன்றுபடுவதற்கு (நிர்விகல்பசமாதி) அவசியமான வழிகளை எட்டாக வகுத்து விளக்குகிறது. இதனைப் பதஞ்சலி யோகசூத்திரம் எனவும் அழைப்பர். இதற்கு வியாசர், வாசஸ்பதி, மண்டன மிசிரர் முதலான பலர் உரை எழுதியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மீமாம்சை" என்பது பூர்வமீமாம்சை, உத்திர மீமாம்சம் என்ற இரண்டு வகையாக உள்ளது. பூர்வமீமாம்சை ஜைமினியால் செய்யப்பட்டதாகும். பன்னிரண்டு காண்டங்களுடன் 60 அத்தியாயங்களும் பல சூத்திரங்களையும் கொண்டது.

இதற்கான பாஷ்யநூல்கள் பல இருந்தாலும் சரப சுவாமி, குமாரலீலர் எழுதிய பாஷ்யங்கள் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. யக்ஞ செயல்களில் உள்ள பாகுபாடுகளை இந்நூல் விவரிக்கின்றது.

"வேதாந்தம்" என்பது வேதத்தின் முடிவு அல்லது வேதசாரத்தைக் குறிப்பதாகும். வேதத்தின் முடிவு அல்லது அதனால் பெறவேண்டிய ஞானத்தை அடையும் வழிகளை வகுக்கும் விளக்கங்களாகும். 191 விஷயங்களைப் பற்றி 558 சூத்திரங்களால் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. நான்கு அத்தியாயங்கள் கொண்டது. அவை ஒவ்வொன்றும் நான்கு பாதங்களைக் கொண்டது. இதனை "பிரம்ம சூத்திரம்" எனவும் அழைப்பர். இது வியாசர் இயற்றியதாகும்.

இதற்கு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர், ஸ்ரீராமானுஜர், மத்வர் முதலிய அனேகர் பாஷ்யம் செய்துள்ளனர். இந்நூலுக்கு ஆகம வழிநின்று ஸ்ரீகண்ட சிவாசாரியார் பாஷ்யம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

"நியாயம்" என்பது ஒன்றைப் பலகோணங்களில் ஆராய்ந்து அதன் உண்மை பொருளை நிறுவும் நூலாகும். இதனை இயற்றியவர் கௌதமர் ஆவார். 537 சூத்திரங்கள் கொண்டது. ஒரு பொருள், செயல், நிசமா என்பதை பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திருஷ்டாந்தம் சித்தாந்தம், வாதம், முதலியவற்றால் ஆராய்ந்து அறிய வேண்டும் என்று கூறுகின்றது. இது வேதத்தின் அர்த்தத்தை விளக்குவதாகும்.

"வைசேஷிகம்" வையத்திலுள்ள அனைத்துப் பொருட்களையும் பிரித்து அதன் குணங்களை ஆராய்ச்சி செய்து அறிவிக்கும் நூலாகும் கணாத முனியால் அருளப்பட்ட இந்நூல் 373 சூத்திரங்களைக் கொண்டது. உலகிலுள்ள பொருட்களை திரவியம், குணம் கர்மம், சாமான்யம், விசேஷம், சமவாயம் முதலிய ஆறுவகையாக உணர்த்துவதாகும்.

## பாஷ்யங்கள்

வேத மொழிகளுக்கு நுண்மையான விளக்கம் கூறும் நூல்களே பாஷ்யங்கள் எனப்படும். தமிழில் "பேருரை" என்று கூறலாம்.

ருக்வேதத்திற்கு ஆதியில் பாஷ்யங்கள் பலரால் எழுதப்பட்டன. இவர்களில் கௌத்ஸர், சாகபூணி, யாஸ்கர், ஔதர்ணநாபன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கௌஷீதகீ, ஐதரேய (ருக்) வேத உபநிஷதங்களுக்கு ஆதிசங்கர பகவத் பாதர் உரை எழுதியிருக்கின்றார். அண்மைக் காலத்தில் ஸ்ரீ தயானந்தர் ஆறு மண்டலங்கள் வரை பாஷ்யம் செய்துள்ளார்.

கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு அனேகர் உரை வகுத்துள்ளனர். தைத்தீரிய சம்ஹிதைக்கு ச்ாயணரின் பாஷ்யம் உள்ளது. இந்த சம்ஹிதைக்கு ஸ்ரீசங்கரரும் பாஷ்யம் எழுதியுள்ளார். இந்த வேதத்தில், கல்பசூத்திரம் ச்ரௌத சூத்திரம், போதாயன ச்ரௌதம், பாரத்வாஜ ச்ரௌதம் முதலிய பகுதிகளுக்கு அனேகர் பாஷ்யம் எழுதியுள்ளனர்.

சாமவேதத்திற்கு, சாயனர், பரதசுவாமி, மகாசுவாமி, நாராயணபுத்திரன் முதலியோர் உரை வகுத்துள்ளனர். இந்த வேதத்தின் பிராம்மணம், சூத்திரம் முதலியவற்றிற்கும் பல பாஷ்யங்கள் உள்ளன.

அதர்வண வேதத்திற்கு முழுமையான பாஷ்யங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

நான்கு வேதங்களுக்கும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீதயானந்த சரஸ்வதி புதிய விளக்கங்களையும், உரைகளையும் வகுத்துள்ளார். இவர் எழுதியுள்ள "ரிக்வேதாதி பாஷ்யத்தின்" முகவுரை தனிச் சிறப்புமிக்கதாக உள்ளது.

வேதம் அறிவு நூலாதலின் புதியபுதிய உரை நூல்களால் வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

## பிரதி சாக்கியம் - கோஷம்

வேதத்தை விளக்கமாக அறிந்துகொள்ள உதவும் நூல் வேதவியாகரணம் ஆகும். இதனைப் பிரதி சாக்கியம் என்றும் கூறுவர். நடைமுறையில் ஆறு பிரதி சாக்கியங்கள் உள்ளன. இவற்றில் வேதங்களை உச்சரிக்கும் வகை, சந்திபிரித்தல், பதங்களைப் பிரித்துப் பொருள் காணுதல், உச்சரிப்பின் பல்வேறு வகைகள் விளக்கப்பட்டுள்ளன.

கோஷங்கள் என்பன நிகண்டுகளாகும். இதில் வேதச் சொற்களுக்கான விளக்கங்கள் உள்ளன. இதன்மூலமே வேதத்தின் நுண்பொருளை அறியமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## உபவேதங்கள்

வேதங்களிலிருந்து உபவேதங்கள் உண்டாயின. ரிக்வேதத்திலிருந்து ஆயுர்வேதமும், யசுர் வேதத்திலிருந்து, தனுர்வேதமும், சாமவேதத்திலிருந்து கானவேதமும், (கந்தர்வவேதம்) அதர்வவேதத்திலிருந்து அர்த்த வேதமும் உண்டாயிற்று என்பர்.

ஆயுர் வேதம், ஆயுள் நீட்டிக்கவும், நோய்நொடிகளிலிருந்து விடுதலை பெறவும் உதவியாக உள்ள மருந்துகளை விளக்குவதாகும். மூலிகைகளிலிருந்து தைலங்கள், சூர்ணங்கள், லேகியங்கள் ஆகியன தயாரிக்கும் முறை கூறப்பட்டிருக்கிறது.

தனுர் வேதம் என்பது வில்வித்தையைப் பற்றியதாகும். வேதகாலத்தில் வில், அம்புகள் முக்கியமான கருவிகளாக இருந்தன. ஒருவன் தான் இறக்கும் வரை தனது வில்லைவிட்டு பிரியக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. வில்லையும் அம்பையும் ஆயுதங்களையும் தரித்தல் பயன்படுத்துதல் அதற்கான மந்திரங்கள் ஆகியவற்றை இந்நூல் விளக்குகின்றது.

கானவேதம் என்பன இசை நூல்களாகும். அர்த்த வேதம் என்பது பொருளாதாரத்தைப் பேணுவதைக் குறிப்பதாகும். இவை ஒவ்வொன்றுக்கும் ஏராளமான உபவேதங்கள் உள்ளன.

## வேதபடனம்

வேதத்தை பல்வேறு வகையில் ஓதுவதே வேத படனம் எனப்படும். இவை (1) மூலசம்ஹிதை (2) பதசம்ஹிதை (3) கிரமம் (4) ஜடை (5) கனம் என்பனவாகும். மூலசம்ஹிதை என்பது வேத மந்திரங்களை சந்தி சேர்த்துச் சொல்வதாகும். பதசம்ஹிதை என்பது பதம் பதமாகப் பிரித்துச் சொல்வதாகும். கிரமம் என்பது ஒரு பதத்தை இன்னொரு பதத்திற்கு முன்னும் பின்னும் சேர்த்துச் சொல்வதாகும். ஜட சம்ஹிதை பதங்களைச் சேர்த்து, பிரித்து, சேர்த்து ஜடை பின்னுவதுபோல் பின்னலிட்டுச் சொல்வதாகும். கனம் என்பது சொற்களை கூட்டி கூட்டி பின்னலிட்டு முன்னும் பின்னுமாக மாறி மாறிச் சொல்வதாகும். கனம் சொல்வதில் தேர்ச்சி பெற்றவர்கள் கனபாடிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## கடிகை

வேதம் பயிலும் மாணவர்கள் நிலையாகத் தங்கி பயின்ற இடங்கள் கடிகை எனப்பட்டன. காஞ்சீபுரம், சோழசிங்கபுரம் முதலிய ஊர்களில் கடிகைகள் இருந்ததை வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

## சதுர்வேத மங்கலங்களும் - பிரம்ம தேசங்களும்

வேதம் வல்ல பிராமணர்கள் ஒன்று கூடி அறுவகைத் தொழில்களைப் (ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஈதுவித்தல்) புரிந்து வாழும் தலங்கள் சதுர்வேத மங்கலங்கள் என்று அழைக்கப்பட்டன. மாமன்னர்கள் அனேக சதுர் வேத மங்கலங்களை நிறுவி பிராமணர்களைக் குடியமர்த்தினர். தென்னகமெங்கும் அனேக சதுர்வேத மங்கலங்கள் இருந்ததைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

வேதம் வல்ல அந்தணர்கள் குடியிருப்பில் பிரம்மன் நீங்காது வாசம் புரிகின்றான். எனவே, இப்பகுதிகள் பிரம்ம தேசங்கள் என்று அழைக்கப்பட்டன. இப்பெயரில் இன்றும் பல ஊர்கள் உள்ளன. அந்நாளில் மூலமாக மன்னர்கள் இவற்றை வரிநீக்கிக் குடிநீங்கா தானமாக பிராமணர்களுக்கு அளித்துள்ளதைக் கல்வெட்டுக்கள் காண்கிறோம்.

## வேதமொழி

ஆதியில் கீர்வாணி எனும் மொழியில் வேதங்கள் இருந்தன. இதனால் வேதத்திற்கே கீர்வாணி என்பது பெயராயிற்று. இதற்கு தேவர்களின் மொழி என்பது பொருள். கீர்வாண மொழியிலிருந்தே சமஸ்கிருதம் உண்டாயிற்று என்பர்.

## வேத மண்டபம்

பிராமணர்கள் ஆலயங்களில் கூடிநின்று வேத மந்திரங்களை ஓத தனி மண்டபங்கள் இருந்தன. இவை வேத மண்டபம் என்று அறைக்கப்படுகின்றன. சிறப்பு நாட்களில் பிராமணர்கள் கூடிவழிபட்டனர்.

❖ தில்லை சிற்றப்பலத்துள் நடராசப் பெரமான் வீற்றிருக்கும் ஆசனம் வேத மயமானதாகும். இதில் ஆறுகால்களால் தாங்கப்படும் விமானம் உள்ளது. இந்த ஆறு கால்களும் வேதத்தில் ஆறு அங்கங்களைக் குறிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வேதமும் - சிவபெருமானும்

வேதங்கள் சிவபெருமானால் ஆதியில் அருளப்பட்டனவாகும். சிவபெருமான் எப்பொழுதும் வேதங்களை ஓதிக்கொண்டிருக்கின்றான். வேதம் அவனுக்கு மூச்சுக் காற்றாகவும் ஆடையாகவும், கோவணமாகவும், பாதுகைகளாகவும் விளங்குகிறது என்று புராணங்களும் தமிழ்வேதங்களும் கூறுகின்றன. இவற்றில் சில தொடர்பான செய்திகளையும் இப்பகுதியில் காணலாம்.

## வேதகிரி

நான்கு வேதங்களும் மலைகளாக நின்றிருக்கும் தலம் வேதகிரி எனப்படும் திருக்கழுக்குன்றமாகும். இதன் நான்கு சிகரங்களும் நான்கு வேதங்களைக் குறிக்கின்றன. ஒவ்வொரு வேதமலையின் மீதும் ஒவ்வொரு யுகத்தில் பெருமான் வீற்றிருக்கின்றான். இப்போது அதர்வணவேதத்தின் உச்சியில் பெருமான் எழுந்தருளியுள்ளார் என்பர். இவ்வூருக்கு வேதாசலம் என்றும் பெயர்.

## வேதவனம்

நான்கு வேதங்களும் மனித வடிவுடன் சிவனைத் துதித்து வழிபட்ட தலம் திருமறைக்காடு ஆகும். அவை தாம் வழிபட்டபின் இங்குள்ள முதன்மைக் கதவை மூடிச்சென்றன. பின்னாளில் திருநாவுக் கரசர் அதைப் பாடித்திறந்தார். திருஞானசம்பந்தர் சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும் என்று பாடி மீண்டும் திறக்கவும் மூடவும் செய்தார். இத்தலம் வேதவனம் என்றழைக்கப் படுகிறது.

## வேதமான்

சிவபெருமானின் திருக்கரத்திலுள்ள மான் வேதத்தின் குறியீடு ஆகும். அது எப்பொழுதும் வேதத்தை சிவபெருமானின் திருச்செவியில் ஓதிக் கொண்டேயிருக்கின்றது. "வேதம் மான்மறியே" என்று தமிழ் வேதம் கூறுகின்றது. சிவபெருமான் கங்காளனாகவும் பிட்சாடனனாகவும் செல்லும்போது இந்த மான் தொடர்ந்து செல்கிறது. தட்சிணாமூர்த்தியாக இருக்கும் போது அவருடைய பீடத்தில் கீழ் படுத்துள்ளது. சந்திர சேகரர், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்களாக இருக்கும்போது இடதுகரத்தில் தாவியபடி உள்ளது.

## வேதப்பாதுகை

சிவபெருமானின் திருவடிகளில் விளங்கும் பாதுகைகள் வேதங்களாகும். சிவமகாபுராணத்தில் சிவபெருமான் திருமணக்கோலம் கொண்டபோது தேவர்கள் வேதமாகிய பாதுகைகளை அளித்தார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதுகைகளை திருமணம் முடிந்ததும் திருத்துருத்தி (குத்தாலம்) ஆலயத்தின் உத்தாலமரத்தின் கீழ் விட்டுச் சென்றார் என்று கூறுப்படுகிறது. குத்தாலம் என்றழைக்கப்படும் திருத்துருத்தில் தலத்திலுள்ள சொன்னவாறு அறிவார் ஆலயத்தில் உத்தாலமரத்தின்கீழ் இதை நினைவுகூறும். வகையில் பாதுகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## வேத நந்தி

ஒரு சமயம் வேதங்கள் நான்கும் பெரிய வெள்ளைக் காளையாகி சிவபெருமானைத் தாங்கின. இதனை "வேதவெள்விடை" என்று தேவாரம் கூறுகிறது.

## வேதம் குதிரை

திரிபுரதகனம் செய்யப் புகுந்த இறைவனுக்குத் தேவர்கள் ஒப்பற்ற ரதத்தைச் செய்து கொடுத்தனர். அதற்கு நான்கு வேதங்களும் குதிரைகளாக இருந்தன. இதனைச் சுந்தரர், "புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில் ஏந்தி வேதப்புரவித் தேர்மிசை நின்றவன்" என்று அருளிச்செய்துள்ளார்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## வேதம் தலமரம்

வேதாரண்யம் எனும் தலத்தில் நான்கு வேதங்களும் தலமரங்களாக உள்ளன. ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வொரு மரம் தலமரமாக உள்ளது.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் உள்ள மாமரமும், திருக்குற்றாலம் தலத்திலுள்ள பலாமரமும் வேதத்தின் வடிவம் என்று புராணங்கள் கூறுகின்றன.

## வேதம் திருவடிகள்

சிவபெருமானுக்கு திருவடிகள் வேதங்களாகும். இதனை திருநாவுக்கரசர். "ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலி சிறந்த வேதியர் வேதமும் வேள் வியும் ஆவன... ஐயாறன் அடித்தலமே" என்று பாடுகின்றார்.

## வேதச் சிலம்பு

காஞ்சியில் உள்ள சிவாலயங்களில் ஒன்று மறை நூபுரம் ஆகும். இங்கு யுகமுடிவில் வேதங்கள் வழி பட்டுச் சிவபெருமானுக்குச் காற்சிலம்பாயின. பிரம்ம தேவனுக்குச் சிவபெருமான் தூக்கிய காலை அசைத்து ஒலிமூலம் வேதங்களை உபதேசித்த தலம் என்பர்.

## வேத வீணை

வேதத்தை விரித்தோதும் ஆலமர் செல்வனான சிவபெருமானின் கரத்திலுள்ள வீணை வேத வீணை என்று அழைக்கப்படுகிறது. இது வேதத்திலுள்ள சுரங் களை இனிமையாகப் பொழிவதாகும். தக்க யாகப் பரணியில் வேத வீணையைப் பற்றிய குறிப்பைக் காண்கிறோம்.

## வேத லிங்கங்கள்

சிவபெருமான் வேதத்தின் வடிவமாக இருப்பதை உணர்த்தும் வகையில் வேதங்களைச் சிவலிங்க வடிவில் வணங்குகின்றோம். திருவாரூரில் நான்கு வேதங்களைக் குறிக்கும் நான்கு லிங்கங்கள் தனித்தனி சிற்றாலயங் களாக அமைக்கப்பட்டுள்ளன.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான ஆனாயநாயனார் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் திருமங் கலம். இது லால்குடிக்கு அருகில் உள்ளதாகும். ஆனாய நாயனாரின் இசைக்கு உருகி அருள்புரிந்த இறைவன் இசை வேதமாகிய சாமவேதத்தின் பெயரால் "சாமவேதீ சுவரர்" என்று அழைக்கப்படுகின்றார்.

திருவிசைப்பா தலமான சாட்டியக் குடியில் உள்ள பெருமான் ருக்வேதீசுவரர் என்று அழைக்கப்படு கின்றார். காஞ்சீபுரத்தில் கச்சபேசுவரர் ஆலயத்துள் வேத சித்தீச்சரம் என்னும் தலம் உள்ளது. இதில் பெருமான் நான்கு முக லிங்கமாக எழுந்தருளியுள்ளார். இவர் தனது நான்கு முகத்தாலும் வேதத்தை ஓதிக் கொண்டிருக்கின்றார் என்று கூறுவர். இவரை வழிபடுவ தால் வேதத்தை நன்கு அத்தியானம் செய்யும் திறன் உண்டாகும் என்றும் வேதத்தை ஓதுவதால் உண்டாகும் சகல பாக்கியங்களும் கிடைக்கும் என்றும் நம்பு கின்றனர்.

வேத மந்திரங்களைக் கூறி பிடித்து வைக்கப்பட்ட வெண்மணல் சிவமாகிறது. சடாயு என்பான் வேத மந்தி ரத்தால் வெண்மணலே சிவமாக போதத்தால் வழிபட் டான் என்று தேவாரம் கூறுகிறது.

## வேதங்கள் பூசித்த தலங்கள்

திருவோத்தூர், திருவேற்காடு, வேதாரண்யம், வேதிக்குடி, தேரழுந்தூர், திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களில் நான்கு வேதங்களும் சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்றன. இதையொட்டி இத்தலத்து சிவபெருமான் வேதபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். வேதங்கள் மானுட வடிவத்துடனும் தேவ வடிவத்துடனும் பல தலங்களில் பூசித்துள்ளன.

வேதத்தின் தேவ வடிவங்களில் திருவண்ணாமலை முதலிய தலங்களில் ஓவியமாகக் காண்கிறோம். வேதங்கள் முனிவர்கள் வடிவில் உலாத் திருமேனிகளாக இருப்பதை வேதாரண்யத்தில் காண்கிறோம். சேலம் கந்தாச்சிரமத்தில் வேதமூர்த்திகள் கல் திருவுருவங்களாக எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன.

## வேத தீர்த்தங்கள்

வேதங்கள் பலதலங்களில் தீர்த்தங்களாகவும் இருக்கின்றன. சாட்டியக்குடி, வேதாரண்யம் முதலிய தலங்களில் வேததீர்த்தங்கள் உள்ளன. இத்தீர்த்தங்களில் மூழ்கி இறைவனை வழிபடின் சிறந்த ஞானம் உண்டாகும் என்று நம்புகின்றனர். திருமறைக்காட்டில் உள்ள கடல் வேததீர்த்தம் என்று போற்றப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தமிழ் வேதத்துள் நான்மறைகள்

தமிழ்மறையான திருமுறைகளில் அனேக இடங்களில் ஆதிவேதங்களான சதுர்மறைகளும் அவற்றின் சிறப்புக்களும் திரும்பத்திரும்பப் பேசப்பட்டுள்ளன.

சிவபெருமானிடமிருந்தே வேதம், அதன் ஆறு அங்கங்கள், ஆகமங்கள் யாவும் வெளிப்பட்டன என்றும் அவற்றை இறைவன் வகுத்து அளித்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனைத் திருஞானசம்பந்தர், "தொகுத்தவன் அருமறை. அங்கம் ஆகமம் வகுத்தவன்" என்று திருவிற்கோலப் பதிகத்தில் குறிக்கின்றார்.

முதல் ஏழு திருமுறைகளில் உள்ள வேதம் தொடர்பான செய்திகளைத் தொகுத்துக் காண்கையில் வேதத்தைச் சிவபெருமான் தோற்றுவித்தான். பின்னர் ஆறு அங்கங்களோடு அதை மற்றவர்களுக்கு ஓதுவித்தான். அவன் தானே வேதமாக இருக்கின்றான். எப்பொழுதும் வேதங்களைப் பாடிக்கொண்டே இருக்கின்றான். வீணையில் வேதங்களை இசைத்து மகிழ்விக்கின்றான். இருக்கு, சாம வேதங்களை வீணையில் மீட்டுகிறான். அந்த வேதத்தின் ஆயிரம் சாகைகளையும் இசைமீட்டிப் பாடுகின்றான்.

வேதங்களை விரித்துக் கூறும் உரை நூல்களை அருளிக் கொண்டே இருக்கின்றான். அதே சமயம் வேதங்களால் தேடப்படும் அரியபொருளாகவும் அவன் இருக்கின்றான்.

வேதம் வல்லவர்களான பரம ஞானிகளுக்கு அவன் அருள்புரிகின்றான். இதனால் மறையோர்கள் ருக்வேதத்தை ஓதி அவனை நீராட்டி மாலைசூட்டி வழிபடுகின்றனர்.

இறுதிப்பாடல் "வாழ்க அந்தணர்" என்று வேத நெறியாளர்களை வாழ்த்துவதையும் காண்கிறோம்.

அவன் சாமவேதத்தின் கானங்களை விரும்புகின்றான். அதனைப்பாடும் அடியார்களுக்கு விரும்பிச் சென்று அருள்புரிகிறான். வேதங்களைப் பாடி ஆடுகின்றான். அவன் கங்கை நதியான பெண்ணைத் தலையில் சூடியதைக் கேட்டு உமையவள் கோபித்து ஊடல் கொண்டாள். அதைப் போக்க வேண்டி அவள் முன் சாமகானம் பாடி நடமாடி அவளை மகிழ்வித்தான்.

இறைவன் இருக்கு, சாமம் ஆகிய வேத மொழிகளால் மகிழ்வதை அறிந்த ராவணன் (தான் கயிலை மலையைத் தூக்க முயன்று அவனால் அழுத்தப்பட்ட

போது) அந்த வேதங்களைப்பாடி இறைவனிடம் அரிய வரங்களையும், சந்திரகாசம் என்னும் வாளையும் பெற்றான்.

வேதங்கள் சிவபெருமானைப் போற்றிப் பணிகின்றன. வெள்விடையாகி அவனைத் தாங்குகின்றன. மானுட வடிவம் தாங்கிப் பூசிக்கின்றன. அவனுடைய தேரில் குதிரைகளாக உள்ளன. அவனுடைய திருவடிகளாகவும் அதில் ஒலிக்கும் கழல்களாகவும் உள்ளன.

சிவபெருமானைப் போற்றும் அந்தணர்கள் வேதங்களையும் ஓதி முத்தீ வேள்வி செய்கின்றனர். அவர்கள் கருத்தில் சிவபெருமான் நீங்காது இருக்கின்றான். அவர்கள் வேதங்களை ஓதுவதைக் கேட்ட அவ்வூர்ச் சோலைகளில் உள்ள கிளிகளும் பூவைகளும் வேதத்தைப் பாடுகின்றன. கூட தவறாக வேதத்தைச் சொல்லும் போது அந்தக் கிளிகள் பிழையைத் திருத்திக் கூறும் திறம் கொண்டிருந்தன. திருவீழிமிழலை, நனிபள்ளி, ஓமாம்புலியூர், திருவெண்காடு முதலிய அனேக தலங்களில் வேதம் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

வேதநூல்கள், ஆரணம், சுருதி, விழுமியநூல், ஒலிமா பல பெயர்களால் குறிக்கப்படுகின்றது.

வேதங்களின் குறிக்கப்பட்டுள்ள யாகங்கள் எல்லா வற்றுக்கும் சிவனே தலைவன். பிரமன், மார்க்கண்டேயன், சம்பாதி (கழுகரசன்), முனிவர், வானவர், தானவர், முதலிய எல்லோரும் வேதங்களால் சிவனைப் பூசிக்கின்றனர்.

பூதங்கள் வேதங்களைப் பாடி ஆட இறைவன் காட்டில் நடனமாடுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு வேதங்களில் உட்பொருள் சிவபெருமானே ஆவார். அவனுடைய நமசிவாய என்ற ஐந்தெழுத்து வேதங்களின் மூலப்பொருளாகும். இதனை ஞானசம்பந்தர் வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் "நமச்சிவாயவே" என்று குறிக்கின்றார்.

எட்டாம் திருமுறையான திருவாசகத்துள் இறைவன் வேதமயமாக இருக்கின்றான். வேதங்களை விரித்தோதுகின்றான். அடியவர்கள் வேதங்களைப் பாடித் தோத்தரிக்கின்றனர் என்ற பல குறிப்புக்களைக் காண்கிறோம்.

பத்தாம் திருமுறையில் திருமூலர் வேதத்தின் சிறப்பு தனித் தலைப்பின் கீழ் போற்றப்பட்டுள்ளது. வேதம் இதில் அறம் என்று கூறப்பட்டுள்ளது.

பன்னிரண்டாம் திருமுறையில் வேதத்தின் சிறப்பு அங்காங்கு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் புராணத்துள் அவர் வேத நெறி தழைத்தோங்க வந்தவராக புகழப்படுகின்றார். வேதத்தின் ஜீவனாக விளங்கும் ஸ்ரீ ருத்திரத்தை நீரிடை நின்று ஓதி வீடு பேறுபெற்ற பசுபதி நாயனாரின் வரலாறு இடம் பெற்றுள்ளது.

## சிவாலயங்களில் வேதம்

சிவாலயங்களில் பூசைகள் ஆகம முறைப்படியே நடைபெறுகின்றன என்றாலும் வழிபாட்டில் வேதம் முறையிலும் நடைபெறுகின்றன.

சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யும்போது வேதத்தின் இதயமாக விளங்கும் ருத்திரம், சமகம். புருஷசூக்தம், ருத்ரசூக்தம் முதலானவைகள் ஓதப்படுகின்றன. தீபாராதனையின் ஒரு அங்கமாக சதுர்வேதங்களும் ஓதப்படுகின்றன. பஞ்ச தட்டு தீபாரதனையில் ஈசானம் சர்வ வித்யானம் முதலான வேத மந்திரங்கள் ஓதியே ஆராதனை செய்யப்படுகிறது. பூசையின் முடிவில் மந்திரபுஷ்பமும் சுவஸ்திருக்குகளும் சொல்லப்படுகின்றன.

ஆலயங்களில் வேதம் ஓதுவதற்கென "அத்யயான பட்டர்" என்பவர் நியமிக்கப்படுகின்றார். இவர் மூன்று சந்திகளிலும் வேதம் ஓதுவதுடன் இறைவனுக்கு பூணூல் முதலியவற்றை நாள்தோறும் அளித்து வருகின்றார்.

ஆகம நெறிப்படி அமைந்த கோயில்களே யன்றி வேதநூல்படி அமைக்கப்பட்டு பூசிக்கப்படும் சிவாலயங்களும் இருக்கின்றன. இவற்றில் ரிக்வேதிகளான வைதீகப் பிராமணர்கள் பூசை செய்து வருகின்றனர். வைதீகப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அனேக சிவாலயங்கள் இருக்கின்றன. திருமுறைகள் இருக்மந்திரத்தை ஓதி மறையவர்கள் வழிபட்ட கோயி லைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இதனை திருநாவுக் கரசர் இருக்கோதி மறையவர்கள் வழிபாடேத்தும் இளங் கோயில் என்று குறிக்கின்றார்.

ஆகமப்படியான கோயில்களில் வேதப் பிராமணர்கள் அந்தராளத்தில் நின்று வேதங்களை ஓதினர். வேதங்கள் ஓதும் அந்தணர்களுக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்களைப் பற்றி கல்வெட்டுக்கள் சிறப்பாகக் குறிக்கின்றன.

பெருந்திருவிழாவிலும், கும்பாபிஷேகம் முதலிய சிறப்பு நாட்களிலும் நான்கு வேதங்களும் ஓதப்படுகின்றன. இவை வேத பாராயணம் என்று அழைக்கப் பட்டது. அவ்வப்போது நடைபெறும் பூஜையின் தன்மைக்கேற்ப பதம், ஜடை, கனம் ஆகிய முறைகளில் நிகழ்த்தப்படுகிறது.

பிரதோஷம், வசந்தம், பவித்ரோத்ஸவம் முதலிய நாட்களில் சுவாமி உட்பிராகாரங்களில் வலம் வரும் போது கூட்டமாக இருந்து வேதம் ஓதப்படுகின்றது.

❁ சிறப்பு விழாக்காலங்களில் ஸ்ரீருத்திர மகன்யாச வேள்வியும் ஜபமும் நடத்தப்பட்டன. ஏகாதசருத்ரம், சதருத்திரம், மகாருத்திரம், அதிருத்தரம் முதலிய வேள்விகளும், ஜபமும் இறுதியில் சிவலிங்கத்திற்கு அபிஷேகமும் செய்யப்படுகின்றன.

❁ சில ஆலயங்களில் வீணையில் சாமகானம் இசைக்கப்பட்டதென்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தேவாரத்துள் வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

❁ நேபாளம் பசுபதிநாதர் கோயில் உள்ள நான்கு வாயில்களை நோக்கிய நான்கு முகங்களை நான்கு வேதங்கள் ஓதி வழிபடுகின்றனர்.

❁ பல ஆலயங்களில் சிவபெருமான் வேத நாயகர், வேதபுரீசன், வேதகிரி, வேதநாதன் என்று பல வாறு அழைக்கப்படுகின்றார். இதையொட்டி உமா தேவியர், வேதநாயகி, வேதவல்லி என்ற பெயர்களைப் பெற்றுள்ளாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஆகமப் பொருளே போற்றி! அரும்பொருள் திருவே போற்றி!! போற்றி!!!

# சிவாகமங்கள்

இந்திய சநாதன தர்மத்தின் ஆணிவேராகத் திகழ்வது நான்கு வேதங்களாகும். அவ்வேதங்கள் அனைவருக்கும் பொதுவென்றும் அதனினும் சிறந்ததாக எழுந்த சிறப்பு நூல் ஆகமம் என்றும் கூறப்படுகின்றது. ஆகமங்கள் சிவபெருமானால் அருளப்பெற்றதாகும்.

சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் ஆகமங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டே கோயிற்கலை நூல்கள், சிற்பங்கள், வழி பாட்டு நூல்கள், முதலியனவும் எழுந்துள்ளன.

மனிதன் அடைய வேண்டிய இறுதி நிலையான மோட்சத்திற்கு உண்டான ஞானசாதனங்களை ஆகம நூல்கள் விரிவாக விளக்கிப் போதிக்கின்றன. அதே சமயம் இந்தப் பூவுலகில் மக்கள் மேன்மையுடனும் சிறப்புடனும் வாழ வழி கூறுகின்றன. கலை, இலக்கியம், இசை, நடனம், ஓவியம் ஆகிய நூல்களை ஆதரித்துப் போற்றி வழிகாட்டும் நூலாகவும் இருக்கின்றன.

இறைவனுடைய திருவாக்கினின்று வெளியான நூல்களாதலின் இவை இறைவனாகவே பாவித்து வணங்கப்படுகின்றன. ஆகம வடிவமாக இருக்கும் இறைவனைப் போற்றி மாணிக்கவாசக சுவாமிகள் சிவ புராணத்தில்,

**"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க"**

என்று கூறுகின்றார். ஆகம நூல்களைச் சிவலிங்கமாகப் பாவித்து மாலை சூட்டி வழிபடும் வழக்கம் நெடுங் காலமாக உள்ளது. இருபத்தெட்டு சிறு லிங்கங்களை உள்ளடக்கிய சிவலிங்கம் சிவாகமலிங்கம் என்று அழைக்கப்படுகிறது.

ஒப்பரிய நூல்களாக இருக்கும் 28 சிவாகமங்களின் பெருமைகைளைப் பேசுவதாகச்சிவமஞ்சரியின் இருபத் தெட்டாவது மலரின் இரண்டாம்பகுதி திகழ்கிறது. இதில் சிவாகமங்கள், அதனை அருளிய சதாசிவமூர்த்தம், சிவாகமத்தின் சிறப்புக்கள் முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

ஆகமவாணி உடனாய சிவாகமச் செல்வச் சிவ பெருமான் அடியார்களுக்கு எல்லையற்ற ஞானத்தையும், குறைவற்ற செல்வத்தையும் அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றித் துதிக்கின்றோம்.

– சிவசுந்தரி

## மும்மண்டலங்களில் வீற்றிருந்து ஆகமம் அருளுதல்

ஆதியில் சிவபெருமான் சிவாகமங்களை அம்பிகைக்கு அருளினார். பின்னர் தேவர்கள் வேண்ட சூரிய மண்டலத்தின் நடுவில் அர்த்தநாரீசுவராக வீற்றிருந்து உபதேசித்தார். அவர் தனது நான்கு முகங்களாலும் ஆகமங்கள் அருளியதைத் தேவர்கள் கேட்டார்கள். அவர்களால் ஆகமங்கள் பரவின . காலவெள்ளத்தால் அவை பல அழிந்தன. சிலவே எஞ்சின. தேவி ஆகமங்களை மீண்டும் உபதேசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அவர் ஓர் இரவில் சந்திர மண்டலத்தின் மத்தியில் வீற்றிருந்து அவளுக்கு அருளிச் செய்தார். அவளுடன் ததீசி, உபமன்யு, அகத்தியர் ஆகியோரும் வீற்றிருந்து கேட்டு உலகில் பரப்பினர். அக்னி மண்டலத்தின் நடுவில் சிவபெருமான் உருத்திரராக வீற்றிருந்து ஆகமங்களை உபதேசிக்கின்றார். இதனை ஞானவான்கள் கேட்டு மகிழ்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## ஆகமம் - விளக்கம்

ஆகமம் என்ற சொல்லுக்குப் பலவகையான விளக்கங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. முதலில் ஆகமம் என்பதற்கு வந்தது என்பது பொருளாகும். எங்கிருந்து வந்தது என்றால் பரம ஆப்தரது வாயில் இருந்து வந்தது என்பதாகும். பரம ஆப்தராகிய சிவ பெருமான் தன் மனத்தால் எண்ணித் திருவாயால் அருளியதே ஆகமம் ஆகும்.

மேலும் இந்தச் சொல்லுக்கு நெறிப்படுத்துதல் என்பதும் பொருளாகும். இதன்படி மனிதனின் ஆன்மா கட்டுக்கடங்காமல் மனம் விரும்பிய வழியெல்லாம் சென்று துன்பமடையாமல், குறித்த வரையறையில் ஒழுகி சகல மேன்மைகளையும் அடைந்து இன்பத்தை அனுபவிக்கச் செல்லும் வழி நெறிகளை ஒழுங்குப் படுத்திக் கூறுவது என்பதாகும்.

மேலும், ஆகமம் என்பதற்கு ஆன்மாவைத் தனது வசத்தில் நிலைப்படுத்தி இகவாழ்வில் மேன்மையும் பரத்தில் வீடுறெ நிலைபெறச் செய்தல் என்பதும் பொருளாகும்.

"ஆ" என்பது ஞானமும், "க" என்பது மோட்சமும் "ம" என்பது மலநாசமும் ஆகும். இதையே சேர்த்து ஆகமம் என்று அழைக்கின்றனர். ஆன்மாக்களின் மலத்தை நாசம் செய்து ஞானத்தை தோற்றுவித்து மோட்சத்தை கொடுக்கும் நூல்கள் ஆகமங்கள் எனப் பெயர் பெற்றன என்று சமயநூல்கள் கூறுகின்றன.

❁ ஆகமம் என்ற சொல்லுக்குக்குத் தொன்று தொட்டு வாழையடி வாழையெனவரும் அறிவு என்பதும் பொருளாகும். இதனையொத்த அனேக விளக்கங்களைச் சைவ நூல்களில் காண்கிறோம்.

(ஆகமங்கள் என்ற சொல் சிறப்பான சமயக்கலை நூல்களைக் குறிக்கிறது. சைவர்களின் சமயக்கலை நூல்கள் சிவாகமங்கள் என்றும், வைணவர்களின் ஆகமங்கள் வைஷ்ணவ ஆகமங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன. இதையொத்ததாக கிருத்துவர்கள் பைபிளை வேதாகமம் என்றும், ஜைனர்கள் தமது நூலை ஜினாகமங்கள் என்றும் அழைக்கின்றனர்.)

## ஆகமம் - சிந்தனைத் துளிகள்

❁ சிவாகமங்களின் எண்ணிக்கை அளவிறந்ததாகும். இவை அனைத்தையும் ஒருவன் வாழ்நாளில் படித்துப் பயன்பெறுதல் இயலாத தொன்றாகும். என்றாலும் சிவன் அருளால் இவற்றின் சாரத்தை ஒரு நொடியில் அறிந்து கொள்ள முடியும்.

❁ சிவாகம ஓலைக் சுவடிகளைச் சிவலிங்கமாகப் பாவித்து வணங்குவது மரபு. ஆகமநூல்களை தனியிடத்தில் வைத்து வழிபட்டனர். இதற்கு ஆகமக் கோயில் என்பது பெயர். சிவாகமங்களை எண்ணுவதும் பூசிப்பதும் புண்ணியமாகும்.

❁ சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமங்கள் சிவபெருமானாகவே போற்றி வழிபடப்பட்டன. இதனால் இது இமயம் முதல் குமரிவரை பரவி இருந்தது. தென்னகத்திலிருந்த சிவாகமங்களுக்குக் காஷ்மீரத்தி லுள்ள பண்டிதர்கள் பெரிய உரைகள் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❁ சிவாகமங்கள் இப்போது முழுமையாக கிடைக்காவிட்டாலும் மக்களுக்கு ஏற்ப அறிவுறுத்தும் வகையில் இன்று வரை நிலைப்பெற்றுள்ளன.

❁ வேதங்கள் எழுத்து வடிவில் இல்லை. அவை வழிவழியாக வாயால் கூறப்பட்டு செவியால் கேட்கப் பட்டு மனத்தால் கிரகிக்கப்பட்டுப் போற்றப்பட்டன. இதனால் எழுதாக்கிளவி ஸ்ருதி எனப்பட்டது. ஆகமங்கள் ஆதியிலேயே எழுத்து வடிவம் பெற்றுவிட்டன. கிரந்த எழுத்துக்களால் அது எழுதப்பெற்றிருந்தது. தட்சிணாமூர்த்தியின் கரத்தில் இருப்பது ஆகமச் சுவடியே ஆகும்.

❁ விருத்த காசி எனப்படும் விருத்தாசலம். விருத்தகிரீசுவரர் ஆலயத்தில் வடமேற்கு முனையில் பெரிய துணை ஆலயம் உள்ளது. இதில் இருபதெட்டு லிங்கங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ் வொரு ஆகமத்தின் வடிவமாகும். இவ் வரிசையில் விநாயகரும் பைரவரும் இடம்பெற்றுள்ளனர்.

❁ சிவாகமங்களுக்குச் சித்தாந்தம், தந்திரம் முதலிய பல பெயர்களும் வழங்குகின்றன.

❁ சிவாகமக் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்கப் பலநூல்கள் எழுந்தன. இவை சகல ஆகம சாரசங்கிரகம், ஆகம சாராவளி என்று பெயர் பெற்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஆகமம் தோன்றிய வரலாறு

ஆகமங்கள், சிவபெருமானால் தன்னுடைய ஆற்றலுக்கு ஒப்பாகவே படைத்து அருளப்பட்டன.

ஆதியில் பேரண்ட வெளியில் எதுவும் இல்லை. அந்நிலையில் பரமசிவம் உலகைப் படைக்க எண்ணம் கொண்டது. எண்ண ஆற்றல் உலக உற்பத்தியின் பொருட்டுப் பரவெளியிலிருந்து மெல்லிய ஒளிக் கதிர் களாகவும், அதிலிருந்து திரண்ட தூணாகவும் அத்தூணி லிருந்து சதுர்புஜங்களுடன் கேவல மூர்த்தியாகவும் அவரிடமிருந்து மகாசதாசிவ மூர்த்தி யாகவும் உருப் பெற்றது. சதாசிவ மூர்த்தி ஐந்து முகங்களும் பத்துத் திருக்கரங்களும் கொண்டு பத்மா சனத்தில் வீற்றிருக் கின்றார்.

வலப்பாகத்திலிருந்து இவருடைய சக்தி பெண் வடிவத்துடன் பராசக்தியாக வெளிப்பட்டாள். சிவசக்தி யர்களிடமிருந்து படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களும், அவற்றை வழிநடத்தும் நாயகர்களாக பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேசர், சதாசிவர் என்பவர்களும் அவர்களிடமிருந்து படிப்படியாக உலகமும் ஏனைய சீவராசிகளும் தோன்றின.

சதாசிவன் உலக நன்மையின் பொருட்டுத் தனது ஐந்து முகங்களால் சிவாகமங்களையும் அருளிச் செய் தார். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கிய சத்யோஜாதம், அகோரம், தத்புருஷம், வாம தேவம் ஆகிய நான்கு முகங்களால் முகத்திற்கு ஐந்து ஆகமங்கள் வீதம் இருபது ஆகமங்களையும் மேலே யுள்ள ஈசானம் என்ற ஐந்தாவது முகத்தால் எட்டு ஆக மங்களையும் அருளிச் செய்தார்.

ஆதியில் சிவபெருமான்தானே குருவாகஇருந்து இவற்றை உமாதேவியாருக்கு உபதேசம் செய்தார் இதனைத் திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில் "மகேந்திரப்பொன்மலையில் மலைமகளுக்கு அருளும் குரு நீ" என்று குறிப்பிடுகின்றார். அம்பிகை சிவபெரு மானிடத்தில் சிஷ்யபாவத்துடன் சிவனிடமிருந்து ஆகமங்களைக் கேட்டுக் கொண்டதால் சிஷ்யபாவ கௌரி என்று அழைக்கப்படுகின்றாள்.

இந்நிகழ்ச்சியை திருவாசகத்துள் மணிவாசகர்.

"மன்னுமாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்" என்றும்,

❁ உமா தேவிக்கு ஆகமங்களை அருளுதல்

"மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும் மற்றவை தம்மை
மகேந்திரத்திருந்து உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்"

என்றும் குறிக்கின்றார்.

சிவபெருமான் உமாதேவியைத் தம் மடிமீது அமர்த்திக்கொண்டு சிவாகமங்களை அருளிச் செய்த கோலத்தைச் சிற்பநூல்கள் உமேசர் என்று அழைக்கின் றன. இதில் சிவபெருமான் ஆறு திருக்கரங்கள் கொண் டுள்ளார். இவற்றில் மான், மழு, சூலம், தண்டம் ஜபமாலை ஆகியவற்றை ஏந்தியுள்ளார்.

பின்னாளில் பார்வதிதேவியைப் போலவே சனகாதி முனிவர்கள், பஞ்சரிஷிகள், சப்தரிஷிகள், சுகர், தும்புரு முதலியோரும் சிவபெருமானிடமிருந்து சிவாகமங்களின் விளக்கத்தைக் கேட்டு அறிந்து கொண்டனர்.

இவர்களின் வழியாக சிவாகமங்கள் உலகில் பரவின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஆகமங்களும் அதனைக் கேட்டவர்களும்

ஆகமம் என்பன எண்ணிலாதனவாகும். இவற்றைப் பெருமான் உமாதேவியாருடன் வீற்றிருந்து பல்வேறு நிலையில் பல்வேறு வகையினருக்கு விரிவாகவும், சுருக்கமாகவும் பலவாறு உபதேசித்துள்ளார்.

ஆகமங்கள் எண்ணிலாதன என்பதைத் திருமூலர்,

**"எண்ணில் ஆகமங்கள் இயம்பினன் ஈசன்"**

என்று குறிப்பிடுகின்றார்.

ஆகமங்களின் அளவு எண்ணிலாததாக இருந்தாலும் இப்போதுள்ள ஆகமங்களின் எண்ணிக்கை இருபத்தெட்டாகும். இவற்றைச் சிவபெருமான் உமா தேவியுடன் வீற்றிருந்து அறுபத்தாறு பேர்களுக்குக் கூறினான் என்றும் அவர்கள் மூலமாகவே இவை பூமியில் பரவின என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இப்போதுள்ள ஆகமங்கள் இருபத்தெட்டு முறையே. 1.காமிகம், 2.யோகஜம், 3.சிந்தியம், 4.காரணம், 5.அஜிதம், 6.தீப்தம், 7.சூட்சுமம், 8.சஹஸ்ரம், 9.அம்சுமான், 10.சுப்ரபேதம், 11.விஜயம், 12.நிசுவாசம், 13.சுவாயம்புவம், 14. அனலம், 15. வீரம், 16. ரௌரவம், 17. மகுடம், 18. விமலம், 19. சந்திரக்ஞானம், 20. முகபிம்பம், 21. புரோற்கீதம், 22. லளிதம், 23. சித்தம், 24. சந்தானம், 25. சர்வோக்தம், 26. பாரமேசுவரம், 27. கிரணம், 28. வாதுளம் என்பனவாகும்.

இவற்றில் முதல் பத்து ஆகமங்கள் 'சிவர்' எனப் படும் அன்பர்களுக்கும் உபதேசிக்கப்பெற்றதால் சிவ பேதம் என்றும் எஞ்சிய பதினெட்டு ஆகமங்கள் உருத்திர கணத்தினர்களுக்கு உபதேசிக்கப்பட்டதால் உருத்திர பேதமென்றும் அழைக்கப்படுகின்றன.

சிவபேத ஆகமங்கள் பத்தினைச் சிவபெருமான் பிரணவர் முதலான பத்து பேர்களுக்கு ஒவ்வொன்றாக அருளிச்செய்தார். அவர்கள் ஒவ்வொருவரும் தம்மிடம் இருந்த இரண்டு இரண்டு பேருக்கு ஆகமங்களை விளக்கிக்கூறினார். இதன்படி இந்தப் பத்து ஆகமங்களை அறிந்தவர்கள் முப்பதின்மராவர்.

உருத்திரப்பேதமான பதினெட்டு ஆகமங்கள் சிவ பெருமான் அநாதிருத்திரர் முதலான பதினெண்மருக்கு ஒவ்வொருவருக்கு ஒன்றாக அருளிச்செய்தார். அவர்கள் ஒவ்வொருவரும் தன்னிடம் முதன்மை பெற்றிருந்த ஒவ்வொருவருக்கும் இதனை உபதேசித்தனர். இவ்வகையில் ஆதியில் கேட்ட பதினெண்மர் அவர்களிடம் கேட்டவர்கள் பதினென்மர் ஆக முப்பத்து அறுவராவர்.

இதனையொட்டி ஆதியில் ஆகமங்களை கேட்டவர்கள் அறுபத்தறுவர் என்றும் மரபு உண்டாயிற்று. இவர்கள் மூலமாக உலகமெங்கும் சிவாகமங்கள் பரவின.

பின்வரும் பட்டியலில் ஆகமத்தின் பெயரும், அதையடுத்து அதை சிவபெருமானிடத்தில் முதலில் கேட்டவரின் பெயரும், அதைத் தொடர்ந்து அவரிடமிருந்து ஆகமத்தைக் கேட்டுக்கொண்டவர் பெயரும் இடம்பெற்றுள்ளன. அடைப்புக்குறிக்குள் ஆகமத்திற்கு நேராக உள்ளவை ஆகமத்திலிருந்த கிரந்தங்களின் எண்ணிக்கையாகும். இவற்றில் பத்மம், பரார்த்தம் நியுதம் என்பன எண்ணிக்கையின் அளவுகளாகும்.

## சிவபேதாகமங்கள்

1. காமிகம் (பரார்த்தம்)
முதலில் கேட்டவர் : பிரணவர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : திரிகலர், ஹரர்
2. யோகஜம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சுதர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : பஸ்மர், விபு
3. சிந்தியம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சுதீப்தர்
அவரிடமிருந்து கேட்டவர் : கோபதி, அம்பிகை
4. காரணம் (கோடி)
முதலில் கேட்டவர் : காரணர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : சர்வருத்திரர், பிரஜாபதி
5. அஜிதம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சுசிவர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : சிவர், அச்சுதர்
6. தீப்தம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : ஈசர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : ஈசானர், ஹுதாசனர்
7. சூட்சுமம் (பத்மம்)
முதலில் கேட்டவர் : சூட்சுமர்
அவரிடமிருந்துகேட்டவர்கள்:வைஸ்ரவணர், பிரபஞ்சனர்
8. சஹஸ்ரம் (சங்கம்)
முதலில் கேட்டவர் : காலர்
அவரிடமிருந்து கேட்டவர்கள் : பீமர், தருமர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. அம்சுமான் (ஐந்து லக்ஷம்)
முதலில் கேட்டவர் : அம்பு
அவரிடமிருந்து கேட்டவர்கள் : அக்ரர், ரவி
10. சுப்ரபேதம் (மூன்று கோடி)
முதலில் கேட்டவர் : தசேசர்
அவரிடமிருந்து கேட்டவர் : விக்னேசர், சசி

ருத்திரபேதாகமங்கள்

11. விஜயம் (மூன்று கோடி)
முதலில் கேட்டவர் : அனாதிருத்திரர்
அவரிடமிருந்து கேட்டவர் : பரமேசர்
12. நிசுவாசம் (ஒரு கோடி)
முதலில் கேட்டவர் : தசார்ணர்
அவரிடமிருந்து கேட்டவர் : சைலசர்
13. சுவாயம்புவம் (ஒன்றரைக் கோடி)
முதலில் கேட்டவர் : நிதனேசர்
அவரிடமிருந்து கேட்டவர் : பிரம்மர்
14. ஆக்னேயம் (முப்பதினாயிரம்)
முதலில் கேட்டவர் : வியோமர்
அவரிடமிருந்து கேட்டவர் : ஹுதாசனர்
15. வீரம் (நியுதம்)
முதலில் கேட்டவர் : தேஜஸ்
அவரிடமிருந்து கேட்டவர் : பிரஜாபதி
16. ரௌரவம் (எட்டற்புதம்)
முதலில் கேட்டவர் : ப்ராம்மணேசர்
அவரிடமிருந்து கேட்டவர் : நந்திகேசர்
17. மகுடம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சிவர்
அவரிடமிருந்து கேட்டவர் : மகாதேவர்
18. விமலம் (மூன்றுலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சர்வாத்மகர்
அவரிடமிருந்து கேட்டவர் : வீரபத்திரர்
19. சந்திரஜ்ஞானம் (மூன்று கோடி)
முதலில் கேட்டவர் : அனந்தர்
அவரிடமிருந்து கேட்டவர் : பிருகஸ்பதி
20. முகபிம்பம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : பிரசாந்தர்
அவரிடமிருந்து கேட்டவர் : ததீசி
21. ப்ரோத்கீதம் (மூன்று இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சூலி
அவரிடமிருந்து கேட்டவர் : கவசர்
22. லளிதம் (எண்ணாயிரம்)
முதலில் கேட்டவர் : ஆலயேசர்
அவரிடமிருந்து கேட்டவர் : லலிதர்
23. சித்தம் (ஒன்றரை கோடி)
முதலில் கேட்டவர் : பிந்து
அவரிடமிருந்து கேட்டவர் : சண்டேசுவரர்
24. சந்தானம் (ஆறாயிரம்)
முதலில் கேட்டவர் : சிவநிஷ்டர்
அவரிடமிருந்து கேட்டவர் : அஸம்வாயர்
25. சர்வோக்தம் (இரண்டு இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சோமதேவர்
அவரிடமிருந்து கேட்டவர் : ந்ருசிம்மர்
26. பாரமேசுவரம் (பன்னிரண்டு இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : ஸ்ரீதேவி
அவரிடமிருந்து கேட்டவர் : உசனர்
27. கிரணம் (ஐந்து கோடி)
முதலில் கேட்டவர் : தேவவிபவர்
அவரிடமிருந்து கேட்டவர் : சம்வர்த்தர்
28. வாதுளம் (இலக்ஷம்)
முதலில் கேட்டவர் : சிவர்
அவரிடமிருந்து கேட்டவர் : மகாகாளர்

இவ்வகையில் ஆகமங்கள் 28. அதன் பகுதிகள் சிவபேதம், உருத்திரபேதம் என்ற இரண்டு. அதை ஆதியில் கேட்டவர்கள் அறுபத்தறுவர். அவற்றின் எண்ணிக்கை எண்ணிலடங்காதது என்பதனை அறிய முடிகிறது.

## மன்னும் மாமலை மகேந்திரம்

திருமுறைகளில் மகேந்திரமலைமீது வீற்றிருந்து சிவபெருமான் உமாதேவிக்கு ஆகம நூல்களை அருளிச் செய்தார் என்று குறிக்கப்படுகின்றது. அதை நினைவூட்டும் வகையில் உத்தரகோசமங்கையில் ஒரு கட்டுமலையும் அதன் மீது உமாமகேசுவரரின் சிற்றாலயமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தலம் மாணிக்கவாசக சுவாமிகள் நெடுநாட்கள் தங்கி சிவவழிபாடு செய்ததிருத் தலமாகும். இங்கேதான் சிவபெருமான் உத்திரமான (மேலான) கோசத்தின் (ஆகம நூல்களின் பொருளை விளக்கு மங்கையான பார்வதிக்கு உபதேசித்தார் என்று கூறப்படுகிறது. அதையொட்டியே (உத்தர+கோச+மங்கை) உத்திரகோச மங்கை என்பது இதன் பெயராயிற்று.

உத்தரகோசமங்கை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மங்களநாதர் ஆலயம் மரகதநடராசர் சந்நிதியின் மகாமண்டபத்திற்கு மேற்கில் சிறுகட்டுமலை பிராகாரத்துடன் உள்ளது. இதற்கு இருபத்தி எட்டு ஆகமங்களைக் குறிக்கும் வகையில் இருபத்தெட்டு படிகள் உள்ளன. கருவறையில் மேடைமீது உமாதேவியைத் தமது மடியில் அமர்த்திக் கொண்டு ஆகமங்களை அவளுக்கு உபதேசிக்கும் உமாமகேசுவரரைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஆகமங்களின் பகுதிகளும் அவை கூறும் பொருளும்

சிவாகமங்கள் ஒவ்வொன்றும் நான்கு பகுதிகளாக உள்ளன. இவை சரியை கிரியையோகம் ஞானம் என்று பெயர் பெறுகின்றன. சரியாபாதத்தில் ஆலய நிர்மாணம். கிராம நிர்மாணம். தேர்கள் செய்தல். விழாக்கள். புஷ்பம். தளிர்கள். பூசைமுறைகள். பிராயச்சித்த விதிகள் முதலான அனேக செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

கிரியாபாதத்தில் தெய்வத்திருவுருவங்களை அமைத்தல். வழிபடுதல். மந்திரங்களை உச்சரிக்கும் முறை. யாகசாலைகள். யாகமேடைகள். வேள்விச் சாலைகள் முதலியவற்றிக்கான விதிகள் விளக்கப்பட்டுள்ளன. சமயத்திலுள்ள தீட்சாவிதிகள். தனிவாழ் விலும். பொது வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள். சடங்குகள் ஆகியுவற்றின் விளக்கம் முத்லியன இடம் பெற்றுள்ளன.

யோகபாதத்தில் இயமம். நியமம் முதலான அட்டாங்க யோகச் சிறப்புகள் மூலாதாரம் முதலான ஆறாதாரங்களின் இயல்பும் விரிவாகப் பேசப்படுகின்றன. சுருக்கமாக சொன்னால் ஞானபாதத்தில் அனுபவத்தால் அறிவதை யோகபாதம் கர்மபக்தி பாவனையால் விளக்குகின்றது.

ஞான பாதத்தில் உயிர்களின் இயல்பு இறைவனின் பஞ்சகிருத்தியங்கள். பசு. பதி. பாசம். ஆகிய முப்பொருட்களின் இயல்பு. அண்டகோடிகளின் இயல்பு. வினைவகை வினைவகைப்பயன். ஞானத்தின் படிநிலைகள் முக்திநெறி முதலியவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன. உயிர்கள் இறுதியில் அடைய வேண்டிய முக்தி நெறியைப் போதிக்கின்றது.

## உபாகமங்கள்

ஆகமநூல்களைத் தொடர்ந்து அதிலுள்ள செய்திகளை அடியொற்றி அதன் கருத்துக்களை விளக்கப் பல நூல்கள் எழுந்தன. இவை உபாகமங்கள் என்று பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு ஆகமத்துக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட உபாகமங்கள் இருக்கின்றன. இவ்வகையில் 28 ஆகமங்களுக்கும் 207 உபாகமங்களாக உள்ளன. இவற்றின் பட்டியலைத் தனியே காண்க. இந்த உபாகமங்களும் சிவபெருமானர்லேயே அருளப்பட்டதாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | காமிகம் | 3 - | வக்தராரம். பைரவோத்திரம். நாரசிம்மம் (மிருகேந்திரம்) |
| 2. | யோகஜம் | 5 - | தாரம். வீணாசிகோத்திரம். ஆத்மயோகம். சந்தம். சந்ததி |
| 3. | சிந்தியம் | 6 - | ஸுசிந்தியம். ஸுபகம். வாமம். பாபநாசம். பரோத்பவம். அம்ருதம் |
| 4. | காரணம் | 7 - | காரணம். த்வேஷ்டம். பாவனம். மாரணம். தௌர்கம். மஹேந்திரம். பீமம் |
| 5. | அஜிதம் | 4 - | பிரபூதம். பரோத்பூதம். பார்வதீஸம்ஹிதை. பத்மஸம்ஹிதை |
| 6. | தீப்தம் | 9 - | அமேயம். சப்தம். ஆச்சாத்தியம். அஸங்கியம். அமிதோஜஸம். ஆனந்தம். மாதவோத்பூதம். அற்புதம். அக்ஷதம் |
| 7. | சூட்சுமம் | 1 - | சூட்சமம் |
| 8. | சகஸ்ரம் | 10 - | அதீதம். மங்களம். சுத்தம். அப்ரமேயம். ஜாதிபாக். பிரபுத்தம். விபுதம். ஹஸ்தம். அலங்காரம். ஸுபோதம். |
| 9. | அம்சுமான் | 12 - | வித்யாபுராணம். தந்திரம். வாசவம். நீலலோகிதம். பிரகாரணம். பூததந்திரம். ஆத்மாலங்காரம். காசியபம். ஐந்திரம். பிராமம். வாசிட்டம். ஈசானோத்தாரம் |
| 10. | சுப்ரபேதம் | 1 - | சுப்ரபேதம் |
| 11. | விஜயம் | 8 - | உற்பவம். சௌமியம். அகோரம். மிருத்யுநாசனம். குபேரம். மகாகோரம். விமலம். விஜயம் |
| 12. | நிசுவாசம் | 8 - | நிசுவாசம். நிசுவாசோத்திரம். நிசுவாசமுகோதயம். நிசுவாசநயனம். நிசுவாசகாரிகை. நிசுவாசகோரம். நிசுவாசகுய்யம். யமாக்யம். |
| 13. | சுவாயம்புவம் | 3 - | பிரஜாபதிமதம். பதுமம். ஸ்வாயம்புவம் |
| 14. | ஆக்னேயம் | 1 - | ஆக்னேயம் (அநலம்) |
| 15. | வீரம் | 13 - | பிரஸ்தாரம். புல்லம். அமலம் பிரபோதம். அமோகம். மோகசமயம். ஹாகடம். சாகடாதிகம். பத்ரம். விலேகனம். வீரம். ஹலம். போதகம். |
| 16. | ரௌரவம் | 6 - | காலக்னம். காலாதீதம். ரௌரவம். ரௌரவோத்திரம். மகாகாலமதம். ஐந்திரம் |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

| | | | |
|---|---|---|---|
| 17. | மகுடம் | 2 - | மகுடம், மகுடோத்திரம் |
| 18. | விமலம் | 16 - | அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், வ்ருஷோத்திரம், வ்ருஷாத்பூதம், ரௌத்திரம், சூதந்தம், தாரணம், அரேவதம், அதிக்கிராந்தம், அட்டகாசம், பத்ரவிதம், அர்ச்சிதம், அலங்கிருதம், விமலம் |
| 19. | சந்திரஜ்ஞானம் | 14 - | ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுவரம், ஏகபாதபுராணம், சங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், கல்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவீமதம் |
| 20. | முகபிம்பம் | 15 - | சதுர்முகம், சமஸ்த்தோபம், பிரதிபிம்பம், அயோகம், ஆத்மாலங்காரம், வாயவியம், பட்டசேகரம், தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம், காலாத்யயம், மகாசௌரம், மலயம், மகாவித்தை |
| 21. | புரோத்கீதம் | 16 - | வாராகம், கவசம், பாசபந்தம், பிங்கலாமதம், அங்குசம், தண்டதரம், தனுதரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீகாலக்ஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்பதஷ்டிரீவிபேதனம், கீதம், பரதம், ஆதோத்தியம் |
| 22. | லலிதம் | 3 - | லலிதம், லலிதோத்திரம், கௌமாரம் |
| 23. | சித்தம் | 4 - | சாரோத்திரம், ஔனோத்தரம், சாலாபேதம், சசிகண்டம் |
| 24. | சந்தானம் | 7 - | லிங்காத்தியக்ஷம், சுசராத்யக்ஷம், அமரேசுவரம், சங்கரம், அசங்கியம், அநிலம், துவந்தம் |
| 25. | சர்வோக்தம் | 5 - | சிவதருமோத்திரம், வாயுப்ரோக்தம், திவ்யப்புரோக்தம், ஈசானம், சருவோற்கீதம் |
| 26. | பாரமேசுவரம் | 7 - | மதங்கம், யட்சணிபதுமம், பாரமேசுவரம், புஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், சாமானியம் |
| 27. | கிரணம் | 9 - | காருடம், நைருதம், நீலம், இருட்சம், பானுகம், தேனுகம், காலாக்யம், பிரபுத்தம், புத்தம் |
| 28. | வாதுளம் | 12 - | வாதுளம், வாதுளோத்தரம், காலஞானம், ப்ரோகிதம், சர்வம், தர்மாத்மகம், நித்தியம், சிரேட்டம், சுத்தம், மகானனம், விசுவம், விச்வான்மகம் |

## கிரியா நூல்கள்

சிவாகமங்களில் உள்ள பூஜாவிதிகளை அடியொற்றி, பராசக்தி, சுப்பிரமணியர் முதலான பரிவாரதேவதைகளுக்கும் கிரியா நூல்கள் இயற்றப்பட்டன. இவை தந்திரங்கள் என்று அழைக்கப்பட்டன. சக்தி வழிபாட்டை விளக்கும் நூல்கள் சாக்த தந்திரங்கள் என்ற பெயர் பெற்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது தேவிசூக்தம், ருத்ரயாமளம், மேரு தந்திரம், டமாரதந்திரம், காத்யாயனீ தந்திரம் முதலியனவாகும்.

முருக வழிபாட்டை விளக்கும் நூல் குமார தந்திரம் எனபக்பட்டது. இதுவே இப்போது சுப்பிரமணியர் ஆலயங்களில் கடைபிடிக்கப்படும் வழிமுறையாகும்.

## பத்ததிகள்

ஆகமங்கள் பரந்து விரிந்த கடலைப் போன்றவை. சுருக்கமாக எளிய சொற்களால் ஆக்கப்பட்டிருந்தபோதிலும் ஆழமான கருத்துக்களைக் கொண்டதாகும். சிவாகமங்கள் அனேகம் இருப்பதாலும் அவை பலவேறு பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு பல்வேறு காலநிலைகளை அனுசரித்து கூறப்பட்டதாலும் எளிய மக்களால் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாது. அவற்றில் பலபகுதிகள் ஒன்றுக்கொன்று முரண்டபடுவது போலத் தோன்றும். எனவே எளிதில் புரிந்துகொண்டு வாழ்வில் கடைப்பிடித்துப் பேறுபெறும் வகையிலும் மக்களுக்கு அவற்றிலுள்ள கருத்துகளில் மாறுதலில்லாமல் கடைபிடித்துப் பயன்பெற பலதுணை நூல்கள் எழுந்தன. இவை ஆகமக் கருத்துக்களை நிரல்படி வரிசைப்படுத்திக் கூறுதலின் பத்ததிகள் என்று பெயர் பெற்றன. தென்னாட்டில் பதினெட்டுப் பேர்கள் செய்த பத்ததி நூல்கள் வழக்கில் இருந்தன. இந்நூல் ஆசிரியர்கள்

1. தூர்வாசர்
2. பைங்களர்
3. உக்ரஜோதி
4. ஸ்ரீ கண்டர்
5. விஷ்ணுகண்டர்
6. சுபோதர்
7. வித்யாகண்டர்
8. இராமகண்டர்
9. ஞானசிவர்
10. ஞானசங்கரர்
11. சோமசம்பு
12. பிரம்மசம்பு
13. திரிலோசனசிவர்
14. அகோரசிவர்
15. வருணசிவர்
16. பிராசாதசிவர்
17. இராமநாதசிவர்
18. ஈசான சிவர்

என்பவர்களாவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலங்கையில் இருபத்தோரு பத்ததி நூல்கள் வழக்கில் இருந்ததாக கூறுவர். இத்தகைய பத்ததி நூல்களும் காலப்போக்கில் மறைந்தவிட்டன. இப்போது அகோரசிவாசாரியாரின் பூஜாபத்ததியும், சோமசிவரின் சோமசம்பு பத்ததியும் அதிகமாக வழக்கில் உள்ளன.

## ஸ்ரீ கண்டர்

ஆகம நெறிகளையொட்டி பூஜாபத்ததி நூல்களைச் செய்தவர்களில் முதன்மையானவர் ஸ்ரீகண்டசிவம் ஆவார். சிவசாரியார்கள் இவரைக் குலகுருவாகப் போற்றுகின்றனர். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இவருடைய உலாத் திருமேனி உள்ளது. தொண்டை மண்டலத்திலுள்ள பல சிவாலயங்களில் இவருடைய மூலவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## அங்க பூஜையும் சிவாகமமும்

தெய்வங்களைப் பூசிக்கும் முறைகளில் ஒன்று அங்க பூஜையாகும். தெய்வத்தின் திருவுருவத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் உரிய மந்திரங்களுடன் அந்த தெய்வத்தின் சிறப்புப் பெயர்களைக் கூறி மல ரிட்டு வழிபடுவது அங்க பூஜை எனப்படும்.

சதாசிவ மூர்த்தியான சிவபெருமானுக்கு ஆகமங்களே அங்கங்களாக விளங்குகின்றன. ஆகமங்களின் பெயரையும் அந்தந்த ஆகம வடிவான அங்கத்தையும் கூறி மலரால் சிவபெருமான் திருமேனியில் அதற்குரிய அங்கத்தில் இட்டு பூசை செய்கின்றனர். இது ஆகம அங்க பூசை எனப்படும்.

பின்வரும் பட்டியலில் ஆகமத்தின் பெயரும் சிவபெருமானின் திருமேனியில் அது எந்த அங்கமாக உள்ளது என்பதன் விளக்கத்தையும் காணலாம்.

1. காமிகம் - திருவடிகள்
2. யோகஜம் - கணைக் கால்
3. சிந்தியம் - திருவடிவிரல்கள்
4. காரணம் - கெண்டைக்கால்
5. அசிதம் - முழந்தாள்கள்
6. தீப்தம் - ஊரு (தொடை)
7. சூக்ஷமம் - குஹ்யம்
8. ஸஹஸ்ரம் - கடித்தானம்
9. அஞ்சுமான் - முதுகு
10. சுப்ரபேதம் - கொப்பூழ்
11. விஜயம் - வயிறு
12. நிஸ்வாஸம் - ஹ்ருதயம்
13. ஸ்வாயம்புவம் - ஸ்தனங்கள்
14. ஆக்நேயம் - கண்கள்
15. வீரம் - கண்டம் (கழுத்து)
16. ரௌரவம் - செவிகள்
17. மகுடம் - கிரீடங்கள் (ஜடாமண்டலங்கள்)
18. விமலம் - கரங்கள்
19. சந்திரக்ஞானம் - மார்பு
20. முகபிம்பம் - திருமுகம்
21. புரோற்கீதம் - நாக்கு
22. லளிதம் - கன்னம்
23. சித்தம் - நெற்றி
24. சந்தானம் - குண்டலங்கள்
25. சர்வோக்தம் - உபவீதம்
26. பாரமேசுவரம் - ஹாரம்
27. கிரணம் - ஆபரணங்கள்
28. வாதுளம் - ஆயுதங்கள் மற்றும் ஆடைகள்

## சிவாகம வடிவமான ஞான சரஸ்வதி

சிவாகமங்களின் தெய்வீகவடிவம் ஒரு பெண்ணாக உருப்பெற்றது. இவர்கள் ஆகம சொரூபிணி, ஆகமச்செல்வி, பார்ப்பதி, சரஸ்வதி என்று பலவாறாக அழைக்கப்படுகின்றனர். இவளுக்கு வடிவம் தூயபடிக நிறமுடையது. புத்தகம், அட்சமாலை ஆகியவற்றை ஏந்தி, தாமரை மலரில் வீற்றிருக்கின்றாள். மூன்று கண்களை உடையவள். பிரம்மனின் மனைவிக்கும் சரஸ்வதி என்ற பெயர் இருப்பதால் இவளுக்கு ஞான சரஸ்வதி சிவஞான சரஸ்வதி என்ற பெயர்கள் வழங்குகின்றன. இவள்வீணை ஏந்துவதில்லை. இவள் தனது திருவாயால் எப்பொழுதும் ஆகமங்களைக் கூறிக் கொண்டேயிருக்கின்றாள். சிவஞான ஆகம வடிவான ஞான சரஸ்வதியைக் கங்கைகொண்ட சோழபரம், வேதாரண்யம் முதலிய திருத்தலங்களில் காணலாம்.

## கலியுகங்களில் - ஆகமங்கள்

உலகில் ஒவ்வொரு (சதுர்யுகத்தின் இறுதிப் பகுதியான) கலியுகத்தில் சிவபெருமானே யோகாசார்யராகத் தோன்றி சிவாகமங்களை உபதேசித்து அருள்புரிகின்றான். ஒவ்வொரு சமயத்திலும் நான்குபேர்கள் அவரிடத்தில் ஆகமங்களைப் பெற்று உலகில் பிரகாசிக்கச் செய்கிறார்கள். இதுவரை இருபத்தேழு சதுர்யுகங்கள் முடிந்து இருபத்தெட்டாவது சதுர்யுகம் நடைபெறுகிறது. இதில் இருபத்தெட்டு முறை சிவபெருமான் பலவேறு பெயர்கள் யோகாசாரியராக இருந்து உபதேசம் செய்துள்ளார். இவருக்கு 112 மாணவர்களாவர்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

# ஆகமங்களைப் போற்றிய நாயன்மார்

சிவாகமங்களைப் போற்றுவது, படிப்பது, பிரதி எடுத்துத் தானம் செய்வது அவற்றை அன்பர்களுடன் கூடி ஆராய்வது முதலியன சிவபுண்ணியச் செயல்கள் ஆகும்.

இறைவன் ஆதியில் சிவாகமங்களை அருளினான். அதனை விரிவுபடுத்தி அடிக்கடி அவனே உபதேசிக்கி றான். இதனை எண்ணில் ஆகமம் 'இயம்பினன் ஈசன்' என்று திருமூலர் குறிப்பிடுவார். இந்த ஆகமங்களை உரிய அடியவர்களிடமிருந்து உபதேசமாகப் பெற்று மகிழ்வதும் படிப்பதும் சிவபூசையாகும்.

ஆகமங்களைப் போற்றி வழிபாடு செய்த பல அடியவர்களைச் சமய வரலாற்றில் காணலாம். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனார் ஆவார். ஆகமங்களுக்காக உயிரைத் தந்த இவரு டைய வரலாறு சேக்கிழாரால் பாடப்பட்ட பெரிய புராணத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தில்லைவாழ் அந்தணர் சருக்கத்துள் மெய்ப் பொருள் நாயனார் வரலாறு 24பாடல்களில் கூறப் பட்டுள்ளது.

திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்ட சேதிநாட்டை அரசாண்ட மலையமான் வழி வந்த அரசர் மெய்ப்பொருள் நாயனார் இவருடைய இயற் பெயர் தெரியவில்லை. சிவனடியார்களின் மெய்த்தவ வேடத்தை மெய்ப்பொருளாகப் போற்றியதாலும், 'மெய்பொருளான' சிவாகமங்களின்படி ஒழுகியதாலும் இவர் 'மெய்ப் பொருள் நாயனார்' என்று அழைக்கப் பட்டார். அதுவே இவர்பெயராகி சரித்திரத்தில் நிலை பெற்றுள்ளது.

பக்கத்து நாட்டரசன் முத்தநாதன் இவரை வெல்லப் பலமுறை போர் தொடுத்தான். எவ்வளவு முயன்றும் அவனால் இவரை வெற்றி கொள்ள முடிய வில்லை. எனவே சூதினால் இவரை வெல்ல முடிவு செய்தான்.

அவன் தன் மெய்யெல்லாம் வெண்ணீறு பூசினான். சடைமுடியை எடுத்துக் கட்டினான். கையில் உடைவாளை மறைத்துக்கட்டிய ஓலைச் சுவடியை ஏந்தினான். பொய்மனத்துடன் மெய்த்தவ அடியவர் வேடம் பூண்டு அரண்மனையை அடைந்தான்.




அங்கு வாயிற் காவலனாக நின்ற 'தத்தன்' என் பான் முத்தநாதனைத் தடுத்து, அடியவரே, இது அரசன் துயிலும்வேளை என்றான். முத்தநாதனோ, தத்தனை தள்ளிவிட்டு அந்தப் புரத்திற்குள் நுழைந்து விட்டான். அங்கு பள்ளிக்கட்டிலில் தேவியுடன் நாயனார் பள்ளி கொண்டிருப்பதைக் கண்டான். அரவம் கேட்டு எழுந்த தேவி, நாயனாரை எழுப்ப அவர் தவ வேடத்துடன் நிற்கும் முத்தநாதனைக் கண்டு வணங்கினார்.

பிறகு, அடியவரே யான் செய்த புண்ணியத்தால் இங்கு வந்தீர். வந்த காரணம் என்னவென்று வினவினார். முத்தநாதன், அரசே நான் சிவனார் உரைத்ததும் எங்கும் இல்லாததுமான ஆகம நூல் ஒன்றை பெற்றேன். அதை உமக்கு உபதேசிக்கவே இப்போது இங்கு வந்துள்ளேன் என்றான்.

நாயனார், 'ஐயனே, இது யான் பெற்றபேறு ஆகும். இப்போதே அந்த நூலை எமக்கு வாசித்துக் காட்டுக என்று கூறினார்'. அவன், 'அவரிடம் நீங்களும் நானும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனித்திருக்க வேண்டும்' என்றான். அரசர், 'அரசியை நோக்க அவளும் வெளியே சென்றாள்'.

முத்தநாதனை பெரிய இருக்கை மீது அமர்த்தி தான் நிலத்தில் அமர்ந்து வணங்கினார். இது தான் சமய மென்று முத்தநாதன் தனது புத்தகத்தில் மறைத்து வைத் திருந்த வாளினை எடுத்து அவர்முதுகில் பாய்ச்சினான். அப்போதும் நாயனார் கோபமின்றி அவனை வணங்கி இது மெய்த்தவவேடம் தந்தது என்றார்.

வாயிலில் தன்னைத் தள்ளிவிட்டு உட்சென்றவ னால் ஏதோ தீங்கு விளையலாம் என்பதை உணர்ந்த தத்தன் அங்கு விரைந்து வந்தான். நிகழ்ந்ததைக் கண்டு முத்த நாதனை வெட்டத் தனது வாளை ஓங்கினான்.

அந்நிலையில் நாயனார் அவனைத் தடுத்தார், பெருகி வரும் ரத்தத்தையும் பொருட்படுத்தாது. 'தத்தா இவர் நமது சிவனடியார்' இவருக்கு எத்துன்பமும் நேடிரிடாமல் நாட்டின் எல்லை வரை அழைத்துச் சென்று விட்டுவிடுக என்றார்.

தத்தன், அவர் ஆணையை மேற்கொண்டு முத்த நாதனை நாட்டின் எல்லையில் விடுத்து மீண்டான், 'அவன் வருவதற்காகவே காத்திருந்து அவன் முத்த நாதனை பத்திரமாக எல்லையில் சேர்த்துவிட்டுவந்தச் செய்திச் சொல்லக் கேட்டு மகிழ்வெய்தினார்.

அனைவரையும் நோக்கி, 'திருநீற்றில் அன்பு வைத்து சைவம் காப்பீர்' என்று கூறிவிட்டு தில்லையம் பெருமானைச் சிந்தை செய்தார். அந்நிலையில் சிவ பெருமான் உமாதேவியுடன் காட்சியளித்தார். நாயன் மாரும் இறையடி சேர்ந்தார். சிவாகமத்தைக் கேட்கும் விருப்பால் உயிர்துறந்த இந்த நாயனார் வரலாறு மிகவும் உயர்ந்ததாகப் போற்றப்படுகின்றது.

## ஆகமங்களின் இன்றைய நிலை

சிவாகமங்களின் சொல்லப்பட்டுள்ள செய்திகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகச் சொல்லப்பட்டதுடன் விரிவானது. அவற்றை எல்லோராலும் எளிதில் கடைப்பிடிக்க முடியவில்லை. ஆதலின் அதுபடிப்படியாக மறைந்துவிட்டது. சரியா, கிரியா யோக ஞான பாதங்களைச் சிவசாரியார்கள் போற்றியதால் அதன் ஒருபகுதி பாதுகாக்கப்பட்டுள்ளது. மற்றைய பகுதிகள் பெரும்பாலும் மறைந்து விட்டன. இப்போது ஆகமங்கள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்த வரை நூலாக அச்சாக்கப்பட்டுள்ளன.

## திருமுறைகளில் ஆகமங்கள்

தமிழ்வேதமான திருமுறைகளில் அனேக இடங்களில் ஆகமங்கள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. திருமுறை ஆசிரியர்களில் முதன்மையானவரான திருஞானசம்பந்தப்பெருமான், சிவபெருமானை திருவொற்றியூர் பதிகத்தில் 'ஆகமச் செல்வனார்' என்றுகுறிக்கின்றார். திருநாவுக்கரசரும் வேதமோடு ஆகமங்களை இறைவன் அருளினான் என்று பாடுகின்றார்.

ஏழாம் திருமுறையை அருளிச்செய்த சுந்தரமூர்த்திசாமிகள் ஆகமங்களைப் பயின்று அரனைவழிபடும் சிவாசாரியார் மரபில் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர் உலகத்தவர் நல்வாழ்வு கருதி சிவபெருமான் ஆகம நூல்களை ஆதியில் மொழிந்தான் என்பதை திருக்கானப்பேர் - பதிகத்தில் 'அண்டர் தமக்காக ஆகமநூல் மொழியும் ஆதீ' என்றும் ஆகமநூல்களைக் கற்று அதன்படி ஒழுகுவார்க்கு அருள்புரிவதை ஆரூர்மண்தளிப் பதிகத்தில் 'ஆகம சீலர்க்கு அருளும் பெருமானே' என்றும் குறிக்கின்றார்.

எட்டாம் திருமுறையில் சிவபெருமான் ஆகம வடிவம் கொண்டு நிற்பது (ஆகமமும் ஆகிநின்றான்) மலைமகளான பார்வதிக்கு ஆகமங்களை விளக்கிக் கூறுவது முதலான செய்திகள் மாணிக்க வாசகசுவாமிகளால் குறிக்கப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருமுறையிலும் இச்செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பத்தாம் திருமுறையை அருளிய திருமூலர் தாம் அருளிய திருமந்திரத்தை ஆகமங்களின் சாரம் என்றே குறிக்கின்றார். இவர் ஒன்பது (நவ ஆகமங்கள்) ஆகமங்களின் சாரமாக நந்தியிடமிருந்து தாம் பெற்ற ஞானத்தையே திருமந்திர நூலாக்கி வைத்தாகக் கூறுவர். ஆகமச் சிறப்பு எனும்பகுதியில் ஆகமங்களின் சிறப்புக்கள் போற்றப்பட்டுள்ளன.

பன்னிரெண்டாம் திருமுறையில் அனேக இடங்களில் ஆகமத்தின் சிறப்புப் போற்றப்படுகின்றது. இதில் காஞ்சிபுரத்தில் அம்பிகை சிவாகமத்தின்படியே சிவபெருமானை மாவடியில் பூசித்தாள் என்று சேக்கிழார் குறித்துள்ளார். மேலும் சில நாயன்மார்கள், ஆலயங்களில் ஆகம விதிப்படி பூசை செய்ததுவும் குறிக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

தொல்புகழ் புராணனே போற்றி! போற்றி!!

# ஸ்ரீ புராணேசுவரர்

உலகிலுள்ள அனைத்து நாகரீகம் பெற்ற சமுதாயங்களும் தமது முன்னோர்கள் வரலாற்றையும், அவர்களின் தியாகம், பொறுமை ஆகியவற்றையும் அறிந்திருத்தல் அவசியம். சமுதாயத்தின் நுண்கலைகள், அறிவியல் நுட்பங்கள், வாழ்க்கை அனுபவங்கள், ஞானிகளின் ஞான அனுபவங்கள் முதலியன வழிவழியாகக் கூறப்பட்டு வருவதைக் காண்கிறோம். ஆதியில் வாய்மொழியாகவும், கதைப்பாடல்களாகவும் சொல்லப்பட்டு வந்த இவை பின் பெரியநூல்களாக உருப்பெற்றன. இவைகளே புராணங்கள் என்று அழைக்கப்பெறுகின்றன. இந்தச் சொல்லுக்குப் பழங்கதை என்பது பொருள்.

புராணங்கள் வளர்ந்தபோது அதற்கு இலக்கணங்கள் தோன்றின இவற்றைப் "புராணலட்சணம்" என அழைத்தனர்.

இமயம் முதல் குமரிவரையுள்ள பாரத தேசத்தின் பலவேறு பகுதிகளில் வழங்கி வந்த புராணங்களைத் தொகுத்து வியாசர் பதினெட்டு நூல்களாக வகுத்தார் இவையே பதினெண்புராணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இப்புராணங்களைத் தொடர்ந்து பதினெட்டு உப புராணங்கள் தோன்றின. இவற்றிலும் அனேக கருத்துக் கள் மிளிர்கின்றன.

பதினெண் புர்ாணங்களைத் தொடர்ந்தும் அவற்றை அடியொட்டியும் தலபுராணங்கள் எழுந்தன. இவை தலத்தின் தோற்றம், இறைவன் எழுந்தருளிய வரலாறு, அங்கு நடந்த விசேஷ அற்புதச் செயல்கள், வழிபாடு செய்த அடியார்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள் முதலியவற்றை விளக்கி அந்தத் தலத்தை மேம்படுத்துவதாக அமைகின்றன.

தலபுராணங்களைப் போலவே தீர்த்தங்களின் பெருமைகளை விளக்க எழுந்தவை தீர்த்தபுரானங்கள் என்று பெயர் பெற்றன. இவற்றில் தீர்த்தங்கள் உற்பத்தியான வரலாறும் மூழ்கிப் பேறுபெற்றவர் வரலாறுகள் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

தலபுராணங்கள், தீர்த்த புராணங்களைப் போலவே எழுந்தவை வனபுராணங்கள் ஆகும். இவை வனங்களையும் அதன் இயற்கை எழிலையும், அங்கு தவம் செய்யும் முனிர்களின் பெருமையையும் உபதேசங்களையும் விரிவாகக் கூறுவனவாகும். காலப்போக்கில் இவையும் தலபுராணங்களைப்போல ஆகிவிட்டன.

மேலேகுறித்த புராணங்களைப் போலவே விரதங்களின் பெருமைகளை விளக்கும் புராணங்களும் பல எழுந்தன. இவற்றில் விரதங்கள் உண்டான கதை விரதங்களின் பெருமை அவற்றை நோற்பதால் உண்டாகும் பயன்கள். அப்படிப்பயன் பெற்றவர்கள் வரலாறு முதலியன குறிக்கப்பட்டுள்ளன. கேதாரீசுவரபுராணம்; சிவராத்திரி புராணம் முதலியன இவ்வகையின ஆகும்.

இறைவனின் திருவிளையாடல்களை விளக்கப் பல புராணங்கள் எழுந்தன. திருவிளையாடற் புராணம், சிறுத்தொண்டர் புராணம், தியாகராஜ லீலை முதலியன இத்தகையவை ஆகும்.

ஆண்டவனின் அன்பர்களான அடியவர்களின் பெருமைகளை விளக்கவும் பல புராணங்கள் எழுந்தன. இவை திருஞானசம்பந்தர் புராணம், பட்டினத்தடிகள் புராணம் முதலியன குறிப்பிடத்தக்கதாகும்.

பல அடியவர்களின் பெருமைகளை ஒருசேர விளக்கும் பக்தபுராணங்கள் பலவும் தோன்றின இவற்றில் குறிப்பிடத்தக்கது சேக்கிழாரின் பெரியபுராணம், வீர சைவர்களின் வசவபுராணம் முதலியனவாகும்.

சிவமஞ்சரியின் இருபத்தெட்டாவது மலரான இந்நூலின் மூன்றாம் பகுதி புராணங்களின் பெருமைகளை விளக்குவதாக மலர்கின்றது.

சிவபெருமான் புராணங்களைத்தனது அங்கமாகக் கொண்டிருக்கின்றான். அதனால் அவன் 'தொல் புராணன்' என்று அழைக்கப்படுகின்றான்.

தொல்புராணனும் மாமலை மங்கையும் அடியவர்களுக்கு அருள்புரிந்து சகல செல்வயோக மிக்கபெரு வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிகின்றேன்.

– சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பதினெண்புராணங்கள்

ஆதியில் இமயம் முதல் குமரி வரை பரந்துள்ள இந்த நாவலந்தீவில் வழங்கிவந்த அனேக புராணங்களை முறைப்படுத்தி தொகுத்து பதினெட்டாக வகுத்தவர் வேத வியாசர் ஆவர். இதனையொட்டி இவர் புராணமுனி என்று அழைக்கப்படுகின்றார். அவர் தேவலோகத்தில் நூறுகோடி கிரந்தங்களைக் கொண்டிருந்த இந்தப் புராணங் களைச் சுருக்கி 4 லட்சம் சுலோக வடிவில் இதனை தொகுத்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. புராணங்களில் உயர்ந்தவை இந்த மகாபுராணங்களாகும். பின்வரும் பட்டியலில் புராணங்களின் பெயர்களையும், அவற்றில் அமைந்துள்ள கிரந்தங்களின் எண்ணிக்கையும் அதில் தலைமை கடவுளாக போற்றப்படும் தெய்வத்தையும், அதன் குணத்தையும் நடைமுறைப் பெயரையும் காணலாம்.

| எண் | பெயர் | கிரந்தங்கள் எண்ணிக்கை | தலைமைக் கடவுள் | குணம் | நடைமுறைப் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | பிராம்மம் | 10,000 | பிரம்மன் | ராஜசம் | பிரம்மபுராணம் |
| 2. | பாத்மம் | 55,000 | பிரம்மன் | சாத்வீகம் | பத்மபுராணம் |
| 3. | வைஷ்ணவம் | 23,000 | விஷ்ணு | சாத்வீகம் | விஷ்ணுபுராணம் |
| 4. | சைவம் | 24,000 | சிவன் | தாமசம் | சிவமகாபுராணம் |
| 5. | பாகவதம் | 23,000 | விஷ்ணு | சாத் | பாகவதம் |
| 6. | பௌஷ்யம் | 14,000 | சிவன் | ராஜசம் | பௌஷ்யபுராணம் |
| 7. | நாரதீயம் | 25,000 | விஷ்ணு | சாத்வீகம் | நாரதபுராணம் |
| 8. | மார்க்கண்டேயம் | 9,000 | சிவன் | ராஜசம் | மார்க்கண்டேயபுராணம் |
| 9. | ஆக்னேயம் | 15,4000 | அக்னி | தாமசம் | அக்னிபுராணம் |
| 10. | பிரம்மவைவர்த்தம் | 18,000 | சூரியன் | ராஜசம் | பிரம்மவைவர்த்தம் |
| 11. | லிங்கம் | 11,000 | சிவன் | தாமசம் | லிங்கபுராணம் |
| 12. | வாராகம் | 24,000 | சிவன் | சாத்வீகம் | வராகபுராணம் |
| 13. | ஸ்காந்தம் | 81,000 | சிவன் | தாமசம் | கந்தபுராணம் |
| 14. | வாமனம் | 10,000 | சிவன் | ராஜசம் | வாமனபுராணம் |
| 15. | கூர்மம் | 17,000 | சிவன் | தாமசம் | கூர்மபுராணம் |
| 16. | மாத்ஸயம் | 14,000 | சிவன் | தாமசம் | மச்சபுராணம் |
| 17. | காருடம் | 19,000 | விஷ்ணு | சாத்வீகம் | கருடபுராணம் |
| 18. | பிரும்மாணடம் | 12,000 | சிவன் | ராஜசம் | பிரம்மாண்டபுராணம் |

❁ புராணங்களில் உலகத்தின் தோற்றம் வளர்ச்சியும், ஒடுக்கம், சந்திர சூரிய வம்சம், அதன் அரசர்கள், ராஜரிஷி வம்சத்தில் உண்டானவர்கள், காலக்கணக்கான மன்வந்திரங்களும் அதன் செய்திகள் முதலியவை இடம்பெற்றுள்ளன. இதனை புராணலக்ஷணம் என்பர்.

❁ புராணங்கள், வேதங்கள் தோன்றிய காலத்திற்குப் பிறகே தொகுக்கப்பட்டன என்றாலும் அதில் வரும் நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கு முன்பே உண்டான வையாகும். வேதங்களில் அனேக புராணக்கதைகள் இடம் பெற்றுள்ளன என்பதே இக்கூற்று ஆதாரமாகும்.

❁ வேதங்களுக்குப் புராணங்களில் இருந்தே விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பதை வேத பாஷ்யங்களில் காண்கிறோம். எனவே புராணங்கள் உயர்ந்த விளக்க நூல்களாகத் திகழ்கின்றன.

❁ புராணங்களில் உலகஉற்பத்தி, மன்னர்கள் வரலாறு, ஆறுகள் மலைகள் உற்பத்தி, யோகம் விரதம் தவம், கீதைகள், போர்கள் போராட்டங்கள், பதிவிரதைகளின் கதைகள், வைத்தியம், குதிரை, யானைகள் பராமரிப்பு வாழ்க்கையில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை பழக்க வழக்கங்கள், தானங்கள், தருமங்கள், பிறந்ததிலிருந்து தொடங்கி திருமணம், மரணம், முதலியவற்றில் செய்ய வேண்டிய சடங்குகள் முதலானவைகளும் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

❁ பதினெட்டு புராணங்களில் பத்து சிவபுராணங்கள், நான்கு விஷ்ணுபுராணங்கள், இரண்டு பிரம்ம புராணங்கள், ஒன்று அக்னிபுராணம், ஒன்று சூரிய புராணம் ஆகும்.

❁ திருமாலின் அவதாரப்பெயர்களான மச்சம், கூர்மம், வராகம், வாமனம், நாரசிம்மம் முதலான பெயர்களில் அமைந்திருந்தாலும் சிவனின் புகழ்பேசும் சைவ புராணங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❁ ஒரே கதை பல புராணங்களில் பலவிதமாகக் கூட்டியும் குறைத்தும் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். ஒருகதை பலவேறு யுகங்களில் பலசமயங்களில் நடந்ததால் இப்படிப்பட்ட வேறுபாடுகள் காணப்படுகின்றன என்கின்றனர்.

❁ புராணங்களில் பல தெய்வங்களுக்கான ஆயிரம் பெயர்கள் (சகஸ்ர நாமங்கள்) இடம் பெற்றுள்ளன. சிவமகாபுராணத்திலும், மச்சபுராணத்திலும் உள்ள சிவசகஸ்ர நாமங்கள் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றன.

❁ வாழ்வியலை நிலைநிறுத்த வகைசெய்யும் நூல்களான கீதைகள் பலவற்றைப் புராணங்களில் காண்கிறோம் இவற்றில் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. இவற்றில் பிரம்ம கீதை, ஈசுவரகீதை, யமகீதை, தேவி, கீதை முதலியன குறிப்பிடத்தக்கவைகளாகும். இருபத்துக்கும் மேற்பட்ட கீதைநூல்கள் புராணங்களின் இடையிடையே உள்ளன.

❁ புராணங்களில் தேவிவழிபாடு தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது. மச்சபுராணத்தில் தேவியின் 108 சக்தி பீடங்களும், கௌரிபூஜை, ரசகல்யாண விரதம், கௌரிவிரதம், உமைவிரதம் முதலான விரத மகிமைகளும் விரிவாகப்பேசப்பட்டுள்ளன.

❁ சிவபெருமானின் 1008 சிவஸ்தானங்களும் சகஸ்ரநாமங்களும், பலவேறு லீலைகளும் சிவ மூர்த்தங்களும் உமாமகேசுவரவிருதம், கதலீவிருதம் முதலான அனேக சிவவிரதங்களும் கூறப்பட்டுள்ளன.

❁ சிவபுராணங்களில் விஷ்ணுவின் பெருமைகளும் விஷ்ணுபுராணங்களில் சிவனின் பெருமைகளும் பேசப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு தேவர்கள் உயர்த்திப்பேசப்படுகின்றனர். என்றாலும் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளை கூறவில்லை.

❁ தெய்வங்களையன்றி அந்நாளில் வாழ்ந்த கிருதவீரியன் கார்த்த வீரியார்ச்சுனன் முதலான மகா ராஜாக்களையும், கௌதமர், கண்ணுவர், முதலான அனேக ரிஷிகளின் பெருமை களையும் புராணங்கள் விவரிக்கின்றன.

❁ சிலபுராணங்களில் யானை, குதிரை, பாம்புகள், பறவைகள் முதலியவற்றைப் பற்றிய விரிவான செய்திகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

❁ மனிதனின் மரணத்திற்குப் பிறகு நிகழும் நிலைகளைக் கருடபுராணம் கூறுகின்றது.

❁ இந்த உலகத்திற்கு அப்பால் உள்ள உலகங்கள், பாவ புண்ணியங்கள் தெய்வங்களின் வீரச் செயல்கள் ரிஷிகள் முனிவர்களின் உபதேசங்கள் அசுரர்களின் மேன்மை, வீட்சி என்று ஆயிரமாயிரம் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

❁ மனிதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய தவம், நியமம் முதலியன அரசர்களின் கடமை மக்கள் வாழ வேண்டிய நெறிகள் மந்திரங்கள் அவற்றை உபயோகித்துப் பலன் பெறும் முறைகள் தந்திரங்கள் முதலியன விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

❁ புராணங்களில் காலத்தின் அளவு, பலவேறு காலதேவர்கள், காலவரையறைகளான மன்வந்திரம், யுகம், சதுர்யுகம் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

❁ பெண்களின் சிறப்புக்களை புராணங்கள் மிகவும் போற்றுகின்றன. மகாபதிவிரதைகளான சாவித்திரி, அனசுயா, நளாயினி, முதலிய பெண்களின் சிறப்புக்கள் அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்கள் முதலானவை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

❁ கணேசர், முருகன், சண்டீசுவரர் முதலியவர்களின், அவதாரங்களும் அவர்களுக்கு நடைபெற்ற திருமணம் முதலிய செய்திகளும் விரிவாக இடம் பெற்றுள்ளன.

❁ மனிதன் நாள்தோறும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், சிறப்பு நாட்களில் மேற்கொள்ள வேண்டிய ஜெபதபம் முதலியன சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

❁ நாரதம், பாத்மம், சைவம், ஸ்காந்தம், லிங்கம் முதலிவற்றில் சிவசஹஸ்ர நாமங்கள் உள்ளன. நாரதம் கருடம், பத்மம், மத்ஸய புராணங்களில் விஷ்ணு சஹஸ்ர நாமம் உள்ளன. தேவீபாகவதம், நாரத புராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலியவற்றில் அம்பிகைக்குரிய சகஸ்ர நாமங்கள் உள்ளன.

❁ பிரம்ம புராணத்தில் சூரியனுக்கும்; பிருமாண்ட புராணத்தில் கிருஷ்ணனுக்கும் ஸ்காந்தத்தில் சிவனுக்கும், மத்ஸ்ய புராணத்தில் கௌரிதேவிக்கும் ராமருக்கும் 108 நாமங்கள் உள்ளன.

❁ அகஸ்தியகீதை, ருத்ரகீதை, ப்த்ரு, யம, ஹம்ஸ கீதை பிரம்மகீதை ஸூதகீதை, தேவி கீதை, சிவகீதை பிக்ஷுகீதை, ச்ருதகீதை, ஈஸ்வரகீதை, வியாசகீதை முதலான அநேக கீதைகள் உள்ளன. சில புராணங்களில் ஒன்றுக்கும் மேலான பல கீதைகளும் உள்ளன.

## பதினெண்புராணேசுவரர்

சிவபெருமான் ஆகமங்களை மேனியாகக் கொண்டிருப்பதைப் போலவே புராணங்களையும் திருமேனியாகக் கொண்டுள்ளான். அதையொட்டி அவனுக்குப் புராணேசுவரர் என்பது பெயராயிற்று சீர்காழியில் வடகிழக்கு முனையில் 'பதினெண்புராணேசுவரர் ஆலயம்' என்ற சிவாலயம் இருப்பதைக் காணலாம். அதனுள் புராணேசுவரர் என்ற பெயரில் பெரிய சிவலிங்கத் திருமேனி உள்ளது.

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் புராணேசுவரர் என்ற பெயரில் சிவலிங்கமூர்த்தி அமர்ந்துள்ளார்.

## உப புராணங்கள்

மகாபுராணங்களைத் தொடர்ந்து எழுந்தவை உபபுராணங்களாகும். இவைகள் அளவால் சிறியன என்றாலும் ஆழமான கருத்துக்களையும் தத்துவங்களையும் விளக்க எழுந்தவையாகும். இவையும் பதினெட்டு என்ற எண்ணிக்கை அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. இப்போது பலவகையான தொகுப்புக்கள் கிடைக்கின்றன. அவற்றின் பெயர்களைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

## முதல் வகையில் உள்ளபடி உபபுராணப் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஸனத்குமாரம் | 4. சிவதருமம் | 7. நாரதம் | 10. ஔனஸ | 13. காளிகா | 16. ஸௌர |
| 2. நாரசிம்மம் | 5. நந்தி | 8. கபிலம் | 11. பிரம்மாண்டம் | 14. மாகேஸ்வரம் | 17. பாராசர்ய |
| 3. ஸ்காந்தம் | 6. துர்வாசம் | 9. மானவம் | 12. வாருணம் | 15. ஸாம்பவ | 18. மாரீசபுராணம் |

## இரண்டாம் வகையில் உள்ளபடி உபபுராணப் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பார்க்கவம் | 4. ஆதிகம் | 7. கர்க்கம் | 10. வாசிஷ்டம் | 13. ப்ருகத்நாரதீயம் | 16. சண்டி |
| 2. முற்கலம் | 5. மகாபாகவதம் | 8. கல்கி | 11. பசுபதி | 14. ப்ருகத்மாஸ்யம் | 17. லட்சுமி |
| 3. விநாயகம் | 6. தேவீபாகவதம் | 9. கிருஷ்ணாவதாரம் | 12. ப்ருகத்தருமம் | 15. சிவோத்ரதர்மம் | 18. பராநந்தம் |

இவற்றில் விநாயகர், சண்டி, காளி, துர்க்கை, மகாலட்சுமி, சரஸ்வதி முதலான தெய்வங்களின் தோற்றம் அருட்தன்மை, விரதங்கள், பூசை முறைகள் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

## புராணங்களின் பல்வேறு பெயர்கள்

புராணங்களுக்கு மகாத்மியம், மகத்துவம், மஞ்சரி, காண்டம், லீலை, வைபவம், பிரபாவம் முதலான பெயர்கள் வழங்குகின்றன.

## புராணநூற் பூசை

ஆகமச் சுவடிகளைச் சிவபெருமானாகவே எண்ணி வழிபடுவதைப் போலவே புரண நூல்களையும் பூச்சூட்டி புகையும் தீபமும் காட்டிச் சிவபெருமானகவே வழிபடுகின்றனர். சைவர்கள் பன்னிரு திருமுறைப் பேழையுள் பெரிய புராணத்தை வைத்து வழிபடுவது இங்கு எண்ணத்தக்கதாகும். புராணங்கள் அறிவு, ஞானம், நல்வழி ஆகியவற்றின் களஞ்சியமாதலின் தரையில் வைக்கக்கூடாது. சிக்குப்பலகை அல்லது பீடத்தின் மீதே வைக்க வேண்டும். புராணங்களைப் படிக்கத் தொடங்கும் முன்பாக அந்நூலுக்கு மலரிட்டு தூபதீபம் காட்டிய பின் கடவுளர், நூலாசிரியன் ஆகியோரைத் துதித்தபின் நூலைப் பிரித்துப் படிக்க வேண்டும். முடிக்கும்போதும் வணங்கி வாழ்த்துப்பாடியே முடிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## புராண பரம்பரை

வேத, ஆகமங்களை அருளியதைப் போலவே சிவபெருமான் புராணங்களையும் அருளிச் செய்தார். அவர் உமாதேவியோடு வீற்றிருந்து புராணங்களை நந்திதேவருக்குக் கூறினார். அவர் சனற்குமாரருக்குச் சொல்ல சனற்குமாரர் வியாசருக்குக் கூறினார். வியாசர் ரோமகர்ஷணருக்குக் கூற அவர் சுமதி, அக்கினிவர்ச்சஸ் முதலியோருக்கும் கூறினர்.

புராணங்களை வேதவியாசரிடமிருந்து நேரடியாகக் கேட்டு நைமிசாரண்ய முனிவர்களுக்கும் அவர்கள் வாயிலாக உலகினருக்கும் அறிவித்தவர் சூதமுனிவராவர். சூதமுனிவருடைய அனேக சீடர்கள் உலகில் புராணங்களை விளக்கிக்கூறி மக்களை நல்வழிப்படுத்தினர். சூதமுனிவர் பதினெட்டு மகாபுராணங்களில் மட்டுமின்றி தலபுராணங்கள், தீர்த்தபுராணங்கள் முதலிய பலபுராணங்களையும் அறிந்திருந்ததாக அப் புராணங்கள் கூறிக்கொள்கின்றன. தமிழகத்தில் அனேக புராணங்களும் சூதமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறுவதாகவே அமைந்துள்ளன.

சூதமுனிவரால் மட்டுமே அதிக அளவில் புராணங்கள் எடுத்து விளக்கப்பட்டது என்றாலும் அகத்தியர், மார்க்கண்டேயர், அக்னி முதலிய அனேகர் புராணங்களைக் கூறியதையும் காண்கிறோம்.

புராணங்களைக் கூறுவதுடன் அவைகளில் கூறியுள்ளபடி வாழ்க்கை நடத்துபவர்கள் பௌராணிகர்கள் எனப்பட்டனர். இவர்கள் புராணங்களையே பிரம்மம் என்றுகூறி வழிபடுவர்.

## புராணசார சங்கிரக நூல்கள்

புராணங்கள் அளவால் பெரியதாக இருப்பதாலும் அவற்றைப் படிக்க இலக்கிய இலக்கண பயிற்சி தேவையானதாலும் சாதாரண மக்களால் அவற்றைப் படித்து பிறருக்குக்கூற முடியவில்லை. எனவே, புராணங்களைச் சுருக்கமான முறையில் விவரிக்கும் நூல்கள் எழுந்தன. இவை புராண சார சங்கிரகம் புராணச் சுருக்கம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. இத்தகைய நூல்கள் பலவற்றில் வருணனைகளைக் குறைத்து புராணத்திலுள்ள முக்கியமான கதைப் பகுதிகள் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. சில நூல்களில் புராணம் கூறும் அறிவுரைகள் இறைவனைப் பற்றிய துதிகள், நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் முதலியன தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

❀ பதினெட்டு மகாபுராணங்களிலுள்ள முக்கியமான கருத்துக்களைச் சுருக்கி "பதினெட்டு புராணச் சுருக்கம்" எனும் 5 தொகுதிகள் பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ. வெ. சோமதேவசர்மா அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

❀ பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து புராணக் கருத்துக்களை உரைநடையில் (வசன) எழுதும் வழக்கம் உண்டாயிற்று. பெரும்பாலான புராணங்கள் இப்போது எளிமையான உரைநடையில் (பெயர்த்து) வெளியிடப்பட்டுள்ளன.

## புராண மண்டபங்கள்

வேத ஆகமங்களைப் போலவே புராணங்களும் ஆலயங்களில் போற்றப்பட்டன. புராணங்களை விளக்கிக் கூறும் இடம் புராண மண்டபம் எனப்பட்டது. இதில் பௌராணிகர் அமர்ந்து புராணங்களை விவரித்துக் கூறுவார். ஆகமங்களில் புராண மண்டபங்களை ஆலயத்தின் ஒரு அங்கமாக கூறப்பட்டுள்ளது. காஞ்சி குமரகோட்டத்தில் கந்தபுராணம் அரங்கேற்றப்பட்ட மண்டபமும், சென்னை ஜார்ஜ் டவுன் பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் விநாயகபுராணம் அரங்கேறிய மண்டபமும் நன்கு பராமரிக்கப்படுகின்றன.

## தில்லை சிற்றம்பலத்து புராண மண்டபம்

கோயில் என்று அழைக்கப்படும் தில்லை சிற்றம்பலத்தில் நடராச பெருமான் எழுந்தருளியுள்ள சிற்சபைக்கு முன்னுள்ள கனக சபை பதினெட்டுத் தூண்களைக் கொண்டதாக உள்ளது. பதினெட்டு புராணங்களே இங்கு தூண் வடிவில் உள்ளது என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

## புராணம் கேட்ட நாயகி

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலய வரலாற்றை இவ்வூர் அம்பிகை கனவில் வந்து பாடு என்று சொல்ல மகாவித்வான் நெல்லையப்பக் கவிராயர் அவர்கள் "திருநெல்வேலித் தலபுராணம்" என்னும் நூலாகப் பாடியுள்ளார். இவர் இதனை அரங்கேற்றம் செய்த போது நெல்லையப்பர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் காந்திமதிதேவி தினமும் வந்து கேட்டு மகிழ்ந்தாள் என்பதை அனேகர் குறித்துள்ளனர். டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்திலுள்ள இந்த நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தலபுராணங்கள்

இந்தியாவெங்கிலும் அனேக புனிதத்தலங்கள் உள்ளன. அவற்றின் பெருமைகளையும் அங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் பெருமைகளையும், சிறப்புக் களையும் விளக்க எழுந்தவை தலபுராணங்களாகும்.

குறிப்பாகத் தென்னாட்டில் உள்ள அனேக திருத் தலங்களுக்குச் சிறப்பான தலபுராணங்கள் உள்ளன. இவற்றில் அங்கு எழுந்தருளியுள்ள இறைவன்மீது அமைந்த துதிப் பாடல்கள், நாட்டுவர்ணனை நகரவர் ணனை, ஆலய வர்ணனை, தீர்த்தங்களின் பெருமை இறைவன் நிகழ்த்திய அருள் அற்புதங்கள், அடியவர் களின் பெருமை ஆகியவை விரிவாக இடம் பெற் றுள்ளன.

ஒரேதலத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட புராணங் கள் இருப்பதையும் காண்கிறோம் எடுத்துக்காட்டாக மதுரையின் பெருமைகளை விளக்க திருவாலவாயு டையார் புராணம், கடம்பவனபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய பலபுராணங்கள் இருப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறே திருவாரூரின் பெருமையை விளக்கத் திருவாரூர்ப்புராணம், கமலாலய புராணம் தியாகரா சலீலை முதலிய புராணங்கள் எழுந்துள்ளன.

காஞ்சிபுரத்திற்கு கச்சியப்பமுனிவர், மாதவ சிவ ஞான சுவாமிகள், கச்சிக்கச்சாலையார் ஆகிய மூவர் இயற்றிய மூன்று புராணங்கள் உள்ளன.

ஆதியில் திருத்தலங்கள் அமைந்திருந்த வனத் தினையொட்டி அவற்றிற்குப் பெயர்கள் அமைந்திருந் தன. பெரும்பாலான தலபுராணங்களுக்கு இந்தக் காடு களின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட் டாகச் சிதம்பர புராணத்திற்குத் தில்லைவனபுராணம் என்றும் மதுரைபுராணத்திற்கு கடம்பவனபுராணம் என்றும். வில்லியனூர்புராணம் வில்வவனபுராணம் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

சில திருத்தலங்களுக்கு அங்குள்ள தீர்த்தங்களின் பெயரால் தலபுராணங்கள் அமைந்திருக்கின்றன. எடுத் துக்காட்டாகத் திருவாரூருக்கு (அங்குள்ள கமலாய தீர்த்தத்தின் பெயரால்) கமலாலயபுராணம் என்றும் திருக்கழுக்குன்றத்திற்கு அங்குள்ளப் பட்சிதீர்த்தத்தின் மகிமையால் பட்சிதீர்த்தமகாத்மியம் என்றும் புராணங்கள் அமைந்துள்ளன.

வடமொழியில் அமைந்த ஆதிபுராணங்களில் உள்ளதுபோலவே பல தலபுராணங்களில் இறைவனைப் புகழும் போற்றிகள் இடம் பெற்றுள்ளன. சிலவற்றில் வேதாந்த சித்தாந்த கருத்துக்களையும் சமயக் கொள்கை களும் விரிவாக எழுதுப்பட்டுள்ளன.

தமிழில் முன்னூருக்கும் மேற்பட்ட தலபுராணங் கள் உள்ளன. சிலதலங்களுக்கு வடமொழியிலும் புரா ணங்கள் உள்ளன.

❁ தலபுராணங்களில் இயற்கை வருணனைகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

❁ புராணங்களில் கடவுள் வணக்கம் தொடங்கி அத்தலத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளைப் போற் றும் துதிகள் தொடர்ந்து அவையடக்கம், பாயிரம் முதலியன இடம்பெறுகின்றன. அதைத் தொடர்ந்து மூர்த்தி, தலம் தீர்தம், அர்ச்சித்துப் பேறு பெற்றோர், அத்தலத்தில் நடைபெறும் விழாக்களின் சிறப்புக்கள் பேசப்பட்டு வாழ்த்து மங்கலம் என்பதுடன் முடிகின்றன.

❁ பல தலபுராணங்களில் மகாபுராணங்களில் இடம்பெற்றுள்ள கதைகள் புதியபொலிவுடன் விளக்கப் பட்டு அதன் உள்ளுறை பொருளும் கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன.

❁ புராணங்களில் தலவிருட்சங்களின் பெருமை களும் அவற்றின்கீழ் வீற்றிருந்து தவம் புரிந்து பேறுபெற் றவர்களின் மேன்மைகளும் கூறப்பட்டுள்ளன. மேலும் நாட்டுவர்ணனை, நகரவர்ணனை, ஆலயவர்ணனை, வீதி கள் வர்ணனை முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

❁ தமிழில் அதிகமான தலபுராணங்களைப்பாடிய பெருமை திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களையேசாரும். இவர் இயற்றிய புராணங்கள் 22க்கும் மேலாகும். இவை சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்தவை. அம்பர் புராணம் முதலிய சில புராணங்களில் அஷ்ட நாகபந்தம், சக்கரமாற்று, மாலைமாற்று, முரசபந்தம், கோமூத்திரி முதலான சித்திரக் கவிகளையும் பாடியுள்ளார். இவர் லட்சம் கவிகளைப்பாடியதால் லட்சக்கவி யோகி என்ற ழைக்கப்படுகின்றார். மேலும் தமிழில் தலபுராணங் களைப் பாடியவர்களின் பூவை கல்யாணசுந்தரனார், சொக்கலிங்கம்செட்டியார், சைவ எல்லப்பநாவலர், சண்முகம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## தலபுராணங்களின் தனிச்சிறப்புகள்

அந்நிய இன, மொழி படையெடுப்புக்களாலும், உள்நாட்டுப்போர், பதவிச் சண்டைகளாலும் வாழ்க்கையைத் தொலைத்து பசியாலும் பட்டினியாலும் வருந்திவாழ வகையின்றி அடிமையிருளில் சிக்கி, தன்மானமும், ஊக்கமும் கெட்டுக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பிய பெருமை தலபுராணங்களுக்கே உரியதாகும், இதனைப்பாடிய புலவர்கள் தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல், வந்த தோல்விகளெல்லாம் வெற்றியின் படிக்கட்டுக்களே என்றும், தீயவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவார்கள் என்றும் திரும்பத் திரும்பச் சொல்லி மக்கள் மனத்தில் நம்பிக்கை ஒளியை ஊட்டினர்.

தமது கற்பனைத் திறத்தின்மூலம் வரண்டு, வானம் பார்த்துக் கிடக்கும் பூமிகளையும் இந்திரன் முதலான தேவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற அருள்நிலையங்கள் என்றும் ஆன்மசக்தி பீடங்கள் என்றும் ஓயாது கூறி அவற்றை உழைப்பால் உயர்த்த வழிகோலினர், இங்கிருந்த தலங்களைப் பூலோக கயிலாயங்களாகவும் வைகுண்டங்களாகவும் சிறப்பித்து மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து போய் அவை பாழ்பட்டுவிடாமல் காத்ததுடன் மக்களைத் தன்னம்பிக்கையிலிருந்து தளர்ந்து போகாதபடி காத்த பெருமை தலபுராணங்களேயே சாரும்.

தலபுராணங்கள் தலத்தின் பெருமைகளைப் பேச எழுந்தவைகளே யென்றாலும், ஊரின் அழகு இயற்கை வளம், நடைமுறை வாழ்வு, நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டுமுறைகள் ஆகியவற்றையும் நடுநடுவே விரிவாகக் கூறுகின்றன.

தமிழ்ப் புராணங்களில் கதைகளுக்கிடையே, கதாபாத்திரங்கள் வழியாக வேதாந்த, சித்தாந்த கருத்துக்கள் அனுபவ ஞானநிலைகள் முதலியனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. நன்றி : செய்தி மூலம் கலைக்களஞ்சியம்

## தீர்த்த புராணங்கள்

உலக வாழ்விற்கு இன்றியமையாதது தண்ணீராகும். தண்ணீர் தெய்வமாகவே போற்றப்பட்டது. சிவபெருமான் தீர்த்தங்களாக இருப்பதை மணிவாசகர், "தீர்த்தன் நல் தில்லை சிற்றம்பலவன்" என்றும்; திருநாவுக்கரசர், "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்றும் பாடிப் பரவுகின்றனர். தீர்த்தங்களைத் தாய்த்தெய்வங்களாகப் போற்றி வணங்குகிறோம்.

பல தலங்கள் தீர்த்தங்களினாலேயே சிறப்புப் பெறுகின்றன. இதனால் அத்தீர்த்தங்கள் பெயராலேயே அவை அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக திருவாரூர் அங்குள்ள கமலாய தீர்த்தத்தால் கமலாலயம் என்றும்; திருக்கழுக்குன்றம் பட்சிதீர்த்தமகிமையால் பட்சி தீர்த்தம் என்றும் அழைக்கப்பட்டு இவற்றை ஒட்டியே அவைகளுக்குப் புராணப்பெயர்களும் அமைந்திருக்கின்றன.

இவைதவிர காவேரி, தாம்ரபரணி சுவர்ணமுகி (பொன்முகலி ஆறு) முதலிய ஆறுகளின் பெருமைகளை விளக்கும் வகையில் புராணங்கள் எழுந்தன. இவை காவேரி மகாத்மியம், தாமிரபரணி மகாத்மியம், சுவர்ணமுகி மகாத்மியம், தென்பெண்ணை நதிப்புராணம் எனப்பலவாறு பெயர் பெறுகின்றன. இவற்றில், ஆறுகளின் உற்பத்தி, பூமியில் தவழக்காரணம், கரையிலுள்ள திருத்தலங்கள் மூழ்கிப் பேறுபெற்றவர்கள். மூழ்குவதற்குரிய நாள் நட்சத்திரம், வாரம், திதி முதலிய புண்ணிய மூழ்குவதற்கான கட்டங்கள் (எனப்படும் தீர்த்தத் துறைகள்) ஆற்றவேண்டிய பூசைகள், தியானங்கள் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

❁ துலாமாதமான ஐப்பசி மாதத்தில் காவேரியில் அதிகாலையில் நீராடுவது மிகுந்த புண்ணியத்தைத் தரும். இதை விளக்கும் வகையில் எழுந்த புராணம் "துலா காவேரி மகாத்மியம்" ஆகும்.

## திருவிழா புராணங்கள்

திருவிழாவில் நடிப்பதற்கும் ஐதீக விழாக்களை நடத்துவதற்கும் துணையாகப் பல புராணங்கள் எழுந்தன. இவற்றில் சிவனுக்கும், அம்பிகைக்கும் ஊடல் ஏற்பட சுந்தரர் அதனைத் தீர்த்து வைத்து இருவரையும் இணைத்து வைக்கும் விழாவான ஊடல் விழா, சிறப்புடையதாகும். இவ்விழாவில் படிப்பதற்காக திருவூடல் புராணம் என்ற நூல் பாடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். மேலும், முருகன் வள்ளியை மணந்தது கண்டு தெய்வயானை கோபித்து வள்ளியோடு செய்யும் தர்க்கமான ஏசல் என்ற விழாவும் சிலதலங்களில் நடைபெறுகிறது. இதில் ஏசல் பாட்டு என்ற பாடல் பாடப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## அருள் விளையாட்டுப் புராணங்கள்

ஒரு தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் அடியவர்கள் பொருட்டுச் செய்த திருவிளையாடல்களையும், அன்பர்களுக்கு அருள்புரிந்த நிகழ்ச்சிகளையும் விளக்கவும் பல புராணங்கள் எழுந்தன. மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் அடியவர் பொருட்டு எண்ணற்ற திருவிளையாடல்களைச்செய்தார். அவற்றுள் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் தனிச்சிறப்பைப் பெற்றன. அவற்றினை விளக்க எழுந்தவை திருவிளையாடற்புராணம் என்று பெயர் பெறுகின்றன. பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரும், பரஞ்சோதி முனிவர் என்பவரும் தனித் தனியே திருவிளையாடற் புராணங்களை இயற்றியுள்ளனர். இவை முறையே திருவிளையாடற்புராணம், திருஆலவாயுடையார்புராணம் என்று அழைக்கப்படுகின்றன.

திருவாரூர் தியாகராசப் பெருமான் அடியவர்கள் இன்பம் பெறுதற்காக 364 திருவிளையாடல்களைச் செய்தார். இவை "தியாகராஜலீலை" என்னும் நூலாக வெளிவந்துள்ளது. இவை "தேவலீலை, இராஜலீலை" என்று இரண்டு பகுதிகளாக உள்ளன. வடமொழியில் உள்ள இந்த நூலை திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தமிழில் மொழி பெயர்த்து (ஐம்பது லீலைகளே பாடப்பட்டு நூலாக வெளிவந்தன).

## விரதபுராணங்கள்

மனிதன் உடல் நலம் பேணவும், மனநலம் காக்கவும் அனேக விரதங்களைக் கடைப்பிடிக்கும்படி புராணங்கள் கூறுகின்றன. அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் அவை உண்டானதற்கான காரணம், அவற்றைக் கடைப்பிடிப்பதால் உண்டாகும் பயன், கடைப்பிடித்துப் பேறுபெற்றவர்களின் கதைகள் முதலியனவிரத புராணங்களில் இடம் பெற்றுள்ளன விரதங்களைப் பற்றிமட்டுமே விளக்க எழுந்த புராணங்கள் பலவாகும். இவற்றுள் குறிப்பிடத்தக்கது கேதாரீசுவர விரதபுராணம், சிவராத்திரி புராணம், பிரதோஷ விரத மகாத்மியம் விரதமஞ்சரி முதலியனவாகும். இலங்கையில் சிவராத்திரி புராணமும், கேதாரீ சுவர புராணமும் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றன.

## பக்த புராணங்கள்

சிவபெருமானின் திருவடிகளையே சிந்தித்து ஒப்பற்ற உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த சிவனடியார்களின் வரலாற்றையும், அவர்களின் வாழ்வில் நடந்த அற்புதங்களையும், அருள் அனுபவங்களையும் விளக்க எழுந்தவை பக்தபுராணங்கள் ஆகும்.

இவை இரண்டு வகைப்படுகின்றன. முதலாவது வகை பல அடியவர்களின் வாழ்க்கைகளை ஒன்றாகக் கூறும் மகா பக்த புராணங்கள் ஆகும். இவ்வகையில் முதன்மை பெற்றது அறுபத்து மூன்று அடியவர்களின் பெருமைகளை விளக்கும் திருத்தொண்டர் புராணம் ஆகும். சேக்கிழார் அருளிச் செய்த இந்தப்புராணம் அடியவர்களின் பெருமையைப் பேசுவதாலும், அளவால் பெரியதாக இருப்பதாலும் பெரியபுராணம் என்று அழைக்கப்படுகின்றது.

வீரசைவ அடியவர்களின் பெருமைகளை விளக்கும் நூல் வீரசிங்காதன புராணமாகும். இது வசவ புராணம் என்று அழைக்கப்படுகிறது. இதில் அடியவர்களின் பெருமைகள் பேசப்பட்டுள்ளன.

பின்னாளில் புலவர் புராணம், சேய்த்தொண்டர் புராணம் முதலான பக்த புராணங்கள் அனேகம் தோன்றியுள்ளன.

இரண்டாவது வகையான பக்த புராணங்கள் தனிப்பட்ட அடியவர்களின் வரலாற்றை விளக்க எழுந்தவைகளாகும். திருஞானசம்பந்தர் புராணம், திருநாவுக்கரசர் புராணம், அருணகிரிநாதர் புராணம், சிறுத்தொண்டர் புராணம் முதலிய புராணங்கள் இவ்வகையினவாகும். பக்த மார்க்கண்டேயன் கதை, ஹரதத்தர் சரித்திரம் நந்தனார் சரிதை, திருநீலகண்டர் சரித்திரம் முதலியனவும் பக்த புராணங்களாகும்.

திருவிழாநாட்களில் பக்தர்களின் புராணங்கள் படிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருஒற்றியூரிலுள்ள ஒரு கல்வெட்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் புராணம் படிக்கப்பட்டதையும் அதை சோழ மன்னர், சோழ மன்னர்களின் குருமார்கள் பிரதானிகள் முதலியோர் உடனிருந்து கேட்டதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# புராணங்களும் கோயில் சிற்ப ஓவியங்களும்

ஆலயக் கருவறைகளில் முதன்மை நிலையில் போற்றப்படும் தெய்வ உருவங்கள் தெய்வக் கலை நூல்களான ஆகமங்கள் பத்ததிகள் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள தியான சுலோகங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டவையாகும். இவை ஞானிகளும், சித்தர்களும் தியானநிலையில் வீற்றிருந்து உள்ஒளியில் நிலைபெற்றிருந்த வேளையில் அவரவர் பக்குவத்திற்கேற்ப இறைவன் காட்சியளித்த நிலைகளாகும். இவை பல வகையாக அமைகின்றன. சிவபெருமான் யோக நிலை அன்பர்களுக்குச் சந்திரசேகரராகவும், புருவ மத்தியில் நடராசராகவும், இருதயமத்தியில் தியானேசுவரராகவும் இன்னும் அனேக நிலைகளில் காட்சியளித்துள்ளார். இவற்றினை அடியொற்றியே ஆலயங்களில் இறையுருவங்களை அமைத்து வழிபடுகின்றோம்.

இவைதவிர இறைவன் அன்பர்களுக்கு அருளிய திருவிளையாடல்களை நினைவுகூறும் வகையில் பல சிற்பங்களை பிராகாரம், விமானம் கோபுரம் முதலியவற்றில் அமைக்கின்றோம். இந்த சிலைகளுக்குப் புராணக் கதைகளே அடிப்படையாகும். புராணங்களில் கூறியுள்ள கதைகளுக்கேற்ப இந்த சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. புராணங்களை நன்கு பயின்ற கலைஞர்கள் தங்கள் கற்பனைத் திறனையும், கைவண்ணத்தையும் கலந்து இவற்றை அமைக்கின்றனர். இதனால் இவற்றைக் காணும்போது நாமும் அந்த புராணகாலத்திற்கே சென்று அனுபவிப்பதை உணர்கின்றோம்.

மதுரையில் சோமசுந்தரப் பெருமான் அடியவர்கள் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் திருவிளையாடற்புராணமாக இயற்றப்பட்டது. இதில் கூறப்பட்டுள்ள புராணக்காட்சிகளைச் தொடர் சிற்பங்களாக மதுரை சோமசுந்தரர் மகாமண்டபம், உள்மண்டபம் ஆகியவற்றின் புறச்சுவர்களில் சுதையால் அமைத்து வண்ணம் தீட்டியுள்ளனர். இது புராணத்தைக் கற்றவர்கள் பார்க்கும் போது மனதிற்கு மகிழ்ச்சியையும் இதத்தையும் தருகின்றது.

பெரிய புராணத்திலுள்ள அடியவர்களின் வரலாற்றை விளக்கும் கதைச் சிற்பத் தொகுதிகளை தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் கருவறை புறச்சுவரில் வடிக்கப்பட்டுள்ளன. இந்த சிற்பங்களின் மீது பெரிய புராணத்தின் முக்கியமான சொற்றொடர்களும் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பந்தணைநல்லூர் ஆலயத்தில் அவ்வூர்த் தலபுராணத்தை அடியொற்றி அம்பிகை பசுவாகப் பூசித்தல், இறைவன் காட்சியளித்தல் முதலியன தொடர் சிற்பங்களாக மண்டபத்தின் அடிப்பட்டைப் பகுதியில் அமைந்திருக்கின்றன.

தலபுராணங்களில் சொல்லப்பட்டது தவிர மகா புராணங்களில் சொல்லப்பட்டுள்ள, பகீரதன்தவம், நந்தி கல்யாணம், பார்வதிகல்யாணம், இராவணன் கர்வபங்கம், மன்மத தகனம், முதலான அனேக காட்சிகள் சுதைத் சிற்பங்களாக அனேக தலங்களில் விமானம், மண்டபம் கோபுரம் முதலியவற்றில் அமைக்கப்பட்டிருக்கின்றன.



திருமயிலை கபாலீச்சுரம்-ராஜகோபுரம்

தலபுராணங்களை விளக்கும் வகையில் தொடர் ஓவியங்கள் பிராகாரங்களிலும், ஆலயவிதானங்களிலும் வரையப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக திருக்கடையூர் ஆலயத்தின் பிராகாரத்தில் தலபுராணக் காட்சிகள் தொடர் ஓவியங்களாக வரையப்பட்டிருக்கின்ற. சிதம்பரம் நடராசர் ஆலயத்திலுள்ள சிவகாமி அம்மன் சன்னதியில் தில்லைவனபுராண ஓவியங்களும், திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலய வசந்த மண்டபத்தில் திருவாரூர் புராணஓவியங்களும் மதுரை தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள நடைமாளிகையில் திரு விளையாடற்புராண ஓவியங்களும் மதுரை தலவரலாற்று ஓவியங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

சென்னை காபாலீசுவரர் ஆலய ராஜகோபுரம் புராண சிற்பக்களஞ்சியமாகத் திகழ்கிறது. இதில் மகா புராணங்களில் கூறப்பட்டுள்ள பகீரதன்தவம், காளி கர்வபங்கம், அட்டவீரட்டங்கள், முதலியனவும், பெரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணத்தில் உள்ள திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள் கண்ணப்பர் முதலியோரின் வாழ்க்கைச் சித்திரங்களும், திருவிளையாடற்புராணக் காட்சிகளாக பிட்டுக்கு மண்சுமத்தல் முதலியபலவும், சிவபராக்ரமத்திலுள்ள மச்சாரி, கூர்மாரி, நரசிம்மாரி முதலியனவும் வண்ணச் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. ஏறத்தாழ 150 கதை புராணக் காட்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய அரிய காட்சி வேறெங்கும் இல்லை.

## புராணக் கோயில்கள்

ஒரு தலத்தில் நடந்த அற்புதங்களை விளக்கும் கதைகளின் கோர்வையே புராணங்களாக இலக்கிய வடிவம் பெற்றுள்ளன. அதை மக்கள் கேட்டும், சொல்லியும் மகிழ்ந்தனர். இன்னும் ஒருபடி மேலே சென்று புராணங்களை நினைவூட்டும் தனிச் சிற்றாலயங்களை அமைத்தனர். இதைக் காணும் அன்பர்கள் எளிதில் தலபுராணக் கதைகளை நினைவுகூர்ந்து மகிழ்ந்தனர். இவை தல ஐதீகக் கோயில்கள் என்றும் அழைக்கப்பட்டன.

இராமேசுவரத்தில் இராமர் சீதையுடன் சிவபூசை செய்ததை நினைவூட்டும் வகையில் மூன்றாம் பிரகாரத்தில் ஒரு சந்நிதி அமைந்துள்ளது. இதில் சுதைச் சிற்பங்களாக இராமர், சீதை, சிவலிங்கம், இலக்குவன், அனுமார், ஜாம்பவான், சுக்ரீவன், விபீஷணன், வானரசேனைகள் ஆகியோர் அமைக்கப்பட்டுள்ளனர். வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்கும் இச்சிற்பங்களுக்குப் பின்னணியாகக் கடல் வரையப்பட்டுள்ளது.

ஆதியில் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்ட நிலைமாறி இவற்றைக் கருங்கற்களால் சிலைகளாக அமைக்கும் வழக்கமும் வந்தது. எடுத்துக்காட்டாக, திருஒத்தூர் வேதபுரீசுவரர் ஆலயத்தில் திருஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனையாக்கி அவை காய்த்துப் பழுக்க வைத்த அற்புதத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ள சிற்பங்கள் கருங்கற்களால் ஆக்கப்பட்டுள்ளன. இதில் பெரிய பனைமரம், அதன்கீழ் சிவலிங்கம், ஞானசம்பந்தர் திருவுருவம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

மதுரையில் ஒரு வணிகப் பெண், தன் சுற்றத்தினரின் ஐயத்தைப் போக்க (திருப்புறம்பியத்தில் தனக்குத் திருஞானசம்பந்தர் திருமணம் செய்து வைத்தபோது சாட்சியாக இருந்த) வன்னிமரம், சிவலிங்கம் கிணறு ஆகியவற்றைக் காட்டுமாறு கேட்டபோது சிவபெருமான் அவற்றைக் காட்டினார். அதை நினைவூட்டும் வகையில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் பிரகாரத்தில் வன்னிமரம் லிங்கம் கிணறு ஆகியவற்றை கல்லால் அமைத்து வைக்கப் பட்டிருக்கின்றன.

மேலே குறித்தவை பிராகாரங்களில் மண்டபங்களில் அமைந்ததாகும். இவ்வாறில்லாமல் தனி விமானத்துடன் கூடிய ஐதீக சிற்றாலயங்களிலும் காண்கிறோம். சென்னை மயிலாப்பூரில் திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய நிகழ்ச்சியை நினைவூட்டும் சிற்றாலயம் உள்ளது. இதனுள் குடத்திலிருந்து வெளிவரும் அங்கம் பூம்பாவையையும், அருகில் தேவாரம் பாடும் ஞானசம்பந்தரையும் காண்கிறோம். இச்சந்நிதிக்கு மேலுள்ள விமானத்தில் திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கும் அற்புதக் காட்சிகளும், ஆண்பனையைப் பெண்பனையாக்குவதும் சுதைச் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. மேலும், இவ்வாலயத் தலமரமான புன்னை மரத்தின் கீழ் தலஐதீகக் கோயில் உள்ளது. இதில் மயிலுருவத்துடன் கூடிய அன்னை பூசிக்கும் காட்சி கருங்கல் திருமேனியாக உள்ளது. இக்கோயில் கருவறை முக மண்டபத்துடன் கூடியதாக உள்ளது.

இப்படிப் புராணங்களை விளக்க எழுந்த ஐதீகக் கோயில்கள் அனேக தலங்களில் காண்கிறோம்.

புராணங்களின் வளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. கணந்தோறும் காலம் கழிந்து கொண்டேயிருக்கின்றது. கடந்த காலம் மனிதனின் நிழல் வாழ்க்கையாகி விடுகிறது. அந்த நிழலிலிருந்து மனிதன் பல அனுபவங்களைத் தொடர்ந்து கற்றுக் கொண்டேயிருக்கின்றான். அந்த அனுபவக் கூட்டம் பழங்கதையின் சாரமாகும். எனவே பழங்கதையான புராணம் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது.

**ஸ்ரீ வேத, ஆகம புராணேசுவரர் அருளினால் அன்பர்கள்**
**சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று இனிது வாழ்க! வாழி நலம் சூழ!!**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

மாலொருபாகம் மகிழ்ந்த மணாளா போற்றி! போற்றி!!

# திருமாலீசர்

சிவனருளால் உலகினை வழிநடத்தத் தோற்றுவிக்கப்பட்ட ஆதிமூர்த்திகள், பிரம்மா, திருமால், உருத்திரர், மகேசர், சதாசிவர் என்னும் ஐவராவர். இவர்களில் உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் கடவுளாகத் திருமால் திகழ்கின்றார்.

உலகப் படைப்பின் தொடக்கத்தில் இவருக்கு ஆதிசிவனால் காத்தல் தொழிலும், பஞ்சாயுதங்களும் இரமா முதலிய தேவியர்களும் பரமபதமும், திருப்பாற்கடலும் அளிக்கப்பட்டன.

இவர் உலகினைக் காக்கவும், தீயசக்திகளான அசுரர்களை அழிக்கவும், அன்பர்களுக்கு அருளவும் அனேக அவதாரங்கள் எடுத்தார். அந்த அந்த அவதாரங்களில் சிவபெருமானை ஆராதனை செய்து அருள் பெற்றார்.

ஆதி மும்மூர்த்திகளில் ஒருவரான திருமால் அதியுன்னத வீரமூர்த்தியாவார். உலகில் தீய சக்திகளான அசுரர்களை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுகின்றார். அதே சமயம் சிவபெருமானை ஆராதனை செய்து மகா தபசியாகத் திகழ்கின்றார். திருமாலின் அவதாரமான கண்ணன் தனது சிவயோக பாவனையால் சிவபெருமானாகவே இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது.

சிவவழிபாட்டில் திருமாலையும் சேர்த்தே வழிபடுகின்றோம். திருமாலை உமாதேவியின் புருஷ ரூபமென்றே சைவர்கள் குறிக்கின்றார்கள். சைவர்கள் போற்றும் ஏழு குருமார்களில் ஒருவராகத் திருமால் திகழ்கின்றார்.

திருமால், தேவவடிவத்துடனும், அவதாரக் கோலங்களிலும் சிவவழிபாடு செய்ததை அனேக புராணங்களும் இதிகாசங்களும் சிறப்புடன் கூறுகின்றன.

சிவமஞ்சரியின் இருபத்தாறாவது மலரில் பிரம்மன் சிவபிரானைப் பூசித்துப் பேறுபெற்றதை அறிந்து மகிழ்ந்த நாம், இந்த இருபத்தொன்பதாவது மலரில் திருமால் சிவபூசை செய்து பேறுபெற்ற செய்திகளை அறிந்து மகிழலாம். இதில் திருமாலின் தசாவதார நோக்கம், அந்த அவதாரங்களில் அவர் சிவனை ஆராதித்தது, நடைமுறையில் சிவவழிபாட்டில் திருமால் பெற்றுள்ள நிலை முதலியன சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

மாலொரு பாகம் மகிழ்ந்த மணாளனாகிய சிவபெருமானும், அங்கயற்கண்ணம்மையும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க, பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப்பணிகின்றோம். – ***சிவசுந்தரி***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமுறைகளில் திருமால்

தமிழ் வேதமாகிய திருமுறைகளில் திருமால் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றார். அவர் பார்வதி தேவியின் வடிவமாகச் சிவபெருமானின் இடப் பாகத்தில் இருப்பது, ஒரு பாகத்தினைப்பெற்று அரியர்த்தராக இருப்பது, கரத்தில் அம்பாகத் திகழ்வது இடப வாகனம் கொண்டு அவரைத் தாங்குவது முதலிய பலவேறு நிலைகளில் போற்றப்படுகின்றார். இவை திருமுறைகளில் திரும்பத் திரும்பக் கூறப் பட்டுள்ளதைக் காண்கிறோம். இவற்றுள் சிலவற்றைத் திருமுறைத் தொடர்களால் அறிந்து மகிழலாம்.

சிவபெருமானின் அருட்சக்தியாக இருப்பவள் உமாதேவியாவாள். அவளே பவானியாகவும், விஷ்ணுவாகவும், காளியாகவும், துர்க்கையாகவும் விளங்கு கிறாள் என்று புராணங்கள் குறிக்கின்றன. இதையொட்டித் திருமால் தேவியாக இருப்பதைத் தேவாரத்துள்

"அரியலால் தேவியில்லை"

(அரியான திருமாலைத் தவிர தேவியில்லை)

என்றும், அந்தத் தேவியைத் தனது ஒருபாகத்தில் கொண்டு சிவபெருமான் அர்த்தநாரியாக விளங்கு வதைக்

"காவியங் கண்களாகி கடல் வண்ணன் ஆகிநின்ற
தேவியைப் பாகம் வைத்தார்"

(காவியைப் போல் சிவந்தகண்களையும் கடல்போல் நீலநிறத்தையும் கொண்டு திருமாலாகி நின்ற தேவியைத் தனது பாகத்தில் கொண்டவர்)

என்றும், சிவபெருமான் திருமாலான மோகினியின் காதலனாக இருப்பதை,

"கடல்தனில் உறைவார் காதலன்"

என்றும், திருமாலுக்குச் சிவன் குருவாய் விளங்குவதை

"மாலுக்கும் குருவாய் நின்றார்"

என்றும், திரிபுரமெரித்தபோது திருமால், சிவனின் கரத்தில் அம்பாகி நின்றதை

"ஈண்டு துயில் அமர் அம்பினனே"

என்றும் பலவாறு குறிக்கப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர், சிவபெருமான் திரிபுரமெரித்த வேளையில் தேரின் அச்சு முறிய, திருமால் இடப வடிவம் கொண்டு தாங்கியதைத் திருவாசகத்தில்,

"இடபமதாய் தாங்கினான் திருமால்காண் சாழலோ"

என்று குறிக்கின்றார்.

திருமால் சிவபூசை செய்வதில் விருப்பமுடைய வராக இருக்கின்றார். அவர் நீற்றினை நிறையப்பூசிப் பாசுபத விரதம் மேற்கொண்டு வேதங்களாலும், திவ்ய வார்த்தைகளாலும் சிவபெருமானை மலர்கொண்டு அன்புடன் அர்ச்சிக்கின்றார். இப்படி மலர்கொண்டு அர்ச்சிப்பதனை, திருமுறை ஆசிரியர்கள்

"மலர்கொண்டு வழிபடும்... கருமால்... என்றும்,
அலர்கொண்டு அர்ச்சித்த மணிவண்ணனன்"

என்றும், அருமறைகளால் போற்றி வழிப்பட்டதை

"அருமறையால் நான்முகனும் மாலும்போற்றும் சீரான்"

என்றும், துதிசெய்து வழிபடுவதை

"அரிபிரமர் துதி செய்ய நின்றளித்தார் போலும்"

என்றும், சுருதங்கள் பாடித் துதிப்பதை

"மாலயனும் கூடித் தங்கள் சுருதங்களால் துதித்து"

என்றும் குறிக்கின்றனர்.

திருமால் வலிய சக்ராயுதத்தைப் பெற வேண்டியும், மைந்தர்களைப் பெறவேண்டியும் சிவனை ஆராதனை செய்தது புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை விளக்கும் வகையில் அனேக திருமுறை வாசகங்கள் உள்ளன. சக்ராயுதம் பெறவேண்டித் திருமால் பூசை செய்ததை,

"தன்தவம் பெரிய சலந்தரன் உடல் தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பமொடு மால்வழிபாடு செய்ய"

என்றும், அப்படி வழிபாடு செய்யும்போது ஆயிரம் மலர்கள் கொண்டு வழிபட்டு வந்ததுடன் ஒரு நாள் ஒரு மலர்க்குறைய தன் கண்ணை இடந்து திருவடியில் இட்டு வழிபட்டதை,

"திருமகள்கோன் மாலாயிரம் கொண்டு மலர்க்கண் இட"

என்றும் குறித்துள்ளதைக் காண்கிறோம்.

அவர் அவதாரம் செய்த காலங்களிலும் அனேக இடங்களில் சிவபூசைச் செய்துள்ளார். இராமனாக அவதாரம் செய்தபோது வழிபட்டதைத் திருவிராமேசுவரப் பதிகத்தாலும், பரசுராம அவதாரத்தில் வழிபட்டதைத் திருநின்றியூர் பதிகத்தாலும் அறிகின்றோம். (இவற்றை இந்நூலின் பிற பகுதிகளில் காண்க).

சிவபெருமானே திருமாலாகி நின்று காத்தல் தொழிலை நடத்துகின்றார் என்றும் சில தேவாரப் பாடல்கள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமால்

ஆதியில் உலகைப் படைத்தச் சிவ-பார்வதியர் தாம் படைத்த உலகையும் உயிர்களையும் காத்து அருள்புரிவதற்காக ஒரு தேவனைப் படைத்தனர். அவரே திருமால் எனப்பட்டார். அவர் மாயையின் வடிவாக விளங்கியதால் "மாயவன்" எனப்பட்டார்.

சிவபெருமான் அவருக்குச் சக்ராயுதத்தை அளித்தார். பார்வதி சங்கையும் தாமரையையும் அளித்தாள். அவருக்கென தனியே ஓர் உலகத்தைப் படைத்து அளித்தனர். அது 'வைகுண்டம்' எனப்பட்டது. அதில் திருமால் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்ற மூன்று தேவியர்களுடன் வீற்றிருக்கின்றார்.

மேலும் அவர் பாற்கடலில் ஆதிசேடன் என்ற பாம்பரசன் மீது யோக நித்திரை செய்பவராகவும் விளங்குகின்றார். அவர் தனது சிந்தனையில் "அலை கடல் நடுவில் விளங்கும் சிவபிரானை ஓயாது சிந்தித்துத் தொழுதவாறே" தனது காத்தல் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றார். அவரைச் சுற்றி நித்ய சூரிகளும், முனிவர்களும், கந்தர்வர்களும் உள்ளனர். கருடன் திருவடிவாரத்திலும் மார்க்கண் டேயர் திருமுடிவாரத்திலும் வீற்றிருக்கின்றனர். அவருடைய தொப்புள் கொடியிலிருந்து மலர்ந்த (உந்தித்) தாமரையில் வீற்றிருந்து அவரிடம் ஞானோபதேசம் பெறுபவனாகப் பிரம்மன் திகழ்கின்றான்.

அவருக்கு ஆதியில் அளிக்கப்பட்டதேவி, ஸ்ரீ எனப்படும் மகாலட்சுமி ஆவாள். அவள் பல்வேறு அரசர்களுக்கும் ப்ருகு, மார்க்கண்டேயர், முதலிய ரிஷிகளுக்கும் மகளாகப் பிறந்து திருமாலை மணந்து கொண்டாள்.

அவள் சிவபெருமானுக்குரிய வில்வமரத்தில் நீங்காது உறைகின்றாள் இதையொட்டி அவள் சகஸ்ர நாமத்தில் "வில்வ நிலையாயை நம:" என்று துதிக்கப் படுகின்றாள்.

ஆதியில் திருமால் வெண்மை நிறத்துடனேயே விளங்கினார். பாற்கடலில் தோன்றிய விஷத்தை அடக்கச் சென்றபோது அதன் தாக்கத்தால் அவர் கருத்து நீல நிறமாகி விட்டார். பிறகு சிவபூசைசெய்து பச்சை நிறம் கொண்டவராகவும், சிவப்பு (பவள) நிறம் கொண்டவராகவும் ஆனார். என்றாலும், அவர் நீல நிறம் கொண்டவராகவே புராணங்களில் குறிக்கப் படுகின்றார்.

இவர் காக்கும் கடவுளாக இருப்பதால் மக்களையும், உயிர்களையும் காக்க அனேக அவதாரங்கள் எடுத்தார். அந்த அவதாரங்களில் அனேக அசுரர்களைக் கொன்று தருமத்தை நிலை நாட்டினார். ஒவ்வொரு அவதாரத்திலும் அசுரர்களைக் கொன்ற பாவம் நீங்கச் சிவபூசை செய்தார். அவர் பூசித்த லிங்கங்கள் அவர் கொண்ட அவதாரச் சிறப்புப் பெயர்களால், மச்சேசர், கூர்மேசர், வராகேசர் என்று பலவாறு அழைக்கப்படுகின்றன.

❁ ஸ்ரீ திருவேங்கடவன் - திருப்பதி, திருமலை

❁ திருமாலுக்குரியவை சக்கரம், சங்கு, வில், கதாயுதம், வாள் என்று ஐந்தாகும். இவை பஞ்சாயுதங்கள், (ஐம்படை) என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் உருவங்களைச் சிறிய அளவில் தங்கத்தால் செய்து வரிசையாகக் கோர்த்துக் குழந்தைகளுக்கு அணிவிப்பர். இது ஐம்படைத்தாலி என்று அழைக்கப் படுகிறது.

❁ திருமால் ஏந்தியுள்ள சக்கரம் சுதர்சனம் என்றும், சங்கு பாஞ்சசன்யம் என்றும், வில் சாரங்கம் என்றும், கதாயுதம் கௌமோதகி என்றும், வாள் நந்தகம் என்றும் அழைக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❁ திருமால் அணிந்துள்ள மாலை "வன மாலை" ஆகும். இதையொட்டி அவர் 'வனமாலீ' என்று அழைக்கப்படுகின்றார்.

❁ திருமால் மஞ்சள் பட்டாடைகளை அணிந் துள்ளார். அதற்குப் பீதாம்பரம் என்பது பெயராகும். இதனால் பீதாம்பரதாரி என்று அழைக்கப்படுகின்றார்.

❁ திருமாலின் மானசபுத்திரர்கள் காமனும் சாமனும் ஆவர். இவர்கள் இருவரையும் மடியில் அமர்த்திக் கொண்டு மகாலட்சுமி சந்தான லட்சுமி யாகக் காட்சியளிக்கின்றாள்.

❁ திருமாலின் விழிநீர்த் துளிகளில் இருந்து தோன்றிய அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற பெண் களே தவம் செய்து தெய்வயானை, வள்ளி என்ற அவதாரங்களையெடுத்து முருகனை மணந்து கொண்டனர். இதனால் முருகனுக்கு மால் மருகன் என்பது பெயராயிற்று.

❁ இதையொட்டி முருகனாலயங்களிலும், திருமாலுக்குத் தனிச் சந்நிதிகள் அமைக்கும் வழக்கம் உண்டாயிற்று. எடுத்துக்காட்டாகக் காஞ்சி குமர கோட்டத்தில் திருமால் 'உள்ளம் உருகும் பெருமாள்' என்ற பெயரில் அமைந்துள்ளார்.

❁ தென்னகத்தில் திருமால் சிவபூசை செய்த தலங்கள் அவர் பெயரால் விஷ்ணுபுரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவர் அமைத்த தீர்த்தங்கள் அவர் பெயரால் விஷ்ணுதீர்த்தம் என்றும், அவரு டைய அவதாரப் பெயர்களால் மச்சதீர்த்தம், கூர்மதீர்த் தம் எனப் பலவாறாகவும், அவருடைய ஆயுதப் பெயர்களால் வில்லூன்றி தீர்த்தம், சக்ரதீர்த்தம், சங்க தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றன.

❁ திருமால் கருடக் கொடியை உடையவர். கருடனை வாகனமாகக் கொண்டவர்.

❁ திருமால் ஸ்திதிச் சக்கரம் என்பதில் வீற்றிருக் கின்றார். ஸ்திதிச் சக்கரம் என்பது ஓயாது காக்கும் நிலையாகும். இதில் வாசுதேவன், அனிருத்தன், சங்கர் ஷணன், பிரத்யும்மன் என்ற நான்கு நிலைகளில் வீற்றிருக்கின்றார். இந்த இடம் பிரம்ம பிரதிஷ்டா ஸ்தானம் என்றும் பரமபதம் என்றும் அழைக்கப்படும். இதுவே ஸ்ரீ வைகுண்டமாகும்.

## திருமால் சிவனைத் தியானித்தல்

திருமால் யோகத்தில் சிவபெருமானைச் சிந்தித்தவாறே உள்ளார். அவர் இருதயத்தின் மத்தியில் நீங்காது சிவன் இருக்கின்றார். இதனைத் தைத்திரிய ஆரண்யகம், (நாராயணரின் இதயம்) தாமரை மொட்டைப் போன்றது. அதன் மத்தியில் அக்னி சிகை உள்ளது. அதன் மத்தியில் சிவபெருமான் உள்ளார் என்று கூறுகிறது. இக்கருத்தைப் பின்வந்த பிரம்மசூத்திரத்திற்கு வரையப்பட்டுள்ள சைவபாஷ்யத்திலும் காணலாம்.

தமிழ் வேதத்திலும் இக்கருத்து குறிக்கப்பட்டுள்ளது. அப்பர் திருவாரூரில் அருளிய பதிகத்தில், "பையஞ்சுடர்விடு நாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தானும்" என்றும், திருக்கருகாவூர் பதிகத்தில் "புள்ளூர்வான் உள்ளான் ஆகி" என்றும் குறித்துள்ளார்.

## தசாவதாரங்களில் திருமால் வழிபட்டது

திருமால் உலகில் தர்மம் குறைந்து அதர்மம் தலைவிரித்தாடும் போது உயிர்களைக் காக்க அவதாரம் தாங்கி வருகின்றார். அவர் எண்ணற்ற அவதாரங்கள் எடுத்திருந்தாலும் அவற்றுள் பத்து மிகவும் சிறந்தனவாகப் போற்றப்படுகின்றன. இதில் ஒன்பது அவதாரங்களை எடுத்துவிட்டார். பத்தாவது அவதாரம் இனி வரும் காலங்களில் எடுக்கப்படும். இது வரை எடுத்த ஒன்பது அவதாரங்களில் அசுரர்களை அழித்த பாவம் தீர அவர் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அவை அவருடைய அவதாரப் பெயர்களால் மச்சேசர், கூர்மேசர், .... கல்கீசர் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மச்சேசுவரர்

மீன் செல்வத்தின் குறியீடாகும். பல தெய்வங்கள் மீன் அவதாரம் எடுத்து அன்பர்களுக்கு அருள் புரிந்துள்ளதைப் புராணங்கள் குறிக்கின்றன.

ஒரு சமயம் சோமுகாசூரன் என்பவன் வேதங்களைத் திருடிக்கொண்டு கடலுக்கடியில் ஒளிந்து கொண்டான். வேதங்கள் இல்லாததால் பிரம்மனால் தனது படைப்புத் தொழிலைச் செவ்வனே செய்ய முடியவில்லை. அவன் திருமாலிடம் சென்று வேதங்களை மீட்டுத் தருமாறு வேண்டினான். திருமால் மிகப்பெரிய சுராமீனாக உருவம் தாங்கினார். கடலுக்கடியில் சென்று, அதைக் கலக்கினார். அதனால் கோபம் கொண்டு வெளிவந்த சோமுகாசூரனைச் கொன்று வேதங்களை மீட்டார். வேதங்களைக் குழந்தைகள் வடிவில் அவர் எடுத்து வந்தார்.

திருமால், வேதங்களைப் பிரம்மனிடம் தந்து படைப்புத் தொழிலை முன்போலவே செய்க என வாழ்த்தி அனுப்பினார்.

பிறகு மீன் அவதாரத்துடன் கடலுக்கடியில் சென்று மகிழ்ச்சியுடன் தங்கினார். அவருடைய உள்ளத்தில் இச்செயலை என்னை விட்டால் செய்யத் தகுந்தவர் யார் என்ற கர்வம் உண்டாயிற்று. அதனால் உலகம் கலங்கும்படியாகக் கடலைக் கலக்கி விளையாடினார். இந்த செயலால், உலகம் துன்பமடைந்தது. சிவபெருமான் பெரிய கொக்கு வடிவம் கொண்டு, கடற்கரையில் தோன்றினார். திருமாலாகிய மீனைத் தனது அலகால் பற்றி எடுத்தார். மீனாகி நின்றதிருமால் துள்ளித்துள்ளி விடுபட முயன்றார். அவரது முயற்சி பலன் அளிக்கவில்லை.

அதன்பிறகே வந்திருக்கும் பெரிய கொக்கு சிவபெருமான் என்பதை உணர்ந்தார். மமதை நீங்கப் பெற்று அவரைத் தொழுதார். சிவபெருமான் அவரை விடுவித்தார். பிறகு பலகாலம் சிவபூசை செய்தபின் திருமால் வைகுண்டம் சேர்ந்தார்.

❁ திருமால் மீனாக அவதாரம் செய்து லிங்கம் அமைத்து வழிபாடு செய்த தலங்களில் சிவபெருமான்



மச்சேசர் என்று அழைக்கப்படுகின்றார். காஞ்சிபுரத்தில் மச்சேசர் ஆலயம் சிறப்புடன் உள்ளது.

❁ கும்பகோணத்தை அடுத்துள்ள தேவராயன் பேட்டை என்றழைக்கப்படும் தலம் முன்னாளில் சேலூர் என்றழைக்கப்பட்டது (சேல் என்றால் மீன்). அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானை மீன் வடிவம் கொண்ட திருமால் வழிபட்டதால் மச்சேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். (சேல்+ஊர்=மீன்வழிபட்ட ஊர்)

❁ காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் முன்னுள்ள பதினாறுகால் மண்டபத்தூணில் பெரிய கொக்குவடிவில் சிவபெருமானும் அவருடைய அலகில் சிக்கிக் கொண்டு வழிபடும் திருமாலையும் காண்கிறோம். இது வேறெங்கும் இல்லாத வடிவமாகும்.

## கச்சபேசுவரர்

திருமால் எடுத்த இரண்டாவது அவதாரம் "ஆமை" அவதாரமாகும். தேவர்களும் அசுரர்களும் கூடி அமுதம் வேண்டி மந்திரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அப்போது மந்திரமலை உறுதியாக நிற்காமல் கடலுக்கடியில் சிக்கியது. திருமால் ஆமை வடிவம் எடுத்து அந்த மலையை முதுகில் தாங்கினார். ஆமை வடிவம் கொண்ட திருமால் மலையைத் தாங்கி நிற்கும் வலிமையைப் பெற திருக்கச்சூரில் எழுந்தருளியிருக்கும் சிவனை நோக்கிப் பூசித்தார். அவர் அங்கு அமைத்த தீர்த்தம் ஆமைமடு என்ற பெயரில் உள்ளது. இங்குள்ள விநாயகர் ஆலய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதானத்தில் திருமால் ஆமை வடிவுடன் சிவபூசை செய்வது தொடர் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

அமுதம் கிடைத்த பின் திருமால் காஞ்சிபுரத்தில் முருக்க மரத்தின் கீழ் சோதிவடிவமாக விளங்கும் சிவலிங்கத்தை வழிபட்டார். (கச்சபம் - ஆமை) அந்த லிங்கம் கச்சபேசுவரர் என்றபெயரில் உள்ளது. காஞ்சி புரத்தில் கச்சபேசுவரர் ஆலயம் பெருங்கோயிலாகத் திகழ்கிறது.

## ஆதிவராக வடிவில் திருமால் வழிபட்டது

ஆதிநாளில் பன்றி சுகபோகத்திற்கும் அதியுன் னத வீரத்திற்கும் அடையாளமாகக் கொள்ளப்பட்டது அனேக தெய்வங்கள் பன்றி அவதாரம் எடுத்து அன் பர்களுக்கு அருள் புரிந்ததைப் புராணங்கள் கூறுகின் றன. ஒருசமயம் தாய் இறந்ததால் அவதியுற்று அழுது கொண்டிருந்த பன்னிரண்டு பன்றிகுட்டிகளுக்குச் சிவ பெருமான் பன்றி அவதாரம் எடுத்துப் பால் கொடுத்த தைத் திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. காக்கும் கடவுளான திருமாலும் பலமுறைப் பன்றி அவதாரம் எடுத்துள்ளார்.

ஊழி முடிந்து தோன்றிய இந்த கல்பத்தின் ஆரம்பத்தில் பூமி தண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்து கிடந்தது. அதை மேலே கொண்டுவரத் திருமால் வெண்ணிறமான பன்றி அவதாரம் எடுத்தார். அவர் பெயராலேயே இப்பொழுது நடைபெறும் கல்பம், சுவேதவராக கல்பம் என்றழைக்கப்படுகின்றது. இதனை ஆதிவராகம் என்று அழைப்பர்.

பின்னும் ஒருசமயம் இரணியாட்சன் என்ற அசுரன் பூமியைப்பாய்போல் சுருட்டிக் கடலுக்கடியில் ஒளித்து வைத்தபோது திருமால் வராக அவதாரம் எடுத்துக் கடலுக்கடியில் சென்று அவனைக் கொன்று பூமியை மேலே தூக்கி நிலைநிறுத்தினார். அதன் காரணமாக அவரைப் பூவராகம் என்று போற்று கின்றோம்.

மேலும் ஒருசமயம் பிரளயகாலத்தில் வானுக்கும் பூமிக்கும் நடுவில் பெரிய ஒளிபொருந்திய தூணாக சிவபெருமான் நின்றபோது திருமால் அவருடைய அடியைக் கண்டு வருவேன் என்று கூறி, பன்றி அவ தாரம் எடுத்துக் கொண்டு பூமியை அகழ்ந்து கொண்டு கீழே சென்றார். எவ்வளவு தூரம் சென்றும் அவரால் சிவபெருமானை அடிகளைக் காண முடியவில்லை.

இப்படி அவர் அனேகமுறை பன்றி அவதாரம் எடுத்ததைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. அவர் வராக அவதாரத்துடன் பல தலங்களில் சிவனை வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார். அதனைத் தலபுராணங் களும், திருமுறைகளும் சிறப்பாகக் கூறுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

### சிவபுரம்

திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற திருத்தல மான திருச்சிவபுரம் வராகப்பெருமாள் பூஜித்த தலங்க ளில் தலையானதாகும். இங்கு திருமால் சிவபெரு மானை வழிபட்டதைத் திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில்

"மதம்மிகு நெடுமுகன் அமர்வளை
மதிதிகழ் எயிறதன் நுதிமிசை
இதம்அமர் புவியது நிறுவிய
எழில் வளர் அரி வழிபட" (அருள்செய்தவன்)

என்றும், திருநாவுக்கரசர்

"பிறைஎயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபாடேத்தும்" (சிவபுரம்)

என்றும்

"வென்றிகொள் எயிற்று வெண்பன்றி முன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே"

என்றும் குறித்துள்ளார்கள். இந்த வரலாற்றை விளக்கும் வகையில் வாயில் மலருடன் வெள்ளைப் பன்றி சிவலிங்கத்தை வழிபடும் புடைப்புச் சிற்பம் ஒன்று இக்கோயிலில் உள்ளது.

### காஞ்சிபுரம்

சுவேத வராகமாகப் பெருமாள் சிவபெருமானை வழிபட்ட திருத்தலம் காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியான தாமல் என்பதாகும். இங்குள்ள பெருமான் வராகேசு வரர் என்று அழைக்கப்படுகிறார்.

### செங்கண்மால்

திருமால் பன்றிமுகம் கொண்டவராக (சுவேத வராகமூர்த்தி) எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசம் திருவிடந்தை ஆகும். இதற்கு நேர்மேற்கில் திருமால் ஒரு சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டார் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அந்தலிங்கம் செங்கண்மாலீசுவரர் என்று அழைக்கப்படுவதுடன் ஊரும் செங்கண்மால் என்றழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலின் கருவறை தெற்குச் சுவரில் ஒரு சிவலிங்கத்தைத் திருமால் (பன்றிமுகத்துடன்) வழிபடுவது புடைப்புச்சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து - திருப்போரூர் செல்லும் சாலையில் கேளம்பாக்கத்தை அடுத்துள்ளது செங்கண் மால் கிராமமாகும். இங்குச் சாலையோரத்திலேயே சிவாலயம் உள்ளது. கோயிலுக்கு வடக்கில் சுவேத வராக தீர்த்தம் உள்ளது. இதில் வெள்ளைத் தாமரை மலர்கள் மிகுதியாக உள்ளன. இதில் மூழ்கி இப்பெரு மானை வழிபட்டால் கல்வியறிவு பெருகுமென்று நம்புகின்றனர். இறைவர் செங்கண் மாலீசர் - அம்பிகை பெரியநாயகி.

## பன்றிக்கோடு

குமரி மாவட்டத்திலுள்ள பிரசித்தி பெற்ற பன்னி ரண்டு சிவத்தலங்களில் ஒன்று திருப்பன்றிக்கோடு ஆகும். ஒருசமயம் கடலுக்கடியில் பூமியை ஒளித்து வைத்திருந்த இரணியாட்சனைக் கொல்லத் திருமால் ஒற்றைக் கொம்புகொண்ட பெரிய பன்றியாக அவதா ரம் எடுத்து கடலுக்கடியில் சென்று இரணியாட்சனைக் கொன்று பூமியை மேலே கொண்டுவந்தார். அதனால் தேவர்கள் பூமாரி பொழிந்து அவரைப் போற்றினர்.

அப்போது அவருள்ளத்தில், "என்னைத் தவிர இந்தச் செயலைச் செய்பவர் யார்? இந்த வீரம் எனக்கு மட்டுமே உரியது என்ற இறுமாப்பு தோன்றி யது. அதனால் அவர், அனைவருக்கும் தொல்லைத் தரத் தொடங்கினார். வேறு வழியறியாத தேவர்கள் சிவபெருமானிடம் சரணடைந்தனர். அவர் வராகப் பெருமான் முன்பு தோன்றினார். அவருடைய ஒற்றைக் கொம்பை ஒடித்துத் தனது மார்பிலுள்ள அணிகளுடன் கோர்த்துக் கொண்டார்.

உள்ளம் சோர்ந்த திருமால் தன் தவறை உணர்ந் தார். தனது பழைய உருவத்துடன் சிவபெருமானைப் பூசித்து அருள்பெற்று வைகுண்டம் சேர்ந்தார். அவரு டைய கொம்பை ஒடித்த மகாதேவனான சிவபெரு



மான் கோயில் கொண்ட தலம் திருப்பன்றிக்கோடு என்று அழைக்கப்படுகிறது. இங்குத் திருமால் வழி பட்டுப் பேறு பெற்றதை இக்கோயிற் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

மேலும் காஞ்சிபுரம், காசி முதலிய அனேக தலங்களில் பன்றி அவதாரத்துடன் திருமால் எழுந்த ருளி வழிபட்டதைப் புராணங்கள் கூறுகின்றன.

## அரதைப் பெரும்பாழி

திருஞானசம்பந்தரின் பாடல்பெற்ற திருத்தலம் அரதைப் பெரும்பாழி என்பதாகும். இது இந்நாளில் ஹரித்துவாரமங்கலம் என்றழைக்கப்படுகின்றது. இங்கு அழலுருவாய் நின்ற இறைவனின் திருவடியைத் தேடித் திருமால் வராக அவதாரத்துடன் பெரும் பள் ளத்தைத் தோண்டிக் கொண்டு பாதாளம் நோக்கிச் சென்றார் என்று கூறப்படுகிறது. அரியால் துவாரம் செய்யப்பட்ட மங்கலம் பொருந்திய இடம் ஆதலின் அரித்துவார மங்கலம் எனப்பட்டது. அந்தத் துவாரம் ஆலயத்துள் மூடப்பட்டுள்ளது. இறைவர் பாதாள வரதர் என்றும், இறைவி அலங்காரவல்லி என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

## சுவேதவராகரும்-அங்கதேவதைகளும்

காமதேனுவின் உடலில் பல தேவர்கள் வீற்றிருக்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி கோபூசையில் பசுவின் அங்கங்களையும் அதில் வீற்றிருக்கும் தேவர்களையும் பூசிக்கின்றோம். இதைப்போன்றே சுவேதவராக மூர்த்தியின் உடலிலும் எண்ணற்ற தேவதைகள் எழுந்தருளியிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. கஜுரோஹாவில் அமைந்துள்ள பெரிய வராக உருவத்தின் உடல்மீது 274 தேவர்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். வெள்ளியால் வராகமூர்த்தியின் உருவத்தைச் செய்து வழிபடும் வழக்கமும் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❁ நரசிம்மரின் கோபத்தை அடக்கச் சிவபெருமான் கொண்ட கோலமான சரப அவதாரம்

திருமால் இரணியனை அழிக்கவும் பிரகலா தனைப் பிரகாசப்படுத்தவும் தேவர்களைக் காக்கவும் எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரமாகும்.

அசுரனான இரணியன், தன் மகனான பிரகலாத னிடம், "எங்கே நீ வணங்கும் ஹரி" என்று கேட்ட போது, அவன் தந்தையைநோக்கி எங்குமிருக்கிறான் என்றான். இரணியன் தன் சபையிலிருந்த ஒரு தூணைக் காட்டி இதிலிருக்கிறானா? என்று கேட்டு அதை ஓங்கி அடித்தான். அப்போது திருமால் அதிலி ருந்து மனித உடலும், சிங்கமுகமும் கொண்ட நரசிம்ம மாக வெளிப்பட்டு இரணியனின் மார்பைப் பிளந்து இரத்தத்தைக் குடித்தார். பிறகு அவனது குடல்களை மாலையாக அணிந்து கொண்டு வீரட்டகாசம் புரிந்தார்.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர் அந்த வேளை யில் அசுரனான இரணியனின் இரத்தத்தைக் குடித்த தால் அவருக்குள் அசுரசக்தி உண்டாயிற்று. மேலும் இத்தகைய அரிய செயலைச் செய்யத்தக்கவர் என்னை விட யார் இருக்கின்றார்கள் என்ற மமதையும் உண்டா யிற்று. அந்த இரண்டாலும் அவர் ஆர்ப்பரித்து அட்டகாசம் புரிந்தார் அவருடைய அட்டகாசத்தை எவராலும் தாங்கமுடிய வில்லை.

## நாரசிம்மேசுவரம்

தேவர்களும் மனிதர்களும் கூடிச் சிவபெரு மானைச் சரணடைந்தனர். அவர் பேரண்டப் பட்சி யான சரபாவதாரம் எடுத்து நரசிம்மமூர்த்தியைப் பற்றினார். பின்னர் தனது எட்டுக் கால்களாலும் சிறகா லும் அவரை அடித்துத் தண்டித்தார்.

அவருடைய ஆற்றலின் முன்னே நரசிம்மரின் ஆற்றல் அடங்கிவிட்டது. அவர் சிவபெருமானைப் போற்றி வணங்கினார். தனது தவற்றிற்காக வருந்தி னார். பல இடங்களுக்குச் சென்று சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அவை அவர் பெயரால் நரசிம்மேசுவரர் என்று அழைக்கப்படுகின்றன.

❁ ஒருசமயம் தேவர்களின் வேண்டுகோளின் படிச் சிவபெருமான் திரிபுராதிகளை வெல்ல அவர்கள் மீது அம்பு எய்தார். அந்த அம்பிற்கு அக்னி முகமாக வும், திருமால் தண்டாகவும் வாயு வாலாகவும் அமைந் தனர். தண்டுப்பகுதியாக விளங்கிய திருமால் நரசிம்ம ராக விளங்கினார். திரிபுரம் எரிந்தபின் தண்டாக இருந்த நரசிம்மருக்கு அசதி உண்டாயிற்று. அது தீரும் பொருட்டு நெடுங்காலம் யோகநித்திரையில் ஆழ்ந்தார். அப்படி யோக நித்திரை புரியும் சயன நர சிம்மரை திருவதிகையில் காண்கிறோம். திருவதி கையில் அமைந்துள்ள சரநாராயணப் பெருமாள் ஆலயத்தில் இவர் உள்ளார்.

❁ காஞ்சிபுரத்தில் நரசிம்மர் வழிபட்ட சிவால யம் நாரசிம்மேசுவரம் என்ற பெயரில் தாமல் எனும் பகுதியில் உள்ளது.

❁ சோழர்கள் தாம் அமைத்த சிவாலயங்களின் ஸ்ரீ விமானங்களின் மேற்குக் கோட்டத்தில் யோக நரசிம்மரை அமைத்துள்ளனர்.

❁ பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள தலம் வில்லி யனூர் ஆகும். புராணங்களில் 'வில்வவனம்' என்று குறிக்கப்பட்ட இத்தலத்தில் காமீசுவரர் என்ற பெயரில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இவரை நரசிம்மர் வழிபட்டுப் பேறுபெற்றார். சிவபெருமான் அவரிடம் நீ தனியாகக் கோயில் கொள்க என்று கூறியதாகவும் அதன்படியே அவர்கோயில் கொண்டார் என்றும் கூறப்படுகிறது. அப்படி நரசிம்மர் கோயில் கொண்ட இடம் இந்நாளில் சிங்கிரிகோயில் என்று அழைக் கப்படுகிறது. இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமால் மாணியாய் வழிபட்ட மாணிக்குழி

சிவாலயங்களில் விளக்கேற்றுவது மிகப் பெரிய புண்ணியச் செயல் ஆகும். அதைப் போலவே விளக்குகளைத் துடைத்தல் எண்ணையிடல் சிகடு களைத் தட்டிச் சுடர்விடச் செய்தல் முதலியனவும் சிறந்த புண்ணியச் செயல்கள் ஆகும். ஒரு சமயம் திருமறைக்காடு வேதபுரீசுவரர் ஆலயத்தில் விளக்கு ஒன்று அணையும் தருவாயில் இருந்தது. அதில் எண்ணையைக் குடிக்க ஒரு எலி வந்தது. அதன் மூக்கின் நுனிபட்டு விளக்கின் திரி தூண்டப்பட்டு விளக்கு பிரகாசமாக எரிந்தது. அப்புண்ணியத்தால் அந்த எலி மறுபிறவியில் மகாபலி என்ற பெரிய அரசனாக ஆனது. மகாபலி அரசர் முன் செய்த புண்ணியப் பயனால் பெரிய சிவபக்தனாக விளங்கினார்.

அவர் பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார். அந்த வேள்விச் சாலைக்குத் திருமால் குறள் வடிவம் கொண்ட பிராமணனாக எழுந்தருளினார். அவரை வரவேற்று உபசரித்த மகாபலி, அவரிடம் உமக்கு வேண்டியதை கேள் தருகிறேன் என்றார். உபேந்திர னாகிய திருமால், அரசனே எனக்கு தவச்சாலை அமைத்துக் கொள்ள மூன்றடி நிலம் வேண்டும் அதனை எனக்குத் தாரை வார்த்துத் தருக என்றார். பலிச் சக்ரவர்த்தி அப்படியே ஆகட்டும் நீர் கேட்டபடி நிலத்தை இப்போதே தருகிறேன் என்று கூறி தானம் செய்யத் தொடங்கினார். அங்கிருந்த அசுர குருவான சுக்ராச்சாரியார் அவனைத் தடுத்து இதில் ஏதோ சூது உள்ளது என்றார். மகாபலியோ, "குருவே, வாக்கு கொடுத்து விட்டேன். அதை நிறைவேற்ற வேண்டும். என்னைத் தடுக்காதீர் என்றார்.

பிறகு நீர்வார்த்து, "மாணியே, உன் விருப்பப் படியே தந்தேன் பெறுக", என்றார். திருமால் அந்த நீரை ஏற்றுக் கொண்டதுடன் தன் வடிவை உடனே பெருக்கினார். விண்ணிற்கும் மண்ணிற்குமாக திரு விக்ரமனாக நின்றார். அவருடைய வடிவைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். அவர் பூமியை ஒரு அடியாகவும், வானத்தை ஒரு அடியாகவும் அளந்தார்.

பிறகு மகாபலியை நோக்கி, "அன்பனே, எனது மூன்றாவது அடியை வைக்க இடம் எங்கே என்றார். மகாபக்தனான மகாபலிச் சக்ரவர்த்தி திருமாலின்



முன்பு மண்டியிட்டு மூன்றாவது அடியை 'என் தலைமீது வைத்துக் கொள்க' என்றார்.

திருமால் தனது வலது காலை அவர் தலைமீது வைத்து, அழுத்தி அவரைப் பாதாளத்திற்குள் அனுப்பி விட்டார். தேவர்கள் பூமழை பொழிந்தனர்.

மகாபலிச் சக்ரவர்த்தி பாதாள உலகத்தில் ஒரு நகரை நிர்மாணித்துக் கொண்டு அதன் அரசனாகி விட்டார்.

மகாபலிச் சக்ரவர்த்தியை வஞ்சித்துப் பாதாளத் திற்கு அழுத்திய பாவம் தீரத் திருமால் வாமன வடி வத்துடன் சிவபூசை செய்த இடம் திருமாணிக்குழி ஆகும்.

இது கடலூருக்கு அருகிலுள்ள தலமாகும். கெடில ஆற்றங்கரையில் உள்ளது. இங்குள்ள சிவ பெருமான் வாமனபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின் றார். அம்பிகையின் பெயர் அம்புஜாட்சி (பங்கயக் கண்ணி) என்பதாகும். திருமால் எப்போதும் இங்குச் சிவ பூசை செய்து கொண்டிருப்பதால், அதற்கு இடை யூறு நேராதிருக்கும் பொருட்டு பீமருத்திரர் காவலாக இருக்கின்றார்.

பீமருத்திரர் திருவுருவம் கருவறைக்கு முன் னுள்ள திரையில் அமைக்கப்பட்டுள்ளது. அவருக்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுக்கிராசசாரியார், மகாபலி சக்கரவர்த்தி, வாமனர் திருமயிலை வெள்ளீச்சரம்

எல்லா பூசைகளும் செய்யப்படுகின்றன. கருவறையிலுள்ள லிங்கத்தை மகா தீபாராதனை செய்யும்போதும் பாலபிஷேகம் செய்யும்போதும் மட்டுமே திரையை விலக்கிக் காண்பிக்கின்றனர். இது, திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல் பெற்ற தலமாகும்.

❁ எலி விளக்கைத் தூண்டுதல், அரசனாதல், திருமால் மாணியாக வருதல், தானம் பெறுதல் முதலியன மகாமண்டபத்தில் "புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

❁ இங்குத் திருமால் மாணிவடிவில் நியமத்துடன் வழிபட்டதைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில்,

நித்தநியமத் தொழிலனாகி நெடுமால் குறளனாகி மிகவும்
சித்தமது ஒடுக்கி வழிபாடு செய்ய நின்ற இடம்
(மாணிக்குழி)

என்றும், சேக்கிழார் பெரியபுராணத்தில்

போர்வலித் தோள் மாவலிதன் மங்கல
வேள்வியில் பண்டு வாமனாய் மண்
இரந்த செங்கணவன் வழிபட்ட திருமாணிக்குழி

என்றும் குறித்துள்ளனர்.

### மாணி வழிபட்ட திருமயிலை வெள்ளீச்சரம்

திருமயிலையில் உள்ள வெள்ளீசுவரர் ஆலயம் சுக்கிராச்சாரியார், திருமாலுக்கு தானம் செய்த பலியைத் தானம்செய்யாமல் தடுத்த பாவம் தீரவும் தனது இழந்த கண்ணைப் பெறவும் வழிபட்ட தலமாகும். அசுரகுருவான சுக்கிராச்சாரியாரின் கண்ணைக் குத்திக் குருடாக்கிய பாவம்தீரத் திருமால் இங்கு வழிபட்டார் என்றும் கூறப்படுகிறது.

இங்கு மாணியாக வந்த திருமால் அவருக்குத் தானம் அளித்த பலிச் சக்ரவர்த்தி, அதைத் தடுத்துத் தன் கண்ணை இழந்த சுக்ராச்சாரியார், தானம்பெற்ற பின் உலகினை அளந்த திருவிக்ரமப் பெருமாள் ஆகியோரின் உலாத்திருமேனிகள் உள்ளன.

வைகாசி மாதம் நடைபெறும் திருவிழாவின் எட்டாம்நாளில் இவை உலா வரச் செய்யப்படுகின்றன.

## சிவ வழிபாட்டில் திருமால்

சிவவழிபாட்டில் திருமால் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறார். முதலில் நடைபெறும் குருவணக்கத்தில் ஏழு குருமார்கள் வணங்கப்படுகின்றனர். இவர்களில் ஒருவராகத் திருமால் திகழ்கின்றார். அடுத்து, சிவபெருமான் வீற்றிருக்கும் கமலாசனத்தில் உள்ள சந்திர மண்டலங்களின் நடுவில் வீற்றிருக்கும் திருமால் போற்றப்படுகின்றார். இந்தத் திருமால் வெண்மை நிறத்துடன் முத்துப்போல் பிரகாசிக்கின்றார். பீதாம்பரங்களை உடுத்திப் பஞ்சாயுதங்களை ஏந்தி வனமாலைகளைச் சூடி இருபெருந்தேவியருடன் திகழ்கின்றார்.

அடுத்ததாகச் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயத்தைச் சுற்றியுள்ள ஐந்து ஆவரணங்களில் நான்காவது ஆவரணத்தில் தசதிக்பாலகர்கள் பூசிக்கப்படுகின்றனர். அவர்களில் பாதாளத்திற்கு அதிபதியாகத் திருமால் அதோ திக்பாலகனாகப் போற்றப்படுகின்றார். இவருக்குரிய பலிபீடம் ஆலயத்தின் வடகிழக்கு முனையில் அமைகிறது.

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவில் தினமும் அத்திரதேவர் எனப்படும் திரிசூலம் பூசிக்கப்படுவதுடன் திருவீதிகளில் வலமாக எடுத்துச் சென்று ஸ்ரீபலி நடத்தப்படுகின்றது. இந்த திரிசூலத்தின் மூன்று முனைகளில் நடுமுனை உருத்திரராகவும் வலது பக்கம் வளைந்தமுனை பிரம்மனாகவும், இடதுபக்கம் வளைந்த முனை திருமாலாகவும் போற்றப்படுகின்றது.

இன்னும் அனேக முறைகளில் சிவவழிபாட்டில் திருமால் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பரசுராமேசுவரங்கள்



திருமாலின் தசாவதாரங்களில் ஆறாவது அவதாரம் பரசுராம அவதாரமாகும். இதில் அவர் ஜமதக்னி முனிவருக்கும் ரேணுகாதேவிக்கும் மகனாகத் தோன்றினார். முனிகுமாரனாக இருந்தாலும் அரசர்களுக்குரிய அனைத்து வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

சிவனை உபாசித்து அவரால் தழுவப் பெற்றார். சிவன் அவருடைய அன்பாலும் தவத்தாலும் மகிழ்ந்து தனது மழுவின் அம்சமாக ஒரு மழுவைத் தோற்றுவித்து அவருக்கு அளித்தார். அதனால் அவருக்குப் பரசுராமர், மழுவாளன் என்பன பெயர்களாயின.

ஒரு சமயம் கிருதவீரியன் என்ற மாமன்னன் தமது சேனைகளுடன் இவர்களுடைய ஆசிரமத்திற்கு வந்தான். அவனை ஜமதக்னி முனிவரும் அவர் மனைவியும் வரவேற்று காமதேனுவின் உதவியால் பெருத்த உபசாரத்தைச் செய்தனர்.

விருந்தினை உண்டு மகிழ்ந்த அவன், "முனிவரை நோக்கி, எளிய சிறு ஆசிரமத்தில் வசிக்கும் உங்களால் எப்படி இத்தகைய பெரிய விருந்தை அளிக்க முடிந்தது" என்றான். முனிவர் தன்னிடம் காமதேனு என்னும் பசு இருப்பதாகவும் அதன் மூலம் எதை வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் பெறலாம் என்றார்.

அந்த மன்னன், 'முனிவனே எளிய குடும்பத்துடன் வாழும் உமக்கு எதற்கு இந்தத் தெய்வீகப் பசு,' காமதேனுவை எனக்குக் கொடுத்துவிடுங்கள் அதற்கு ஈடாக உமக்கு ஏராளமான பசுக்களைத் தருகிறேன் என்று கூறினார். முனிவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவன் கடுங்கோபம் கொண்டான். முனிவரை விலக்கி விட்டுப் பசுவைப் பிடித்துச் செல்ல ஆட்களை ஏவினான்.

அப்போது பசுவின் உடலிலிருந்து ஏராளமான வீரர்கள் தோன்றினர். அவர்கள் கிருதவீரியனையும் அவனது வீரர்களையும் அழித்து விட்டு மறைந்தனர். கிருதவீரியன் மாண்டதைக் கேட்டு அவன் மகன் கார்த்தவீரியார்ச்சுனன் அங்கு வந்தான். தவத்தில் வீற்றிருக்கும் முனிவரைக்கண்டு வாளையெடுத்து அவர் தலையை வெட்டி வீழ்த்தினான். ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பிய ரேணுகா தேவி அதைக் கண்டு ஆற்றாமல் மார்பில் இருபத்தியோரு முறை அடித்துக் கொண்டு அழுதாள். அந்த வேளையில் பரசுராமனும் அங்குவந்தார். தனது தந்தையைக் கொன்றுவிட்டு, பெரிய மரம்போல் நிற்கும் கார்த்தவீரியார்ச்சுனைக் கண்டு சினந்தார். அவனுடைய தலைகளையும் கைகளையும் வெட்டி எறிந்தார் பிறகு தனது தாயைத் தேற்றினார். ரேணுகை தீயுள் மூழ்கி தெய்வநிலை பெற்றாள்.

தாய்தந்தையரின் இழப்பால் வருந்திய பரசுராமர் அரசகுலத்திடம் கோபம் கொண்டார் இருபத்துயோரு தலைமுறைகளைச் சேர்ந்த அரசர்களைக் கொன்று அவர்களின் உடலிலிருந்து பெருகிய இரத்தத்தைத் தேக்கி அதில் தந்தைக்கு இறுதிக் கடன் செய்தார். பின்னும் சினம் அடங்காமல் எதிர்பட்ட அரசர்களையெல்லாம் கொன்று குவித்தார்.

அவரை அடக்குவாரில்லை. பூவுலக அரசர்கள் எல்லோரும் காசிபன் என்னும் முனிவனிடம் தஞ்சமடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். அந்த முனிவன் பரசுராமரிடம் சென்று நீ வென்ற இந்தப் பூமியை எனக்குத் தானமாக அளிக்கவேண்டும் என்றார். பரசுராமரும் அப்படியே தாரைவார்த்து அளித்தார். பின்னர் முனிவர் பரசுராமரிடம், "அன்பரே எனக்குத் தானமாக அளிக்கப்பட்ட பூமியில் இனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீங்கள் இருக்கக் கூடாது. இதைவிட்டு அகலுக. மேலும் உமது சினத்தைத் தவிர்த்து சிவபூசை செய்க என்றார். பரசுராமர் மேற்குக் கடலோரம் சென்று தனது மழுவை வீசி, கடலை விலகும்படிச் செய்தார். கடல் பின்வாங்கியதால் உண்டான நிலத்தினை ஏற்றார். அதுவே இன்றைய மலைநாடான கேரளாவாகும். இது பரசுராமரால் உண்டாக்கப்பட்டதாதலின் பரசுராம க்ஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

இங்குப் பரசுராமர் அனேக சிவாலயங்களை அமைத்தார். இவை பரசுராமப் பிரதிஷ்டைகள் என்று அழைக்கப்படுகின்றன. பரசுராமர் இந்த இடத்தை விட்டு நீங்காது இன்னமும் சிவபூசை செய்து கொண்டிருக்கின்றார் என்று நம்பப்படுகிறது.

❀ பரசுராமர் உலகிலுள்ள அரசர்களைக் கொன்ற பாவம் தீர மகேந்திர மலையில் தவம் செய்து சிவனருளால் மேன்மை பெற்றார் என்று சிவமகா புராணம் கூறுகிறது. அவருக்குச் சிவபெருமான் சிரஞ்சீவியாக இருக்கும் வரத்தை அளித்தார். அவர் மகேந்திர மலையில் தவம்புரிந்து கொண்டிருக்கின்றார். இந்த யுகமுடிவில் தன்னுலகம் சேர்வாரென்று புராணங்கள் கூறுகின்றன.

## தமிழகத்துப் பரசுராமேச்சுரங்கள்

தமிழகத்தில் பரசுராமர் அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்துப் பூசித்தார். அவை அவர் பெயரால் பரசுராமேச்சுரவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

### பழுவூர்

(திருச்சி) அரியலூருக்குத் தெற்கே அமைந்துள்ள "பழுவூர்" பரசுராமரால் பூசிக்கப்பட்ட தலமாகும். இங்குள்ள இறைவர் ஆலந்துறையீசர் என்றும் அம்பிகை அருந்தவ நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்குப் பரசுராமர் ஆலமரத்தின்கீழ் அதன் இலைகளைப் பரப்பி அதன் மீது படுத்த நிலையில் இருந்து தவம் செய்து தன் தாயைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டார் என்று கூறப்படுகிறது. அவர் சிவனருள் பெற்றதும் தொடர்ந்து மலையாள அந்தணர் களைக் கொண்டு பூசிக்க ஏற்பாடு செய்தார் என்று கூறப்படுகிறது. இங்கு மலையாள அந்தணர்கள் பூசனை செய்ததைத் திருஞானசம்பந்தர்,

மன்னின் மிசைஆடி மலையாளர் தொழுதேத்திப்
பன்னின் ஒலிகொண்டு பயில்கின்ற பழுவூரே என்றும்,

அந்தணர்களான மலையாளவர் ஏந்தும்
பந்தமலிகின்ற பழுவூரானை

என்றும் பாடியருளுகின்றார். இங்கு மூலத்தானத்திற்கு முன்னுள்ள நிலைக் கல்லில் சயன கோலத்தில் பரசுராமர் திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது.

### வேகாமங்கலம்

காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள வேகாமங்கலத்தில் பரசுராமர் பூசித்த சிவாலயம் உள்ளது. இறைவர் பரசுராமேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். இங்குப் பரசுராமர் வழிபட்டு இறைவனிடம் மழுவாயுதத்தைப் பெற்று உலகிலுள்ள அரசர் களைக் கொன்று தந்தைக்கு நீர்க்கடன் செய்தார் என்று புராணம் கூறுகிறது.

### திரைலோக்கி

கும்பகோணத்திற்கு அருகில் திரைலோக்கி என்ற ஊர் உள்ளது. கல்வெட்டுக்களில் இவ்வூர் "திரைலோக்கிய மகாதேவிச் சதுர்வேத மங்கலம்" என்று குறிக்கப்படுகிறது. இங்குப் படுத்துள்ள நந்திமீது உமாமகேசுவரர் அழகிய பிரபைக்குள் வீற்றிருப்பதைக் காண்கிறோம். கல்வெட்டில் இவ்வூர் ஆலயம் பரசுராமரால் அமைத்து வழிபடப்பட்டதால் "திருப்பரசுராமேசுவரம்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

### திருநின்றியூர்

தேவாரப் பாடல்பெற்ற திருத்தலமான திருநின்றியூர் மயிலாடுதுறை அருகிலுள்ள தலமாகும். இங்குப் பரசுராமர் சிவபெருமானை வழிபட்டு அவருடைய திருவடியைக் காணும் பேறுபெற்றார் என்று கூறப்படுகிறது. இதனைச் சுந்தரர் தமது தேவாரத்தில்,

"மொய்த்தசீர் முன்னூற்றறுபது வேலி
மூன்றுநூறு வேதியரோடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி
ஓங்கு நின்றியூர் என்றுஉமக் களிப்ப
பத்தி செய்த அப்பரசுராமற்குப்
பாதங்காட்டிய நீதிகண்டடைந்தேன்"

என்று திருநின்றவூர் பதிகத்தில் பாடுகின்றார். இதன் மூலம் பரசுராமர் திருநின்றியூரில் சிவபெருமானை வழிபட்டு முன்னூறு அந்தணர்களோடு முன்னூற்று அறுபது வேலி நிலத்தைத் தாரைவார்த்துக் கொடுத்ததையும் அந்தப் பரசுராமருக்குச் சிவபெருமான் திருவடிகாட்டி அருள் செய்ததையும் அறியமுடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# இராமலிங்கேசுவரர்

திருமாலின் தசாவதாரங்களில் ஏழாவது அவதாரமாகத் திகழ்வது இராமாவதாரமாகும். பெருமாள் அயோத்தியில் ரகுவம்சத்தில் இராமனாக அவதரித்தார். அவருடன் இலக்குமணன். பரதன், சத்ருக்னன் ஆகிய மூவர் பிறந்தனர். இராமர் மிதிலாபுரியின் அரசகுமாரியான சீதையையும் அவருடைய இளவல்கள் அவளுடைய சகோதரிகளையும் முறையே திருமணம் செய்து கொண்டனர்.

பின்னர் மந்தரையின் சூழ்ச்சியினாலும் கைகேயி பெற்ற வரத்தினாலும் சீதை, இலக்குவனுடன் இராமர் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டார். வனவாசத்தின்போது இராமர் அனேக அசுரர்களை அழித்தார். வனவாசத்தின் இறுதியில் இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் சென்றான். சுக்ரீவன். அனுமன், ஜாம்பவான் முதலியவர்கள் துணையோடு இராமர் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று அவனை அழித்துச் சீதையைச் சிறைமீட்டார்.

இராவணேசுவரன் மகாசிவபக்தன், இசையால் இறைவனைக் கவர்ந்தவன். கயிலைமலையைத் தனது இருபதுகரங்களால் தூக்கி இறைவனால் அழுத்தப்பட்டு அதனால் வருந்தி அழுது அவர் அருளைப் பெற்றவன். அவரிடமிருந்து முப்பத்து முக்கோடி வாழ்நாளையும் இராவணன் என்ற பட்டத்தையும் சந்திரகாசம் என்ற வாளையும் பெற்றவன்.

அத்தகைய மகா பக்தனாகிய இராவணனைக் கொன்றதால் இராமருக்குப் பிரம்ம ஹத்திதோஷம் உண்டாயிற்று. அத்துன்பம் அவரை வருத்தியது. அது தீரும்பொருட்டு அவரும் அவர் மனைவி சீதையும் சுக்ரீவன் முதலான தோழர்களும் சிவலிங்கம் அமைத்துப் பூசிக்க விரும்பினர்.

அனுமனை நர்மதை தீரத்திற்கு அனுப்பி பூசை செய்ய ஒரு லிங்கத்தைக் கொண்டுவருமாறு கூறினர். அதன்படியே அவரும் சென்று லிங்கம் எடுத்து. கங்கையில் நீராட்டினார். அதை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாகத் திரும்பினார். இடையில் அவருக்குச் சற்று காலதாமதம் ஆகிவிட்டது.

அதற்குள் சிவபூசைக்குரிய முகூர்த்த வேளை



நெருங்கி விட்டதால் இராமர் என்ன செய்வதென்று யோசித்தார். அப்போது சீதை கடற்கரையில் இருந்த வெண் மணலைக் கூட்டிச் சிவலிங்கம் அமைத்தாள். மாலைகளையும் மலர்களையும் சூட்டி அதனை அலங்கரித்தாள். இராமர் அதைக் கண்டு மகிழ்ந்து முறைப்படி அந்த லிங்கத்தையே பிரதிட்டை செய்து சிவ பூசை செய்தார்.

இலக்குவன், சுக்ரீவன். ஜாம்பவான், விபீஷணன் முதலான அனைவரும் மனம் ஒன்றிச் சிவபூசையில் கலந்து கொண்டனர். இராமபிரானைப் பற்றியிருந்த பிரம்மஹத்தி தோஷமும் நீங்கியது.

பூசைமுடிந்த பிறகு ஆஞ்சநேயர் இரண்டு லிங்கங்களை ஏந்திக் கொண்டு வந்து சேர்ந்தார். தனக்காகக் காத்திராமல் சிவபூசை செய்யப்பட்டதற்காக வருத்தம் கொண்டார். அவர் இராமரிடம், "ஐயனே! நான் தங்களுக்காக நெடுந்தொலைவு பயணம் செய்து இந்த லிங்கங்களைக் கொண்டு வந்துள்ளேன். எனவே இப்போது தாங்கள் அமைத்த லிங்கத்தை எடுத்து விட்டு நான் கொண்டுவந்துள்ள சிவலிங்கத்தை பிரதிட்டை செய்யுங்கள்" என்று வேண்டினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராமர், "முடிந்தால் நீயே அதைச் செய்" என்றார். அனுமார் மணல் லிங்கம்தானே என்று அலட்சியமாக அதைப் பற்றினார். அவரால் ஒருமணல் துகளைக் கூடப் பெயர்க்க முடியவில்லை. தனது வாலை அதில் கட்டிப் பலம் கொண்டமட்டும் இழுத்தார். வால் அறு பட்டு சற்று தூரம் போய் விழுந்தார். அவருக்கு அவ மானம் உண்டாயிற்று.

இராமர் அவரை அழைத்து, தழுவிக்கொண்டு சிவபூசையின் பெருமைகளை உரைத்தார். பின்னர் அனுமான் கொண்டுவந்த லிங்கத்தை (அங்கே தாம் அமைத்த லிங்கத்திற்கு) ஈசானத்தில் பிரதிஷ்டை செய்தார். அதற்குக் காசிவிசுவநாதர் என்று பெயரிட் டார். தினமும் அதற்கு முதல் பூசை நடக்க வேண்டும் என்ற நியதியையும் உண்டாக்கினார்.

இராமேசுவரத்தில் இராமர் அமைத்தலிங்கம் இராமநாதர் என்ற பெயரில் உள்ளது. இது பன்னி, ரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாகும்.

❀ இராமேசுவரம் இராமநாதசுவாமி ஆலயத் தில் உள்ள பெரிய பிரகாரத்தில் இராமரும் சீதையும் சிவபூசைசெய்யும் காட்சி ஐதீகச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. இதில் இராமரும் சீதையும் சிவலிங்கத் தைப் பூசிக்கின்றனர். சுற்றிலும் ஜாம்பவான், சுக்ரீவன், விபீஷணன் (இரண்டு லிங்கங்களை ஏந்தியுள்ளவராக) அனுமன், அங்கதன் முதலியோர் நிற்கின்றனர்.

❀ இராமர் "இராமலிங்கத்தை" நிறுவி வழிபட்ட நாள் ஆனிமாதம் சுக்லபட்சம், தசமிதிதி, புதன்கிழமை, ஹஸ்த நட்சத்திரம் வியதிபாதம் கரஜை கரணம், கன்யாசந்திரன், ரிஷப ரவி இவை கூடிய சுபமுகூர்த்த மாகும்.

❀ இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலயத் தில் ஆனிமாதத்தில் இராலிங்கப் பிரதிஷ்டை ஐதீக விழா மூன்று நாட்கள் நடைபெறுகின்றன. முதல் நாள் இரவில் ராமர்புறப்பட்டு இராவணனைச்சங்கரிப்பதும் இரண்டாம்நாள் விபீஷணனுக்குப் பட்டம் கட்டுவதும், மூன்றாம் நாள் காலையில் ராமன் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யும் விழாவும் நடைபெறுகின்றன இரவு சுவாமி அம்பாள் தங்க இடபவாகனத்திலும் சுப்பிரமணியர் தங்கக் குதிரையிலும் விநாயகர் தங்கப் பெருச்சாளியிலும் கன்மகர் வெள்ளி இடபத்திலும் இராமருக்குக் காட்சி கொடுப்பது நடைபெறுகிறது.

அப்போது ராமர் தேவியுடன் வெள்ளித் தேரில் பவனிவருகின்றார்.

❀ கூர்ம புராணத்தில் இராமேசுவரத்தில் ராமர் சிவலிங்கம் அமைத்து பூசித்ததையும் சிவபெருமான் அவருக்கு அருள்புரிந்ததும் விளக்கமாகக் கூறப்பட் டுள்ளது.

❀ திரு இராமேச்சுவரத்தை ஞானசம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் பாடிப் பரவியுள்ளனர். இவற்றில் இராவண்ன் சீதையைச் சிறையெடுத்தது இராமர் பாலம் கட்டியது. வானர சேனைகளுடன் சென்று இலங்கை அழித்தது. திருமாலாகிய ராமன் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்து வழிபட்டது முதலான செய் திகள் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

❀ கம்பராமாயணம் யுத்தகாண்டம் பூசைப் படலத்தில் அகத்தியன் உரைத்தபடி இராமபிரான் வெண்மணலைக் கூட்டி சிவலிங்கம் செய்து சீதை இலக்குவன் ஜாம்பவான் முதலியோருடன் வழிபட் டார் என்று கூறப்பட்டுள்ளது.

❀ இராமேசுவரம் புனிதத் தலங்களில் ஒன்று என்பதாலும், இராமர் பூசித்தது என்பதாலும் அதனை, தரிசித்தபின் அனேக மக்கள் தங்கள் ஊர்களில் ஆலயங்கள் அமைத்துள்ளனர். இவை ராமநாதசுவாமி ஆலயங்கள், ராமலிங்க சுவாமி ஆலயங்கள் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

❀ சிலருக்குப் பூர்வஜன்ம வினைகளால் பிள் ளைப்பேறு தடைப்படுகிறது. அவர்கள் இராமேசு வரத்திலுள்ள தீர்த்தங்களில் மூழ்கி இராமநாதரை வழிபட்டால் (இராமருக்கு பிரம்மஹத்தி விலகியது போல) தமக்கும் வினைகள் விலகி பிள்ளைப்பேறு உண்டாகுமென்று நம்புகின்றனர். நம்பிக்கையுடன் தீர்த்தங்களில் மூழ்கி இராமாநாதரை வழிபட்டுப் பிறந்த குழந்தைக்கு இராமநாதன் என்ற பெயரைச் சூட்டு கின்றனர். வசதி படைத்தவர்கள் பிள்ளைப்பேறு நல்கிய இராமநாத சுவாமிக்கு தங்கள் ஊரிலேயே கோயில்களை அமைத்து மற்றவர்கள் வழிபட வகை செய்தனர்.

❀ இராமேசுவுரத்தில் மட்டுமின்றி திருவாமாத் தூர், இராமநந்திச்சரம் முதலிய தலங்களிலும் இராமர் சிவவழிபாடு செய்துள்ளார். இதையொட்டிச் சிவபெரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானுக்கு முறையே அபிராமேசுவரர் இராமநாதேசுவரர் முதலான பெயர்கள் வழங்குகின்றன.

❀ காசியிலுள்ள அனுமன் காட்டில் இராமர், பரதன், இலக்குவன், சத்ருக்னன் ஆகியோர் வழிபட்ட லிங்கங்கள் தனித்தனி ஆலயங்களில் உள்ளன. இதில் பரதன் வழிபட்ட பரதேசுவரர் மட்டும் சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கின்றார்.

❀ இராமேசுவரத்திற்கு இணையாக பலதலங்கள் அதே பெயரில் உள்ளன. மன்னார் குடிக்கு அருகில் திரு இராமேசுவரம் என்ற ஊர் உள்ளது. இங்கு ராமநாத சுவாமிக்குப் பெரிய சிவாலயம் உள்ளது. இங்குள்ள மகாலட்சுமி சந்நிதியில் சீதை வழிபட்ட லிங்கம் சீதேசுவரர் என்ற பெயரில் உள்ளது. ஆடி அமாவாசையன்று ஏராளமான மக்கள் இங்கு வழிபாடு செய்கின்றனர். இறைவர் இராமநாதன் என்று அழைக்கப்படுகின்றார்.

❀ தேவாரப் பாடல்பெற்ற தலமான பள்ளியின் முக்கூடலை குருவி ராமேசுவரம் என்று அழைக்கின்றனர். இது திருவாரூருக்கு அருகிலுள்ளதாகும் இறைவன் முக்கண் நாதர், இறைவி அஞ்சனாட்சி. இங்கு முக்கூடல் தீர்த்தம் உள்ளது.

❀ பெரிய திருத்தலங்களுக்குச் சென்று இராமர் சிவவழிபாடு செய்தபோது அங்குத் தனிச் சிற்றாலயத்திலோ பிராகாரத்திலோ தம்பெயரால் ஒரு லிங்கத்தை அமைத்துள்ளார். அது இராமநாதேசுவரர் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய லிங்கங்களை திருஒற்றியூர், திருவாரூர், திருவான்மியூர் முதலிய பல தலங்களில் காணலாம்.

❀ கம்பன் பிறந்த ஊர் திருவழுந்தூர் ஆகும். இங்குத் திருமால் ஆமருவியப்பன் என்ற பெயரிலும் சிவபெருமான் வேதபுரீசுவரர் என்ற பெயரிலும் எதிர் எதிராகக் கோயில் கொண்டுள்ளார். ஆமருவியப்பனை இராமர் கோலத்தில் அலங்கரித்து வேதபுரீசுவரர் ஆலயம் வரை உலாவரச் செய்கின்றார்.

## பாபநாசம் இராமலிங்கேசுவரர்
### (திருமால் இராம அவதாரத்தில் வழிபட்ட 108 லிங்க ஆலயம்)

அரசர்களும், அசுரர்களும் தங்களின் வலிமை செல்வசெழிப்பு, கடுமையான தவம் உறுதி ஆகியவற்றைத் தெரியப்படுத்த அனேக லிங்கங்களை அமைத்து வழிபட்டனர். இராவணன் இலங்கையில் மூன்றுகோடி லிங்கங்களை நிறுவிவழிபட்டான். பாணாசூரன் தினமும் ஓராயிரம் லிங்கங்களை அமைத்து வழிபட்டு நர்மதையில் விசர்ஜனம் செய்துவந்தான். அகத்திய முனிவர் குசத்தலை ஆற்றில் கரைநெடுகிலும் நூற்றெட்டு லிங்கங்களை அமைத்தும், திருவான்மியூரில் ஒரே இடத்தில் 108 லிங்கங்களை அமைத்தும் வழிபாடு செய்துள்ளார். அகத்தியரின் அறிவுரைப்படி இராமர் சீதை இலக்குவனுடன் 108 லிங்கங்களை அமைத்து வழிபட்டதைப் பாபநாசம் எனும் தலத்தில் காண்கிறோம். இராவணன், இந்திரஜித், கரன், தூஷணன் முதலான அசுரர்களைக் கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி ராமனையும் அவரைச் சார்ந்தவர்களையும் வருத்தியது. அவர்கள் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள இந்த ஊரில் 108 லிங்கங்களை அமைத்து வழிபட்டனர். சிவவழிபாட்டால் அவர்களைப் பற்றியிருந்த பாவநாசமானது. பாவத்தை நாசம் செய்ததால் இத்தலம் "பாவநாசம்" எனப்பெயர் பெற்றது. இங்கு மையத்திலுள்ள கருவறையில் இராமன் வழிபட்ட லிங்கமும் வடக்குப்பிரகாரத்தில் மூன்று வரிசைகளாக 106 லிங்கங்களும் தெற்கில் ஒரு லிங்கமும் உள்ளன. இறுதியில் உள்ளது அனுமன் வழிபட்டதாகும்.

கல்வெட்டுகள் இவ்வூரைத் திருமால்புரம் என்று குறிக்கின்றன. இந்நாளில் இக்கோயில் அமைந்த இடம் புது வங்காரம்பேட்டை என்று அழைக்கப்படுகின்றது.

## இராகவேசர்

விசுவாமித்திரரின் யாகத்தைக் காக்க வேண்டி லட்சுமணனுடன் சென்ற இராமர் கண்ணுறங்காது அவரது வேள்விச் சாலையைக் காத்தார். அந்த வேளையில் தொல்லை தரவந்த தாடகையையும், அவளது சகோதரர்களையும் கொன்றார். தாடகையின் உடல் வீழ்ந்த இடம் குமரி மாவட்டத்தில் தாடகைமலை என்ற பெயரில் உள்ளது. இந்த மலையின் அடிவாரத்தில் தாடகையையும் அசுரர்களையும் கொன்ற பாவம் தீர ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அது அவர் பெயரால் "இராகவேசுரர்" என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகர்கோயிலிருந்து ஏறத்தாழ 15 கி.மீட்டர் தொலைவிலுள்ள திரிசனம்கோப்பு என்னுமிடத்தில் இந்த ஆலயம் உள்ளது. இதைச் சூழ்ந்துள்ள இடமே தாடகை வனம் என்று நம்புகின்றனர். இதை ஒட்டி தாடகை மலை உள்ளது. கோயிலுக்கு அருகில் பழையாறு ஓடுகிறது. மிகுந்த இயற்கைச் சூழலில் ஆலயம் அமைந்துள்ளது. இறைவர் இராகவேசர் இறைவி உலகநாயகி.

## ஜடாயுகுண்டம்

தேவாரப் பாடல்பெற்ற திருத்தலம் புள்ளிருக்கு வேளூர் ஆகும். இது இந்நாளில் வைத்தீசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. இது "சடாயு" என்ற பறவை அரசன் பூசித்த திருத்தலம்.

இராவணன், பஞ்சவடியிலிருந்து சீதையைச் சிறையெடுத்துச் சென்றபோது சடாயு அவனுடன் போரிட்டுத் தடுக்க முயன்றான். அப்போரில் மிகுந்த காயமுற்று வீழ்ந்தான். சீதையைத் தேடி வந்த ராமனிடம் செய்தியைச் சொல்லிவிட்டு உயிர்நீத்தான். ராமர் அவனுக்கு இங்கு நீத்தார் கடன் செய்தார். அவனை எரியூட்டிய இடம் இந்த வைத்தீசுவரன் கோயிலுக்குள் தெற்கு உள்பிரகாரத்தில் இருக்கின்றது. இதனைச் சடாயுகுண்டம் என்று அழைக்கின்றனர். இதனுள் விபூதியை இட்டு வைக்கின்றனர். அன்பர்கள் அதைப் பிரசாதமாக அணிந்து கொள்கின்றனர். இந்த குண்டத்தை ஒட்டி இராமர் இலக்குவன், விசுவாமித்திரர், வசிட்டர், சடாயு முதலியோரின் திருவுருவங்கள் உள்ளன.

இங்கு சடாயு பூசித்துப் பேறுபெற்றது, அவன் ராவணனோடு போரிட்டு மாண்டது, முதலான செய்திகள் தேவாரத்தில் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டுள்ளது.

## பலராமர் வழிபட்ட லிங்கம்

திருமாலின் எட்டாவது அவதாரமாகத் திகழ்வது பலராம அவதாரமாகும். இதில் அவர் ஒன்பதாவது அவதாரமான கண்ணனுக்கு அண்ணனாக இருக்கின்றார். இவரை ஆதிசேடன் அவதாரமென்று புராண நூல்கள் கூறுகின்றன. இவர் பனைமரக் கொடியை உடையவர். கலப்பையை ஆயுதமாகக் கொண்டவர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடப்பதை அறிந்து அதில் கலந்து கொள்ள விரும்பாது தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். இவர் பல தலங்களை வணங்கிய பின் காஞ்சிபுரம் வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார் என்று கூறப்படுகின்றது. அந்த லிங்கம் உள்ள திருக்கோயில் "பலபத்ர ராமேசுவரம்" என்று அழைக்கப்படுகின்றது.

திருமறைக் காட்டினை அடுத்துள்ள கோடிக்கரைக் குழகர் கோயில் பலராமர் வழிபட்ட திருத்தலமாகும். இங்கு அவருடைய திருவுருவம் உள்ளதென்று கூறுகின்றனர்.

## கண்ணன் செய்த சிவவழிபாடு

*திருமாலின் ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ணாவதாரமாகும். திருமால், வசுதேவரின் மகனாக அவதரித்து, ஆயர்பாடியில் வளர்ந்தார். பின்னர் துவாரகையின் மன்னனாகி அரசாண்டார். தனது பாலபருவத்தில் அவர் சாணூரன், கம்சன், குண்டாசூரன், சகடன் முதலான அனேக அசுரர்களைக் கொன்றார். அரசனான பின்னும் சிசுபாலான் தந்தவக்ரன் முதலிய அனேக அசுரர்களைக் கொன்றார். தனது அத்தை மகன்களான பாண்டவர்களின் பக்கம் நின்று கௌரவ சேனையை ஆயுதம் எடுக்காமல் யுக்தி மூலமாகவே கொன்றார். பூமியில் தர்மத்தை நிலைநாட்டவும், பூமியின் பாரத்தைத் தீர்க்கவும் அவர் கொன்றழித்த அசுரர்கள் அனேகராவர்.*

*அவர் உலக நன்மைக்காக இவற்றைச் செய்திருந்தாலும் அவரைப் பாவம் பற்றியது. அது நீங்கும் பொருட்டு அவர் அனேக இடங்களில் சிவபூசை செய்தார். அவை அவர் பெயரால் கண்ணேசம் என்று அழைக்கப்படுகின்றன. கண்ணன் வழிபட்ட தலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.*

சிவமகாபுராணத்தில் பகவான் ஸ்ரீ கண்ணன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற இரண்டு வரலாறுகள் சொல்லப்பட்டுள்ளன. முதலாவது வரலாறு பகைவர்களை வென்றடக்கச் சிவபூசை செய்ததையும் இரண்டாவது வரலாறு உபமன்யு முனிவரிடம் சிவ தீட்சை பெற்று புத்திரப்பேற்றை அடைந்ததையும் கூறுகின்றன. அதன்படி:-

சிவமகாபுராணம் ஞான சம்ஹிதையில் கண் ணன் அசுரர்களை வென்றடக்கும் வலிமைபெறச் சிவபூசை செய்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மகாபாரதத்தில் கண்ணனும் - சிவபெருமானும்

மாபாரத யுத்தத்தில் பதிமூன்றாம் நாள் யுத்தம் நடந்தது. அன்றிரவு கண்ணன், தருமனாதிகளிடம், "அன்பர்களே, யான் அருச்சுனனை அழைத்துக் கொண்டு, கயிலை மலைக்குச் செல்கிறேன். நாளை காலையில் சூரியன் உதிப்பதற்குள் திரும்பிவிடுவோம். சிவபெருமானிடமிருந்து அதிக படைக்கலங்களைப் பெற்றுத் திரும்புவோம்" என்று கூறி விடை பெற்றார்.

வழியில் அர்ச்சுனன், "கண்ணனே, எனக்குப் பசியும் களைப்புமாக இருக்கின்றது. நான் சிவபூசை செய்யாமல் உணவருந்துவதில்லை. இங்கு சிவாலயம் இல்லையே என்றான்.

அப்போது கண்ணன், "அர்ச்சுனா நானும் சிவனும் வேறில்லை. இப்போது என்னையே சிவனாகக் கருதிப் பூசை செய்க" என்றார். அர்ச்சுனன் காட்டு மலர்களைப் பறித்து கண்ணன் திருமேனியில் இட்டுச் சிவபூசை செய்தான்.

பிறகு உணவுண்டு ஓய்வெடுத்தான். உறங்கியும் போனான். பலவாறு முயன்றும் கண்ணனால் அவனை எழுப்பமுடியவில்லை. அவன் உடல் மிகவும் களைத் திருப்பதால் எழுப்ப முடியாது என்பதை அறிந்து அவன் உடலிலிருந்து சூட்சும உடலை எழுப்பினார். அவ்வுடலுடன் கண்ணன் திருக்கயிலை அடைந்தார். அங்குக் கண்ணனும் அர்ச்சுனனும், சிவபெருமானைப் போற்றினர். அப்பொழுது தான் கண்ணனின் திருமேனியில் வைத்துப் பூசித்து மலர்கள் யாவும் அப்படியே சிவ பெருமான் திருமேனியில் இருக்கக் கண்ட அர்ச்சுனன் அதிசயித்தான்.

சிவபெருமான் வலிய வில்லையும், அம்புகள் குறையாத அம்பராத் தூளியையும் அவனுக்கு அளித் தார். கண்ணனும், அர்ச்சுனனும் விடைபெற்றுக் கொண்டு பூவுலகம் திரும்பினர். மகாபாரதத்தில் கண்ணன் சிவ வழிபாடு செய்தது பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஸ்ரீ கிருஷ்ணர் பிருந்தாவனத்திலிருந்து வட மதுரையை அடைந்து அங்கு கம்சன் முதலானவர் களைக் கொன்றார். தன் தந்தை தாயான வாசுதேவர், தேவகி மற்றும் சுற்றத்தினரைச் சிறை மீட்டார். பிறகு எல்லா யாதவர்களையும் அழைத்து உக்ரசேனனுக்கு பட்டம் கட்டித் தானும் உடனிருந்து அந்நாட்டைப் பரிபாலித்து வந்தார்.

கண்ணனுக்கு அவனுடைய தாய் தந்தையர் உபநயனம் செய்வித்தனர். அவர் அவந்தி நகரத்திலி ருந்த சாந்தீப முனிவரிடம் சென்று சிவ தீட்சையும் பஞ்சாட்சர உபதேசமும் பெற்றுக் கொண்டார். சிவ பூசை மகிமையால் சகல சாத்திரங்களையும் எளிதில் கற்றுணர்ந்தார். பின்பு மதுராபுரிக்கு வந்து ராஜ்ய பரிபாலனத்திற்குத் துணையாக இருந்தார்.

ஜராசந்தன் தலைமையில் அசுரர்கள் வடமதுரை மீது படையெடுத்து வந்தனர். அவர்களை அடித்துத் துரத்திய போதும் மீண்டும் மீண்டும் வந்து துன்புறுத் தினர். கண்ணன் கடலுக்கு நடுவில் துவாரகாபுரியை அமைத்து அனைத்து யாதவர்களையும் அதில் குடி யேற்றினார். பிறகு ரைவதகிரியை அடைந்து உபமன்யு முனிவரைக் கண்டு வணங்கி அசுரர்களை அழிக்க ஆலோசனை கேட்டார். அம்முனிவர், "நீ, சிவபெரு மானை ஆராதனை செய்க" என்றார்.

கண்ணபிரான் ரைவதகிரியில் சிவலிங்கம் அமைத்து ஏழுமாத காலம் தீக்ஷை ஏற்று பலவித மலர்களால் சிவபெருமானை ஆராதித்தார். அவரு டைய பூசனையால் மகிழ்ந்த சிவபெருமான் காட்சிய ளித்து, "கண்ணனே, உனக்கு எதிரிகளை அழிக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்லமையைக் கொடுத்தேன். எளிதில் பகைவர்களை அழிப்பாய், உனக்கு மனைவி மக்களும் நிறைந்த செல்வமும் உண்டாகும் என்று கூறி அருள்புரிந்தார். பார்வதியும் பலவரங்களை அளித்தாள். கண்ணனும் சிவபெருமானைப் பணிந்து விடைபெற்றுக் கொண்டு துவாரகைக்கு மீண்டார்.

❁ கண்ணபிரான் வழிபட்ட சிவலிங்கம் ரைவத கிரியில் உள்ளது. இது வடுககிரி எனவும் அழைக்கப் படும். கண்ணன் வில்வ இலைகளால் போற்றியதால் பெருமானுக்கு வில்வேசுவரர் என்பது பெயராயிற்று.

❁ பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாரதப் போர் உறுதியாகிவிட்ட நிலையில் கண்ணன் பாண்டவர்களைச் சந்தித்தார். அப்போது அவர்கள் தங்களுக்குப் போரில் உதவியாக இருந்து வெற்றியை அளிக்குமாறு கண்ணனை வேண்டினர்.

அவர், "நான் வடுககிரியில் உபமன்யு முனிவரி டம் சிவதீட்சை பெற்று வில்வேசுவரரை ஆராதனை செய்து சிவனருளால் பகைவர்களை வென்றேன். இப்போதும் சிவபூசை செய்து வருகின்றேன். ஆதலின் நீங்களும் சிவபூசை செய்யுங்கள் என்றார். இதைக் கருத்திற் கொண்டே அருச்சுனன் வியாசரிடம் சிவ தீட்சை பெற்றுக் கொண்டு இந்திரநீல பர்வதத்தில் தவம் செய்தான். சிவனை ஆராதித்து அருள்பெற்றான்.

சிவமகாபுராணம் தர்மசம்ஹிதையின் முதல் வரலாறாக உபமன்யு முனிவர் கண்ணபிரானுக்கு சிவ மகிமை உரைத்ததும், கண்ணன் சிவபூசை செய்ததும் குறிக்கப்பட்டுள்ளன.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் புத்திரப் பேற்றை விரும்பி, உபமன்யு முனிவரை அடைந்து தனக்குப் புத்திரபாக்யம் உண்டாக வழிகூறுமாறு கேட்டார். உபமன்யு முனிவர் சிவனுடைய மகிமைகளை எட்டு நாட்களுக்கு உபதேசித்தார். ஒன்பதாம் நாள் கண்ணன் அவரிடம் சிவதீட்சையும், பாசுபத விரதத்தையும் எடுத்துக் கொண்டார். பதினாறு மாதங்கள் மிகக் கடுமையான விரதத்தைக் கடைப்பிடித்தார்.

அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து அனேக புதல்வர்கள் பிறக்கும் வரத்தை அளித்தார். கிருஷ்ணர் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு உபமன்யு முனிவரைப் பணிந்துப் போற்றியபின் துவாரகைக்குச் சென்றார்.

கிருஷ்ணருக்கு ஜாம்பவதிமூலம் முதல் மகன் பிறந்தான். அவனுக்குச் சாம்பன் என்று பெயர் சூட்டினர். அவன் அதிபராக்ரம சாலியாக இருந்தான். அவனைத் தொடர்ந்து கிருஷ்ணருக்கு அனேக புதல்வர்கள் பிறந்தனர்.

❁ தென்னகத்தில் திருவீழிமிழலை, திருவிடைமருதூர் முதலிய தலங்களில் கண்ணன் சிவபூசை செய்தார். திருவிடைமருதூரில் தலமரமான மருத மரத்தின் கீழ் கண்ணபிரானின் சிற்றாலயம் உள்ளது. இங்குக் கன்னுவ மகரிஷி பூசித்தபோது சிவபெருமான் அவருக்குக் கண்ணனாகக் காட்சியளித்தார் என்று கூறப்படுகின்றது.

❁ காஞ்சிபுரத்தில் கண்ணன் வழிபட்ட ஆலயம் "கண்ணேசம்" என்ற பெயரில் உள்ளது.

❁ திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் மேற்குப் பிரகாரத்தில் கண்ணன் வேணுகோபாலனாக ராதா-ருக்மணி தேவியருடன் எழுந்தருளியுள்ளார்.

## கல்கீசர்

திருமாலின் பத்தாவது அவதாரம் "கல்கி" அவதாரமாகும். இது இந்த யுகத்தின் இறுதிப்பகுதியில் ஏற்கும் திருவுருவமாகும். இன்னும் இது அவரால் எடுக்கப்படவில்லை. அதற்குரிய நேரமும் இன்னும் வரவில்லை என்றாலும், திருமால் அப்பிறவியில் தர்மத்தைக் காக்கத் தாம் மேற்கொள்ளும் செயல்களால் உண்டாகப்போகும் பாவம் பற்றாமலிருக்க காஞ்சியில் ஒரு சிவாலயம் எடுத்துச் சிவனை அர்ச்சித்தார். அது "கல்கீசம்" என்று புராணங்களால் புகழப்படுகின்றது.

❁ ஒரு சமயம் திருமால் தனது நாண் ஏற்றிய வில்லைத் தரையில் ஊன்றி அதன்மீது தலையை வைத்தவாறே உறங்கிவிட்டார். எவ்வளவு முயன்றும் தேவர்களால் அவரை எழுப்ப முடியவில்லை. அவர்கள் கரையானாக உருவெடுத்து வில்லின் நாணைத் தின்றுவிட்டனர். இதனால் நாண் அறுந்து வில் நிமிர்ந்தது. அதன் மீது ஊன்றியிருந்த திருமாலின் தலை வெட்டுண்டது. தேவர்கள் குதிரை முகம் கொண்டவராக அவரை எழுப்பினர். அவர் அயக்கிரீவர் எனப்பட்டார். ஞானமூர்த்தியாக விளங்கிய அவர் அனேகர்களுக்கு ஞான உபதேசம் செய்தார். அவ்வுருவத்துடன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றார். ஹயக்கிரீவரால் வழிபட்ட லிங்கம் இமயமலைச் சாரலில் உள்ளது என்று கூறுகின்றனர். அயக்கிரீவர் அவதாரமும் கல்கி அவதாரமேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# காஞ்சிபுரத்தில் திருமால் வழிபட்டது

மும்மூர்த்திகளில் ஒருவரான திருமால் காஞ்சி ரத்தில் சிவவழிபாடு செய்ததைப் புராணங்கள் ரிவாகக் கூறுகின்றன.

பிரம்மா காஞ்சிபுரத்தில் ஒரு பெரிய யாகம் ய்தார். அந்த யாகத்திலிருந்து அத்திவரதராக வெளிப்பட்ட திருமால், புண்ணியகோடி விமானத்தில் ற்றிருந்தார். பின்னர் அவர் ஒருலிங்கம் அமைத்து ழிபட்டார் அது 'புண்ணியகோடீசுவரர்' என்ற பெயரில் விளங்குகிறது.

பிரம்மதேவன் யாகம் செய்ய முற்பட்ட போது ங்கும் இருளாக இருந்தது. திருமால் விளக்கொளி க நின்றார் அதனால் அவருக்கு விளக்கொளிப் பெருமாள் என்பது பெயராயிற்று. அப்பெயருடன் மைத்த லிங்கம் 'தீபப்பிரகாசர்' என்று அழைக் ப்படுகின்றது.

ஒரு சமயம் வைகுண்டத்திற்குச் சென்ற பிருகு முனிவர், தன்னை முறையாகத் திருமால் வரவேற்காத ல் கோபம்கொண்டு அவரைப் பலபிறவிகள் எடுத்து ழலும்படிச் சபித்துவிட்டார். அதனால் உள்ளம் சார்ந்த திருமால் காஞ்சிபுரத்திற்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அந்தலிங்கத்திலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் அவரைப் பத்து றவிகள் எடுத்தால் போதும் என்று கூறி முனிவனின் பத்தால் உண்டான அச்சத்தை நீக்கினார். அதனால் ந்தச் சிவலிங்கம் அரிசாப பயம் தீர்த்தேசுவரர் ன்றழைக்கப்படுகிறது.

திருமால் எடுத்த பத்து பிறவிகளில் முதற்பிறவி ச்சாவதாரமாகும். ஒருமுறை பிரம்மதேவனிடமி ந்து சோமுகாசூரன் என்பவன் வேதங்களை அபக த்துக் கொண்டு கடலில் ஒளிந்து கொள்ள, திருமால் ன் அவதாரம் எடுத்துக் கடலுக்குள் சென்று சுரனைக் கொன்று அவற்றை மீட்டுவந்தார். அசுரனையும் அவனது கூட்டத்தையும் கொன்றதால் ண்டான பாவம்தீரக் காஞ்சிபுரத்தில் அவர் அமைத்து ஜித்த லிங்கமே 'மச்சேசர்' என்ற பெயரில் உள்ளது.

தேவர்களும், அசுரர்களும், அமுதம்வேண்டிப் பாற்கடல் கடையும் போது மத்தாக இருந்த மந்திரமலை பாதாளத்தில் அழுந்தியது. அதைத் தாங்கிப் பிடிக்கத்



காஞ்சிபுரத்தில் திருமால் ஆமை அவதாரத்துடன் முருக்க மரத்தின் கீழ் சிவலிங்க பூசை செய்யும் ஐதீக சிற்பம் - கச்சபேசுரம், காஞ்சீபுரம்

திருமால் பெரிய ஆமையாக உருவம் எடுத்தார் அக் கோலத்துடன் அவர் வழிபட்டது ஜோதிலிங்கமான கச்சபேசுவரர் ஆகும். பெரிய கோயிலாகத் திகழும் கச்சபேசுவரர் ஆலயத்தில் தலமரமான முருக்க மரத்தின் கீழ் திருமால் சிவபெருமானை வழிபடும் சிற்பத்தைக் கொண்ட ஐதீகக் கோயில் உள்ளது.

பாற்கடலிலிருந்து அமுதம் கிடைத்தபின் அதை அடைவதற்காகத் தேவர்களும் அசுரர்களும் கடுமை யாகப் போரிட்டுக் கொண்டனர். திருமால் மோகினி யாக அவர்களுக்கு நடுவே தோன்றினார். அவர்களி டம் அமுதத்தைத் தான் பங்கிட்டுத் தருவதாகக் கூறினார். பிறகு வஞ்சனையால் தேவர்களுக்குமட்டும் அமுதத்தைத் தந்துவிட்டு அசுரர்களை ஏமாற்றி விட்டார். அப் பாவம் தீர காஞ்சிபுரத்தில் மோகினிக் கோலத்துடன் வழிபட்ட லிங்கம் மோகினீசர். என்ற பெயரில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்யாட்சசன் என்ற அசுரனிடமிருந்து, பூமியை மீட்டுவரத் திருமால் வராக அவதாரம் கொண்டார். பிறகு அசுரர்களையும் இரணியாட்ச னையும் கொன்றார். அப்பாவம் தீரக் காஞ்சிபுரத்தில் சிவலிங்கம் அமைத்தார் அது அவர்பெயரால் வராகேசம் என்று அழைக்கப்படுகிறது.

நரசிம்மராகத் தோன்றி இரணியனைக் கொன்ற திருமால் அப்பாவம் தீர இங்கு சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அந்தலிங்கம் நாரசிம்மேசுவரம் என்று அழைக்கப்படுகின்றது. (மேலே குறித்த வராகேசத்திற்கு அருகிலேயே நாரசிம்மேசம் உள்ளது)

மாபலிச் சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டு குறளனாகிச் சென்ற திருமால் தானம் பெற்றபின் பெரிய வடிவத்தை எடுத்துப் பூமியையும் வானையும் இரண்டடியால் அளந்தார். மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்றபோது, தனது தலைமீது வைக்கும்படி மகாபலி கூறினார். அதன்படி திருமால் தனது வலது காலை அவன் தலைமீது வைத்து அவனைப் பாதாளத்திற்குள் அழுத்திவிட்டார். குள்ள வடிவில் வந்து தானம் கேட்டுப் பெரிய உருவம் கொண்டு உலகை அளந்து, மகாசிவபக்தனான மகா பலியை வஞ்சித்த பாவம்தீர அவர் அமைத்து வழி பட்ட லிங்கம் வாமனேசுவரர் என்னும் பெயரில் உலகளந்த பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ளது. இதனைப் புராணம் அபிராமேசுவரர் என்று அழைக்கின்றது.

பரசுராமராக அவதாரம் செய்த திருமால் எண் ணற்ற அரசர்களைக் கொன்றபாவம் தீர அமைத்த லிங்கம் 'பரசுராமேசுவரம்' ஆகும். இது வேகாமங் கலம் என்னுமிடத்தில் உள்ளதாகும்.

இராவண சங்காரத்தின் பொருட்டுத் திருமால் இராமனாக அவதாரம் செய்தார். அப்பிறவியில் அவர் இராவணன், கும்பகர்ணன், லவணாசுரன் முதலான அனேக அசுரர்களைக் கொன்றார். அவற்றால் உண் டான பாவம்தீர சீதை, இலக்குவன் அனுமார் முதலி யோருடன் இங்குச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார் அந்தலிங்கம் இராமநாதர் என்ற பெயரில் விளங்குகி றது. மேலும் வீரராகவனான இராமர் அமைத்த வீரராக வேசம் என்ற ஆலயமும் இங்குள்ளது.

கண்ணனுடன் பலராமராக விளங்கிய திருமால் தீர்த்த யாத்திரையாகக் காஞ்சிபுரத்திற்கு வந்தபோது அமைத்த லிங்கம் 'பலபத்ரராமேசுவரர்' என்று அழைக்கப்படுகிறது.

கிருஷ்ணாவதாரத்தில் திருமால் பூபாரம் தீர்க்க அனேக அசுரர்களைக் கொன்றார். அப்பாவம் தீரும் பொருட்டுச் இங்கே சிவலிங்கம் அமைத்து வழிபட் டார் அது 'கண்ணேசம்' என்று அழைக்கப்படுகின்றது.

திருமாலின் இறுதிஅவதாரம் கல்கி அவதார மாகும். அது இன்னும் அவரால் எடுக்கப்படவில்லை, என்றாலும் அப்பிறப்பை முன்கூட்டியே உணர்ந்து அதில் வரும் இன்னல்கள் தீர அமைத்து வழிபட்ட லிங்கம் கல்கீசர் என்ற பெயரில் உள்ளது.

சிவபெருமான் நடமாடும் போது அவருக்கு மத்தளம் வாசிக்கும் பேறுபெறத் திருமால் காஞ்சி புரத்தில் ஒரு லிங்கம் அமைத்து வழிபட்டார் அந்த லிங்கம் எழுந்தருளியுள்ள ஆலயத்திற்கு 'மத்தள மாதவேசம்' என்பது பெயராகும். கள்ளர் பிரானாகிய திருமால் ஏகம்பத்துள் வழிபட்ட லிங்கத்திற்குக் கள்ளக்கம்பர் என்பது பெயராகும்.

இப்படித் திருமால் இயல்பான தேவ வடிவத்தி லும், மச்சம், கூர்மம் முதலான அவதார கோலத்திலும் காஞ்சிபுரத்தில் அனேக சிவலிங்கங்கள் அமைத்து வழிபட்டதைப் புராணங்கள் சிறப்புடன் கூறுகின்றன.

❁ திருமால் சக்ராயுதம் வேண்டித் தவம் செய்த இடம் காஞ்சிபுரத்திற்கு வடக்கிலுள்ள திருமாற்பேறு ஆகும்.

❁ திருமால் பத்து பிறவிகளிலும் சிவபெரு மானை வழிபட தனித்தனியே சிவலிங்கம் அமைத்துப் பூசித்ததைக் காசி மாநகரிலும் காண்கிறோம்.

❁ நூற்றெட்டு திருப்பதிகளில் ஒன்றான "நிலாத் துண்டம்" காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் உள்ளது.

❁ காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயத்துள் மூன்று அடுக்குகளாக ஒரு சிற்றாலயம் உள்ளது. இதில் கீழே திருமால் நின்ற கோலத்திலும், நடுவில் அமர்ந்த கோலத்திலும், உச்சியில் படுத்த கோலத்தி லும் காட்சியளிக்கின்றார்.

❁ திருமால் இராமாவதாரத்தில் சிவலிங்கத்தை வழிபட்டார் அல்லவா. அப்போது அவருடைய தம்பி யாக இருந்த இலக்குவன், தேவியாக இருந்த சீதை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேரோட்டியான மாதலி ஆகியோரும் தனித்தனியே சிவாலயங்கள் அமைத்து வழிபட்டதை காஞ்சிபுரத்தில் காண்கிறோம். இங்குள்ள சிவலிங்கங்கள் சீதேசுவரர், மாதலீசுவரர், இலட்சுமணேசுவரர் என்று பெயர் பெறுகின்றன.

❁ இராமாவதாரக் கதாபாத்திரங்களான வாலி, ஜாம்பவான், சுக்ரீவன், இராவணன், விபீஷணன் முதலிய பலரும் காஞ்சிபுரத்தில் வழிபட்டுள்ளனர். இவை அவர்கள் பெயரால் வாலீசர், ஜாம்பவேசர், சுக்ரீவேசர், இராவணேசுவரர், விபீஷணேசுவரர் எனப் பெயர் பெறுகின்றன.

❁ திருமால் வழிபட்டுப் பேறுபெற்றதை ஒட்டி காஞ்சிபுரத்திற்கு "விஷ்ணுபுரம்" என்பதும் பெயராயிற்று.

❁ திருமால் பாற்கடலில் பொங்கிய விஷத்தால் கருநிறமான தனது மேனி வண்ணத்தை மாற்றிக் கொள்ளச் சிவவழிபாடுசெய்தார். சிவனருளால் அவர் மேனி நிறம் மாறியது. அவர் பச்சை வண்ணனாகவும், பவழ வண்ணனாகவும் காட்சியளித்தார். இதைக் குறிக்கும் வகையில் காஞ்சிபுரத்தில் பச்சை வண்ணர், பவழவண்ணர் எனும் பெயர்களில் திருமால் எழுந்தருளியுள்ளார்.

### தொண்டை நாட்டுத் திருமாலீச்சரங்கள்

காஞ்சிபுரத்தைச் சுற்றிலும் உள்ள பல ஊர்களில் திருமால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துள்ளார். இவற்றில் அமைந்துள்ள சிவலிங்கங்கள் திருமாலீசர், பெருமாளீசர் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள, வேடல், மருதம், சிறுதையூர், ஆசூர் முதலிய ஊர்களில் இதனைக் காணலாம்.

ஆரப்பாக்கம் கல்வெட்டில் அவ்வூர் கோயில் திருவீரராமேச்சுரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்நாளில் இது வாலீச்சரம் என வழங்கப்படுகிறது. இதே மாவட்டத்திலுள்ள ஓரத்தி, படூர் முதலிய ஊர்களில் பரசுராமேசுவரர் எழுந்தருளியிருப்பதைக் காண்கிறோம். மேலும், திருமால் படித்தாங்கல், பெருமாளேரி முதலிய பெயர்களிலும் ஊர்கள் உள்ளன.

செய்தி உதவி : தி.திருஞானசம்பந்தன் தமிழ்நாடு தொல்லியல் துறை

### விஷ்ணு தீர்த்தங்கள்

திருமால் நீராடித் தூய்மை பெற்று, சிவபூசை செய்ய அனேக தீர்த்தங்களை உண்டாக்கினார். அவை அவர் பெயரால் விஷ்ணுதீர்த்தம் என்றும்; அவருடைய அவதாரப் பெயர்களால் கூர்மதீர்த்தம், வராகதீர்த்தம், வாமனதீர்த்தம் எனப் பலவாறாகவும், அவருடைய ஆயுதங்களின் பெயரால் வில்லூன்றிய தீர்த்தம், சக்ரதீர்த்தம், சங்கதீர்த்தம் எனப் பலவாறாகவும் அழைக்கப்படுகின்றன.

திருக்கச்சூரில் அவர் ஆமைவடிவில் இருந்த போது அமைத்த தீர்த்தம் ஆமை மடு (கூர்ம தீர்த்தம்) என்றழைக்கப்படுகிறது. சக்ராயுதம் பெறப் பூசித்தபோது திருவீழிமிழலையில் அமைத்த தீர்த்தம் சக்ரதீர்த்தம் என்பதாகும். சக்கரம் பெற பூசித்த மற்றொரு தலமான "திருமால்பேறு" ஆலயத்தின் முன்பாகவும் சக்கர தீர்த்தம் உள்ளதைக் காண்கிறோம்.

திருவிற்குடியில் வீரட்டேசுவரர் ஆலயத்திற்கு முன்னும் பின்னுமாக சங்கதீர்த்தம், சக்ரதீர்த்தம் ஆகியன உள்ளன. பிருந்தையின் மீது மையல் கொண்ட திருமாலின் ஆயுதங்கள் இங்கு வீழ்ந்து இந்தத் திருக்குளங்களை உண்டாக்கின என்று கூறுகின்றனர்.

இராம அவதாரத்தில் அவர் வில்லை ஊன்றி உண்டாக்கிய தீர்த்தம் இராமேசுவரத்தில் வில்லூன்றித் தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. மேலும், அவராலும் அவரைச் சார்ந்தவர்களையும் உண்டாக்கிய ராமதீர்த்தம், லட்சுமணதீர்த்தம், அனுமன் தீர்த்தம் என்னும் பலதீர்த்தங்கள் தென்னகமெங்கும் உள்ளன. தீர்த்தமலை எனும் தலத்தில் இத்தகையத் தீர்த்தங்களைக் காண்கிறோம்.

❁ திருவானைக்காவில் இராமர் அமைத்த தீர்த்தம் உள்ளது. இதன் கரையில் இராமர் வழிபட்ட நீல விஷ்ணுவேசுவரர் ஆலயம் உள்ளது. இந்தக் குளத்தில் தை மாதத்தில் தெப்போத்சவம் நடைபெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமால் சிவலிங்கமானது

குற்றாலத்தில் இருந்த திருமால் வடிவை அகத்தியர் சிவலிங்கமாக மாற்றினார் என்று அவ்வூர்த்தல புராணம் கூறுகின்றது. அப்படியில்லாமல், திருமால் சிவமந்திரங்களைக்கேட்டு மனம் உருகித்தானே சிவலிங்கமாகி விட்டதைக் காஞ்சிபுரத்தில் காண்கிறோம்.

காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையத்தின் மேற்கில் அமைந்திருப்பது திருமேற்றளீசுவரர் ஆலயம் ஆகும். இது திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற பதியாகும். இந்த ஆலயத்துள் மற்றொரு ஆலயமும் உள்ளது. அதில் ஓதவுருகீசர் என்ற பெயரில் சிவலிங்கமாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவருக்கு முன்பாகத் திருமாலின் திருவடிகள் உள்ளன. காஞ்சிபுராணத்தின்படி, இங்குத் திருமால், வேதத்திலுள்ள உருத்திரமந்திரங்களை ஓதக் கேட்டு உருகித்தானே சிவலிங்க வடிவமாகிவிட்டார் என்று கூறப்படுகின்றது. மேலும் திருமால், திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பாடல்களைக் கேட்டு உருகிச் சிவலிங்க வடிவம் பெற்றார் என்றும் கூறுவர். இக்கோயிலுக்கு நேர் எதிரில் திருஞானசம்பந்தர் ஆலயம் உள்ளது.

## சிவபெருமான் திருமாலாகக் காட்சியளித்தல்

சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் திருமாலாக வெளிப்படுதல் - நன்மங்கலம், ஏகாம்பரேசுவரர் ஆலயம்

குற்றாலத்திலும், காஞ்சிபுரத்திலும் திருமால் சிவலிங்கமானதைப் புராணக் கதைகள் கூறுகின்றன. இதற்கு மாறாகச் சிவலிங்கம் திருமாலாகத் திருவுருவம் தாங்கி அருள்பாலித்ததையும் காண்கிறோம். அது நடைபெற்ற இடம் காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருபாற்கடல் ஆகும்.

சென்னை - பெங்களூர் சாலையில் காஞ்சிபுரத்திற்கு மேற்கில் உள்ள காவேரிப்பாக்கத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் திருப்பாற்கடல் என்னும் சிற்றூர் உள்ளது. இங்குச் சிவன் திருமால் வடிவம் கொண்டு நிற்குமிடம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயமாகத் திகழ்கிறது. மூலத்தானத்தில் ஆவுடையார் மீது (உருத்திர பாகத்திற்குப் பதிலாக) திருமால் நின்றுள்ளார்.

இதற்கான காரணம் வருமாறு :-

தென்னாட்டில் ஒரு வைணவ அன்பர் இருந்தார். அவர் திருமால் ஆலயம் சென்று திருமாலைத்தரிசித்த பிறகே உணவு உண்பது வழக்கம். ஒருநாள் அவர் இப்பகுதிக்கு வந்தார். அவர் தரிசிக்கத் திருமால் ஆலயம் இங்கே இல்லை. எனவே, அவர் உணவு உட்கொள்ளாது இருந்தார். நான்கு நாட்களாயின.

திருமாலைத் தரிசிக்க முடியாததால் நான்கு நாளும் அவர் உணவு உண்ணவில்லை. அவருடைய பக்தியை மெச்சிய சிவபெருமான் அவருக்கு அருள் புரிய எண்ணினார். வயோதிக வடிவம் தாங்கி வைணவ அன்பரிடம் சென்று, ஐயா, தங்களுக்கு உணவு நேரம் ஆகிவிட்டது அருகில் திருமாலின் ஆலயம் உள்ளது. அதைத் தரிசிக்கலாம் வாருங்கள் என்றார். அவர் ஐயா அது சிவாலயம் அங்கு நான் வரமாட்டேன் என்றார்.

அப்போது பெரியவர், அது திருமால் ஆலயமே என்னுடன் வாருங்கள் என்று வற்புறுத்தினார் அவருடைய வற்புறுத்தால் வைணவ அன்பர் அந்தக் கோயிலுக்குள் வந்தார். அங்கு ஆவுடையாரின் மீது திருமால் நிற்பதைக் கண்டு அதிசயித்தார். அப்போது உடன் வந்தவர் மறைந்து விட்டார். அந்த அன்பர் சிவனும், திருமாலும் ஒருவரே என்பதை உணர்ந்து கொண்டார்.

அன்று முதல் இங்குச் சிவபெருமான் திருமாலின் வடிவிலேயே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ஆலயத்தின் ஸ்ரீ விமானத்தில் தென்பகுதியில் தட்சணாமூர்த்தியின் வடிவம் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

❁ மேலே குறித்த கதையை விளக்கும் சிற்பம் ஒன்று சென்னை நன்மங்கலம் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் சுவரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சிவலிங்கத்தின் உருத்திர பாகத்திற்குமேல் திருமால் வடிவம் உள்ளது. அதனை ஓர் அன்பர் வணங்கும் கோலத்தில் உள்ளார்.

❁ காஞ்சீபுரத்தில் ஓரிரு ஆலயத்தூண்களிலும் புடைப்புச்சிற்பமாக மேலே குறித்த காட்சியைக் காண்கிறோம்.

❁ சிவலிங்க வடிவில் திருமால் வழிபடப்படுவதைக் காரமடையில் காண்கிறோம். கோவையை அடுத்துள்ள தலம் காரமடையாகும். இங்குள்ள திருமால் ஆலயத்தில் சிவலிங்கமே உள்ளது. இவரை ரங்கநாதர் என்று அழைத்து வழிபடுகின்றனர். சிவலிங்க வடிவில் ரங்கநாதர் இருப்பது இத்தலத்தில் மட்டுமேயாகும்.

❁ ஸ்ரீரங்கநாதர் - காரமடை - கோவைமாட்டம்

## ரிஷப குஞ்சரத்தில் சிவன் விஷ்ணு பவனி

தமிழகக் கலைஞர்களின் அதியுன்னத படைப்புக்களில் ஒன்று ரிஷப குஞ்சரமாகும். இது காளையின் உடலும், யானையின் உடலும் இணைய ஒரு பக்கம் பார்த்தால் காளையாகவும், மறுபக்கம் பார்த்தால் யானையாகவும் தோன்றும் படி அமைந்த கலப்புச் சிற்பமாகும். இதிலுள்ள காளைமீது சிவன்பார்வதிதேவியுடனும், யானை மீது திருமால் லட்சுமியுடனும் அமர்ந்துள்ளனர். சிவன் திருவோட்டை நீட்ட மகாலட்சுமி அதில் அன்னமிடுவது போலவும் இக்காட்சி அமைகிறது. பார்வதியின் மடியில் விநாயகர் அமர்ந்துள்ளனர்.

பல தலங்களில் இது தூண்சிற்பமாகவும், கோபுரம், விமானங்கள் முதலியவற்றில் சுதைச் சிற்பமாகவும் இடம் பெற்றுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது சென்னை கபாலீசுவரர் ஆலய ராஜ கோபுரத்தில் அமைந்துள்ள சுதைச்சிற்பமாகும். இது மிகவும் கலையழகுமிக்கதாகும். இதைப் போன்ற பெரிய வண்ண ஓவியம் திருவண்ணா மலை அண்ணாமலையார் ஆலயத்தில் மாட்டப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## மோகினீசுவரர்



மோகினி - வழுவூர்

திருமாலைப் பராசக்தியின் புருஷாகார வடிவமென்றே சைவநூல்கள் கூறுகின்றன. திருமாலும் அதிவீரபராக்கிரம புருஷனாக விளங்கினாலும் வேண்டிய போது பெண் வடிவம் கொண்டு அருள்பாலிக்கின்றார். திருமால் மோகினியாக அவதாரம் புரிந்து லீலைகள் நடத்தியதையும் அவ்வுருவிலேயே. அவர் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதையும் பலதலங்களில் காண்கிறோம். மோகினிவடிவில் அவர் வழிபட்ட லிங்கங்கள் மோகினீசர் என்று பெயர் பெறுகின்றன.

திருமால் பலநேரங்களில் மோகினி அவதாரம் கொண்டாலும் அவற்றுள் இரண்டு நிகழ்ச்சிகளே அதிகம் வழக்கில் கூறப்பட்டுவருகின்றன. அவற்றில் முதலாவதான நிகழ்ச்சி பாற்கடல் கடைந்தபோது வந்த அமிர்தத்தைப் பெற அசுரர்களும், தேவர்களும் போட்டியிட, அவர்களிடையே மோகினியாகத் தோன்றியதாகும். அந்த வேளையில் அசுரர்களை வஞ்சித்து தேவர்களுக்கு மட்டுமே அமுதத்தை அளித்ததால் அவருக்குப் பாவம் சூழ்ந்தது. அது விலகும் பொருட்டு மோகினி வடிவத்துடன் காசியில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். இது அவர் பெயரால், மோகினீசுவரர் என்று அழைக்கப் படுகின்றது.

இரண்டாவது நிகழ்வில் சிவபெருமான் தாருகாவனத்து முனிவர்களின் தருக்கை அழிக்கவும், அவர்களின் மனைவிகளின் கர்வத்தை அடக்கவும், பிட்சாடனனாக கோலம் கொண்டு சென்றார். முனிவர்களின் மனவடக்கத்தைச் சோதிக்கத் திருமால் அவருடன் மோகினியாகச் சென்றார். அவரைக் கண்ட முனிவர்கள் தங்களின் மனவடக்கத்தைத் துறந்துவிட்டு அவர் பின்னே காமம் மீதூரத் தொடர்ந்து ஓடினர். அவர்களுக்கு, சிவபெருமான் அவர்களுடைய அவல நிலையை விளக்கினார். அவர்களின் தவத்தை அழிக்கச் சென்றதால் மோகினிக்கு பாவம் உண்டாயிற்று. அதுநீங்க அவள் பூசித்த லிங்கம் மோகினீசுவரர் என்று பெயர் பெற்றது.

அனேக தலங்களில் (சிவபெருமானின்) பிட்சாடன வடிவத்துடன் மோகினி வடிவமும் இடம் பெற்றுள்ளது. இவற்றுள் சிறப்புடையதாக வழுவூரிலுள்ள மோகினியின் திருவுருவம் விளங்குகின்றது. சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் விழாவில் பிட்சாடனர் பவனி வரும்போது அவருடன் மோகினியும் பவனி வருகின்றாள்.

காசிநகரில் திருமால் மோகினி வடிவுடன் பூசித்த லிங்கம் மோகினீசுவரர் என்ற பெயரில் உள்ளது. காஞ்சி புரத்தில் காமாட்சியம்மன் கோயிலுக்கு வடக்கில் அமைந்துள்ள கண்ணேசம் என்ற தலத்திற்குப் பக்கத்தில் மோகினீசுவரம் என்ற சிவாலயம் உள்ளது. இது மோகினி வடிவுடன் திருமால் வழிபட்டதலமாகும்.

### வைகுண்டவாயில்

திருமாலின் இருப்பிடம் ஸ்ரீ வைகுண்டமாகும். அனைத்து திருமாலடியார்களும் இறுதியில் வைகுண்டத்திற்குச் செல்லவே விரும்புவர். இதை உணர்த்தும் வகையில் திருமால் ஆலயங்களிலும் ஒவ்வொரு வைகுண்ட ஏகாதசி அன்றும் வைகுண்ட வாசல் திறப்பு என்னும் ஐதீக விழா நடத்தப்பெறுகிறது. வடக்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கியவாறு எப்போதும் மூடியிருக்கும் இந்தக் கதவுகள் மார்கழி மாதம் சுக்ல பட்ச ஏகாதசி அன்று மட்டும் திறக்கப்பட்டு அதன் வழியாகத் திருமால் வெளிவந்து அருள்பாலிக்கின்றனர். அன்பர்கள் அப்போது இந்த வாயிலைக்குள் நுழைந்து வெளி வருகின்றனர். இதனைச் சுவர்க்க வாசல் திறப்பு எனவும் கூறுவர்.

திருவண்ணாமலையில் சுவாமி சந்நிதியையும், அம்மன் சந்நிதியையும் இணைக்கும் ஒரு வாயில் உள்ளது. இது சுவாமி சந்நிதிக்கு வடக்கில் உள்ளதாகும். இதனை வைகுண்ட வாயில் என அழைக்கின்றனர்.

திருமால் ஆலயங்களில் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே திறக்கும் இந்த வைகுண்டவாயில் திருவண்ணா மலையில் எப்போதும் திறந்தே இருக்கின்றது. (தேவியே திருமாலாக விளங்குகின்றாள் அதை நோக்கித் திருமால் உறையும் வைகுண்டத்தின் பெயர் அம்பிகை சந்நிதிக்கு வழங்குகிறது என்று கூறுகின்றனர்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவாலயங்களில் திருமால்

சைவமும் வைணவமும் இந்நாளில் இரண்டு பெரிய பிரிவுகளாக இருந்தபோதிலும் சைவர்கள் திருமாலைச் சிவாலயத்துள் வைத்துச் சிறப்புடன் வழிபடுகின்றனர். குறைந்தபட்சம் சிவாலயத்துள் கருவறையின் மேற்குக் கோட்டத்திலாவது திருமாலை எழுந்தருள வைத்து வழிபடுகின்றனர்.

ஆயிரக்கணக்கானச் சிவாலயங்களில் கருவறை மேற்குக் கோட்டத்தில் திருமாலைக் காண்கிறோம். இங்குத் திருமால் சங்கு சக்கரம் அபய முத்திரை, ஊரு முத்திரைகளைத் தாங்கி நின்றவாறு காட்சியளிக் கின்றார்.

சிலதலங்களில் கருவறைமேற்குக் கோட்டத்தில் அண்ணாமலையாரை (லிங்கோற்பவரை) அமைத்து அவருக்கு நேர் எதிரில் திருமாலை அமைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக திருவண்ணாமலை அருணாசலேசு வரர் ஆலயத்தில் மேற்குப் பிராகாரத்தில் வேணு கோபாலர் ராதா ருக்மணிதேவியரோடு எழுந்தருளியி ருப்பதைக் காணலாம்.

சில தலங்களில் சிவாலயத்திற்குள்ளேயே திரு மாலின் ஆலயம் உரிய பரிவாரங்களுடன் அமைந் திருப்பதைக்காண்கிறோம். இவற்றில் சில ஆழ்வாராதி களால் மங்களாசானம் செய்யப்பெற்றவையாகும்.

கருவறைக் கோட்டங்களிலும் தனிச்சந்நிதிக ளிலும் அமைப்பதைத் தவிர ஸ்ரீவிமானங்களிலும் கோபுரங்களிலும் திருமாலின் திருவுருவம் இடம் பெற்றுள்ளதை காண்கிறோம். இவற்றின் மேற்கு நோக் கிய பகுதிகளில் திருமால் தசாவதாரங்கள், கண்ணனின் பலலீலைகளான காளிங்க நர்த்தனம், கோபிகை வஸ்திர அபகரணம், மலையைக் குடையாகப் பிடித்து ஆநிரை காத்தல், முதலியனவும் ராமாயணக் காட்சி களும் இடம் பெறுகின்றன.

திருமாலின் திருவுருங்கள் மட்டுமின்றி அவரது பரிவாரங்களான கருடன், அனுமன், ஜாம்பவான், சுக்ரீவன் முதலான பலருடைய திருவுருவங்கள் அமைத்துள்ளதையும் காண்கிறோம்.

❁ சோழமன்னர்கள் அமைத்த அனேக சிவா லயங்களின் ஸ்ரீ விமானம் மற்றும் கோபுரங்களில் மேற்குக் கோட்டத்தில் நரசிம்மர் அமைந்திருக்கிறார்.

❁ சிவபெருமானின் மேற்கு நோக்கிய முகம் சத்யோஜாதம் எனப்படும். இது வீரமும், நளினமும் கலந்த முகமாகும். இந்த முகத்திலிருந்தே திருமால் ஆதியில் தோன்றினார். இதையொட்டிய கருவறை யின் மேற்குக் கோட்டத்தில் திருமால் எழுந்தருளி வைக்கப்பட்டு வணங்கப்படுகின்றார். இதையொட்டி திருமால் மேலை ஆழ்வார், மேலைப் பெருமாள் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றார்.

## சிவாலயங்களில் திருமால்

புகழ்பெற்ற பல சிவாலயங்களுக்குள் திருமால் ஆலயம் தனிச்சிறப்புடனும் உரிய பரிவாரங்களு டனும் அமைந்திருக்கக் காண்கிறோம். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம். இவற்றில் சிலவற்றை வைணவ ஆகம முறைப்படி வைணவ அர்ச்சகர் களே பூசிக்கின்றனர்.

| திருத்தலம் | திருமாலின் பெயர் |
|---|---|
| திருவோத்தூர் | - ஆதிகேசவர் |
| கச்சிஏகம்பம் | - நிலாத்துண்டப் பெருமாள் |
| திருச்செங்கோடு | - ஆதிகேசவப் பெருமாள் |
| சிதம்பரம் | - தில்லை கோவிந்தராசர் |
| சிக்கல் | - கோலவாமனர் (கயாமாதவர்) |
| திருநணா (பவானி) | - ஆதிகேசவர் |
| திருநாவலூர் | - வரதராசர் |
| திருநெல்வேலி | - நெல்லை கோவிந்தராசர் |
| பழனம் | - வேணுகோபாலர் |
| பாண்டிக்கொடுமுடி | - வீரநாராயணப் பெருமாள் |
| திருப்பத்தூர் | - யோகநாராயணர் |
| திருவக்கரை | - வரதராசர் |
| சுசீந்தரம் | - அமரபுஜங்கப் பெருமாள் |
| இராமேசுவரம் | - பள்ளிகொண்ட பெருமாள் |
| கண்டாச்சிபுரம் | - இராமர் |
| மயிலைவெள்ளீச்சரம் | - உலகளந்த பெருமாள் |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமால் ஆலயங்களில் சிவபெருமான்



திருமாலுக்குரிய சிறப்புமிக்கத் திருத்தலங்கள் 108 ஆகும். இவை திவ்ய தேசங்கள் என்று அழைக்கப் படுகின்றன. சைவர்கள் அனைத்துச் சிவாலயங்களிலும் திருமாலை எழுந்தருள வைத்து வழிபடுவது போல் வைணவர்கள் சிவபெருமா னைத் திருமால் ஆலயங்களில் வைத்து வழிபடுவ தில்லை என்றாலும் 108 திவ்ய திருப்பதிகள் சிலவற்றில் சிவபெருமான் தனிச் சிறப்புடன் வீற்றிருப்பதைக் காண்கிறோம்.

சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று உத்தமர் கோயிலாகும். இது திவ்யப் பிரபந்தத்துள் கரம்பனூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இது திருச்சிக்கு அருகில் உள்ளது. இங்குள்ள திருமால் உத்தமர் என்று அழைக் கப்படுகின்றார். இதனுள் திருமால் சந்நிதிக்கு வலது புறம் பிச்சாண்டார் என்ற சிவாலயமும், இடது புறம் தசரதேசுவரர் என்ற சிவாலயமும் உள்ளன. சிவாலயப் பரிவார தேவர்கள் அனைவரும் இங்கு எழுந்தருளி யுள்ளனர். பிச்சாண்டேசுவரர் சௌந்தர நாயகிக்குக் கொடியேற்றிப் பெருந்திருவிழாவும் கொண்டாடப்படு கின்றது. இங்கு பிரம்மா - சரஸ்வதிக்குத் தனிச் சந்நிதி கள் இருப்பதால் இதனை மும்மூர்த்தித் தலம் என்றும் குறிக்கின்றனர்.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான திருக்கோட்டி யூர் வைணவ வரலாற்றில் தனியிடம் பெற்ற திருத் தலம். இங்குள்ள திருமாலின் திருப்பெயர் உரகமெல்ல ணையான் என்பதாகும். மூன்றடுக்காக அமைந்த இந்தத் திருக்கோயிலின் முதல் அடுக்கிலுள்ள திருமா மணி மண்டபத்துள் சிவபெருமான் சரபேசுவரராகக் காட்சியளிக்கின்றார். இவர் சுயம்பு மூர்த்தியாவார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான அழகர் மலை யில் சுந்தராஜப் பெருமான் என்னும் அழகர் கோயில் உள்ளது. இதில் ஈசானபாகத்தில் சிவபெருமான் பைரவ மூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். இந்தத் திருப்பதியில் விபூதி பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான குறுங்குடியில் திருமால் நிற்றல் இருத்தல், கிடத்தல் ஆகிய கோலங் களில் சேவை சாதிக்கின்றார். இங்குள்ள கிடந்த நம்பி, நின்ற நம்பி சந்நிதிகளுக்கு இடையில் சிவ பெருமான் "பக்கம் நின்ற பிரான்" என்ற திருப்பெயரு டன் தனிச் சந்நிதியில் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தரு ளியுள்ளார். இவரை மகேந்திர நாதர் என்றும் அழைக் கின்றனர். இவருடைய சந்நிதியில் பைரவரும் எழுந்த ருளியுள்ளார். (கல்வெட்டுக்கள் மயானத்துப் பெருமாள் என்று அழைக்கின்றன.) இங்குள்ள சிவசந்நிதியில் நடராசர், சிவகாமி சோமாஸ்கந்தர், விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய சுப்பிரமணியர் ஆகியோர் உலாத் திருமேனிகளாக எழுந்தருளியுள்ளனர்.

❁ திருமாலைப் பள்ளிகொண்டவராக அமைக் கப்படும்போது அவருடைய திருமுடிக்கருகில் பிரம்ம தேவனும் திருவடிக்கருகில் உருத்திர மூர்த்தியும் அமைக்கப்படுகின்றனர். காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள், உத்திரமேரூர் சுந்தராஜப் பெருமாள் முத லிய திருப்பதிகளில் இந்தக் காட்சியைக் காணலாம்.

## சிவாலயத்தில் அமைந்துள்ள திவ்ய திருப்பதிகள்

திருமாலுக்குரிய 108 திவ்ய திருப்பதிகள் சில திருப்பதிகள் புகழ்பெற்ற சிவாலயங்களுக்குள் இருப் பதைக் காண்கிறோம்.

❁ திருமங்கை ஆழ்வாரால் "நிலாத்துண்டம்" என்று மொழியப்பெற்ற திருப்பதி காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத்துள் இரண்டாம் பிரகாரத்தின் வட கிழக்கு முனையில் மேற்கு நோக்கியவாறு அமைந் துள்ளது. இந்தத் திருப்பதியில் இரண்டு திருமால் திருமேனிகள் அமைந்துள்ளன.

❁ சைவர்களால் கோயில் என்று கொண்டாடப் படும் சிதம்பரம், நடராசர் ஆலயத்துள் கோவிந்தராசப் பெருமாள் பள்ளி கொண்டிருப்பதைக் காண்கிறோம். இது நடு நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகும். இங்குத் திருமால் குலசேகர ஆழ்வாருக்கு இராமபிரானாகக் காட்சியளித்தார். அதனால் அவர் இங்கு அருளிச் செய்த பாசுரத்துள் இராமாயணக் கதை முழுவதும் வரும்படிப் பாடியுள்ளார். இதையொட்டி இப்பாசுரம் குலசேகர ராமாயணம் என்று அழைக்கப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மகேஸ்வர மூர்த்தங்களில் திருமால்

ஓர் உருவமும் ஒரு நாமமும் இல்லாத சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்புரிய எடுத்துவந்த கோலங்கள் அனேகமாகும். இவற்றை மனதில் நிறுத்தி வழிபட ஏதுவாக ஞானிகள் உருவங்களாக அமைத்துள்ளனர். இவை மகேசுவர மூர்த்தங்கள் என்று போற்றப்படுகின்றன. இவை பலவற்றில் சிவபெருமானுடன் திருமாலும் சேர்த்தே அமைக்கப்பட்டுள்ளார்.

சிவபெருமான் அடிமுடிதேடி அறியமுடியாத சோதியாக நின்றபோது, திருமால் பன்றி உருவத்துடனும், பிரமன் அன்ன உருவத்துடனும் முறையே அடியையும், முடியையும் தேடினர். இதைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட அண்ணாமலையார் (லிங்கோத்பவர்) திருவுருவங்களில் ஒரு லிங்கத்தின் மையத்தில் சிவபெருமானும் அதன் கீழ்ப்பகுதியில் அடியைத் தேடிச் செல்லும் வராக அவதாரம் கொண்ட திருமாலையும், மேல்பகுதியில் முடியைத் தேடிச்செல்லும் அன்னப் பறவை வடிவம் கொண்ட பிரம்மனையும் அமைக்கின்றனர். இது தவிர லிங்கத்தின் இரண்டு பக்கங்களிலும் கூப்பிய கரங்களுடன் திருமாலும் பிரம்மனும் அமைக்கப்படுகின்றனர்.

சிவபெருமான் மீனாட்சியைத் திருமணம் செய்து கொள்ளும் கல்யாணசுந்தரர் கோலத்தில், மீனாட்சியைத் தாரைவார்த்துத் தரும் அண்ணனாகத் திருமால் உள்ளார். இதையொட்டி அண்ணன் பெருமாள் என்று அவர் அழைக்கப்படுகின்றார். (இதனை மதுரை மீனாட்சி கல்யாண சிற்பத்தில் காணலாம்.)

சிவபெருமானின், "சக்ரதானர்" என்னும் கோலத்தில் திருமால் அவரிடமிருந்து சக்கரத்தைப் பெறும் கோலத்திலுள்ளார். (இத் திருவுருவம் திருவீழிமிழலையில் உள்ளது.)

பெருமானின் நடனமாடும் நடராசர் கோலத்தில் திருமால் மத்தளம் வாசிப்பவராக உள்ளார். (இதனைக் கீழ்வேளூர் நடராச சபையில் காணலாம்.)

சிவபெருமானின், திரிபுராந்தகர் கோலத்தில் அவர் நின்றிருக்கும் தேர்த்தட்டை இடபவடிவம் கொண்ட திருமால் தாங்குகின்றார். இக்காட்சியைத் திருவதிகை வீரட்டத்தில் காணலாம். மேலும், சிவபெருமான் திரிபுராதிகள் மீது தொடுத்த அம்பில் அவர் வீற்றிருக்கின்றார். இதையொட்டி அம்புப் பெருமாள் (சரநாராயணர்) என்று அழைக்கப்படுகின்றார். (மதுரையில் தூண் சிற்பமாக அமைந்துள்ள திரிபுராந்தரின் கரத்திலுள்ள அம்பில் திருமால் நின்றிருப்பதைக் காண்கிறோம்.)

சிவபெருமான் உமாதேவியை ஒருபாகத்தில் கொண்டு அர்த்தநாரீசுவரராக விளங்குவதைப் போலவே, திருமாலை ஒரு பாகமாகக் கொண்டு அரியர்த்தராக விளங்குகின்றார். இதனைத் தேவாரம் மாலொருபாகம் மகிழ்ந்த மணாளர் என்று போற்றுகின்றது.

சிவபெருமான் பிட்சாடனனாக பவனி வருகையில் திருமால் அவருடன் மோகினியாகப் பவனி வருகின்றார்.

சிவபெருமான் திரிபாத திருமூர்த்தியாகவும் ஏகபாத திரிமூர்த்தியாகவும் கோலம் கொள்ளும்போது திருமால் அவருடைய இடப்பாகத்தில் இடுப்புக்கு மேலிருந்து வெளிப்படுபவராக உள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# இடபாரூடர்-கருடாரூடர் ஒன்றாகக் காட்சிதருதல்

சிவபெருமான் பல ஊர்திகளில் பவனிவந்தாலும் அவருக்கே உரியதாக உள்ளது. வெள்விடை என்கிற காளைவாகனமாகும். அவர் பக்தர்களுக்குக் காட்சி தரும்போதெல்லாம் உமாதேவியுடன் வெள்ளை நிறக் காளைமீது தோன்றி அருள்பாலித்ததாகவே புராணங்கள் கூறுகின்றன. அதையொட்டி அன்பர்கள் சிவாலயத் திருவிழாக்களில் வெள்ளை நிற அல்லது வெள்ளியால் செய்த காளை வாகனத்தின் மீது சிவ பெருமானை எழுந்தருள வைத்து உலாவரச் செய்து கண்டுகளிக்கின்றனர். பெருந்திருவிழாவில் இந்த ரிஷபவாகன சேவை எனப்படும் காட்சி தனியிடம் பெறுகின்றது.

இதனை யொத்ததாக, திருமால் ஆலயத்தில் கொண்டாடப்படும் விழாக்களில் திருமால் கருடவாகனத்தில் பவனி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிப்பதைக் காண்கிறோம். இதனைக் கருடசேவை என்று சிறப்பாகப் போற்றுகின்றனர்.

பெரும்பாலும் திருமால் ஆலயத்திலும் சிவாலயத்திலும் ஒருசேர விழாக்கள் கொண்டாடப்படுப்படுவதில்லை. அபூர்வமாகச் சில தலங்களில் சிவ, விஷ்ணு ஆலயங்களில் ஒரே நேரத்தில் விழாக்கள் கொண்டாடப்படுவதுடன். சிவனை இடப வாகனத்திலும், திருமாலை கருடவ்வாகனத்திலும் எழுந்தருள வைத்து அலங்கரித்து ஒன்றாக நிறுத்தி தீபாராதனைச் செய்கின்றனர். இது சைவ வைணவ ஒற்றுமைக்கு சிறந்த பாலமாக அமைகின்றது.

சென்னையை அடுத்து பொன்னேரியில் இந்த அற்புதவிழா நடைபெறுகிறது. பொன்னேரிக்கு மேற்கிலுள்ள ஆயர்பாடி என்ற இடத்தில் கரிகிருஷ்ணப் பெருமாள் என்கிற திருமால் ஆலயம் அமைந்துள்ளது. கிழக்கில் கும்மங்கலம் (கும்பமுனி மங்கலம்) என்னுமிடத்தில் அகத்தீசுவரர் ஆலயம் உள்ளது.

சித்ரா பௌர்ணமியில் ஆயர்பாடிப் பெருமாள் கருடவாகனத்திலும் கும்பமுனிமங்கலம் அகத்தீசுவரர் இடபவாகனத்திலும் ஊரைவலம் வந்து ஊரின் மையத்திலுள்ள கடைவீதியில் எதிரெதிராக நிற்க இருவருக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறுகிறது.

இவ்வூர்த் தலபுராணத்தின்படி அகத்திய முனிவரும். பரத்து வாசரும் ஒன்றாகத் தவம் செய்தனர் அவர்களுக்குக் காட்சியளிப்பதற்காகச் சிவன் உமாதேவியுடன் இடபவாகனத்திலும் திருமால் கருடவாகனத்திலும் இங்கு தோன்றினர். இரண்டு முனிவர்களும் ஒரே நேரத்தில் சிவனையும் திருமாலையும் தரிசித்து மகிழ்ந்தனர். அதனை நினைவு கூறும் வகையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது என்று கூறப்படுகிறது. சந்திப்பு உற்சவம் என்ற இந்த விழாவில் ஏராளமான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

❁ சுசீந்திரம் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு பிரதோஷ விழாவிலும் சிறியதாக அமைந்த இடப வாகனத்தில் சிவனும், கருட வாகனத்தில் திருமாலும் இணைந்து ஆலயப்பிராகாரத்தில் பவனி வருகின்றனர். இப்படி இரண்டு மூர்த்திகளும் பிரதோஷ வேளையில் இணைந்து பவனி வருவதை வேறெந்த தவத்திலும் காணமுடியவில்லை.

❁ குமரி மாவட்டத்திலுள்ள திருவிதாங்கோடு என்னும் தலத்தில் பெரிய சிவாலயம் உள்ளது. இதனுள் தெற்கிடம் வடக்கிடம் என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. வடக்கிடத்தில் சிவபெருமானும் தெற்கிடத்தில் திருமாலும் கோயில் கொண்டுள்ளார். இங்கு மார்கழி மாதத்தில் இரண்டு சந்நிதிகளும் கொடியேற்றப்பட்டு விழா நடைபெறுகிறது. விழாவில் அரியும், அரனும் இரண்டுயானைகளில் ஒன்றாக பிராகாரத்தில் வலம் வருவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

## ஒரே விமானத்தின்கீழ் சிவனும் - திருமாலும்

❁ சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரம் பல்லவர்களின் கலைச் செல்வங்களைக் கொண்டதாகும். இங்கு கடற்கரையின் ஓரத்தில் பெரியதும் சிறியதுமான இரண்டு ஆலயங்கள் உள்ளன. சிறிய கோயிலின் கருவறை நடுவில் சுவர் வைத்து இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கிலும், மேற்கிலும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு நோக்கி வாயில் அமைந்த பகுதியில் நடுவில் சிவலிங்கமும் பின்னணிச் சுவரில் சோமஸ்கந்தர் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கிய பகுதியில் பாறையில் பள்ளிகொண்ட பெருமாள் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி ஒரே விமானத்தின் கீழ் சிவனையும் திருமாலையும் ஒருசேர இப்படி வேறெங்கும் காண முடியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அரங்கன் செய்யும் சிவபூசை



பார்கடலில் பள்ளிகொண்டவாறே பரந்தாமன் சிவபூஜை செய்தல்.

திருமால் பாற்கடலில் ஆதி சேடன் மீது பள்ளி கொண்டு அருள் பாலிக்கின்றார். மேலும் அனந்தன், கார்க்கோடகன், பத்மன் முதலிய நாகர்களையும் படுக்கையாகக் கொண்டுள்ளார்.

அனந்தன் மீது அவர் சயனித்துக் கொண்டுள்ள திருக்கோலம் அனந்தசயனர் என்றும் அனந்த பத்மநாபர் என்றும் அழைக்கப்படுகிறது. இதில் அவர் தனது தலைமாட்டில் சிவலிங்கத்தை வைத்து வலது கரத்தால் பூசித்துக் கொண்டிருக்கின்றார். இந்தக் கோலத்தைத் திருவனந்தபுரம் அனந்தபத்ம நாபசுவாமி ஆலயத்தில் காண்கிறோம்.

சென்னை அடையாற்றில் அமைந்துள்ள அனந்த பத்மநாபசுவாமி ஆலயத்திலும் இக்காட்சியைக் காணலாம்.

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் பெரிய ரங்கநாதர் உள்ளார். இவரை நெல்லை கோவிந்தராஜர் என்றழைக்கின்றார். இவருடைய தலை மாட்டிலும் ஒரு சிவலிங்கம் உள்ளது. இதனை பூசித்தவாறு அவர் சயனித்துள்ளார்.

❁ திருமால் பாற்கடலில் அறிதுயிலில் இருக்கும் போது சோமாஸ்கந்தமூர்த்தியை மார்பில் வைத்து வழிபட்டார்.பின்னர் அதை தேவர்களின் நன்மைக்காக இந்திரனுக்கு அளித்தார். இந்திரன், வலன் என்ற அசுரனை அழிக்கத் தனக்குத் துணை செய்த முசுகுந்த சோழனுக்கு அந்த மூர்த்தியைப் பரிசாக அளித்தான். அந்த மன்னன் அதைத் திருவாரூரில் நிலைப்படுத்தினான்.

❁ காஞ்சீபுரத்தில் அனந்த பத்மநாபனாக விளங்கிய திருமால் வழிபட்ட தலம் உள்ளது. இதனை "அனந்தபத்மநாபேசம்" என்று புராணம் கூறுகிறது.

❁ அரங்கன் சிவபூசை மகிமையால் சிவசாருபம் அடைந்துள்ளார் என்று புராணங்கள் கூறுகின்றன. கோவை மாவட்டம் காரமடையில் அரங்கநாதர் ஆலயத்துள் அரங்கநாதர் சிவலிங்க வடிவிலேயே காட்சியளிக்கின்றார்.

## சிவபெருமானின் நாராயணகோலம்

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவின் நான்காம் நாள் இரவில் சிவபெருமான் அனந்தன் என்ற பாம்பில் பவனி வருகின்றார். அப்போது பெருமானைப் படுத்திருக்கும் கோலத்தில் அலங்கரிக்கின்றனர். இது சிவபெருமானே திருமாலாக உருவம் தாங்கி வந்து உலகில் காத்தல் தொழிலைச் செய்கிறார் என்பதை உணர்த்துகிறதென்பர்.

திருமால் யோகம் புரியும்போது அவரால் சிந்திக்கப்படும் சிவபெருமான் அலைகடலின் நடுவில் வீற்றிருக்கின்றார். சிவபெருமான் திருமாலின் உருவில் இருந்து அருள்புரிவதைத் திருஞானசம்பந்தர் சிவபுரப்பதிகத்தில் "..... உலகுகள் நிலைபெறுவகை நினைவொடும், அலைகடல் நடுஅரி துயில் அமர்அரி உருஇயல் பரன் உறைபதி" என்று அருளிச் செய்துள்ளார். இதன்பொருள் உலகுகள் நிலைபெறுக என்ற நினைவோடு அலைகடலுக்கு நடுவே அமர்ந்துள்ள அரியாகிய திருமாலின் உருவத்துடன் விளங்கும் சிவபெருமான் உறையும்பதி சிவபுரம் என்பதாகும். சில தலங்களில் பெருந்திருவிழாவின்போது அம்பிகையைச் சயனகோலத்தில் அலங்கரித்து நாகவாகனத்தில் பவனி வரச் செய்வதையும் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சக்கரப்பேறு

இந்தியாவின் தொன்மைக்கதைகளில் ஒன்று திருமால் சிவபெருமானை வழிபட்டுச் சக்கரம் பெற்ற தாகும். இது அனேக புராணங்களிலும், பின் வந்த தோத்திர நூல்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் குறிப்பிடத்தக்கவை சிவமகாபுராணம், முதலியன வாகும்.

திருமால் சிவபெருமானை ஆராதனை செய்து சக்கரத்தைப் பலமுறை பெற்றுள்ளார். ஆதியில் சிவ பெருமான் மும்மூர்த்திகளைப் படைத்தபோதே அவர் களுக்குரிய ஆயுதங்களையும் அளித்தார். இவ்வகை யில் தன்னுடைய உக்கிரமான சக்தியையும் அக்னியை யும் இணைத்துச் சுதர்சனம் என்ற சக்கரத்தைத் திருமா லுக்கு அளித்தார். அப்போது பராசக்தி தன்சார்பாகத் (கண்ணின் சாயலாக), தாமரை மலரையும், (கழுத்தின் சாயலாகச்) சங்கையும் அளித்தாள். திருமால் சிவன ளித்த சக்கரத்தைச் சிவனடியார்களான அசுரர்கள் மீது செலுத்திய போது அவர்களின் பக்தியினாலும் சிவப்பிரசாதத்தை உண்ட மகிமையாலும் அதன் கூர் மழுங்கி அழிக்கும் சக்தி அழிந்தது.

வலிமைமிகுந்த சக்கரத்தைத் தரவல்லவர் சிவ பெருமானே என்பதால் ஒவ்வொரு முறை சக்கரத்தின் சக்தி அழிந்தபோதும் திருமால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து அதனைப் பெற்றார். திருமுறை களில் வக்கரன், முதலிய அனேக அசுரர்களைக் கொல்லச் சக்ராயுதம் பெறத் திருமால் சிவபூசை செய்தது குறிக்கப்பட்டுள்ளது.

சிவமகாபுராணத்திலுள்ள இக்கதைக் குறிப்பை முதலில் காணலாம். ஒரு சமயம் (தைத்தியர்களான) அசுரர்களால் துன்புற்ற தேவர்கள் திருமாலிடம் சென்று தங்களைக் காக்குமாறு வேண்டினர். திருமால் அவர்களை நோக்கி அஞ்சாதீர்கள், நான் சிவபெரு மானை ஆராதித்து அவர் அருளால் சக்கராயுதத்தைப் பெற்று அசுரர்களை அழிப்பேன் அதனால் உங்கள் தொல்லை தீரும் என்றார். அவர்களும் மகிழ்ந்து அவருக்கு விடைகொடுத்தனர்.

திருமால் கயிலைமலைச் சாரலில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்துப் பர்ணகசாலை அமைத்தார். இங்குச் சிவபெருமானைக் குறித்து பெரிய வேள்விகளைச் செய்தார். நீண்ட நாட்களாக வேள்வி பூசை முதலிய வற்றைச் செய்தும் சிவபெருமான் அவருக்குக் காட்சி தரவில்லை. திருமால் தவம் புரிந்தும் சிவார்ச்சனை புரிந்தும் சிவதரிசனம் பெற எண்ணினார்.

தினமும் மானச தடாகத்திலிருந்து ஆயிரம் தாமரைப் பூக்களைப் பறித்துவந்து ஆயிரம் பெயர் களைச் சொல்லி அர்ச்சித்தார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குத் காட்சிதர எண்ணினார். ஒருநாள் அவர் பூசைசெய்யும்போது ஆயிரம் பூக்க ளில் ஒன்றை மறைத்து விட்டார். திருமால் ஆயிரம் நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்து வருகையில் பூ ஒன்று குறையக் கண்டார். அவ்வேளையில் புதிய மலரைத் தேடமுடியாது என்பதால் தனது மலர் போன் றிருக்கும் கண்ணைப் பெயர்த்து அர்ச்சனை செய்ய முயன்றார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவர் பூசித்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவருக்குக் காட்சியளித்தார். திருமாலே கண்ணைப் பெயர்க்காதே உனக்கு வேண்டிய வரங்களைத் தருவேன் என்றார். பலவரங்களைத் தந்ததுடன் அவருக்கு அவர் விரும் பியபடி ஒப்பற்ற சக்ராயுதத்தையும் அளித்தார். திரு மால் மகிழ்ந்து விடைபெற்றுக்கொண்டு அசுரர்கள் மீது போர்தொடுத்து அவர்களை அழித்தார்.

சக்கராயுதத்தைப் பெறத்திருமால் வழிபட்ட சகஸ்ர நாமம் சிவமகாபுராணத்தில் உள்ளது. இதனைக் கூறித் துதிப்போர் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்றுத் திருமாலைப்போல் வாழ்வார்கள் என்று கூறப்படுகிறது.

மகா புராணங்கள் திருமால் கயிலைமலைச் சார லில் தவம் செய்தார் என்று கூறுகின்றன. ஆனால் தென்னிந்தியாவில் வழங்கும் தலபுராணங்கள் திரு வீழிமிழலை, திருமாற்பேறு முதலிய தலங்களில் திருமால் சிவபூசை செய்து சக்ராயுதம் பெற்றார் என்று கூறுகின்றன. அத்தலங்களைப் பற்றிய சிறுகுறிப்புகளைத் தொடர்ந்து காணலாம்.

## திருவீழிமிழலை

கும்பகோணம் - பூந்தோட்டம் சாலையில் உள்ள தலம் திருவீழிமிழலையாகும். இங்கு திருமால் வழி பட்டதால் இவ்வூர் விஷ்ணுபுரம் என்று அழைக்கப் படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசுரர்கள் தொல்லை அதிகமாக இருந்த சமயம் தேவர்கள் மிகுந்த துன்பத்தை அடைந்தனர். அவர்கள் திருமாலைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். திருமால், எமது சக்ராயுதம் ததீசி முனிவர் மேல் விடுத்ததால் கூர் மழுங்கி விட்டது. அதைக் காட்டிலும் வலிய சக்கரத்தைப் பெற வேண்டும் என்று கூறினார். தேவர்கள் திருமாலிடம் அண்ணலே முன்பு ஜலந்தரனை அழிக்கச் சிவபெருமான் உண்டாக்கிய சக்கரம் அவரிடம் உள்ளது. அதை அவரிடமிருந்து வேண்டிப் பெறுக என்றனர்.

சக்கரத்தியாகேசர் - திருவீழிமிழலை

திருமால் காவிரிக் கரைக்கு வந்தார். வீழிவனத்தில் ஜோதிலிங்கமாக விளங்கும் சிவலிங்கமூர்த்தியைக் கண்டு மகிழ்ந்தார். விண்ணகத்திலிருந்து அழகிய விமானத்தை எடுத்து வந்து சிவலிங்க மூர்த்திக்கு அமைத்தார். அங்கு பக்தியுடன் பூசை செய்தார்.

ஒரு பெரிய குளத்தை அகழ்ந்து தாமரைக் கொடிகளை வளர்த்தார். தினந்தோறும் ஓராயிரம் தாமரை மலர்களைப் பறித்து நியமத்துடன் சிவபூசை செய்தார். ஒரு நாள் ஒரு பூ குறையக் கண்டு தனது கண்ணைப் பெயர்த்தெடுத்து, சிவனை ஆராதித்தார். இதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவர் முன் தோன்றி கண்ணை அளித்ததுடன் தன்னிடமிருந்த வலிய சக்ராயுதத்தையும் அளித்தார்.

... ... ...

திருமால் திருவீழிமிழலையில் சிவபெருமானை வழிபட்டுச் சக்ராயுதம் பெற்றதைத் திருமுறைகளில் மூவர்முதலிகளும் பாடியுள்ளனர்.

திருஞானசம்பந்தர்,

**தருப்பமிகு சலந்தரன்தன் உடல்தடிந்த சக்கரத்தை வேண்டியீண்டு**
**விருப்பமொடு மால்வழிபாடு செய்ய இழி விமானம் சேர் மிழலை**

(மிகுந்த கர்வம் கொண்டு சலரந்தரனுடைய உடலைக் கூறுசெய்த சக்கரத்தை தனக்குத் தர வேண்டுமென்று சிவபெருமானை நோக்கி விருப்பமொடு திருமால் வழிபாடு செய்ய வானுலகத்திலிருந்து விமானத்தைக் கொண்டு வந்து சேர்த்த வீழிமிழலை) என்று குறித்துள்ளார்.

திருவீழிமிழலையில் உள்ள உலாத்திருமேனிகளில் ஒருவராக "சக்ரதானர்" என்ற மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இதில் பெருமான் திருமாலுக்குச் சக்கரம் அளிக்கும் கோலத்தில் உள்ளார். மேற்கரங்களில் மான், மழு உள்ளன. இடது பாகத்தில் உமாதேவி அமர்ந்துள்ளாள். இவரைச் சக்கரத்தியாகர் என்று அழைக்கின்றனர். இவருடைய வலது பாதத்தில் சக்ர ரேகை உள்ளது. அந்த திருவடியின் மேற்புறத்தில் திருமால் இடந்து இட்ட திருக்கண் உள்ளது. வலது பாகத்தில் திருமால் மேற்கரங்களில் சங்கும், கத்திரி முத்திரையும் தாங்கி முன் கரங்களை நீட்டி சக்கரத்தைப் பெற்றுக் கொள்ளும் கோலத்தில் உள்ளார்.

பெருந்திருவிழாவின் இரண்டாம் நாளில் திருமால் பூசித்துச் சக்கரம்பெறும் ஐதீகவிழா கொண்டாடப்படுகிறது. முதல் நாள் மாலையில் திருமால் ஊருக்கு மேற்கில் உள்ள மானச தடாகத்தின் கரையில் மலர்களைச் சேகரித்தல் இரவுக் கோவிலுக்கு வந்து சேருதல், மறுநாள் மாலையில் 1008 பூக்களால் அர்ச்சித்தல், முன்னிரவில் சிவபெருமான் காட்சி தந்து சக்கரம் அளித்தல் தொடர்ந்து திருமால் காண சக்கர நடனம் ஆடி அருள்புரிதல் முதலியன ஐதீக விழாவாக நடத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமால் கண்ணை இடந்து பூசித்தல் - காஞ்சிபுரம் கயிலாயநாதர் கோயில்

## திருமால்பேறு (திருமால்பூர்)

காஞ்சிபுரம் - அரக்கோணம் சாலையில் உள்ள திருத்தலம் திருமால் பேறு ஆகும். காஞ்சிபுரத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூர் இந்நாளில் திருமால்பூர் என்று அழைக்கப்படுகின்றது. இந்தத் தலத்தில் திருமால் சக்கரம் வேண்டி பூசித்தார் என்று தல புராணமும், காஞ்சிப்புராணமும் கூறுகின்றன.

இங்குள்ள சிவாலயத்தின் வாயிலைக் கடந்ததும் நந்தி பலிபீடத்திற்கும் முன்பாகக் கருவறையை நோக்கிக் கும்பிட்டவாறு நிற்கும் திருமாலைக் காண்கி றோம். இவர் மேற்கரங் களில் சங்கு சக்கரம் ஏந்தியுள்ளார். இந்த அமைப்பு எங்கும் இல்லாததாகும். கருவறை யில் திருமால் பூசித்த "மால்வணங்கீசர்" சுயம்பு வடிவில் உள்ளார். இவருக்குப் புனுகு சட்டம் மட்டுமே சார்த்தப் படுகின்றது.

சிவபெருமானை பூசிக்கும் நிலையில் திருமால் உலாத் திருமேனியாகவும் உள்ளார். மேற்கரங்களில் சங்கு தாமரை தாங்கியுள்ள இவர் முன் கரங்களில் தாமரை மலரையும் இடந்த கண்ணையும் ஏந்தி சிவனைப் பூசிக்கின்றார்.

இவருக்குப் பெருமான் காட்சி தந்து வலிய சக்கராயுதத்தை யும் அழகிய கண்களையும் அளித்ததுடன் தனக்கு இணையான பூசனைகளையும் அளித்தார். இதையொட்டி வைகுண்ட ஏகாதசி யன்று திருமால் கருட வாகனத்தில் வலம் வந்து அன்பர்களுக்கு அருள்புரிகின்றார்.

திருமுறைகளில் இங்குத் திருமால் வழிபட்டுப் பேறு பெற்றது சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர்,

**மாலினார் வழிபாடு செய் மாற்பேறு**

என்றும், திருநாவுக்கரசர்,

**"பெரும்ஆற்றின் படைவேண்டி நற்பூம்புனல்**
**வரும் ஆற்றின் மலர்கொண்டு வழிபடும்**
**கரும் மாலுக்கு இன்னருள் செய்தவன்"**

என்றும்,

**துணிவண்ணச் சுடராழி கொள்வான் என எண்ணி**
**அணி வண்ணத்து அலர் கொண்டு அடி அர்ச்சித்த**
**மணி வண்ணற்கு அருள் செய்தவன் மாற்பேறு**

என்றும் குறிக்கின்றார். (படை-சக்ராயுதம் ; சுடராழி-சக்ராயுதம் ; மணிவண்ணன் - திருமால்)

## திருப்பைஞ்ஞீலி

திருச்சி மாவட்டத்தில் மணலூர்ப் பேட்டையி லிருந்து ஏழு கி.மீ. தொலைவிலுள்ள தலம் திருப் பைஞ்ஞீலியாகும். இங்கு முத்துமலை என்ற பாறை யில் (செதுக்கி அமைக்கப்பட்ட) சோமாஸ்கந்த மூர்த்தம் உள்ளது. இவருக்குச் சக்கரத்தியாகர் என்பது பெயராகும். தலபுராணத்தில் இவர் தன்னை நோக்கித் தவம் இருந்த திருமாலுக்குச் சக்கரம் அளித்ததால் இப்பெயர் பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது.

இன்னும் திருவதிகை முதலான பல தலங்களில் திருமால் சிவனை ஆராதித்து சக்கராயுதம் பெற்றது புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

**திருமாமகள் கேள்வனாகிய திருமாலின் அருளினாலும்**
**அங்கயற்கண்ணி அம்மையுடனாய சோமசுந்தரப் பெருமானின் அருளினாலும்**
**அன்பர்கள் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று இனிது வாழ்க!**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

மூவராய் நின்ற முதல்வா போற்றி!



# மூவராய் நின்ற முதல்வன்

ஆதிமூலப் பரம்பொருளான சிவபெருமான் பராசக்தியோடு இணைந்து ஐம்பெரும் பூதங்களையும், அதன் கூட்டுறவால் அண்டசராசரங்களையும் படைத் தான். பின்னர், அதில் கணக்கற்ற உயிர்த் தொகுதிகளை உண்டாக்கினான்.

பின்னர், தான் படைத்த உலகம் ஓயாது தொழிற்பட, படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் ஆகிய ஐந்தொழில்களைத் தோற்றுவித் தான். அந்தத் தொழில்களை ஓய்வின்றி நடத்த முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐந்து மூர்த்திகளைப் படைத்தான். அவர்களுக்கெனத் தேவியர்களை அளித்துத் தனித் தனி உலகத்தையும் படைத்தளித்தான். அதில் அவர் கள் வீற்றிருந்து ஓயாது உலகத்தினை நடத்திக் கொண்டி ருக்கின்றனர். இவர்களை வணங்குவதால் பக்தர்கள் சகல செல்வங்களையும் அடைகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. இவர்களில் பின்னே குறிக் கப்பட்ட உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், ஆகிய மூவரும் சிவபெருமானாகவே கருதி வணங்கப்படு கின்றனர். இதனால், உருத்திரை மட்டுமே வழிபடும் வழக்கமும் உண்டாகிவிட்டது. எனவே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரையே நாம் மும்மூர்த் திகள் என்று வழிபடுகின்றோம்.

மேலும் உருத்திரர் தனித்த சிவாம்சம் உடையவர் ஆதலாலும், அவரை நோக்கிச் செய்யப்படும் பூசை களும், தவங்களும் சிவபருமானையே அடைகின்றன என்பதாலும், சதாகாலமும் அவர் சிவபெருமானின் இதயத்துள் ஒடுங்கி நிற்பதாலும் அவருக்கெனத் தனியே உருவத்தை அமைப்பதில்லை. அவருக்குப் பதில் சிவபெருமானின் திருவுருவத்தையே பிரம்மா, விஷ்ணு ஆகியோருடன் வைத்து மும்மூர்த்திகளாக வழிபடுகிறோம்.

நடைமுறையில் உருத்திரன், திருமால், பிரம்மா ஆகிய மூவரையே மும்மூர்த்திகளாக வழிபட்டு வருகி றோம் என்றாலும், சிவபெருமானே அந்த மூவரையும் படைத்த முதல்வனாகத் திகழ்கின்றார். ஆதலின் அவர் மூவர்க்கும் முதல்வனாக இருப்பதுடன் அந்த மும்மூர்த் திகளை இயக்குபவனாகவும் இருக்கிறார். அதனால் அவரே மும்மூர்த்திகளாகவும் விளங்குகிறார் என்று சமயநூல்கள் கூறுகின்றன. இதனைத் தமிழ்மறையான தேவாரம் பல இடங்களில் குறித்து மகிழ்கிறது.

இந்தியா முழுவதிலும் மும்மூர்த்தி வழிபாடு சிறப்புடன் நடைபெறுகிறது. சிவமஞ்சரியின் இந்த முப்பதாவது மலர் சிவபெருமான் மும்மூர்த்திகளாக நின்று அருள்பாலிப்பது, மும்மூர்த்திகள் சிவனை வழிபட்டுப் பேறுபெறுவது, சிவபராக்கிரமத்துள் மும் மூர்த்திகள் பெற்றுள்ள இடங்கள் ஆகியவற்றை விளக் குவதாக மலர்கிறது.

மூவர்க்கும் முதல்வனாகி நிற்கும் சிவபெருமா னும், ஆதிபராசக்தியும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டு மென்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பிரார்த்திக்கின்றோம். – சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமுறைகளில் மூவராய் நிற்கும் முதல்வர்

சிவபெருமான் ஆதிபரசிவ நிலையிலிருந்து படிப்படியாக உருவ நிலையைத் தோற்றுவித்துக் கொண்டே வந்து உலகினைப் படைத்தார். அது நடைபெற மும்மூர்த்திகளைத் தோற்றுவித்தார். அவர்கள் கருவிகளேயன்றி, காரணர்களில்லை. சிவ பெருமான் அவர்களிடத்தில் வீற்றிருந்து அவர்களைத் தன் இச்சைப்படியே செயல்படுத்துகின்றார்.

மேலும், சிவபெருமானே மும்மூர்த்திகளாக விளங்குவதைத் தமிழ்மறை பல இடங்களில் சிறப்பு டன் குறிக்கின்றன. அவற்றுள் திருஞானசம்பந்தர் கூறும் சிலவற்றை இங்கே காணலாம்.

**'இருவரோடு ஒருவனாகி நின்றனை'**
(திருஎழுகூற்றிருக்கை)

(திருமால், பிரமன் என்னும் இருவரோடு உருத்திரன் என்ற ஒருவனாகி நின்றனை)

**'படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை'**
(திருஎழுகூற்றிருக்கை)

(படைத்து, காத்து, (அளித்து) அழிக்கும், மூன்று மூர்த்திகளாக விளங்குகின்றாய்)

**'பேணு மூன்றுருவாகிப் பேருலகம்**
**படைத்தளிக்கும் பெருமான்'**
(திருக்கானப்பேர்)

(ஒப்பற்ற பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூன்று உருவமாகி இந்தப் பெரிய உலகத்தைப் படைத்து காப்பவனான பெருமான்)

**விரைமலரோன், செங்கண்மால்,**
**ஈசன் என்னும் மூவராய முதல்வன்'**
(திருக்கானப்பேர்)

வாசனை வீசுகின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவன், சிவந்த கண்களையுடைய திருமால், ஈசான திக்கில் வாழும் உருத்திரன் என்னும் மூன்றுரு வங்களைத் தாங்கி நிற்கின்றார் சிவபெருமான். மேலும்,

**'மூவர் உருத்தனதாம் மூலமுதற்கருவை'**
(திருக்கானப்பேர்)

(மூன்று தேவர்களின் உருவிலும் உலகின் மூல முதற்கருவாகவும் விளங்குபவன் சிவபெருமான்)

**'மூவரென இருவரென முக்கண்ணுடைமூர்த்தி'**
(திருக்கானப்பேர்)

(பிரம்மா, உருத்திரன், திருமால் என்ற மூவராகவும், சிவம், சக்தி என்ற இருவராகவும் விளங்கும் மூன்று கண்களை உடைய சிவபெருமான்)

**'வளர்சடையினானை வானவர் தங்கோனை,**
**புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி உமிழ்ந்தானை**
**பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை'**
(திருக்கானாட்டு முள்ளூர்)

(வளர்மதியம் சேர்ந்த சடை கொண்ட வானவர்க ளின் தலைவனாகவும், கொக்குவடிவம் கொண்ட அசுர னைக் கொன்றதுடன் உலகினை உண்டு உமிழ்ந்து திருமா லாகவும், பொன் போன்ற நிறத்துடன் முப்புரிநூல் அணிந்த நான்முகனாகவும் சிவபெருமான் விளங்குகின்றார்.

## மும்மூர்த்தி லிங்கமான திரியம்பகம்

திரியம்பகேசுவரர்

பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களில் பத்தாவதாக இருப்பது திரியம்பகம் ஆகும். இது மகாராஷ்டிரத்தில் நாசிக் நகருக்குத் தென்கிழக் கில் 18 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு பிரம்மா மலை வடி வில் இருந்து பூசை செய்கின்றார். இதனால் இம்மலை பிரம்மகிரி என்றழைக் கப்படுகின்றது. இங்கு கருவறையில் அமைந்துள்ள ஆவுடையாரின் நடுவில் கையளவு பள்ளம் உள்ளது. இதனுள் சின்னஞ்சிறு மூன்று பாண லிங்கங்கள் உள்ளன.

இந்த லிங்கங்களைச் சுற்றிலும் நீர் ஊறுகின்றது. இங்கு சிவபெருமா னுக்குள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் லிங்க வடிவில் வீற்றிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இம்மலையிலிருந்தே கோதாவரி, அகல்யா, வைதர்ணா முதலிய பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. இம்மலையில் அத்திரி முனிவரும் சதி அனசூயாவும் வாழ்ந்து வருவதாக நம்புகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மும்மூர்த்திகள் தோற்றம்

ஆதியில் சிவபெருமான் தனது வலபாகத்திலிருந்து பிரம்ம தேவனையும், இடப்பாகத்திலிருந்து விஷ்ணுவையும், இருதய மத்தியிலிருந்து உருத்திரனையும் தோற்றுவித்தார். அவர்களுக்கு முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களை அருளி உலகினைப் படைத்து நடத்தும்படி ஆணையிட்டார். சிவபெருமானின் தேவியாகிய பராசக்தி தனது அம்சத்திலிருந்து சரஸ்வதி, லட்சுமி, உமை ஆகியோரைப்படைத்து அவர்களுக்குத் தேவியராக அளித்தாள்.

பெருமான், பிரம்ம தேவனுக்கு ஞானவாளையும், திருமாலுக்குச் சக்ராயுதத்தையும், உருத்திரருக்குத் திரிசூலத்தையும் அளித்தான். பராசக்தி அவர்களுக்குத் தமது கரத்தால், அட்சமாலை, சங்கு, கேடயம், அம்பராத் தூணி ஆகியவற்றை அளித்தாள்.

இவர்களுடைய உலகம், சத்யலோகம், வைகுண்டம், ஸ்ரீபவனம் என்று அழைக்கப்படும். ஆதியில் இவர்கள் சிவபெருமானால் படைக்கப்பட்டுள்ளனர் என்றாலும், இடைப்பட்ட பிரளய காலங்களில் இவர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் படைப்பதும் உண்டு. இப்போது நடைபெறும் யுக ஆரம்பத்தில் சிவபெருமான் பிரகிருதி என்ற பெண்ணையும் புருஷன் என்ற ஆணையும் படைத்தார். அந்தப் புருஷனே திருமாலாக வடிவம் கொண்டார். பிருகிருதி பூதேவியாகவும், லட்சுமியாகவும் ஆனாள். இவர்களிடமிருந்து பிரம்மா தோன்றினார். பிரம்மாவின் நெற்றியிலிருந்து உருத்திரர்கள் தோன்றினர். இவர்களே இப்போது உலகை நடத்தி வருகின்றனர்.

இனிவரும் யுகங்களில் இம்முறை மாறலாம். என்றாலும் இம்மூவரைச் சிவகுமாரர்கள் என்றும், இவர்கள் பூஜிக்கத்தக்கவர் என்றும் முனிவர்கள் போதித்துள்ளனர். அவர்கள் இயற்றியுள்ள பலநூறு புராணங்களில் இவர்களின் முறை மாறியுள்ளதையும் காண்கிறோம்.

## முப்பெரும் தேவியரின் இருதய மண்டலத்தில் விளங்கும் மும்மூர்த்திகள்

சிவபூஜா துரந்தரர்கள் தமது இருதய மண்டலத்தில் நெடிய வடிவில் சிவபெருமானையும் அவருக்கு இருபுறமும் பிரம்மா, விஷ்ணுக்களையும் தியானித்துப் போற்றுகின்றனர். தேவர்களும் இந்த முறையிலேயே தியானம் செய்கின்றனர்.

லட்சுமி அஷ்டோத்திரம், சரஸ்வதி அஷ்டோத்திரம், கௌரி அஷ்டோத்திரம், துர்க்கா அஷ்டோத்திரம் முதலிய தோத்திரங்களில் பிரம்மா, விஷ்ணு, சிவாத்மிகாயை நம: என்ற தொடர் வருகின்றது. இதன் பொருள் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் தன் ஆத்மாவில் கொண்டிருப்பவளுக்கு நமஸ்காரம் என்பதாகும். இதன் மூலம் முப்பெரும் தேவியரும் தம் இதயத்துள் சிவபெருமானை மும்மூர்த்திகளாகத் தியானிப்பது உணரப்படுகிறது. சிலர் மேற்கண்ட நாமாவளிக்கு மும்மூர்த்திகளின் ஆத்மாவாக இருப்பவள் என்றும் பொருள் கூறுவர்.

## மும்மூர்த்திகள் அருளிய கீதைகள்

கீதை என்பது வாழ்வியலையும், இறைவனின் அளப்பரிய ஆற்றலையும் விளக்கும் நூலாகும். உருத்திரன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் கீதையை அருளிச் செய்துள்ளனர். (இவற்றின் விளக்கத்தை சிவமஞ்சரி பக்கம் 432ல் காண்க) இந்த மூன்று நூல்களும் கீதைத்திரயம் என்றழைக்கப்படுகின்றன. கோயிலூர் ஆதீனத்தில் இவை மூன்றும் வேதாந்தப் பாடநூல்களாகப் போதிக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மும்மூர்த்திகள் உலகம்

சிவபெருமான் மும்மூர்த்திகளைப் படைத்த பின், அவர்கள் வீற்றிருந்து தமது தொழிலைச் செய்ய அவர்களுக்கென தனியே உலகங்களைப் படைத்த ளித்தான். அவையே பிரம்மலோகம், விஷ்ணுலோகம், உருத்திரலோகம் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றைப் புராணங்கள் சிறப்புடன் விவரிக்கின்றன.

நாம் வழக்கமாக, பிரம்மன் வாழ்கின்ற சத்தியலோ கத்தையும், விஷ்ணு வாழும் வைகுண்டத்தையும், உருத்திரனின் உருத்திர லோகத்தையும் அறிவோம். இவை மட்டுமின்றி மேருமலையின் உச்சியில் விளங் கும் உருத்திர, பிரம்ம, விஷ்ணு லோகங்களும் உள்ளன. அவற்றை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

உருத்திரலோகத்தில் சிவபெருமானைப் போன்று சாருபம் பெற்ற உருத்திரகணத்தினர் வசித்து வருகின் றனர். இவர்களுக்குச் சந்திரசூடமும், விருஷப வாகன மும் உண்டு. இங்குச் சூரிய சந்திரர்களோ வாயுவோ இல்லை என்றாலும் இது பிரகாசத்துடன் விளங்குகின் றது. சிவனருள் பெற்றவர்களே இங்குச் செல்ல முடியும்.

இந்த உலகத்திற்கும் மேலாக ஐந்து உருத்திர பவனங்கள் உள்ளன. இவை முறையே மாயேசர் என்ற உருத்திரர் தம் கணங்களுடன் வசிக்கும் 'மாயேச பவனம்' என்ற உருத்திரலோகம். அதற்கும் மேலே ஹரன் என்னும் உருத்திரர்கள் வாழும் சர்வநாமபுரம்; அதற்கும் மேலே வேதவேள்விகளைச் செய்து உருத் திரபதம் பெற்றவர்கள் வாழும் "அக்னி ஸ்தானம்"; விபூதியையும் உருத்திராக்கத்தையும் தரித்துப் பாசுபத விரதத்தை மேற்கொண்டு உருத்திரபதம் பெற்றவர்கள் வாழும் "உக்னம்"; மகேசுவர உருத்திரர்கள் வாழும் "மஹேஸ்வரஸ்தானம்" என்பனவாகும்.

உருத்திரத்தானத்திற்குச் சற்றுத் தாழ்வான உயரத் தில் அமைந்த மேருவின் கொடுமுடியில் அமைந் துள்ள சிகரத்தில் விஷ்ணு நகரம் உள்ளது. இது சந்தி ரனைப்போன்று வெள்ளையாகப் பிரகாசிக்கும் வெள்ளியாலான மதிலால் சூழப்பட்டுள்ளது. தயிர், பால் போன்ற வெண்ணிறமான தடாகங்களும், ஆயிரங் கால் மண்டபங்களையும் உடையதாக உள்ளது. இங்குள்ள "விஷ்ணுபதம்" என்னும் விஷ்ணுவால யத்தில் மஹா விஷ்ணு ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகியோருடன் தம்முடைய பக்தர்கள் சூழ வீற்றிருக் கிறார். இதன் கிழக்கு வாயிலை யக்ஞகரனும் மேற்கு வாயிலை, ஹரிபுத்ரனும் வடக்கு, தெற்கு வாயில்களை விஷ்ணு கணங்களும் காவல் காக்கின்றனர். "மதுமதி" என்னும் ஆறு ஓடுகிறது. இங்கு விஷ்ணுவை ஆராதிப் பவர்கள் மகிழ்வுடன் வசிக்கின்றனர்.

இதற்கும் சற்றுக்குறைந்த உயரமுடைய ஒரு சிகரத்தில் பிரம்மலோகம் உள்ளது. அதற்கு "விசோகம்" (சோகமற்றது) என்பது பெயராகும். இதனுள் பிரம்ம தேவன் வாணி, சரஸ்வதி, காயத்ரி ஆகிய தேவியருடன் வேதங்களை ஓதிக் கொண்டு, கீதங்களைப் பாடிக் கொண்டு சுகமாக வீற்றிருக்கிறார். இதனைப் பிரம்ம யோனி, துவாரகாதிபவன் முதலியோர் காவல் காக்கின் றனர். இங்கு "அமிர்தா" என்னும் நதி ஓடுகிறது. வேதங்களை இடைவிடாது அத்தியயனம் செய்தவர் கள், வேதவிதிப்படி யாகாதிகளைச் செய்தவர்கள் ஞானத்தைப் பெற்றவர்கள் இதனை அடைகிறார்கள். இவையாவற்றிற்கும் மேலாக உள்ளது. ஸ்திரஸ்தானம் ஆகும். இங்கு சிவபெருமான் உமை, கங்கை ஆகிய தேவியருடன் எண்விதமான சிவகணங்கள் சூழ வீற்றிருக்கின்றார்.

மேற்சொன்ன உலகங்களின் அமைப்பை இன்னும் பலமடங்கு விரிவாகச் சிவமகாபுராணத்திலும் மற்றைய புராணங்களிலும் காணலாம்.

## மும்மூர்த்தி வாசம்

சில தலங்களில் மும்மூர்த்திகளும் நீங்காது வசிக்கின்றனர் என்பது நம்பிக்கையாகும். அதனால் அவற்றுக்கு மும்மூர்த்தி வாசம் என்பது பெயராயிற்று. காசி, கண்டியூர், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி, சீர்காழி, மூவலூர் முதலிய அனேகதலங்களில் மும்மூர்த்திகள் நீங்காது உறைவதால் அவை மும்மூர்த்தி வாசம் என்று குறிக்கப்படுகின்றன.

கும்பகோணத்தை அடுத்துள்ள நல்லூருக்கும் மும்மூர்த்திவாசம் என்பது பெயர். இங்குக் கருவறையில் உமாமகேசுவரர் எழுந்தருளியிருக்க அவரை வணங்கியவாறு பிரமனும் திருமாலும் நிற்கின்றனர் பெரிய சுதைச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ள இத்திருமேனிகள் வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மூவர்க்கும் முதல்வன்

சிவபெருமானின் விருப்பப்படியேதான் இந்த உலகம் செயல்படுகிறது. சிவபெருமானே மும்மூர்த்திகள் மூலமாக அதனை வழிநடத்துகின்றார். இதனை விளக்கும் வகையில் தேவாரம், சிவபராக்கிரமம் முதலிய நூல்களில் அமைந்துள்ள கருத்துக்களை இக்கட்டுரை விளக்குகிறது.

சிவபெருமான் ஊழிக்காலத்தில் எல்லாவற்றை யும் தம்முள் ஒடுக்கிக் கொண்டு, தனித்து நிற்கின்றார். ஊழி முடிந்தபிறகு உமாதேவியைத் தன்னிடமிருந்து வெளிப்படுத்தி இருவருமாகச் சேர்ந்து உலகத்தைப் படைத்து மகிழ்கின்றனர்.

பிறகு, அந்த உலகம் ஓயாது தொழிற்பட ; படைத் தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றைச்செய்யும் மூன்று கடவுளரைப் படைத்தனர். அவர்கள் மூலமாகத் தமது இச்சைபடியே இந்த உலகத்தை உண்டாக்கி ஓயாது காத்து, அழித்து மகிழ்கின்றனர்.

சிவபெருமான் படைப்புத் தொழிலை விரும்பிய வுடன் அது பிரம்மனாக வடிவம் பெற்று உலகத்தைப் படைக்கிறது. ஆதலின் மூலமாக இருந்து படைப்பவன் சிவபெருமானே. அவனை நினைந்து போற்றியே பிரம்மதேவன் தனது படைப்புத் தொழிலைச் செய்கின்றான்.

பிரம்மன் தனக்குள் ஓயாது சிந்தித்து நிற்கும் சிவபெருமான் நான்கு முகங்களுடன், தாமரையில் அமர்ந்து தாமரையை ஏந்தியவாறு விளங்குகின்றார். (இவரையே ஆதிப்பிரமன் என்று கூறுகின்றனர். இந்த வடிவத்தை அடியொற்றியே சிவபெருமானின் வாகீசர் வடிவம் அமைகிறது. கண்டியூரிலும் அதனைச் சுற்றி யுள்ள தலங்களிலும் இந்த வாகீசர் வடிவத்தைக் காண்கிறோம். இதனை இந்நாளில் பிரமன் என்று அழைக்கின்றனர்.

இதைப்போன்றே காக்கும் கடவுளான திருமால், சிவபெருமானின் இச்சைப்படியே தனது காக்கும் தொழிலைச் செய்கின்றார். அத்தொழில் இடையூறின்றி நடைபெற அவர் சிவனைத் தியானித்துயோக நித்திரை புரிந்தவாறு உள்ளார். அவருடையயோக நித்திரையில் சிவபெருமான் அலைகடலில் பாம்பணையின் மீது பள்ளி கொண்டவராகக் காட்சியளிக்கின்றார். இந்த உருவைச் சிந்தித்தே திருமால் திருமகளை அடைந்தார். அதனாலேயே இந்த உருவினைச் சிந்திப்பவர்கள் திருமகளோடு வீற்றிருப்பார்கள் என்று திருஞான சம்பந்தர் பாடுகின்றார்.

வீலாசமன்வித மூர்த்தம்

இதுபோன்றே அழித்தல் தொழிலைச் சிவனு டைய உருத்திர வடிவத்தை நினைந்தவாறே உருத்திரர் செய்கின்றார்.

பிரம்மா, திருமால், உருத்திரர் ஆகிய மூவரும் தத்தம் தொழிலைச் செய்வதற்குக் காரணம் சிவபெரு மானின் இச்சையேயாகும். அவர் தமது இச்சையை மாற்றிவிடின், இவர்கள் தம்தொழிலைச் செய்யாது அறிவற்று ஜடம் போல் ஆகிவிடுவர். இவர்கள் மூவ ரின் உள்ளத்திலேயிருந்து சிவபெருமானே எல்லாவற் றையும் நடத்துகின்றான். இதை உணர்த்துகின்ற சிவனுடைய வீரபராக்கிரம வடிவம் 'கௌரி லீலா சமன்வித மூர்த்தம்' என்று அழைக்கப்படுகிறது.

ஒருசமயம் கௌரி தேவியான உமையம்மை உலகின் இயக்கத்திற்கு யார் மூலகாரணம்? நான் சக்திய ளித்தலின் அன்றோ அவை தோன்றி வளர்ந்து ஒடுங்கு கின்றன என்றாள். சிவபெருமான் அவளிடம், 'சக்தி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன் உள்ளிட்ட யாவரிடத்தும் நாமே நின்று இயக்குகின் றோம் என்றார். அவ்வாறு நாம் இயக்குவதை நிறுத்தி னால் யாவும் சடமாகும்' என்றார். அதைக் கேட்ட கௌரி, 'அது எப்படி?' என்றாள். சிவபெருமான் ஒரு கணம் தனது செயலை உயிர்களிடத்திலிருந்து நீக்கி னார். பிரமன், திருமால் உள்ளிட்ட தேவர்களும், அகில உலகங்களும் நொடியில் செயலற்று ஜடமாயினர். அனைவரும் அறிவற்றுத் திகைத்து நின்றனர்.

அதைக்கண்டு அஞ்சிய தேவி, அவரை வணங் கித்தன்னைப் பொறுத்தருள வேண்டும் என்றாள். சிவ பெருமான் புன்னகைத்து, மீண்டும் யாவற்றையும் முன் போல செயல்பட அருளினான். இதன்மூலம் சிவபெரு மானே மூவருக்கும் யாவருக்கும் முதல்வனாக விளங் குவது அறியப்படுகிறது.

இதனைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர்,

**படைப்போன் படைக்கும் பழையோன், படைத்தவை காப்போன் காக்கும் கடவுள், காப்பவை கரப்போன் கரப்பவை கருதாக் கருத்துடைக் கடவுள்......**

என்று குறிக்கின்றார்.

இதன் பொருள் : படைப்போனாகிய பிரம்ம தேவனையும் படைத்தவன் ஒருவன் உளான். அவனே சிவபெருமான். அதுபோன்றே காக்கும் கடவுளுக்கும் அத்தொழிலைத் தந்தவன் ஒருவன் உளான். அதுமட்டு மன்றி இடைப்பட்ட ஊழிக்காலங்களில் காக்கும் கடவு ளாகிய அவன் அழிந்து போகாமல் அவனையும் காக்கின்றார்.

படைப்பிற்குப் பிறகு ஓயாமலும் இறுதியில் ஒரே யடியாகவும் அழித்தலை உருத்திரமூர்த்தி செய்கின் றான். அவனுக்கும் அத்தொழில் தானே வந்துவிட வில்லை.

சிவபெருமானே, அந்த உருத்திரனைப் படைத்து அவனுக்குத் தன்னுடைய சாரூப வடிவை அளித்து அத்தொழிலையும் அளித்துள்ளார். ஊழி முடிவில் அவனையும் அழித்துத் தன்னுடைய உடலில் ஒடுக்கிக் கொள்வார். அதுவே அவனுக்கு இறுதியாகும். இப்படி அழிப்பவனையும் அழிப்பவனாக அவர் விளங்குகின் றார் என்பதாகும். இவற்றால் சிவபெருமானே மூவர்க் கும் முதல்வனாய் நின்று உலகைத் தொழிற்படுத்துகின் றனார் என்பது உணரப்படும்.

இதனை விளக்கும் வகையில் அமைந்ததே திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய சிவபுரப் பதிகமாகும். இதில் முதல் மூன்று பாடல்களில் இந்தக் கருத்து விளக்கப்படுகின்றது.

இதன் முதற்பாடல் வானம், காற்று, தீ, நீர், மண், கலைகள், மூன்று குணங்கள், அசுரர்கள், சுரர்கள் முத லியவற்றைத் தனது எண்ணமாத்திரத்தால் படைக்கும் (தாமரை மலரில் வீற்றிருக்கும்) சிவபெருமானின் சிவபு ரத்தை நினைப்பவர் உலகில் நிலை பெற்றிருப்பார்கள் என்று கூறுகிறது. இதன் கருத்து தாமரை மலரில் வீற்றிருந்து படைக்கும் தொழிலை நினைந்தவனாகச் சிவன் விளங்குகின்றான். அந்த எண்ணமாத்திரத்தி லேயே இந்த உலகம் படைக்கப்படுகிறது. ஆதலின் சிவனே ஆதிப்பிரமன் ஆகிறான் என்பதாகும்.

இரண்டாவது பாடல் மலைகளால் நிறையப்பெற்ற பூமியின் மீது அசுரர்கள், சுரர்கள், விண்ணுக்கும் மண் ணுக்கும் இடையே உள்ள யாவும் நிலை பெறுக என்ற நினைவோடு அலை கடலுக்கு நடுவே துயில்பவனா கவும், அரியாகவும் சிவபெருமான் விளங்குகின்றான். அவன் நிலை பெறுக என்று எண்ணுவதால் இந்த உலகம் நிலை பெற்றிருக்கின்றது என்பதாகும். இதனால் ஆதிநாராயணன் சிவனே என்பதாகும்.

மூன்றாவது பாடல் குற்றமற்ற கடலால் தழுவப்பட் டுள்ள இந்த உலகமும் அதிலுள்ள உயிர்த்தொகுதிக ளும் அவ்வவற்றுக்குரிய காலத்தில் அழிய வேண்டும் என்ற எண்ணத்துடன் உருத்திரனாகச் சிவபெருமான் வீற்றிருக்கின்றான். அவன் அழிய வேண்டும் என்று எண்ணிய மாத்திரத்திலேயே யாவும் அழிந்து விடு கின்றன. ஆதலின் அவனே மகாருத்திரனாகிறான்.

இப்படி மும்மூர்த்திகளையும் தன் எண்ணப்ப டியே இயங்க வைப்பவனாக இருப்பதால் சிவபெரு மான் மூவர்க்கும் முதல்வன் என்று போற்றப்படுகின்றான்.

மேலும், சிவபெருமானே பிரமனாகவும், திருமா லாகவும் விளங்குகிறான் என்பதை "நாரணன் காண் நான்முகன் காண்" என்று நாவுக்கரசர் பாடுகின்றார். மேலும், அவர் "மூவரானார் மூவுலக மேத்தும் முதல் வரானார்", (திருப்பந்தனை நல்லூர்) "தாமரையான், செங்கண்மால் தானே கண்டாய்" (மறைக்காடு) "மூவர் உருவாய முதல்வர்" (வலம்புரம்), (முதுகுன்றம்) என்று பல நூறு இடங்களில் பாடுவதையும் காணலாம்.

சிவபெருமான் பிரமனைப் படைத்தான் என்பதைத் திருஞானசம்பந்தர், 'அயனைப் படைத்த பரமர்' என்றும், திருமாலைத் தோற்றுவித்து உலகங்களைக் காப்பதைத், 'தாயாகி உலகங்களை நிலைபேறு செய்த தலைவர்' என்றும் குறிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திரிபாத திரிமூர்த்தி

சிவபெருமானுக்கு உரிய அறுபத்துநான்கு மூர்த்தங்களில் பல மூர்த்தங்கள் மும்மூர்த்தி வழிபாட்டை குறித்தாலும் அவற்றுள் இரண்டு தனிச்சிறப்பைப் பெறுகின்றன. அவை முறையே ஏகபாத திரிமூர்த்தம், திரிபாத திரிமூர்த்தம் என்பனவாகும். இவற்றுள் முதலாவதான ஏகபாத திரிமூர்த்தம் யுக முடிவில் எல்லாம் அழிந்து பிரம்ம, விஷ்ணுக்களும் சிவபெருமானுக்குள் ஒடுங்கும் நிலையைக் குறிப்பதாகும். இதனையடுத்து நிலவிய பயங்கர அமைதிக்குப் பிறகு சிவபெருமான் தனது வலது பாகத்திலிருந்து பிரம்ம தேவனையும், இடது பாகத்திலிருந்து திருமாலையும் தோற்றுவித்து மீண்டும் உலக உற்பத்தியைத் தொடங்குகின்றார்.

அப்படி அவர் தன்னுடலிலிருந்து பிரம்மா விஷ்ணுக்களை வெளிப்படுத்தும் கோலமே திரிபாத திரிமூர்த்தமாகும். இந்த இரண்டுக்கும் நடுவே அமைந்திருப்பது சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களில் ஒன்றான ஏகபாத மூர்த்தமாகும். இதில் சிவபெருமான் ஒற்றைக்காலுடன் நிற்கின்றார். உலகமெல்லாம் அழிந்த பின்னரும் பரமஞானிகள் எஞ்சிநிற்பர். அவர்களுக்கு மோட்சம் அளித்துத் தன் பாதத்தில் சேர்த்துக் கொள்ளச் சிவபெருமான் ஏகபாதராகக் காட்சியளிக்கின்றார்.

சிவபெருமானுடைய திருவடிகள் இகம், பரம் என்ற இரண்டைக் குறிக்கின்றன. ஊழி முடிந்த பிறகு, பரம் ஒன்றே நிலை பெற்றிருக்கும். ஆதலால் அதனை உணர்த்தும் வகையில் பெருமான் ஒற்றைத் திருவடியுடன் விளங்குகின்றார்.

ஏகபாத திரிமூர்த்தம் என்பது உலகம் முற்றிலுமாக அழிந்து தனக்குள் ஒடுங்கும் காலத்தில் சிவபெருமான் கொள்ளுகிற வடிவமாகும். உலகம் அழிவு எய்துகிற காலத்தைச் சமய உலகம் நான்கு வகையாகக் கூறுகின்றன.

இவை முறையே நித்தியம், நைமித்திகம், பிராகிருதம், ஆதியந்திகம் என்று அழைக்கப்படுகின்றன. இதில் நித்தியம் என்பது ஒவ்வொரு உயிரும் தான் கொண்ட பிறவிக்கேற்ப ஆயுளை அடைந்து அனுபவித்து மரணத்தை எய்துவதாகும். மரணத்தின் முடிவென்பது அவ்வுயிருக்குள் மட்டுமே நடக்கும் பிரளய காலமாகும். இது வெளியே தெரிவதில்லை.

இரண்டாவதான நைமித்திகம் பிரம்ம தேவனின் பகல் காலம் முடிந்து இரவு நேரம் ஆரம்பிக்கும் காலத்தில் நடக்கும் அழிவாகும்.

திரிபாததிரிமூர்த்தி - திருஒற்றியூர்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

மனிதர்களின் ஓராண்டு தேவர்களுக்கு ஒருநாள். முன்னூற்று அறுபத்தைந்து மனித வருடங்கள் தேவர்களுக்கு ஓராண்டு. இம்மாதிரியான 12,000 ஆண்டுகள் கழிந்தால் தேவர்களுக்கு ஓர் ஊழிக்காலம் முடியும். இப்படி நான்காயிரம் ஊழிக் காலங்கள் கழிந்தால் பிரம்மனுக்கு ஒரு பகல் முடியும். இந்த பகல் வேளைக்குள் பூவுலகில் பதினான்கு மனுக்களும் பதினான்கு இந்திரர்களும் தோன்றி உலகை ஆண்டு மறைவர். இப்படிப்பட்ட பகல் முடியும் போது கடல் பொங்குவதுடன் வானில் மேகங்கள் கூடி மழை பொழிந்து வெள்ளக் காடாக்கும். அந்த இரண்டாலும் உலகம் நீருள் மூழ்கி அழியும். இதுவே பிரளயம் எனப்படும்.

இனி, மூன்றாவதான பிராகிருதத்தினைக் காணலாம். பிரமனுக்கு ஓர் இரவு கழிந்து மீண்டும் பகல் பொழுது தோன்றும்போது அவன் உறக்கத்தினின்று விழித்து மறுபடியும் உலகினைப் படைக்கத் தொடங்குவான். இப்படிப்பட்ட பகல், இரவு நேரங்களைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்ட நூறாண்டுகள் வாழ்ந்தபின்னர் பிரமனும் அழிவான். இத்தகைய ஒரு கோடி பிரமர்கள் தோன்றி அழிந்தால் திருமாலுக்கு ஒரு பகல் கழியும். இந்தப் பகல் முடியும்போது உலகம் அழியும் அதுவே பிராகிருதம் எனப்படும். இத்தகைய இரவு பகலைக் கொண்ட ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் திருமாலும் அழிவார். திருமால் உள்ளிட்ட யாவரும் அழியும் காலமே மகாபிரளய காலமாகும்.

இந்த, பிரளய காலத்தில் அனைத்து பிரம்மாண் டங்களும் நீருள் மூழ்கும், நீரினை நெருப்பு எரிக்கும். பின்னர், அந்நெருப்பு காற்றுள்ளும், காற்று விண்வெளி யிலும் ஒடுங்கும். அவ்வானம் பரவெளிக்குள் ஒடுங்கும்.

அவ்வேளையில் சிவபெருமானிடத்தில் பிரமன் உருத்திரன் திருமால் ஆகியோர் ஒடுங்குவர். உருத்திரன் சிவபெருமானின் இதயத்திலும், பிரம்மா அவருடைய வலது பாகத்திலும், திருமால் இடது பாகத்திலும் ஒடுங்கு வர். அவ்வேளையில் சிவபெருமான் ஏகபாதராக விளங்குவார். அந்நிலையில் பிரம்ம விஷ்ணுக்களின் இடுப்புக்கு மேலான பகுதிகள் மட்டுமே தெரியும். இதனால் இது ஏகபாத திரிமூர்த்தி என்றழைக்கப்படு கிறது. இதனைத் திரு ஞானசம்பந்தப் பெருமான் திரு மறைக்காட்டுத் தேவாரத்துள்.

"இருநிலனது புனலிடை மடிதர
எரிபுக எரியது மிகுபெகு
வளியினில் அவிதர வளிகட
வியனிடை முழுவதும் கெட
இருவர்களுடல் பொறையொடு
திரிஎழிலுரு உடையவன்" என்று குறிக்கின்றார்.

இதன் பொருள் இருநிலமானது நீருள் மூழ்க, அந்த நீர் தீயுள் ஒடுங்க, அத்தீயானது காற்றால் அழிக்கப்பட, அந்தக் காற்று வானில் ஒடுங்கும் வேளையில் பிரம்மா விஷ்ணுக்கள் தங்கும் உடலோடு காணப்படும் இறைவன் என்பதாகும்.

இது உலகம் ஒடுங்குதலைக் குறிக்கும் வடிவமா கும். இனி மீண்டும் உலகைப் படைக்கும் வேளையில் பெருமான் கொள்ளும் திரிபாத திரிமூர்த்தியின் வடிவைச் சிந்திக்கலாம்.

உலகைப் படைக்கத் திருவுள்ளம் கொண்ட மகேசர் ஏகபாதராக நின்றார். பிறகு, தமது இதயத்தி னின்று தமது ஆயிரத்தில் ஒரு கூறான உருத்திரரைத் தோற்றுவித்தார். பிறகு வலப்பாகத்திலிருந்து பிரம்ம தேவனையும் இடப்பாகத்திலிருந்து திருமாலையும் பிறப்பித்தார். அவர்கள் சிவபெருமானிடத்திலிருந்து கைகளைக் கூப்பிய வண்ணம் வெளிவந்தனர். அந்தக் கோலமே திரிபாத திரிமூர்த்தி என்று அழைக்கப்படு கிறது. இதில் பிரமனுடைய ஒருகாலும், திருமாலுடைய ஒருகாலும் மட்டுமே தெரியும். இப்படி மூன்று கால்க ளும் விளங்கும் மும்மூர்த்திகளே திரிபாத திரிமூர்த்தி கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

பின்னர், சிவபெருமான் தனது மனத்திலிருந்து கௌரி முதலான அனைத்துப் பெண்களையும், முக் கண்களிலிருந்து சூரியன், சந்திரன், அக்னியையும், பிராணனிலிருந்து வாயுவையும், கழுத்திலிருந்து கணே சரையும், இருதயத்திலிருந்து முருகனையும், நாபிக் கமலத்திலிருந்து இந்திர, வருண, குபேரர்களையும் மயிர்க்கால்களிலிருந்து பலகோடி தேவர்கள் அசுரர்கள், முனிவர்கள் முதலானவர்களையும் தோற்றுவிப்பார். இப்படிப் படிப்படியாக உலகம் தோன்றிச் செயற்படும்.

இந்த மூர்த்தியை ஆதித்தபுராணம், இலிங்க புராணம், மகாபாரதம் முதலிய அனேக நூல்கள் சிறப் புடன் போற்றுகின்றன.

இவரை ஞானிகள் தமது மும்மலங்களை நீக்கி ஞானத்தையும், மோட்சத்தையும் அருளும் தேவர் என்று போற்றுகின்றனர். இந்த மூர்த்தியைத் தேவாரத் துள் திருஞானசம்பந்தப் பெருமான் திருவீழிமிழலைப் பதிகத்தில்

"தாங்கருங்காலம் தவிர வந்த இருவர்
தம்மொடும் கூடினார் அங்கம்
பாங்கினால் தரித்துப் பண்டுபோல்
எல்லாம் பண்ணிய கண்ணுதல் பரமர்"

என்று குறிக்கின்றார். இதன் பொருள் தாங்குவதற்கு இயலாத கொடிய ஊழிக்காலம் முடிந்தபின் பிரம்ம விஷ்ணுக்களை வெளிப்படுத்தி தம்முடம்பில் தரித்து முன்போலவே எல்லா உலகங்களையும் சிவபெருமான் உண்டாக்கினான் என்பதாகும்.

மேலும் திருவாரூர்ப் பதிகத்தில்,

"நீங்கிய நீர்த்தாமரையின் நெடுமாலொடு
நில்லாயெம் பெருமானே என்றங் கேத்தி"

என்றும் குறிக்கின்றார். ஊழிக்காலத்தில் பெருமான் பிரமன் திருமாலொடு நிற்பதை இது குறிக்கின்றது.

சிவாலயங்களில் மூலமூர்த்திகளாகவோ உற்சவ மூர்த்திகளாகவோ இவ்வுருவம் அமைக்கப்பட வில்லை. தூண்சிற்பங்களாகவும், கோட்ட தெய்வங் களாகவும் மட்டுமே காண்கிறோம்.

நான்காவதான ஆத்யந்தம் என்பது பல பிறப்புக் களை எடுத்த ஆன்மாக்கள் இறுதியில் சிறந்த ஞானத் தைப் பெற்று மோட்சமடைதலைக் குறிப்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❁ குடவாயிலில் ஏகபாத திரிமூர்த்தி வடிவம் உள்ளது. இங்குச் சிவபெருமான் அமுத குடத்திலிருந்து மூவராக வெளிப்பட்டதாகத் தலபுராணம் கூறுகின்றது.

❁ திரிபாத திரிமூர்த்தியின் வடிவங்கள் அபூர்வமாகச் சிலதலங்களில் மட்டுமே காணப்படுகின்றன. திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி ஆலயத்திலுள்ள நடராசர் சந்நிதியின் வடக்குக் கோட்டத்தில் இம்மூர்த்தி உள்ளார். இது நல்ல கருங்கல் திருமேனியாகச் சிறந்த கலையழகுடன் திகழ்கின்றது. திருவாரூருக்கு அருகிலுள்ள தப்ளாம்புலியூரில் தனிச்சந்நிதியில் திரிபாத திரிமூர்த்தி வடிவம் உள்ளது. இங்கு பிரதோஷ வேளையில் சிறப்புப் பூசை நடைபெறுகிறது.

❁ திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் ஆலயத்தூணொன்றில் இம்மூர்த்தியைக் காண்கிறோம்.

❁ சிவபெருமான் அம்பிகைக்கு ஏகபாத திரிமூர்த்தியாகக் காட்சி கொடுக்கின்ற ஐதீகம் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் தைமாதம் 2ஆம் தேதியன்று காலை நடத்தப்பெறுகின்றது. அதைத் தொடர்ந்து பெருமான் மூன்று முறை பிரமன், திருமால், உருத்திரனாக வீதிகளில் பவனி வருகின்றார்.

## ஹரி விரிஞ்ச தாரண பராக்கிரமம்

சிவபராக்கிரமம் காட்டும் சிவபெருமானின் 64 வடிவங்களில் ஒன்று "ஹரிவிரிஞ்ச தாரண" பராக்கிரம வடிவமாகும். இதில் மும்மூர்த்திகளும் இணைந்து காணப்படுகின்றனர். ஊழிவெள்ளத்தின் நடுவில் நெடிய வடிவில் சிவபெருமான் ஓங்கி நிற்கின்றார். அவருடைய வலதுதோள் மீது பிரம்ம தேவனும், இடது தோள் மீது திருமாலும் அமர்ந்துள்ளனர். ஓர் ஊழிக்காலத்திற்கு முன்பிருந்த பிரம்மா விஷ்ணுக்கள், 'ஐயனே! நாங்கள் உங்களைச் சரணடைந்தோம். எங்களை ஊழி வெள்ளத்திலிருந்து காத்தருள்க. ஊழிக்கால அழிவை நாங்கள் நேரில் பார்க்க விரும்புகிறோம். இப்போது வரும் ஊழிக்காலத்தில் எங்களைப் பாதுகாப்பான இடத்தில் அமர்த்திவையுங்கள் என்றனர்.

சிவபெருமானும் அவர்களுக்கு அருள்புரிந்து தமது வலதுதோளில் பிரம்ம தேவனையும் இடது தோளில் திருமாலையும் அமர்த்திக் கொண்டார். சில காலத்திற்குப் பிறகு கடுமையான ஊழிக்காலம் தோன்றியது. அப்போது ஏற்பட்ட கொடிய அஞ்சத்தக்க நிகழ்வுகளால் பஞ்சபூதங்களும் அழிந்தன. எங்கும் அமைதி நிலவியது. அதனையடுத்து, சிவபெருமான் தமது தோளில் பாதுகாப்பாக வீற்றிருந்த பிரம்மனையும், திருமாலையும் கீழே இறக்கிவிட்டார். அவர்களுடைய படைப்புத் தொழிலையும், காத்தல் தொழிலையும் அளித்து "முன்போலவே செயல்படுங்கள்" என்றார்.

ஹரியான திருமாலையும், விரிஞ்சனான பிரம்மனையும் தமது தோளில் தரித்துக் காத்த வீரச்செயலாதலின் இது ஹரி விரிஞ்ச தாரண பராக்கிரமம் என்று போற்றப்படுகின்றது.

காஞ்சீபுரத்திலுள்ள சிவாலயம் காயாரோகணம் ஆகும். இங்குள்ள சிவபெருமானே பிரம்மா, விஷ்ணுக்

❁ ஹரி விரிஞ்ச தாரணர்

களை ஊழிக்காலத்தில் தமது தோளில் தாங்கிப் பிறகு விடுவித்தார் என்று தலபுராணம் கூறுகிறது. அவர்களைத் தமது காயத்தில் (உடலில்) ஆரோகணம் செய்து கொண்டதால் சிவபெருமான் காயாரோகணர் என்றழைக்கப்படுகின்றார். இங்கு, கருவறைச் சுவரில் சிவலிங்கத்திற்குப் பின்னால் சோமாஸ்கந்தர் வடிவம் உள்ளது. இவருடைய வலது தோளுக்கு மேலே பிரமனும் இடது தோளுக்கு மேலே திருமாலும் அமைந்துள்ளனர். ஊழிக்காலம் முடிந்த பிறகு இங்குத் திருமாலும், பிரம்மனும் வழிபட்டுத் தமது தொழிலைப் புரியும் ஆற்றல் பெற்றனர் என்று காஞ்சிப்புராணம் கூறுகிறது. ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மும்மூர்த்தி தலங்கள்

சிவாலயங்களில் நடைபெறும் தினசரி வழிபாட்டில் மந்திரபூர்வமாக மும்மூர்த்திகள் சிறப்புடன் வழிபடப்பட்டாலும், அவர்கள் மூவருக்கும் ஒரே அளவில் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் இல்லை. சிவனுடைய சாபத்தால் பிரம்மனுக்குக் கோயில்களே இல்லாமல் போய்விட்டது என்று புராணங்கள் கூறுகின்றன. வடநாட்டில் புஷ்கர், அலம்பூர், கரம்போளி முதலிய இடங்களில் மட்டுமே அவருக்கு ஆலயங்கள் உள்ளன.

தென்னகத்தில் பல இடங்களில் சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் ஒரே மதிலுக்குள் ஆலயங்கள் அமைகின்றன. இவை சிவவிஷ்ணு கோயில்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் பிரம்மாவுக்கு கருவறைக் கோட்டங்கள் தவிர தனிச்சந்நிதிகள் அமைக்கும் வழக்கமில்லை.

அபூர்வமாகச் சில தலங்களில் மும்மூர்த்திகளுக்கும் ஆலயம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இவற்றில் கூட பிரம்மாவுக்குத் தனி ஆலயம் இருப்பதில்லை. தனிசந்நிதி மட்டுமே அமைகின்றது. இவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம். இவை மும்மூர்த்தித் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## சுசீந்திரம்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெரிய சிவத் தலம் சுசீந்திரமாகும். இங்கு வீற்றிருக்கும் சிவபெருமான் தாணுமாலயன் என்று அழைக்கப்படுகின்றார். தாணு என்பது சிவபெருமானுக்குரிய பெயராகும். அவருடன் (திரு)மாலும், அயனும் ஒன்றிக்கலந்து நிற்பதால் இங்கே பெருமான் தாணுமாலயன் என்று அழைக்கப்படுகின்றார். இங்குள்ள லிங்கத்தின்மீது தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் தொன்முது கடவுள் என்பதைக் குறிக்கும்வகையில் இந்தக் கவசத்தில் அவருடையமுகம் நீண்டதாடியுடன் அமைக்கப்பட்டுள்ளது. தலைக்கு மேல் படிப்படியாகப் பதினான்கு சந்திரகலைகளும் ஆதிசேடனும் அமைந்துள்ளனர்.

கோயிலின் தலமரமான கொன்றைமரம் கோயிலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதனை மையப்படுத்தி மேற்கு நோக்கியவாறு தாணுமாலயனின் ஆதிக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இதில் மூன்று சுயம்பு லிங்கங்கள் உள்ளன. இங்கு பூசை நடைபெற்ற பின்னரே பிற சந்நிதிகளில் பூசை நடத்தப்படுகிறது.

மேலும் இக்கோயிலின் உள்ளேயே திருமாலுக்குப் பெரிய ஆலயம் உள்ளது. இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகத் திகழ்கிறது.

## பிட்சாண்டார் கோயில் (உத்தமர் கோயில்)

திருச்சியை அடுத்துள்ள தலம் உத்தமர் கோயிலாகும். இதனைச் சைவர்கள் பிட்சாண்டார் கோயில் என்றழைப்பர். இங்குள்ள சிவபெருமான் பிட்சாண்டவர் என்று அழைக்கப்படுகின்றார். இங்குப் பிரம்மனுக்கும் சரஸ்வதிக்கும் தனித் தனிச்சந்நிதிகள் அமைந்துள்ளன. இங்குள்ள திருமால் உத்தமர் என்று அழைக்கப்படுகின்றார்.

## திருப்பாண்டிக் கொடுமுடி

கொங்கேழ் சிவாலயங்களில் ஒன்று திருப்பாண்டிக் கொடுமுடியாகும். இங்குள்ள சிவபெருமான் மகுடேசுவரர் என்றழைக்கப்படுகின்றார். திருமால் வீர நாராயணப் பெருமாள் எனும் பெயரில் மகாலட்சுமியுடன் எழுந்தருளியுள்ளார். இருவருக்கும் தனித்தனியே கருவறைகளும் தனித்தனியாக ராஜகோபுரங்களும் உள்ளன. இங்கு வன்னி மரத்தடியில் பிரம்மதேவர் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. பிரமன் அமைத்த தீர்த்தம் இங்குள்ளது. இங்கு மும்மூர்த்திகளும் சிறப்புடன் வழிபடப்படுகின்றனர்.

## ஸ்ரீராம சமுத்திரம்

திருச்சி மாவட்டத்திலுள்ள காட்டுப்புத்தூருக்கு 3கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தலம் ஸ்ரீராம சமுத்திரமாகும். இது முன்நாளில் ஆயிரவேலி அயிரூர் என்று அழைக்கப்பட்டு வந்தது. இங்கு வாலீசுவரம் என்ற பெரிய சிவாலயம் உள்ளது. இதனுள் தெற்குப் பகுதியில் லட்சுமி நாராயணர் சந்நிதியையும், தலமரமான நெல்லி மரத்தடியில் யோக நிலையில் வீற்றிருக்கும் பிரம்ம தேவனையும் காண்கிறோம். கோயிலுக்கு எதிரில் காவிரியாறு ஓடுகின்றது.

## களக்காடு மகாதேவர்

நெல்லை மாவட்டத்திலுள்ள களக்காடு சிவாலயம் மும்மூர்த்தி தலமாகும். இங்குக் கருவறையில் சிவலிங்கமூர்த்தியும், அவருக்குத் தெற்கில் அமைந்துள்ள சந்நிதியில் ஸ்ரீ கிருஷ்ணரும் அவருக்குப் பின்னே தலமரத்தின் கீழ் பிரமன் திருவுருவமும் அவன் பூசித்தலிங்கமும் உள்ளன. இறைவர் சத்திய வாகீசுவரர் என்றும் அம்பிகை ஆவுடைநாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவத்திருமேனிகள் மும்மூர்த்தி வழிபாடு

சிவாலயங்களில் உள்ள சிவபெருமானின் மாகேச்சுவர திருக்கோலங்கள் பலவற்றில் அவருடன் பிரம்மாவும், திருமாலும் சேர்த்தே அமைக்கப்பட்டுள்ளனர். இது மும்மூர்த்தி வழிபாட்டினையே குறிக்கும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இப்படி அமைந்த திருக்கோலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

## இலிங்கோற்பவர்

சிவாலயங்களில் இலிங்கோற்பவத் திருமேனி யானது அண்ணாமலையார் என்ற பெயரில் அதிக அளவில் வழிபடப்படுகிறது. இதில் லிங்கத்தின் மையத்தில் சிவபெருமான் நிற்கின்றார். மேலே அன்னவடிவில் பிரம்ம தேவனும், கீழே பன்றி வடிவில் திருமாலும் காட்டப்படு கின்றனர். இது திருமாலும், பிரமனும் முறையே அவரு டைய அடி, முடி தேடிய வரலாற்றை விளக்குவதாகும்.

காலப்போக்கில் கலைஞர்கள் மேற்கண்ட வடிவத்து டன் வலப்புறம் பிரம்ம தேவனும், இடப்புறம் திருமாலும் முன்னிருகரங்களையும் கூப்பிச் சிவ பெருமானை வணங் கியவாறு இருக்கும்படி அமைத்தனர். இத்தகைய அற்புத மான சிற்பத்தை வடாற்காடு மாவட்டம் குடிமல்லூரில் காண்கிறோம். இந்நிலையும் காலப்போக்கில் மாறிவிட்டது. கருவறைச் சுவரிலேயே பிரமனையும், திருமாலையும் புடைப்புச் சிற்பங்களாக அமைத்துவிட்டு, மையக் கோட்டத் தில் லிங்கோற்பவரை அமைத்துள்ளனர்.

மேலும்சில கலைஞர்கள் பிரம்ம தேவனை இடுப் பிற்குக் கீழ் அன்னமாகவும், இடுப்பிற்கு மேல் நான்கு முகமும் நான்குகரங்களும் கொண்ட தேவவடிவமா கவும் அமைத்துள்ளனர். இது போன்றே திருமாலைப் பன்றிமுக மும் தேவ உடலும் கொண்டவராக அமைத் துள்ளனர்.

## கல்யாணசுந்தரமூர்த்தி

கல்யாணசுந்தரமூர்த்தி கோலமும் மும்மூர்த்தி வழி பாடேயாகும். இதில் பிரம்மா திருமண வேள்வியைச் செய்பவராகவும், திருமால் பார்வதியைத் தாரை வார்த்துத் திருமணம் செய்பவராகவும் விளங்குகின்றனர். யாக குண்டத்திலுள்ள அக்னியே உருத்திரராகத் திகழ்கிறது.

## ஏகபாத, திரிபாத திரிமூர்த்தி

உலகம் அழிந்து நிற்கும் காலத்திலும் பிறகு உற்பத்தி தொடங்கும் காலத்திலும் சிவபெருமான் கொள்ளும் வடி வமே, திரிபாத திரிமூர்த்தி வடிவமாகும். இதில் ஒற்றைக் காலுடன் சிவபெருமான் நான்கு கரங்க ளுடன் நிற்கின்றார் அவருடைய இடது பகுதியிலிருந்து திருமாலும், வலது பகுதியிலிருந்து பிரமனும் பிறந்து வெளிவருவது போல அமைக்கப்பட்டுள்ளது. பிரமன் பின்னிரு கரங்களில்



மும்மூர்த்திகள்

அட்சமாலை கெண்டி ஏந்தியுள்ளான். முன்னிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தி முன்னிரு கரங்களால் சிவபெரு மானைக் கும்பிடுகின்றார். முதல் நிலையில் இருவருக்கும் கால்கள் இல்லை. இரண்டாவது வகையில் மூவரும் ஒற்றை கால்களுடன் உள்ளனர். இத்தகைய சிற்பங்களைக் கோபுரங்கள், தூண்கள் ஸ்ரீவிமானங்களில் மட்டுமே காண்கிறோம்.

## திரிபுராந்தகர்

முப்புரங்களை வெல்லும் சிவபெருமானின் திரிபுராந்தகர் உருவத்தில் பிரமன் தேரோட்டியாகவும் திருமால் கையிலுள்ள அம்பாகவும் காட்சியளிக் கின்றனர்.

## நீலகண்டர்

அபூர்வமாகக் கிடைத்துள்ள விஷாபகரண மூர்த்தி யின் சிற்பங்களிலும், பழையகால ஓவியங்களிலும் அவரு டன் திருமாலும், பிரமனும் சேர்ந்து காணப்படுகின்றனர். இவர்கள் இருவரும் சென்றே பெருகி வந்த விஷத்தினை அருந்துமாறு அவரிடம் கேட்டுக்கொண்டனர். இதனைத் திருஐயாற்றுத் தேவா ரத்தில் மாலும் நான்முகனும் கூடி மலரது வணங்க வேலை ஆலை (அமுது செய்தார்) என்றுத் திருநாவுக் கரசர் பாடுகின்றார். (வேலை – பாற்கடல், ஆலை – கொடிய விடம்).

## திருமயிலை மும்மூர்த்தி உலா

சென்னை மயிலாப்பூரில் வெள்ளீசுவரர் ஆலயம் உள்ளது. இங்கு நடைபெறும் வைகாசிப் பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் மாலையில் மும்மூர்த்திகள் வலம் வருகின்றனர். வெள்ளீசுவரர் விமானத்திலும் திருவிக்கிரமப் பெருமாள் கருடவாகனத்திலும் பிரம்மா சப்பரத்திலும் திருவீதி வலம் வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருவிழாக்களில் மும்மூர்த்தி கோலம்

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவில் சிவபெருமான் மும்மூர்த்திகளாக அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். பெருவிழாவின் நான்காம் நாள் காலையில் அன்னவாகனத்தில் பிரம்ம தேவனாகவும், அன்று இரவு நாகவாகனத்தில் அறிதுயில் கொள்ளும் திருமாலாகவும் அருள்பாலிக்கின்றார். இதனையொட்டி அவருக்குச் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. மூன்றாம் நாள் அவர் பூத வாகனத்தில் உருத்திரனாகக் காட்சியளிக்கின்றார்.

மேலும் அவர் சூரிய விருத்தத்தின் நடுவில் பிரம்ம தேவனாகவும், சந்திரபிறை வாகனத்தின் நடுவில் திருமாலாகவும், திருத்தேரில் உருத்திரராகவும் காட்சியளிக்கின்றார் எனவும் சமய அறிஞர்கள் கூறுகின்றனர்.

தென் மாவட்டங்களிலுள்ள சிவாலயங்களில் பிரம்மா, விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவராகவும் சிவபெருமான் விளங்குவதைக் குறிக்கும் வகையில் திருவிழாவில் மூன்று வகையான அலங்காரங்களைச் செய்கின்றனர். இதற்கு, சிவப்புச் சாத்து, வெள்ளைச் சாத்து, பச்சை சாத்து என்பது பெயர்.

சிவப்பு சாத்தில் பெருமானைச் சிவப்பு பட்டு, சிவப்புக்கல் இழைத்த அணிகள், சிவப்பு மலரால் தொடுத்த மாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கின்றனர். இது உருத்திரனாகப் பெருமான் விளங்குவதைக் குறிக்கிறது.

இதைத் தொடர்ந்து வெள்ளை ஆடைகள், வெண்கற்கள் இழைத்த நகைகள், வெள்ளை மலர் மாலைகள் ஆகியவற்றால் வெள்ளை சாத்து நடைபெறுகின்றது. இது சிவபெருமான் பிரம்மனாக விளங்குவதைக் குறிப்பதாகும்.

அடுத்துப் பச்சை வண்ணப்பட்டு, பச்சைக்கல் இழைத்த ஆபரணங்கள், மருக்கொழுந்து, தவனம் முதலிய பச்சைவண்ண மாலைகளால் அலங்கரிக்கின்றனர். இது பெருமான் திருமாலாக இருந்து உலகினைக் காப்பதை உணர்த்துகிறது என்பர்.

இப்படிப் பெருமான் மும்மூர்த்திகளாக விளங்குவதை உணர்த்தச் சிவாலயங்களில் மட்டுமே செய்து வந்த இந்த மூவகை அலங்காரங்களும் காலப்போக்கில் விநாயகர், மாரியம்மன் முதலிய அனைத்து ஆலயங்களிலும் இடம் பெற்றுவிட்டன.

## மும்மூர்த்திகள் வீற்றிருக்கும் ஸ்ரீவிமானம்



கருவறையின் மீது அமையும் விமானம் மும்மூர்த்தி வடிவமாகும். இதன் தென்புறத்தில் உருத்திரான தட்சணா மூர்த்தியின் பல்வேறு வடிவங்களும், மேற்குப் பகுதியில் விஷ்ணுவின் பல்வேறு வடிவங்களும் வடக்கில் பிரம்மனின் பல்வேறு திருவடிவங்களும் இடம் பெறுகின்றன. கிழக்கில் மும்மூர்த்திகளின் ஒருங்கிணைந்த வடிவமாகக் குமாரன் வீற்றிருக்கின்றார். அபூர்வமாகச் சிலதலங்களில் விமானத்தின் கிரீவத்தில் மும்மூர்த்திகளும் அமர்ந்திருக்கக் காண்கிறோம். இவற்றில் குறிப்பிடத்தக்கது திருஒற்றியூர் ஆலய விமானம் ஆகும். இங்குள்ள புற்றிடங்கொண்ட நாதர் ஸ்ரீ விமானம் தூங்கானைமாட வடிவம் கொண்டது. இதன் கிரீவத்தில் அலங்கார வளைவுக்குள் மும்மூர்த்திகள் அமர்ந்துள்ளனர். அவர்களுக்கு மேல் அவர்களுக்குக் காட்சி கொடுத்த நாயகரான ஆதிசிவனும் உள்ளார். இக்கோயிலுள் நடராசர் சந்நிதியின் வடக்குக் கோட்டத்தில் புகழ்பெற்ற திரிபாத திரிமூர்த்தியின் வடிவம் உள்ளது.

## நந்திகளாக விளங்கும் மும்மூர்த்திகள்

பெரிய சிவாலயங்களில் பஞ்ச நந்திகள் விளங்குகின்றனர். இவர்களில் கோயிலுக்கு வெளியே பெரிய சுதை வடிவில் பிரம நந்தியாகப் பிரமதேவன் வீற்றிருக்கின்றார். இரண்டாவது சுற்றில் அழகிய கருங்கல் திருமேனியாக மால்விடை என்ற பெயரில் திருமால் எழுந்தருளியுள்ளார். கோபுரக் குடவரையில் உருத்திரபதம் பெற்ற உருத்திர நந்தியாக அதிகார நந்தி வீற்றிருக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மும்மூர்த்திகள் வழிபட்ட திருத்தலங்கள்

பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் ஒன்றுகூடிச் சிவபெருமானை வழிபட்ட தலங்கள் மும்மூர்த்தித் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

## மூவலூர்

மயிலாடுதுறை வட்டத்திலுள்ள திருத்தலம் 'மூவலூர்' ஆகும். இது பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் புன்னைவனத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலமாகும். கருவறைச்சுவரில் சிவலிங்கத்தை மும்மூர்த்திகள் வழிபடும் புடைப் புச்சிற்பம் உள்ளது. இறைவன் மார்க்கசகாயர், இறைவி சௌந்தர்யநாயகி.

## காஞ்சிபுரம்

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்துள் கள்ளக் கம்பர், வெள்ளக்கம்பர், நல்லக்கம்பர் என்னும் பெயரில் மூன்று சிவலிங்கங்கள் உள்ளன. இவை முறையே திருமால், பிரம்மன், உருத்திரனால் வழிபடப்பட்டவை ஆகும். ஓர் ஊழிக்காலத்தில் பிரம்மா, விஷ்ணு உருத்தி ரர்களைச் சிவபெருமான் அழித்த பின்னர், சிலகாலம் கழித்து முன்போலவே அவர்களைப் படைத்தார். அவர்களுக்கு முத்தொழிலையும் வழங்கினார். அவர்கள் தமது தொழிலைச் செம்மையுடன் ஆற்றச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டனர். அவையே மேலே குறித்த மூன்றுமாகும்.

மேலும் காஞ்சீபுரத்தில் தனித்தனியே உருத்திரர் கள் பூசித்த உருத்திர கோடீசம், அனாதி ருத்ரேசம், ஆனந்த உருத்திரேசம் முதலியனவும்; திருமால் தசாவ தாரத்தில் பூசித்த அரிசாபபயம் தீர்த்தேசம், மச்சேசம், கூர்மேசம், வராகேசம், நாரசிம்மேசம் முதலானஅனேக தலங்களும், பிரம்மன் வழிபட்ட மகாலிங்கத்தானம், பிரம்மபுரீசம் முதலான தலங்களும் அனேகம் உள்ளன. இவற்றில் பூசித்துக் கொண்டு மும்மூர்த்திகள் காஞ்சி புரத்தைவிட்டு நீங்காது இருக்கின்றனர். இதனால் காஞ்சி புரத்திற்கு மும்மூர்த்தி வாசம் என்பதும் பெயராயிற்று.

## திருவண்ணாமலை

திருவண்ணமாலையில் உருத்திரர், பிரம்மா, திரு மால் ஆகிய மூவரும் வழிபட்ட லிங்கங்கள் உள்ளன. உருத்திரர்கள் கூடி வழிபட்ட லிங்கம் மேற்குப் பிரகாரத் தில் உள்ளது. பிரம்மா வழிபட்ட லிங்கம் பிரம்ம தீர்த் தக்கரையில் சதுர்முகலிங்கமாக உள்ளது. விஷ்ணு வழிபட்ட லிங்கம் ஈசானத்தில் உள்ளது. அடிமுடி தேடிச் சோர்ந்த பிரமனும், திருமாலும் திருவண்ணா மலையில் சிவபூசை செய்து கொண்டிருக்கின்றனர்.

## காசி (வாரணாசி)

காசி நகரத்திற்கும் மும்மூர்த்தி வாசம் என்பது பெயராகும். இங்குப் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்கள் ஓயாது சிவபூசை செய்து கொண்டே இருக்கின்றனர். இவர்கள் பெயரால் இங்கே அனேக சிவலிங்கங்கள் உள்ளன.

## திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் மும்மூர்த்திகளும் வழிபட் டுப்பேறு பெற்ற தலமாகும். இங்கு உருத்திரர்கள் வழி பட்ட லிங்கம் 'உருத்திரகோடீசுவரம்' என்ற தனிக்கோ யில் உள்ளது. மலைமேலுள்ள வேதகிரீசுவரரை திருமா லும் பிரமனும் வழிபட்டுப்பேறு பெற்றனர். பிரமன் கழுகு உருவம் கொண்டு இங்கு வழிபட்டதாகவும் கூறுவர். திருமால் இங்கு வழிபட்டுப் பெருந்திருவிழா வையும் நடத்தியுள்ளார்.

பிரமனும், திருமாலும் இங்கு வழிபட்டதைத் தேவாரம் தனிச்சிறப்புடன் குறிக்கின்றது. அவர்கள் இருவரும் சிந்தையால் வணங்கி மலர்கள் தூவி வழி படுகின்றனர். அவ்வாறு நிறைந்த அழகிய மலர்களின் வாசனையால் கழுக்குன்றமே மணக்கிறது என்பது தேவாரம் காட்டும் காட்சியாகும்.

இங்கு பிரமனும், திருமாலும் வழிபட்டதை உணர்த்தும் வகையில் பல்லவர்களால் குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. மலையிறங்கு பாதை யில் அமைந்துள்ள இந்தக் குன்றுக் கோயிலின் மையத் தில் சிவலிங்கம் அமைந்துள்ளது. இங்குள்ள முன்மண் டபத்தில் பிரமனும், திருமாலும் செதுக்கப்பட்டுள்ளனர். இது மும்மூர்த்திதலம் என்பதைக் குறிக்கும் வகையில் இக்கற்கோயில் மும்மூர்த்திக் கோயிலாகத் திகழ்கிறது.

## திருக்காளத்தி

தென் கயிலாயம் என்று போற்றப்படும் திருக்கா ளத்தி மும்மூர்த்தித் தலமாகும். இங்கு பிரம்மா வழிபாடு செய்துள்ளார். அவர் தங்கியிருந்த இடமே பிரம்மகிரி யாகக் காளத்திக்கு மேற்கில் உள்ளது. இங்கிருந்து பொன்முகலி ஆறு உற்பத்தியாகிக் காளத்தியைச் சுற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓடுகிறது. திருமால் இங்கு வழிபட்டுப் பேறுபெற்ற பின்னரே, திருமலை மீது கோயில் கொண்டார். உருத்திரர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற பின், கோனை மலையில் தங்கினர். அங்கு அவர்கள் அமைத்த ஆயிரலிங்கம் (சகஸ்ர) தனிச்சிறப்புடன் உள்ளன. மும்மூர்த்திகளால் வழிபடப்பட்டதால் இதற்கு விஷ்ணுபுரம், பிரம்மபுரம், உருத்திரபுரம் என்ற பெயர்களும் புராணங்களில் சொல்லப்பட்டுள்ளன.

## மூவரும் தொழும் ஆனைக்கா

திருஆனைக்காவில் மும்மூர்த்திகளும் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளனர். இவை முறையே பிரம்ம, விஷ்ணு, உருத்திரலிங்கம் என்ற பெயரில் தனிச்சிற்றாலயத்தில் வரிசையாக அமைந்துள்ளன. இதனை மும்மூர்த்தி கோயில் என்றே அழைக்கின்றனர். இந்த ஆலயத் தூணொன்றில் திரிபாத திரிமூர்த்தியின் திருவுருவம் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமூர்த்திமலை மூவர் வழிபாடு

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி அருகில் அமைந்துள்ள ஒருமலை திரிமூர்த்தி மலை என்றழைக்கப்படு கின்றது. இங்கு அருவ நிலையில் அத்திரி முனிவர் தன் மனைவியான அனசூயையுடன் வாழ்ந்து வருகின்றார் என்று நம்புகின்றனர். இவர்களைச் சோதிக்க வந்தே மும்மூர்த்திகள் குழந்தைகளாக மாற்றப்பட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. அதை நினைவூட்டும் வண்ணம் மும்மூர்த்திகள் இந்த மலையில் நீங்காது வசிக்கின்றனர் என்று நம்புகின்றனர். இங்கு மும்மூர்த்திகளாக மூன்று லிங்கங்கள் வழிபடப்படுகின்றன. இம்மலையில் பிறந்து ஓடும் ஆற்றின் கரை நெடுக அமைந்துள்ள ஊர்களில் இருபதுக்கும் மேற்பட்ட மும்மூர்த்தி கோயில்கள் உள்ளன.

## திரிமூர்த்தி வழிபாடு பற்றி ஒரு விளக்கம்

பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள திரிமூர்த்தி மலையின் உச்சியில் சைவர்கள் பஞ்சலிங்கங்களை அமைத்து வழி பாடு செய்துள்ளனர். இதன் இன்னொரு பகுதியில் சமண முனிவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் அப்பகுதி யில் உள்ள உச்சிப் பாறையில் தரிசன பிம்பமாக ஒரு தீர்த்தங்கரரையும், அவருக்கு இருபுறமும் சாமரதரர்களையும் செதுக்கி வைத்து வழிபட்டுள்ளனர். மக்கள் இதனை அமணீசுவரர் என்று அழைத்தனர். காலப்போக்கில் கடுமையான புயல் மழையால் அப்பாறை நிலைமாறி உருண்டு விழுந்துள்ளது. அச்சிலை சமண சமயத் தீர்த்தங்கரர் என்பதை விடுத்துப் பின்னாளில் வந்தவர்கள் நடுவில் உள்ள தீர்த்தங்கர வடிவை யோக நிலையிலுள்ள சிவபெருமானாகவும், சாமரதரர்களைப் பிரம்ம விஷ்ணுக்களாகவும் கருதி மும்மூர்த்திகளாக வணங்கி வருகின்றனர்.

இம்மலையில் உற்பத்தியாகி ஓடும் ஆற்றினையொட்டி அமைந்த ஊர்களில் அம்மணீசுவரம் என்ற சிற்றாலயங்கள் ஆற்றங்கரையில் உள்ளன. இவை ஆதியில் மழைத் தெய்வங்களுக்கு அமைக்கப் பெற்றவைகளாகும். இவற்றில் நிர்வாணமான பெண்களின் சிலைகள் வைத்து வழிபடப்பட்டன. அதனால் இவை அம்மணியார் கோயில்கள் என்று அழைக்கப்பட்டு, காலப் போக்கில் அம்மணீசுவரம் என்று அழைக்கப்படுகின்றன. அண்மைக் காலத்தில் இவற்றின் பெயரும், உருவமும் மாறிவிட்டன. அக்கோயில்கள் திருமூர்த்தி மலையோடு தொடர்பு படுத்தப்பட்டுக் கருவறையில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் சிலைகள் அமைக்கப்பட்டன. இதில் மூவரும் பத்மாசனத்தில் யோக நிலையில் வீற்றிருக்கின்றனர். நடுவிலுள்ள சிவன் மேற்கரங்களில் மான், மழு ஏந்தி முன்கரங்களை மடிமீது யோக முத்திரையில் வைத்துள்ளார். அவருக்கு வலப்புறம் பிரம்ம தேவனும் இடப்புறம் திருமாலும் அவரைப் போலவே யோக நிலையில் அமர்ந்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மும்மூர்த்திகளாக விளங்கும் திருவடிவங்கள்

தென்னிந்தியச் சமயமரபில் மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் ஆகிய மூவரையும் சேர்த்து வழிபடுவது மிகத் தொன்மையான வழக்கமாகும். சிவாலயங்களில் உள்ள பல பொருட்கள் மும்மூர்த்திகிளின் வடிவாகவே வணங்கப்படுகின்றன. சிவலிங்கம், சிவாலயத்திலுள்ள திரிசூலம் (அஸ்திரமூர்த்தி), கொடிமரம், அரசமரம் ஆகியன மும்மூர்த்தி வடிவாகவே போற்றப்படுவதைக் காண்கிறோம். அவற்றை இங்கே காணலாம்.

## சிவலிங்கம்

சிவாலயங்களில் விளங்கும் பிரதிஷ்டா லிங்கங்கள் நான்கு பகுதிகளாக உள்ளன. லிங்கத்தின் அடியிலுள்ள சதுரமான கல் ஆதாரசக்தி அல்லது ஆதார பீடம் எனப்படும். இதன் மையத்தில் சதுரமான பள்ளம் உள்ளது. அதிலிருந்து நான்கு பட்டை சதுரமாகவும் அதன்மீது எட்டு பட்டை வடிவமாகவும் அதன்மீது வட்டவடிவமாகவும் சிவலிங்கம் அமைகிறது. இதில் அடியிலுள்ள நான்கு பட்டைகள் பிரம்மபாகம் எனவும், எட்டுப்பட்டை விஷ்ணுபாகம் எனவும் வட்டமானது உருத்திரபாகம் எனவும் அழைக்கப்படுகின்றன.

இந்த மையத் தூணைச் சுற்றி பத்மபீடம் எனப்படும் ஆவுடையார் அமைகின்றது. இது மனோன்மணி சக்தியாகும். இப்படியே அனைத்து சிவாலயங்களிலும் மும்மூர்த்திகளைக் குறிக்கும் வகையிலேயே சிவலிங்கம் அமைகின்றது.

சுயம்பு லிங்கங்களுக்கு அமையும் பீடம் பிரம்ம பாகமாகவும், நீர் விழும் கோமுகப் பகுதி விஷ்ணுவாகவும் போற்றப்படுகின்றன.

## அரச மரம்

மரங்களில் உயர்ததாகப் போற்றப்படுவது அரச மரமாகும். பகவான் கிருஷ்ணர் கீதையில் மரங்களில் நான் அரசமரம் என்கிறார். அசுவத்த மரம் என்று வட மொழியில் அழைக்கப்படும் அரசமரம் மும்மூர்த்திகளின் வடிவமாகும். இதன் வேர்ப்பகுதி பிரம்மனாகவும், அடிமரப்பகுதி திருமாலாகவும், கிளைகளும் இலைகளும் பழங்களும் சிவமாகவும் போற்றப்படுகின்றது. இதை வணங்குவது மும்மூர்த்திகளை வணங்குவதாகும். இதை விளக்கும் மந்திரம்,

"மூலதோ ப்ரஹ்ம ரூபாய மத்யதோ
விஷ்ணு ரூபனே, அக்த்த சிவரூபாய
விருக்ஷ ராஜாயதே நம:" என்பதாகும்.

மும்மூர்த்தி வழிபாட்டில் சிறந்து விளங்கும் கொங்கு மண்டலத்தில் ஒவ்வொரு ஆலயத்தின் முன்புறமும் அரசமரம் இருக்கக் காண்கிறோம்.

## திரிசூலம்

சிவாலயங்களில் உள்ள திரிசூலம் மும்மூர்த்தி வடிவமாகும். மையத்திலுள்ள கூர்ப்பகுதி உருத்திரனையும், வலது பாகத்திலுள்ள வளைந்த பகுதி பிரம்ம தேவனையும், இடது பாகத்திலுள்ள வளைந்த பகுதி திருமாலையும், மூன்றையும் இணைக்கும் பகுதி சதாசிவனையும் அதனைத் தாங்கும் பகுதி மனோன்மணியையும் குறிக்கின்றன. மனோன்மணிக்கு மேலே ஆதி பராசக்தியும் அவளுக்கு வலப்பக்கம் சரஸ்வதியும் இடப்பக்கம் லக்ஷ்மியும் வீற்றிருக்கின்றனர்.

திருசூலத்தைப் பூஜா பத்ததி நூல்கள் ஹரி, ஹர, விதி, ரூப பஞ்சாஸ்திர ராஜம் என்று குறிக்கின்றன. இதன் பொருள் திருமால், சிவபெருமான், பிரம்மா ஆகிய மூவரின்வடிவமாகவும் ஐந்து ஆயுதங்களில் மகாராஜாவாகவும் திரிசூலம் உள்ளது என்பதாகும். இந்த சூலத்தின் நீண்ட பகுதி சதகோடி ருத்திரர்களையும் குறிக்கின்றது.

## கொடிமரம்

சிவாலயங்களில் இருக்கும் கொடிமரமும் சிவ லிங்க தத்துவத்தை விளக்குகின்றது. ஆதார சிலையாகிய சதுரமேடையிலுள்ள மூன்று மேகலைகளின் மீது அமையும் தாமரை மலர் பீடம் பிரம்மபீடமாகும். அதன் மீது அமையும் கண்டம் விஷ்ணுபீடமாகும். இதன்மீது சதுரமான பட்டைப்பகுதியில் சூலம், இடபாரூடர், விநாயகர், முருகன் முதலிய உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

இதற்கு மேலே வட்டமாக நீண்டு அமையும் தண்டம் உருத்திரபாகம் ஆகும். இதன் உச்சியில் நந்தி அமைகிறது. ஆன்மா பல நிலைகளையும் படிகளையும் கடந்து சிவனாகவே ஆகிவிடுகிறது. அதனை இறைவன் தன் உச்சியின் மீது ஏற்றிவைக்கின்றார் என்பதை இது உணர்த்துகின்றது.

விழாக்காலங்களில் கொடியேற்றிய பின் கொடி மரம் சிவபெருமானாகவே பாவித்துத் வணங்கப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## பேரிகை முழக்கம்

சிவாலயப் பெருந்திருவிழாவின் தொடக்கத்தில் பேரீதாடனம் என்ற சடங்கு நடத்தப்படுகின்றது. பேரி என்றால் முரசு, முரசுகளை அடித்துத் திருவிழாவி னைத் தேவர்களுக்கும், உலக மக்களுக்கும் அறிவித்து அவர்களை வரவேற்கும் சடங்காக இது அமைகின்றது. பேரிகையும் மும்மூர்த்தி வடிவமாகவே போற்றப்படு கிறது. அடிப்பகுதி பிரம்ம தேவனையும், அகன்ற வாய்ப்பகுதி திருமாலாகவும், அதன்மீது கட்டப்பட் டுள்ள பெரிய தோல்பகுதி உருத்திரனாகவும் போற்றப்ப டுகின்றன. மேலும் பேரிகையின் ஒவ்வொரு அங்கமும் பலவகைத் தேவர்களைக் குறிப்பதாக அமைகின்றது. பேரிகை முழக்கத்தால் மும்மூர்த்திகளும் தேவர்க ளும் திருப்தி அடைகின்றனர்.

## பூரணக் கும்பம்

சிவாலயங்களில் பூசிக்கப்படும் பூரண கும்பம் மும்மூர்த்தி வடிவமாகும். இதன் அடிப்பகுதி பிரம்மனா கவும், கழுத்துப்பகுதி திருமாலாகவும், மூன்று கண் கொண்ட தேங்காய் மகா உருத்திரராகவும் போற்றப் படுகின்றன.

## சிவபஞ்சாசனத்திலும், பஞ்சாவரணத்திலும் மும்மூர்த்திகள்

சிவபூஜாதுரந்தரர்கள் செய்யும் சிவபூசையிலும், ஆலயங்களில் செய்யப்படும் சிவபூசைகளிலும் ஒரு அங்கமாகச் சிவாசனம் பூசிக்கப்படுகிறது. இது ஆதாரா சனம், அனந்தாசனம், சிம்மாசனம், கமலாசனம், யோகா சனம் என்ற ஐந்து அங்கங்களை உடையதாகும். இதில் ஒன்றான கமலாசனத்தில் மும்மூர்த்திகள் பூசிக்கப்படு கின்றனர். இதில் அமையும் கமலத்தில் எண்ணற்ற இதழ்கள் உள்ளன. இதன் நுனியில் எண்ணற்ற சூரிய மண்டலங்கள் உள்ளன. இவற்றில் எண்ணிலாத பிரமர் கள் வீற்றிருக்கின்றனர். இவர்கள் பொன் நிறமானவர் கள். தமது நான்கு முகங்களால் ஓயாது வேதம் ஓதிக் கொண்டிருப்பவர்கள். கரங்களில் தண்டம், ஜெப மாலை, தர்பை ஆகியவற்றை ஏந்தியுள்ளனர்.

இதனையடுத்துள்ளக் கேசரங்களின் நுனிகளில் எண்ணற்ற சந்திர மண்டலங்கள் காணப்படுகின்றன. இவற்றின் மையத்தில் சந்திரனைப்போன்று வெண்மை யாகப் பிரகாசிக்கும் விஷ்ணுக்கள் உள்ளனர். வனமா லையை அணிந்து சங்கு, சக்கரம், பதுமம், கதை முத லிய ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். அழகுடன் கவர்ச்சி யையும் கொண்டவர்கள். இவர்களின் தலைவனாக மகாவிஷ்ணு விளங்குகின்றார்.

இதனையடுத்துக் கமலத்தின் நடுப்பொகுட்டின் நுனி வட்டத்தில் செம்மை நிறத்துடன் ஜொலிக்கும் அக்னி மண்டலம் உள்ளது. இதன் மத்தியில் சகல பண்டிதர்களான மகாருத்திரர்கள் வீற்றிருக்கின்றனர். இவரும் இவருடைய கணங்களும் சிவபெருமானைப் போலவே சந்திர சூடம், ஜடாமண்டலம், நெற்றிக்கண், காளகண்டம் கொண்டவர்கள். இவர்கள் தமது நான்கு கரங்களில் முறையே வில், சூலம், ஞானமுத்திரை, வியாக்யான முத்திரைகளைத் தரித்துள்ளனர். இவர்களுக்குப் பாம்புகள் பூணூலாக விளங்குகின்றன.

இப்படி, சிவபஞ்சாசனத்தின் ஓர் அங்கமாக விளங்கும் கமலத்தில் சூரிய, அக்னி, சந்திர மண்டலங்க ளின் நடுவில் ருத்திர, பிரம்மா, விஷ்ணுக்களைச் சிறப் புடன் வழிபடுகின்றோம்.

இதைப்போலவே, சிவபெருமானைச் சுற்றி அமையும் ஐந்து வீதிகளில் நான்காவது வீதியில் பிரம்மனும், விஷ்ணுவும் அமர்ந்துள்ளனர். இந்த வீதி யில் லோகபாலகர்களான திக்பாலகர்கள் வீற்றிருக்கின் றனர். கிழக்கில் தொடங்கி எட்டுத்திக்கிலும் இந்திரன் முதலான எண்மரும் (மேலே) உச்சியில் பிரம்மதேவ னும், பாதாளத்தில் விஷ்ணுவும் வீற்றிருந்து உலகினைக் காக்கின்றனர் என்பது நம்பிக்கையாகும். ஐந்தாவது ஆவரணத்தில் அவர்களின் ஆயுதங்களான சக்கர மும், பத்மமும், முறையே உச்சியிலும், பாதாளத்திலும் காக்கின்றன. ஆதலின் பஞ்சாசனம் பஞ்சாவரணம் ஆகியவற்றை வழிபடுவதும் மும்மூர்த்தி வழிபாடா கவே அமைகின்றது. ❁

---

❁ சென்னை வட்டாரத்திலுள்ள அனேக ஆலயங்களில் இந்திர விமானம் என்னும் பெரிய விமானம் அமைந்துள்ளது. இதில் அடுக்கடுக்காக மரத்தாலான தெய்வத் திருவுருவங்கள் அமைகின்றன. இவற்றில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய திருவுருவங்கள் அமைகின்றன. இவையும் மும்மூர்த்தி வழிபாடாகவே அமைகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பல்லவர்கள் கண்ட மும்மூர்த்தி வழிபாடு

காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த பல்லவ மன்னர்கள் மும்மூர்த்திகளைத் தனிச் சிறப்புடன் போற்றி வழிபட்டனர். அவர்கள் மையத்தில் சிவபெருமானையும், இரண்டு புறமும் பிரம்மா, விஷ்ணுக்களையும் அமைத்து வழிபட்டதனை அவர்கள் காலத்திய கோயில் சிற்பங்களில் காணக்கிடக்கின்றன.

சாவித்திரி சரஸ்வதியுடன் ஸ்ரீ பிரம்மா

ஸ்ரீ சோமஸ்கந்தர்



ஸ்ரீதேவி பூதேவியுடன் திருமால்

பெரும்பாலான பல்லவ மன்னர்கள் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர்களாக இருந்தனர். அவர்களால் அமைக்கப்பட்ட பல சிவாலயங்களில் சோமாஸ்கந்தரின் வடிவம் கருவறைச் சுவரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சிவபெருமானுக்கு மேலே பிரம்மனும், திருமாலும் அவரைத் தொழுபவர்களாக அமைக்கப்பட்டுள்ளனர். இது மும்மூர்த்தி வழிபாடாகத் திகழ்கிறது.

பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் மண்டகப்பட்டில் அமைத்த குடைவரைக் கோயில் மும்மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்டதாகும். இதனைக் குறிக்கும் வகையில் அவன் விசித்திர சித்தனான தான் திரிமூர்த்திகளுக்கு மரம், செங்கல், இரும்பு சுண்ணாம்பு இன்றி இந்தக் கோயிலை அமைத்துள்ளதாக இங்கே உள்ள கல்வெட்டில் பொறித்துள்ளான்.

இவனுடைய பேரனான இராசசிம்மன் அமைத்த மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும் மும்மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்ட திருக்கோயிலாகும். இதில் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு சிவபெருமான் உமாதேவியோடும் குமாரனோடும் சோமாஸ்கந்தராக விளங்குகின்றார். மகா மண்டபத்தின் உட்புறம் தெற்கில் வடக்கு நோக்கியவாறு பிரமன் சாவித்திரி சரஸ்வதியோடும், வடக்கில் தெற்கு நோக்கியவாறு ஸ்ரீதேவி, பூதேவியோடு திருமாலும் வீற்றிருக்கின்றனர். அன்பர்கள் மூவரையும் ஒருசேரத் தரிசிக்கும் வகையில் மும்மூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ள காட்சியை வேறெங்கும் காணமுடியவில்லை.

இதே மன்னனால் கட்டப்பட்டதே காஞ்சீபுரம் கயிலாயநாதர் ஆலயம் ஆகும். இதுவும் மும்மூர்த்தி வழிபாட்டிற்குரிய தலமாகும். இக்கோயில் இரண்டு அங்கங்களை உடையது. முதல் பகுதி பூலோக கயிலாயத்தையும், பின்னுள்ள பகுதி விண்ணுலக கயிலாயத்தையும் குறிக்கின்றன. இந்த இரண்டுமே மும்மூர்த்தி ஆலயமாகும். இவற்றின் மையத்தில் அமைந்துள்ள பெரிய கருவறையுள் சிவலிங்க மூர்த்தமும் அதற்குப் பின்னணியில் சோமாஸ்கந்தர் வடிவமும் உள்ளன. இந்தக் கருவறைகளைச் சுற்றிலும் நிறையச் சிற்றாலயங்கள் அமைந்துள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை கருவறைக்கு இணையாக வடக்கில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள திருமால் ஆலயமும், தெற்கில் வடக்கு நோக்கி அமைந்துள்ள பிரம்ம தேவன் ஆலயமும் ஆகும். இவற்றில் பிரம்ம தேவன் வாணி சரஸ்வதி தேவியுடனும், திருமால் ஸ்ரீதேவியுடனும் காட்சியளிக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்குள்ள இரண்டு ஆலயங்களும் இம்முறையிலேயே மும்மூர்த்திகளுக்காகவே உள்ளன. இந்த இரண்டு துணை ஆலயங்களுக்கும் தனித்தனியாக விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் மும்மூர்த்தி, கோயிலாகத் திகழ்வது மட்டுமின்றி இங்குள்ள அனேக திருவுருவங்கள் மும்மூர்த்தி வழிபாடாகவே உள்ளன. கருவறையைச் சுற்றி அமைந்துள்ள அண்ணாமலையார் (லிங்கோற்பவர்); கஜசம்ஹாரர், ஜலந்தரவதர், பிட்சாடனர் ஆகிய திருவுருவங்களின் இருபுறமும் பிரம்மாவும் விஷ்ணுவும் சேர்த்தே காட்டப்பட்டுள்ளனர்.

காலப்போக்கில் தனித்தனியாக மும்மூர்த்திகளுக்கு ஆலயம் அமைப்பதற்குப்பதில் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் மும்மூர்த்திகளை அமைக்கும் வழக்கத்தை உண்டாக்கினர். இதில் உயர்ந்த பீடத்தின்மீது சிவபெருமான் அமர்ந்துள்ளார். அவருக்கு இடப்புறத்தில் அம்பிகை வீற்றிருக்க இருவருக்கும் இடையில் குமாரன் அமர்ந்துள்ளார். சிவபெருமானின் தோள்மேலே வலதுபுறம் பிரம்மதேவனும், இடது புறம் திருமாலும் அவரைப் போற்றும் கோலத்தில் அமைந்துள்ளனர். சில சிற்பங்களில் இருவரும் அஞ்சலி செய்பவராகவும் உள்ளனர்.

காஞ்சீபுரத்திலுள்ள அனேக ஆலயங்களில் இந்தக் காட்சியைக் காணலாம். இவற்றில் குறிப்பிடத்தக்கவை காயாரோகணம், ஐராவதேசம், மதங்கேசம், முத்தீசம் முதலிய ஆலயங்களாகும்.

காஞ்சீபுரத்தில் மட்டுமின்றி வல்லம், கிணார், முதலிய அனேக சிவாலயங்களிலும் இந்தக் காட்சி அமைந்துள்ளன. ❁

## நல்லூர் மும்மூர்த்திகள்

அகத்தியர் வழிபட்டுப் பேறுபெற்ற திருத்தலம் நல்லூர் ஆகும் இது கும்பகோணத்திற்கு அருகிலுள்ளதாகும் இங்கு கருவறையில் சிவலிங்கமும் பின்னணியில் அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டிய வடிவமும் உள்ளன. இதில் பெரியமேடைமீது சிவபெருமான் உமாதேவியுடன் மணக்கோலத்தில் வீற்றிருக்கின்றார். அவருக்கு இருபுறமும் பெரிய வடிவில் பிரம்மதேவன், திருமாலும் நிற்கின்றனர். அழகிய சுதைச் சிற்பங்களாக அமைந்த இந்த வடிவங்கள் வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. இது போன்ற காட்சியை வேறுதலங்களில் காணமுடியவில்லை. ❁

## மும்மூர்த்தியாக விளங்கும் சூரியன்

பரமேசுவனின் பிரத்யட்ச (நேருக்கு நேராகத் தோன்றும்) வடிவமாக விளங்குவது சூரியனாகும். இந்த சூரியன் காலையில் பிரம்ம தேவனாகவும், மத்தியான வேளையில் விஷ்ணுவாகவும், மாலை வேளையில் உருத்திர மூர்த்தியாகவும் விளங்குகின்றான். தங்களின் ஞானம் விளக்கம் பெறவும், உலக உயிர்கள் தழைக்கவும் செம்பொன் நிறமாகத் தோன்றும் சூரியனை முனிவர்களும், மக்களும் பிரம்ம தேவனாகப் போற்றுகின்றனர்.

பகல்பொழுதில் எங்கும் வியாபித்து நின்று உயிர்களின் வளர்ச்சிக்கு காரணமாக இருப்பதால் நண்பகல் சூரியன் திருமாலாகப் போற்றப்படுகின்றான். மாலைக்கால சூரியன் உருத்திரனைப் போல் சிவப்பு நிறத்துடன் விளங்குகின்றான். அவனுடைய பொன்னொளியில் விரிந்து பரந்திருக்கின்ற மேகங்கள் அவனுடைய சடைகளைப் போல் இருக்கின்றன. மேலும், சிலநாட்களில் பிறைச் சந்திரன் தோன்றி அந்தச் சடைகளுக்கு அழகூட்டுகிறது. இந்தக் காட்சியின் மூலம் சூரியன் மும்மூர்த்திகள் வடிவாக விளங்குவதை உபநிஷத்துக்களும் புராணங்களும் பல இடங்களில் சிறப்புடன் குறிக்கின்றன. ❁

## மும்மூர்த்தி தீர்த்தம்

பிரம்மன், திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் அமைத்த தீர்த்தம், திரிபுராந்தகத் தலமான அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தில் உள்ளது. திரிபுர சம்ஹாரத்தின்போது தேரோட்டியாக விளங்கிய பிரம்ம தேவன் அமைத்த தீர்த்தம் ஆலயத்திற்கு எதிரில் திருக்குளமாக உள்ளது. (நரசிம்ம வடிவத்துடன்) சிவபெருமானின் கையில் அம்பாக இருந்த திருமால் அமைத்த தீர்த்தம் சிங்கதீர்த்தம் என்ற பெயரில் நாழிக் கிணறாக உள்ளது. மகா உருத்திர மூர்த்தியாக நின்ற சிவபெருமான் புன்னகையால், முப்புரங்களை எரித்தபோது சதகோடி உருத்திரர்கள் , அவருடைய பாதத்தில் நீராட்டினர். அது கருவறைக்கு முன்னுள்ள அர்த்த மண்டபத்தில் உருத்திர தீர்த்தமாக நின்றது. அந்த உருத்திர தீர்த்தம் இப்போது பலகைக் கற்களால் மூடப்பட்டுள்ளது. ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# குமாரன்-சிவன்-திருமால் ஆகிய மும்மூர்த்திகள்

காலம் விசித்ரமானது. கடவுளின் விருப்பத்தால் அதில் அனேக மாறுதல்கள் உண்டாகின்றன. ஆலயவழிபாடுகளிலும் அத்தகைய மாறுதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக ஆதியில் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரை முப்பெரும் காவல் சக்தியராகப் போற்றி வந்தனர். ஆனால் காலப் போக்கில் துர்க்கையை நீக்கி விட்டு அவளுக்குப் பதிலாக விநாயகரை வைத்து வழிபடும் வழக்கம் வந்து விட்டது. இப்போது இந்த மூவரையே அன்பர்கள் காவற் கடவுளராக வழிபடுகிறார்கள். ஆலய வாயில்களின் மீதும் யாக சாலையின் வாயில்கள் மீதும் சிவபூஜா துரந்தரர்களின் நித்திய பூசையிலும் இந்த மூவரே வழிப்படப்படுகின்றனர்.

அதைப் போலவே ஒரு கட்டத்தில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகள் தொகுப்பில் பிரமனை நீக்கிவிட்டு முருகனை வைத்து வழிபடத் தொடங்கினர். முருகன் பிரமனை வென்றவன். ஒரு சமயம் அவனுடைய படைப்புத் தொழிலைத் தானே ஏற்றுக் கொண்டு செயல்பட்டவன். அவனுக்குரிய பெயர்களில் ஒன்று பிரம்மசாத்தன் என்பதாகும். மேலும் பிரம்மன் போர்த்தெய்வமாக விளங்காமல் சாத்வீகக் கடவுளாகவே கருதப்பட்டான். இதனால் வீரமரபைச் சேர்ந்தவர்கள் தமது வழிபாட்டில் பிரம்மனை நீக்கிவிட்டு முருகனைச் சேர்த்துக் கொண்டனர். இவ்வகையில் முருகன், சிவபெருமான், விஷ்ணு ஆகியோர் மும்மூர்த்திகளாகப் போற்றப்பட்டனர். இவர்களுடன் மூவரும் இணைந்த சக்தியாக துர்க்கையும் போற்றப்பட்டாள்.

பல்லவர்களின் துறைமுகநகரான மாமல்லபுரத்தில் மும்மூர்த்திகளுக்கான ஒரு குடைவரைக் கோயிலைக் காணலாம்.

ஒரு பெரிய பாறையில் மேற்கு நோக்கியவாறு மூன்று கருவறைகள் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. இதில் மையக் கருவறையின் சுவரில் (கேவல) சந்திரசேகரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது அதன் மையத்தில் ஒரு வழவழப்பான அழகிய சிவலிங்கமும் உள்ளது.

இடதுபக்கக் கருவறையில் சுப்பிரமணியர் எழுந்தருளியுள்ளார். வலது பக்கக் கருவறையில் நான்கு கரங்களுடன் திருமால் நிற்கின்றார். இவர் கைகளில்



மும்மூர்த்தி கோயில் - மாமல்லபுரம் நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறையே சங்கு சக்கரம், வரத முத்திரை, ஊருமுத்திரை ஆகியவற்றை ஏந்தியுள்ளார்.

இந்த மூன்று கருவறைகளுக்கும் இணையாகத் தெற்கில் அமைந்த பெரிய மாடத்தில் அழகிய மகர தோரணங்களுக்கு நடுவில் துர்க்கா தேவியும் அமைக் கப்பட்டுள்ளாள். இந்தக் குன்றுக்கோயில் திரிமூர்த்தி குகை என்று அழைக்கப்படுகின்றது.

பல்லவர் காலத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட சோழர்காலத்துச் சிவாலயக் கோபுரங்களிலும் விமா னங்களிலும் தெற்கில் உருத்திரனான தட்சிணா மூர்த்தி யையும், மேற்கில் திருமாலையும், வடக்கில் பிரமனை யும் கிழக்கில் முருகனையும் அமைத்தனர். இதில் முருகன் பின்கரங்களில் கெண்டி, அட்சமாலை ஏந்தி முன்கரங்களில் அபய ஊரு முத்திரை தாங்கி யானை மீது அமர்ந்துள்ளார்.

சில ஆராய்ச்சியாளர்கள் இவரை முருகன் என்று கொள்ளாமல் மும்மூர்த்திகளும் இணைந்த வடிவம் என்று கூறுவர். இவர் ஏந்தியுள்ள கெண்டி, அட்சமாலை பிரம்மதேவனையும், (அவன் படைப்புத் தொழிலை யும்) யானை வாகனத்தின் மீது வருதல் திருமாலையும் (அவருடைய காத்தல் தொழிலையும்) சடைமுடியுடன் கூடிய குழந்தை வடிவம் உருத்திரனையும் குறிக்கு மென்பர். இவர் என்றும் இளமையுடன் திகழ்வதால் குமாரன் என்று அழைக்கப்படுகின்றார். மேலும் கு-பிரமன், மா-திருமால் அரன்-சிவபெருமான் மூன்றும் சேர்ந்து குமாரன் எனப்பட்டது என்பாரும் உண்டு. மும்மூர்த்திகளின் இணைந்த வடிவைப் பெரியோர்கள் குழந்தைகளாகப் போற்றுவது, பராசக்தி குற்றாலத்தில் மும்மூர்த்திகளைத் தொட்டி லில் இட்டுத் தாலாட்டியது ஆகியனவும் இங்குச் சிந்திக்கத்தக்கனவாகும்.

காலப்போக்கில் யானை மீது இருப்பதற்குப் பதிலாக முருகனை மயில்வாகனத்தின் மீது இருப்பவ ராகவும், வள்ளி தெய்வயானையுடன் கூடியிருப்பவரா கவும் அமைத்துள்ளதைப் பரவலாகக் காண்கிறோம். அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தின் ஸ்ரீ விமா னத்தில் இந்த அமைப்பில் முருகன் உள்ளார்.

ஆராய்ச்சியாளர்கள் கவனத்திற்கு :- மேலே குறித்த மாமல்லபுரம் மும்மூர்த்தி குகைக் கோயிலில் வலது பக்கத்திலுள்ள திருவுருவத்தை முருகன் என்று கொள்ளாமல் ஒரு முகம் கொண்ட பிரம்மனென்று கூறுவாருமுண்டு. ஆதியில் பிரம்மனுக்கு ஒரு முகமே இருந்ததென்றும் அவன் நான்கு வேதங்களை ஓதுவதற்கு ஏதுவாகச் சிவபெருமானை வேண்டி, நான்கு முகங்களைப் பெற்றானென்று சிலபுராணங்கள் கூறுகின்றன. மேலும் உலகினைப் படைக்கும் பிரம்ம தேவனான பிரஜாபதி ஒருமுகமும் நான்கு கரமும் கொண்டவரென்று ஸ்ரீ தத்துவ நிதி (என்ற சிற்பநூல்) குறிப்பிடுகின்றது.

## குற்றாலத்தில் திரிமூர்த்தி வழிபாடும் தாணுமாலயப் பூந்தொட்டிலும்

பாண்டிய நாட்டுத் திருத்தலமான குற்றாலத்தி லுள்ள மலை மூன்று சிகரங்களைக் கொண்டதாகும். இதனால் இது திரிகூடமலை என்றழைக்கப்படுகிறது. மும்மூர்த்திகளே இங்கு மூன்று சிகரங்களாக உள்ள னர் என்று கூறப்படுகின்றது. இங்குள்ள ஆலயத்தில் ஆதியில் பிரம்ம தேவன் எழுந்தருளியிருந்தான் என் றும், பின்னர் அவனே திருமாலாக ஆனான் என்றும் கூறுவர். அந்தத் திருமால் மேனியும் பின்னாளில் அகத் தியரால் சிவலிங்கமாக மாற்றப்பட்டு விட்டது. ஆதலின் இப்போதுள்ள சிவலிங்கம் மூன்று திருவுருவங்களை யும் உள்ளடக்கியதாகும். இதனால் இது திரிமூர்த்தி என்றும் தாணு மாலயன் என்றும் அழைக்கப்படுகின்றது.

இங்குள்ள சக்திபீடம் பராசக்தி பீடமாகும். ஒரு ஊழிக்காலத்திற்குப் பிறகு உலகைப் படைக்க விரும் பிய சிவபெருமான் ஆதிசக்தியைத் தோற்றுவித்து அவளிடம் உலகைப் படைக்குமாறு கூறினார். அதன் படியே அவள் உலகைப்படைத்து அதில் முத்தொ ழிலும் நடைபெற பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்களாகிய மூவரையும் படைத்தாள். அவர்கள் குழந்தைகளாகத் தோன்றி அவளைச் சூழ்ந்து நின்றனர். அவள் அவர்க ளுக்கு அருளமுது ஊட்டித் தொட்டிலிட்டுத் தாலாட்டி னாள். அவர்கள் மூவரும் ஏறி விளையாடி தொட்டில் தாணுமாலயப் பூந்தொட்டில் என்று அழைக்கப்பட்டது. அது இந்நாளிலும் பராசக்தி பீடத்திற்கு முன்புறம் ஆடுவதாக நம்புகின்றனர்.

குற்றாலத்துத் தலபுராணம், குற்றாலநாதர் உலா முதலிய பலநூல்கள் குற்றாலத்தை மும்மூர்த்தித் தல மென்றும், இங்குள்ள பராசக்தி பீடத்தில் தாணுமாலயப் பூந்தொட்டில் ஆடுவதையும் குறிக்கின்றன. இத்தகைய பூந்தொட்டில் சுசீந்திரத்திலும் உள்ளதென்று புராணங் கள் கூறுகின்றன. இதைக்குறிக்கும் சிற்பமொன்றும் அங்கே உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சுசீந்திரத்துத் தாணுமாலயப் பூந்தொட்டில்

மும்மூர்த்தித் தலம் என்றதும் சைவ உலகில் அனைவருக்கும் உடனே நினைவுக்கு வரும் தலம் சுசீந்திரமாகும். இது, கன்னியாகுமரிக்கு அருகில் உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் தாணுமாலயன் என்றழைக்கப்படுகின்றது. இந்தச் சிவலிங்கத்தில் மும்மூர்த்திகளும் கலந்து ஒன்றியுள்ளனர். தாணு-சிவ பெருமான், மால்-திருமால், அயன்-பிரம்மதேவன் ஆதலின் மூவரும் இணைந்தலிங்கம் தாணுமாலயன் என்றழைக்கப்படுகின்றது.

ஆதியில் இங்கு அத்திரி முனிவரின் ஆசிரமம் இருந்ததென்று கூறுவர். அவருடைய மனைவியான சதி அனசூயாவின் கற்பினைச் சோதிக்க மும்மூர்த்திகள் இங்கே வந்தார்கள் என்றும், அவர்களை அவள் குழந்தைகளாக மாற்றிச் சீராட்டினாள் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அனசூயா இங்குள்ள கொன்றை மரத்தில் தொட்டில்கட்டி அவர்களைத் தாலாட்டினாள் என்று கூறுகின்றனர். அம்மரமே தலமரமாகத் திகழ்கிறது. இதன் கீழ்சுயம்பு லிங்கங்களாக மும்மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். அந்த லிங்கத்தின் மீது முகக வசம் அணி விக்கப்பட்டுப் பூசைகள் நடைபெறுகிறது. இந்த சந்நிதியின் முகப்பின் மீது மூன்று முகங்களும் எட்டு கரங்களும் கொண்டவராகத் தாணுமாலயனின் சிற்பம் திகழ்கிறது.

இங்கு தாணுமாலயன் பூந்தொட்டிலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனைக் குறிக்கும் வகையில் கோபுரவாயிலில் குடைவரை நடராசர் சந்நிதிக்கு மேற்கில் ஒரு புடைப்புச் சிற்பம் உள்ளது. இதில் சிவபெருமான் கொன்றை மரத்தைத் தொட்டவாறு நிற்கின்றார். அவருக்குப் பின்புறம் குடை பிடித்தவாறு பூதம் நிற்கின்றது. மரக்கிளையில் ஒரு தொட்டில் உள்ளது. அதில் குழந்தை வடிவில் தாணுமாலயன் வீற்றிருக்கின்றார். புடைப்புச் சித்திரமாக அமைந்த மரத்தின் கிளையில் தொட்டில் அசைந்து ஆடுவது போல் அமைத்திருப்பது சிற்ப கலைஞர்களின் கலைத் திறனை விளக்கி நிற்கின்றது.

பலநூல்களில் சதி அனசூயா அத்திரிமுனிவரின் வேண்டுகோளின் படி மும்மூர்த்திகளும் தங்கள் அம்சமாகத் தத்தாத்திரேயன், சந்திரன், துருவாசர் ஆகியோரை இங்கே விட்டுச்சென்றதாகக் கூறுகின்றன.



தாணுமாலய பூந்தொட்டில்

அவர்கள் காலப்போக்கில் தத்தம் வழியே சென்றுவிட அத்திரி முனிவரும், அனசூயாதேவியும் பிள்ளைப் பாசத்தால் வருந்தினர். அவர்களின் சோகத்தை உணர்ந்த சிவபெருமான், மும்மூர்த்திகளின் அம்சங்களையும் ஒன்று சேர்ந்த தாணுமாலயன் என்ற அழகிய குழந்தையாக ஆக்கி அவர்களிடம் அளித்தார். அந்தக் குழந்தையையே அவர்கள் பூந்தொட்டிலிலிட்டுத் தாலாட்டினர். அந்தத் தொட்டிலே தாணுமாலயப் பூந் தொட்டில் என வழங்குகிறது. தாணுமாலயன் இங்குக் குழந்தை வடிவில் விளங்குகின்றார்.

திருக்குற்றாலத்திலுள்ள தரணிபீடத்தின் எதிரிலும் தாணுமாலயப் பூந்தொட்டில் ஆடுவதாகப் புராணங்களும் இலக்கியங்களும் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## உருத்திரரான தென்முகக் கடவுள்

சிவாலயங்களின் மூலத்தானத்தின் புறச்சுவற்றில் அமையும் கோட்டங்களில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் எழுந்தருள வேண்டியதே முறை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். நடைமுறையில் பிரம்மா, விஷ்ணு ஆகிய இருவரும் அவரவர் இடத்தில் உள்ளனர். ஆனால் உருத்திரருக் குரிய தெற்குக் கோட்டத்தில் அவருக்குப் பதிலாகத் தென் முகக் கடவுள் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். இவரை மகாருத்திரன் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக, நமக்கு உருத்திரர் என்றதும் அவருடைய கோபமும், அச்சமூட்டும் வடிவமுமே நினை வுக்கு வருகின்றது. ஆனால் சிவாசனத்தில் விளங்கும் உருத்திரர் ஞானச் செல்வ ராகத் திகழ்கின்றார். அவர் வெண்மை நிறமுடையவராக வாள், சூலம், ஞான முத்திரை, வியாக்யான முத்திரை ஆகியவற் றைத் தாங்கியுள்ளார். மேலும் அவர் மாலைக்கால சூரியனின் மத்தியில் வீற்றிருக்கின்றார். அவரை முனிவர்களும் விலங்குக ளும், பறவைகளும் (தண்ணீர் எடுக்கச் செல் லும் பெண்களும்) கண்டுகளிக்கின்றனர் என்று பல உபநிஷத நூல்கள் கூறுகின் றன. இதை விளக்கும் வகையிலேயே அஸ்தமனகிரி எனும் மலையின் மீது வீற்றிருப்பவராக அவர் காட்டப்படுகின்றார். அந்த மலையின் இடுக்கில் பாம்புகள், முனிவர்கள், மான்கள் அமைக்கப்பட்டுள்ளனர். மேலும் உருத்திரர் வீணை வாசிப்பதில் விருப்பமுடையவர். இவர்களுடைய வீணை உருத்திர வீணை என்றழைக்கப்படுகிறது.

காலனின் திசை தெற்காகும். காலனுக்குக் காலனாக உருத்திரமூர்த்தி தென்திசையில் வீற்றிருக்கின்றார். அதனால் அவர் தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்படுகின்றார். இவற்றை நோக்கத் தட்சணாமூர்த்தியே உருத்திரராக விளங் குவதை அறிகிறோம்.

இதன் மூலம் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்களே கருவறைக் கோட்டத்தில் விளங்குகின்றனர் என்பதை அறிய முடிகிறது. கருவறையை வலம்வருவது மும்மூர்த்திகளை வலம் வருவதேயாகும்.

## சிவ மகிமைத் துதியில் மூவராய் உள்ள மூர்த்தி

வடமொழியில் அமைந்துள்ள தோத்திர நூல்க ளில் தலையாயது மஹிம்நஸ்தவம் என்று அழைக்கப் படும் சிவமகிமைத்துதி. இது புஷ்பதந்தர் என்ற கந்தரு வரால் செய்யப்பட்டது என்று கூறுவர். வேதத்திலும் புராணங்களிலும் பேசப்படும் பரசிவத்தின் பழமையை யும் பெருமையையும் இரத்தினச் சுருக்கமாக முப்பத்தி ரண்டே பாடல்களில் கூறுகின்ற பக்தித்தோத்திர வடி வில் அமைந்த சாத்திர நூலாகும். இது தமிழில் செய்யுட் களாக (முதன் முறையாக) அன்பர் சிவஸ்ரீ இரமணனால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூலிலுள்ள ஒரு பாடல்:-

**படைத்திடும் பவனே போற்றி! பார்துகட் பான்மை தாங்கி;**
**துடைத்தழி அரனே போற்றி! துன்னிருட் குணமே தூங்கி;**
**அமைத்தளி மிருடா போற்றி! அவனிசத் துவத்தின் ஓங்கி;**
**நடித்தொளிர் சிவமே போற்றி! குணங்குறி நயவா நீங்கி!**

உலகுயிர்களைப் படைத்துக் காத்து அழிப்பது ஒரே பரம்பொருள் என்பது இதன் கருத்து. வேதங்க ளில் சிவபெருமானுக்கே உரியனவாகப் பேசப்படும் பெயர்களுள் நான்கினை எடுத்துக் கொண்டு இவ்வரிய கருத்திற்கு வலிசேர்க்கிறது இப்பாடல்.

இரஜோ குணத்தைச் சார்ந்து பவன் என்ற பெயரை ஏற்று உலகைப் படைப்பதும்; சத்துவ குணத்தைச் சார்ந்து மிருடன் என்ற பெயருடன் உலகைக் காப்பதும்; தமோ குணத்தோடு இயைந்து ஹரன் என்ற பெயரால் அனைத் தையும் துடைப்பதும், குணங்குறிகளைக் கடந்த சிவன் என்ற நாமம் தனக்கே உரிய செம்பொருள் ஒன்றேயாகும்.

'பவன்' என்ற சொல்லுக்கே படைப்பவன் என்பது பொருள். பிரமன் என்ற சொல்லுக்கு இப்பொருள் இல்லை; 'மிருடன்' என்ற சொல்லுக்கு 'புரப்பவன்' என்பது நேர்பொருள். 'விஷ்ணு' என்ற சொல்லுக்கு இப்பொருள் இல்லை; 'ஹரன்' என்ற சொல் 'அழிப்பவன்' என்று பொருள்படுவது வெளிப்படை. 'சிவன்' என்ற சொல்லுக்கு 'நிர்க்குணன்' என்பது நேர்பொருள். (நிர்க்குணத்வாத் சிவ: என்பது ஆதிசங்கரரின் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாடியம்). இந்நான்கு பெயர்களும் ஏனைய தேவர்களைக் குறியாது சிவபெருமானையே குறிப்பனவாகும். படைப்போனைப் படைக்கும் பழை யோனே பவன் ஆகிய பரமன்; காப்போனைக் காக்கும் கடவுளே மிருடன் என்னும் மேலோன்; அவனே அடுத்து நின்றேத்தும் அயனுக்கும் மாலுக்கும் அறிவரிய அரனுமாகிய சிவன்.

❁ சிவபெருமானின் தெற்கு நோக்கிய அகோரமுகமான உருத்திர முகத்தின் வெளிப்பாடு தட்சிணா மூர்த்தியாகவும், வடக்கு நோக்கிய வாமதேவமுகம் பிரம்மனாகவும், மேற்கு நோக்கிய சத்யோஜாத முகத்தின் பெண்மை கலந்த நளின மூர்த்தம் திருமாலாகவும் நின்று, உலகில் அருளாட்சி நடத்துகின்றன. இவர்களே மும்மூர்த்திகளாவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தத்தாத்திரேயர்

மும்மூர்த்திகளின் அம்சங்களும் ஒருருவில் இணைந்து தோன்றும் கோலமே தத்தாத்திரேயர் திருவுருவமாகும். இவர் மகாயோகியாகத் திகழ்பவர். அனேக சீடர்களைப் பெற்றவர். இவருடைய வழிபாடு தனிவழிபாடாகவே மலர்ந்துள்ளது. தத்தாத்திரேயரின் தோற்றத்தைப் புராணங்கள் பலவகையாகக் கூறுகின்றன. அவற்றைத் தொகுத்துச் சுருக்கமாக இங்கே காணலாம். இந்தக்கதை சதிஅனசூயாவின் சிவபக்தியையும், பதிபக்தியையும் விளக்குவதாக அமைகின்றது.

சாக்த வழிபாட்டிலும் தத்தாத்திரேயர் சிறப்பிடம் பெறுகின்றார். அவர் "பீஜரூபாஷோடசீ" என்னும் சக்தி வழிபாட்டின் மிக உயர்நிலை மந்திரத்தினைக் கண்டுணர்ந்து போதித்த இருடியாகப் (ரிஷி) போற்றப்படுகிறார்.

ஆதிபிரம்மதேவருக்கு மானச புத்திரர்களாகத் தோன்றியவர்கள் பத்து பேர்களாவர். அவர்களில் முதன்மை பெற்றவர் அத்திரி முனிவர். இவர் அரிய தவங்களைச் செய்து பெரிய வரங்களைப் பெற்றிருந் தார். இவருக்கு மனைவியாக வாய்த்தவள் அனசூயா தேவி ஆவாள். இவள் தனது சிவ பக்தியாலும், பதிபக் தியாலும், தவ ஒழுக்கத்தாலும், கற்பின் சிறப்பாலும் அதிக மேன்மை பெற்றிருந்தாள். இவற்றால் இவள் அழகு மேலும் ஒளிர்ந்தது. உலகமே அவளுடைய பேரழகைக் கண்டு வியந்தது.

ஒரு சமயம் உலகில் பஞ்சம் நிலவியது. அப் போது சதி அனசூயாவும் அத்திரி மகரிஷியும் காமதம் என்ற வனத்தில் வசித்து வந்தனர். அங்கு சிவபூசை செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அனசூயாதேவி பஞ்சகாலத்தில் உயிர்களுக்கு உதவ எண்ணினாள். தன் தவத்தாலும் கற்பின் வலிமையாலும் கங்காதேவியை உபாசித்து அவளுடைய ஒருபகுதி யைத் தமதுவனத்தில் வசிக்கும்படி வேண்டினாள். அதன்படியே கங்கையும் சுவையான நீராக அங்கு விளங்கினாள். உலக உயிர்கள் யாவும் அங்கு சென்று துயரமின்றி வாழ்ந்தன. இதனாலும் அவர்கள் புகழ் எங்கும் பரவியது.

தானுமாலயன்

ஒரு சமயம், லட்சுமி சரஸ்வதி, உருத்திராணி ஆகிய மூவரும் ஒன்றாக இருந்தனர். அப்போது உல கில் கடும்பஞ்சம் இருக்கும்போதும் காமதவனம் செழிப்பாக இருக்கக் காரணம் என்ன? என்று பேச்சு வந்தது. அங்கு கூடியிருந்தவர்கள் சதி அனசூயாவின் கற்பின் வலிமையாலும், அத்திரி முனிவரின் தவத்தின் வலிமையாலும் அங்கு செழிப்பு உள்ளது என்ற கூறினர்.

அங்கிருந்த அனைத்து முனிவர்களும், இருடிக ளும் அனசூயாதேவியின் கற்பின் பெருமையையும், பதிபக்தியையும் சிறப்பித்துப் பேசினர். அவ்வேளை யில் சரஸ்வதி, லட்சுமி, உருத்திராணி ஆகியோர் அங்குள்ளவர்களை நோக்கி எங்கள் மூவரையும்விட அவள் கற்பும், பதிபக்தியும் மிகுந்த வளா? என்று கேட்டனர். ஆம் என்று அனைவரும் கூறியதும், அவர்களுக்கு மேலும் சினம் உண்டாயிற்று.

அப்போது அங்குவந்த நாரதர் தன்னிடமிருந்த இரும்புக் கடலைகளை எடுத்துக்காட்டி இவற்றை வறுத்து உணவாகச் சமைப்பவரே கற்பில் சிறந்தவர் அது உங்களால் முடியுமா? என்றார். அந்த மூவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❁ தாணுமாலயன் - சுசீந்தரம்

பலவாறு முயன்றும் கடலைகளை வறுக்க முடிய வில்லை. அவர்கள், முனிவனே, இங்குள்ளவர்கள் சதி அனசூயாவின் பெருமைகளைப் பற்றிப் பேசி னார்கள். ஒருவேளை அவளால் இது முடியுமா என்று பாருங்கள் என்று கூறினர்.

நாரதர், அங்கிருந்து புறப்பட்டு அத்திரி - அனசூ யாவின் ஆசிரமத்தை அடைந்தார். முனிதம்பதியர் அவர்களை வரவேற்றனர். (அவர் புறப்பட்டபின் மூன்று தேவிகளும் அவரைப்பின் தொடர்ந்து ஆசிர மத்திற்கு வந்தனர். ஓரத்தில் மறைவாக நின்று கொண்டு அங்கு நடப்பதைக் கவனித்தனர்).

நாரதர், சதி அனசூயாவிடம், 'தாயே! நான் தரும் இந்த இரும்புக் கடலைகளைப் பொறித்துண்ணத் தகுந்தபடி தருக' என்றார். அவள் மகிழ்ந்து அப்படியே செய்கிறேன் என்று கூறி அடுக்களைக்குச் சென்றாள். சிறிது நேரத்தில் வறுத்து உண்ணும் பக்குவத்தில் அவற்றை எடுத்துவந்து பரிமாறினாள். நாரதர் அதனை உண்டு மகிழ்ந்தார். மறைவாக நின்று இதைப்பார்த்துக் கொண்டிருந்த மூன்று தேவியரும் தங்களால் முடியாத செயலை எளிமையாகவும், சோர்வின்றியும் அனுசயா தேவி செய்ததைக் கண்டு அதிசயித்தனர். அவர்கள் மனத்தில் பொறாமைத் தீ மூண்டெழுந்தது. சதியின் கற்பின் திறத்தை அழிக்க விரும்பினர். தங்கள் கணவர் களை அழைத்து அனுசயாவின் கற்பிற்குப் பங்கம் நேரும்படி செய்ய வேண்டும் என்று கூறினர்.

அவர்களோ, தேவியர்களே, ஏன் தகாத வார்த் தைகளைப் பேசுகின்றீர்கள். இதன் விளைவு மோசமா னதாக இருக்கும். உங்களுடைய அகம்பாவப் போக் கினை விடுங்கள் என்று பலவாறு கூறினார். ஆனால் மூன்று தேவியர்களும் தங்கள் பிடிவாதத்தைக் கை விடுவதாக இல்லை.

மூன்று மூர்த்திகளும், அனசூயாவின் கற்பின் திறத்தினை உலகிற்கு அறிவிக்கவும், தமது தேவியரின் அகந்தையை அழிக்கவும் எண்ணினர். அவர்களிடமி ருந்து விடைபெற்றுக் கொண்டு அத்திரிமகிரிஷியின் ஆசிரமத்தினை அடைந்தனர்.

மூவரும் பிரம்மச்சாரிகளாக உருவம் தாங்கி ஆசிரமவாயிலில் நின்று, தாயே, உணவு தருக என்று கேட்டனர். அதைக்கேட்ட அனசூயாதேவி வெளியே வந்து அவர்களை வணங்கினாள். அவர்களை நோக்கி, "உங்களுக்கு வேண்டிய உணவைத் தருகிறேன் உள்ளே வருக" என்றாள்.

அவர்கள், 'முனிவரின் தேவியே நாங்கள் விரும் பிய உணவை நாங்கள் விரும்பியவாறு அளிப்பதாக உறுதி கூறினால் மட்டுமே உணவருந்த முடியும். அத்த கைய உறுதிமொழி எங்களுக்குத் தந்து உணவிட முடி யுமா?' என்றனர். அனசூயாதேவி அவர்களிடம், 'உங்க ளுக்கு வேண்டியதை நீங்கள் விரும்பியவாறே அளிப் பேன். இது உறுதி. நீங்கள் உள்ளே வந்து அமருங்கள்' என்றாள்.

மூவரும் இலையில் அமர்ந்தனர். அவள் வேண்டிய உணவுகளைப் பரிமாறத் தொடங்கினாள். அவர்கள், தேவி நீ ஆடை ஏதும் அணியாது உனது முழுமேனி அழகும் வெளிப்பட நின்று உணவு பரி மாறுவதையே நாங்கள் விரும்புகிறோம். அப்படியே செய்க என்றனர்.

அனசூயாவின் மனம் பதைத்தது. எனினும் தனது கற்பின் திறத்தால் வந்திருப்பவர்கள் மும்மூர்த்திகள் என்பதையும், தனது கற்பின் திறத்தைச் சோதிக்கவே வந்திருக்கின்றனர் என்பதையும் அறிந்து கொண்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு அவர்கள் முன்னேவந்து, நீங்கள் விரும்பியபடியே இருந்து உணவூட்டுவேன் என்று கூறினாள். தன் கற்பின் திறத்தால் அவர்களை மூன்று மாதக் குழந்தைகளாக ஆக்கிவிட்டாள். அவர்கள் விரும்பிய படியே இருந்து அவர்களுக்குப் பாலூட்டினாள்.

பிறகு தொட்டிலிலிட்டுத் தாலாட்டி அவர்களைத் தூங்க வைத்துவிட்டாள். மும்மூர்த்திகள் தங்கள் தொழிலை நிறுத்திவிட்டதால் உலகம் தடுமாறியது. அதனை அறிந்த சதி அனசூயா அவர்களின் முத்தொழிலையும் தானே குறையின்றி நடத்தி வந்தாள். அதனால் அவர்கள் இல்லாத குறையே உலகில் தெரியவில்லை.

நாட்கள் நகர்ந்தன.

மும்மூர்த்திகளைக் காணாது, அவருடைய தேவியர் வருந்தினர். எங்கு தேடியும் அவர்களைக் காண முடியவில்லை இதனால் அவர்கள் மிகவும் இளைத்துச் சோர்ந்தனர்.

நாரதமுனிவர் அவர்களிடம், தேவியரே! உங்கள் அகங்காரத்திற்கு ஏற்ற பலனை அடைந்தீர்கள். அனசூயாவின் ஆசிரமத்திற்குச் சென்று பாருங்கள்; அங்கே உங்கள் கணவர்களைக் காண்பீர்கள் என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டார்.

மூவரும் ஆசிரமத்திற்கு ஓடினர்.

அங்கு எங்கு தேடியும் அவர்களால் மும்மூர்த்திகளைக் காணமுடியவில்லை. அப்போது அனசூயா, தங்கள் கணவர்களைக் குழந்தைகளாக்கிச் சீராட்டுவதைக் கண்டனர். அவர்கள் தமது கணவன்மார்கள் மீண்டும் பழைய உருவத்தை அடைய தங்களுடைய அனைத்து சக்திகளையும் பயன்படுத்தினர். அவர்களால் எதுவும் செய்ய முடிவில்லை. அனசூயா எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் அறியாதது போல் அந்த மூன்று குழந்தைகளையும் தாலாட்டுவதிலேயே கவனமாக இருந்தாள்.

இறுதியில் கர்வம் அழிந்த மூன்று தேவியரும் அவளைச் சரணடைந்தனர். தேவர்களும் அங்கு கூடினர். சதி அனசூயாவின் கற்பின் திறத்தை அறிந்து பாராட்டிப் பூமாரி பொழிந்தனர். அவள் மூன்று தேவியர்கள்மீது இரக்கப்பட்டு மும்மூர்த்திகளையும் முன்போலவே ஆக்கினாள். அவர்களும் அவளை வாழ்த்தினர்.

❁ தத்தாத்திரேயர்

அனசூயாவும், அத்திரி மகரிஷியும் அவர்களை நோக்கி, சிலநாட்களேயானாலும் எங்களால் உங்களைச் சீராட்டி மகிழ்ந்ததை மறக்க முடியவில்லை. ஆதலின் உங்களின் அம்சத்தை இங்கேயே விட்டுச் செல்லுங்கள் என்றனர். பிரம்மா தனது அம்சமாகச் சந்திரனையும், திருமால் தனது ஒரு கூறாகத் ஆத்ரேயனையும், உருத்திரர் துருவாசரையும் தனது அம்சமாக அங்கே குழந்தைகளாக விட்டுச் சென்றனர். அவர்கள் மூவரும் சேர்ந்து ஒரே திருவுருவம் கொண்டனர் அவருக்குத் தத்தாத்திரேயர் என்று பெயராயிற்று. அவர் மூன்று முகங்களும், ஆறுகரங்களும் கொண்டவராக விளங்கினார். மும்மூர்த்திகளுக்குரிய சங்கு, சக்கரம், சூலம், தாமரை, கமண்டலம், ஜெபமாலை ஆகியவற்றைத் தாங்கினார்.

அவருக்கு இடபமும், கருடனும் அன்னமும் வாகனங்களாக அமைந்தன. அவரைச் சுற்றிலும் வேதங்கள் நாய் வடிவம் கொண்டு இருந்தன. அவர் பிரம்மச்சாரியாகத் தவத்தில் மூழ்கி இருந்தார்.

❁ அத்திரிமகரிஷியும், அனசூயாதேவியும் காமதவனத்தில் வழிபட்ட சிவலிங்கம் அத்திரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றது. இது ஜோதிர் லிங்கங்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றாகும். அனசூயாதேவி தன் வழிபாட்டிற்கென அமைத்த மணல் லிங்கமும், அதன் அருகிலேயே அமைந்துள்ளது. அதிலிருந்து சிவபெருமான் ஐந்து முகங்களுடன் வெளிப்பட்டு அருள்பாலித்தார். அவருடன் கங்கையும், உமாதேவியும் தோன்றினர். அவர்கள் அனசூயாவிற்கு வேண்டிய வரங்களைத் தந்தனர்.

❁ உலகில் அனேக பெண்கள் தமது தவத்தால் பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்குத் தாயாக இருந்துள்ளனர். சதி அனசூயா மட்டுமே மும்மூர்த்திகளுக்கும் தாயாக இருக்கும் பேற்றைப் பெற்றாள். இது அவளுடைய சிவபக்தியினால் விளைந்ததாகும்.

❁ அத்திரி முனிவரின் புதல்வனாகையால் ஆத்ரேயன் என்றும், விஷ்ணுவால் தத்தம் செய்யப்பட்டதால் தத்தாத்திரேயன் என்றும் தத்தியங்கர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

❁ தத்தாத்திரேயர் வேதங்களைப் பரவச் செய்யும் வேதமூர்த்தியாக விளங்குகின்றார். சம்பரன் முதலான அசுரர்களை வெல்ல, தேவர்களுக்கு அருள் புரிந்தவர். தன்னை வழிபட்ட மன்னனான கார்த்த வீரியார்ச்சுனனுக்கு ஆயிரம் தோள்களும் அளவற்ற வலிமையும் செல்வமும் அளித்தவர்.

❁ தத்தாத்திரேயருடைய மூல இருப்பிடம் பாஞ்சால நாட்டிலுள்ள கரவீர நகரமாகும். (இது மாஹூர் என்றும் குறிக்கப்படும்).

❁ காஞ்சி காமகோடி பீடத்திலுள்ள ஒரு வெள்ளி சிம்மாசனத்தின் உச்சியில் தத்தாத்திரேயரின் திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது.

❁ இந்நாளில் தத்தாத்திரேயரைத் திருமாலின் வடிவமாகவே போற்றுகின்றனர். ஆனால், அவரை உருத்திரராகவே பழைய நாட்களில் போற்றினர். கையிலுள்ள திரிசூலம், காளைவாகனம், நாய் வடிவில் சூழ்ந்துள்ள வேதங்கள் முதலியன அவரை உருத்திரராகவே காட்டுகின்றன.

❁ சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலய ராஜ கோபுரத்தில் தத்தாத்திரேயரின் வடிவம் அழகிய சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

❁ தெலுங்கு, கன்னட நாடுகளில் தத்தாத்திரேயர் அதிக அளவில் வழிபடப்படுகின்றார். இங்கு பல வீடுகளில் சதி அனசூயா மூன்று குழந்தைகளுடன் உள்ள படங்களைக் காணலாம்.

❁ கொங்குநாட்டுத் தலமான விஜயமங்கலத்திலுள்ள (சங்கரலிங்க/நாகநாதர்) சிவாலயத்துத் தீபத்தம்பத்தின் அடிப்பட்டைப் பகுதியில் தத்தாத்திரேயரைக் காணலாம்.

❁ தத்தாத்திரேயரைக் குருவாகக் கொண்டு தட்சிணாமூர்த்தியாகப் போற்றுகின்றனர். சிலஇடங்களில் இவரைப் பைரவராகவும் போற்றுகின்றனர். இதனால் அவருடன் வேதத்தின் வடிவமான நான்கு நாய்களும் காட்டப்பட்டுள்ளன.

❁ அண்மைக் காலத்தில் மேல்மருவத்தூரை (அச்சிறுபாக்கத்தை) அடுத்த பெரும்பேறு, சென்னை வேளச்சேரி முதலிய பல இடங்களில் தத்தாத்திரேயருக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❁ தத்தாத்திரேயரை - தட்சணாமூர்த்தியைப் போல யோகநிலையில் வீற்றிருப்பவராக அமைக்கின்றனர்.

❁ தத்தாத்திரேயர் சிவபூசை செய்த தலங்களில் முதன்மையானது திருவிடைமருதூராகும். இங்குத் தத்தாத்திரேயர் திருவுருவம் உள்ளது.

## தாணுமாலயனும் - தத்தாத்திரேயரும்

**தா**ணுமாலயன் என்பது சிவன், திருமால், பிரம்மா (அயன்) ஆகிய மூவரும் சேர்ந்த வடிவமாகும். இதில் பெருமான் மூன்று முகங்களும் எட்டு கரங்களும் கொண்டு தேவர்களின் தலைவனாக விளங்குகின்றார். மேற் கரங்களில் முறையே மான், மழு, சங்கு, சக்கரம், ஜெபமாலை, கெண்டி ஆகியனவும் முன் கரங்களில் அபயவரத முத்திரைகளும் உள்ளன. தத்தாத்திரேயர் என்பவர் சிவபெருமானால் அத்திரி அனசூயா தம்பதியருக்கு அளித்த மும்மூர்த்திகளின் அம்சமான குமாரனாவார். இதில் அவர் கற்பக மரத்தின் கீழ் காமதேனுவுடன் உள்ளார். இவருக்கு மூன்று முகங்களும் ஆறுகரங்களும் உள்ளன. கரங்களில் சூலம், தாமரை, வளை, ஜெபமாலை, கெண்டி, சங்கு ஆகியவற்றை ஏந்தியுள்ளார். நான்கு வேதங்களும் நாய் வடிவத்துடன் அவரைச் சூழ்ந்துள்ளன. ❁

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அரியர்த்தர் - சங்கரநாராயணர்

சிவபெருமானிடமிருந்து அவருடைய அருளாகவே வெளிப்பட்ட பராசக்தியின் புருஷாகார வடிவமே திருமாலாகும். திருமால் சிவபெருமானின் இடப் பாகத்தில் அவளைப் போலவே வீற்றிருக்கின்றார். சிவசக்தியர் இணைந்த வடிவத்தை அர்த்தநாரீசவரர் என்று கொண்டாடுவதைப் போலவே, சிவனும் திருமாலும் இணைந்த இந்த வடிவத்தினை அரியர்த்தர் என்று அழைக்கிறோம். இவ்வடிவம், மாலரன், சங்கர நாராயணர், கேசவார்த்தர் என்ற பல பெயர்களால் குறிக்கப்படுகின்றது.

சிவபெருமானின் மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தில் இது ஒன்பதாவது மூர்த்தமாகும். இதனை அர்த்தாங்க விஷ்ணு என்று சிவபராகிரமம் அழைக்கிறது. புண்ணியம், பாவம் என்ற இருவினைகளையும் கடந்து இறைவனிடத்தில் ஞான மார்க்கத்தை மட்டுமே வேண்டுகிறவர்கள். இம் மூர்த்தியைச் சிறப்புடன் போற்றுகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

மேலும், இந்தத் திருவுருவம் சைவ வைணவ ஒற்றுமையை விளக்குவதாக அமைகிறது என்று சமய அறிஞர்கள் கூறுவர். சோழநாட்டுத் திருத்தலங்களில் அரியர்த்தரின் திருவுருவத்தைக் கோட்ட தேவதையாக அமைத்துள்ளனர்.

சிவபெருமானும், திருமாலும் ஒரே மூலபரம் பொருள். அவர்கள் உலகினைக் காக்க இக்கோலம் கொண்டுள்ளனர். என்பது மெய்ஞ்ஞானிகளின் கருத்தாகும். இதனையொட்டியே 'அரியும் சிவனும் ஒன்னு அறியா தவன் வாயில் மண்ணு' போன்ற பழமொழிகள் எழுந்துள்ளன. சிவமஞ்சரியின் இப்பகுதியில் பரம சிவம், சிவநாராயணராக எழுந்தருளி அருள்பாலிப்பது தொடர்பான செய்திகளை அறிந்து மகிழலாம்.

❁ ஹரியர்த்தர்

நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

சைவர்களேயன்றி வைணவர்களும் அரியரனைப் போற்றுகின்றனர். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் அனேக இடங்களில் அரியர்த்தர் புகழப்படுவதைக் காண்கிறோம். மாலொரு பாகம் மகிழ்ந்த மணாளர் அன்பர்களுக்குச் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளித்தருளவேண்டு மென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றோம்.

❁ சிவசுந்தரி

## திருமால் இடப்பாகம் பெற்றது

திருமால் ஒருசமயம் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தார். தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான், திருமாலுக்குக் காட்சியளித்து, எத்தகையவரையும் மயக்கும் சக்தியை உனக்குத் தந்தோம். இதனால் உனக்கு மாயன் என்ற பெயர் விளங்கும். எமது இடப்பாகத்திலிருக்கும் பராசக்தியின் வடிவம் ஆவாய். அவளைப் போலவே எமது இடப்பாகத்தில் வீற்றிருப்பாய் என்றருளிச் செய்தார்.

சிவபெருமானுடைய மஹாமாயை என்னும் சக்தியே பெண்ணுருவில் பார்வதியாகவும் ஆண்உருவில் திருமாலாகவும் நடிக்கின்றது என்று தத்துவ நூல்கள் கூறுகின்றன.

❁ சங்கரநாராயண வடிவத்தைச் சிவாகமங்கள் தனிச் சிறப்புடன் பேசுகின்றன. சிவாகமங்களைப் போற்றிய பல்லவ மன்னர்கள் தாங்கள் அமைத்த பலகுடைவரைக் கோயில்களில் சங்கரநாராயணர் வடிவத்தை.அமைத்துள்ளனர். இவற்றில் குறிப்பிடத்தக்கவை நாமக்கல், குன்றக்குடி பிள்ளையார்ப் பட்டி முதலிய தலங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமுறைகளில் (அரியர்த்தர்) மாலொரு பாகம் வைத்தார்

தமிழ் வேதமான தேவார, திருவாசகங்களில் அரியர்த்தர் சிறப்புடன் போற்றப்படுகின்றார். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

திருஞானசம்பந்தர், திருமால் சிவபெருமானின் ஒரு கூறாக இருப்பதை "மாலொருபாகம் மகிழ்கின்ற நாதன்", "மாலது கூறினர்", மாலுமோர் பாகமுடையார், "பாதியாய் உடல் கொண்டது மாலையே" என்று பல இடங்களில் குறிக்கின்றான்.

அப்பர் பெருமான், 'காவியங்கண்களாகி கடல் வண்ணனாகி நின்ற தேவியைபாகம் வைத்தார்' திருப் பயற்றூரனாரே, என்று திருப்பயற்றூர் தேவாரத்துள் கூறுகின்றார். இதன்பொருள், சிவந்த கண்களைக் கொண்ட நீலநிற நெடியோனாக விளங்கும் விஷ்ணுவைத் தனது தேவியாக இடப்பாகத்தில் வைத்துள்ளார் என்பதாகும். மேலும் மாலொரு பாகம் திகழ்ந்தானையென்று நெய்த்தானப் பதிகத்திலும், தீக்கூருத் திருமேனியொருபால் மற்றை ஒருபாலும் அரியுருவம் திகழ்ந்த செல்வர் என்று வலம்புரப்பதிகத்திலும் அருளிச் செய்கின்றார். இதன் பொருள் தீ போன்று சிவந்த திருமேனி ஒருபால் விளங்கவும், மற்றொருபால் திருமாலின் உருவத்தோடும் திகழும் செல்வனாகச் சிவபெருமான் விளங்குகின்றார் என்பதாகும்.

திருவையாற்றுப்பதிகம் அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே என்று கூறுகின்றது. மேலும் "மறிகடல் வண்ணன் பாகர், சீரோடு திருமாலோர்பாகத் தான் காண்" (அலைவீசும் கடல் போல கருவண்ணம் கொண்ட திருமாலினைப் பாகமாக உடையவன்) என்று பலவாறு அப்பரடிகள் அரியர்த்தரைப் போற்றுகின்றார்.

சுந்தரர், "திருமகள்கோன், திருமாலோர் கூற"னென்றும்; "பாம்பணையானுக்குப் பாகன்" என்றும் குறிப்பிடு கின்றார்.

இதனையொத்த அனேக திருமொழிகளால் சிவபெருமான் அரியர்த்தராகத் திகழ்வதைத் தேவாரம் குறிப்பிடுகின்றது.

## வைணவ சமயத்துள் அரியர்த்தரும் - மும்மூர்த்திகளும்

சைவ சமயத்துள் சிவபெருமானையும் திருமாலையும் இணைத்து அரியர்த்தராகப் போற்றுவதைப் போலவே, வைணவர்களும் போற்றுகின்றனர். வைணவத் திருக்கோயில்களில் இம்மூர்த் தம் இல்லையென்றாலும் திவ்யப் பிரபந்தத்துள் பல இடங்களில் அரியர்த்தரைக் காண்கிறோம்.

பேயாழ்வாருக்குத் திருமால் சங்கரநாராயணராகத் திருமலை (திருப்பதி) மீது காட்சியளித்ததைத்

தாழ்சடையும் நீள்முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவம் ஒன்றாய் இசைந்து

என்ற பாசுரமாக அருளியுள்ளார். இதன் பொருள் : திருவேங்கடமலையின் மீது விளங்கும் திருமாலின் வடிவில் சிவன், திருமால் ஆகிய இருவரும் ஒன்றாகத் திகழ்கின்றனர். இத்திருவுருவத்தில் பெருமான் வலப் பக்கத்தில் சிவபெருமானாகத் தாழ்ந்த சடைகளைக் கொண்டு மழுவேந்தி பாம்புகளைப் பூண்டுள்ளார். இடப்பக்கத்தில் திருமாலாக ஒளி விடும் கிரீடம் தரித்துச் சக்கரத்தை ஏந்தி, பொன்னாபரணங்களைப் பூண்டுள்ளார்! என்பதாகும். மேலும் பொய்கையாழ்வார்

அரன் நாரணன் நாமம், ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறை உறையும் கோயில் வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி
உருவம் எரிகார் மேனி யொன்று.

என்று அருளிச்செய்கின்றார். இதன் பொருள் : மூல பரம் பொருளுக்கு ஒரே திருமேனியில் இரண்டு உருவங்கள் உள்ளன. அதற்குப் பெயர் அரன் என்றும் நாராயணன் என்றும் வழங்குகிறது. ஒன்றிற்கு ஊர்தி விடையாகவும் இருப்பிடம் மலையாகவும் தொழில் அழிப்பாகவும், படை, திருசூலமாகிய வேலாகவும், நிறம் தீப்போன்று செந்நிறமாகவும் விளங்குகிறது. மற்றொரு பகுதிக்கு ஊர்தி கருடனாகவும், இருப்பிடம் பாற்கடலாகவும், தொழில் காப்பதாகவும், படை, சக்கரமாகவும் திருமேனி கரிய நிறமாகவும், விளங்குகிறது என்பதாம்.

இதனையொத்ததாக அனேக திருமொழிகள் வைணவத்தில் அரியர்த்தரைச் சிறப்பிக்கின்றன.

சிவபெருமானே மும்மூர்த்திகளாக விளங்குகின்றனர் என்று சைவர்கள் கூறுவதைப் போலவே திரு

தொடர்ச்சி 960-ஆம் பக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சங்கரன்கோயில் சங்கர நாராயணர்

நெல்லை மாவட்டத்தில் உள்ள தலம் சங்கரன் கோயிலாகும். திருநெல்வேலிக்கு மேற்கே 35 மைல் தொலைவில் உள்ளது. ஒரு வட்டத்தின் தலைநகரமாக விளங்குகின்றது. இங்கு ஊரின்மையத்தில் பெரிய ஆலயமானச் சங்கரலிங்கர்கோமதி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

இதில் மூலவராகச் சங்கரலிங்கர் எழுந்தருளியுள் ளார். அவருக்கு வடக்கில் மிகவும் வரப்பிரசாதியான கோமதி அம்பிகை எழுந்தருளியுள்ளாள். இருவருக் கும் இடையில் சங்கரரும், நாராயணரும் ஒருருவில் இணைந்து சங்கர நாராயணராகப் பெரிய சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். இவருடைய வலப்பக்கம் சிவ பெருமானாகவும் இடதுபாகம் திருமாலாகவும் திகழ் கிறது. இவர் இங்கு எழுந்தருளக் காரணமான வரலாறு:-

காசிப முனிவரின் புதல்வர்களும் நாகராஜர்க ளில் இருவருமாகிய வாசுகி, ஆதிசேடன் (என்ற இரண்டு பாம்புகள்) பெருந்தவத்தைச் செய்தனர். அந்தத் தவத்தின் பயனாக வாசுகி, சிவபெருமானின் கழுத்தில் ஆபரணமாக விளங்கும் பேறுபெற்றான். அவ்வாறே ஆதிசேடன் திருமாலுக்குப் பாயலாகவும், சிங்காதனமாகவும் ஆகும் பேறுபெற்றான்.

அவர்கள் வழிவந்தவர்களும் அட்டமா நாகங்க ளில் இருவருமாகிய சங்கன், பதுமன் என்பவர்கள் சாத்திரங்களின் பயனை அறியும் வகையில் ஆராய்ச்சி யில் ஈடுபட்டனர். அவர்களில் சங்கன், வாசுகியிடத்தி லும், பதுமன் ஆதி சேடனிடத்திலும் மிக்க அன்பு கொண்டு அவர்களை நோக்கிக் கடுந்தவம் செய்தனர். அவர்களுக்கு வாசுகியும், ஆதிசேடனும் காட்சியளித் தனர். வாசுகி சங்கனிடத்தில் சிவபெருமானே பரம்பொ ருள் அவருக்கு அடிமை செய்வதே வாழ்வின் பயன் என்று கூறி சிவதீட்சை செய்துவிட்டுக் கயிலைக்குத் திரும்பிவிட்டான்.

ஆதிசேடன், பதுமனிடத்தில் திருமாலே பரம் பொருள் அவரே உயிர்கள் அடையத்தக்கவர். அவரைப் பணிந்து பேறு பெறுக என்று கூறி மந்திரோப தேசம் செய்துவிட்டுத் தன்னுலகம் சேர்ந்தான்.

முதலில் சங்கனும், பதுமனும் தத்தம் வழியி



சங்கரநாராயணர் - சங்கரன்கோயில்

லேயே கடவுளை வழிபட்டு மகிழ்ந்திருந்தனர். காலப் போக்கில் அவர்களுக்குள் பேதமுண்டாயிற்று. பதுமன் திருமாலே பெரியவன் என்றுகூற, சங்கன் சிவபெரு மானே பரம்பொருள் என்ற கூறினான். அவர்கள் பாம் பரசர்களைச் சந்தித்துத் தங்களில் யாருடைய கருத்து உண்மையானது என்று கேட்டனர். அங்கிருந்த நாக அரசர்கள் உங்களின் கருத்தினை ஆராய்ந்து சொல்லும் வல்லமை எங்களுக்கில்லை. நீங்கள் பூவுலகம் சென்று மகரிஷிகளைப் பார்த்து விளக்கங்களைக் கேளுங்கள் என்று கூறிவிட்டனர்.

சங்கனும், பதுமனும் தங்கள் குலப் பெரியவரான பதஞ்சலி முனிவரைத் தொழுது அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு பூவுலகம் வந்தனர். பல தீர்த்தங்களில் நீராடி சிவவிஷ்ணு ஆலயங்களை தரிசித்துக் கொண்டு காசி நகரை அடைந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கு வீற்றிருந்த முனிவர்களைத் தொழுது தமக்கு விளக்கமளிக்க வேண்டினர். அவர்கள் எல்லோரும் ஒருசேர சிவபெருமானே பெரியவர். அவருக்குள் அடங்கிய பொருளே திருமால் என்று விளக்கமாகக் கூறினர். அங்கிருந்த அத்திரி முனிவர் சாத்திர நூல்களால் அதைத் தெளிவுபடக் காட்டினார்.

அதைக்கேட்டு மனம் கொள்ளாத பத்மன் மீண்டும் மீண்டும் வாது செய்தான். அதைக்கண்ட மக ரிஷிகள் அவர்களை நோக்கி உங்கள் வழக்கு இவ் விடத்தில் தீராது. நீங்கள் இந்திரவுலகம் சென்று இந்திர னிடம் கேளுங்கள் என்றனர்.

உடனே பதுமனும், சங்கனும் தேவவுருவம் கொண்டு இந்திர சபையை அடைந்தனர். அங்கு இந்தி ரனிடம் தமது வழக்கைக் கூறினர். இந்திரன் தமது குலகுருவான வியாழ பகவானை அழைத்து, 'இந்த நாகர்களுக்கு உரிய பதிலைக் கூறுங்கள்' என்றான். அவர் நாகர்களிடம் நல்லவேளையில் இங்கு வந்தீர்கள்.

ஒருநாள் சிவபெருமான், உமாதேவியாரிடம், 'அன்பே! முன்பு திருமால் தவம் செய்தபோது அவ ருக்கு மாயன் என்ற பெயர் அளித்து அவரை எமது இடப்பாகத்தில் அடக்கிக் கொண்டு, கேசவார்த்தராகக் காட்சியளித்தோம். அக்கோலம் ஞானத்தையும், செல் வத்தையும் தருவதாகும்' என்றார். அதை கேட்ட தேவி எனக்கு இப்போதே அந்தக் கோலத்தைக் காட்டி அருளுங்கள் என்றாள். அதற்கு அவர், தேவீ அந்தக் கோலத்தை எளிதில் காட்ட முடியாது. தவம் செய்தே அதனைக் காணமுடியும். ஆதலின் நீ பூவுல கம்' சென்று தவம் செய்க. உனக்கு எளிதில் அந்தக் காட்சியைக் காட்டுவேன் என்றார்'.

உமாதேவி, 'ஐயனே! பூவுலகில் எங்கு தவம் செய்தால் எனக்கு எளிதில் அருள் கிடைக்கும், அவ்வி டத்தைக் கூறுங்கள் என்றாள்'.

பரமேசுவரன், "அம்பிகையே பொதிகை மலைச் சாரலில் புன்னைவனம் என்ற தலமிருக்கின்றது அங்கு சங்கரநாராயண கோலத்தைத் தரிசிக்க அனேகர் தவம் செய்து கொண்டு காத்திருக்கின்றனர். நீயும் அங்குச் சென்று தவம் புரிக" என்றார்.

பின்னர், அவரிடம் விடைபெற்றுக்கொண்டு அம்பிகை, பொதிகைமலைச்சாரலை அடைந்தாள். அவளைப் பிரிய மனமில்லாத தேவமாதர்களும், சரஸ்வதி, லட்சுமி முதலிய, பெண்களும் அவளைத் தொடர்ந்து அங்கே வந்தனர். தேவி தேவர்களை மரங்களாக இருந்து பூசைக்கு வேண்டிய மலர்களை யும் கனிகளையும், தேனையும் தாருங்கள் என்றாள். தன் தோழிகளான அப்சரப் பெண்களைப் பசுக்களாக இருந்து அபிஷேகத்திற்குரிய பால் தருக என்றாள், பின்னர் அக்கினியை விளக்கிடவும், வாயுவை திரு வலகிடவும், முனிவர்களைச் சிவாசாரியப் பணிகளுக் கும் கந்தர்வர்களை வாத்தியம் வாசிக்கவும் இன்னும் அனேக பணிகளுக்கு அனேகரையும் நியமித்தாள்.

பிறகு, புன்னைவனத்தில் விளங்கும் புற்றிடங் கொண்ட பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து கடுந்தவத்தில் ஆழ்ந்திருக்கிறாள்.

நாகர்களே! "நீங்களும் அங்குச் சென்று உமா தேவியுடன் தவம் செய்யுங்கள், உங்களுக்கு உரிய பதில் கிடைக்கும்" என்றார்.

அதைக்கேட்டு மகிழ்ந்த சங்கனும், பதுமனும் பூமிக்கு வந்து புன்னைவனத்தில் சங்கரலிங்கத்தை கண்டு வணங்கி உமாதேவியையும் வணங்கி அங் கேயே தவம்புரிந்தனர். ஆண்டுகள் பல கடந்தன.

இப்படி, நடந்து கொண்டிருந்த வேளையில், ஆதிசேடன், திருமாலை வணங்கி 'ஐயனே பூவுலகில் சங்கனும், பதுமனும் சிவபெருமானுடலில் நீங்கள் இணைந்திருப்பதைக் காணத் தவம்புரிகின்றனர். அது சாத்தியமா?' என்றான்.

திருமால் அவனிடம், உலகத்தைத் தோற்றுவிக் கும் பிரமனும், காக்கும் கடவுளாகிய நானும், சிவபெரு மானும் வேறுவேறா? நாங்கள் மூவரும் ஒருவரே. சங்க, பதுமருக்கு சிவபெருமான் என்னையும் இணைத் துக் காட்சி அளிப்பது உறுதி என்றார்.

அதே சமயம், கயிலாயத்தில் வாசுகி, சிவபெருமா னிடத்தில், "ஐயனே, சங்கன் புன்னை வனத்தில் தேவியு டன் சங்கரநாராயணக் காட்சியை வேண்டித் தவம்புரி கிறான். அவனுக்கு அது எப்போது கிடைக்கும் என் றான். சிவபெருமான் புன்னகைத்து அது இப்போதே" என்றார்.

அனைவரும் புறப்பட்டுப் புன்னை வனத்தை அடைந்தனர். அங்கு சிவபெருமான் ஆடி மாதப் பௌர்ணமி நாளில் சங்கர நாராயணராகக் காட்சியளித் தார். அவருடைய திருமேனியின் தலையின் வலது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்கத்தில் கங்கையும், பிறையையும் அணிந்த சடாமகுடம் செவிகளில் நாககுண்டலங்கள், சந்திரகிரணம் போன்ற விபூதி, கரத்தில் மழுவாயுதம், தோள்களில் கொன்றைமாலை, அரையில் புலித்தோலாடை, கால்களில் சர்ப்பமயமான வீரக்கழல்கள் விளங்கின. இடது பக்கத்தில் முறையே வைரக்கற்கள் பதித்த ரத்தினக்கிரீடம், மகரகுண்டலம், நீலமணிபோன்ற கஸ்தூரித் திலகம், சக்ராயுதம், பொற்பூணூல், துளசிமாலை, பீதாம்பரம், பொன்னாலாகிய வீரக்கழல்கள் விளங்கின.

அக்காட்சியைக் கண்டு அன்னை பராசக்தி ஆனந்தமடைந்தாள். சங்கனும், பதுமனும், சிவபெருமானே, திருமாலாகவும், திருமாலே சிவபெருமானாகவும் விளங்குகின்றனர். இருவரும் வேறுவேறல்ல. காரணநிமித்தமாகவே தனித்தனி மூர்த்திகளாகக் காட்சியளிக்கின்றனர் என்ற உண்மையினை உணர்ந்தனர். முனிவர்களும் தேவர்களும் வாழ்த்தித் துதி பாடினர்.

சிவபெருமான் அம்பிகையை நோக்கி, இமய புத்ரீ, நமது இந்தத் திருக்கோலத்தைக் கண்டுமகிழ்க. நாளை நாம் உன்னைத் திருமணம் புரிவோம் என்றார். சங்கனையும், பதுமனையும் நோக்கி நாகர்களே! உங்களுடைய மனம் நிறைந்து சிந்தை தெளிந்ததை அறிந்தோம் உமக்கு வேண்டியதைக் கேளுங்கள் என்றார், அவர்கள் ஐயனே, தங்களைக் கண்டு மகிழ்ந்த பிறகு எங்களுக்கு வேண்டிய தென்ன? என்றாலும் நாங்கள் இங்கே அமைத்துள்ள சுனையில் மூழ்கித் தங்களை வழிபடும் அன்பர்களுக்கு வளமான இகவாழ்வுடன் மோட்சமும் அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். சிவபெருமான், அப்படியே ஆகட்டும் என்று கூறி, அருள் பாலித்த பின்னர் புன்னைமரத்தின் கீழ்பொலியும் புற்றிடங்கொண்ட லிங்கத்தில் தேவியை அணைத்துக் கொண்டு மறைந்தான்.

இதனை விளக்கும் வகையில் ஆடிமாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. மாலையில் அம்பிகை தவம் இருத்தல் பின்னிரவில் அவளுக்குச் சிவபெருமான் சங்கரநாராயணராக யானைவாகனத்தில் காட்சியளித்தல் தொடர்ந்து சங்கரலிங்கர் கோமதியம்மன் திருமணம் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இந்த விழா ஆடித்தவசு என்ற பெயரில் புகழ்பெற்றதாகும்.

❀ சங்கரகோயில் தலபுராணம் இந்த வரலாற்றை விரிவாகக் கூறுகின்றது.

❀ சங்கரன் கோயிலின் மகிமைகளை நன்கு அனுபவப்பூர்வமாக அறிந்த மராட்டிய மன்னரொருவர் தஞ்சாவூரில் சங்கரநாராயணர் ஆலயத்தை அமைத்து சங்கரன் கோயிலில் நடப்பதைப் போலவே பூசைகளையும் விழாக்களையும் நடத்திவ ஏற்பாடு செய்துள்ளார்.

❀ பாபநாசத்துக்கு அருகிலும் சங்கரன்கோயில் என்ற தலம் உள்ளது. இதனைச் சின்ன சங்கரன் கோயில் என்றழைக்கின்றனர். இங்கும் சங்கரலிங்கர் சங்கரகோமதியம்மன், சங்கரநாராயணர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

❀ தென்னாட்டில் சங்கரநாராயணர் கோயில் இருப்பதைப் போலவே கர்நாடக மாநிலத்தில் ஹரிஹரம் என்ற தலம் உள்ளது. இங்கு புகழ்பெற்ற சங்கரநாராயணர்கோயில் உள்ளது. இங்கே கௌரியான உமா தேவிக்கும், மகாலட்சுமிக்கும் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஹரிஹர சதாசிவர்

தென்னக ஆலயங்களில் ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்ட அரியர்த்தஈரயே காண்கிறோம். வடநாட்டில் சில இடங்களில் ஐந்துமுகமும் பத்து தோள்களும் கொண்டவராக, இவர் காணப்படுகின்றார். அவரை ஹரிஹர சதாசிவர் என்று அழைக்கின்றார். இவர் வலது கரங்களில் சிவபெருமானுக்குரிய பாம்பு, கத்தி, கபாலம், உடுக்கை, சூலம் ஆகியவற்றையும், இடது கரங்களில் திருமாலுக்குரிய கதை, சங்கு, தாமரை, சக்கரம், கேடயம் ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார். இவர் யானைத்தோலை மேலாடையாகவும் ஆசனவிரிப்பாகவும் கொண்டுள்ளார். புலித் தோல் இடையை அலங்கரிக்கிறது.

958-ஆம் பக்கத் தொடர்ச்சி...

மாலே மும்மூர்த்திகளாய் நின்று உலகினைச் செயல்படுத்துகின்றார் என்பது வைணவர்களின் கூற்றாகும். இதனைத் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில்

ஏர் உருவில் மூவருமே என்ன நின்ற
இமையர் தம்திரு வுருவேறு எண்ணும் போது
ஓர் உருவம் பொன்னுருவம், ஒன்று செந்தீ
ஒன்று மாகடல் உருவம் ஒத்துநின்ற
மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி

என்று அருள்கின்றார்.

இதன் பொருள் : பெருமை பொருந்திய உருவத்துடன் மும்மூர்த்திகளாக விளங்கும் தேவர்களின் தலைவனான திருமாலின் திருவுருவத்தை சிந்திக்கும் போது அத்திருவுருங்களில் ஒன்று பொன் (வண்ணம் கொண்ட பிரம்மா) ஒன்று செந்தீ (போன்ற சிவன்) ஒன்று பெருங்கடல் போன்ற வண்ணம் கொண்டது (திருமால்). இப்படி மூன்றும் ஒன்றான சோதியாக அது விளங்குகிறது என்பதாகும்.

மேலும் முனிவன், மூர்த்தி மூவராகி வேதம் உரைத்த புனிதன், மூவராகிய ஒருவன், சிவனாய், அயனாய், பரந்து நின்றான் என வரும் திவ்வியப் பிரபந்த அடிகளால் திருமால் மூவராகி நிற்பதை அறிகிறோம்.

## திருமால் மும்மூர்த்தி வடிவமாக விளங்குதல்

சிவலிங்கம் மும்மூர்த்தி வடிவமாகத் திகழ்வதைப் போலவே சில திருமால் திருமேனிகளும்மும் மூர்த்திகளாகத் திகழ்கின்றன.

எடுத்துக்காட்டாக. திருவகீந்தரபுரம் எனும் திவ்ய தேசத்துள் எழுந்தருளியுள்ள திருமாலின் வடிவம் மும் மூர்த்திகளைக் குறிக்கிறது. இதில் இடுப்பின் கீழுள்ள பகுதி பிரம்மனாகவும், இடுப்பிலிருந்து கழுத்துவரை திருமாலாகவும் கழுத்துக்கு மேலேயுள்ள பகுதி சிவபெருமானாகவும் கொள்ளப்படுகின்றது. இதனால், பெருமானுக்கு சைவப் பெயரோ வைணவப் பெயரோ அமையாமல் தேவநாதன் என்ற பொதுப் பெயர் அமைந்துள்ளது. நாதம் என்ற சொல்லுக்குக் கலப்பு என்பது பொருள். மூன்று தேவர்களும் கலந்து தோன்றுவதால், இந்தத் திருவுருவம் தேவநாதன் என்றழைக்கப்படுகின்றது. இங்குள்ள ஸ்ரீவிமானத்தில் பிரம்மா, திருமால், தென்முகக் கடவுள் ஆகிய மும்மூர்த்திகளும் இடம் பெற்றுள்ளனர்.

திருமங்கை மன்னன் இப்பெருமானை தனது பரசுரத்தில் "மூவராகிய ஒருவன்" என்று மங்களாசாசனம் செய்துள்ளார்.

மேலும், சைவர்கள் சிவபெருமானிடத்திலிருந்தும் பிரமனும், திருமாலும் கிளைத்து எழுவதைத் திரிபாத திரிமூர்த்தியாகப் போற்றுகின்றனர். இதனையொத்ததான திருமால் வடிவம் திரிமூர்த்தி மகாவிஷ்ணு என்றழைக்கப் படுகின்றது.

இதில் மையத்தில் நெடியவராகச் சங்கு சக்கரம் ஏந்தித் திருமால் நிற்கின்றார். அவருடைய வலப் பக்கத்திலிருந்து சிவனும், இடப்பக்கத்திலிருந்து பிரம்மனும் வெளிப்படுகின்றனர்.

ஆந்திர மாநிலத்தில் பல இடங்களில் இத்தகைய மூர்த்திகள் இருந்தாலும் திருப்பதியை அடுத்த நாகலாபுரத்திலுள்ள மூர்த்தியின் வடிவமே தனிச் சிறப்பிடம் பெறுகின்றது.

**மும்மூர்த்திகள் அருளினாலும் சங்கரநாராயணர் அருளினாலும் அன்பர்கள் அனைத்து நலன்களும் பெற்று இனிது வாழ்க!**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சிவ மஞ்சரி

இது சிவபெருமானுக்குச் சொல்லால்
கட்டப்பட்ட திருக்கோயில்